CENTRAL ... OF BOOKS
17 MAR 1914
MADRAS.

## நமது ஊழியம்

### காங்கோ.

ஏறக்குறைய 4 வருஷங்களுக்கு முந்தி நான் இச் சேகரத்தை ஒப்புக்கொண்டேன். அப்போதிருந்த கிறிஸ்தவர்களின் தொகை 192. ஆனால் தற்சமயத்திலிருக்கும் கிறிஸ்தவர்களின் தொகையோ 306.

நான் அனுபவித்துவரும் இரண்டொரு கஷ்டங்களை இங்கு தெரிவிக்கிறேன். காங்கோவிலும் அதைச் சுற்றிலுமுள்ள கிருமங்களிலும் சில பழைய கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். நான் இவர்களை சந்திக்கும்போதெல்லாம் இவர்கள் அதிருப்தியோடும் முறுமுறுப்போடும் பின் வருமாறு குறைசொல்லுகிறார்கள்.

"நீங்கள் எங்களுக்கு எவ்விதத்திலும் உதவி செய்கிறதில்லை, போலீஸ்காரர் கைகளிலிருந்தும் எங்களைத் தப்புவிக்கிறதில்லை, பண உதவியும் செய்கிறதில்லை இப்படியிருக்க உங்கள் உபதேசங்களை ஏன் நாங்கள் கேட்கவேண்டும்."

இப்பேர்ப்பட்ட கிறிஸ்தவர்கள் மத்தியில் வேலை செய்வது அசாத்தியமான கஷ்டமும் மற்ற வேலைகளுக்குத் தடையாயும் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் என்னை மிகவும் வருத்துகிறது. என்றாலும் நான் இவை எல்லாவற்றையும் நமதாண்டவரிடம் சொல்லிவருகிறபடியால் இத்துன்பங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்துவிடும் என்று நம்புகிறேன். இதை வாசிக்கும் சகோதரரே! எனக்காகவும் என் வேலைக்காகவும் ஜெபிக்க மறவாதிருங்கள்.

ஆனால் நமது புதுக் கிறிஸ்தவர்களோ எவ்விதத்திலும் அயராது ஊழியத்துக்குதவிபுரிந்து ஆண்டவருக்குகந்த பிள்ளைகளாயிருக்கிறார்கள்.

மாத்றவ்லி இவ்வூர் காங்கோவுக்கு 5 மைல் தூரத்திலுள்ளது. இவ்விடத்தில் வெகு உண்மையுள்ள ஓர் புதுக் கிறிஸ்தவர் இருக்கிறார். இவர் கடந்த செப்டம்பர்மீ தமது வீட்டிலேயே சுற்றும் கிருமங்களிலுள்ள தமதுடன் சகோதரர்களுக்காக ஓர் ஆராதனை நடத்த இடம் பண்ணி நமது மிஷனரியையும் இன்னும் மற்ற ஊழியரையும் தமது சொந்தச் சிலவில் வரவழைத்திருந்தார். இவ்வாராதனை வெகு பேருக்குப் பிரயோஜனமுடையதாயிருந்ததுமன்றி எழு ஆத்துமாக்கள் ஞான ஸ்நானமும் பெற்றார்கள்.

நமது ஊழியங்களில் கஷ்ட நஷ்டங்கள் இருந்தபோதிலும் பலன்களும் உண்டு. ஆதலால் நாமடையும் பலாபலன்களுக்காக ஆண்டவரைத் துதிப்பதோடு நாமனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்கள் நீங்க அவரிடத்தில் மன்றாடுவோமாக.

இப்படிக்கு
கிறிஸ்துவுக்குள் சகோதரன்
பாதூர்சிங்.

## நுக்கர் சேகரம்.

நான் கடந்த மாதங்களில் நமது சேகரத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றோர் கோடிவரைக்கும் இரண்டு தடவை பிரயாணஞ்செய்தேன். ஐக்கிய மாகாண கமிட்டியார் நாமத்தில் நமது சேகரத்தைப் பார்க்க வந்த கனம் ஜார்டன் அவர்களுடன் மறு பயணமும் போனேன். நுக்கர் சேகரத்து வேலையைப்பற்றி பின்வருமாறு அபிப்பிராயப்படுகிறார்.

"நாஷனல் மிஷனரி சங்கத்தால் செய்யப்பட்டுவரும் வேலையால் மிகுந்த சந்தோஷமும் உற்சாகமும் அடைந்தேன்."

## ஸார்ஸாவா.

நான் ஸார்ஸாவுக்குச் சென்ற ஏப்பிரல் மாதம் மாற்றப்பட்டபோதிலும் வீடு கிடையாததினால் இங்கே வர முடியவில்லை ஆனால் ஆகஸ்டுமீ தொழுவத்திலும் கேடான ஓர் பழைய வீடு கிடைத்தது. அதை மிகுந்த பிரயாசத்தோடு நானும் என் வீட்டாரும் எங்கள் சொந்தக் கைகளால் செம்மைபடுத்தி வெள்ளை அடித்து அதை வசிக்க யோக்கியதையுடையதாக்கினோம். ஆகவே ஆகஸ்டு மாதக் கடைசியில்தான் ஸார்ஸாவில் வேலை ஆரம்பித்தேன். தற்சமயம் சுற்றிலுமுள்ள 15 கிராமங்களில் வேலை செய்யப்பட்டு வருகிறது.

ஸார்ஸாவின் ஆலயம்:—

இவ்விடத்தில் 15 கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஞாயிறுதோறும் கூடி ஆராதனை நடத்துகிறார்கள். கடந்த இரண்டு மாத ஓய்வுநாள் ஆராதனையின் காணிக்கை ரூ 3-0-9. இப்பணத்தை ஓர் கோவில் கட்டுவதற்கென்று போதுமான பணம் சேகரஞ் செய்ய மூல தனமாக வைக்கப்படவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது.

வைத்தியசாலை இவ்விடத்தில் கடந்த வருஷம் செப்டம்பர் மாதம் முதல் "நட்சத்திர தர்ம சகாய வைத்திய சாலை" எனப் பெயர் பூண்ட ஓர் புது வைத்தியசாலை துவக்கப்பட்டிருக்கிறது. ஷாரான்பூர் கலெக்டர் துரையவர்கள் 150 ரூ கொடுக்க வைத்தியசாலை ரூ 20 சம்பாதித்திருக்கிறது இவ்வளவு சொற்ப காலத்திற்குள்ளாக ஏறக்குறைய 5000 வியாதியஸ்தர் சிகிச்சையடைந்திருக்கிறதும் தவிர சுவிசேஷத்தையும் கேட்டிருக்கிறார்கள். தேவன் இவ்வூழியத்தை ஆசீர்வதிப்பாராக.

## இந்திய நாஷனல் மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த நாகர் கோவில் பாலிகா பாடசாலை கிளைச் சங்கத்து பட்டாவது வருஷ ரிப்போர்ட்.

"இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்" என்ற எட்டாம் எபிநேசர் ஞாபகக்கல்லை இன்றையத் தினம் நாட்டும்படி ஆவலாயிருக்கி



றோம். ஏனென்றால் இந்தச் சங்கத்துக்காக ஏதேது அற்ப முயற்சிகள் நடந்ததோ அவைகள் ஒவ்வொன்றிலும் கர்த்தருடைய கரத்தின் கருணையான நடத்துதலை தெளிவாய் கண்டுகொண்டோம்.

கடந்த வருஷத்தில் எங்கள் சங்கத்துக்காக 36 கூட்டங்கள் நடந்தன. நமது சபையிலுள்ள 6 பேரும் போடர்களில் 50 பேருஞ் சனிக்கிழமைதோறும் கூட்டங்களுக்கு ஒழுங்காய் வந்து 1½ மணி நேரம் மிகவும் ஜாக்ரதையாய் பலவித தையல்களைத் தைத்தார்கள். இடையிடையே சிலகூட்டங்கள் விசேஷித்த ஜெபங்களை ஏறெடுக்குங் கூட்டங்களாயிருந்தன. எங்கள் கைகள் தையல் தைப்பதில் முயற்சியாயிருக்கையில் செவிக்கு இன்பம் தரத்தக்கதும் ஆத்துமாவை எழுப்பத்தக்கதுமான சில சுவிசேஷ மிஷன்களின் சரிதைகளை கனம் ஹாரிஸ் மிசி அம்மாளவர்கள் வாரந்தோறும் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட விசேஷங்களை எங்களுக்குச் சொல்லுவது மிஷனரி வேலையை குறித்த தாபந்தத்தை எங்களுக்குள் பிறப்பிப்பதற்கு மிகவும் அனுகூலமாயிருக்கிறது. மேலும், நாஷனல் மிஷனரி சங்கத்து பிரயாண சிரஸ்தாவாகிய கனம் கடம்பவனம் அவர்கள் இவ்வருஷத்தில் மூன்று தடவை எங்களைச் சந்தித்து எங்களை உற்சாகப்படுத்தினார். அவர் தமது சொந்த குணப்படுதலைக் குறித்து சொன்ன சாட்சி மிகவும் எழுப்புதலுக்கேதுவாயிருந்தது. அவருக்கு நாகர் கோவிலில் கிடைத்த ஆபரணங்களில் மிகவும் விலையுயர்ந்தது எங்கள் கிளைச் சங்கத்து மெம்பரான ஒரு சகோதரியினால் கொடுக்கப்பட்டது*. இது மிகவும் சந்தோஷகரமானதே. கர்த்தர் நமது இருதயங்களை தமது கைவசமாக்கும்பொழுது நாம் மாத்திரமல்ல நம்முடையவைகளும் அவருக்கே சொந்தமாகின்றன.

எங்கள் சங்கத்துக்கு கடந்த வருஷத்தில் முதல் சேகரமான பணத்தைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்லுவோம். சேகரமானதில் அதிகமான முதல் நாஷனல் தையல் வகுப்பில் செய்யப்பட்ட வேலையினாலேயே கிடைத்தது. வருஷத்தின் கடைசி பாகத்தில் போடர்களில் பலர் தங்களுக்குக் கிடைத்த இளைப்பாறுதல் நேரங்களிலும் இதற்கென்று தைத்தார்கள். இரண்டு சகோதரிகள் இந்தச் சங்கத்து மெம்பர்களல்லாதிருந்தும், தங்கள் தையல் சூத்திரங்களை இரண்டொரு நாள் கொண்டுவந்து இன்னமும் முடியாமலிருந்த தையல்களை தைத்து முடிக்கும்படி ஆசையோடு உதவி செய்தார்கள். இந்தச் சங்கத்தின்பேரில் எப்போதும் தாபந்தமுள்ளவர்களாயிருக்கும் கனம் டதி மிசி அம்மாளவர்கள் தங்கள் பாரமான வேலைகளின் நடுவிலும் எங்களை அடிக்கடி பலவகையாய் உற்சாகப்படுத்தி வந்ததுமன்றி சில பொம்மைகளும் உடுப்புகளும் தந்து உதவி செய்தார்கள். மேலும் அவர்கள் இங்கிலாந்து தேசத்திலிருந்து சில நூதனமான துணிகள் வருத்திக்கொடுத்தது மிகவும் சந்தோஷமே. காலஞ்சென்ற போதக மாதாவாகிய கனம் டதியம்மாளவர்கள் இந்தச் சங்கத்துக்கென்று அநாத பள்ளிக்கூடத்து பிள்ளைக

* இருதயத்தின் நிறைவினால் பேசும் இவ்விருத்தாந்தத்தை நமக்கனுப்பிய பிரகாரமே வெளியிடுகிறோம். இவ்விருத்தாந்தமானது இந்தியாவைக் கிறிஸ்துவுக் காதாயப்படுத்தும் ஊழியத்தில் ஊக்கமில்லாதோர் ஊக்கமடையவும், ஊக்கமுடையோர் உறுதி கொள்ளவும் உதவும் என்பது நமது நம்பிக்கை. பத்திராதிபர்

லைக்கொண்டு ஆயத்தப்படுத்தியிருந்த சில உடுப்புகளை டதி மிசியம்மாள் எங்களிடம் கொடுத்தபோது நாம் செய்யும் எந்த சின்ன முயற்சியையும் வெகுவாய் மதித்து நம்மை உற்சாகப்படுத்தி வந்த பெரியம்மாளவர்களின் புன்னகை நிறைந்த முகம் எங்கள் ஞாபகத்தில் உடனே காணப்பட்டு இலங்கினது. இப்படிப்பட்ட பெருந்தகைமையுள்ள ஆத்துமாக்கள் நம்மைவிட்டு எடுபட்டுப்போகும்போது அதனால் உண்டாகும் வெளி இலேசாய் அடைபடக்கூடியதல்ல.

இந்தப் பள்ளிக்கூடத்தில் வெகுகாலம் இருந்து எங்கள் சங்கத்திலும் அதிகமான முயற்சி செய்துவந்த இரண்டு சகோதரிகள் கலியாணத்தினால் எங்கள் ஸ்தாபனத்தை விட்டு பிரிந்து போக நேரிட்டும், அவர்கள் இந்த சங்கத்தை மறந்துவிடாமல் ஆளுக்கு ஒரு ரூபாய் இதற்காக அனுப்பிவைத்தது எங்களுக்கு மிகவும் சந்தோஷமே.

கனம் ஹாரிஸ் மிசி அம்மாள் அவசியமான நூல் முழுவதும் தந்ததுமன்றி சந்தை விற்பனைக்காக 26 நேர்த்தியான லேஞ்சிகளும் தந்தார்கள்.

எங்களை அறியாத கனம் Smith என்ற மிசி அம்மாளிடம் நாங்கள் செய்துவரும் வேலையைப்பற்றி கனம் டதி மிசி அம்மாள் பேசினதின்பேரில் அவர்களும் இச்சங்கத்தை மறவாமல் லண்டனிலிருந்து கொஞ்சம் துணிகள் அனுப்பிவைத்தது மிகவும் உற்சாகத்துக்கிடமானதே.

போடர் பிள்ளைகளில் அநேகர் ரஜாவுக்குப் போய் திரும்பிவந்த மூன்று தடவைகளிலும், கருப்புக்கட்டி, முட்டை, கொல்லமாங்கொட்டை, எலுமிச்சம்பழம், தேங்காய், கொய்யாப்பழம், விளாங்காய், வெள்ளரிக்காய், பயறு முதலான பொருள்களைக் கொண்டுவந்து விற்பனை செய்து முதல் சேர்த்தார்கள். அத்தருணங்களில் அவர்களில் காணப்பட்ட உற்சாகம் கொஞ்சமல்ல. மேலும் சங்க நாட்களில் அவர்களுக்குக் கிடைக்கும் சக்கரங்களை வீணாயல், பலகாரம் இவைகளில் செலவு செய்யாமல் அவைகளை பத்திரம்பண்ணி இந்தச் சங்கத்துக்கு தந்துவிட்டார்கள். சிறுமியர் எங்கள் சங்கத்துக்குச் செய்த உதவியை மறந்துவிடோம். அவர்களில் சிலர் ஞாயிற்றுக் கிழமை பின்னேரத்தில் ஒரு ஜெபக் கூட்டம் நடத்தி வருகிறார்கள் அதில் கிடைக்கும் காணிக்கை முழுவதையும் எங்களுக்கே தந்துவிட்டார்கள். இது எங்களுக்கு மெத்தவும் மனோகரமானதே.

எங்களுக்கு இப்போது இரண்டு மூன்று வருஷங்களாக ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு நாள் மிகவும் சந்தோஷ நாள் அது எங்கள் பிறந்த நாளோ? அல்லது வேறே புறம்பான சந்தோஷ நாளோ? அல்ல, அது எங்கள் நாஷனல் மிஷன் சந்தை நாள். "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று நமது அருமை இரட்சகர் சொன்ன வாக்கின் கருத்து அந்த நாளில் தான் தன் முழு பிரமையோடும் ஜொலித்து விளங்கும். விடியற்காலம் சந்தைக்கு சுமந்துகொண்டு போகப்படும் ஒவ்வொரு பெட்டியும், இந்தியா கிறிஸ்துவுக்கு இந்தியா கிறிஸ்துவுக்கு என்று கூவிக்கொண்டுபோவதுபோல் எங்களுக்குக் கேட்கும்.



இவ்வருஷம் சந்தை விற்பனை நொவம்பர் 29-ஆ பள்ளிக்கூடத்தில் நடந்தது. காலை 8-30 மணிக்கு கனம் ஜெ. எம். கேசரி பாஸ்றறவர்கள் ஜெபிக்க சந்தை விற்பனை ஆரம்பித்தது. பாவாடைகளும், ஜாக்கெற்களும், உடுப்புகளும், லேஞ்சிகளும், பொம்மைகளும் நாங்கள் ஆயத்தப்படுத்தின பலவகையான பலகாரங்களும், பிஸ்கோத்து, மிட்டாய்களும், பழங்களும் மோட்டார் வண்டியின் வேகத்தில் விற்பனையாகிவிட்டன. நான் கொஞ்சம் முந்தி போனேனில்லையே என்ற பிராது சாமான் வாங்க வந்த அநேகர் வாயிலிருந்து புறப்பட்டது. பலகாரங்கள் மிகவும் ருசிகரமாயிருந்தனவென்று நற்சாட்சி கூறவும் கேட்டோம். நாஷனல் பலகாரம் ருசியாயிருக்கமாட்டாதோ? பெரியோரும் வந்து அகமகிழ்ந்து உற்சாக மொழி பகர்ந்து சென்றனர் கனம் கடம்பவனம் சந்தை நாளைக் குறித்து எப்படியறிந்தாரோ தெரியாது. அத்தருணத்தில் மணியாச்சியிலிருந்த அவர் சந்தை விற்பனைக்கு ஆசீர்வாதம் கூறி அங்கிருந்து ஓர் தந்திச் செய்தி அனுப்பினார். எங்கள் சங்கம் தழைக்க உதவி செய்த யாவருக்கும் நாங்கள் தாழ்மையாய் நன்றி சொல்லுகிறோம். பரலோகத்தில் அவர்களுக்குப் பலன் பெருகுவதாக.

## சங்கத்தின் வரவு செலவு கணக்கு.

வரவு:—

| | பணம். | சக். | காசு. |
|---|---|---|---|
| முன் கையிருப்பு ... ... ... ... | 87 | 3 | 2 |
| பிள்ளைகள் சங்க ஒறுப்பில் ... ... ... | 88 | 0 | 8 |
| போடர் பிள்ளைகளின் ரஜாகால சம்பாத்தியம் ... | 95 | 3 | 13 |
| சிறுமியர் ஜெபக்கூட்டக் காணிக்கை ... ... | 5 | 1 | 0 |
| மெம்பர்கள் கூட்டத்தில் காணிக்கையாகவும் நன்கொடையாகவும் கிடைத்தது ... ... ... | 36 | 0 | 0 |
| யோவேல் ஞான செல்வம் ... ... ... | 7 | 0 | 8 |
| பால் சாந்தம்மாள் ... ... ... ... | 7 | 0 | 8 |
| S. சொர்ணயாள் ... ... ... ... ... | 7 | 0 | 8 |
| ஆடர் தையலில் லாபம் ... ... ... ... | 16 | 2 | 8 |
| சந்தை வருமானம் ... ... ... ... | 737 | 2 | 12 |
| பாக்கியம் வாத்திச்சி ... ... ... ... | 3 | 0 | 0 |
| நேசம்மாள் ... ... ... ... ... | 3 | 0 | 0 |
| Fs. | 1094 | 3 | 13 |
| =Rs. | 153 | 10 | 10 |

செலவு:—

| | | | |
|---|---|---|---|
| துணி வாங்கினதில் ... ... ... ... | 323 | 2 | 0 |
| நாஷனல் சங்கத்துக்கு அனுப்பும் ரூபா 100-க்கு பணம் ... ... ... ... ... | 712 | 2 | 0 |
| கையில் இருப்பு ... ... ... ... ... | 58 | 3 | 13 |
| | 1094 | 3 | 13 |
| =Rs. | 153 | 3 | 13 |

## Some of Wesley's Great Sayings.
## உவெஸ்லி ஐயரின் அருமையான வார்த்தைகளில் சில.

1. என் சுகம் எனக்கு அனுகூலமாயிருந்தால் என் கடைசி சுவாசத்தை விடும் வரையில் கர்த்தருக்கே உழைக்க விரும்புகிறேன்.

2. 'புத்திசாலியாயிரு, வேலையின்றி ஒரு நிமிஷமும் சும்மாயிராதே.'

3. 'காலத்தை வீணாய்ப் போக்காதே, எந்த விடத்திலும் இருக்கவேண்டிய நேரத்துக்கு அதிகமாக இராதே.'

4. நியூ-காஸல்-ஆன்-டயின் (New Castle-on-Tyne) என்னுமிடத்தில் அவர் கொஞ்சம் பணம் சேகரித்தபோது, அவர் சொன்னதாவது, 'இதோ பெருந்தொகையான பணம் என் கையிலிருக்கிறது. ஆனால் பணம் அஞ்ஞானிகளைக் குணமாக்குமா? ஆவியின் வரத்தையுடைய பிரசங்கிகளைக் கண்டு பிடி. அவர்களுக்கு முன் பொன்னும் வெள்ளியும் ஒன்றுமில்லை.'

5. 'நான் உணர்த்தப்படவும் கற்பிக்கப்படவும் விரும்புகிறேன். ஆகையால்தேவனும்மனுஷனும் எனக்குக் கற்பித்து உணர்த்த ஆசைப்படுகிறேன்.'

6. 'உலகம் என் சபை, தேவன் என் எஜமான், ஆகையால் எங்கும் எல்லா விடங்களிலும் நன்மை செய்ய விரும்புகிறேன்.'

7. 'இந்த இரவிலேயே மனுஷன் சாகக்கூடியவனாகையால் இந்தப் பகலில் ஜீவனுள்ளவனாயிருக்கவேண்டும்.

8. 'தேவன் நேற்று செய்த நன்மையைக்கொண்டு இன்று ஜீவியாதே, இன்றைக்குப் புது நன்மை வேண்டும்.'

9. 'அதிக வேலை அதிக ஆசீர்வாதம்.'

10. 'வெறுன்றல்ல, அன்பே அன்பைப் பிறப்பிக்கும்.'

11. 'ஊழியத்தைப்பற்றியே நான் அதிகமாய் எண்ணுகிறேன். துன்பமும் அவமானமும் எனக்கு ஒன்றுமில்லை.'

12. 'தீமையானவைகளைக் கேட்கிறவனில்லையானால் தீமையானவைகளைப் பேசுகிறவனும் உலகத்திலிருக்கமாட்டான்.'

## Self Denials.
## தன்னை வெறுத்தல்.

லண்டன் மிஷன் சங்கத்திற்குண்டான பண முட்டுப்பாட்டை நிவிர்த்தித்த விஷயமாய் நடந்த பலசம்பவங்கள் மிகவும் வியப்புக்கிடமானவை. அவற்றிற் சிலவற்றை இதனடியில் எடுத்துரைக்கிறோம் :—



1. 5 பவுன் அல்லது 75 ரூபாய் பெறுமான ஒரு உண்டியல் பத்திரத்தோடு ஒரு கடிதம் வந்தது. அதில்,

"சில ஒய்வு நாட்களுக்கு முன்னே உங்கள் வேலையைக்கொண்டு நடத்த பண விஷயமாய் மிகவும் வருத்தப்படுகிறீர்களென்று நான் கேள்விப்பட்டேன். அது எனக்கு மெத்த சங்கடம். நான் தினசரி பாடுபட்டுப் பிழைக்கும் ஒரு பெண். வயது சென்ற ஒரு ஏழைத் தாய் மாத்திரம் எனக்குண்டு. ஆனால் வெகு கவலையாய் கொஞ்சம் பணம் சேர்த்தேன். ஆகையால் நான் அனுப்பும் இந்தச் சின்ன காணிக்கையை மீட்பர் நிமித்தம் அங்கீகரிப்பீர்களா? அவர் "நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; இதோ சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன்" என்றாரே. இந்த உண்டியல் நோட்டை அனுப்புகையில் என் பேரை அறிவியாமல் அனுப்பவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் அது சரியாய் உங்களிடம் வந்து சேர்ந்ததோ என்னமோ என்று நான் அறியவேண்டுமே. ஆகையால் நீங்கள் அதைச் சரியாய்ப் பெற்றுக்கொண்டவுடன் தயவு செய்து எனக்கு அறிவியுங்கள். இன்னும் நான் சேர்த்து அனுப்பக்கூடியது எதுவோ அதைச் சேர்த்து அனுப்பப் பிரயாசப்படுவேன் என்பதே.

2. ஒவ்வொன்று எட்டுப் பவுன் அல்லது நூற்றிருபது ரூபாய் பெறுமதியான இரண்டு செக்கோடு வந்த செய்தியாவது :—

" பண முட்டுப்பாட்டினிமித்தம் உங்கள் மிஷனெரிமார் தங்கள் திருப்பணிவிடைகளை விட்டு திரும்பிவிடுவார்களானால் எவ்வளவோ மோசம் என்பதை எங்கள் அங்கத்தார் இருவர் உணர்ந்து தங்கள் கிரியையின் மூலமாய் தங்கள் அனுதாபத்தைக் காட்டுகிறார்கள். ஆகையால் தங்கள் விடுமுறை நாட்களில் செல்லும் அதிகச் செலவை இந்தத் தடவை நிறுத்தி அதை உங்களுக்கு அனுப்புகிறார்கள். அவர்களுக்குத் தங்கள் பெயரை வெளியிடமனமில்லை ஆகையால் அது இரகசியமா யிருக்கட்டும்" என்பதே.

3. ஒரு புகைவண்டித் தொடரில் யாத்திரை போன ஒரு துரை மகன் இறங்குமிடம் சமீபித்தபோது, தனது பழைய மேற்சட்டையை எடுத்துக் காட்டி : " இந்தச் சட்டை எனக்கு இன்னும் கொஞ்ச நாளைக்குப் போதும் என்றெண்ணுகிறேன். ஆகையால் நான் புதுச் சட்டை வாங்கும்படி வைத்திருக்கிற பணத்தை என் பிரியமான பழைய சங்கமாகிய லண்டன் மிஷன் சங்கத்திற்குக் கொடுக்கிறேன்" என்றார்.

———*———

## THE N. M. S. OF INDIA.

பொதுக்காரியதரிசி :—

கனம். K. T. பால் அவர்கள், B. A., L. T., "தோட்டம்" சேலம்.

பொக்கிஷதார் :—

கனம். E. S. ஹென்ஸ்மென் அவர்கள், B. A., இராயப்பேட்டை.

தென்னிந்தியா காரியதரிசி :—

கனம். V. D. செல்லப்பா அவர்கள், B. A., B. L., கோயம்புத்தூர்.
தென்னிந்தியா பிரயாண காரியதரிசி:—
கனம். P. S. கடம்பவனம் அவர்கள், N. M. S. Office, இராயப்பேட்டை.

## நமது சங்கத்துக்கு இவ்வருஷம் ஜனவரிமீ 30-உ வரையில் வந்த வரவு.

| | | | |
|---|---|---|---|
| சென்னை மாகாணம் ... | 317 | 14 | 7 |
| ஐக்கிய மாகாணம் ... | 102 | 9 | 0 |
| பஞ்சாப் மாகாணம் ... | 40 | 7 | 3 |
| ராஜபுதனம் ... | 32 | 4 | 0 |
| பங்காளம் ... | 22 | 0 | 0 |
| பம்பாய் ... | 5 | 0 | 0 |
| பர்மா ... | 4 | 8 | 0 |
| ஸீரிய சபையார் .. | 100 | 0 | 0 |
| ஆக மொத்தம் ... | 624 | 10 | 10 |

இப்பத்திரிகை வேண்டியவர்களும், இதைப்பற்றி அறிய விரும்புகிறவர்களும் சேலம் ஜில்லா ஓமலூரிலிருக்கும் பத்திராதிபருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் வருஷ சந்தா அணா ஒன்றே ஒன்றுதான்.

PRINTED AT THE "T. A. C." PRESS, SALEM.

மாதந்தோறும் வெளியாகும்
இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.
The Tamil Organ of the
National Missionary Society of India.

Vol. VI. மார்ச்சு— 1914. No. 3.

OF THE REGISTRAR OF BOOKS
MAR 1914
MADRAS.

## பத்திராதிபர் குறிப்புகள்.

**நமது தீபிகை.**

இதுவரையில் சென்னையில் பிரசுரமான நமது தீபிகையானது இனிமேல் சேலத்தில் பிரசுரமாகும். இந்த மாறுதலாலும் இம்மாறுதலுக்குச் சர்க்கார் அனுமதி பெறவேண்டியிருந்ததினாலும் வெகுவாய்த் தடைபட்ட நமது தீபிகை இனிமேல் யாதொரு தடையின்றி நமது சகோதரங்கள் கைக்கெட்டுமென்று நம்புகிறோம்.

* * * * * *

**ஓர் N. M. S. ஊழியனின் திருமணம்.**

நமது சங்கத்து ஆபீசில் வெகு சிரத்தையுடன் உழைத்தவரும், தற்காலம் பெங்களூரில் வேத சாஸ்திரம் பயின்றுவருகிறவரும், நமது நல்ல சகோதரனுமான கனம் பாலசுந்தரம் அவர்கட்கும், சேலம் தாசில்தார் மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயரவர்களின் புதல்வி சௌ: அன்னாள் அம்மாளுக்கும், கடந்த மாதம் 16-ம் தேதி திரு விவாகம் சிறப்புடன் நடந்தேறியது.

மேற்படி வைபவத்தில் நமது N. M. S. ஆசாமிகளும், பெங்களூர் வேத சாஸ்திர மாணவரும் சிறந்து விளங்கினார்கள். இவ்விருவரையும் இணைத்த ஆண்டவர் தாமே இவர்கள் வீட்டை பலமாய்க் கட்டி சகல இகபர நன்மைகளினாலும் நிறப்பியருள்வாராக

மேற்சொல்லிய மணமகளும் அவரது தங்கையாரும் நமது தீபிகை சரிவர நமது சந்தாதார்களுக்கு எட்டுமாறு உதவி செய்ய உடன்பட்டிருக்கிறார்கள் என்பதும் சந்தோஷிக்கத்தக்கதே.

* * * * * * *

**நெய்யூர் N. M. S. வாலிப ஜெப சங்கம்.**

இப்பெயர்பூண்ட வாலிப ஜெப சங்கமானது கடந்த வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டு வளர்ந்தோங்கி வருகிறது. இச்சங்க வாலிபர் தமது வருடோற்சவத்தை வெகு விமரிசையாய்க் கொண்டாடினார்கள் எனக் கேட்டு சந்தோஷிக்கிறோம். ஆண்டவர் இச்சங்கத்தை ஆசீர்வதிப்பாராக.

**மதுரை N. M. S. ஸ்திரீகளின் கிளைச் சங்க 6-வது வருடோற்சவம்.**

இச் சங்கமே நமது கிளைச் சங்கங்களிலெல்லாம் முந்தினது. இச்சங்கத்தார் தங்களது 6-வது வருடோற்சவத்தை வெகு வைபவங்களுடன் கொண்டாடி அதன் இறுதியில் ஓர் தையல் விற்பனையையும் நடத்தினர். இவ்விற்பனையின் பலனான ரூ 60 ஐயும் நமது சங்கத்துக்கென்று அனுப்பியுள்ளார்.

அச் சங்கம் தெய்வாசீர் பெற்று நீடூழி வாழ்க என ஆசீர் கூறுகிறோம்.

* * * * * * *

**நமது ஓமலூர் ஊழியம்.**

தேவ கிருபையால் நமது ஓமலூர் ஊழியம் இவ்வருஷத்தில் விஸ்தீரணமடைந்து, ஓமலூர், நங்கவள்ளி, ஜலகண்டாபுரம் என முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முறையே பின் வரும் நமதூழியர் வசமளிக்கப்பட்டிருக்கின்றன. கனம் ஐசக்வில்லியம், தெய்வாசீர்வாதம், பால் ராமசாமி.

அதிசயங்களைச் செய்யும் ஆண்டவர் தாமே இவர்களுடைய ஊழியங்களை இவ்வருஷத்தில் விசேஷித்தவகையாய் ஆசீர்வதிக்கச் சகோதரங்கள் ஜெபித்து வருவார்களாக.

* * * * * * *

**நமது பிரயாண காரியதரிசியாரும் சென்னைமா நகரும்.**

நமது பிரயாண காரியதரிசியார் கனம் P. S. கடம்பவனம் அவர்கள் கடந்த மாதம் 15-ம் தேதிவரையில் சென்னைமா நகரின் பற்பல பாகங்களில் 16 கூட்டங்களை நடத்தி பெரும் பயனை விளைவித்திருக்கிறார் என்பது சந்தோஷிக்கத்தக்க விஷயமே.



இப்பெரிய நகர் இந்தியாவைக் கிறிஸ்துவுக் காதாயப்படுத்தும் பெரிய ஊழியத்தில் பெரும் பங்கடைதல் வேண்டும் என்பது நமது உள்ளக் கனிவான விருப்பம்.

* * * * * * *

**கோலார் ஊழியங்கள்.**

கடந்த மாத நமது தீபிகையில் "நட்சத்திர தர்ம வைத்திய சாலை" எனப் பெயர் பூண்ட ஓர் புது வைத்தியசாலையைப் பற்றிச் செப்பியுள்ளதை நேயர் அறிவர். இவ் வைத்திய சாலை நுக்கர்சேகரத்து நமது மிஷனரியாரின் பாரியாளாகிய Mrs. பீப்பிள்ஸ் அம்மாளவர்களால் யாதொரு கைம்மாறின்றி நடந்தேறி வருகிறது. இவ் வைத்திய சாலை ஆரம்பித்த 4 மாதத்திற்குள்ளாக 5482 வியாதியஸ்தர் சிகிச்சையடைந்து கிறிஸ்துவின் நாமத்தைக் கேட்டிருக்கிறார்கள். அன்பின் சொரூபியாகிய ஆண்டவர் தாமே அன்பின் ஊழியத்தைச் செய்யும் இச் சகோதரியை ஆசீர்வதித்து இவரது கையின் கிரியைகளை தமது நாம மகிமைக்கென்று வாய்க்கப்பண்ணியருள்வாராக.

இத்தகைய ஊழியஞ் செய்த மற்றொரு சகோதரன், தெலுங்கு நாட்டுச் சபையாரைத் தமது ரஜா நாட்களில் நமது சங்கத்திற்கென்று சந்தித்தவரும் நமது சங்கத் தெலுங்கு பத்திரிகையின் பத்திராதிபருமாகிய கனம் M. வெங்கட்டராவ் அவர்களே.

சர்க்கார் உத்தியோகத்திலிருக்கும் இச் சகோதரன் தமது ரஜா நாட்களையும் நமது சங்கத்துக்கென்று சத்தம் செய்து யாதொரு கைம்மாறின்றி உழைத்தது விசேஷித்தது. இவ்வரிய சகோதரங்கள் போன்ற பலர் நமது நாட்டிலும் எழும்ப அமலன் அருள் புரிவாராக.

---

## நமது சங்க ஊழியம்.

## ஓமலூர் சேகரம்.

---

### நங்கவள்ளி.

---

**நமது இரண்டாம் மிஷன் ஸ்தானம்.**

நமது தீபிகை நேயர் யாவருக்கும் நங்கவள்ளி என்பது ஓமலூர் சேகரத்தில் நாம் புதிதாய் ஏற்படுத்த எத்தனிக்கும் இரண்டாம் மிஷன் ஸ்தானம் என்று தெரிந்திருக்கலாம். இவ்விடத்தில் நமதூழியன் வசிக்க ஓர் வீடு கிடைப்பது கூடாமையாயிருந்தபோதிலும் இவ்வூருக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள வனவாசி என்னும் ஓர் கிராமத்தில் [illegible]

கிடைக்க ஆண்டவர் அருள் புரிந்ததால் இவ்வூரிலேயே நமது ஊழியன் தற்சமயம் இருக்கிறார்.

வனவாசி

வனவாசி என்னும் பெயர் இவ்வூருக்கு வந்தது, பஞ்சபாண்டவர் இப்பிராந்தியங்களில் வனவாசஞ் செய்ததின்பொருட்டேயாம். (பாரம்பரை) இவ்வூர் சற்று பெரிய ஊரானாலும் நல்ல ஊர் என்று சொல்வது அடாது. இவ்வூரில் தண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமாதலால் இவ்விடம் வசிப்போரும் வனவாசமே செய்கிறார்கள் என்று சொன்னாலும் தகும். ஆகவே நமது ஊழியனும் வனவாசம் செய்ய வேண்டியதே.

வனவாசிக்கு முதல் கிறிஸ்தவன்.

இவ்வூரில் கிறிஸ்தவர்கள் குடியிருந்ததாகத் தெரியவருகிறதில்லை தெரிந்தமட்டில் தற்சமயம் இருக்கும் நமது இந்திய சுயதேச மிஷனரி சங்க ஊழியனே முந்தினவன். ஆகவே இம்முந்தின கிறிஸ்தவ ஊழியனுக்குக் கஷ்டங்கள் இருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. பரமபிதாவே நமது ஊழியனையும் அவரது குடும்பத்தையும் ஆண்டு காப்பாற்றுவாராக.

இவ்வூருக் கருகேயுள்ள பஞ்சமர் வசிக்கும் சேரிக்கு ஓர் நாள் சாயரட்சை போனோம். அங்கே அவர்கள் பாடகன் என்று மெச்சிக்கொள்ளும் ஓர் வாலிபன் பின்வரும் கீதம் பாடினானாயினான்.

"வேலமரத்தடியிலே - வெள்ளைக்காரன் கூடாரம்
வேதம் படிக்கச்சோலிலே - வேளூர் கிறவிடி ஓட்டைமாலே."

மேற்சொல்லிய கீதத்தைக் கேட்டதும் எங்களுக்கிருந்த வியப்பையோ அல்லது விசனத்தையோ எதைச் சொல்லலாம். இக்கீதத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு கூடாரங்களில் தங்கிப் பிரசங்கிக்கும் ஐரோப்பிய மிஷனரிமாரைப்பற்றி ஜனங்கள் கொண்ட ஓர் எண்ணம் வெளிப்படையாம். மேற்படி பாடலைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களுக்கு கடவுளுடைய பரிசுத்தத்தைக் குறித்துப் பேசி பாடல் சகிதமாய்ப் பரிசுத்தராகிய கிறிஸ்துவைப் படம்போல் காண்பித்தோம்.

சென்ற மாதத்தில் நடந்த திருவிழாக்கள் இரண்டு. ஒன்று பல்பாகி, மற்றொன்று தாரைமங்கலம்.

பல்பாகி. இவ்வூரில் வழக்கம்போல் பிசாசின் கிரியையும் அதின் ஆடம்பரமும் வெகு மும்முரமாய் இருந்தது. உயிரிழந்த ஜீவ ஜெந்துக்களின் தொகை மிகுதி. ஜனத்தொகையும் திரள். இங்கேயும் கிறிஸ்துவை உயர்த்திக் காட்டத் தருணம் வாய்த்தது. கிறிஸ்தவர்கள் எனப் பெயர் வைத்திருக்கும் ரோமான் மார்க்கத்தாரும் இங்கு வந்து தங்கள் ஆடுகளையும் கோழிகளையும் பலி கொடுத்து குடித்துக் கூத்தாடி அருவருப்பான காரியங்களைச் செய்தது மகா விசனமான காரியமே.



தாரைமங்கலம்:—இவ்வூர் நங்கவள்ளிக்கு 5 மைல் தூரத்திலுள்ள ஓர் பெரிய சிவஸ்தலம். இது நமது இரண்டாம் மிஷன் ஸ்தானத்துக்குப் போகும் வழியிலிருக்கிறது. சென்ற மாதம் இவ்வூரில் வருடோற்சவம் நடைபெற்றது. மேற்படி உற்சவத்துக்கென்று செய்த ஆயத்தப்பாடுகள் பெரிது. அதற்கென்று வந்த ஜனக் கூட்டமும் பெரிது. இவ்வுற்சவத்தில் கூடிய ஜனங்களுக்கும் சுவிசேஷம் கூற நமதூழியன் ஜாக்கிரதையாயிருந்து 3 நாள் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்.

நங்கவள்ளி,
9-3-14.

வனவாசி.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 2 ... 1914 MADRAS

## ஜான் கெளட்ஸ் என்னும் மகாபாவி.

### ஓர் நடந்த சம்பவம்

ஜான் கெளட்ஸ் என்பவர் கப்பலோட்டும் வித்தையில் வெகு திறமையுடையவராயினும் ஆண்டவரது சமுகத்தை வெறுத்த பெரும்பாவியாயிருந்தார். இப்படி பயங்கர ஜீவியம் செய்து வந்த இம்மானுஷிக்கு தன் கடைசி நேரம் வந்தது. கப்பல் நடுச் சமுத்திரத்தில் ஓடிக்கொண்டிருக்கையில் தன்னுடைய அறையில் தன் வியாதியின் அகோரத்தினால் வெகு சங்கடப்பட்டுக்கொண்டிருந்தார். மரண பயங்கரம் அவரைப் பிடித்தது உடனே ஜான் கெளட்ஸ் தன்னுடைய முதல் உதவிக்காரனாகிய வில்லியம்ஸ் ஐ அழைப்பித்து, என் சிநேகிதனே. நான் பொல்லாதவனென்பது உனக்குத் தெரியும்.

நான் இந்த வினை பிழைக்கமாட்டேன். தயை கூர்ந்து எனக்காக முழங்கலூன்றி சற்று ஜெபி என்று கேட்க, அவர் மாலுமியே நான் ஜெபிக்கிற மனுஷன் அல்ல என்பது உமக்குத் தெரியுமே. ஆகையால் நான் ஜெபிக்க முடியாது. என்னால் கூடுமானால் யாதொரு அட்டியின்றியில் செய்வேன் என்றான்.

அப்படியானால் ஒரு வேதாகமம் கொண்டுவந்து அதிலிருந்து எனக்காக சிலவற்றை வாசி என்று மாலுமி சொல்ல மாலுமியே நான் தேவபக்தியுடையவனல்லாததினால் என்னிடம் வேதாகமம் இல்லை என்று சொன்னேன்.

பிறகு அந்த பரிதாபமான நிலைமையிலிருக்கிற மாலுமி தன்னுடைய இரண்டாம் உதவி ஊழியனாகிய ஜோன்ஸை அழைப்பித்து.

ஜோன்ஸே! நான் இந்த விசை கட்டாயம் பயணம் புறப்பட்டு விடுவேன் ஆகையால் தயவு செய்து ஆண்டவர் என்னை ஆத்துமாவின் பேரில் கிருபை கூரும்படி சற்று ஜெபி என்று சொல்ல, என் அருமை மாலுமியே என்னால் கூடுமானால் கட்டாயமாய் செய்வேன். நான் சிறு வயது முதல் ஜெபித்ததேயில்லையென்று சொல்ல உன்னிடத்தில் வேதாகமமாவது இருக்கிறதா என்று கேட்க அதுவும் இல்லை என்று சொல்லிப் போய் விட்டான்.

சாகப் போகும் பாவிக்கு ஐயோ! இந்தப் பாவியின் முடிவு எவ்வளவு பயங்கரம் கடைசி நேரத்தில் இரங்க இல்லை, ஜெபிப்பாருமில்லை.

அருகிலிருந்தோர் ஜெபம் செய்யக்கூடிய ஓர் மனிதனுக்காகக் கப்பல் முழுவதிலும் தேடியும் பயன் படவில்லை

திருமொழிகளில் சிலவற்றை வாசிக்கும் பொருட்டு ஓர் வேதாகமத்துக்காகத் தேட சமையலறையில் வேலை செய்யும் வில்லி பிராட் என்னும் ஓர் சிறு பையனிடம் இருப்பதாகத் தெரிந்து அவனிடம் விரைந்தோடி, தம்பி! உன்னிடம் வேதாகமம் இருக்கிறதா என்று கேட்க, ஆம் ஐயா என்னிடம் அருமையான புத்தகம் ஒன்று உண்டு, அதை என் ஓய்வு நேரங்களில் வாசிக்கிறேன் என்று சொன்னான்.

ஓ அதுதான் வேண்டியது உன்னுடைய வேதாகமத்தை எடுத்துக் கொண்டு மாலுமியின் அறைக்கு விரைந்தோடு. அவர் அதிகவியாதியாயிருக்கிறார் தான் சீக்கிரம் இறந்து போவதாகச்சொல்கிறார் சீக்கிரம் போ என்று சொல்ல அச்சிறுவன் தன்னுடைய வேத புத்தகத்தோடு மாலுமியின் அறைக்குப் போனான் ஆவலாய்க்காத்துக் கொண்டு நிற்கும் மாலுமி உன்னிடம் வேதாகமம் இருக்கிறதா? அப்படியானால் உட்கார்ந்து வேதபுத்தகத்தில் சிலவற்றை வாசி, நான் சீக்கிரம் இறந்து போவேன்-என்னைப் போலொத்த ஏழைப் பாவியின் பேரில் ஆண்டவர் கிருபை கூர்ந்ததைக் குறித்துச் சொல்லுமொன்றை எடுத்து வாசி என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

அந்த நல்ல பையன் தானும் தன் தாயாரும் சேர்ந்து வாசித்த பாகமாகிய எசாயா 53ம் அதிகாரத்தை வாசிக்கலாமா என்று உத்திரவு கேட்க, அதையே வாசி என்று மாலுமி சொன்னார்.

ஜான் கௌட்ஸைப்போன்ற ஏழைப் பாவிகளுக்காகத் தன் உயிரை விட்ட ஆண்டவரது அன்பின் விளக்கமாகிய அவ்வதிகாரத்தை எடுத்து அச்சிறுவன் வாசிக்கலாயினான். ஐந்தாவது வசனம் வாசிக்கப்படும்பொழுது வெகு ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருந்த மாலுமி தன் கடைசித் தருணத்தை யுணர்ந்து நிறுத்து பையனே அதை இன்னொருமுறை வாசி என்றார் அச்சிறுவன் அமிர்த வசனமாகிய அவ்வசனத்தை வாசித்தான். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

இதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த மாலுமியானவர், அது நல்லது அதுதான் உண்மை என்று பிரலாபித்தார். இதைக் கேட்ட அச்சிறுவன் உற்சாகமுடையவனாகி ஐயா! நானும் என் தாயாரும் இவ்வாக்கியத்தை வாசித்தபோது என் பெயரை வைத்து வாசிக்கும்படி சொன்னார்கள். அப்படி வாசிக்கட்டுமா என்று கேட்க, தம்பி, சந்தேகமில்லாமல் உன் தாயார் எங்கே உன் பெயரை வைத்து வாசிக்கச் சொன்னார்களோ அங்கேயே வைத்து வாசி என்றார். அப்பொழுது அப்பையன் அமைதலாயும் வெகுபக்தியாயும் "வில்லிபிராட்டுடைய மீறுதல்களினிமித்தம் (இயேசு) காயப்பட்டு, வில்லிபிராட்டுடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் வில்லிபிராட்டுக்குச் சமாதானம் உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் வில்லிபிராட்டு குணமாகிறான்" என்று வாசித்தான்.

இப்படி அந்தப்பையன் தன் பெயரை வைத்து வாசித்தவுடன் அந்த மாலுமி பையனிடம் புரண்டு வந்து என் அருமை தம்பி! உன மாலுமியின் பெயரை வைத்து வாசி, ஜான் கௌட்ஸ் என்றார். அச்சிறுவன் திரும்பவும் பின் வருமாறு வாசித்தான்.

ஜான் கௌட்ஸ் உடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, ஜான் கௌட்ஸ் உடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். ஜான்கௌட்ஸ்க்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் ஜான் கௌட்ஸ் குணமாகிறான்." என்று பையன் வாசித்தவுடன் அது போதும் நீ இப்பொழுது போகலாம் என்று சொல்லி குப்புறப்படுத்துக்கொண்டு ஏசா 53.5 ம் வசனத்தில் தன் பெயரை வைத்துத் திரும்பித் திரும்பி அழுகையோடு அலறிச் சொல்லவே பரலோகத்தின் சந்தோஷம் அவர் ஆத்துமத்தை நிறைப்பிறது அவர் இரட்சிக்கப்பட்டார். ஆண்டவருக்கே துதி உண்டாவதாக. இன்னொரு பாவி குணமானான்.

ஜான் கௌட்ஸ் சில நிமிஷங்களுக்கப்புறம் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் அவரது சடலம் துணிகளில் சுற்றப்பட்டு சமுத்திரம் தனனிடத்திலிருப்பவர்களைக் கொடுக்கும் கடைசி நாள் வரையிலும் ஒருவரும் பாராதபடி ஆழிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஜான் கௌட்ஸ் நித்திரையடையுமுன்னதாகக் கப்பலிலுள்ள யாவருக்கும் கல்வாரியில் தன் உயிரை விட்ட இயேசு தனக்காகவே இவ்வித பாட்டை அனுபவித்து உயிர் விட்டார் என்பதை சாட்சியாகக் காண்பித்தார். இதை வாசிக்கும் என் அருமை இந்திய கிறிஸ்தவ சகோதரனே சகோதரியே பின்வரும் அருமையான வாக்கியத்தில் கோடிட்டிருக்கும் இடத்தில் உன் பெயரை வைத்து வாசித்து சில நிமிஷங்களை ஆத்துமகேசமோடு செலவிடுவாயா?

"..............டைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு........ ............டைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்........ ............க்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால்....................குணமாகிறான் ஏசா 53-5. (*From the Indian Christian.*)

—

## மதுரை மாநகர்.

தென் திருவாங்கூரில் நமது வேலையை ஒருவாறு முடித்து நவம்பர் மாத முடிவில் திரும்புங்கால் மதுரை மாநகரில் ஓர் தினம் தங்க நேரிட்டது. இங்கு சகோதரர்கட்குள்ளும் சகோதரிகட்குள்ளும் இரண்டு கிளைச்சங்கங்கள் வளர்ந்தோங்கி வருவதை நமது நேயர் யாவருமறிவர். அந்த ஸ்திரீகள் சங்கத்தின் ஆறாவது வருஷோற்சவமும் அதன் பின் தையல் விற்பனையும் அன்று பகல் நடந்தேறியது. இவ்விருகிளைச்சங்களின் காரியதரிசிகளாகிய நமது நண்பர்கள் ஓய்வுநாளாகிய மறுநாட்காலை ஒரு கூட்டம் மங்களபுரம் பெண்பாடசாலையில் ஒழுங்குசெய்தார்கள் அவ்வாறே காலை ஆராதனை முடிந்த பின்னர் அப்பாடசாலையிற் கல்வி கற்கும் பெண் பிள்ளைகளும் அவர்கட்குக் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயராகிய சகோதர சகோதரிகளும் சபையாரில் சிலரும் தங்கள் ஜெபத்தினாலும் பொருளினாலும் உதவி செய்துவரும் சங்கத்தின் பேரிலுள்ள பாசத்தினால் அங்குள்ள பெரிய மண்டபம் நிறைய வந்து கூடினர். நமது சங்கத்தை ஆதரிக்குமாறு தென்னிந்தியாவிலுள்ள கிளைச்சங்கத்தார் எடுக்கும் பிரயாசத்தை யெடுத்துரைக்கத் தருணம் வாய்த்தது. கூட்ட முடிந்தவுடன் ஒரு பெண் ஒரு ஜோடி தங்கத் தோட்டை என் வசமளித்து மறைந்தனள். காலதாமத மானபடியால் அம்மண்டபத்தை விட்டு நானகன்ற பின்னும் அங்கு கூடியுள்ள சகோதரிகள் பின்னும் வேறு நகைகளை ஒன்றின் பின் னொன்றாக கொடுத்தனுப்பின விசமும் வியப்பை உண்டு பண்ணிற்று. அந் நகைகளாவன:—இரண்டு ஜோடி தோடுகள், ஒரு ஜோடி தங்கத்தட்டு, ஒரு ஜோடி புதிய தங்க மோதிரம், கல்லிழைத்த மூக்குத்தி.

மேலும் "என்னிடமிருந்து" எனும் அரும்பொருளடங்கிய கைத்தாளுடன் இரண்டு புதிய புஸ்தகங்களையும் ஒரு மாது கொடுத்தனுப்பினள். இவைகளைப் பெறுங்கால் என் மனமிருந்த நிலைமையை யெவ்வாறெழுதவேன். கர்த்தர் இவர்களது காணிக்கையை ஏற்றுக்கொண்டு இவர்கள் ஒவ்வொருவரையும் தான் முன் செல்லப் பின் நடத்தி ஆசீர்வதித் தருள்வாராக.

அன்று மாலை கீழ்வாசற் கோவிலிலும் ஓர் சிறந்த கூட்டம் நடையுற்றது.

P. S. கடம்பவனம்.

## THE N. M. S. OF INDIA.

பொதுக்காரியதரிசி:—

கனம். K. T. பால் அவர்கள், B. A., L. T., "தோட்டம்" சேலம்.

பொக்கிஷதாரி:—

கனம், E. S. ஹென்ஸ்மென் அவர்கள் B. A., இராயப்பேட்டை.

தென்னிந்தியா காரியதரிசி:—

கனம். V. D. செல்லப்பா அவர்கள், B. A., B. L., கோயம்புத்தூர்.

தென்னிந்தியா பிரயாண காரியதரிசி:—

கனம். P. S. கடம்பவனம் அவர்கள், N. M. S. Office, இராயப்பேட்டை.

PRINTED AT THE "T. A. C." PRESS, SALEM.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
5 MAY 1914

மாதந்தோறும் வெளியாகும்

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

# The Tamil Organ of the National Missionary Society of India.

Vol. VI. ஏப்ரல்மீ 1914. No. 4.

## பத்திராதிபர் குறிப்புகள்.

**நமது சங்கத்து வருமானம்.**

ஆண்டவரருளால் நமது சங்கத்து வருமானமும் வருஷா வருஷம் அதிகரித்து வருவதும், நாம் நன்றியுடன் துதி செலுத்தவேண்டிய காரியங்களில் ஒன்று.

பின்வரும் கணக்கினால் இவ்விருத்தியைத் தெளிவுறக் காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1906-ம் வருட | பொதுப் பொக்கிஷ வரவு ரூ. | 3513 | 9 | 6 |
| 1907-ம் வருட | ,, ரூ. | 5895 | 15 | 0 |
| 1908-ம் வருட | ,, ரூ. | 6614 | 1 | 7 |
| 1909-ம் வருட | ,, ரூ. | 6402 | 15 | 9 |
| 1910-ம் வருட | ,, ரூ. | 8647 | 8 | 7 |
| 1911-ம் வருட | ,, ரூ. | 12462 | 12 | 5 |
| 1912-ம் வருட | ,, ரூ. | 14908 | 0 | 6½ |
| 1913-ம் வருட | ,, ரூ. | 15074 | 7 | 11 |

கடந்த வருஷத்தின் விருத்தி அவ்வளவு அதிகம் அல்ல என்று ஒருவேளை நினைக்கலாம். ஆனால் நமது சங்க மூல தனத்துக்கென்று ஏறக்குறைய 4000 ரூ. செலுத்தப்பட்டிருப்பதை சேர்த்துக்காங்கால் அதிசயங்களைச் செய்யும் நமதாண்டவருக்கே சகல துதியையும் கனத்தையும் செலுத்தாதிருப்பது எப்படி?

இவ்வருஷத்தில் நமது சங்கச் செலவுக்கு வேண்டி மதிப்பிட்டிருக்கும் தொகை ரூ 17,997. அது பின்வருமாறு வீதிக்கப்பட்டிருக்கிறது.

**வரவு, செலவு மதிப்பு.**

| | | |
|---|---|---|
| மங்கோலிய மிஷன் | | ரூ 4219. |
| நக்கர் | ,, | ரூ 2552. |
| கார்வார் | ,, | ரூ 2415. |
| ஓமலூர் | ,, | ரூ 2063. |
| கார்ஜட் | ,, | ரூ 382. |
| பொதுச் செலவு | | ரூ 4976. |
| பத்திரிகைகள் | | ரூ 1390. |

இத்தோடு கடந்த வருஷத்திய கடன் ரூ 510-10-8½ ஆக இவ்வருஷத்துக்கு வேண்டிய தொகை 18507-0-8½ (அல்லது மாதத்துக்கு ரூ 1550) ஆங்காங்குள்ள சகோதரங்கள் நமது ஆண்டவருக்கென்றும் நமது தேசத்துக்கென்றும் சில மணி நேரங்களைச் செலவிடுவார்களானால் 2180000 ஆத்துமாக்களடங்கிய இந்திய கிறிஸ்தவ சபைக்கு இத்தொகை கொடுக்கமுடியாப் பெருந்தொகையல்லவே.

"மனமுண்டானால் இடமுமுண்டாகாதோ"

---

மேற் சொன்ன செலவு மதிப்போடு வருமானத்தையும் அந்தந்த மாகாணத்துக்குத் தக்கதாய் வீதித்ததில் நமது தென்னிந்தியா 6000 ரூ சேர்க்க வேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை நமது தீபிகை உலாவி வரும் தமிழ் நாடுகளில் பின்வருமாறு எதிர்பார்க்கப்படுகிறது.

பின்வரும் கணக்கில் அந்தந்த இடத்தினின்று கடந்த வருஷத்தில் எதிர் பார்த்த தொகையும், வந்த தொகையும் இவ்வருஷத்தில் எதிர் பார்க்கப்படும் தொகையும் காட்டப்பட்டிருக்கிறது.

| இடம். | | | 1913 எதிர் பார்த்த தொகை ரூ. | 1913 வந்த தொகை ரூ. | | | 1914 எதிர் பார்க்கப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1. மதுரை | ... | ... | 300 | 260 | 10 | 0 | 300 |
| 2. தஞ்சாவூர் | ... | ... | 500 | 215 | 0 | 0 | 250 |
| 3. தென் ஆற்காடு | | ... | 300 | 135 | 8 | 0 | 300 |



| இடம். | | | 1913 எதிர் பார்த்த தொகை ரூ. | 1913 வந்த தொகை ரூ. | | | 1914 எதிர் பார்க்கப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 4. செங்கல்பட்டு | | ... | 150 | 144 | 1 | 0 | 150 |
| 5. வடஆற்காடு ... | | ... | 300 | 202 | 12 | 4 | 250 |
| 6. சேலம் | ... | ... | 250 | 166 | 7 | 0 | 250 |
| 7. நீலகிரி & கோயம்புத்தூர் | | | 300 | 335 | 0 | 0 | 300 |
| 8. திருச்சி | ... | ... | 120 | 29 | 12 | 0 | 100 |
| 9. சென்னை | ... | ... | 1000 | 819 | 4 | 2 | 1000 |
| 10. திருவாங்கூர் | | | ,, | ,, | | | 1000 |

தேறிப்போ, தேறிப்போ சீயோனே!

நமது ஜனவரி மாத சஞ்சிகையில் லூத்தரன் சபையார் நமது சங்க சம்பந்தமாய் ஊழியம் செய்யும்படி இன்னம் சுவிசேஷம் லூத்தரன் சபையாரின் எட்டாத ஓர் சேகரத்தைக் கண்டுபிடிக்கும்பொருட்டு H. M. S. சேகரம். கனம் P. O. பிலிப் அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னோம். அவர் அலகபாத்துக்குத் தெற்கேயுள்ள பாகல்கண்டிலுள்ள ரீவா என்னும் சுதேச ராஜ்ஜியம் ஏற்ற சேகரம் என்றும் இதில் ஐரோப்பிய அமெரிக்க மிஷனரிமார் வேலை செய்வதற்கு சுதேச அரசாட்சியின் சட்டங்கள் அனுகூலமாயிருப்பதில்லை என்றும் செய்தி யனுப்பியிருந்தார்.

இவ்விடத்தில் வேலை துவக்கவேண்டுமானால் சுதேசிகளாகிய நம்மைத் தவிர யாருண்டு? மேற்படி யிடத்தில் வேலை துவக்குவது தகுதியென்று சர்வ இந்திய லூத்தரன் சங்கத்தாரும் அபிப்பிராயப்பட்டு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் அறிந்து சந்தோஷப்படுகிறோம். இந்திய லூத்தரன் சபையிலுள்ள வரம் மிகுந்த வாலிப சகோதரங்களுக்கு இது ஓர் தேவ அழைப்பு.

## நமது சங்க ஊழியம்.

## ஓமலூர் சேகரம்.

---

### ஜலகண்டாபுரம்.

---

இவ்வூர் நங்கவள்ளியிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது. இந்த ஊரில் வெள்ளிக்கிழமை தோறும் கூடும் சந்தை மிகவும் பெரிது. ஜனக்கூட்டமும்

பெரிது. இதில் நான் தனியே ஓர் மரத்தடியில் நின்று பிரசங்கம் செய்த பிறகு கைத்தாள் பிரதிகளைக் கொடுத்துத் திரும்பினேன். நான் கொடுத்த கைத்தாள்களை வாங்கினவர்கள் வாசித்துக்கொண்டிருக்க வாசிக்கத் தெரியாதவர்கள் கேட்டுக்கொண்டிருக்கவும் கண்டேன்.

**மலையம்பாளையம்.**

இக்கிராமம் மேற்சொன்ன ஜலகண்டாபுரத்துக்கு அருகாமையிலுள்ளது. இவ்வூருக்குப் போய் சிறிது பிரசங்கித்து திரும்பி வருகையில் சிலர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அங்கிருந்த கிணற்றில் ஸ்நானம் செய்துவிட்டு புறப்படும்போது அவர்களில் ஒருவர் என்னிடம் வந்து என்னுடைய யோக க்ஷேமங்களை எல்லாம் விசாரித்து, எனக்கு என்ன வேலை என்று கேட்டார். நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று சொன்னபிறகு அவர் யார் என்றும் அவர் எங்கிருந்தார் என்றும் பல கேள்விகளைக் கேட்க திரு அவதாரச் சரிதையைச் சுருக்கிச் சொன்னேன். கடைசியில் ஒருவர், ஐயா! வெள்ளைக்காரப் பாதிரிகள் சொல்லுகிறார்களே அந்தத் தெய்வம் தானே நீங்கள் சொல்லுகிறதும், அவர்கள் தெய்வத்தை நாம் ஏன் வணங்கவேண்டும் என்று கேட்டார். நான் இத்திரு அவதார புருஷன் பூலோகத்துக்கு ரட்சகர் என்பதை வெகு தெளிவாய் விளக்கிக் காட்டினேன். இதற்குள் நேரம் அதிகமானதால் அவர்கள் இளநீர், பொரி, கடலை முதலியவைகளைச் சாப்பிடும் பொருட்டுக் கொடுத்தார்கள். இவர்கள் யாவருக்கும் கைத்தாள் ஒவ்வொன்று கொடுத்துத் திரும்பினேன்.

**மேச்சேரி.**

இக்கிராமம் மற்ற நாட்களில் மிகவும் சாதாரணமானது தான். ஆனால் வருஷத்தில் ஒரு தடவை இது ஒரு பெரிய பட்டணம் போல் ஆகிறது வழக்கம். இது இவ்வூரில் நடக்கும் திருவிழா நாள் தான். இவ்வூரில் இருக்கும் தேவதையின் பெயர் பத்திரகாளியம்மன். இந்த அம்மையே இப்பிராந்தியங்களிலுள்ள தேவதைகளுக்கெல்லாம் பெரிது. ஆகவே திருவிழா நாட்களில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகிறார்கள் மேலும் இத்திருவிழாவோடு மாட்டுச் சந்தையும் இருப்பதால் தஞ்சை, திருச்சி, நாகர்கோவில் முதலிய இடங்களிலிருந்தும் ஜனங்கள் வருகிறார்கள். இந்தவருஷம் சென்ற வருஷத்தை விட ஜனக்கூட்டம் குறைவுள்ளதாயினும் நமது அருமை இரட்சகரின் இனிய நாமத்தைக் கேளாத ஜனக்கூட்டம் பெரிது. இச்சகோதரங்களுக்கு நாங்கள் அந்தி, சந்தி, மத்தியானத்திலும் பல இடங்களில் நின்று தேவ ஒத்தாசையை முன்னிட்டு கிறிஸ்துவின் நாமத்தைக் கூறினோம்.



6 MAY 1914
MADRAS.

கடைசி நாளில் கைத்தாள் ஏறக்குறைய 5000 செலவாயின. அக் கைத்தாள்களில் ஒன்றை வாங்கின ஓர் சகோதரன் அதைக் கிழித்து உங்கள் கிறிஸ்து படும் பாட்டைப் பார் என்று கூவிக்கொண்டு நமது சகோதரன் கனம் தேவாசீர்வாதம் அவர்கள் தலையின்மேல் போட, அவர் ஈஸ்வரன் உன்னை ஆசீர்வதிப்பாராக என்று ஆசீர்வதித்தார். அச்சகோதரன் சிரித்துக்கொண்டு அமர்ந்து போய்விட்டான்.

சவுலைப் பவுலாக்கின ஆண்டவருக்கு
கூடாத காரியமும் உண்டோ?

ஜலகண்டாபுரம்,
மார்ச்சு 1914.

பால் ராமசாமி.

---

## கடவுளோடு தனிவாசம்.

### (மாட் வேதபண்டிதர்)

ஞான அநுபவத்தையும் ஆவியில் புதுப் பெலனையும் அடைவதற்கும் கடவுளோடு தனித்திருப்பதற்கும் உலக விவகாரங்கள் தொல்லைகள் ஜனப்புழக்கம் இவற்றினின்று விலகியிருக்கும் பழக்கத்தை அநுசரித்தல் எக்காலத்தையும் விட இக்காலத்தில் மிகவும் தேவை. உலகமெங்கும் இதற்குமுன் ஒருபோதும் இல்லாத விதமாய்ப் பொருளாதார நிலைகளை விருத்திக்குக்கொண்டுவரும் முயற்சி நடந்தேறி வருகிறது. இம்முயற்சியில் இந்து தேசத்தாரும் தலைப்பட்டிருக்கிறார்கள். இக்காலத்தில் புழக்கத்துக்கான சாதனங்கள் அதிகப்பட்டுவிட்டபடியால் நாம் எப்போதும் மனுஷரோடு சகவாசம் செய்யவும் மனுஷ சந்தடி நடுவில் ஓயாதிருக்கவும் அவர்கள் தேவைகளையும் குறைவுகளையும் கேட்கவும் வேண்டியிருக்கிறது. இப்படியிருக்க, மனுஷரை விட்டு எட்டியிருக்கிறதென்றால் கஷ்டத்திலும் கஷ்டமாய்விடுகிறது. ஆதலால் ஞான காரியங்கள் அநுபவித்தறியவும் ஆவியில் புதுப் பெலனடையவும் நம்மைத்தனியே யிருக்கப் பண்ணும்படியான பழக்கத்தைக் காத்துக்கொள்வோமானால் நமக்கு நன்மையாயிருக்கும்.

மேலும் இக்காலத்தில் உலகமானது எக்காலத்தையும்விட அதிக சுறுசுறுப்பாயிருக்கிறது. அப்படியிருக்கவேண்டாமென்று நான் சொல்வதில்லை அவரவர் கிரியைகளால் அவர்களை அறிவதற்கு அது உதவியாயிருக்கிறது. ஆயினும் உலகத்தை விட்டுத் தனித்திருக்கும் பழக்கங்களுக்குப் பேர்போன இத்தேசத்தில் வசிக்கும் கிறிஸ்தவ மாணக்கருக்கு ஒன்று சொல்லுகிறேன். ஒருபுரத்தில் மனிதரோடு ஊடாடும் ஜீவியப் பக்கமாவது மறுபுரத்தில் கடவுளைத் தியானித்து அவரோடு ஐக்கியத்தை அப்பியாசிக்கும் ஜீவியப் பக்கமாவது அதிகம் சாய்ந்து விடாமல் நடுவு நிலையைக் காத்துக்கொள்வதே நலம். இத்தேசத்தில் உண்டாகி வரும் மாறுதல்களினிடையே இத்தேசத்தின் தனித்தியானப் பழக்கமாகிய புராதன சுதந்தரத்தை இழந்து விடாதிருக்கப் பார்க்க வேண்டும். இந்தியாவின் நன்மையைக் கருதிமட்டுமல்ல, முழு உலகத்தின் நன்மையையும் விசேஷமாய் மேற்கு நாட்டு நன்மையையும் கருதி இப்படிச் செய்வது நலம். மேற்கு நாட்டார் கிழக்கத்தியராகிய நமக்கு சொல்ல வேண்டிய சேதி ஒன்றுண்டு. அது ஒரு மார்க்கம் தனி ஆளையும் ஜனசமூகத்தையும் மாற்றி மறுரூபப்படுத்தும் வல்லமையைக் கொண்டு அதன் உண்மையை நிச்சயிக்க வேண்டுமென்பதை வற்புறுத்தலேயாம். மறுபக்கத்தில் கிழக்கத்தியார் மேற்கத்தியாருக்கு வைத்திருக்கும் பெருஞ் சேதியும் உண்டு. அதியாதெனில் கண்ணுக்குத் தோன்றும் விஷயங்களுக்கு அப்பாலுள்ளவைகளைப் பார்க்கவும் அமர்ந்து தனித்திருந்து தியானப் பழக்கத்தை அநுசரிக்கவும் வேண்டுமென்பதுதான்.

ஞான காரியங்களின் நிச்சயத்தையும் ஆவியில் பெலனையும் அடைவதற்காகச் சமயா சமயங்களில் உலக விவகாரங்களுக்கும் மனுஷ சகவாசத்துக்கும் விலகிப்போயிருப்பது நலமும் அவசியமுமென்பதற்கு உண்மையான சில நியாயங்களைக் கவனிப்போம்.

மனச்சாட்சியானது நம்பத்தக்கதும் கவைக்கானதுமாவதற்கு இவ்வாறு தனித்திருப்பது அவசியம். மனசாட்சியைப் பயற்றினாலன்றி அது நம்பத்தக்கதும் கவைக்குதவுவதுமாகாது. இவ்வாறு பயிற்றவோ நேரம் வேண்டும். நமது ஜீவகால முழுதும் கொஞ்சங் கொஞ்சம் நேரத்தை இதற்கென்று செலவிடலவசியம். எந்த மனுஷனும் தன் ஜீவயத்தின் எந்தத் தருணத்திலாவது தன் மனச்சாக்ஷி பூரண பயிற்சியடைந்து தீர்ந்ததென்று சொல்ல முடியுமா? மனசாக்ஷியானது நம்பத்தக்கதும் கவைக்குதவுவதுமாகும்படிக்கு அதை பயிற்றுவது மட்டும் போதாது. அது நுண்ணுணர்வுள்ளதுமாக்க



வேண்டும். தேவ சத்தியத்தைத் தன் ஜீவியத்தோடு காலாகாலங்களில் ஒத்துப் பார்க்கும் பழக்கமின்றித் தன் மனசாட்சியானது சோதனை வரும்போது அதை உடனே கண்டுகொண்டறிவிக்கும் நுண்ணுணர்வுள்ளதாக அதைக் காத்துக்கொள்ளக் கூடும் என்றுண்மையாகச் சொல்லும் ஆளைப் பார்த்திருக்கிறீரா? மேலும் மனச்சாட்சி பயிற்றப்பட்டு நுண்ணுணர்வுள்ளதாயிருப்பதன்றி அது பாரமற்றதாகவுமிருக்க வேண்டும். ஏனெனில் பாரமுள்ள மனச்சாட்சி நாம் குறைவுள்ளவர்களென்றும் பாவம் செய்தோம் என்றும் சொல்லும். இப்படிச் சொல்லியும் அந்தப் பாரத்தை இறக்கிவிட அது நேரங் காணவில்லை.

பாரத்தை இறக்குவதற்கு அறிக்கை செய்தல் அவசியம். அறிக்கை செய்யவோ அல்லது அறிக்கை செய்தல் அவசியம் என்று காணவோ நேரமுங் காலமும் செலவிடுவதவசியம். ஆதலால் மனச்சாட்சி தேவ சித்தப்படி ஒருவன் ஜீவியத்தில் துணை நிற்க வேண்டுமானால் கடவுளோடு தனித்திருந்து அவருடைய சத்திய வசனத்தை மனச்சாட்சியோடு பொருத்திப்பார்க்கும் பழக்கத்தை அநுசரித்தல் மிகவுந் தேவையாம்.

மேலும் நமது சித்தமானது கடமையை யறிவதுமல்லாமல் கடமையைச் செய்வதற்குத் தூண்டப்படப் போதுமானபடிப் பெலனடைவதற்கு நாம் கடவுளோடு தனிவாசம் செய்யும் பழக்கத்தை அப்பியாசித்தல் இன்றியமையாதது.

கிறிஸ்துமார்க்கம் மனுஷீக மார்க்கமல்ல. கடவுளே அதிலுள்ள வெளிச்சத்திற்கும் சக்திக்கும் ஊற்று. தன் சித்தத்தைச் சக்தியுள்ளதாக்கிக் கொள்ளவும் கிறிஸ்துவைப் போலாவதற்கானவைகளைச் செய்யவும் தேவ சித்தத்தை நிறைவேற்றவும் மனுஷனுக்குத் திறமையில்லை. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே புதுப் பெலனடைவார்கள் அல்லது தங்கள் பெலத்தை மாற்றிக்கொள்ளுகிறார்கள். இவர்கள் தாம் தங்கள் பெலவீனத்தைத் தேவனுடைய சர்வ வல்லமைக்காக மாற்றிக்கொள்ளுகிறவார்கள்: கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே இப்படிச் செய்யக்கூடும். இந்த மாறுதல் நடந்தேறக் காலத்தைச் செலவிடல் தேவை. மனிதன் தற்சோதனை செய்துதான் பலவீனனென்றொப்புக்கொண்டறிக்கையிடவும் தேவனுடைய வல்லமைகள் தனக்குரியவை யென்று நிச்சயிக்கும் விசுவாசத்தை அப்பியாசிக்கவும் தனித்திருத்தல் அவசியமல்லவா?

இந்த அப்பியாசம் விரும்பத்தகுந்தது மட்டுமல்ல, முக்கியமுமென்பதற்கு மூன்றாவதான ஒரு நியாயம் உண்டு. நாம் விசுவாசத்திலும் குணத்திலும் வளரும் சக்தியைக் காத்துக்கொள்ளும்படிக்கும் கடவுளோடு தனித்திருத்தலை அப்பியாசிக்கவேண்டும்.

நாம் வாசிக்கும் எண்ணிறந்த புஸ்தகங்கள் மட்டுமே நம்மை விசுவாசத்தில் காக்கவும் நமது குணத்தை விருத்தியடையச் செய்யவும் போதாது. எத்தனை பிரசங்கங்கள் உபந்நியாசங்களைக் கேட்டாலும் காரியம் வாய்க்காது. ஒருவன் தான் படித்துக் கேட்ட சத்தியத்தை எத்தனைக்குக் கருத்தாய்த் தனதாக்கிக் கொள்வானோ அத்தனைக்குத் தான் அவை பயன்படும்.

(தொடரும்)

---

## நமது சங்கத்துக்கு 1914-௵ பெப்புரவரி௴ 28-உ வரையில் வந்த வரவு.

| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை மாகாணம் | ... | 576 | 7 | 1 |
| ஐக்ய மகாணம் | ... | 174 | 2 | 0 |
| பஞ்சாப் மாகாணம் | ... | 562 | 1 | 0 |
| ராஜபுதனம் | ... | 195 | 10 | 10 |
| பங்காளம் | ... | 37 | 0 | 0 |
| பம்பாய் | ... | 89 | 1 | 0 |
| பர்மா | ... | 8 | 8 | 0 |
| ஸிரிய சபையார் | ... | 220 | 0 | 0 |
| பலவினம் | ... | 72 | 3 | 5 |
| ஆக மொத்தம் | | 1935 | 1 | 4 |

---

இப்பத்திரிகை வேண்டுவோரும் இதைப்பற்றி அறிய விரும்புவோரும் சேலம் ஜில்லா, ஓமலூரிலிருக்கும் **N. M. S.** தீபிகைப் பத்திராதிபருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும். வருஷ சந்தா அணா ஒன்றே ஒன்றுதான்.

PRINTED AT THE "T. A. C." PRESS, SALEM.


# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

## The Tamil Organ of the National Missionary Society of India.

மாதந்தோறும் வெளியாகும்: வருஷ சந்தா அணா ஒன்று.

**Vol. VI.** ஜூன் **1914.** **No. 6.**


"சுவிசேஷ வேலையில் காண்பிக்கும் கரிசனை
கிறிஸ்தவ நடக்கையை நயிக்கும் அறிகுறி.
சுவிசேஷ வேலையைப்பற்றிய அறிவு
கிறிஸ்தவ தேற்சியை அளக்கும் அளவு கோல்.
சுவிசேஷ வேலையில் எடுக்கும் பங்கு
கிறிஸ்தவ உத்தமத்தை வெளிப்படுத்தும் உரைகல்".

**முதலாம் தமிழ்க்கூட்டம்**

1914ம் ௵ ஜனவரி௴ சென்னையில் கூடிய நமது தென்னிந்திய சமஸ்தானச்சங்கத்தில் அச் சங்கத்தை தமிழ், தெலுங்கு, மலையாளம்-கன்னடம் எனும் முப்பிரிவாக்க தீர்மானித்தனர். இவை ஒவ்வொன்றும், சாதாரணமாய் வருஷத்தில் நான்குமுறை கூடும். இதற்கேற்ப ஏப்ரல்௴ 11உ நமது தமிழ்சங்கம் கோயமுத்தூரில் கூடி வந்தது. கனம் V. சக்கரை அவர்கள் அக்கிராசனம் வகிக்க, கனம் P. J. தேவசகாயம், T ஹாரிஸ், J. D. ஆசிர்வாதம், J. S. ஆசிர்வாதம், R. அருளானந்தம், G. ஞானமுத்து, R. A. ஏசுதாசன், V D. செல்லப்பா, S. ஞானபரணம் அதில் பங்கு பெற்றனர்.

தென்னிந்திய கிறிஸ்தவ சபைகளில் சுவிசேஷ வேலைக்கான மெய்க்கரிசனத்தை எவி எழுப்பத்தகும் பல நல்முறைகளைக் குறித்து விஸ்தாரமாய்ச் சம்பாஷணை நடந்தது. சங்கத்து அங்கங்களில் பலர் தாங்களேபல சபைகளுக்குச்சென்று சுவிசேஷ வேலையைப்பற்றிப் பொதுவாக மாத்திரமேயன்றி,

நமது சங்கத்தைக்குறித்து விசேஷித்தும் பேச உற்சாகமாய் வாக்களித்தனர். அவ்வாறே,

கனம் V சக்கரையும், சாமிநாத ஐயரும் தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களிலும்,

கனம் P. J. தேவசகாயம், அருளானந்தம், P. J. ஞானவரம் அவர்கள் நீலகிரி ஜில்லாவிலும்,

கனம் T. ஹாரிஸ் வட ஆற்காட்டிலுள்ள இந்திய ஐக்கிய சபைகளிலும்,

கனம் V. D. செல்லப்பா தென் ஆற்காட்டிலும்.

கனம் J. D. ஆசீர்வாதமும், S. M. தேவதாஸ் போதகரும் செங்கற்பட்டு ஜில்லாவிலும்,

கனம் G. ஞானமுத்து போதகர் சேலம் ஜில்லாவிலும் பிரயாணம் செய்வார்கள்.

நீலகிரிக்குப் போய் வந்த சகோதரரின் விருத்தாந்தம் இச்சஞ்சிகையில் வெளிப்பட்டிருக்கிறது.

அவர்களது ஊழியத்தை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக. இதிலும் அதிக ஊழியஞ்செய்ய அவர்களைப்பலப்படுத்துவாராக.

மற்றவர்களது பிரயாணச் செய்தி அடுத்த சஞ்சிகையில் பிரசுரமாகுமென நம்புகிறோம்.

மேலும் நமது சங்கம் இந்திய கிறிஸ்தவர்களனைவருக்கும் பொது. அதை ஆதரிப்பது நமது சபைகள்யாவற்றின் கடமையே. அதனிமித்தம் நம் சபைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஓர் விண்ணப்பம் அனுப்பத்தீர்மானமாயிற்று. அவ்விண்ணப்பங்கள் அந்தந்த மிஷனுடைய பிரதிநிதியாக நமது சங்கத்திலுள்ள மகான்களுக்கு அனுப்பியாயிற்று. அவர்கள் அவற்றைத்தத்தம் மிஷனைச்சேர்ந்த சபைகளுக்கு அனுப்பியிருப்பார்களென்று நம்புகிறோம்.

கடந்த வருஷத்தில் நம் தமிழ் சபைகளிலிருந்து வந்த வருமானமும், இவ்வருஷம் வரவேண்டிய தொகையும் பின் வருமாறு:—

| | 1913 வந்தது | 1914 வரவேண்டியது |
|---|---|---|
| மதுரை | 260 | 300 |
| தஞ்சாவூர் | 215 | 250 |
| தென் ஆற்காடு | 135 | 300 |
| செங்கற்பட்டு | 144 | 150 |
| வட ஆற்காடு | 202 | 250 |
| சேலம் | 166 | 250 |
| நீலகிரி கோயமுத்தூர் | 335 | 300 |
| திருச்சி | 30 | 100 |
| சென்னை | 819 | 1000 |
| திருவாங்கூர் | 600 | 1100 |
| | 2906 | ரூ. 4000 |



கர்த்தருக்குச்சித்தமானால் இக்கூட்டம் வேலூரில் ஜூலைமீ கூட யோசனை.

தமிழ்ச் சங்கம் கூடினதுபோல் எப்ரல்மீ 18உ பெஸ்வாடாவில் நம் சமஸ்தானத்துத்தெலுங்குக் கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்தவரும் நமது சங்க வேலையில் காண்பித்த உற்சாகம் அதிகமே. அவர்களும் தங்கள் நாட்டிலுள்ள சபைகளுக்குப்போய் வர வாக்களித்தனர்.

இவர்களது நல் விருப்பத்தையும் நன்முயற்சியையும் வாய்க்கப்பண்ண கர்த்தரை நோக்கி மன்றாடுவோமாக.

சங்க வருமானம். எப்ரல்மீ முடிய வரவு.

| | 1913ம் வருஷத்து | | | 1914ம் வருஷத்து. | | |
|---|---|---|---|---|---|---|
| சென்னை சமஸ்தானம் | 1387 | 3 | 11 | 1053 | 12 | 1 |
| ஐக்கிய மாகாணம் | 589 | 4 | 0 | 424 | 9 | 3 |
| பஞ்சாப் | 227 | 4 | 0 | 730 | 5 | 0 |
| பம்பாய் | 19 | 0 | 0 | 259 | 13 | 3 |
| ராஜபுதனம், மத்திய | 366 | 14 | 0 | 354 | 4 | 10 |
| சூரியாளி | 150 | 0 | 0 | 741 | 0 | 0 |
| பர்மா | 31 | 8 | 0 | 29 | 0 | 0 |
| பங்காளம் | 838 | 7 | 0 | 78 | 4 | 0 |
| மற்றவை | 32 | 8 | 0 | 86 | 5 | 8 |
| | 3642 | 0 | 11 | 3657 | 6 | 1 |

கடந்த வருஷம் எப்ரல் வரை வந்த வருமானத்தைவிட இவ்வருஷத்து வருமானம் குறைந்திருப்பது விசனகரமானதே. அதிலும் கிறிஸ்தவர்கள் மிகுந்துள்ள நம் சமஸ்தானம் இத்தனை பின்னிடைந்திருப்பது மிகப்பரிதாபமன்றோ.

இதனைச் சீர்திருத்த நம் நண்பர் ஒவ்வொருவரும் முயற்சிப்பார்களென்பது நமது நம்பிக்கை. அவர்களிடங்களிலுள்ள அனைவரையும் இது விஷயத்தில் உற்சாகிப்பிக்க வேண்டுமென்பது நமது விண்ணப்பம்.

தமிழ் நாட்டவர் இவ்வருஷஞ்சேர்க்க ஒப்புக்கொண்ட தொகை ரூ. 4000. ஏப்ரல்மீ முடிவு வரை வந்த தொகை ரூ 479-13-6 அதன் விபரம்:—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சென்னை | 146 | 15 | 6 | | | |
| வேலூர் | 21 | 6 | 0 | | | |
| பசுமலை | 11 | 5 | 0 | | | |
| ஈரோடு | 10 | 0 | 0 | | | |
| திருவண்ணாமலை | 8 | 0 | 0 | | | |
| தாங்கன்பாடி | 4 | 0 | 0 | | | |
| கோயமுத்தூர் | 25 | 15 | 0 | | | |
| புங்கனூர் | 12 | 0 | 0 | | | |
| பரங்கிமலை | 22 | 0 | 0 | | | |
| மதுரை | 1 | 0 | 0 | 262 | 9 | 6 |
| தென் திருவாங்கூர் | | | | | | |
| திருவனந்தபுரம் | 30 | 0 | 0 | | | |
| நெய்யூர் | 16 | 0 | 0 | | | |
| பாரசாலை | 2 | 0 | 0 | | | |
| மாற்றாண்டம் | 4 | 0 | 0 | | | |
| நாகர் கோவில் | 139 | 8 | 0 | | | |
| நெய்யாற்றங்கரை | 8 | 0 | 0 | | | |
| நெல்லிக்காகுழி | 17 | 12 | 0 | 217 | 4 | 0 |

ஒரு சிறு ஜில்லாவாம் திருவாங்கூரின் தென்பாகத்தவர் மாத்திரமே ரூ. 217-4-0 கொடுத்திருக்க மற்ற 9 ஜில்லாக்களிலிருந்து வரவு ரூ. 262-9-6 என்றறிதல் நம்மனத்தைத்துயர் படுத்தப்போதாதோ.

* * * *

நமது பிரயாண காரியதரிசி கனம் கடம்பவனம் அவர்கள் மதுரை ஜில்லாவிலுள்ள பல சபைகளில் ஊழியஞ்செய்து வருகிறார்.

* * * *

கனம் பாலசுந்தரம் அவர்கள் தமது விடுமுறை நாட்களைச்சங்கத்தின் நலத்துக்கென்று பங்காளத்தில் செலவிட்டு வருகிறார். அவரது நல் ஊழியத்தால் விளைந்திருக்கும் பலன் மிகப்பலவெனக்கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

* * * *

லக்னௌவிலுள்ள கிறிஸ்தவ காலேஜில் வாசிக்கும் கனம் தாவீதென்பவர் தம் விடுமுறை நாட்களில் நைஸாம் மாகாணத்திலுள்ள சபைகளில் நமது சங்க விஷயமாய்ப்பிரசங்கித்து வர உற்சாகமாய் உடன் பட்டார்.



அவ்வாறே சஹரான் பூரிலுள்ள வேதசாஸ்திர வகுப்பில் கற்றுவரும் கனம் அகுஸ்தீன் ரலியாராம் B. A., அவர்கள் பஞ்சாப், ஐக்கிய மாகாணங்களிலுள்ள சபைகளில் தமது விடுமுறை நாட்களைச் செலவிடுவார்.

* * * *

நமது உபகாரியதரிசி கனம் A. N. சுதரிசனம் அவர்கள் பஞ்சாப், ஐக்கியமாகாணங்களின் காரியதரிசிகளுக்கு உதவி புரியவும், அவ்விடத்து நம் வேலைகளைக்கண்டு வரவும் வடக்கே சென்றிருக்கிறார்.

* * * *

மேற்குக்கரை பிரயாண காரியதரிசி கனம் P. O. பிலிப் பம்பாய் ராஜதானியில் பிரயாணஞ்செய்கிறார்.

---

## நமது கிறிஸ்தவர்களின் கணக்கு.

### I மங்கோமரி.

| | கிராமங்கள். | | ராப்போசன விருந்தாடிகள் | சபை. கிறிஸ்வர்கள் | ஆயத்தக்காரர் |
|---|---|---|---|---|---|
| 1. | மங்கோமரி | ... | 5 | 8 | |
| 2. | கம்பர் | ... | | 5 | |
| 3. | ஒக்காரா | ... | 4 | 25 | 10 |
| 4. | ,, சுற்றுப்புறம் | ... | | 24 | |
| 5. | சட்கரா | ... | | 63 | |
| 6. | அக்பார் | ... | | 23 | 8 |
| 7. | திபல்பூர் | ... | | 1 | 6 |
| 8. | துல்லா | ... | | 53 | 2 |
| 9. | பாவல்தாஸ் | ... | | 32 | |
| 10. | பண்டிற் | ... | | | 7 |
| 11. | நுடுறகி | ... | | 5 | 10 |
| 12. | காரக்சில் | ... | | 5 | 8 |
| 13. | வானெக் | ... | | | 7 |
| 14. | செய்ட்பூர் | ... | | 4 | |
| 15. | உவாசாவர் | ... | | 25 | 5 |
| 16. | சக் நம்பர் 3 | ... | | 8 | 44 |
| 17. | சாமந்தரி | ... | | 101 | 6 |
| 18. | பாவிர்பூர் | ... | | | 28 |
| 19. | பாஸலபாத் | ... | | 1 | |
| | | | 9 | 393 | 147 |

II. நுங்கார்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அம்பாதூர் | 3 | 107 | 160 |
| 2 | சில்காரு | | 129 | 50 |
| 3. | கர்ங்கோ | | 173 | 100 |
| 4. | நுச்சார் | | 51 | 30 |
| 5 | சர்லாவர் | | 20 | 15 |
| 6. | திட்டன் | 14 | 45 | 15 |
| | | 17 | * 525 | 370 |

* சபையின் மொத்தம் 811.

## நீலகிரிக்கு நமது ஸ்தானாபதிகள் சென்றது.

கோயமுத்தூரிலிருந்து நீலகிரி மலைக்கு அனுப்பப்பட்ட மூன்று ஸ்தானாபதிகளின் பயண விபரம்.

1914ம் ஷு எப்ரல்மீ த்தில் கோயமுத்தூரில் கூடி வந்த சுதேச மிஷனரி சங்க நிர்வாகக்கூட்டத்தார், கோயமுத்தூர் லண்டன் மிஷியோன் தலைமை உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ தெய்வசகாயம், போத்தனூரிலிருக்கும் ரெயில்வே லோக்கோ ஆபீஸ் மானேஜர் மகா-ா-ா-ஸ்ரீ ஞானவரம் பிள்ளை, கோயமுத்தூர் டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு சென்றல் நாஜர் மகா-ா-ா-ஸ்ரீ அருளானந்தம் பிள்ளை, இவர்களைத் தெரிந்து கொண்டு, இவர்கள் நீலகிரிக்குப் போய், நமது சுதேச மிஷனரி சங்கத்தின் நோக்கத்தைப்பற்றி அங்குள்ள கிறிஸ்தவர்களுக்குத் தெரிவிக்கவும், சுதேச மிஷனரி சங்கத்தின் அபிவிர்த்திக்கென்று சகல சகாயமும் செய்ய அவ்விடத்திய சுதேச கிறிஸ்தவர்களை வவும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

மேற்கூறிய கேட்டுக்கொள்ளுதலுக்கு அம்மூவருமிணங்கி ஏற்கனவே உதகமண்டலம், குன்னூர், கேத்தை இந்த இடங்களிலுள்ள சில சிநேகிதர்களுக்கு எழுதி அவர்களால் சங்கதிகளறிந்துகொண்டு நாளது மேமீ கர்த்தரின் நாமத்தில் கோயமுத்தூரை விட்டுப்புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் நினைத்தபடி சங்கத்தின் ஒரு காரியதரிசியாகிய கனம் ஞானாபரணம் வரக்கூடாமல் தடைப்பட்டது அவர்களுக்கு அதிக விசனம்.

7ம் தேதி இரவு அவர்கள் மேட்டுப்பாளையத்தில் தங்கி மறுநாட்காலையில் மலையேறி குன்னூர் சேர்ந்தார்கள். குன்னூரில் முனிசிபல் மானேஜர் மகா-ா-ா-ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளையவர்கள் ஒரு இவர்களை மிகுந்த பட்சமாய் ஏற்றுக்கொண்டு பலமான ஆகாரமும் சிறந்த விடுதியும் கொடுத்து உபசரித்தார்கள். இவர் ஒரு இந்து.



அங்கேயிருந்த ஓவர்சியர் எட்வின்னும், மிஸ்டர் பிரான்சிசும் ஒரு முனிசிபல் பள்ளிக்கூடத்தில் ஒரு கூட்டத்தைக்கூட்டி வைத்தார்கள்.

திருநெல்வேலியிலிருந்து ஆங்கு வந்திருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ பால் அப்பாசாமி பிள்ளையவர்கள் அக்கிராசனாதிபதியாகவிருந்தார்கள்.

சங். சாமுவேல் ஐயர் ஜெபம் செய்யக் கூட்டம் ஆரம்பித்தது. கனம் பிரின்சிபால் தெய்வசகாயம் அவர்கள் சுதேச மிஷனரி சங்கத்தின் நோக்கத்தையும், அதின் வேலையையும், அச்சங்கத்தின் அவசியத்தையும் குறித்து வகை விபரமாய் சொன்னதின்மேல் மகா-ா-ா-ஸ்ரீ அருளானந்தம் பிள்ளை அச்சங்கத்தின் அபிவிர்த்திக்கென்று குன்னூரிலும் ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபித்து காரியாதிகளைக் கொண்டுநடத்த ஒரு கமிட்டி ஏற்படவேண்டியதென்று தெரிவித்தார். பிறகு அக்கிராசனாதிபதி சுதேச மிஷனரி சங்கத்துக்காக நாம் கவலைபடவேண்டியது நம்முடைய வேலையென்று சொன்னார்கள். இதன்பின் மகா-ா-ா-ஸ்ரீ ஞானவரம் பிள்ளையவர்கள் இந்த விஷயத்தில் நாம் மிகுந்த ஜாக்கிரதையாய் உழைக்க வேண்டுமென்று பல திருஷ்டாந்தங்கள் எடுத்துக்காட்டி அவர்கள் உத்திரவாதத்தை கண்டிப்பாய் உறுத்தி வந்திருந்தவர்களுக்கு வந்தனம் கூறினார்கள். ஜெபத்துடன் கூட்டம் கலைந்தது.

மறுநாள் காலையில் இம்மூவரும் உதகமண்டலத்துக்குப் புறப்பட்டுப் போனார்கள். அங்கே போனதும் அங்குள்ள வெஸ்லியன் மிஷியோன் ஆலயத்தில் ஒரு வாரமாய் ஒரு பக்தி எழுப்புதல் கூட்டம் நடந்து வருவதாகவும் அன்றையத்தினம் சாயந்திரமும் கூட்டமிருப்பதாகவும் அவர்களுக்கு ஒரு நோட்டீசு கிடைத்தது. விசாரித்து அந்த தெய்வாலயத்துக்குச் சகல கிறிஸ்தவர்களும் வருவதாகவும் தெரிந்துகொண்டார்கள். மற்றக் கிறிஸ்தவர்களைக்கண்டாவது ஒரு கூட்டம் நடத்தலாமென்று யோசித்தும் அதுவும் கூடாததாயிருந்தது.

ஆதலால் அன்று சாயந்திரம் அந்தக்கூட்டத்துக்குப் போய் கூட்டம் முடிந்தபிறகு சிலரைக்கண்டு பேசி ஒரு கமிட்டி ஏற்பாடு செய்ய வேணுமென்று கேட்டுக்கொண்டார்கள். அங்கிருக்கும் சப் ரிஜிஸ்தரார் Mr. பிரான்விஸ் அப்படிச் செய்வதாக ஒப்புக்கொண்டிருப்பதால் அவருக்கு நன்றியறிதல் சொல்லித்திரும்பத் தங்கள் இல்லிடம் சேர்ந்து அன்றிரவு அங்கு தங்கி மறுநாள் 10உ ஞாயறுகாலை கேத்தைக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கேத்தை ஸ்டேஷனில் இறங்கினதும் அவ்வூர் ஐயரவர்களால் அனுப்

பட்டப்பட்ட 4 பாலியர் அவர்களுக்காகக்காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் அந்த ஊர் பள்ளிக்கூடத்தின் டிரில் மாஸ்டரும் வந்திருந்தார். அவர்கள் வழி நடத்த சுமார் 1½ மைல் தூரமுள்ள ஊருக்குப்போனார்கள். போய்ச் சேர்ந்த ஒரு மணி நேரத்துக்கெல்லாம் ஆராதனையாரம்பித்தது. சங். ரிஷ் ஐயரவர்கள் அன்று ஆராதனை முழுவதும் இச்சங்க சம்மந்தமாகவே இருக்க ஏற்பாடு செய்தது மெச்சப்படத்தக்கது. ஆராதனைக்கு முன் ½ மணி நேரமாக அவர்களில் மகா-ா-ா-ஸ்ரீ அருளானந்தம் பிள்ளை இன்னரம், ஹார்மோனியம், மிருதங்கம், ஜால்ரா இவைகளுடன் சில பாட்டுகள் பாடினார்கள். வாத்தியங்களையெல்லாம் உதகமண்டலத்திலிருக்கும் சூப்பரின் டென்டென்டு Mr. C. ஜேசுதாசன் மகன் மகா-ா-ா-ஸ்ரீ வேதநாயகம், சிரோமணி முதலியவர்கள் உதகமண்டலத்திலிருந்து செலவில்லாமல் கொண்டுவந்து வாசித்தார்கள்.

இவ்வாலிபர் சுதேச மிஷன் சங்கத்துக்கு இவ்விதமாய்ப் புரிந்த மன உற்சாகமான உதவி புகழ்ச்சிக்குரியதே. தேவன் இவர்களை ஆசீர்வதிப்பாராக. வந்து கூடிய சபையாரின் தொகை 400க்கு மேலிருக்கும். பட்சமும் ஆவலும் நிறைந்த அவர்கள் பார்வையும், கூடி எழுப்புதலாய் பாடிய பாட்டுகளும் எவர் மனத்தையும் பரவசப்படுத்தக் கூடியதாயிருந்தது. கச்சேரி வெகு விமரிசையாய் நடந்தது.

ஐயரவர்கள் ஒரு ஞானப்பாட்டு பாடி கன்னடத்தில் ஜெபம் செய்த பிறகு ஸ்தானாபதிகள் குன்னூரில் பேசினது போலவே ஒருவர் பின்னொருவராய்ப்பேசினார்கள். இவைகளின் மத்தியில் ஒரு ஞானப்பாட்டு பாடுகையில் உண்டியல் சேர்க்கப்பட்டது. அதன் தொகை ரூ. 10-7-0. அது சுதேச மிஷனரி சங்கத்துக்கென்று சேர்க்கப்பட்டது. பிறகு அங்கே ஒரு குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. 11 மணிக்கு ஆரம்பித்த ஆராதனை 1 மணிக்கு முடிந்தது. சங். ஐயரவர்கள் ஜெபத்துடன் முடித்து வந்திருந்தவர்களுக்கு வந்தனம் சொல்லிப்புறப்பட்டுப்போனார்.

சபையார் ஸ்தானாபதிகளை உபசரித்து உதகமண்டலம் பாடகரும் வந்திருந்தவர்களும் வழியிலே களைத்துப்போவார்களென்று சாப்பாடு அளித்து சந்தோஷத்துடனே வழிவிட்டனுப்பினார்கள். ஸ்தானாபதிகள் உடனே புறப்பட்டு வண்டியேறி கர்த்தருடைய கிருபையால் சுகமே தத்தம் வீடு வந்து சேர்ந்தார்கள்.

திருச்சபையின் சபாநாயகராகிய கிறிஸ்து இத்திருப்பணியை தமது நாம மகிமைக்கென்றே பரிபூரணமாய் ஆசீர்வதிப்பாராக.

அருளானந்தம் பிள்ளை.

PRINTEDAT THE "T. A. C." PRESS, SALEM.

1914


# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

## The Tamil Organ of the National Missionary Society of India.

மாதந்தோறும் வெளியாகும் : வருஷ சந்தா அணா ஒன்று.

Vol. VI. ஜூலை 1914. No. 7.


நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது.

## நமது சங்க ஊழியம்.

### I. புறமதஸ்தர் மத்தியில்.

இந்தியாவிலும் அதன் அயல் நாடுகளிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாத ஸ்தலங்களில் சுவிசேஷமறிவித்தல்.

மங்கோமரி:—

3 மிஷனரிகள், 4 ஊழியர், 19 கிராமங்களிலுள்ள 400 கிறிஸ்தவர்கள், 150 ஆயத்தக்காரர்.

மங்கோமரி பட்டணம்—ஊழியக்காரரை ஆயத்தப்படுத்தும் பள்ளிக்கூடம்.

ஒக்காரா—ஒரு வைத்தியசாலை, தாழ்ந்தசாதி பிள்ளைகளுக்கோர் பள்ளிக்கூடம்.

சாமுந்திரி—கிறிஸ்தவப்பிள்ளைகளுக்கான ஒரு பள்ளிக்கூடம்.

1914ல் வேண்டிய தொகை—ரூ. 4,219

நர்க்கார்:—

1 மிஷனரி, 4 ஊழியர்; 95 கிராமங்களிலுள்ள 900 கிறிஸ்தவர்கள், 400 ஆயத்தக்காரர்.

1 வைத்தியசாலை, சர்லாவிலுள்ள நமது மிஷனரியினது மனைவியின் சம்பளமற்ற ஊழியம் இது.

4 ஞாயிறு பாடசாலை
3 இராப்பள்ளிக்கூடங்கள்.
கிறிஸ்துமார்க்கத்துக்கான பேரெழுச்சி.

1914ல் வேண்டிய தொகை—ரூ. 2,552.

**கர்ஜாட்:—**

1 மிஷனரி, 1 ஊழியன்.

உயர்ந்த ஜாதியாரிடத்தில் ஓர் வித அசைவு.

1914௵ வேண்டிய தொகை—ரூ. 382.

**கார்வார்:—**

2 மிஷனரிகள், 3 ஊழியர்.

மீன்பிடிகாரர் பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம்.

1914௵ வேண்டிய தொகை—ரூ. 2415.

**ஓமலூர்:—**

1 மிஷனரி, 2 ஊழியர்.

தேசாந்திர வைத்திய வேலை

இராப்பள்ளிக்கூடம் ஒன்று.

1914௵ வேண்டிய தொகை—ரூ. 2063.

## II. கிறிஸ்தவர் நடுவில்

தங்கள் சொந்த தேசத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் சுவிசேஷத்தை அறிவிப்பது இந்திய கிறிஸ்தவர்களின்மேல் விழுந்த கடன் என வற்புறுத்துவது.

4 பிரயாண காரியதரிசிகளும்

மாகாண சங்கங்களின் அங்கங்களும்

சபைகளிலும் மாணவர் கூட்டங்களிலும் ஒழுங்காக வேலை செய்தல்.

சுவிசேஷ வேலைக்காகப் பிரார்த்திக்க அனைவரையும் ஏவுதல்.

ஒரு ஆங்கில பத்திரிகை மூலமும் உருது, ஹிந்தி, மராத்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் 7 பாஷைகளில் வெளியாகும் பத்திரிகைகளின் மூலமும்

நமது போதகமார், சபையார், மாணவர்களுக்கு உத்தம ஊழியஞ் செய்வதற்கான நல் மாதிரியை ஒழுங்காகக்காண்பித்தல்.

**பிற்பலன்கள்:—**

இந்திய கிறிஸ்தவர்களுக்குள் ஏற்படும் நெருங்கிய ஐக்கிய உணர்ச்சி

நம் தேசத்தின் நலத்தின் பொருட்டு வித்தியாசமான பல சமுதாயங்களும் சபைகளும் உடன் ஊழியஞ்செய்யவும் கூட்டுறவாய் உழைக்கவும் ஏற்ற ஒரு பொது மார்க்கம் ஏற்படல்.



## III. தொகுப்பு.

5 பாஷைகள் பேசப்படும் 5 வேலை சமஸ்தானங்கள்.

30 ஊழியர், 12 கல்லூரியில் கற்றோர்.

1,300 கிறிஸ்தவர்கள், 550 ஆயத்தக்காரர்.

2 ஆஸ்பத்திரிகள், 8 பள்ளிக்கூடங்கள்.

8 பத்திரிகைகள்

1914-௵ வேண்டிய தொகை ரூ. 18,000

---

## லூத்தரன் சபையாரும் N. M. S. சங்கமும்.

லூத்தரன் மிஷனின் சர்வ இந்திய சங்கத்தார் தங்கள் சபைகள் இந்திய சுயதேச மிஷனரி சங்கத்தோடு சேர்ந்து, அதன் ஓர் கிளையாக சுவிசேஷ வேலை செய்வது, தகுதியெனத்தீர்மானித்தனர். இவ்வாறு ஐரோப்பிய சங்கம் செய்த இத்தீர்மானத்தை இந்திய லூத்தரானர் ஒப்புக்கொண்டாலன்றி, இவ்வேலை துவக்குவது நேர்மையாகாது. ஆகையால் இம்மாதம் 3-உ முதல் 5-ம்-உ வரை திருச்சியில் கூடிய லூத்தரன் சபையின் 10-ம் பொதுக்கூட்டத்தார் இவ்விஷயத்தைக்குறித்து 4-ம் உ மாலை தீர்க்க ஆலோசித்தனர். அக்கூட்டத்திற்கு N.M.S. சங்கத்துப பொதுக்காரியதரிசி கனம் K.T. பால் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார். N. M. S. சங்கத்தோடு சேர்ந்து வேலை செய்வதால் லூத்தரன் மனச்சாட்சி குறைபடுமோவென்று சந்தேகித்தோர் சிலர்; லூத்தரத்துவம் பங்கப்படுமோவென்று பயந்தோர் சிலர். ஆயினும் கனம் காரியதரிசியாரின் திட்டமான சாட்சியினாலும், N. M. S. காரியநிர்வாக சபையில் நெடுநாள் அங்கத்தினராயிருந்த கனம் தேவசகாயம் தேசிகரும், கனம் பம்பரின் சாஸ்திரியாரும் இட்ட அனுபோக அறிக்கையினாலும் இவ்வித பயம் ஒருவாறு தீர்ந்தது.

அக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களுக்கு வந்து சேர்ந்தார்கள்:—

1. நமது லூத்தரன் சபைகள் N. M. S. சங்கத்தோடு சேர்ந்து சுவிசேஷவேலை நடத்துவதற்கு ஆக்ஷேபணையில்லை.

2. அதற்கு வேண்டிய பணம் நமது சபைகளில் சேர்க்கப்படும்.

4. சர்வ இந்திய லூத்தரன் பொதுக்கூட்டத்தார் குறிக்கும் இடத்தில் வேலை துவக்கலாம்.

ஆம் இக்கூட்டத்தாரின் போதக வைராக்கியமும், அதன் பலனாய் அந்நிய சபையாரோடு அவர்களுக்குள்ள பிரிவினையும் பெரிதேயாயினும், தங்கள் சுத்த போதகத்துக்கு எவ்வாற்றானும் கேடுவராலாகாதென N.M.S. சங்கத்தவர்

பம். இவன் மனம் மாறிப் புதிய மனிதனாய் அங்கு வந்ததும் இவனுக்குப் பயப்படுவோரொருவருமில்லை. முற்றிலும் சாதுவான ஆட்டுக்குட்டியானான் என்பதைத் துரைத்தனத்தார் அறிந்து இவனைக் காட்டிக்கொடுப்போருக்கும் இவனைப் பிடித்துக் கொடுக்கிறவர்களுக்கும் வாக்களித்த வெகுமதிகளின் தொகையை இவனுக்கும் இவன் ஜனங்களுக்கும் சந்தோஷமாக இனாம் சாமான்களை வாங்குவதில் செலவழித்தார்கள்.

கொஞ்ச காலத்துக்குப்பின் மோப்பாத்து தமது முந்திய சேகரத்தை விட்டும் பெக்வாஸ் என்ற ஜாதியார் நடுவில் உழைக்க மாற்றப்பட்டார்.

மேற்படி தலைவனும், தானும் தன் ஜாதியாருமாய் அதே இடத்தில் வந்து குடியேறுவதாகவும், மிஷனரியின் புஸ்தகங்கள், ஜாமான்கள் முதலியவைகளைத் தன் சொந்த வண்டியில் ஏற்றி வருவதாகவும் வாக்களித்துப்போனான். வீடுபோய்ச் சேர்ந்ததும் வியாதிப்பட்டுத் தன் பழைய கிராமத்தில் இறந்து போனான். வியாதிப்படுக்கையிலிருந்தபோது அவன் தன் ஜனத்தாரைத் தன்னைச்சூழ வழைத்துச் சரியான கிறிஸ்தவ புத்திமதிகளைச் சொன்னான். அவன் சாகுமுன் "என் முந்திய ஜீவியம் பிறருடைய இரத்தப்பழியால் நிறைந்திருந்தது, இப்போதோ என் இயேசு என் பாவங்களை மன்னித்திருப்பதால் நான் மோட்சத்திற்குப் போகிறேன்" என்னும் வார்த்தைகளைச் சொன்னான்.

இந்தத் துஷ்டன் காரியம் இப்படியானால் நமது நாட்டிலுள்ள கிறிஸ்து மார்க்க விரோதிகளாகிய நமது ஹிந்து சகோதரர்களைத் திருப்புவது கிறிஸ்து மார்க்க வல்லமைக்குக் கூடாத காரியமோ!

---

## காரியதரிசியின் குறிப்புகள்.

---

பணக்கவிஷயம்:—தற்சமயம் நமது சங்கத்தை ஆதரிப்போரும், அதற்கென்று செய்யப்படும் முயற்சியும் அதிகமாயிருந்த போதிலும் செலவுக்குத் தகுந்த வருமானமில்லாதிருப்பது விசனிக்கத்தக்க விஷயமே. ஆகவே சகோதரர்கள் பின் வரும் 3-காரியங்களைச் செய்ய நினைப்பூட்டுகிறோம்.

1. நமது சங்கத்துக்கனுப்பும்படி ஏதாவது பணம் வைத்திருக்கும் சகோதரங்கள் உடனே அதை அனுப்பி வைப்பார்களாக.

2. நமது சங்கத்துக்கென்று பொருள் சேகரஞ் செய்யும் சகோதரர்கள் தாங்கள் சேகரஞ் செய்யும் எந்த சின்ன தொகையையும் மாதாமாதம் அனுப்பி வைப்பார்களாக.

3. சகோதரங்கள் யாவரும் ஊக்கமாய் இடைவிடாமல் ஜெபிப்பார்களாக.

பஞ்சாப்மாகாண காரியதரிசியாயிருந்த S. K. தத்தாசாஸ்திரியாருக்குப் பதிலாக Prof. சாமுவேல் லால் M. A. அவர்கள் நியமிக்கப்பட் அன்



அளித்தவாக்கை நம்பி வேலை ஆரம்பிக்கத் தீர்மானித்தனர். இவ்வுறுதி வாக்கை எவ்வாற்றானும் நிறைவேற்றப்பார்ப்பது அச்சங்கத்தாரின் கடமை என்பதை அவர் மறவாதிருக்கவும்.

மேலும் லுத்தர் சாஸ்திரியார் ஜர்மனி தேசத்தில் சபையைச் சீர்திருத்தினதை நினைவு கூரும் 400-ம் வருஷோற்சவம் 1917-ஆம் அக்டோபர் மீ 31-ல் வரும். அத்திரு வேலையின் ஞாபகசின்னமாக ஸ்தாபிக்கத்தக்கதென்னவென்று ஆலோசிக்க 1912-ம் வருஷம் ஒரு சிறு கமிட்டி நியமிக்கப்பட்டிருந்ததாம். இக்கமிட்டியார் லுத்தரன் தமிழ்ச் சபைகளுக்கு ஞாபகசின்னமாகத் தகும் ஐந்து விஷயங்களைக் குறிப்பிட்டு ஓர் நிருபம் அனுப்பினர். அதில் ஒன்று சுதேசசுவிசேஷ வேலை. அச்சபைகளில் பெரும்பாலார் சுவிசேஷ வேலையைத்தெரிந்து கொண்டார்கள். இந்தியாவின் பூர்வ சுவிசேஷ சபை தன் உத்தம அழைப்பை மறவாமல் அதில் இத்தனை கரிசனை காண்பிப்பது புகழத்தக்கதன்றோ.

---

## நமது சுவிசேஷ வேலை.

### மங்கோமரி.

நம் நண்பன் ஜேம்ஸ் உவில்யத்தின் இனிய கடிதச்சுருக்கம்.

" துல்லா எனும் கிராமம் ஒக்காராவுக்கு ஏறக்குறைய 3, 4 மைல் தூரத்திலுள்ளது. நானும் என் உடன் ஊழியன் மாயூப் மாசிக்கும் அவ்விடத்துக்குக் கால் நடையாய்ச் சென்றோம். போய்ச்சேர மாலை 6½-மணியாயிற்று. ஜனங்கள் கோதுமை போரடித்துக்கொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டவுடன் சிறுவரும் சிறுமிகளும் புருஷரும் ஸ்திரீகளும் கூடிவந்து வந்தனம் கூறினர். உட்கார ஓர் கட்டிலிட்டு, அங்குள்ள வஸ்திரத்தில் சுத்தமானதை அதில் விரித்தார்கள். என் தாகத்திற்குத் தண்ணீரும் சர்க்கரையும் எடுக்க ஓடினான் ஒருவன். ஹூக்காவுக்கும் புகையிலையிட்டு ஆயத்தப்படுத்தினான் வேறொருவன். பெண்கள் என் தாயார் க்ஷேமத்தையும், மற்றக்கிறிஸ்தவ சகோதரருடைய சுகத்தையும்பற்றி வினவினர்.

கொஞ்சநேரத்துக்கெல்லாம் நாங்கள் அக்கிறிஸ்தவர்களின் குடிசையைச் சேர்ந்தோம். நாங்கள் கட்டிலில் உட்கார மற்ற ஆண்களும் பெண்களும் கட்டிலைச்சுற்றி அமர்ந்தனர். நான் ஒரு பெண்பிள்ளையை " இங்கிருக்கும் பெண்களில் யாருக்காவது இன்னும் தனிச்ஜெபம் செய்யக்கூடாமலிருக்கிறதா?" என்று கேட்டேன். இன்னொருத்தியை அவள் புறமதஸ்தரில் யாருக்காகவாவது ஜெபிப்பதுண்டோ என்று விசாரித்தேன். இவ்வாறு அவர்கள் பக்திவிர்த்தி எவ்வளவாயிருக்கிறதென கண்டுகொண்டேன்.

வடக்கேயுள்ள நமது மங்கோலி சேகரத்தில் ஊக்கமாயுழைத்து வந்த Dr K. N. தீனநாத் அவர்கள் ராஜிநாமா செய்திருக்கிறார் என்பது விசனிக்கத்தக்கதே. அவருக்குப்பதிலாக உழைக்கவோர் சகோதரன் கிடைக்கும் வரையில் தமது பழைய வேலையிலேயே இருப்பார்.

நமது உபகாரியதரிசியாயிருந்த கனம் S ஞானாபரணம் அவர்களுக்கு சம்பளமின்றி ஒரு வருஷ ரஜா கொடுக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் அவர் ஜபல்பூரில் உபாத்தியாயர் வேலை பார்த்துக்கொண்டு ஹிந்தி பாஷையைப் படிப்பார். இது நமது சகோதரனின் ஊழியஞ் செய்யவேண்டுமென்கிற வாஞ்சைக்கும் வைராக்கியத்துக்கும் அத்தாட்சியாம்.

Rev Canon M G. கோல்ட்ஸ்மித் தேசிகர் அவர்கள் நமது சங்கத்துக்கு துண்டு நிலம் இனாம் சாசனம் செய்திருக்கிறார்கள். அந்நிலத்தில் நாம் நமது சங்கத்துக்கென்று கட்டடம் கட்டவோ அல்லது எவ்விதமாகிலும் உபயோகப்படுத்தவோ உத்தரவளித்தும் இருக்கிறார். டை நிலம் சென்னையில் (Convert's Home) கான்வர்ட்ஸ் ஹோமுககருகில் உள்ளது.

கனம் P. O. பிலிப் அவர்கள் ஐதராபாத், அரங்காபாத், பூனா, கார்ஜட் சேகரத்திலுள்ள பாம்புரா, ஆமத்நகர், தென்மராட்டிய தேசம் இவைகளில் பிராயாணம் செய்து முடித்திருக்கிறார். செப்டம்பர் மாதத்தை மைசூர் ராஜ்ஜியத்திலும், அக்டோபர், மாதத்தைத் திருவாங்கூரிலும் கழிக்க உத்தேசித்திருக்கிறார்.

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் வியாதியாயிருந்த ஓர் சகோதரன் அவரைப்பார்க்க வந்த ஓர் சிறிய வைத்தியமாணவரிடத்தில் ஓர் தங்க மோதிரத்தை கார்வார் ஊழியத்துக்காகக் கொடுத்திருக்கிறார்.

தற்சமயம் நமது தீபிகை பிரசுரமாகும் சேலம் T. A. C. Press நமது சங்கத்துக்குச் சொந்தமாக வேண்டுமானால் அதன் மேலுள்ள கடனும் தீரவேண்டும். கடன் தீரவேண்டுமானால் சகோதரர்கள் தங்கள் வேலைகளை அனுப்பி உதவி புரியவேண்டும்.

## கொடைக்கானலில் நாஷனல் மிஷனரி சங்கம்.

ஏழைகளின் மேல் அநுதாபப்பட்டு தன்னை நேசிக்கும் ஒருவன் பிறனையும் நேசிக்கவேண்டுமென்று அன்பின் சொரூபியாகிய இயேசுநாதர் உரைத்த திருவாக்கின் படி ஈசன் அருளால் அவ்வன்பை உணர்ந்து அனுபவிக்கும் இந்திய அடியார்கள் ஒரு கூட்டம் கூடி இந்தியாவின் வாழ்வையும் மிஷனரிமார்கள் இன்னும் பிரவேசிக்காமலும் பிரவேசிக்கமுடியாமலும் இருக்கிற இடங்களில் சென்று மிஷனரி வேலைக்கு உதவியாய் இருளிலுள்ளோரை வெளிச்சத்திற்கும் சாத்தானின் சிறையிருப்பிலுள்ளோரை விடுதலைக்கும் கொண்



வந்து இப்படியாக திரியேக நாம மகிமைக்கென்று வேலை செய்து வரும் தற்கால சம்பவங்களை அறியாத கிறிஸ்தவர்கள் ஒருவரும் இரார் என்று நம்புகிறேன்.

இச்சங்க பிரயாண காரியதரிசி Mr P. S. கடம்பவனம் என்பவர் கொடைக்கானலுக்கு வந்த, இவ்வூரின் நண்பர்களின் உதவியால், தற்சமயத்தில் சுகத்திற்காகவும், வேறே அலுவலாகவும் இங்குவந்திருக்கும் யாவருக்கும் இக்கூட்ட நோக்கம் உற்பத்தி வேலை செய்யுமிடங்கள், வேலைக்காரர் இதற்குப் பிடிக்கும் தொகை, அத்தொகை கிடைக்கும் விதம், தேவாசீர்வாதத்தால் இச்சங்கம் தழைத்தோங்கி அபவிர்த்தியைக்காட்டும் ஆத்துமத் தொகை, ஆகியவைகளை யாவருக்கும் விளங்கச் செய்யும் பொருட்டு கடந்த மே மாசம் 28-ம் தேதி சாயங்காலம் 4-மணிக்கு அமெரிக்கன் மிஷன் ஆலயத்தில் ஒரு பெரியக் கூட்டம் வைத்தார். இவருடைய அன்பின் பிரயாசத்தினால் இங்குள்ள அநேக மிஷனரிமார்களுக்கென்று வைக்கப்பட்ட இக்கூட்டத்திற்கு, மிஷனரிமார்களும் இந்திய கிறிஸ்தவர்களும், சில இந்துக்களும், ஆக மொத்தம் 300 பேர் வந்திருந்து, அதிக பிரயோஜனமுள்ள கூட்டமாகச் சிறப்பித்தனர். தற்காலம் சென்னைப் பட்டணத்தில் Law College-ல் பிரபசராக இருக்கும் கனம் பால் அப்பாசாமி அவர்கள் M. A. LL B. அக்கிராசனம் வகித்துக்கூட்டத்தை நடத்தினர்.

கூட்ட ஆரம்பமாக காலத்திற்கு அனுசரணையான ஒரு ஞானப் பாட்டு பாடப்பட்டது. Rev L. R. Scudder M. A. M. D. மிகவும் ஊக்கமாக ஜெபித்தபிற்பாடு, பம்பாயில் வாலிப ஸ்திரீகளுக்குள் வேலை செய்து வரும் Miss Long ஒரு பாட்டு பாடி வந்திருந்தோரை உற்சாகப் படுத்தினார்கள்.

N. M. S. ஊழியத்தின் நோக்கத்தைப் பற்றி Mr. ஆதி சேஷையா M. A. L. T. ஒத்துக்கொண்டிருந்தார் ஆனால் திடீரென்று அவர் சுகவீனமடையவே, N. M. S. ஊழியத்தில் ஆசையும், வாஞ்சையும் கொண்டிருந்த Mrs அப்பாசாமி அம்மாள் B. A அப்பொருளின் மேல் பேசும் பொறுப்பை தன் மேல் எடுத்துக் கொண்டனர். இவர்கள் அதிக தைரியமாய் மேடையின்மேல் நின்று, N. M. S ஊழியத்தின் நோக்கம், உற்பத்தி, அபிவிருத்தி ஆகிய இவைகளைப்பற்றி, வெகு சாமர்த்தியமாயும், திருத்த மாயும். கேட்போர் மனதில் கிறிஸ்துவின் அன்பு உருகிச் செல்லும் விதமாயும் பேசினார்கள். இவ்வுபன்னியாசத்தில் இவர்கள் இக்கூட்ட உற்பத்தியைச் சொல்லப் புகுந்து, முதலாவதாக சிராம்பூர் என்னும் பட்டணத்தில் Mr. William Carey என்பவருடைய புஸ்தகசாலையில் சில இந்திய கிறிஸ்தவர்கள் கூடி அதிக நேரமாய் தேவனிடத்தில் கெஞ்சி, தேவன் அந்நேரம் அவர்களுக்கு அருளின நல்ல ஆவியின்படி இந்தியாவில் இன்னும் அநேக இடங்களில் கிறிஸ்தவ அன்பின் ஆசீர்வாதம் சொல்லாமல் இருக்கும் இடங்களை கவனிக்க ஆரம்பித்தனர் என்றும், இன்னும் இந்தியாவில் மூன்றில் ஒரு பாகம் ஆதாவது 100,000,000 ஜனங்கள் கிறிஸ்துவை அறியாமல் மோசத்திற்குள் போகிறார்கள் என்னும் பரிதாப நிலைமையை உணர்ந்தவர்களாய் மிஷனரி கூட்டத்திற்கு, கிறிஸ்தவமார்க்கம் செல்லாத இடங்களில் இன்னும் அதிகமான வேலை நடத்தப்படவேண்டும் என்பதாக ஒரு விண்ணப்பம் எழுதினார்களென்றும் சொன்னார்கள். இதன் பேரில் மிஷனரிமார்கள் ஆச்சரிய அன்பை

உணர்ந்த இல்லாவிடனே, இவ்வேலையை எடுத்து இந்துக்களுக்காக இந்து தேச கிறிஸ்தவர்களே உழைக்கலாமென்றும், எங்களால் இன்னும் அதிக வேலை செய்ய போதாமையால், பணமில்லையென்றும், இந்திய கிறிஸ்தவர்களே இச்சுவிசேஷ வேலையைச் செய்து இந்தியாவைக் கிறிஸ்தவ அன்பால் ஊழியஞ் செய்ய தகுதியுள்ளவர்களென்றும் சொல்லிவிட்டார்கள். பிறகு இக்கூட்டத்தை முதலாவதாக மாண்ட் காமரி என்னுமிடத்தில் ஸ்தாபித்தார்கள். ஆவியின் அருளால் இக்கூட்டம் 8½-வருஷத்திற்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு, தற்சமயம் அநேக இடங்களில் பரவியிருக்கின்றது. இக்கூட்டத்தைச்சேர்ந்த பஞ்சாப் வாலிபர் "இம்மார்க்கத்தில் சேரும் ஒவ்வொருவரும் இன்னொரு ஆத்துமாவை கிறிஸ்துவின் பாதத்தண்டை கொண்டு வரவேண்டுமென்று தேவபலத்தைக் கொண்டு தீர்மானம் செய்து, இந்நோக்கத்துடனே மழையென்றும், வெயிலென்றும் பாராமல் பசிபட்டினியிலும் தெருவிலும் திண்ணையிலும் இரவிலும் படுத்தூங்கி கிடைக்கக்கூடிய போஜனத்தை சாப்பிட்டு வேலை செய்து வந்தார்கள். இக்கூட்டத்தில் முதல் சேர்ந்தவர்கள் சர்வகலாசாலையில் நன்றாய் படித்து தேர்ந்தவர்கள். சர்க்கார் உத்தியோகத்தில் கிடைக்கக்கூடிய சகல ஆதாயத்தையும் கனத்தையும் கிறிஸ்துவுக்காக தத்தம் செய்து சொற்ப சம்பளத்திற்கு இவ்வூழியத்திற் சேர்ந்து மனந்தளராமல் கிறிஸ்துவின் அன்பினால் அதிகமதிகமாய் ஏவப்பட்டவர்களாய் சுற்றுக்கிராமங்களாகிய நாலாபக்கங்களிலும் சுற்றித்திரிந்து உழைத்ததினால் சொற்பகாலத்தில் வட இந்தியாவில் நக்கூர், கார்வார், ஓமலூர், கார்ஜாட் முதலிய இடங்களில் கிறிஸ்மார்க்கம் சென்றிருக்கிறது. இப்போது இச்சிறுக்கூட்டத்தால் கிறிஸ்துவின் பாதத்துக்குக் கொண்டுவரப்பட்ட இடங்களில் ஆத்துமாக்களின் தொகை 13000 பெயர். இப்படி N. M. S. சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட இடங்களில், கிறிஸ்துவிக்குத் தங்களை தத்தம் செய்த உபதேசிமார்களையும், உபாத்திமார்களையும், ஆங்காங்கு வைத்து வேலையை நடத்துகிறார்களென்றும் இவ்வூழியத்துக்கு நாம் எவ்வளவு கடனாளிகளாயிருக்கிறோமென்றும் எடுத்துப்பேசினார்கள் கடைசியாக இக்கூட்டத்தையும், இதில் நடக்கும் ஊழியத்தையும் அச்சமயம் தங்கள் உருக்கமான ஜெபங்களில் நினைக்கும்படி கேட்டுக்கொண்டார். இப்பெரிய சபையில் இந்திய ஸ்திரீயாகிய இந்த அம்மாள் தைரியமாய் நின்று அவர்கள் ருசித்த அன்பின் அளவுக்குத்தக்கபடி அதிகத்தெளிவாய் பேசினார்கள். ஆகையால் கடவுள் ஆண்களைமாத்திரமல்ல பெண்களையும் அவருக்காகப் பேசவும் ஊழியம் செய்யவும்விரும்புகிறார் என்பதை நாம் அறிந்து கொள்வோமாக.

ஒரு பாட்டுப் பாடியபின் (Mr.Maclean M. A. B. D.) மக்லீன் ஐயரவர்கள் காஞ்சீவரத்தில் வேலை செய்து, பட்டணத்தில் வைக்கப்படும் N. M. S. கூட்டங்களில் அதிகமாய் சம்பந்தப்பட்டிருக்கிறபடியால், புறதேச மிஷனரிமார்களும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அப்படிச் செய்ய அவர்கள் பாத்தியப்பட்டவர்கள் என்றும், இப்பொருளின்மேல் பேசலானார். அதிக உயர்ந்த நடையில், மிகவும் வற்புறுத்தி, வந்தோர் மனதில் ஆழச் செல்லத்தக்கதாயிருந்தது.

முடிவாகப் Prof பால் அப்பாசாமி M. A. LL. B. நியாய தோரணையுடன் காரியங்களை எடுத்துக்காட்டினார்கள். விசேஷமாய் உற்சாகத்தைத்



இதுவரையில் நமது மூல தனத்துக்கென்று வந்த வரவு ரூ 5230-15-2

* * * *

நமது மிஷனரிமாரில் மூவர் அன்னிய பாஷை படித்து வருகிறார்கள். கனம் P. T. வர்கீஸ் போதகர் கன்னட பாஷையில் அன்னியபாஷை தேறியிருக்கிறார். அவர் மேற்படி பாஷையில் பாண் கூற்றும் மிஷனரிமார் டித்தியமுள்ள மூவரடங்கிய கமிட்டியாரால் பரிசோதிக்கப்படுவார். கனம் T. M. மத்தாய் போதகர், கனம் S. ஞானாபரணம் அவர்கள் ஆகிய இவ்விருவரும் இன்னும் படித்து வருகிறார்கள். இவர்கள் ஐரோப்பியருக்கென்று நியமித்திருக்கும் பரீட்சையில் பங்கு பெறுவார்கள்.

* * * *

Mr. K. K. குருவில்லா

இது வரையிலும் கிறிஸ்தவ மாணவ சங்கத்தின் காரியதரிசியாயிருக்க நம்மால் அனுப்பப்பட்டிருந்த நமது சகோதரன் மேற்படி சங்கத்தின் சம்பந்தத்துக்கு நீங்கலாகி நம்மிடம் ஒரு வருட ரஜா பெற்றுக்கொண்டு வேத சாஸ்திரம் கற்கும்படி அமெரிக்காவுக்குச் செல்லுகிறார். அவர் போகும் இக்காலமோ ஆபத்தான காலம். சகோதரர்கள் இவரைத்தங்கள் ஜெபங்களில் மறவாதிருப்பார்களாக.

---

## நமது சங்க ஊழியம்.

### கார்வார்.

### மீன் பிடிக்கும் செம்படவருக்கோர் பாடசாலை.

அலிகேடே என்னுமிடத்தில் கார்வாருக்கு தாசில்தாராகிய Mr. பண்டர்கார் அவர்களால் நமது சங்க பாடசாலை திறக்கப்பட்டது. மற்ற பள்ளிக்கூடத்து உபாத்தியாரும் ஊருக்குப்பெரிய மனுஷர்களும் வந்து கூடினர். அங் Mr. J. வெங்கட்ராம் அவர்கள் வந்திருந்தார். மழை அதிகமாயிருந்தபடியால் சாயரட்சை 5 மணிக்குத்தான் கூட்டம் ஆரம்பமாயிற்று. தாசில்தார் அவர்கள் கல்வியின் பயனைக்குறித்துச்சில வார்த்தைகளைப் பேசியபின்னர் கூடி வந்திருந்த ஊருக்குப்பெரியதனக்காரரைத் தாங்கள் இப்பள்ளிக்கூடத்துக்கு தினந்தோறும் 50 பிள்ளைகளுக்குக்குறையாமல் வருவதற்குத்தாங்கள் பாத்தியம் என்று முச்சலிக்கா எழுதி வாங்கினர்.

திருவாங்கூரிலிருந்து Rev. P. T. வர்கீஸ் அவர்கள் மூலமாய் அனுப்பப்பட்ட சிறிது தொகையினால் பிள்ளைகளுக்கு சிற்றுண்டி பரிமாறப்பட்டது. இவையெல்லாம் ஓர் கடையின் முன்பக்கத்தில் நடைபெற்றது. ஏறக்குறைய 40 ஆண் பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் வந்திருந்தனர். பெண்பிள்ளைகள் முன்னுக்கு வந்து மற்றவர்களோடு உட்கார அதிக வெட்கப்பட்டார்கள், என்றபோதிலும் கொடுக்கப்பட்ட மிட்டாய் பொட்டணமானது எல்லாத்தடையையும் நீக்கிற்று. ஒவ்வொரு பிள்ளையும் மேற்படி மிட்டாய் பொட்டணத்தை வாங்குகையில் தாசில்தாரவர்கள் ஒவ்வொரு பிள்ளையின் தலையின்மேல் கை வைக்க அவர்கள் நமஸ்காரம் செய்து திரும்பினர். இவ்வாறாக இச்சிறுதுவக்கம் மாலை 7 மணிக்கு முடிவுற்றது.

P. S. மத்தாய்.

## நங்கவள்ளி.

**யுத்தம்.** தற்சமயம் சீர்மை தேசத்தில் நடந்தேறும் யுத்தமானது எவ்வகுப்பாரையும் திகிலுறச்செய்கிறது. நங்கவள்ளியில் வாரந்தோறும் ஆதிவாரமன்று சந்தை என்பதை நமது நேயர் அறிவர். இவ்வித சந்தை ஒன்றில் யாரோ ஒருவன் இதோ ஜெர்மனியர் வருகிறார்கள் என்று சொல்ல, சந்தைக்கு வந்திருந்த யாவரும் ஒரு க்ஷணப்பொழுதில் ஓட்டம் பிடிக்கலானார்கள். சுவிசேஷப்பிரசங்கத்தைக் கேட்க வருவோரும் வரத்தடைப்பட்டார்கள்.

**பஞ்சமர்.** இவ்வூரிலுள்ள பஞ்சமருக்குள் ஓர்வித அசைவு உண்டென்று முன் தெரிவித்திருந்தோம். இந்த அசைவு வாஸ்தவத்தில் உண்மையேயாயினும் தைரியமாய் முன்னுக்கு வர ஜாதி நியாயங்களும், பயமின்றி கிறிஸ்துவண்டைவர பலபட்டறை நியாயங்களும் தடையாயிருக்கின்றன. ஏற்ற வேளைக்குக் காத்து நிற்கிறோம்.

**கிறிஸ்துவுந்துச்சீஷர்.** நீங்கள் உலகமெங்கும் போய் சீஷராக்குங்கள் என்பது அருள்நாதரின் கட்டளை. நங்கவள்ளியிலும் சீஷர் உண்டு நங்கவள்ளியிலும் சீஷர் உண்டு என்பதபகாக என் தேவனைத் துதிக்கிறேன். எச்சாதியாரிலும் சீஷர் உண்டு. உயர்ந்த ஜாதியிலும் தாழ்ந்த ஜாதியிலும் ஆண்களிலும் பெண்களிலும் சீஷர் உண்டு. சீஷர் என்று நான் சொல்லுகிற யாவருக்கும் அருள் இன்னும் ஏராளமாய் வேண்டும்.



**பஞ்சமருக்குப் பாடசாலை.** நங்கவள்ளியிலிருக்கும் பஞ்சமர் வாசஞ்செய்யும் சேரியில் ஏறக்குறைய 350 பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்கள் யாவரும் பயிர்த்தொழில் செய்யும் தங்களது பெற்றோருக்கு உதவி செய்யப்பகல் பொழுதில் வெளியேறுவதால் இவர்களுக்கோர் இராப்பள்ளிக்கூடம் பேருதவியாயிருக்குமென்றெண்ணி அவர்களோடு கலந்து அவர்களை ஆயத்தம் பண்ணி வருகிறேன்.

D. R. தெய்வாசிர்வாதம்.

## ஓர் அற்புதம்.

கல்கத்தாவிலிருந்து இப்பொழுதுதான் வந்த மிஷனரிமாருக்கென்று ஜெபக்கூட்டம் வைத்து நடத்தின இரண்டு மிஷனரிமார் காலேஜ் ஸ்கொயர் என்னுமிடத்தில் பிரசங்கம் செய்கையில் நடந்த ஒரு விசேஷ சம்பவத்தைப் பின்வருமாறு தெரியப்படுத்துகிறார்.

பெங்காலியரில் 60 பேர் அவ்விடம் பிரசங்கத்துக்குக் கூடி வந்திருக்கையில் அக்கூட்டத்திலிருந்த ஒருவன் பிரசங்கியாரைப்பார்த்து உங்கள் மதம் உண்மையானால் சாகும் நிலைமையிலிருக்கும் என் பிள்ளைக்காக ஜெபியுங்களென்க அவ்விரண்டு மிஷனரிகளும் அங்கே கூடியிருந்த கூட்டத்தின் மத்தியில் பிள்ளையின் பிராணனுக்காக தாபந்தத்தோடு ஜெபித்தனர். இரண்டாம் நாள் சாயங்காலம் அவ்விருமிஷனரிமாரும் பிரசங்கித்த அதேயிடத்தில் வந்தபோது முந்தின நாள் கூட்டத்துக்கு வந்திருந்த ஜனங்களோடு பிள்ளையின் தகப்பனும் வந்து பிள்ளையைக்குறித்து ஒருவரும் விசாரியாததற்கு முன்னமே தன் பிள்ளை சுகப்பட்டுவிட்டதாக அறிக்கையிட்டான். இந்த அற்புதச் செயல் பிள்ளையின் பெற்றோர் மனதில் எவ்வித கிரியை செய்திருப்பதென்று தெரிவிக்கப்படவில்லை.

## சகோதரரைக்கண்ட இந்திய கிறிஸ்தவர்.

செல்லிக்காகுழி இந்துக்கள் மத்தியில் நடக்கும் சுவிசேஷ வேலையைப் பற்றி ஓர் நண்பனிடமிருந்துவந்த கடிதத்தின் வரலாறு:—

எங்கள் மத்தியில் சுவிசேஷ வேலை துவங்கி சுமார் ஒரு வருஷம் ஆகின்றன. இவ்வூர் கிறிஸ்தவர்கள் சில பட்டணங்களில் வசிக்கிறதுபோல்

ஒரே தெருவில் நெருங்கி வசிக்கிறதில்லை. இங்கு இந்துக்களும் கிறிஸ்தவர்களும் அடுத்தடுத்தாப்போல் வசிக்கிறார்கள். அக்காலத்தில் நமது ஆண்டவர் காயீனைப்பார்த்து "உன் சகோதரன் எங்கே?" என்று கேட்டதுபோல் இப்பவும் நம்மைப்பார்த்து கேட்பார் என்று எண்ணி, நம்மை அடுத்த இந்து சகோதரர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பது நமது கடமை என்று உணர்ந்தோம்.

இவ்விஷயத்தில் எங்களது கடமைகளை உணரச் செய்த இந்திய சுயதேச மிஷனரி சங்கத்திற்கு உள்ளான நன்றியை அறிவிப்பதற்கு இது ஏற்ற சமயம். இந்திய சுயதேச மிஷனரி சங்கத்தார் இந்தியாவின் பற்பல இடங்களில் வசிக்கின்ற நமது இந்து சகோதரர்களின் விஷயத்தில் எவ்வளவு முயற்சியையும் அனுதாபத்தையும் எடுத்துக் கொள்ளுகிறார்கள். நமது கடமைகளை உணராவிடில் நாம் எவ்வளவு குற்றவாளிகளாயிருக்கிறோம். சுயதேச முயற்சியை விர்த்திசெய்யும் நமது இந்திய சுயதேச மிஷனரி சங்கத்துக்கு நாங்கள் செய்யும் பண உதவியானது எங்களை இன்னும் அதிகமாய் அயலகத்து இந்து சகோதரர்களைப்பற்றிய கவலைக்குள்ளாக்குகிறது.

இப்பெரும் ஆசீர்வாதத்திற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். தற்சமயம் சுவிசேஷ வேலைக்காக ஒரே ஒரு ஆள் நியமிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அநேக ஆட்கள் தேவை என்று காண்கிறோம். அவசியம் வேண்டியிருக்கும் ஆட்களை நமது ஆண்டவர் தமது மகத்தான அன்பினால் நமக்கு கொடுப்பார் என்று உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

முதல் ஏழு மாதங்களுக்குள் பதிமூன்றுபேர் சபைக்கு ஒழுங்காக வர ஏற்பட்டிருக்கிறார்கள். இன்னும் அநேக இந்து சகோதரர் தங்கள் இருதயத்தின் அந்தரங்கத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று நம்ப போதுமான காரணங்கள் உண்டு. இவ்விதமாக அநேக இந்துக்கள் நிறைந்த இடத்தை நமது ஆண்டவரிடம் இழுக்கவேண்டுமென்று எடுக்கும் எல்லா சொற்ப முயற்சிகளையும் ஜெயமுடி சூட்டப்படவேண்டுமென்று கர்த்தருடைய பிள்ளைகள் வேண்டிக்கொள்வார்களாக.

---

Printed at the T. A. C. Press, Salem.



யைத்தேடி, மேலான அந்தஸ்தையும் அதிகாரத்தையும் நாடி இப்படி இவைகளுக்கென்று மாத்திரம் பிழைக்கிறது எவ்வளவு ஈனமான காரியம், ஒருக்காலும் அழியாத ஆத்துமாவுக்கு இவ்வித அற்ப சோலிகள் வேண்டுமோ? ஆ! நான் அவைகளுக்கு மேலாக எழும்புவேனாக. என் பரம எசமானுடைய மாதிரியைக் கவனித்து, அவருடைய சத்தியத்தைக்குறித்து சாட்சி சொல்லவே பிறந்தேன் என்றுணர்ந்து நடக்கையினாலும் முயற்சியினாலும், செல்வாக்கினாலும், எந்த விதத்தினாலும் சிலரையாகிலும் ரட்சிக்கும்படி பார்ப்பேனாக. பிரயாசப்பட்டால் நான் இருந்ததில் பலன் உண்டு. உலகம் அழிந்த பின்பும் அப்பலன் நிலைநிற்கும். மறுமையிலேயே நான் என் இகசீவியத்தை நினைவு கூறும்போது அதுவே எனக்கு மனரம்மியத்தைத்தரும். நான் இச்சீவனத்துக்குரிய எந்தச் சம்பந்தத்திலிருந்தாலும் அந்த சம்பந்தத்திலே ஆத்துமாக்களுக்கு ரட்சகரின் மரணத்தைச் சொல்லிக்காட்டி அவர்களை எழுப்பவும் ரட்சிக்கவுமே வைக்கப்பட்டிருக்கிறேன். ஆகையால் இதற்கென்றே நான் உழைப்பேனாக. இந்த உழைப்பு இல்லாவிட்டால் இதிலும் தாழ்வான வேறெந்தக் காரியமும் ஒரே ஒரு நாளில் வேலைக்குத்தானும் பாத்திரமாயிராது.

(தொடரும்)

## காரியதரிசியின் குறிப்புகள்.

நமது சேகரங்கள் யாவிலும் சுவிசேஷ ஊழியம் வெகு மும்முரமாய் நடந்து வருகிறது. பஞ்சாப் சேகரத்தின் தற்கால நிலைமையைக் காண்பிக்கும் கனம் ஜெம்ஸ் வில்லியம்ஸ் போதகர் அவர்களின் கடிதத்தை மற்றொரு பக்கத்தில் காண்க.

* * * *

நூக்கர் சேகரத்திலிருந்து 14-பேர் கிறிஸ்துவின் மந்தையைச் சேர்ந்திருக்கிறார்கள் என்கிற சந்தோஷ செய்தி நமக்கெட்டியிருக்கிறது. அடுத்த சஞ்சிகையில் நூக்கர், ஐக்கிய மாகாணம் ஆகிய இவ்விரு மாகாணங்களைப் பற்றிய மற்ற காரியங்கள் பிரசுரமாகும்.

* * * *

கனம் அகஸ்டீன் ராலாராம் அவர்களும் கனம் A. N. சுதரிசனம் அவர்களும் ஐக்கிய மாகாணம் பிரயாணத்தை முடித்திருக்கிறார்கள். இவர்களுடைய ஊழியத்தின் பலனாக அம்மாகாணத்திலுள்ள நமது சகோதரர்களின் உற்சாகம் அதிகரித்திருக்கிறது.

* * * *

கனம் பால் S. கடம்பவனசுந்தரம் அவர்கள் தென் திருவாங்கூருக்குப் பிரயாணமாய்ப் புறப்பட்டிருக்கிறார். அவர் மாஜிக்லான்சர் சகிதமாய் ஒவ்வொரு சபையையும்-சந்திக்க உத்தேசித்திருக்கிறார். இவரது ஊழியத்தை யாவரும் நன்கு மதிப்பார்களென்று நம்புகிறோம்.

நமது சங்கப்பண விஷயம் இன்னும் அதிர்ப்திகரமாகவே இருக்கிறது. கடந்த ஒன்பது மாதத்திய வரவு ரூ 9706-15-10. ஆக ரூ 3562-6-0 வரவை விட அதிகமாய்ச் செலவிடப்பட்டிருக்கிறது. வழக்கமாய் வருஷத்தின் கடைசியான மாதங்களில் வரவு அதிகமாகும். இவ்வருஷத்திய வரவு அதிகமாய் வராவிட்டாலும் செலவுக்குத் தக்கதாகவாவது வரும் என்பது நமது நம்பிக்கை. இவ்வித நம்பிக்கை அவமாய்ப் போகாதபடி நண்பர்கள் உழைத்துவருவார்களாக. கிறிஸ்மஸ் பண்டிகைச் சேர்ப்புக்குச் செய்யவேண்டிய ஆயத்தப்பாடும், அதற்குமுன் ஆங்காங்கு நடந்துவரும், பலவிதச் சேர்ப்புகளும் நடந்தேறி நாம் கையிட்டுக்கொண்ட அருள் நாதரின் ஊழியம் தடையுறாமல் நடந்தேற சகோதரங்கள் ஊக்கமாய் ஜெபித்து உழைத்துவருவார்களாக. நமது சங்கப்பண விஷயத்தில் நாம் கடந்த காலங்களில் சேர்த்து வந்த மூலதனத்துக்கென்று ரூ 5100 சேர்ந்திருக்கிறது. சங்கப்பொக்கிஷதாரிக்குள்ள மனக்கலக்கத்தை ஓரளவாய் நீக்க உதவுகிறது.

* * * *

## நமது சங்க ஊழியம்.

### மங்கோமரி.

**ஓர் கிறிஸ்தவ சாது.**

Mr. ஜேக்கப் என்னும் கிறிஸ்தவ சாது தம்முடைய மாணாக்கர்களில் ஒருவனை நம்முடைய சேகரத்தில் வேலை பயில்வதற்கென்று அனுப்பியிருக்கிறார். அவருடைய பெயர் S. எபனேசர், இவரை பாசல பாத்திலுள்ள ஹிந்து பிள்ளைகளுக்கென்று ஏற்பட்டுள்ள நம்முடைய பள்ளிக்கூடத்தைப் பார்க்கும்படி நியமித்திருக்கிறது. இவ்வேலையை அவர் நன்றாய்ச் செய்து வருகிறார்.

**பெங்களூர் பெண்களும் ஓர் பஞ்சாபி பையனும்**

சில நாளுக்கு முந்தி பெங்களூர் பாடசாலையிலிருந்து கனம் A. N. சுதரிசனம் அவர்கள் மூலியமாய் ஓர் கடிதம் வரப்பெற்றேன். அக்கடிதத்தில் நமது சேகரத்திலுள்ள ஓர் பையனுக்கென்று மாதம் ரூ 4 கொடுப்பதாகச் சொல்லியிருந்தது. நான் அவர்களுக்கு வந்தனம் சொல்லி நான் ஏற்கனவே 6 ரூ வேண்டுமென்று மனுக்கொண்டிருந்த இரண்டு பிள்ளைகளுடைய சமாச்சாரங்களை யெல்லாம் சொல்லியிருக்கிறேன். அத்தோடு நமது டிரெய்னிங் பாடசாலையைப் பற்றியும் அவ்விடத்தில் வேதாகமம் படிப்பித்தலைக் குறித்தும் எழுதியிருக்கிறேன்.

**ஓர் வேதமதி.**

டாங்கிலுள்ள கிறிஸ்தவ சகோதரங்களிடமிருந்து ரூ 16-7-0 வந்தது. அது கிடைத்த விபரம் பின்வரும் கடிதத்திலுள்ளது.

“ஒரு நாள் நமது இங்கிலீஷ் பத்திரிகையில் 300-ரூ கடன் இருக்கிறதென்று வாசித்து மிகவும் விசனமடைந்தேன். அத்தோடு தேவாவியானவருடைய வெளிச்சத்தில் என் இருதயத்தைச் சோதித்துப்பார்த்தேன். முதலாவது நான் அதிக அசட்டையாயிருந்தேன் என்றும். கடினமானவேலை ஆண்டவருக்குப் பிரியம் என்று நினைத்தாலும் பூலோக நன்மையைக் கொடுக்க மறந்தேன். ஆகையால் ஜெபம் செய்த பிறகு இங்குள்ள கிறிஸ்தவர்களிடம் சொன்னேன். ரூ 16-11-0 சேர்ந்தது. அதில் 4 அணா மணி ஆர்டர் செலவுபோக ரூ 16-7-0 அனுபபியிருக்கிறேன்.”

**ஓர் உற்சாக ஊழியன்**

கடந்த எப்ரல்மீ நமது டிரெய்னிங் பாடசாலையிலிருந்து வந்த ஓர் வாலிபனைக் குறித்து பின்வருமாறு எழுத அனுமதி கொடுங்கள். அவன் பெயர் ரதுலா அவனுக்கு பரிசுத்தமத்தேயு சுவிசேஷத்தில் எழுத்துக்கூட்டமாத்திரம் தெரியும். அறுப்புக்காக பள்ளிக்கூடம் மூடப்பட்டபொழுது ரகுலா இரண்டு அதிகாரம் படித்து முடித்துவிட்டான் அறுப்புக்காலத்தில் அவனுக்கு இரவும் பகலும் வேலை அதிகம். ஆகையால் நான் அவனுக்கு நீ படித்த எழுத்துக்களை மறக்காமலிருக்க வேண்டுமானால் ஒவ்வொருநாளும் ஒரு வேதவாக்கியம் படிக்கவும், தற்சமயம் அவன் வேறொருவருக்கு சொல்லிக் கொடுக்கக்கூடாத நிலைமையிலிருப்பதால் ஒவ்வொரு நாள் சாயங்கால ஆராதனைக்கு சில வாக்கியங்களை ஆயத்தம் பண்ணிவரவும், பிறகு வேலைகாலம் தீர்ந்தவுடன் சிலருக்கு எழுத்துகளைச் சொல்லிக்கொடுக்கலாமென்று யோஜனை சொன்னேன். சபையின் மூப்பன் சபையோரை கூடிவரச்செய்ய இந்த வாலிபன் தான் ஆயத்தம் செய்திருந்த வேதவாக்கியச்சொல்ல செபம்செய்து ஞானப்பாட்டுபாடி கூட்டம் முடிவு பெறுகிறது. கடந்த குன்மாதக்கடைசியில் ஷை மூப்பன் ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் ரகுலாவிடம் பாடம் கற்கும்படி வருந்தினான். என்னுடைய மாதாந்திரப்பயணத்தில் இவர்களுக்கு வேதவசனத்தை வாசிப்பதின் முக்கியத்தை உணர்த்தியிருக்கிறேன். இது ஓர் சின்ன சபையானதால் எட்டேஎட்டு

பிள்ளைகள் ரகுலா வீட்டில் படிக்கவந்தார்கள். ரகுலாவுக்கு எப்பொழுதெல்லாம் சமயம் கிடைக்குமோ அப்பொழுதெல்லாம் பாடம் கற்பிக்கப்படுகிறது. ஆகஸ்டு மாசக்கடைசியில் ரகுலா தன்னுடைய மாணாக்கரில் 16 வயதுள்ள ஓர் பெண்பிள்ளை மிகவும் கூர்மையான புத்தியுடையவள் என்றும் யாவரும் பாலசிட்சையை முடித்தாயிற்றென்றும் சுவிசேஷத்தைத் துவக்க ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றும் சொல்லவே நான் ஒரு மத்தேயு சுவிசேஷத்தை மேற்படி பெண்ணின் தகப்பனுக்கு 1 அணுவுக்கு விற்றேன். 3 நாளுக்கு முந்தி ரகுலா என்னிடம் வந்து 3 புத்தகங்களை வாங்கிப்போனார். இம்மூவரும் சுவிசேஷம் வாசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

ஜேம்ஸ் வில்லியம்ஸ்.

## மெய்விசுவாசத்தின் அற்புத சக்தி.

ஆதலால் மனுஷன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்-ரோமர் 3.23

விசுவாசத்துக்கு மிகவும் இன்றியமையாதது அன்பு. பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் அன்பின் சிறப்பை கொரிந்தியருக்கெழுதிய முதலாம் நிருபம் 13-ம் அதிகாரத்தில் செவ்வனே விளக்கிக் காட்டியிருக்கிறார். இரக்கமே உருவாயுதித்த நமதருமை இரட்சகர் இயேசுவானவர் கொடும்பாவிகளாகிய நாம் மனந்திரும்பி வழிப்படவேண்டுமென்று இப்பூமியில் அவதரித்து, சொல்லொணாத் துன்பப்பட்டு, சிலுவையிலறையுண்டார். இஃதோர் ஒப்புயர்வில்லாததோர் ஆச்சரியமன்றே. இவ்வன்புக்கு எது நிகர்? கிறிஸ்தவர்களென்றழைக்கப்படும் நமக்கு அவ்வன்பு மிகவும் அவசியம். பரிசுத்த பவுல் அன்பு சகலத்தையும் நம்பும், விசுவாசிக்கும் என்கிறார். ஆகவே அன்பில்லையேல் விசுவாசிப்பதென்பது முடியாது. விசுவாசமில்லாவிட்டால் இரட்சிப்பில்லை. ஆகையால் தேவ அன்பை மேன்மேலும் அறியவும் அவரிடம் அன்புபூண்டொழுககவும், அவரை விசுவாசிக்கவும், அப்படி விசுவாசிப்பதினால் உண்டாகக்கூடிய எல்லாக் கஷ்டங்களையும் துன்பங்களையும் சகிக்கவும், மாயமற்ற அன்போடு ஒருவருக்கொருவர் உதவி செய்யவும், நாமறிந்த தேவமகிமையின் மகத்துவத்தை நமக்களித்த ஆண்டவரின் இராஜ்யப் பிரபல்யத்துக்கென்று செலவிட வேண்டியதும் நமது கடமை. இவையாவற்றிற்காகவும் வேண்டிய பலமும் ஞானமும் அளிக்கும்படி இடைவிடாது தேவனை நோக்கி ஊக்கமாய் ஜெபிப்போமாக.

கர்த்தர் மனிதன் அற்பம் என்று அசட்டை பண்ணுகிற காரியத்தில் கர்த்தர் விசேஷ அற்புதங்களைச் செய்ய வல்லவர். அவர் வழி நமது வழியல்ல. சிருஷ்டிகரைக்கண்டறிந்து தொழாமல் சிருஷ்டிகளைத் தொழும் அஞ்ஞானிகளின் மனதை ஆச்சரியமான விதமாய்த் தம் பக்கல் சேர்த்துக்கொள்ளுகிறார். ஓர் உயர்குல ஸ்திரீ கர்த்தரால் நல்வழிப்பட்ட விருத்தாந்தத்தைச் சுருக்கிச் சொல்லுவோம் :—

டேவிட் மெக்கி (David Mckee) என்பவர் எழுதிய வரலாறு :—

“சில காலத்திற்குமுன் நான் இன்னம் சில தேவ ஊழியரோடு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க செந்திராத் என்னும் கிராமத்துக்குப் போயிருந்தேன். நாங்கள் பிரசங்கிக்கையில் எங்கள் முன்பாக என் முகத்தைப் பார்த்தவண்ணமாய் ஒரு நரைத்த கிழவி உட்கார்ந்திருந்தாள். அவள் பிரசங்கத்தைக்கேட்டுக்கொண்டே எல்லா ஜனங்களுக்கு முன்பாக ‘இயேசு என்னுடைய குரு’ என்று சொல்லிக்கொண்டேயிருந்தாள். இவள் சில போதகர்மாரிடம் போய் பெரும் பாவியாகிய தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு தான் இரட்சிப்படையக்கூடுமோவென்று கேட்டனள். கர்த்தர் அப்படிச் செய்வாரென்று நிச்சயப்படுத்தி அவர் நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தார் என்றார்கள். பிறகு ஆண்டவரைப் பற்றிப்பேசுவதற்கு என் வீட்டிற்கு வந்தாள். அப்போது அவள் தன் பாவங்களைக் கழுவித் தன்னையாட்கொள்ளும் இரட்சகரை ஊக்கமாய்த் தேடிக்கொண்டிருக்கிறாளென்றறிந்தோம். தன் இந்து மதம் அவளுக்கு எவ்விதச் சமாதானமும் கொடுக்கவில்லை. தாங்கவரிய துக்கத்தோடு வாய்க்குழறி “ஒரு மனிதனைக் கொன்ற பாவியாகிய என்னையும் ஆண்டவர் மன்னிப்பாரென்று நீங்கள் நிச்சயிக்கிறீர்களாவென்று மெலிந்த குரலோடு கேட்டாள். தன் கணவன் வீட்டிலில்லாத சமயம் பார்த்து சில கள்வர்கள் தன் வீட்டையுடைத்து கொள்ளையடிக்க வந்தார்களென்றும் அச்சமயத்தில் தன் வீட்டைக் காப்பாற்றச் செய்த பிரயத்தனங்களில் ஒருவனைக் கொன்றதாகவும் சொன்னாள். பலமுறையும் அதைச் சொல்லி அப்பயங்கரமான பாவத்தைச் செய்த என்னையும் மன்னிப்பாரென்று நிச்சயிக்கிறீர்களாவென்று பின்னும் ஆத்திரத்தோடு வினவினாள். நாங்கள் அவள் மனதுருகிக் கசிந்தழுது பாவ மன்னிப்புக்காகத் தவிப்பதைக்கண்டு அவள் உணர்வுக்குச் சந்தோஷித்து, கர்த்தரை ஸ்தோத்திரித்து உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியைப்பற்றி யறிவித்தோம். பாவ மன்னிப்படைந்து சுத்திகரிக்கப்படுவதற்கு உத்தம மனஸ்தாபமே தேவையென்றுரைத்தோம். கிறிஸ்துவின்

இரத்தம் கொலைக்குற்றத்தையும் கழுவி சுத்திகரிக்குமோவெனச் சந்தேகித்தாள். சற்றுத்தயங்கினாள். மகிமையின் ராஜாவின் திருச்செயல்கள் இன்னம் அவளுக்கு நன்கு விளங்கவில்லை. அவள் மனதில் கர்த்தர் கிரியை செய்யச்செய்ய நாளடைவில் ஒளிவீசப் பெற்றவளாய் தன் பாவங்களாகிய பாரச் சுமையை அவர் மேல் வைத்து உள்ளம் பூரித்து "**இயேசு என் இரட்சகர், என் பாவங்களை மன்னித்தார்**" என்று சந்தோஷத் தொனியோடு கூவினாள். அவள் வீட்டுக்குப் போகும்போது தன் இரட்சகரைப்பற்றிப் பின்னும் அறிய பிரதிதினமும் வருவதாகச் சொல்லிப்போனாள். சில நாட்களுக்கெல்லாம் கர்த்தருடைய ஜெபத்தையும் சில கற்பனைகளையும் மனப் பாடஞ்செய்து கொண்டாள். தனக்கு வேண்டியவற்றிற்காக ஆண்டவரை எப்படிக்கேட்பது என்பதையும் தெரிந்து கொண்டாள்.

இது வரையில் அஞ்ஞானிகளின் தெய்வங்களின் பெயரைச் சொல்லி வீடு வீடாய்ப் போய்ப் பிச்சையெடுத்து ஜீவித்து வந்தாள். நாங்கள் யாவரும் அத்தொழிலின் இழிவைப்பற்றிச் சொல்லவில்லை. அருமை இரட்சகரே அவளுக்கறிவு தந்தார். அதன் பலனாக அவள் எங்களிடம் வந்து அப்படி சம்பாதிப்பது சரியல்லவென்று நினைப்பதாகச் சொன்னாள். அவளுக்கு வேறோர் வழியும் தோன்றாமையால் வயல்களுக்குப் போய் கூலி வேலை செய்து பிழைக்க ஆரம்பித்தாள். ஆரம்பமுதல் அவள் கடும் வெயிலில் இருந்தாவது அல்லது உழைத்தாவது வழக்கப்பட்டவளல்லவாதலால் சுரத்தால் பீடிக்கப்பட்டிருந்தாளே பத்துமாதத்திற்கு முந்தி இவள் என்னிடம் வந்து ஒரு சிறுகடை வைத்துப்பிழைப்பதாகச் சொல்லி அதற்குவேண்டி என்னை ஒரு பிவர் (இரண்டரை ரூபாய்) கேட்டாள். சந்தோஷத்தோடு கொடுத்தேன் அதுமுதல் இதே தொழிலால் ஜீவித்துவருகிறாள். சிலநாட்களுக்கு முன் ஒரு மாட்டுவண்டியின் கீழகப்பட்டு, ஸ்மரணை தப்பி இருந்த அவள் கண்டெடுக்கப்பட்டாள். அவள் முழங்கை சுளுக்கிக்கொண்டிருந்தது. அவள் தன் வேதனையில் **ஓ கர்த்தாகி இயேசுவே என்னைக்குணப்படுத்தும். இல்லாவிட்டால் என்னைப்பரம வீட்டிற்கு அழைத்துக்கொள்ளும்!** என்று கதறினாள். **ஆகா, என்னவிசுவாசம்!** ஒருதடவை அவள் அதைரியமடைந்து 'இவ்வளவு உபத்திரவத்தை அனுபவிக்கும்படிக் கர்த்தர் என்னைக்கைவிட்டார் என்று நினைக்கிறேன்' என்றாள்.

(தொடரும்.)

Printed at the "T. A. C." Press, Salem.

23 NOV 1915 MADRAS


# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

## The Tamil Organ of the National Missionary Society of India.

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று.

**Vol. VI.** டிசம்பர், **1914.** **No. 12**


"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக."

## கிறிஸ்துமஸ் பண்டிகையின் சந்தோஷம்.

1. கிறிஸ்தவர்களே, களித்து
தேவ குமாரனை
சகாயக்கர்த்த கர்த்தரை
இனிதாய்த் தோத்தரித்து
போற்றுங்கள், பாரபார்
கடக்குறவானவர்
மா சந்தோஷம், தெய்வ பிள்ளை
மீட்பரானார், பயமில்லை
பூரிப்பாவோம், அவர் தாமே
இருளைப் பகலோனுமே.

2. ஆ, என்மனமே, நன்றாக
பார், உன்மீட்பர் எத்தனை
பட்சமாக உன்னண்டை
வந்திறங்கி உனக்காக
ஏழையாய்ப் பிறக்கிறார்,
அவர் முன்னணையைப் பார்.
மாசந்தோஷம், தெய்வ பிள்ளை
மீட்பரானார், பயமில்லை.
பூரிப்பாவோம், அவர்தாமே
இருளைப் பகலோனுமே.

3. உம்மை என்னமாய்த் துதிப்பேன்,
இயேசுவே உம்மாலே நான்
மீட்கப்பட்டேன் என்றுதான்
செய்கையாலே அறிவிப்பேன்
உம்மால் தேற உம்மிலே
தாபரிப்பேன் சீவனே
மா சந்தோஷம், தெய்வபிள்ளை
மீட்பரானார், பயமில்லை
பூரிப்பாவோம், அவர்தாமே
இருளைப் பகலோனுமே.

Christ Keymann, 1662.

## அறுப்புக்கு வேலையாட்கள்.

(முன் தொடர்ச்சி.)

இவ்வேலையின் முக்கியத்தை உய்த்துணர்ந்தவனாயிருக்கவேண்டும். இந்த உணர்வு இல்லாமல் நான் எப்படித்தான் இருக்கலாம்? தேவகுமாரனை உலகத்திலே வரப்பண்ணி அவர் பணிதருக்காக பிருந்த முயற்சிகளும், பாடுகளும் அடையும்படிச் செய்யத்தக்க முக்கியமுள்ளதாயிருந்த அவ்வேலையை நான் எப்படி மதித்தால்தான் சரி! இந்த ஞான அறுப்பே அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்தோஷம். அதுவே அவர் ஆத்துமா பட்ட வேதனைக்குப் பலன். அதுவே அவருக்கு ஊழியஞ்செய்கிற தேவதூதருக்கு மகிழ்ச்சி. அதுவே அப்போஸ்தலர் தங்கள் வேலையை உற்சாகமாய்ச் செய்யும்படி அவர்களைத் தாங்கினது. அதுவே தேவதாசருக்கு முயற்சியாயும் பிரியமாயும் இருந்தது. இப்படியிருக்க, நான் அதை அவமதிக்கலாமா? ஒரே ஒரு ஆத்துமாவின் இரட்சிப்பு முதலாய் மறுமையில் எனக்கு எவ்வளவோ மேன்மையாய்த் தோன்றும். கர்த்தருடைய கருணை குறித்து மீட்பின் சகல மகிமைகளையும்பெற்று இலங்கிக்கொண்டிருக்கிற ஒரு ஆத்துமா என்னை நோக்கி நீயே என்னை இங்கே கொண்டுவருகிறதற்கு கருவியாயிருந்தாய் என்று சொன்னால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும்! அப்படி அநேகர் என்னைப் பார்த்து சொல்வார்களானால் எனக்கு எத்தனையோ ஆனந்தமாயிருக்கும்! இப்பேர்ப்பட்ட திவ்விய சந்தோஷம் எனக்கு சீக்கிரமாய் கிடையாதா? இதற்கென்று பிரயாசப்படுவதிலும் அதிக முக்கியமான காரியமுண்டோ? கர்த்தர் தாம் மரித்த ஆத்துமாக்களுக்காக நான் யாதொரு [illegible] செய்யும்படி ஒரு இடையூறுமின்றி வைத்துக்கொண்டு [illegible] நோக்கி என் அறுப்புக்கு வேலை செய்யப்போ என்று சொல்லும்போது நான் அந்த மகா உன்னத சிலாக்கியமென்று மதித்து உற்சாகத்தோடே அதற்குக் கீழ்ப்படிவேனாக.

நான் இந்த வேலையை ஊக்கமாய்ப் பார்க்கவேண்டும், அறுக்கும், நிறுத்தும், கிலேசைக்கும் தக்கதாக கர்த்தர் வெவ்வேறு



கருவிகளை எத்தனம் பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய அறுப்பில் வேலைசெய்கிற ஜனம் அந்த அறுப்பிலுள்ள சில பங்குகளைச் செய்கிறவர்களுக்குமாத்திரம் உரியதென்று நான் எண்ணப்படாது. அவருடைய நிலத்திலே வேலைசெய்கிற மிகவும் தாழ்வான வேலைக்காரனும் தன் ஸ்தானத்தில் மிகவும் மேலான வேலைக்காரனைப்போலவே முக்கியமானவனாயிருக்கிறான். வரங்களில் பலவிதங்களும் பணிவிடைகளில் வித்தியாசமும் உண்டாயிருந்தாலும் ஒரே கர்த்தாவும், ஒரே ஆவியும், ஒரே வேலையும் உண்டு. நான் போதிக்கிறவனல்லாவிட்டாலும் போதகனை ஆதரித்துத் தாங்கலாமே. நான் திருவசனத்தை மொழிபெயர்க்கிறவனல்ல என்றாலும் அதை அச்சடிக்கவோ அல்லது பரிமாறவோ, தூர இடங்களுக்கு அனுப்பவோ செய்யலாமே. நான் சபையாகிய சரீரத்தில் பிரதான அவயவமாயிராவிட்டாலும் நானும் ஒரு அவயவமாயும் சபையின் சுகத்துக்கும் வளர்ச்சிக்கும் என் ஸ்தானத்தில் இன்றியமையாத எத்தனமாயும் இருக்கலாமே. ஆகையால் என் இரட்சகர் என்னை எவ்விடத்தில் வைத்தாலும் என்னத்தைக் கற்பித்தாலும் எப்படி போக்கிட்டாலும் இம் மாரிடத்தில் அனுப்பினாலும் அவருக்காக உழைப்பேனாக. இதோ இருக்கிறேன். அவர் கையிட்டிருக்கிற மேன்மையான இவ்வேலையில் நான் நாடோறும் கொஞ்சமாகிலும் செய்ய பிரயாசப்படுவேனாக. சத்துருக்களெல்லாம் சுறுசுறுப்பாயிருக்கிறார்களே. தீமையெல்லாம் வேகமாய்ப் பரவுகின்றதே. சாத்தான் தன் முழு பலத்தோடும் ஓயாமல் அக்கிரமங்களைச் செய்துவருகிறானே. ஆ! நான் கர்த்தருடைய வேலையில் சுறுசுறுப்பும் வைராக்கிய முயற்சியும் உள்ளவனாய் இருப்பேனாக.

என் வேலை நிச்சயமாய்க் கைகூடும், என் இரட்சகரின் அறுப்பு அனுகூலமாகவே நடக்கும். களைகள் அவருடைய கோதுமைகளோடே வளர்ந்தாலும் கோதுமை களையாகாதே. அவருடைய கோதுமையை எப்படித்தான் அறப்புடைத்தாலும் ஒரு மணியாகிலும் கீழே விழாது. இது ஒன்றே நிச்சய அனுகூலமாய் முடிகிற காரியம். வேறெந்தக் காரியமும் பிரதிகூலமாய்ப் போகலாம், பிர

திகூலமாய்ப் போயேதீரும். கிறிஸ்துவின் காரியமோ ஒருக்காலும் பிரதிகூலமாய்ப் போகாது. நான் அவருடன் உண்மையாய் வேலை செய்தால் நித்திய ஜீவனுக்கு ஏதுவாக கூலி கூட்டிவைக்கிறவனாயிருப்பேன். இது எவ்வளவோ பாக்கியமான நம்பிக்கை. அவருடைய வேலையை விருத்திபண்ண நான் கொஞ்சமாகிலும் செய்யலாம். நான் ஒருவன் என்ன செய்வேன் என்று சொல்லேனாக. நான் ஒருவன்தான் என்றாலும் நானும் ஒருவனே. நான் அவரோடு வேலைசெய்யாவிட்டாலும் அவர் தாம் தெரிந்துகொண்டவர்களை எவ்விதத்திலும் சேர்த்துக்கொள்வார்.

நானோ என்றென்றும் நிற்கிற அந்த ஒரே வேலையில் பங்கற்றவனாய்ப் போகவேண்டிவரும். இரட்சகருடைய காரியம் நிச்சயமாய்க் கைகூடும் என்று நினைப்பது எவ்வளவோ உற்சாகமான காரியம். இருட்டிலே அது எவ்வளவோ வெளிச்சத்தைத் தருகிறது. சோதனை காலத்தில் எவ்வளவோ தைரியமும் துயர வேளையில் எவ்வளவோ திடனும் ஞானபோராட்டத்தில் எவ்வளவோ ஊக்கமும் அதினால் உண்டாகிறது. போர்ச் சேவகர் எல்லாரும் ஒருவருக்குப் பின் ஒருவராய் மடிந்து போனாலும், சேனையோ ஜெயமடைகிறது. போராட்டத்தில் சேவகர் விழுகிறது அவர்களை முக்தி மகிமைக்குள் பிரவேசிக்கப் பண்ணுகிறதாயிருக்கிறது. கடைசியில் நாமெல்லாரும் ஒருவரை ஒருவர் கண்டுமகிழ்ந்து நமது மகா சேனாபதியின் வெற்றியை ஆரவாரத்தோடே கொண்டாடி களிப்போம். ஆகையால் நான் முழு இருதயத்தோடும் பலத்தோடும் என் ஆயுளெல்லாம் கர்த்தருடைய அறுப்புக்கு வேலை செய்வேனாக.

கர்த்தருடைய அறுப்புக்கு வேலையாட்களானவர்கள் இந்த இலட்சணங்களினால் குறிக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் வேலையின்னதென்று தெரிந்து, அதை அருமையாய் மதித்து, அதை ஊக்கத்தோடு செய்து எப்போதும் நம்பிக்கையும் உறுதியும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஆ! கர்த்தாவே, நானும் உமக்காக இப்படி உழைக்கும்படி எனக்கும் அருள் புரியுமேன். உலக மாய்கை அனைத்தையும் தள்ளி உமக்கே ஊழியஞ் செய்வேன். உமது நிமித்தம்



சகலத்தையும் நஷ்டமென்று எண்ணி வெறுப்பேன். நீரே உமது பலத்தால் எனக்கு உதவிசெய்து என்னைக் காத்தருளும்.

## பத்திராதிபர் குறிப்புகள்.

**கிறிஸ்மஸ் பண்டிகைச் சேர்ப்பும், வாழ்த்துதலும்.**

நமது இந்திய கிறிஸ்தவ சபையனைத்திலும் நமது சங்கத்துக்கென்று கிறிஸ்மஸ் பண்டிகை தினத்தில் ஓர் விசேஷித்த சேர்ப்பு ஒன்று செய்வது கடந்த வருஷங்களின் நல்வழக்கம். இந்நல்வழக்கத்தால் உண்டாகும் பலன் இவ்வருஷத்தில் பெருதவியாகவேயிருக்கும். நமது பத்திரிகை நேயர் யாவருக்கும் கிறிஸ்துமஸ் பண்டிகையின் நல்வாழ்த்துதலையும், நவவருட நல் ஆசியையும் கூறுகிறோம்.

**நமது பிரயாண காரியதரிசியார்**

நமது தென் இந்திய பிரயாண காரியதரிசியார் ஒளிச்சித்திரப்பட இயந்திர சகிதமாய்த் தென் திருவாங்கூருக்குச் சென்றிருக்கிறார். இப்பண்டிகை காலங்களில் இவரது விஜயம் அவ்வூரிலுள்ள கிறிஸ்தவ சகோதரங்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதங்களை யுண்டுபண்ணும் என்பது நமது நம்பிக்கை.

ஆண்டவர் தாமே இவரது ஊழியத்தை யாவருக்கும் ஆசீர்வாதமாய்ப் பலிக்கச் செய்வாராக.

## நமது சங்க ஊழியம்.

### ஓமலூர் சேகரம்—நங்கவள்ளி.

**கிறிஸ்துவின் ஊழியக்காரரும் கிராமாந்தரஜீவியமும்**

கிறிஸ்துவின் ஊழியர் கிராமாந்தரங்களில் வசிப்பதினால் கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றி உண்டாகும் பலன் அவர்கள் பிரசங்கிப்பதைவிட பலமுறை அதிகமென்பதற்குச் சந்தேகமில்லை. எந்தக் காரியங்களுக்கும் ஜனங்

ன் பாதிரியாரைக் கேட்போம்; அவர் பொய் சொல்லமாட்டார். அவர்கள் பொய் சொல்லவேண்டாது என்றும் அவர்கள் வேதம் சத்திய வேதமல்லவோ என்றும் சொல்லிவருகிறார்கள். இதனால் சத்திய சமயத்தின் சத்தியத்தைத் தாங்கள் உணராமல் உணருகிறார்கள். சொல்லாமற் சொல்லுகிறார்கள். கிராமத்தில் வசிக்கும் எனக்கு உண்டான அனுபவங்கள் அநேகம். இதெல்லாம் புதிது. இதில் வெகு கஷ்டமான காரியங்களும் உண்டு. இரண்டு பெண்சாதியையும் ஒரு வைப்பாட்டியையுமுடைய ஒரு பஞ்சமசகோதரன் வீட்டிற்குப்போகும் முறைவந்தது. நான் தற்சமயம் செய்துவருகிற முறைப்படி பஜனைசெய்து பிரார்த்தனை பண்ணிவர யோசித்து அவ்வீட்டிற்கு வந்தபொழுது மேற்படியானுக்கும், அவன் இருபெண்சாதிக்கும் பெரிய கலகம் உண்டாயிருந்ததைக்கண்டு விசாரித்து அவன் அக்கிரமத்திற் செய்யத்தக்கதினிக்கும் கொலையைத் தடுக்க முயன்றேன். இவர்களிருவருக்குநாளும் சொல்லிக்கொண்ட நியாயங்கள் தள்ளிவை. நியாயமோயாயினும் அவர்களுக்கு நியாயம் என்றுசொல்லி உற்சாகப்படுத்த எம்மனம் சகிக்கவில்லை. இவ்வாறு இருமனைவியையுடைய பஞ்சம சகோதரர்கள் நங்கவள்ளி சேரியில் 6 பேர் உண்டு. இவர்களில் ஒருவன் பேரால் பாதகம் நடந்த பவட்டறை நியாயத்தில் நான் அவனுக்கு அடிக்கடி உண்டாகும் குடும்பசண்டையை முன்னிட்டும், குடும்ப சமாதானம் செய்ய இயலாமையைக்கண்டும் அவன் மனைவியிலொருத்தி இருப்பது அவனுக்கு [illegible] மற்றுமுள்ள பஞ்சாயத்தார்க்க ஜீவியம் செய்வதற்கு இது பொருள்படமாகுமென்றும் கூடிய பஞ்சாயத்தார்களுக்குச் சொல்லியபின்னர் அவனுடைய சம்மதத்தின் பேரில் அவளுக்குத் துரும்பு கொடுக்கப்பட்டு நீக்கி வைக்கப்பட்டாள். இந்த ஸ்திரீயைத் தள்ளிவைத்ததில் எவ்வளவுதூரம் நான் நியாயம் செய்தேனென்று நான் சொல்லமுடியாது. ஏனெனில் அவளும் கலியாணமானவள் என்றாலும் தற்சமயம் அவளை சுவிசேஷ வெளிச்சத்துக்குக் கொண்டுவரப் பிரயாசப்படுவது நம்பிக்கையுள்ளதாயிருக்கிறதென்பதே என் சந்தோஷம். ஆனால் அவளுடைய ஜீவியம் கெட்டுப்போகப்போகிற வழிகளுண்டு. இவளையும் இரட்சிக்க அருள்நாதரின் இரத்தம் சிந்தப்பட்டதே நாம் சும்மாயிருக்கலாமா?



**கூரைவீடும் அதன் சங்கடமும்**

நான் தற்சமயம் ஓர் சின்ன கூரைவீட்டில் குடியிருக்கிறேன். எங்களுக்கும் எங்கள் சாமான்களுக்கும் போதிய இடம் கிடையாது. இதைவிட்டாலும் வேறு வீடு கிடைக்காது. இது ஓர் பட்டணவாசல் அல்ல. யாதுசெய்வோம் [illegible] இந்த என் வீட்டுக்கு சிறியோர்முதல் பெரியோர்வரை பற்பல காரியங்களுக்காக எந்நேரமும் வந்துகொண்டே இருக்கிறார்கள். சிலர் வியாதிகளுக்கு மருந்துவாங்கும்படி வருவார்கள். சிலர் தங்கள் பிள்ளைகளுக்குப்படிப்பைக் கொடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளோடு வருவார்கள். வேறுசிலரோ பத்திரிகையில் தொங்கும் படங்களின் விசேஷம் என்னவென்றும் கேட்கவருவார்கள். இப்படிவரும் பற்பலசமயங்களில் என் வீட்டுக்கூரையிலிருக்கும் பல்லிகள் தங்கள் பாஷையில் சிச், சிச் சிச், சிச் என்று சத்தமிட வந்திருப்போர் மேலேபார்க்கவும் அது எப்பக்கம் சொல்லுகிறதென்று கவனிக்கவும் தலைப்படுவார், தலைக்குமேல் சத்தங்கேட்டால் "உச்சியில் சொன்னால் அச்சமில்லை" என்று மனந்தேறுபவர் சிலர். வலதுசொன்னால் ஜெயமென்று சந்தோஷிப்பார் சிலர். இடதுசொல்லில் நலமில்லையென்று விசனத்தோடு எழுந்து வந்தோர் யாவருக்கும் நான்கொடுக்கும் கைத்தாளையும் வாங்காது போவார் சிலர்.

**ஆயத்தப்படும் நாலு குடும்பங்கள்.**

நங்கவள்ளி சேரியில் ஏறக்குறைய 250 வீடுகள் உண்டு. இதில் வசிக்கும் பஞ்சமர்களில் இரண்டு குடும்பத்தார் ரோமான் கத்தோலிக்கர்களாய் இருக்கிறார்கள். ரோமான் குருக்கள் அருகில் இல்லாமையால் இவர்கள் அசட்டையாய் விடப்பட்டார்கள். ஆனால் நான் இவர்களைச் சேர்த்துக்கொண்டு சுவிசேஷத்தின் தெளிந்த நீரால் தாகந்தீர்த்துவருகிறேன். இக்குடும்பத்தில் சிலபெண்பிள்ளைகள் உண்டு. இவர்களுக்கு உடுக்க உடுப்பில்லாதிருப்பது இவர்களுடைய பெருங்குறைவு. அந்த சகோதரியால்தான் இப்பிள்ளைகள். இதில் அபிற

ப்பின் சந்தோஷத்தை அனுபவிக்க உதவிசெய்வார்களா? இவ்விரு குடும்பத்தோடு இரண்டு அஞ்ஞானக் குடும்பமும் படிக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் அன்பைருசித்து அவரையே அண்டிக்கொள்ள அருள் நாதர் கிருபை புரிவாராக.

நங்கவள்ளி,
16-12-14.

D. R. தெய்வாசீர்வாதம்.



Printed at the "T. A. C." Press, Salem.

OFFICE OF THE REGISTRAR ... 29 NOV 1915 MADRAS

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

## The Tamil Organ of the National Missionary Society of India.

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று.

Vol. VII. ஜனவரி, 1915. No. 1

1 பூமியில் தேவ வார்த்தையும்
எல்லா இடமுமாக,
மேசியாவின் சுவிசேஷமும்
பரவுகிறதற்காக
கர்த்தா இரங்கி, எங்களை
அன்பாய் ஆசீர்வதித்து
வருந்தாமல் உலகைத்
திருத்தித் தீவிரித்து
துணையும் அளிப்பாராக.

2 கர்த்தாவே, உம்மைச் சகல
ஜனங்களும் புகழ,
கர்த்தாவே, உமக்கேற்கிற
பலனைப் பூமி தர
திரியேக கர்த்தர் எங்களை
ஆசீர்வதிப்பாராக
எல்லார் திரளும் அவரை
தெய்வீக பயமாக
பணிவதாக, ஆமென்.

Martin Luther.

### "வருந்தினால் வாராததொன்றுமில்லை"

திருநெல்வேலி ஜில்லாவின் கடலோரத்திலே ஒரு பெரும் கோயிலிருக்கிறது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலுமிருந்து இலட்சக்கணக்கான ஜனங்கள் அதைத் தரிசிக்க வருகிறார்கள். இக்கோயில் முழுவதும் கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ளது. அது கட்டப்பட்டிருக்கும் ஸ்தலத்திலோ கருங்கல்லென்ற நாமமே கிடையாது. சுற்றிலும் மணற்காடே. இக்கருங்கற்கள் எப்படி அங்கு வந்தனவென்பதைப்பற்றி ஒரு கதையுண்டு.—அக்காலத்தில் இருந்த இந்துக்கள் பல்லாயிரவர் பலமைல் தூரம் சங்கிலிக்கோர்வை போல நின்றுகொண்டு கோயிலுக்கு வேண்டிய கற்கள் முழுவதையும் கைமாறிக் கைமாறி வாங்க, அக்கோயில் கட்டப்பட்டு அதன் உயரமான கோபுரம் பலகாத தூரம் தெரியும்படி எழும்பிற்றாம். இத்திருஷ்டாந்தத்தினால் 'வருந்தினால் வாராததொன்றில்லை' என்னும் சத்தியம் வல்லமையோடு மனதில் படுகிறது.

இக்காலத்திலுள்ள கிறிஸ்தவர்களாகிய நாமும் சுவிசேஷ செய்தியை அவ்வாறு முயற்சியோடு பரப்பப்பண்ணக்கூடும். நம்மாலியன்றதைச் செய்தால் திருச்சபையாகிய தெய்வாலயமும் இத்தேசத்தில் உன்னத சிகரங்களோடு எழும்புமென்பதற்கைய

## தீபிகை நேயருக்கு திவ்விய வாழ்த்து.

பூமியின்மேல் அக்கினியைப்போட வந்தேன்; அது இப்பொழுதே பற்றியெரியவேண்டுமென்று விரும்புகிறேன். லூக். 12-49

இவ்வாக்கியத்தின் கருத்தையே வாழ்த்தாகுபாக்கி, எம் நண்பரை நோக்கி, "இரட்சகர் போடவந்த அக்கினி உங்களிலும் உங்கள் குடும்பங்களிலும் நமது தேசத்தின் கண்ணும் பற்றி எரிவதாக" என்கிறேன். ஒருவேளை இது விபரீத வாழ்த்துப்போல் தோன்றும், வாழ்த்துக்கு மாறாகச் சாபமெனவும் சிலர் எண்ணக் கூடும். ஆயினும் என் அருமைச் சகோதரர்களே! இவ்வசனத்தின் கருத்தையறிந்தீர்களாகில் அப்படி எண்ணீர்கள்.

இரக்ஷாபெருமான் இப்புவிக்கு போடவந்த அக்கினி தற்காலம் யுத்தகளத்தில் துப்பாக்கி, பீரங்கியினின்று விழும் அக்கினியுமல்ல, வெடிகுண்டுகள் சிதறும் அக்கினியுமல்ல. சமாதானப் பிரபுவாகிய எம்பெருமான் போடவந்த அக்கினி சுவிசேஷ செய்தியாகிய அக்கினியே.

சுவிசேஷ செய்தியாகிய அக்கினி ஒவ்வொரு ஆத்துமாவிலும் குடும்பத்திலும், கிராமத்திலும், பட்டணத்திலும், தேசத்திலும் உலகமெங்குமே பிரபலமாகவேண்டுமென்பதே எம் நவவருட வாழ்த்து.

இதுவே இரக்ஷாபெருமானின் திருவுள வாஞ்சை. அவர் இப்பூவுலகில் சஞ்சரித்த அப்போதே, தாம் மானிடர்க்குக் கொண்டுவந்த சுகித பலன்களின் சமாச்சாரம் எங்கும் பரவவேண்டுமென்றிருந்தார். இதற்காகவே ஆண்டவர் ஊரூராய்க் கிராமம் கிராமமாய்க் களைப்போடும் தவிப்போடும் திரிந்தார். முந்த எழுபது பேரையும் அப்பால் பன்னிருவரையும் இத்திருப்பணிக்கே நியமித்தனுப்பினர்.

இரட்சண்யமூர்த்தியைப்பற்றிய செய்தி எவ்விதத்தில் அக்கினிக்கு ஒப்பு என்றால்:—

1. அக்கினி மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாத அவசியம். மனிதனுக்குக் காற்றும் நீரும் உணவும் போலவே அக்கினியும் இல்லாமல் தீராத சங்கதி. அது சமைக்கும்தேவை; வெளிச்சத்துக்குந்தேவை, காய்வதற்குந்தேவை, மற்றதற்குந்தேவை. அவ்வாறே கிறிஸ்துவும் சகல மானிடருக்கும் இல்லாமல் தீராத இரக்ஷகர். மானிடரிலுள்ள இரக்ஷகரின்றிப் பிழைப்பது [illegible] வாழ்க்கையன்றி, உறைந்திருக்கும் [illegible]



கவாழ்க்கையேயன்றி வேறல்ல. கிறிஸ்துபெருமானை யடைந்திராத உள்ளம் நெருப்பில்லாமல் குளிர்ந்திருக்கும் அடுப்பே.

2. அக்கினி வல்லபமுள்ள பூதியமாயிருப்பதுபோல் இரக்ஷாபெருமானைப்பற்றிய விசேஷமும் வல்லமையுள்ளதே. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக வெட்கேன்; அது விசுவாசிக்கிற எவனையும் இரக்ஷிக்கிற தெய்வபெலனென்று பவுல் அப்போஸ்தலர் சொன்னது இதுபற்றியே.

3. அக்கினிக்குச் சுத்திகரிக்கும் தன்மையுண்டு. சுவிசேஷ செய்தியடங்கிய தெய்வவசனமும் அத் தன்மையதுதான். அது தங்குமிடத்தில் சகல அசுத்தமும் களிம்பும் அகன்றுபோம். உம்முடைய சத்தியத்திலே இவர்களைப்பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியமென்று ஆண்டவர் தமது சீஷருக்காக வேண்டிக் கொண்டது வசனத்திற்கிருக்கும் தெய்வீக வல்லமையைக் கருதித் தான். அது பாவமன்னிப்பை அறிவிக்கும் கருவி; பரிசுத்த நடக்கைக்கு ஏவும்பெலன்.

4. அக்கினி வெளிச்சம் தருவது. அதினால் இருட்டில் வழிதெரியும். நமது பாதையிலுள்ள பள்ளம், மேடு, அசுத்தம் தடையிவற்றை வெளிச்சத்தால் காணலாம். வெளிச்சம் அறிவுக்கும் பரிசுத்தத்துக்கும் சந்தோஷத்துக்கும் குறிப்பு. தெய்வவசனம் தெரிவிக்கும் கிறிஸ்து பகவானது கிருபையும் இத்தன்மையானதே.

5. அக்கினி தன்னைக்கிட்டுவனயாவையும் அல்லது தான் தொடும்யாவையும் தன்மயமாக்குமாறுபோல கிறிஸ்துவிலுள்ள ஜீவனும் தன்னையுடையோரைக் கிறிஸ்து சாயலாக்கி மறுரூபப்படுத்திவிடும்.

6. அக்கினி மறைக்கத்தக்க பொருளல்ல, அது பரம்பியல்புள்ளது. இவ்வாறே இரக்ஷணிய சுவிசேஷமும் அதனையுடையோர் ஜீவனும் ஜீவியமும் தன்னைக்காட்டும்; மற்றவர்களிடத்திலும் பரவும். ஒரு நெருப்புப்பொறி ஒரு காட்டைக்கொளுத்திவிடுமல்லவா. அதுபோல மெய்விசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவன் ஒரு குடும்பத்தையும், ஒரு குடும்பம் ஒரு கிராமத்தையும், ஒரு கிராமம் பலரையும் இரக்ஷகரிடம் கொண்டுவரப்போதும்.

7. கடைசியாக அக்கினி சேதமுண்டுபண்ணுவதென்பதையும் மறக்கொணாது. சுவிசேஷமாகிய நெருப்பு யாருக்கு ஜீவனைக்கவில்லையோ, அவர்களுக்கு அது மரணமாகும். நெருப்போடு விளையாடவொண்ணாது. அது சேதப்படுத்தும். சுவிசேஷத்தை உபயோகிக்கிற ஒருவன் அதினால் குணப்பட்டுக் கிறிஸ்துவைப்பற்றிய அறிவைப்

பரம்பப் பண்ணும் கருவியாயிராவிட்டால் அவன் அதினால் கடினப்பட்டுக் கிறிஸ்துவின் நாமம் புறஜாதிகளுக்குள் தூஷணிக்கப்படுவதற்குக் காரணனாவான் என்பது நிச்சயம். என்னோடிராதவன் எனக்கு விரோதமாயிருக்கிறான் என்று இரக்ஷகர் சொல்லுகிறார்.

ஆதலால், அன்பார்ந்தநேயரே, இரக்ஷகர் பூமியின்மேல்போட வந்த அக்கினி உங்களிலும் உங்களைக்கொண்டும் பற்றியெரியும்பொருட்டு உமைத்தடுத்தாண்ட உள்ளன்புமிக்க உன்னதபிதா அருள்புரிவாராக.

M. P. A.

## பத்திராதிபர் குறிப்புகள்.

இவ்வருஷத்தைத் துவக்கும் எம் நண்பரே, கர்த்தருடைய வசனம் இவ்வருஷம் ஓடிப்பரம்ப நாம் யாவரும் ஜெபிப்போமாக. தெய்வ ஊழிய அபிவிர்த்திக்கு நம்மால் எவ்வித இடையூறுமுண்டாகின்றதென்று நம்மைப் பரிசோதிப்பது தகுதி. நம்மைத்தாழ்த்தி, உத்தம மனஸ்தாபத்துடன், அவரருளையே தேடுவோமாக.

யுத்தம் இன்னம் மும்முரமாய்த்தானிருக்கிறது. கிறிஸ்தவ நாடுகளுக்குண்டாயிருக்கும் சேதம் சொல்லிமுடியாதது. யுத்தமுடிவுக்குப்பின் இதன் பயங்கரம் வெகுவாய் வெளிப்படும். யுத்தம் எவ்வளவு பரம்புகிறதோ அவ்வளவும் சமாதானப் பிரபுவின் வேலை தடைப்படும். இயேசு ராஜாவை பணிந்திருக்கும் சகலரும் ஒன்றுகூடிப் போர்செய்யவேண்டிய எதிரிவேறு. அப்போரின் சாதனங்களும் வேறு. ஆதலால் இக்கொடிய யுத்தம் சீக்கிரம் முடிவுபெற ஜெபிப்பது நம்மெல்லாருக்கும் ஓர் முக்கிய கடமை என்பதை மறவாதிருப்போமாக.

நம் சங்கத்திற்கிருந்த பணக்கஷ்டம் வெகுவாய் நீங்க நம் நாட்டுக்கிறிஸ்தவ சபைகளனேகம் எடுத்த பிரயாசைகள் யாவும் நமது நன்றியறிதலுக்குரியது. சென்ற டிசம்பர்மீ 6ம் தேதியாகிய ஜெபநாளன்று அநேக சபைகளில் நம் சங்க வேலையைப்பற்றிப் பேசப்பட்டு, நம் சங்கத்திற்காக ஒருநாள் உதவி சேர்க்கப்பட்டது. கிறிஸ்து ராச்சிய பரம்புதலுக்கென்று கரிசனமெடுத்து துணைபுரிந்த யாவரையும் நம் ஆண்டவர் திரளாய் ஆசீர்வதிப்பார்.

நமது சங்கத்தாரால் ஓகாராவில் ஸ்தாபிக்கப்பட்டு, டாக்டர் தினநாத்தால் நடத்தப்பட்டுவந்த வைத்திய ஊழியத்துக்கு டாக்டர் ஹரிராம் என்பவரை நியமித்துள்ளார். இவர் பதினைந்து வருஷங்களுக்குமுன் இயேசு நாசரேத்தானை அவமதித்து எதிர்த்துவரும் ஆரிய சமாஜ் என்னும் கட்சியாரைச் சேர்ந்தவராயிருந்தார். இவர்



பின் நம்மிரக்ஷகரின் பேரன்பினால் மனந்திரும்பினவர். இவர் ஆக்ராவில் வைத்தியமுறை கற்றுப் பலவிடங்களிலும் வேலைசெய்துவந்தார். கடைசியாக லாலாமூஸா என்னுமூரில் தன் சொந்தமாய் ஓர் மருந்துச்சாலை வைத்திருக்கும்போதும் இதர மதஸ்தரிடத்தில் சுவிசேஷவேலை நடத்திவந்தார். இப்போதிவருக்கு நம் சங்கத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் வேலை மிகவும் உத்தரவாதமானது. ஓகாராவில் இவர் மகம்மதியரிடத்திலும் கூட்டமாய் நம் சபையைச்சேர விரும்பும் கீழ்ச்சாதியைச் சேர்ந்த இந்துக்களிடத்திலும் வேலைசெய்யவேண்டியிருக்கிறது. அங்கங்கு கூடப்படும் சபைகள் சம்பளம்பெறும் ஊழியரின் உதவியின்றித் தாங்களே தங்களைப்பரிபாலித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதிக கவலையாய் நடத்தப்படுவரும் இவ்வேலையைக்கர்த்தர் ஆசீர்வதித்து மிக்கப்பயனுடனும், ஞானமாகவும் நடத்திவரத்தம் ஊழியருக்கருள் புரியவேண்டுமென்று மன்றாடிவர எம் நேயர்யாவரையும் கோருகிறோம்.

## நமது சங்க ஊழியம்.

### நுக்கர்.

இவ்விடத்திலுள்ள வைத்தியசாலை இப்பகுதியோருக்குச் சிறந்ததோர் ஆசீர்வாதமாயிருக்கிறது. இது ஒருமாத விடுமுறைக்காக மூடியிருந்து சென்ற ஜூலைமீ 15-உ திறக்கப்பட்டது. தற்சமயம் இதில் சீமாட்டியான ஓர் இந்து விதவை சிகிச்சை செய்யப்பெற்றுவருகிறார்கள். அவர்கள் நமது வைத்தியசாலைக்காக இலவசமாய்க் கொஞ்சம் நிலம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் என்ன வாக்களித்தபோதிலும் சரியாய் நிறைவேற்றுவார்கள் என்று ஜனங்கள் அவர்களைப்பற்றி சொல்லுகிறார்கள். எல்லாம் வல்ல கர்த்தர் அந்த அம்மாள் வெளிச்சத்தைக்கண்டு சந்தோஷப்படும்படிக்கும் தன் வாக்கை காப்பாற்றும் படிக்கும் அருள் புரிவாராக. அவர்கள் படிப்படியாய் சுகப்பட்டு வருகிறார்கள்.

* * * *

சென்ற ஜூலைமீ 17-உயன்று சுதரிசனம் என்பவர் சாரசவாவுக்கு வந்தார். நானும் அவருமாக அன்றுமாலை இரண்டு மைல் தூரத்திலுள்ள இப்பீபி என்னும் கிராமத்துக்குச் சென்றோம். இதில் கிராமாதிகாரி லாக்கா என்னும் கிறிஸ்தவன். இவன் எங்களை மிகவும் பட்சமாய் உபசரித்தான். கொஞ்ச நேரத்திற்செல்லாம் அக்கிராமத்திலுள்ள கிறிஸ்தவர்கள் கூடி வந்தார்கள். சந்தோஷமாய்ப் பிரசங்கித்தோம். இந்தக் கிராமத்தில் மூன்று பேர்ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்பட்டு வருகிறார்கள்.

அடுத்த நாள் சுதரிசனம், கேவல் இவர்களுடன் நாலும் சாமல்பூருக்குப் போய்ச் சுற்றி வந்தோம். ஷாஜிஹான்பூரில் ஒரு மணி நேரம் கழித்தோம். மத விசாரணையில் சிரத்தைகொண்டு அநேக சத்திய விஷயங்களையறிய ஆவல் கொள்ளும் பலர் இவ்விடத்திலுள்ளார். நாங்கள் போன சமயத்தில் அவர்கள் வெளியே அலுவலாய்ச் சென்றிருந்ததால் அவர்களைக் காண முடியவில்லை. இவ்விடத்தில் ஒரு கிழவன் இருக்கிறான். அவன் ஜீவியம் கசப்புள்ளதாய் வருத்தம் நிறைந்ததாம். சிலகாலத்திற்குள் அவன் பிள்ளைகளிருவர் ஒருவன் பின் மற்றொருவனாய் மாண்டனர். இவ்வாறு பல கஷ்ட சம்பவங்கள் அவனை நொறுக்கின. "பட்டகாலிலேபடும் கெட்டகுடியே கெடும்" என்பது மெய்யேயன்றோ இவ்வளவனுபவித்த அவன் மனம் கடினப்பட்டிருக்கிறது. நான் அவனுக்கு ஆண்டவருடைய மகிமையின் பிரதாபத்தைப்பற்றி உருக்கமாய் விரித்துரைத்து, அவர் யாவும் நமது நன்மைக்கே செய்வார் என்றும் ஆகவே மனம் திரும்பி கர்த்தரையண்டி மறுமையில் நித்யானந்த பாக்கியத்தையடையும் வகையைத்தேடவேண்டியது என்றுசொன்னேன். மிகவும் கடினமனத்தனான அக்கிழவன் பலவாறுகடவுளைத் தூஷித்து, கடவுள் என்பவர் ஒருவர் இருப்பது மெய்யானால் என்னை இவ்வளவு நிர்ப்பந்தத்திற்குட்படுத்தியிருக்கமாட்டார். கடவுளேயில்லையென்று வாதித்தான். அந்தோ! பரிதாபம், இவன் நிலைமை விசனிக்கத்தக்கதே. நாங்கள் அவனுக்காக ஜெபித்தோம்; ஜெபிக்கிறோம் இன்னும் விடாது ஜெபிப்போம்.

பிறகு உசான்பூருக்குப்போனோம். அவ்விடத்திலுள்ள ஜமீன்தார் ஒருவர் எங்களுக்குக்காட்டிய அன்பும் உபசாரணையும் விசேஷமானது. அவ்விடத்தில் பல்குல ஜனங்களுக்குப் பிரசங்கித்தோம். பிறகு ஓர் மாத்திரையிலுட்கார்ந்து உணவருந்தி வழியில் குட்பூரில் நீர்பருகி எங்கும் தங்காமல் சாமல்பூருக்குப் போனோம். இவ்விடத்தில் ஓர் கிறிஸ்தவ சகோதரனிருக்கிறான். அவன் வீட்டிற்குப்போய்க் கூடத்தில் இளைப்பாறினோம். மோஹன் என்ற அவன், கிறிஸ்தவனான காரணம் பற்றி, தனக்கு வரும் இடையூறுகளை விவரித்தான். அவன் விசுவாசத்தில் தளர்வுற்றவனாய்க் காணப்பட்டான். நான் அவனை நோக்கி கர்த்தருக்காக இடையூறுகளைச் சகிப்பது நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த சிலாக்கியமென்றும் அதற்காக நன்றி செலுத்துதல் கடமையென்றும் சொன்னேன். பிறகு அவன் தைரியங்கொண்டான். சில கீதங்கள் பாடினோம். ஒழுங்காய்ப் பிரசங்கிக்கும்படிப் போதித்தேன். அதன் அவசியத்தையும் நற்பலன்களையும் சொல்லக்கேட்ட அவன் அப்படியே செய்வதாக வாக்களித்தான்.



பிறகு காவதாவுக்குப் போனோம். நமது வைத்தியசாலையில் சுகமடைந்து போனவனும் எங்கள் வீட்டில் இரண்டு நாள் பராமரிக்கப்பட்டு வந்தவனுமான ஒருவன் விசேஷ உபசாரணைகள் செய்தான். இவ்வூரில் மோஹன் மாந்தாரென்பவனுடைய முழுக் குடும்பமும் ஞானஸ்நானத்துக்கென சித்தப்படுகிறது. மாந்தார் வீட்டில் தங்கி, இரவு 1-மணிவரையில் ஞான சங்கீதங்களைப் பாடுவதிலும் பிரசங்கிப்பதிலும் செலவிட்டோம். பேரின்ப வாழ்வின் சிறப்பைப் பற்றியும் வற்புறுத்தி பேசினோம். பிறகு எங்கள் விருப்பத்தின்படி பலர் பல கேள்விகள் கேட்டார்கள். சிலர் அசுத்த ஆவிகள் கிறிஸ்தவர்களை வசப்படுத்துகிறதென்றும், சிலர் அவர்கள் தாக்கினையாலே மறுபிறப்படைகிறார்கள் என்றும், மற்றும்சிலர் அவர்கள் அவதாரங்கள் அல்லவென்றும் சொன்னார்கள். இதற்குத் தக்க பதிலளித்தோம்.

இவர்களில் ஒருவன் 'கிறிஸ்துவின் மதம் சிறந்தது. நாமெல்லோரும் ஏன் கிறிஸ்தவர்களாகக் கூடாது?' என்றான். மார்க்க விஷயத்தில் ஊக்கத்தைக் காட்டினரும் இவர்களுக்கு மாந்தார் தான் தலைவன். அவன் பிரயோசனமுள்ளவனாகும்படி எழுதப்படிக்கக் கற்றுவருகிறான். நமது ஊக்கமுள்ள ஜெபமே மிகவும் தேவையானது. இங்கிருந்து லார்லாவுக்குத் திரும்பினோம்.

J. W. கிபில்வ.

## காங்கோ.

திருப்பணியைச்செய்ய ஆண்டவர் எனக்குக் கொடுத்த இந்த இடம் நூக்காரைச் சேர்ந்த மற்ற கிராமங்களைவிடப் பெரியது. வாரத்தில் ஐந்து நாள் சுற்றுக் கிராமங்களிலும், பலகிராம ஜனங்களும் தவறாமல் வந்து கூடும் சந்தையன்று அவ்விடத்திலும் சுவிசேஷ ஊழியம் செய்து வருகிறேன். அந்த சந்தைதினமே சுவிசேஷ ஊழியத்துக்குத் தகுந்தநாள். இத்தினத்தில் ஜனங்களிடத்தில் தனித்தனியேயும் பேசுவோம். ஞாயிற்றுக் கிழமையாகிய ஓய்வுநாளன்று பகலில் காலையில் ஓர் ஓய்வுநாள் பள்ளிக்கூடம், வீட்டில் ஒன்றும் பகலில் இரண்டு ஜெபக் கூட்டமுமாக இரண்டு ஜெபக்கூட்டங்களும் நடத்துவது வழக்கம். சிலர் பரிசுத்த இராப்போஜனத்தில் பங்கடைய ஆயத்தப்பட்டு வருகிறார்கள். ஊரில் தலைவரும் முதன்மையானவர்கள் இராப்போஜனம் எடுக்கவேண்டுமென்பதே என் ஆவல் அதற்குத் தக்க பிரயாசை யெடுத்து வரு

றேன். ஏனெனில் அவர்களை பஞ்சாயத்தாராகவாவது மற்றும் கிராமத்துக்குப் போகமாகும் சில உத்தரவாதஸ்தானம் வகிப்பதற்காவது தகுந்தவர்கள். நான் இந்த இடத்துக்குவந்து வேலை ஒப்புக்கொண்ட காலத்தில் 192 கிறிஸ்தவர்களிருந்தனர். இப்போது 306 கிறிஸ்தவர்களுள்ளார். இவ்விடம் அநேக கிராமங்களில் கல்வி கற்பித்து வருகிறோம். இதைப் படிக்கும் நண்பர்கள் எனக்காகவும், என் குடும்பத்துக்காகவும் வேலைக்காகவும் விசேஷமாகக் கிறிஸ்தவர் அடங்கிய பஞ்சாயத்து மூன்று ஏற்படுத்தப்படவும் ஜெபிப்பார்களாக.

பஹதூர்ஸிங்.

அம்பாத்தா.

நான் இங்கே எட்டு வருஷமாக வேலைசெய்து வருகிறேன். இங்கிருக்கும் கிறிஸ்தவர்கள் ஏழைகள். என் உத்தரவாதம் பெரியது. சில தினத்திற்கு முன் ஒருவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தேன். அவன் கல்லாராய்ச்சி செய்து கிறிஸ்துமத உண்மையை யறிந்து தெளிந்தவன். மூன்று கிறிஸ்தவர்களை பரிசுத்த நற்கருணையில் சேர்த்துக்கொண்டேன். சென்ற ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் என் மக்கள் விடுமுறை நாட்களைக் கழிக்க வீட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்கள் வியவசாயத்திலும் உதவிபுரிந்தனர். அவ்விரண்டு மாதமும் என் ஜோடி சமீபமாயிருக்கும் கிராமங்களுக்கு வந்து பாடியதிலும் ஸ்திரீகளின் வகுப்புகள் நடத்துவதிலும் பேருதவியாயிருந்தனர்.

அபார மழையாலும் மலைச்சாரத்தால் பிடிக்கப்பட்டிருந்ததாலும் நான் சில கிராமங்களுக்குப் போக முடியவில்லை. இல்லாது, காங்கேர இவ்விரண்டு ஊர் உண்மையுள்ளவர் ஞானஸ்நானத்துக்குச் சித்தமாயிருக்கின்றனர். இதுவும் தடையாயிருந்தது. ஸார்ஸாவலியில் பதினொன்று பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் இன்னம் அநேகருக்கு ஞானஸ்நானங் கொடுக்கவேண்டியிருந்தது. ஆனால் எங்கள் மிஷனெரியாகிய மிஸ்டர் (J. W. Peoples) எனும் பாதிரியவர்களின் அகமதாபாத்தில் நடக்கும் கமிட்டி கூட்டத்துக்குப் போக வேண்டியிருந்தது.

அடிக்கடி எங்கள் ஊழியத்துக்காகவும் ஊழியக்காரர்களுக்காகவும் ஊக்கமாய் ஜெபிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜெய்ஸிங்.

Printed at the "T. A. C." Press, Salem.

721

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 NOV 1915
MADRAS.

இந்திய சுயதேச மிஷனெரி சங்கப் பத்திரிகை.

The Tamil Organ of the
National Missionary Society of India.

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று.

Vol. VII. பிப்ரவரி. 1915. No. 2

ஓ யேசு சுவாமியே! நீர் சொல்லும், நானே கவனிக்கிறேன்,
நீர் உரைக்கக் கேட்டுக்கொள்ளும் வசனத்தை அடியேன்
நல்இருதயத்திலே ஏற்றுக்கொள்ளும்படி, உமக்கே
நான் பிழைக்கிறதற்காக பெலனை அளிப்பீராக!
உம தப்போசத்தாலே என்றும் மகிமைப்படுவேன்,
அதைத்தான் வாஞ்சையாலே நெஞ்சில் வைத்துக்காக்கிறேன்.
உம்மை அங்கே நேரிலே சேர்க்குமட்டும், ஏசுவே,
அதை எனிமைக்கும் அனுதாப என்னிடத்தில் காப்பீராக.

---

## பத்திராதிபர் குறிப்புகள்.

---

நம் சங்கத்தின் காரியதரிசியாக கமிட்டியார் ஜனவரி மீ கூடி இவ்வருஷத்திய வேலைசம்பந்தமான செலவுகளைப்பற்றிப் பேசினார்கள். இம்மாதக்கடைசியில் கூடும் தமிழ்நாட்டுக் கமிட்டியார் தமிழ்நாட்டிலிருந்து நம் சங்கம் எதிர்பார்க்கும் பொருள் சேர்க்கையைப் பற்றி பேசுவார்கள். அதன் விவரம் மார்ச்சு மீ பத்திரிகையில் வெளியாகும்.

நக்கார் என்னும் ஸ்தலத்திற்கு சாடர்ஜி கன்னாய் ஒரு புதிய மிஷனெரி நியமிக்கப்பட்டுள்ளார். இவரும், இவர் தகப்பனாரும் இந்துமதத்தைவிட்டுக் கிறிஸ்துமதத்தைச் சார்ந்தவர்கள். இவர் இவ்வருஷம் பாண்டிச்சேரியில் வேலைசெய்யும் ஜேம்ஸ் உவில்ஸன் என்னும் மிஷனெரியிடத்தில் தங்கியிருப்பார்.

மாண்ட்காமரி வேலையின் விசேஷம் என்னவென்றால் அவ்விடத்தில் கிறிஸ்துமதத்தைச் சேரும்சபை தன்னைத்தானே பராமரித்துக்கொள்ளும்வகை செய்யப்படுகிறது. அது படிக்கத்தெரிந்த தையற்காரன் அல்லது மற்றத் தொழிலாளி ஒருவனை மற்ற இடங்களிலிருந்து கொண்டுவந்து, கிறிஸ்தவ வேலைக்குப்புறக்கி ஒரு புதுச்சபை சேர்ந்திருக்கும் ஊரில் குடியேற்றிவைப்பது. அவ்வூருக்கு அவனே உபதேசியாயிருந்து, தன் கைத்தொழிலினால் தன்னைச்சம்ரக்ஷணை செய்துகொள்ளுவான். நம்சங்கம் உழைக்கும் மற்றவிடங்களிலும் இம்முறை வழக்கத்துக்கு வரவேண்டுமென்பது சங்கத்தின் விருப்பம். மேலும் உவில்லியம்ஸ் என்பவர் செய்யும் நம்நாட்டிற்குரிய சுவிசேஷவேலையின் போக்கும் இப்புதுமிஷனரி அரியலூரிலென்று நம்சங்கக் கமிட்டியார் தீர்மானம்செய்துள்ளார். இப்புது மிஷனரியை எம்நண்பர் தங்கள்ஜெபங்களில் நினைவு கூறக்கோருகிறோம்.

சென்றவருஷத்தில் நம் சங்கத்திற்கிருந்த விசேஷித்த கஷ்டங்களில் கர்த்தருடைய திவ்விய நடத்துதல் விளங்கினது. டிசம்பர்மீ 6-உ பலசபைகள் சேர்ந்து விசேஷித்த சேர்ப்பினால் ஒரு ஆயிரம் ரூபாய் கடன்தீர்ந்தது. ஆம்மாதம் நம்சங்கத்திற்கு வரவு 4125 ரூ. இன்னுமிருக்கும் கடனும் தீரும்படி நம்நேயர் உதவிபுரிவார்களென்று நம்புகிறோம். டிசம்பர்மீ 6-உ இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்த சபைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அஸ்ஸாம்நாட்டு அத்தியக்ஷர் வேலைக்காக விசேஷித்தகாணிக்கை அளித்திருந்தபடியால் மற்றச்சபைகளில் செய்தபடி அவைகள் நம்சங்கத்திற்கு விசேஷித்த உதவி அச்சமயம் செய்யமுடியவில்லை. அச்சபைகளிலிருந்தும், இன்னும் மற்றச்சகோதரரிடமிருந்தும் வரும் பொருள்சேர்ப்பினால் நம்பணக்கஷ்டம் முழுவதும் நீங்குமென்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம். இதன் பொருட்டுத்தான் நம் சங்கத்துக்கிருக்கும் Reserve Fund இலிருந்து ஒன்றும் எடுக்கத்தேவையில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. கர்த்தர் எவ்விதத்தாலும் நம்சங்கத்தை நாளன்று நம்நேயர் யாவரும் விசேஷித்தகாணிக்கை சேர்ப்பிக்கும்படி



ழக்கம் இவ்வருஷமும் எல்லாச்சபைகளிலும் நடந்தேறவேண்டுமென்பது எம் கோரிக்கை.

பலவிஷயமாய் இவ்வருஷம் சிலவைக்குறைக்கப் பிரயாசப்பட்டும், நம்சங்கஊழியத்தில் ஒன்றும் நிறுத்தப்பட்டு போகக்கூடாது என்று கமிட்டியார் தீர்மானித்தார்கள்.

இவ்வருஷத்தில் கர்த்தருடைய திவ்வியஅருள் நம்சங்க ஊழியத்தில் பூரணமாய்த் தோன்றவும் பலவிடங்களிலும் அவருடைய சபைபெருகவும் நாம்யாவரும் கருத்தாய் மன்றாட மறவோமாக. அப்படிக்கு எஜமான் இச்சுவிசேஷவேலையைப் பெருகப்பண்ணுவாராக.

## திருச்சபை சரித்திர புத்தகம்.

எங்குடும்பம் எவ்வழியில் கிறிஸ்துவுக்கடியார் கூட்டத்தில் புகுந்ததென்ற ஆரம்பகாலத்தில் கர்த்தருடைய ஆச்சரியமான நடத்துதலைத் தெளிவுறக்காண்கிறேன். அவ்வாறே கிறிஸ்துநாதர் பற்பல தேசங்களையும் பாஷைக்காரரையும் தமதடியாராக்கின வயணத்தைத் திருச்சபை சரித்திரவாயிலாய் வாசிப்போர் அதிசயத்தின்மேல் அதிசயத்தைக்கண்டு பிரமிக்க வேண்டியதாகும். பெந்தெகொஸ்தே நாள்முதல் திருச்சபையின் தலைவர் தமது திருப்பணிக்கென்று ஆங்காங்கு பிடித்த ஊழியரையும் அவர்கள் மேற்கொள்ளவேண்டியிருந்த பயங்கர தடைகளையும் வதற்கென்று அவர்கள் கையாடின எத்தனங்களையும் திருச்சபை சரித்திரம் திட்டமாய் விவரிக்கும். கர்த்தருடைய ராஜ்ய பிரபல்யத்தைத் தமது ஜீவிய இலக்காக வைத்துப் பல தேசங்களிலும் பயணம்பண்ணி பொறுபோகசாலியான கனம் மோட்பண்டிதர் நமது கிறிஸ்தவர்கள் யாவரும் திருச்சபைசரித்திரத்தை ஆதியோடந்தமாய்ப் படித்தறிவது அவசியம் என்று சமீபகாலத்தில் புத்திசொல்லியிருக்கிறார். இம்மட்டும் நமது இன்பத்தமிழ் பாஷையில் தோன்றியுள்ள திருச்சபை சரித்திரங்களெல்லாம் பலவகைக் குறைவுகளுடையன. நமது தமிழ்நாட்டில் கடந்த 24 வருஷகாலமாய் உழைத்துக்கடந்த 10 வருஷக்காலமாய் வேதசாஸ்திரப் பண்டி-

நாய்த் திருஷ்டியும் செய்துவந்திருக்கும் சங்: S. செபையப்பாவர்கள் அத்துறைவுகளைக் கண்ணுற்று, மனப்பூர்வமான ஆராய்ச்சிசெய்து, பொருட்பெருக்கும் பாஷைச்சிறப்பும் நம்தேசத்தநுபவமும் அமைந்துள்ள மகாவிபரமான திருச்சபை சரித்திரப் புத்தகமொன்றை வெளியிட்டிருக்கிறார். இதற்கொத்ததும் மிக்கதும் நமது பாஷையில் பிறிதொன்றுமில்லை எனத் துணிந்து கூறலாம். பணக்குறைவால் பெந்தெகொஸ்தேமுதல் சீர்திருத்தல் வரையுமுள்ள முதல்பாகம் மட்டுமே அச்சடிக்கக்கூடியதாய் முதலில் தோன்றியும் இப்போது இதின் இரண்டாம்பாகமும் பலநண்பருதவியால் முற்றுப்பெற்றுவிட்டது. பற்பல சந்தர்ப்பங்களில் இப்புத்தகத்தைப்பார்க்க விரும்புவோருக்குத் துணையாக ஒரு நேர்த்தியான பொருள் அட்டவணையும் கொடுத்திருக்கிறது.

நமது சபைகள் தேவகட்டளைக்கு அடங்கிச் சுயாதீனமும் சுயபரிபாலனமும் உடையனவாகவேண்டுமானால் ஆதிமுதல் தோன்றின பற்பல தேசத்துச்சபைகளின் படிப்படியான வளர்ச்சியையும் அவற்றை ஆண்டவர் உறுதிப்படுத்தின வழிவகைகளையும் கவனித்தல் நன்றாம். திருச்சபையின் நடுவில் பற்பல காலங்களிலே பூய்பின படிப்பாளிகளும் சாமானியரும் கிறிஸ்துவின் நாமமகிமைக்காகச் செய்த மகா ஆசீர்வாதமான வேலைகளைக் கவனிப்போர் இப்பேர்ப்பட்ட வேலைக்குத் தம்மையும் ஒப்புக்கொடுக்க ஏவுதலடைவார். நமது சுவிசேஷகரும் சபையாரும் தம்முடன் வாதம்செய்பவரும் சித்தாந்திகட்கும் வேதாந்திகட்கும் தக்கமறுமொழி கூறும்பொருட்டுத் திருச்சபைச் சரித்திரத்தின்கண் விளங்கும் பூர்வதேவதாசரின் நடபடிகள் சிறந்த முன்மாதிரியாகும். கிறிஸ்தவ சகோதரர் யாவரும் தரங்கம்பாடி மிஷன் அச்சுக்கூடத்தில் வெளியாயிருக்கும் இப்புத்தகத்தை வாங்கிவாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

முதல்பாகம் காலிக்கோ கட்டடம் 470 பக்கங்களுள்ளது ரூ. 1-6-0.
அரைத்தோல் கட்டடம் ரூ. 1-8-0.

சா. றி. ஞா.



## கிறிஸ்துவை அறிவிப்போருக்கு ஓர் எச்சரிப்பு.

நம் காலம் சுதேசியத்தை முக்கியப்படுத்துங்காலம். இந்திய கிறிஸ்தவர்களில் பலர் வைதீக சாரியங்களிலும் சுதேசியத்தை முக்கியப்படுத்தி கிறிஸ்து உபதேசத்தை இந்துக்களுக்குப் பிரியமாக்கும்பொருட்டு இனி அதைச் சுதேசப் போக்காக்க வேண்டுமென்று சொல்லக் கேட்கிறோம். இதற்கு நாம் தடைசொல்லோம். பவுல் அப்போஸ்தலன் யூதருக்கு யூதனைப் போலவும், கிரேக்கருக்குக் கிரேக்கனைப்போலவும் ஆனார். ஆயினும் அப்படிச் செய்யும்போது நாம் சிலுவையின் வசனம் ஒழியாவண்ணம் பார்க்கவேண்டும் (கலா. 5, 11). கிறிஸ்துவின் உபதேசத்தை சுதேச எண்ணங்களுக்கிசைய மாற்றப்பார்த்தவர்களில் விசேஷித்தோர் இயேசுநாதருடைய காலத்திலிருந்த யூதர். இவர்களில் முக்கியமாய்ப் பரிசேயர் சுதேசாபிமானிகளாயிருந்து ஸ்வராச்சியத்தையும் விரும்பினார்கள். தங்களுடைய இந்த விருப்பப்படியே தீர்க்கதரிசனங்களுக்கும் உரை சொன்னார்கள். கடவுள் வாக்களித்த மேசியா வரும்போது தங்களுடைய இந்த வேத வியாக்கியானத்தின்படிச் செய்வாரென்று அவர்கள் நினைத்திருந்தார்கள். இயேசுநாதர் வந்தபோதோ கடவுளுக்கும் இராயனுக்கும் உரியவைகளைச் செலுத்தச் சொல்லி இகபர நீதியை அனுசரித்தார். சுதேச ராசாவை விரும்பும்படி பரிசேயரை ஏவின ஜாதியபிமானம் அவர்கள் மற்ற ஜாதிகளை அசட்டை பண்ணவும் அவர்களை ஏவிற்று. ஆகையால் அவர்களிற் பலர் கிறிஸ்தவர்களான பின்பு திருச்சபை முழுவதும் யூத ஜாதியாயிருக்க வேண்டுமென்றும், புறஜாதியார் கிறிஸ்தவர்களாக விரும்பினால், அவர்கள் முந்த முந்தச் சுன்னத்துப் பெற்று யூத ஜாதியைச்சேரவேண்டுமென்றும் சொன்னார்கள். அப்போஸ்தலரோ இதற்குச் சம்மதியாமல் கிறிஸ்துமார்க்கம் எல்லா ஜாதிகளுக்கும் பொது என்று தீர்த்தார்கள்.

அந்நிய ஜாதியாரை அசட்டை பண்ணினதுபோல், அப்பரிசேயர் தங்கள் ஜாதியிலுள்ள ஏழைகளையும் அசட்டை செய்தார்கள்

"நியாயப்பிரமாணத்தை அறியாத இந்தக் கும்பு சபிக்கப்பட்டது" என்றார்கள் (யோவா. 7, 49). இயேசு இந்த ஏழைகளோடு சகவாசம் பண்ணி உறவாடினது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

அவ்வாறே இத்தேச மேல் குலத்தாரும் கல்லாத ஏழை ஜனங்களுக்குள் நடத்தும் மிஷன் கிரியை வீண் என்று சொல்லி அவர்களைத் தேடிப்போவோர் பேரில் குறைகூறி மிஷனை நடத்துவோர் அவர்களுக்காகச் செலவழிக்கும் பணத்தை மேல்குலத்தாராகிய தங்களின் கல்விப் பயிற்சிக்கே செலவழிக்கவேண்டும் என்பார்கள். நாமோ இயேசுவைப்போல் செய்யவேண்டும். கல்லாதவர்களுக்கு மட்டுமல்ல, பாவிகளுக்கும் அவர் நேசர். யோக்கியர்களைமட்டும் கிறிஸ்துவினிடம் அழைக்க வேண்டுமென்று சுயநீதிக்காரர் சொன்னால், "நான் நீதிமான்களை அல்ல, பாவிகளை குணப்படுத்துதலுக்கு அழைக்க வந்தேன்" என்று அவர் அப்போது சொன்னவாறே இப்போதும் சொல்லுவார்.

இயேசு பாவிகளை ஏற்றுக்கொண்ட சிநேகத்தைப்போல் அவர் பாவிகளின் பொருட்டுப் பட்டபாடும் யூதர்களுக்கு இடறலாயிற்று. ஆகையால் "தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா" என்று பாடினோர் சில நாட்களுக்குப்பின் பரிசேயரால் தூண்டப்பட்டுச் "சிலுவையில் அறையும்" என்று கூப்பிட்டார்கள். அவர்களை மறுபடியும் வசப்படுத்த இயேசு பாடுகளின் வழியை விட்டுப் பின்வாங்கினதில்லை. பாடுபட்ட இரட்சகர் வேண்டாம் என்னும் பொருளையால் பல இந்துக்களும் இயேசுவைப் புறக்கணிக்கக் காண்கிறோம். துஷ்கருமபலன் தான் பாடு என்று நினைக்கிற இப்புறமதஸ்தரைப் பிரியப்படுத்த நாம் இயேசுவின் சிலுவையைப்பற்றி மவுனஞ்சாதிப்போமோ? ஒருபோதுமில்லை. கிறிஸ்தவ உபதேசத்தைச் சுதேசப் போக்காக்கும் பொருட்டு அதை இவ்வாறு மாற்றக்கூடாது.

இயேசுவின் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தில் பரிசேயரைப் போல் சதுசேயரும் விசேஷித்தோர். இத்தேசத்தில் சிலர் மேல் தேசத்தாரின் உறவை விரும்பாதிருந்தும் அவர்களது மரியாதை கல்வி என்பவற்றை அநுசரிப்பதுபோல், சதுசேயரும் சுதேசாபிமானிகளாயினும் பல விஷயங்களில் ரோமர் கிரேக்கரின் போக்கைப் பின்பற்றினார்கள். அந்த ஜாதியார் ஆத்துமத்தைச் சுத்தமாகவும் சரீரத்தையோ அசுத்தமாகவும் நினைத்து மாமிச உயிர்த்தெழுதலைப் பற்றிய உபதேசத்தை வெறுத்தார்கள். அவர்களைப்போல் இந்துக்களும் சரீரத்தை அசுத்தமெனத் தீர்த்து, அதை மரணத்துக்குப் பின் திரும்ப அடைதல் ஒரு தண்டனை என்றும், மோட்ச லோகத்



தில் யாருக்கும் சரீரமிராதென்றும் நினைப்பார்கள். கிறிஸ்தவ உபதேசத்தை அவர்களுக்கு பிரியமான போக்காக்க நாம் அவர்கள்முன் மாமிச உயிர்த்தெழுதலைப்பற்றிப் பேசாதிருக்கலாம் என்று சிலர் நினைப்பார்கள். இது கூடவே கூடாத காரியம். இயேசு மரித்த மூன்றாம் நாளில் சரீரத்தோடு எழுந்ததால் அல்லோ தாம் நமக்காகச் செலுத்தின கட்டைப் பிதா ஏற்றுக்கொண்டதைக் காண்பித்தார். நாம் இச்சத்தியத்தை மறைப்போமானால் பாவமன்னிப்பின் சுவிசேஷம் முத்திரையற்ற பத்திரம்போல் நிச்சயமற்றதே ஆகும். கிறிஸ்தவ உபதேசத்தைச் சுதேசப் போக்காக்கக் கருதுவோர் அதை இவ்வண்ணம் அந்நிய தத்துவ சாஸ்திரப் போக்காக்குவது பரிதாபத்திலும் பரிதாபம் என்கிறேன்.

ஏசேனர் என்ற மூன்றாம் யூதக் கட்சியார் சரீரத்தைப்பற்றிய அசட்டையை வேறே விதமாய்க் காண்பிக்கத் தங்கள் உடம்பை வாதித்துக் கடுந்தவசு செய்தார்கள். இவ்வாறு சுதேசப் போக்கை நாம் அநுசரிக்கிறதைப் புறமதஸ்தர் கண்டு தங்கள் ரிஷிகளின் மார்க்கத்திற்கு நாமும் வந்தோம் என்று நினைத்து நம்மைப் புகழ்வதைப் பார்க்கிலும் அவர்கள் நம்மோடு கூட இயேசுவைப் பின் செல்வதே நலம்.

யூதக் கட்சியார் யாவரும் மேசியாவின் மகிமையைப்பற்றின வைராக்கியத்தில் மட்டும் ஒருமைப்பட்டிருந்தார்கள். அப்போது வேறெவனாவது தான் அக்கட்சியைச் சேர்க்கவன் என்று சொன்னால் அவர்கள் அதைச் சகிக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட யூதர்களுக்கு இடறல் உண்டாகாதபடிக்கு இயேசுநாதர் தமது தெய்வகுமாரத்துவத்தை மறைத்ததாகக் காணோம். தாம் தெய்வகுமாரர் என்று அநேகம் சமயங்களிலும் கடைசியில் காய்பா முன்னிலையிலும் அறிக்கையிட்டார்.

நாமோ இந்துக்கள், இஸ்லாமியருக்கு இடறல் வராவண்ணம் தெய்வகுமாரத்துவத்தைப் பற்றிப் பேசாதிருக்க வேண்டுமென்று பலர் விரும்புகிறார்கள். கடவுள் தாமே மனுஷனாகி நமது பாவத்தைச் சுமந்தார் என்று மாத்திரம் நாம் சொல்லவேண்டுமென்பது இவர்களின் கருத்து. இவ்விதப் பிரசங்கம் தெய்வ ஆட்களின் வித்தியாசத்தை மறுத்த பழைய திருச்சபை ஏகவாதிகளின் தப்புபோதகம் போலாம். ஒரே தெய்வஆள் ஒன்றென்றும், அவர் பிதாவாக வெளிப்பட்டு உலகத்தைச் சிருஷ்டித்தாரென்றும், குமாரனாக வெளிப்பட்டுப் பாவிமோசனஞ் செய்தாரென்றும், பரிசுத்த ஆவியாக வெளிப்பட்டு ஆன்மாக்களைப் பரிசுத்தமாக்குகிறாரென்றும் ஏகவாதிகள்

சொன்ன அவ்வுபதேசமும், சிவன் பிரமாவாக உலகத்தைச் சிருஷ்டித்து, விஷ்ணுவாக அதைக்காப்பாற்றி, உருத்திரனாக அதை அழிக்கிறான் என்று சைவர் சொல்லும் உபதேசமும் ஒரே போதகமாம். கிறிஸ்தவ போதகத்தை இவ்வாறு சுதேசிகளுக்குப் பொருத்தமாக்கக் கூடாது. நாம் இச்சத்தியத்தைக் கிரேக்கர், ரோமர் என்பவர்களின் சரித்திரத்தாலும் விளக்கலாம்.

கிரேக்க ஞானத்தை வேதோபதேசத்தோடு கலந்தஞானிகளைப் போல் கிறிஸ்துவின் தெய்வ மகிமையைக் குறைக்க விரும்பும் மனுஷர்கள் இத்தேசத்துச் சைவர், பிரமஞான சபையார், இஸ்லாமியர் முதலியவர்களிலும் உள். இவர்களில் பலர் அவரைப் "பெரியோரில் பெரியோர்" என்று சொல்லுவார்கள். ஆகிலும் அவர் கடவுளுக்கு ஒத்தவர் என்பதை ஒப்புக்கொள்ளார்கள். தாங்களும் கிறிஸ்துவைப்போன்ற மகாத்துமாக்களாகக் கூடுமென்பது அவர்களின் எண்ணம். இவர்களை சந்தோஷப்படுத்தும்பொருட்டு நாம் கிறிஸ்துவுக்குரிய மகிமையைக் குறைத்து அவரை ஒரு தீர்க்கதரிசியைப்போல் பட்டிக் காண்பிப்போமா? கிறிஸ்து மார்க்கத்தை அந்நிய மார்க்கங்களுக்கேற்ப இவ்வாறு திருத்துகிற பல போதகர் ஜப்பான், இந்தியா முதலிய தேசங்களிலுண்டு. இவர்களுக்கு நாம் உடன்படாமல், "மனுஷரில் ஆரும் தன் சகோதரனை மீட்கவே மீட்கவும், அவனை மீட்கும் பொருளைக் கடவுளுக்குக் கொடுக்கவும், மாட்டான்" என்று சங்கீதக்காரன் சொல்வதை நினைப்போமாக. (சங்.49,9.10.)

மேற்சொல்லியவையால் கிறிஸ்தவ உபதேசத்தைச் சுதேசப் போக்காக்குவதைப்பற்றி நமக்கேற்படும் விதி விலக்கு.

நாம் சுதேச அபிப்பிராயத்தால் கிறிஸ்தவ உபதேசத்தைத் திருத்தாமல் கிறிஸ்தவ உபதேசத்தால் சுதேச அபிப்பிராயத்தைத் திருத்தவேண்டுமென்பதே.

S. Z.

Printed at the "T. A. C." Press, Salem



OFFICE OF THE REGISTRAR OF ... 29 NOV 1915
16201

இந்திய சுயதேச மிஷனெரி சங்கப் பத்திரிகை.

The Tamil Organ of the
National Missionary Society of India.

மாதத்திற்கு ஒருமுறை வெளியாகும். வருஷ சந்தா ...

Vol. VII. மார்ச், 1915 No. 3

## இந்திய நாஷனல் மிஷனெரி சங்கத்தைச் சேர்ந்த நாகர்கோவில் "Girls' Home" பிள்ளைச்சங்கத்து எட்டாம் வருஷ ரிப்போர்ட். 1914.

இதற்கு எட்டு வருஷங்களுக்கு முன்னே கனம் கெ. டி. பால் அவர்கள் பிரயாண நிமித்தமாக இங்கே வந்திருந்தபோது, இந்தப் பிள்ளைச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஆரம்பம் மிகச்சிறியதாயிருந்தபோதிலும், கர்த்தருடைய பெரிதான கிருபையால் வருஷத்துக்கு வருஷம் இது கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்துகொண்டே வருகிறது என்று நன்றியோடு அறிக்கையிடுகிறோம்.

இந்த வருஷத்தில் இதின் சம்பந்தமாய் நடத்தப்பட்ட கூட்டங்கள் 30. அவைகள் சகோதரம் முந்தின வருஷத்தைப்போலவே நடத்தப்பட்டன. ஒருவேளை இச்சங்கத்தின் சந்தோஷம் முழுவதையும் போட்டர்களான தங்கள் சகோதரிகளுக்கே கொடுத்துவிடவேண்டுமென்ற நோக்கமாகவோ, வெளியிலிருந்து அநேகமான பிள்ளைகள் கூட்டத்துக்கு வரவில்லை. வந்தவர்களோ மிகவும் உற்சாகமாய் வந்து இருந்த பொழுதெல்லாம் சுவிசேஷத்தின் தையல் தைத்துக்கொண்டு வேறெவற்றாலும் தங்கள் கைகளைத் தாங்கினார்கள்.

நாகர் மிஸ் அம்மாள் மார்களைப்பற்றி (Miss Duthie and Miss Harries) சொல்லவேண்டுமானால், இக்கூட்டம் இவ்வளவாய் அநுகூலத்தோடு நடைபெறுவதற்கு கர்த்தருக்குப் பின்பு அவர்களே காரணம் என்று தாராளமாய்ச் சொல்லலாம். அவர்கள் தங்களுடைய பொருட்களும் அவர்கள் சமயத்துக்குத் தகுந்த சொல்ல அருமையான ஆலோசனைகளும் நாங்கள் சோர்வடைந்த காலங்களில்

எங்கள் கைகளைத் திடப்படுத்தின முறையும் எங்கள் கனிவான நன்றிக்குரியவை.

நாஷனல் மிஷன் சந்தை போன நவம்பர் மீ 28-உ நடந்தேறியது. எங்கள் சபைச் சகோதரிகள் அதில் காண்பித்த தாற்பரியம் மறக்கத்தக்கதல்ல. சந்தைதொடங்கி அரைமணி நேரத்துக்குள்ளாக பலகாரப்பெட்டிகள் வெறுமையாயின. உடுப்புகளுக்குக் குத்துப்பிடியாகிவிட்டது. வந்தவர்களில் பலர் பிந்திப்போனோமே என்று அன்னம்பாறிக்கொண்டுபோனார்கள். எங்களுக்கோ காரியம் கைகூடினது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். "எங்களுக்கல்ல, கர்த்தாவே, எங்களுக்கல்ல, உமது கிருபையினிமித்தமும் உமது சத்தியத்தினிமித்தமும் உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்."

| | | |
|---|---|---|
| | ப. ச. கா. | ப. ச. கா. |
| வரவு மொத்தம் ... ... ... | | 1270-0-15. |
| சங்கத்துக்கு அனுப்பினது ரூ. 110 ... | 783-3-0 | |
| துணி முதலியன ... ... ... | 418-3-8 | 1202-2-8 |
| கையில் இருப்பு | | 67-2-7. |

## பத்திராதிபர் குறிப்புகள்.

நம்சங்கம் உழைக்கும் பலவிடங்களிலிருந்தும் வந்திருக்கும் பல சந்தோஷ விஷயங்களுக்காக நாம் யாவரும் சுவிசேஷ வேலையின் ஆண்டவருக்கு துதிசெலுத்துவோமாக. நம் ஊழியர்கள் வாரவாரத் தொகையிலதிகரிக்கிறார்கள். பயன்வாரதுபோல் தோன்றின இடங்களிலே நம்பிக்கைக்கேதுவான காரியங்கள் நடந்துவருகின்றன என்று சந்தோஷத்தோடு அறிவிக்கிறோம். நம்சங்கம் வளர வளர நம் உத்தரவாதமும் அதிகரிக்கிறது என்பதை உணர்ந்து, நாம் எப்போதும் நம்முடைய தலைவராகிய இயேசுவையே எல்லாவற்றிலும் எதிர்நோக்கியிருப்போமாக.

ரூக்கரில் கீழ்ஜாதியாரிடத்தில் செய்துவரும் வேலை பலத்துக் கொண்டுவருகிறது. நம்முடைய வைத்தியசாலைக்கு இப்போது ஜனங்கள் அதிகப்பிரியமாக வந்து மருந்து வாங்குவதுடன் தேவவசனத்தையும் ஆவலாய்க் கேட்கிறார்கள். இவ்விடத்தில் அறுப்பு மிகுதியாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்போது இங்கு உழைக்கும் மிஷனரி மிஸ்ஸ் எம்பரோஸோடு வேலைசெய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் சாட்டர்ஜி என்பவர் மாண்ட்காமரியிலிருந்து வரும்போது இவ்விடத்தில் இன்னம் அதிகபலன் விளையும் என்று நம்பலாமன்றோ.

மேலிந்தியாவில் நம் சங்கம் உழைத்துவரும் சர்ஹட் சர்ப்பலாயத்து இது வரையில் கிறிஸ்தவர்களின் சுவிசேஷ நடைபெறாத சர்வாதிலிருந்து ஒருவர் அழைப்பட்டிருக்கிறார். அவர் தன்னிடத்துக்குத் திரும்பிவந்தபோதால் தற்சமயம் ஆடக்கலிலிருக்கும் பாஸ்தோர் சர்ஹட் சப்பலாவின் சர்ப்பணமிகுதி உழைக்க ஒப்புக்கொண்டது அதிக சந்தோஷமான செய்தி. அவர் இப்பிரதேசத்துக்குள்ளாக மேலிந்தியா கமிட்டியார் சர்ஹட் சப்பலாவில் வேலைசெய்ய ஒருபுதிய மிஷனரியைக் கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகிறோம். இங்கு தொடங்கியிருக்கும் வேலை விஸ்திரமாக நாம் யாவரும் கருத்தாய்க் கடவுளை வேண்டிகொள்வோம்.

பஞ்சாப் மாகாணத்தில் சர்க்கார் ஒருபுதிய கால்வாய் வெட்டினதினால், இதுவரையில் வனாந்தரமாய்க் கிடந்த நிலம் இப்போது பயிர்செய்ய ஏற்றதாயிருக்கிறது. கோசிரா, மவுல்போர் என்னும் தாலுக்காக்களில் இந்த நிலத்தில் ஒரு பாகத்தைத் தாழ்ந்த ஜாதியாருக்குக் குடியேற்றக்கொடுக்க சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்விடத்தில் அநேக மிஷனரி சங்கங்கள் நிலம்பெற்றுத் தங்கள் கிறிஸ்தவர்களைக் குடியேற்றப் பிரயாசப்படுகிறார்கள். நம் சங்கத்தாருக்கும் இவ்விடத்தில் நிலம் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம். அப்பொழுது இந்த புதிதாய்க் குடியேறும் ஜனங்களிலே சுவிசேஷவேலை நடக்கவேண்டுமென்பதே சங்கத்தின் நோக்கம்.

தென்னிந்தியாவில் ஓமலூர் தாலுகாவில் சில வருஷங்களாய்ச் செய்துவரும் சுவிசேஷ வேலையினால் சபையில் ஒருவரும் சேராதது எல்லாருக்கும் மிகவும் விசனம். இதற்கு முன் ஒரு மிஷன் வேலைசெய்து பிறகு அதை விட்டுவிட்டது. ஆயினும் இப்பொழுது சங்கவன்னியென்னும் பாகத்தில் நல்லவேலை நடந்துவருகிறது கண்டு அதிக சந்தோஷமாய்த் தெரிவிக்கிறோம். அங்கே நடக்கும் வாலிபரின் பாடசாலையினாலும், ஸ்திரீகளுக்கு நடக்கும் சபாவேலையினாலும், சந்தையில் நடந்துவரும் சுவிசேஷப் பிரசங்கத்தினாலும், அந்த சில குடும்பங்களில் நல்ல ஆசை உண்டாயிருக்கிறதற்காக நாம் ஆண்டவருக்குத் துதிசெலுத்துவோமாக. தென்னிந்திய பாகாவ செக்ரெட்டரியும் அதைப்பார்த்து, சீக்கிரத்தில் அந்த குடும்பங்கள் ஞானஸ்நானம் பெறுவார்கள் என்று கண்டார். இங்கு நடக்கும் வேலையை கர்த்தருடைய ஜெபங்களில் விசேஷித்த விண்ணப்பமாக வைக்கக் கோருகிறோம்.

வடஇந்தியாவிலுள்ள பெண்கலாசாலைகளில் நம் சங்கத்தின் வேலை [illegible] உற்சாகம் அதிகரித்து வருகிறது. அங்கிருக்கும் பெண்

சங்கங்கள் அடிக்கடி ஜெபத்தில் தரித்திருந்து, நல்ல பொருளுதவி செய்வதுமன்றித் தங்களில் சிலரை மிஷனரிகளாக அனுப்பவும் தயாராயிருக்கிறார்கள். இவர்களுக்குச் சீக்கிரம் நம் சங்கம் ஊழியக் குழுக்களில் இடம் உண்டாகவேண்டுமென்று ஜெபிப்போமாக.

## நம்சங்கத்தின் பணநிலைமை.

சென்றவருஷம் நமக்குச்செலவான தொகை ரூ. 17769-0-1. நம்சங்கத்தின் அதிக அவசியகாலங்களில் உபயோகிக்கப்படுவதற்காக Reserve Fund ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கும் தொகை ரூ 5100-0-0 சென்றவருஷத்தில் சாதாரண வருமானம் குறைந்து போனதினால் சங்கத்திற்கு ரூ. 3000-0-0 கடன் ஏற்பட்டது. போனமாதத் தீபிகையில் அறிவித்தபடி டிசம்பரில் நடந்த விசேஷித்த சேர்ப்பினால் கடன் ரூ 1000-0-0 தீர்ந்தது. ஆக இப்போது நமக்கு இன்னுமிருக்கும் கடன் ரூ. 2000-0-0. இதை இவ்வருஷத்தில் தீர்த்துவிட இந்தியக் கிறிஸ்தவர் யாவரும் பிரயாசப்படுவோமாக.

நம் வேலைக்காக இவ்வருஷம் நாம் சேகரிக்கவேண்டிய தொகை ரூ 18,000 இதில் தென்னிந்தியாவில் 6000 ரூபாயும், திருவாங்கூரிலுள்ள சீரியக்கிறிஸ்தவர்களிடத்தில் 3000 ரூபாயும் சேகரிக்கப்படவேண்டியது. கிறிஸ்தவர்களின் தொகை தென்னிந்தியாவில் அதிகமானதால் இந்தளவு அதிகப்பணம் சேகரிக்கப்படவேண்டியது.

தென்னிந்தியா கொடுக்கவேண்டிய 6000 ரூபாயில் அதிகக் கிறிஸ்தவர்கள் நிறைந்த தமிழ்நாட்டார் 4000 ரூ. சேர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். சென்றவருஷத்தில் தமிழ்நாட்டின் பலபாகங்களில் சேர்க்கப்பட்டதும், இவ்வருஷத்தில் சேர்க்கப்படவேண்டியதுமான தொகைகளின் விபரம் பின்வருமாறு:—

| | 1914-வருஷத்துக்கு குறிக்கப்பட்டது. | | 1914-வருஷத்தில் சேர்க்கப்பட்டது. | | | 1915-வருஷத்துக்கு குறிக்கப்பட்டது. |
|---|---|---|---|---|---|---|
| மதுரை. | 300-0-0. | பசுமலை | ரூ 37 | 4 | 0 | |
| | | கொடைக்கானல் | 36 | 5 | 0 | |
| | | மதுரை | 108 | 2 | 0 | |
| | | சாத்தன்குடி | 5 | 0 | 0 | |
| | | பெரியகுளம் | 8 | 0 | 0 | |
| | | | 194 | 11 | 0 | 300-0-0. |
| தஞ்சாவூர். | 250-0-0. | நாகப்பட்டணம் | 84 | 0 | 0 | |
| | | தரங்கம்பாடி | 9 | 0 | 0 | |
| | | திண்டுக்கல் | 26 | 8 | 0 | |
| | | | 119 | 8 | 0 | 200-0-0. |
| திருச்சிராப்பள்ளி | 100. | ஒன்றுமில்லை. | | | | |
| தென்ஆற்காடு. | 300-0-0. | கூடலூர் | 5 | 0 | 0 | |
| | | திண்டிவனம் | 7 | 0 | 0 | |
| | | ஜிஞ்ஜி | 3 | 0 | 0 | |
| | | திருக்கோவிலூர் | 85 | 8 | 0 | |
| | | நெல்லிக்குப்பம் | 45 | 1 | 0 | |
| | | கள்ளக்குறிச்சி | 6 | 9 | 0 | |
| | | பண்ருட்டி | 11 | 2 | 0 | |
| | | | 163 | 4 | 0 | 200-0-0. |
| வடஆற்காடு. | 250-0-0. | வேலூர் | 118 | 12 | 0 | |
| | | திருவண்ணாமலை | 42 | 6 | 0 | |
| | | புங்கனூர் | 30 | 0 | 0 | |
| | | ராணிபேட்டை | 41 | 0 | 0 | |
| | | சித்தூர் | 17 | 8 | 0 | |
| | | வாணியம்பாடி | 8 | 0 | 0 | |
| | | திருவத்தூர் | 10 | 0 | 0 | |
| | | போளூர் | 18 | 0 | 0 | |
| | | ஆற்கோணம் | 30 | 0 | 0 | |
| | | | 315 | 10 | 0 | 350-0-0. |
| சேலம் நீலகிரி, | 250-0-0. | சேலம் | 72 | 13 | 0 | |
| | | ஏற்காடு | 10 | 0 | 0 | |
| | | | 82 | 13 | 0 | 250-0-0. |
| கோயம்புத்தூர் | 300-0-0. | கோயம்பத்தூர் | 145 | 3 | 0 | |
| | | ஈரோடு | 19 | 0 | 0 | |
| | | கேட்டி | 10 | 3 | 0 | |
| | | | 174 | 6 | 0 | 300-0-0. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| செங்கற்பட்டு | 150-0-0. | கிண்டி | 10 | 3 | 9 | |
| | | பரங்கிமலை | 21 | 0 | 0 | |
| | | வாலாஜாபாட், காஞ்சிபுரம் | 32 | 8 | 0 | |
| | | பாண்டூர் | 4 | 10 | 0 | |
| | | | 68 | 5 | 9 | |
| சென்னைப்பட்டணம் | 1000-0-0 | | 1600 | 5 | 0 | 2000-0-0 |
| தென்திருவாங்கூர். | 1000 0-0. | மார்த்தாண்டம் | 39 | 8 | 0 | |
| | | நெய்யாற்றங்கரை | 11 | 8 | 0 | |
| | | நெல்லிக்காய்குழி | 75 | 8 | 0 | |
| | | சோரன்குழி | 5 | 0 | 0 | |
| | | சாத்தபுரம் | 3 | 10 | 0 | |
| | | நாகர்கோவில் | 213 | 12 | 0 | |
| | | சன்னி | 10 | 0 | 0 | |
| | | நெய்யூர் | 119 | 6 | 0 | |
| | | பாகனேர் | 28 | 0 | 0 | |
| | | திருத்தன்கோவில் | 5 | 8 | 0 | |
| | | குமாரக்கோவில் | 7 | 2 | 0 | |
| | | கிள்ளேசரி | 7 | 12 | 0 | |
| | | தக்கலை | 10 | 0 | 0 | |
| | | | 535 | 10 | 0 | 700-0-0. |

அங்கங்குள்ள சபையோர் இச்சங்கத்தின் நிர்வாகத்துக்காக தாரா ளமாய்ப் பொருளுதவி செய்தார்களென்பது [illegible] சுவிசேஷவேலைக்கு தாராளமாய்க் கொடுப்போர்களைக் கர்த்தர் நேசிக்கிறார். ஆண்டவருடைய ஆசீர்வாதம் அவர்களு டைய குடும்பங்களின் மத்தியிலல்ல, அவர்கள் சபைகளிலும் நிறைந் ததாய்த் தங்கியிருக்கும். சுவிசேஷ வேலையை ஆதரிக்கும் சபை களானவைகளின் நேர்த்தி, அச்சபையின் சகலவிஷயங்களும் முன்னுக்கு வருகிறது [illegible] அப்பேர்ப்பட்ட சபைகளின் உண்மையும் [illegible] ரும் அத்தாட்சி கொடுப்பார்கள். சுவிசேஷவேலைக்கென்று தங்கள் [illegible] சபைகளின் வருமானம் இரட்டிப்பாய் அதற்கு மேலேயும் அதிகரி த்த [illegible] சபைகளில் [illegible]. மற்றும் சுவிசேஷ வே லையை [illegible] சபைகளில் [illegible] [illegible] [illegible].



லத்திலிருந்த மகாபெரிய சபைகள் இப்போதில்லாமல் போனதற்கு காரணம் என்ன? அவைகள் கிறிஸ்துவின் கட்டளையாகிய சுவிசேஷ பரம்புதலின் வேலையைச் செய்யாதிருந்ததே அதன் காரணமென்று பக்திமான்கள் சொல்லுகிறார்கள். அஞ்ஞான இந்தியாவைத் தன் னுடையதாக்கும்படியாய் நம்ரக்ஷகர் நம்மை நோக்கிக்கூப்பிடுகிறார். அவர் உள்ளம் வாஞ்சிக்கும் இவ்வேலையை நடந்தேறப்பண்ணுவது ஒவ்வொரு இந்தியக்கிறிஸ்தவனுடைய கடமையாம்.

## சுவிசேஷ வேலைக்கு இதுவே சமயம்.

மகமதியர் இந்தியாவில பலஜாதியாரைத் தங்கள் மதத்தில் சேர்த்துவிடுகிறார்கள். மலைநாடுகளிலும் இன்னும் மற்ற நாடுகளிலு முள்ள கீழ்ஜாதியாரை நாம் இப்போது கிறிஸ்துமதத்தில் சேர்க்கா விட்டால், அவர்கள் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்துவிடுவார்கள். மேலும் ஆரிய சமாஜ் முதலிய இந்துசங்கங்கள் கிறிஸ்துமதத்துக்கு விரோதமாய்க் கங்கணம் கட்டிக்கொண்டு ஒருவரும் கிறிஸ்துமதத் தைச் சேராதிருக்கவேண்டுமென்று முயன்று நம்முடைய வேலையைக் குலைக்கப்பார்க்கிறார்கள்.

ஆதலால் கிறிஸ்துவின் எதிரிகள் மும்முரமாயிருக்கும்போது நாம் சும்மாவிருப்போமோ? கிறிஸ்துவினடியாராகிய நாம் கிறிஸ்து வின் கொடியை பலவிடங்களிலும் நாட்டப் பிரயாசப்படாதிருப்போ மோ? கிறிஸ்தவமிஷன்களின் வேலையதிகரிப்பது மிகவும் அவசியம். நம் சங்கவேலைக்கும் அனேக கதவுகள் திறந்திருந்தும், பணக்குறை வினால் நம்முடைய வேலையை யதிகரிக்கக்கூடாதிருக்கிறது. நுக்கார் முதலிய இடங்களிலே கூட்டங்கூட்டமாய் ஜனங்கள் கிறிஸ்துமதத் தை அநுசரிக்கப்பார்க்கிறார்கள் மலைநாடுகளிலுள்ள பூர்வகுடிகளி லனேகர் இன்னும் அஞ்ஞானிகளாகவேயிருக்கிறார்கள். கிறிஸ்துவி ன் இரட்சிப்பைப்பெற்று மனஆறுதலும் சந்தோஷமுமடைந்துள்ள நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்குக் கொண்டுபோவ தற்காகக் கருத்தாய் ஜெபம்செய்து சுவிசேஷவேலையை ஆதரிப்போ மாக இவ்வருஷத்தின் வேலையைக்கர்த்தர் கிருபையாய் ஆசீர்வதித்து வேலையைப் பெருகப்பண்ணுவாராக!

## உயிர்த்தெழுந்த பண்டிகையின் சேர்ப்பு.

பலவூர்களிலும் கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையாகிய சந் தோஷ நாளன்று நம் சங்கத்திற்காக விசேஷமாய் பணம் சேகரித் தனுப்பிவருவது ஒரு நல்லவழக்கம். இவ்வருஷம் இது எல்லா சபை

களிலும், எல்லா ஊர்களிலும் நடக்கவேண்டுமென்பது எம் கோரிக்கை. நம் சபைகளிலுள்ள வாலிபரும் மற்றோரும் கிறிஸ்துவுக்குள்ள தங்கள் வைராக்கியத்தையும் அன்பையும் காட்டுவதற்கு இது ஏற்ற சமயம். அங்கங்கே நம் கிறிஸ்தவர்கள் இவ்வருஷத்தில் கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையன்று வீடுதோறும் நம் சங்க வேலைக்காகப் பொருளுதவி சேகரிக்கப் பிரயாசப்படும்படி வேண்டுகிறோம். இவ்விசேஷச் சேர்ப்புக்காக எல்லா ஊர்களிலுமுள்ள கிறிஸ்தவ அடியார் சந்தோஷமாகக் கொடுப்பார்களென்று நம்புகிறோம். அறுவடைவேலையின் ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை யென்றென்றும் ஆசீர்வதிப்பாராக!

## யுத்தத்தின் சில விஷயங்கள்.

யுத்தம் கொடியமானது, அது கிறிஸ்துவின் ஆவிக்கு விரோதம் என்பதற்குச் சந்தேகமில்லையானபோதிலும், உலகத்தின் ஆதி ஜாதிகளை ஒருவரோடொருவர் சண்டைசெய்ய மூட்டிவிடும் பிசாசின் ஆதி சண்டை செய்யாவிட்டாலும் மிகுதியாய்ச் செய்து வருகிறான். யுத்தம் அக்கிரமங்களைக் காட்டுகிறது போல் கொடுமையானதாயினும் யுத்தஜனம் அவைகளுக்குள் இருக்கையிலேயே போட்டபோதிலும் அவனுடைய பாதகங்களிலே அன்பின் ஆவி விளங்குகிறதன்றோ. அநேகமாய் யுத்தத்துக்குக் காரணமாயிருந்தவர்களுடைய கிரியை பெரிதாகத் தோன்றாவிட்டாலும் இந்த யுத்தம் அநேகருடைய கண் திறந்து விளங்குவதற்குக் காரணமாயிருக்கிறது.

கல்வளவோர் தங்கள் ஜீவனையும் பாராட்டாமல் தங்கள் நாட்டுக்காக யாவையும் விட்டு உயிரையும் யுத்தகளத்தில் மாய்க்கிறார்கள். தங்கள் பொருளையும், நேரத்தையும், தங்களுக்கு அருமையானவர்களையும் தேசத்துக்குக் கொடுக்கத் துணிகிறார்கள். காயப்பட்டோர்களுக்குச் சிகிச்சைசெய்வதற்கு வைத்தியர்களும் பெண்களும் ஆயிரக்கணக்காய்ப் போகிறார்கள். இரவுபகலாய் அவர்களுக்கு வேண்டியவைகளைக் காரியமாய் செய்கிறார்கள்.

யுத்தம் கிறிஸ்தவர்களை நடத்தவேண்டுமென்று செய்திருக்கிறதென்பதற்கு அநேக அத்தாட்சிகளுண்டு. அநேக ஜனங்களில் மனம்மாறுதல். ஆண்களும், பெண்களும், இன்னும் அநேக சங்கங்களும் ஆண்டவரின் தேவனன்பை நம்மை நடத்திவிருக்கிறதல்லவா? பெல்ஜியம் பிரான்சு நாடுகளில் தங்கள் ஜனத்தை விட்டுக் கைத்தப்பட்டிருப்போர் இன்னமும் மனத்தாழ்மையால் மன்றாடுதலும் போதிக்க நடவடிக்கை விசேஷமாயிருக்கிறது. அமெரிக்கா இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந்து அவர்களுக்குச் சகாயம் போய்க்கொண்டிருக்கின்றது. (தொடரும்)

Printed at the "T. A. C." Press, Salem

இந்திய சுயதேச மிஷனரி சங்கத் திரிகை.

The Tamil Organ of the
National Missionary Society of India.

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று.

Vol. VII. ஏப்ரில், 1915. No. 4

OFFICE OF THE REGISTRAR OF JOINT STOCK 23 NOV 1915

## சேரள நாடு.

### (Travancore and the N. M. S.)

திருவாங்கூர் என்னும் திவ்ய சமஸ்தானம் இந்தியாவின் தென் கோடி பாகத்திலுள்ளது. இது முற்றும் மலை நாடானபடியால் "மலையாளம்" என்னும் காரணப்பெயர் பெற்றது. வெண்மேகங்களால் முடி சூட்டப்பெற்றுள்ள மலைச்சிகரங்களாலும் பசுஞ்சோலைகளாலும் அடர்ந்த தென்னந்தோப்புகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள இச்சேரள நாடு கண்ணோக்குமனைத்தையும் கவருகின்றது. இந்நாட்டை "இந்தியாவின் நந்தவனம்" என்னலாம். இந்நாட்டின் வடபாகத்தில் அப்போஸ்தலனாகிய தோமா நாள்முதலுள்ள சூரியானிக் கிறிஸ்தவர்களது பெருங்கூட்டமும் தென்பாகத்தில் லண்டன் மிஷனைச் சார்ந்த ஏராளமான தமிழ்க்கிறிஸ்தவர்களது பெருங்கூட்டமும் உண்டு. இந்தியாதேசம் முழுவதிலும் கிறிஸ்தவர்கள் அதிகமாய் நிறைந்துள்ள இடம் இத்தென்கோடிப்பாகமே. இச்சேரள நாட்டில் நூற்றில் சுமார் முப்பதுபேர் கிறிஸ்தவர்கள். இந்த நாலு பேரில் ஒருவன் கிறிஸ்தவன். இந்தியாவின் வடகோடிப்பாகத்தில் 2,000த்தில் ஒரு கிறிஸ்தவன்தான். இவ்வேராளமான கிறிஸ்தவர்களிலநேகர் கிராமவாசிகள். தெருக்களில் வீடுகட்டி வாசஞ்செய்யாமல் தத்தம் தென்னந்தோப்பினிடையே வீடுகட்டிக்கொண்டு சுகமாயும் சந்தோஷமாயும் காலங்கழித்து வருகிறார்கள். சில வீடுகள் சுவர்முதலாய் மரப்பலகைகளால் கட்டப்பட்டிருப்பதால் அவைகள் ஓர் அழகிய பெட்டிபோலும் தென்படுகின்றன. மேலும் இக்கிராமங்களிலெல்லாம் பெரிய ஆலயங்களும் ஆயிரக்கணக்கான அங்கத்தினரும் உண்டு. இந்நிலைகளைக்கண்டு மகிழாதோர் நம்மிலுளரோ? இப்பெருங்கூட்டமான கிறிஸ்தவர்களைக் காண்பதும் இவர்களோடு ஏகோவாவைத் தொழுவதும் பேரின்பமே.

இச்சபையாரெல்லாரும் நமது சங்கத்தைத்தம் சொந்தமாகப் பாவித்து அதை விசேஷித்த விதமாய்ப் பரிபாலிக்குந்தன்மையை

நமது நீபிகைசோயர் அறிந்துள்ளார். இவர்களிடையில் நமது அரிய சங்கத்தின் காரியாதிகளைச் சொல்லுமாறு சென்ற டிசம்பர்மாதம் இங்குவந்தேன். வடபாகத்திலுள்ள ஆலப்புழை, கோட்டயம் முதலிய சேகரங்களில் பெரிய கூட்டங்களும் ஒளி விசித்திரப்பட உபந்நியாசங்களும் நடைபெற்றன. அக்கால் என் உபந்நியாசங்களை மலையாள பாஷையில் திருப்பியும் வேறு பற்பலவிதமாகவும் உதவிபுரிந்த கனம் பி. ஓ. பிலிப்பு அவர்கள் என் நன்றிக்குப் பாத்திரராயிருக்கிறார். இங்கெல்லாம் கிளைச்சங்கங்கள் உண்டு. இச்சபையார் ஒவ்வொரு வருஷமும் நமது சங்கத்திற்குச் சுமார் ரூ. 3,000 வரை கொடுத்துதவி புரிவதும் நாமறிந்த விஷயமே. இவர்களை இறைவன் கண்ணோக்குவாராக.

அதன்பின் இச்சமஸ்தானத்திற்குப் பிரதானகரும் இந்நாட்டாரும் சேரமன்னன் வசித்திடமுமாகிய திருவனந்தபுரம் என்னும் நகரை ஜனவரி 15-உ சார்ந்தேன். இங்கு கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள ஓர் பெரிய அழகிய ஆலயமுண்டு. தமிழ் மலையாளமாகிய இரண்டுபாஷைகளில் ஆராதனைகள் நடைபெற்று வருகிறது. இந்நகர்வாசிகளாகிய நமது நண்பர்கள் நமது சங்கத்தின்பேரில் நல்லபிப்பிராயமுடையவர்கள். நாயிற்றுக்கிழமைகளில் நடந்த ஆராதனைகளையும் மற்ற இடங்களில் நடந்தவாறு எனக்குக் கொடுத்துதவிட்டனர்.

வாரநாட்களில் இச்சபையாரைத் தத்தம் வீடுகளில் சந்தித்துப் பேசி ஜெபித்துவரும் சிலாக்கியத்தை அடைந்து களித்தோம். வியாழக்கிழமை நடந்த மிஷனரி கூட்டத்திற்குச் சுமார் 800 பேர் வந்திருந்தனர். மறுநாள் நடந்த ஒளிவிசித்திரப்பட உபந்நியாசத்திற்கு 1000 பேருக்கதிகமானவர் வந்தனர். அங்கு நடந்த அற்புதங்களை உரைக்கின் விரியும். பின்னர் இங்குள்ள ஸ்திரிகள் கிளைச்சங்க சம்பந்தமாக ஒரு கூட்டமும் நடைபெற்றது. இங்கு சில நகைகளும் கிடைத்தன. இங்கு நான் தங்குங்கால் உதவிபுரிந்த கிளைச்சங்கத்தாருக்கும் கனம் தானியேல் போதகருக்கும் போலீஸ் சூப்பிரண்டெண்டு கனம் வ. சாமுவேல் அவர்கட்கும் கனம் மிஸ். மேரி ஐசக் அம்மாள் அவர்கட்கு மென்மனமுவந்த வந்தனம் உரியதாகின்றது.

பின்னர் நெய்யாற்றின் கரை சேகரத்தை நாடிச்சென்றேன். இங்குள்ள கிராமவாசிகளெல்லாம் நமது சங்கத்திற்காக எடுக்கும் பிரயாசத்தை நாம் கேட்டிருக்கிறோம். செல்விக்காக்குடி கிராமச்சபையார் 49 தென்னமரங்களை நமது சங்கத்திற்காக விட்டிருக்கின்றனர். அங்குள்ள வர்க்கியர் 20 தென்னமரங்களுள்ள ஒரு தோப்பை என். எம். எஸ். சங்கத்தின் பேரால் வாங்கியிருக்கிறார்கள். இந்த 69 விருட்சங்களினின்றும் வருஷந்தோறும் சுமார் ரூ. 15 நமது ஊழியத்திற்குக் கிடைக்கின்றது.



இம்மரங்களெல்லாம்

# N. M. S.
# No. 40

இப்பரிதியான கருப்பு அடையாளத்தைத்தன் தேகத்தில் பெற்று நிற்பதுமல்லாமல், அப்பாதையிற் செல்லுவோருக்கு அதைக்காட்டியும் அவர்கட்கு மௌனமாய் பிரசங்கம் செய்துவருகிறது. தென்னமரங்களும் கமுகுமரங்களும்கூட நமது சங்கத்தின் நன்மையைக் கருதிப் பலன் தருகின்றனவே. இம்மரத்தின் இளநீரையும் விலைகொடுத்து வாங்கிச்சாப்பிட்டுப் பாக்கியம் அடைந்து களித்தேன். என். எம். எஸ். தேங்காய் இனிமையாயிருக்கக் கேட்பானேன். என் களைப்பைத் தீர்த்து எனக்கு அதிக நம்பிக்கையையும், பெலத்தையும், புதிய உற்சாகத்தையும் அது கொடுத்துதவினது.

கனி கொட்டாமலும் தாளிர் நன்றாய் விடாமலுமிருந்த ஒரு வளைந்த தென்னமரத்தை நமது சங்கத்திற்கென்று விட்டபின் அது குலுங்கக்காய்த்திருப்பது ஓர் அற்புதம்போல் காணப்படுகிறது. இதைப்போல் சுற்றியுள்ள கிராமங்களிலும், தென்னை, கமுகு, வாழை முதலிய மரங்கள் உண்டு. இக்கிராமங்களிலெல்லாம் நூற்றுக்கணக்கான ஜனங்கள் திரளாய் கூட்டங்கள் நடைபெற்றன. ஒரு சிறு கிராமத்தில்மட்டும் கூட்டமுடிவில் எடுக்கப்பட்ட காணிக்கையில் 240 பணம் அதாவது ரூ 33 கிடைத்தது. ஒரு சகோதரன் செல்விக்காக்குடியில் ஒரு நல்ல தங்க மோதிரத்தை என்வசம் அளித்தார். "கொடுக்கால் என். எம். எஸ்.க்குக் கொடு" என்னும் சொல் இப்பக்கங்களில் பழமொழிபோல் ஒவ்வொருவர் வாயிலும் வருகிறது. இக்கிராமவாசிகள் கர்த்தருக்கென்று கொடுக்கும் மகிமை... அதினாலே அவர்கட்கு... [illegible] இவ்வகை படிக்குமோ? இவ்வாறு கொடுப்பதில் இச்சபைகள் பலிக்கிறார் சில வருஷத்துக்குள்ளாக வளர்ந்து வருகிறதைப் பின்வரும் சுருக்கத்தில் காட்டுவோம்.

ஓர் குடும்பம் சென்ற டிசம்பர் மாதத்தில் மட்டும் ரூ. 4,200 நமது சங்கத்திற்கு வந்த அற்புதத்தையும் அதினால் அதற்குள்

கடன் நீங்கப்பெற்று சுத்த இருதயத்தோடும் விசேஷமாய் நல் மனச்சாட்சியோடும் இவ்வருஷத்தின் ஊழியத்தைத் துவக்க ஓர் வழியுண்டானதை நமது இங்கிலீஷ் பத்திரிகையினால் இவர்கள் அறிந்து சந்தோஷத்தினாலும் ஸ்தோத்திர ஆவியினாலும் நிறைந்திருக்கிறார்கள். அவருக்கே சகலகனமும் துதியுமுண்டாகுக. என்றுமுள்ள அவர்கிருபை இவ்வருஷமும் நம்முடனிருப்பதாக.

திருவாங்கூர்.
20-2-1915.

பால் S. கடம்பவனம்.

---

(முன்தொடர்ச்சி.)

யுத்த களத்திலிருக்கும் போர்வீரர் பணம்சேர்த்து சுவிசேஷ வேலைக்கும் இன்னும் மற்ற கிறிஸ்தவவேலைகளுக்கும் அனுப்பிவருவது நமக்குச்சந்தோஷமான காரியமல்லவா? இப்படி ஜெர்மன்சேனையாரும் இங்கிலீஷ் சேனையாரும் செய்துவருவது கிறிஸ்துவை நேசிக்கும் நேசம் ஐரோப்பிய நாட்டாரில் எவ்வளவு பலமாயுள்ளது என்பதை விளக்கும்.

சென்ற கிறிஸ்மஸ்தினக் கொண்டாட்டத்தைப்பற்றி அனேக அற்புதமான விஷயங்கள் போர்க்களத்திலிருந்து இங்கிலீஷ் போர்வீரரும் ஜெர்மன் போர்வீரரும் எழுதும் கடிதங்களால் தெரியவருகின்றன. அனேக மைல்கள் நீண்டுள்ள யுத்தகளத்தின் பலவிடங்களிலும் இருகட்சியாரின் விருப்பத்துக்கேற்ப யுத்தம் நிறுத்தப்பட்டு போர்வீரர் ஒளிந்து நின்று சண்டைசெய்யும் பள்ளங்களிலிருந்து இருதிறத்தாரும் வந்து, நடுவில்கூடி கைகுலுக்கி, ஒருவர்க்கொருவர் சிற்றுண்டி முதலியவையளித்து, கிறிஸ்மஸ் பாடல்களும் இன்னும் மற்றப்பாடல்களும் பாடிச்சந்தோஷம் கொண்டாடினர். எதிரிகளாயிருந்தபோதிலும், தம்மிருவருக்கும் பொதுவானரட்சகரின் பிறந்த நாளின் பொதுச்சந்தோஷம் இருவருடைய மனதையும் ஒற்றுமைப்படுத்தினது கிறிஸ்துமார்க்கத்தின் வல்லமையன்றோ!

பெல்ஜியம் போர்களத்தின் ஓர் இடத்தில் ஜெர்மானியர் இங்கிலீஷ்காரரை துப்பாக்கி சுட்டினால் எதிர்த்துத் தங்களில் காயப்பட்டவர்களைத் தூக்கிக்கொண்டு தாங்கள் பதுங்கியிருக்கும் பள்ளத்துக்குத் திரும்பினர். அப்போது காயப்பட்ட போர்வீரரில் ஒருவனே விடப்பட்டான் என்று கண்டார்கள். உடனே அவர்களில் ஒருவன் அவனை எடுத்துக்கொண்டுபோக ஓடிவர, இங்கிலீஷ்காரரால் சுடப்பட்டான் அதைக்கண்ட இங்கிலீஷ் போர்வீரன் ஒருவன் தன் உடன் போர்வீரரைப்பார்த்து, துப்பாக்கி சுடவேண்டாம் என்று உரக்கக்கூவி, காயப்பட்டுக்கிடந்த ஜெர்மன் போர்வீரனை நோக்கி ஓடி-



னான். உடனே ஜெர்மன் பக்கத்திலிருந்து வந்த குண்டுகள் அவனைக் காயப்படுத்தின. காயப்பட்டும் அவன் நகர்ந்து நகர்ந்து வருவதைக் கண்ட இருதிறத்தாரும் ஆச்சரியத்தினால் நிறைந்து பிரமித்து நின்றுவிட்டார்கள். அவன் அவனை நெருங்கி தன்தோளின்மேல் எடுத்துப் போட்டுக்கொண்டு நகர்ந்துகொண்டே ஜெர்மானியரிருந்த பள்ளத்தைச்சேர்ந்து, அங்கிருந்த உத்தியோகஸ்தன் முன் தான் சுமந்துவந்த காயப்பட்ட ஜெர்மானியனை வைத்துவிட்டு அவசரமாய்த் திரும்பி தன்னிடத்திற்குப்போக நகரத்தொடங்கினான். இதைக் கண்ட ஜெர்மனி உத்தியோகஸ்தர் அவன் செயலை வியந்து, தனக்கு ஜெர்மன் சக்கரவர்த்தி யுத்தகளத்தில் பாராட்டிய வீரத்துக்காகக் கொடுத்திருந்த இரும்புச் சிலுவையை அவன் சட்டையில் அதைக் குத்தினான். அப்படிச்செய்யவே இருதிறத்தாரும் வெகுநேரம் கைகொட்டினர். இந்த வீரத்தைக்கண்ட இங்கிலீஷ் உத்தியோகஸ்தன் தன் தளகர்த்தனுக்கு இவ்வற்புதச் செயலைத்தெரிவித்தான். இங்கிலீஷ் போர்வீரர் மிகவும் மதிக்கும் விக்டோரியா சிலுவை என்னும் வீரச்சின்னத்துக்கு உரியவனானான். ஆயினும் அவன் பட்ட காயங்களினால் மரித்து சிலதினங்களில் அடக்கம் செய்யப்பட்டு, அவன் கல்லறை இப்போதொரு மரச்சிலுவையினால் குறிக்கப்பட்டிருக்கிறது.

இவன் தன் எதிரியின் உயிரைத்தப்புவிக்கத் தன்னுயிரை ஆபத்துக்குட்படுத்தி பின் தன்னுயிரையும் மாய்த்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! இதன் காரணம்யாது? யுத்தகளத்தில் தான்தன் ரட்சகருக்குக்கொடுத்த மெய்ச்சாட்சி இதுவே.

## சீனா.

---

சீனா பழைய காரியங்களை விடாப்பிடியாய் பிடிக்கும் நாடென்று 10, 15 வருஷங்களுக்குமுன் எண்ணப்பட்டது. ஆனால் இப்போது அங்கே ஆச்சரியமான மாறுதல்கள் நடந்துவருகின்றன.

முந்தி அது தன் கல்வியையும், தன் மார்க்கத்தையும், தன் நாட்டையுமே பிரதானமாக எண்ணி மற்ற நாட்டையும், மற்ற நாட்டுக்காரியங்களையும் அவமதித்து வந்தது. இப்போது அங்கு உண்டாயிருக்கும் மாறுதல்களைச் சற்றுக் கவனித்தால் அவை எவ்வளவு எதிர்பாராத வண்ணமாயும் ஆச்சரியமாயும் நடந்துள்ளன என்பது விளங்கும்.

1900-௵த்தில் வெள்ளைக்காரரையும் அவர்கள் மார்க்கத்தையும் அவர்கள் சம்மந்தப்பட்ட சகலவிஷயங்களையும் அழித்துப்போ

டவேண்டுமென்று ஒரு பெருங்கலகம் உண்டாயிற்று. அதற்கு பாக்ஸர் யுத்தம் என்று பெயர். அக்காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிகளுக்கும், சீனக்கிறிஸ்தவர்களுக்கும் உண்டான இம்சை கொஞ்சநஞ்சமல்ல. இப்பொழுது கிறிஸ்தவ மிஷனரிகளை அவர்கள் மிகவும் மதித்து அவர்கள் ஆலோசனையைப் பலவழிகளிலும் தேடுகிறார்கள்.

பழைய வழிகளிலிருந்தால் விருத்தியுண்டாகாதென்றும், ஜப்பான் தன்னைப் பலவழிகளிலும் சீர்படுத்திக்கொண்டதினால் முன்னுக்கு வந்ததென்றுமறிந்து, தங்கள் நாட்டை நற்பதவிக்குக் கொண்டுவரவேண்டுமென்னும் பேராவலுண்டு அநேக சீர்திருத்தங்களை நாடுகிறார்கள்.

சீனாவின் துன்பத்திற்கு வெகுவாய்க் காரணமாயிருந்த அபின் வியாபாரத்தை நிறுத்திவிட்டார்கள். இங்கிலாந்தும் இதற்குதவியாயிருந்தது. இந்தியாவிற்கு அதிக வரும்படிக்கேதுவாயிருந்து வந்த இந்த வியாபாரத்தைச் சீனாவின் நலத்தைக்கோரியே நிறுத்திவிட்டது.

இராஜாங்க விஷயத்திலும் ஒரு பெரிய மாறுதலுண்டாயிருப்பது யாவருக்கும் தெரியும். முன்னிருந்த சக்கரவர்த்தியின் அரசாட்சி ஒழிந்துபோய்க் குடியரசு ஏற்பட்டுவிட்டது. சிலவருஷங்களாய் யுவான்ஷிக்கை என்பவர் பிரிசிடெண்டாக நாட்டை ஆண்டுவருவதும் பத்திரிகைகள் வாசிப்போர் யாவருக்குந் தெரியும்.

கல்வி விஷயத்திலும் ஒரு பெரிய ஆச்சரியமான மாறுதல் உண்டாயிருக்கிறது. குடியரசு ஏற்படுத்தப்படுவதற்கு முன்னமே பழைய கல்விமுறை ஒழிக்கப்பட்டது. ஜப்பான் எவ்வண்ணம் ஐரோப்பா, அமெரிக்காவின் கல்வியினால் முன்னுக்கு வந்ததோ அதேமாதிரித் தானுமாக மேல்தேசத்துக் கல்விமுறையையும், ஜப்பானின் தற்காலத்துக் கல்விமுறையையும் கைக்கொண்டு வருகிறது. மகாபெரிய நாடாகிய சீனாவில் இம்மாறுதலை உடனே ஏற்படுத்தியதால் தங்களைப் போதிப்பாரில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். தங்களுக்கு உதவிசெய்யக்கூடியவர்கள் கிறிஸ்தவ மிஷனரிகளேயென்று கண்டு அவர்களை எங்கும் தங்களுக்குதவி செய்யக்கேட்கிறார்கள். அதற்கிணங்கி, மிஷனெரிகள் பல கல்விச்சாலைகளை ஏற்படுத்தி அநேக சீன மாணாக்கரைப் போதித்துவருகிறார்கள்.

இது கிறிஸ்தவ சபைக்கு ஆண்டவர் கொடுத்திருக்கும் ஓர் சிறந்த சமயம். சீனர் தங்களுடைய தற்காலத்து பெருத்த மாறுதல்களால் நாடுவது லௌகிக மேன்மையேயாயினும் இதனால் கிறிஸ்துவின் ஊழியத்துக்குக் கதவுகள் விரிவாகத் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை உணருகிறோம். இப்பேர்ப்பட்ட காரியத்தைக் கைகூடச் செய்த நம் இரட்சகருக்கு ஓர் சிறந்த ஸ்தோத்ரமுண்டாவதாக. இந



னால் கிறிஸ்துவின் இராஜ்ஜியம் அங்கு ஸ்தாபிக்கப்பட ஏதுவுண்டு என்றும் நாம் அறியலாம்.

இப்போது கிறிஸ்தவசபை சும்மாவிருந்தால் அது லௌகிக நாடாகவே வளர்ந்து, சீக்கிரம் உலகத்துக்கே ஒருபெரிய மோசமாகக் கூடும். இதையறிந்தே அங்குழைக்கும் மிஷன்கள் இப்புதுச்சீனாவைக் கிறிஸ்துவின் ஆவி பலமாய்ப்பிடிக்க வெகு பிரயாசப்பட்டு வருகிறார்கள்.

பலகோடி ஜனம் நிறைந்த இந்நாடு கிறிஸ்தவ நாடாயின், ஆசியாவில் கிறிஸ்துவின் ராஜ்ஜியப் பரம்புதல் எவ்வளவு எளிதாகும். சீனா கிறிஸ்தவ நாடாக இதுவேசமயம். மாறுதலின் காலமாகிய இச்சமயம் தவறினால், இப்பேர்ப்பட்ட மற்றொரு சமயம் வாய்த்தலருமை. ஆதலால் கிறிஸ்துவின் அடியாராகிய நாம் யாவரும் சீனாவை நம்முடைய ஜெபங்களில் விசேஷித்து நினைப்போமாக.

ஏற்கனவே அங்குள்ள மிஷனரிகளுடைய ஊழியத்தினால், பொ:, ஏ. முதலிய பக்திமான்கள் அங்குச்செய்துவரும் சுவிசேஷ வேலையினாலும் சிலர் கிறிஸ்துமதத்தைச் சேர்ந்துள்ளார். ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளுக்குக் கல்வி கற்கப்போய் வந்தவர்களிலும் சிலர் கிறிஸ்துவின் தாசராகி கிறிஸ்துமதப் பரம்புதலுக்காகவும் உழைக்கிறார்கள். கிறிஸ்தவர்களில் பலர் ராஜாங்க உத்தியோகஸ்தராயிருக்கிறார்கள். ராஜ்ய மந்திரிகளில் சிலரும் கிறிஸ்தவர்கள்.

சீனதேச ராஜாங்கத்தார் செய்துள்ள இரண்டொரு ராஜாங்கக் கட்டளைகள் கவனிக்கத்தக்கவை. 1913-ஆம் ஏப்ரல்-மீ 27-உ சீனதேச ராஜாங்க விருத்திக்கென்று தேச முழுவதிலும் ஜெபநாளாக அனுசரிக்கப்பட வேண்டுமென்று ராஜாங்கக்கட்டளை பிறந்தது. இதைக்கேள்வியுற்ற கிறிஸ்தவ நாடுகளில் பல அதே நாளைத் தங்கள் சபைகளிலும் சீனாவுக்காக விசேஷித்த ஜெபநாளாகக் கொண்டாடினார்கள். தற்சமயம் ஐரோப்பாவில் மும்முரமாய் நடந்துவரும் பெருத்த யுத்தம் தொடங்கினபோது, சீனாவின் பிரசிடெண்ட் யுவான்ஷிக்கேயின் உத்தரவினால் சென்ற 1914-ஆம் அக்டோபர்-மீ 13-உ யுத்தம் கலந்திருக்கும் ஐரோப்பாவின் நாடுகளுக்காக விசேஷித்த ஜெபங்கள் சீனமுழுவதிலும் செய்யப்பட்டன. இது கிறிஸ்துவின் ஆவி சீனாவை ஆளத்தொடங்குகிறதென்பதற்குச் சாட்சியன்றோ?

இந்தியா முழுவதிலும் கிறிஸ்துவின் கொடிக்குள்வர ஆசிக்கும் நாம் சீனாவும் கிறிஸ்தவ நாடாவது அவர் திருநோக்கமென்றும், வெகு மாறுதல்களடைந்துவரும் அந்நாட்டில் கிறிஸ்து ராஜ்ய பரம்புதலுக்கு ஏற்ற சமயமாகிய இக்காலத்தில் கிறிஸ்துசபை தன்னைக் கிறிஸ்துவின் ஊழியத்துக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியது

வசியமென்றும் அறிவது தகுதி. சீனா நாட்டையும் இந்தியக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஜெபங்களில் கருத்தாய் நினைவுகூரக் கோருகிறோம்.

## டிங் லீ மேய் போதகர்.

இவர் சீனாவில் உண்டான கிறிஸ்துமதப்பாரம்பரியத்தின் ஆச்சரியமான ஓர் கனி. இவர் குடும்பம் ஷன்டுங் மாகாணத்தில் மூன்று தலைமுறைகளாய்க் கிறிஸ்தவர்கள். இவர் தன் 2[illegible]ம் வயதில் போதகரானார். அக்காலத்தில் பாக்ஸர் கலகம் மும்முரமாயிருந்தபோது அதிசமாய் இம்சிக்கப்பட்டு 500 கொடிய அடிகளைப் பட்டார். ஆயினும் மனந்தளராமல் மூர்ச்சையாகி, காவலுக்குக் கொண்டுபோகப்பட்டார். மூர்ச்சை தெளிந்தபிறகு, காவலிலிருந்த பற்பல கைதிகளுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். டிங்கையடித்தவர் மறுபடியும் [illegible] தம் பண்ணை என்னவாயிருந்தாலும் அது பயப்படவில்லை. கிறிஸ்துவின் சீஷர், ஏரோதேயின் காலத்தில் பேதுருவுக்காக ஜெபித்ததுபோல, சீனக்கிறிஸ்தவர்கள் டிங்குக்காக ஜெபித்தார்கள். ஐரோப்பிய சேனைகள் அவ்வூருக்கு வந்துசேர்ந்ததால் டிங் விடுதலை பெற்றார்.

பாக்ஸர் கலகமடக்கப்பட்ட பிறகு இவர் சீனாவில் ஒரு பெரிய சபைக்குக் குருவானார். இவர் கிறிஸ்தவர்களிடத்திலும் வெகு பயனுற வேலைசெய்துவருகிறார். இவர் வேலையின் சித்திக்குக் காரணம் இவருடைய ஜெப ஜீவியமே. இவருடைய ஜெபங்களினாலும் மேன்மையான கிறிஸ்தவ ஜீவியத்தினாலும் வெய்ஷென் யூனியன் காலேஜில் 160 மாணாக்கர் குரு ஊழியத்திற்காகத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். சமீபத்தில் அவர் செய்துவந்த சுவிசேஷ வேலையினால் 1400 பேர் கிறிஸ்துமதத்தைக் கருத்தாய்ப் படிக்கத்தொடங்கினார்கள். இவர்வேலை கர்த்தரால் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டும் அவர் மகா சாதுவுமுள்ளவராய்த் தம்மை மிகவும் தாழ்த்துவார். இவர் சீனாவிலும் மற்ற தேசங்களிலுமுள்ள 400 கிறிஸ்தவ ஊழியர்களுக்காக அனுதினமும் ஜெபித்து வருகிறார். ஜெபத்தின் வல்லமையை சுவிசேஷ பரம்புதலுக்கருளும் கர்த்தர் [illegible] ஒருவரை நமக்கு [illegible]வாராக!

கர்த்தர் தம்முடைய சபையில் தம்முடைய ஊழியரை அதிகமதிகமாய் எழுப்பி, அவர்களைத் தம்முடைய ஆவியால் அபிஷேகித்து அந்நிய நாடுகளில் அனுப்பி மென்மேலும் பெருகச்செய்வாராக.

Printed and published by K. T. Paul, at the T.A.C. Press, Salem

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 NOV 1915
MADRAS.

இந்திய சுயதேச மிஷனரி சங்கப் பத்திரிகை.

The Tamil Organ of the
National Missionary Society of India.

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று.

Vol. VII. Oct., 1915. No. 5

## பத்திராதிபர் குறிப்புகள்.

நாம் [illegible] சேகரத்தில் ஒரு வருஷமாய் நல்லவேலை நடந்துவருகிற செய்தி முன்னமே இப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது. அதைக்குறித்த அருமையான ரிப்போர்ட் ஒன்று இம்மாதத்தில் இப்பத்திரிகையில் வெளியாகிறது. ஆண்டவர் அங்கேயும் தமக்கு சீக்கிரம் ஒரு சபையைச் சேர்த்தருளுவார் என்று நம்ப இடமுண்டு.

இந்தியா என்னும் நம்பெரும் நாட்டிலே, சிலகாலமாய் கீழ்ச்சாதியாரிடத்தில் வேலை அதிக பயனுற நடந்து வருகிறது. இவர்கள் மொத்தத் தொகை 5 கோடி. இவர்களைக் கிறிஸ்துவின் சபையில் சேர்க்க பல மிஷனரிகளும் முயன்று வருகின்றனர். உலக செல்வாக்கை நாடி இவர்கள் கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்தபோதிலும், இவர்களிலேயும் இயேசுகிறிஸ்துவுக்கேற்ற நற்கனிகளும் தோன்றிவருகிறது. தற்சமயம் ஆயத்தமாயிருக்கும் இவர்களைச் சபையில் சேர்ப்பதினால் கிறிஸ்தவ சபை பலப்படக்கூடும். இச்சமயத்தைக் கைவிட்டால், இது நாம் பின்னால் விசனிக்கக்கூடிய ஒரு பெருநஷ்டமாகும். மாஸ் மூவ்மென்ட் அல்லது இந்தியாவின் கீழ்ஜாதியாரிடத்தில் தோன்றியுள்ள ஓர் அசைவு என்பதைக் குறித்த சில விசேஷங்கள் இப்பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. நமது சுயதேச மிஷன் சங்கத்தாரும் ஐக்கிய மாகாணத்தில் நுக்கார் என்னுமிடத்தில் இப்பேர்ப்பட்ட கீழ்ஜாதியாரிடத்தில் வேலைசெய்துவருகிறார்கள். அதைக்குறித்த விவரம் அடுத்தமாதப் பத்திரிகையில் வெளியாகும். இப்பெரிய ஊழியத்திற்கு வேண்டிய ஊழியரும் மற்ற எத்தனங்களும் நம் நாட்டு மிஷன் சங்கங்களுக்கு ஏராளமாய் அகப்பட நம்மாண்டவரை வேண்டுவோமாக.

நம் சங்கம் முதல் முதல் ஊழியம் செய்யத்தொடங்கின மங்கட்டாமரியில் சில வருஷங்களுக்குமுன் ஓக்காரா என்னுமிடத்தில் ஒரு வைத்தியசாலை ஏற்பட்டதை நம் நண்பர் யாவரும் அறிவார்கள். இவ்வூரிலே இப்போது ப்ளேக் என்னும் விஷக்காய்ச்சல் பரவி நம் கிறிஸ்தவர்களையும் வதைத்து வருகிறதாக [illegible] சுந்தர் என்னும் மிஷனரியும் எழுதும் கடிதங்களால் அறிந்து விசனிக்கிறோம். கஷ்டத்திற்குட்பட்டிருக்கும் நம் சகோதரரை நம்முடைய ஜெபங்களில் நினைப்போமாக.

## நங்கவள்ளி.

---

தேவகிருபையால் இவ்வூரில் நாம் ஊழியஞ்செய்யத் தொடங்கி ஏறக்குறைய ஒரு வருஷமாகிறது. ஆகவே கடந்த வருஷத்திய வேலை எவ்வாறு நடந்தேறியதென்று சிறிது பார்ப்போம்.

**கிராம ஊழியம்.** நங்கவள்ளி என்பது ஓர் சிறு கிராமமேயொழிய வேறல்ல. இக்கிராமத்தைச் சுற்றிலும் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கிக்கப்படாததும் முதல்தடவையாய்ப் பிரசங்கிக்கப்பட்டதுமான ஏராளமான கிராமங்கள் உண்டு. இவ்வேராளமான கிராமங்களில் வேலைசெய்ய இராப்பொழுதே ஏற்றது. அதுபற்றி குறைந்தபட்சம் ஒவ்வொரு கிராமத்தையும் மாதத்தில் இருமுறை சந்தித்து இராப்போதையும் அவ்விடத்தில் கழித்து பஜனைப்பிரசங்கங்கள் செய்துவந்தேன். கடந்த வருஷத்தின் பெரும்பாகத்தை கட தாண்டவர் செய்துவந்த அன்பின் ஊழியஞ்செய்வதில் கழித்திருக்கிறேன். பிரசங்கிப்பவனுக்கும் கேட்போருக்கும் நட்பு உண்டாகாவிட்டால் பிரசங்கம் ஒரு பலனையும் செய்கிறதில்லையென்று கண்டதே இதற்குக்காரணம்.

தற்சமயம் ஓர்வித நட்பு பிரசங்கிக்கும் எனக்கும் ஜனங்களுக்கும் உண்டாயிருப்பதால் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்போரும் அதைக்குறித்துச் சிந்திப்போரும் இப்பன்னிரண்டு கிராமங்களிலும் உண்டு.

**சந்தைப்பிரசங்கம்.** இச்சந்தைகள் கிராம ஜனங்களுக்கு எவ்வளவு உபயோகமுள்ளதாயிருக்கிறதோ அவ்வளவு சுவிசேஷ ஊழியனுக்கும் உபயோகமுள்ளது. இச்சந்தைகளில் சுவிசேஷப் பிரசங்க



மும் வேதாகமப்பகுதிகளின் விற்பனையும் நடைபெற்று வருகிறது. நங்கவள்ளி சேர்த்தில் நாம் போய்வரக்கூடிய சந்தைகள் 3 உண்டு. இம்மூன்று சந்தைகளுக்கும் வாரத்தில் 3 நாள் போக, மற்ற நாலு நாட்களும் கிராம ஊழியத்திற்கென்று செலவிடப்படுகிறது. கிராமங்களில் வேலை செய்வதில் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஒவ்வொரு சுவிசேஷப்பகுதி இருக்கப்பார்ப்பதே என் முக்கிய கருத்து. இதன்பொருட்டு வாசிக்கத்தெரிந்தோருடைய தொகையையும் அவரது பெயரையும் அறிந்துகொள்ளுதல் அவசியமாயிற்று. பிறகு அவரெல்லாரும் ஒவ்வொரு புஸ்தகம் வாங்கும்படி ஏவியும் சில சமயங்களில் பரிசளித்தும் வந்திருக்கிறேன். இவ்வகை வேலைசெய்ய ஆரம்பிக்கையில் வாசிக்கத்தெரிந்தோரின் தொகை மிகச்சிறியதெனக் கண்டு மிகவிசனமடைந்தேன். ஆகவே சிறு புஸ்தகங்களும் பத்திரிகைகளும் பெரும்பயன் விளைவிக்க இப்பாகம் ஏற்ற இடமல்ல.

**வீடுதோறும் சந்திப்பு.** நங்கவள்ளியிலும் மற்ற கிராமங்களிலும் வீடுதோறும் போய் ஜனங்களின் யோகக்ஷேமங்களை விசாரித்து என்னால் கூடிய சிகிச்சைகளைச்செய்தும் சிறிதுநேரம் சம்பாஷித்தும் சில பத்திரிகைகளைக் கொடுத்தும் வருகிறேன். இச்சந்திப்பினால் ஊராரின் நல்லெண்ணமும் உதவியும் நமக்குக் கிடைத்துவருகிறது.

**வியாதியஸ்தரின் சிகிச்சை.** இவ்வூழியம் இப்பக்கங்களில் மிகவும் அவசியமானது. இப்பக்கங்களில் விஷஜுரம் முதலிய அநேக ஜுரங்கள் சாதாரணம். அத்தோடு நரம்புச்சிலந்தி என்னும் அசுத்தமான நோய் இல்லாத இடம் கிடையாது. இவ்வியாதிகளால் அவதிப்படும் ஜனங்களுக்கு என்னால் கூடியவரை சிகிச்சைசெய்தும் ஆண்டவரின் அன்பைக்காட்டியும் அப்போது பிரசங்கித்து வருகிறேன்.

**பஞ்சமருக்குள் அசைவு.** இச்சாதியாருக்குள் உண்டான விக்கிரக ஆராதனைக்கு விரோதமான ஓர்வித அசைவே நாம் நங்கவள்ளி என்னும் இக்கிராமத்தை நமது மிஷன்ஸ்தானமாக்கிறதற்குக் காரணம். இவர்களுக்குள் ஓர்வித அசைவு இருந்தபோதிலும் அநேக தடைகளும் உண்டு. இக்கிராமத்தில் ஓர் பள்ளிக்கூடமும் இரவிலும் ஞாயிறு தோறும் ஆராதனைகளும் நடந்தேறுகிறது. இங்கே சீக்கிரத்தில் ஆத்துமாக்களின் ஆதாயம் இருக்கும் என்று எண்ண இடம் உண்டு.

D. R. தேவாசீர்வாதம்.

## THE MASS MOVEMENT.

கூட்டங்கூட்டமாகவும் கிராமங்கிராமமாகவும் இந்துக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கும் அசைவுக்கு மாஸ்மூவ்மெண்ட் எனப்பெயர். இது வடஇந்தியாவில் ரோகில்கண்ட், ஐக்ய மாகாணம், பஞ்சாப் முதலியவிடங்களில் ஆரம்பித்திருக்கிறது. தாழ்ந்த ஜாதியாரென்றெண்ணப்படும் கூட்டிகிறவர்களான சுக்ரால் என்ற வகுப்பாருக்குள்ளும், அவர்களிலும் சற்றுயர்ந்த சமார் என்பவருக்குள்ளும் இவ்வசைவு பரவிவருகிறது. மெதடிஸ்ட் எபிஸ்கோப்பல் மிஷன் 1012-ம் ௵ 30,000 பேருக்கும் 1913-ம் ௵ 40,000 பேருக்கும் ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறது. இவ்வசைவு பலமாய்க் கிரியைசெய்யும் 7 ஜில்லாக்களில் மாத்திரம் 1,10,000 பேர் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். தாழ்ந்த ஜாதியாரென்று புறக்கணிக்கப்பட்டிருக்கும் 5 கோடி ஜனங்களுக்குள்ளே இவ்வசைவு நற்சமயம் பலன் செய்யக்கூடியதாயிருக்கிறது. இப்பெரிய அசைவு கொஞ்சக் காலத்துக்குள் இந்தியாவின் மார்க்க, ஜனசங்க, ராஜாங்க நிலைமையில் பெரிய மாறுதலை உண்டுபண்ணுமென்று நிச்சயமாய் நம்புகிறேன் என்று ராஜா சர் ஹர்னாம் சிங் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் இவ்வசைவானது ஆண்டவர் நமது தேசத்தின்மேல் அருள ஆரம்பித்திருக்கும் அருள்மாரியென்று நம்பி அவருக்குத் துதி செலுத்த வேண்டும்.

பக்தர்களான பல மிஷனெரிமாரும் தேவஊழியரும் அநேக வருஷங்களாய்ச் செய்துவந்த ஊக்கமான ஜெபமே இவ்வாச்சரியமான அசைவுக்குக்காரணம். மேற்காட்டிய இருவகுப்பாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மனதுள்ளவர்களென்பது பல வருஷங்களாக மிஷனெரிமாருக்குத் தெரியாது. அதைப்பற்றித் தெரிந்துகொண்ட பிறகுங்கூட அவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் குழந்தைப் பிராயத்திலுள்ள இந்திய சபையின் வாழ்வுக்கு இடையூறாயிருக்குமென் றெண்ணப்பட்டது. ஆயினும் கனம் ஸ்காட், ஹொஸ்கின்ஸ் என்ற இரண்டு மிஷனெரிமாரும் சுமார் 1866-ம் ௵ இந்த ஜனங்கள் மத்தியில் வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். ஆயிரக்கணக்கான பேர் ஞானஸ்நானம் பெற ஆசைப்பட்டபோதிலும் நூற்றுக்கும் குறைவானவர்களுக்கே வருஷந்தோறும் ஞானஸ்நானம் கொடுத்துக் கல்வியறிவையும் புகட்டி வந்தார்கள். அக்காலத்தில் குணப்பட்டவர்களில் பலர் இப்போது பிரயோசனமுள்ள தேவஊழியராயிருக்கிறார்கள். என்றபோதிலும் இவ்வேலையில் பலருக்குச்சந்தேகமும் பயமும் அதிகமாயிருந்தது.



1888-ம் வருஷம்தான் பெரிய அசைவு உண்டாக ஆரம்பித்தது. வீரரான வில்சன் என்பவர் பதௌன் என்ற ஜில்லாவில்மட்டும் 88-ம் ௵ 3,054 பேருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார். இதேகாலத்தில் இவ்வசைவு ரோகில்கண்ட் மாகாணம் முழுவதும் பரவி, கங்கையைத்தாண்டி வடமேற்கு இந்தியாவுக்குச்சென்றது. இவ்வல்லமையான அசைவைக்கவனித்த மிஷனெரிமார் யாவரும் இது தேவ ஆவியானவரின் கிரியையென்று கண்டு உற்சாகமாய்ச் சேர்க்க ஆரம்பித்தார்கள்.

தேவனுடைய ராஜ்யம் புளித்தமாவைப்போலப் பரவும் சக்தியுடையதென்பதற்கு இவ்வசைவு ஒரு தெளிவான திருஷ்டாந்தமாயிருக்கிறது. சில மிஷனெரிமாருடைய முயற்சியால் சிலவிடங்களில் அசைவுண்டாயிற்று. அசைவுண்ட கிராமத்தார் பக்கத்துக்கிராமத்தாரை அழைத்தார்கள். அவர்கள் முறையே தங்கள் பக்கத்திலுள்ளவர்களை அழைக்க, இப்படியே இவ்வசைவு கெதியிலும் விரைவாய்ப் பரவிச்செல்கின்றது. தேவ ஊழியர் உதவியின்றி ஜனங்களே சுவிசேஷத்தைப் பரப்பிவருகிறார்கள். இப்படிக்கூட்டமாய் வந்து சேரும் ஜனங்களின் நோக்கமென்ன? ஆவிக்குரிய நோக்கத்துடனே கூடக் கல்வி நாகரீகமுதலிய உலகப்பேறுகளின் ஆசையும் கலந்ததாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளவேண்டும். ஆயினும் இவர்களுடைய ஜீவியத்தில் காணப்படும் மாறுதல் மிகத்திருப்தியைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. கிறிஸ்துவினிமித்தம் அடிகளையும் நிந்தையையும் பொருள் நஷ்டத்தையும் பொறுமையாய்ச் சகித்துக் கொள்ளுகிறார்கள். ஒரு கிராமத்திலுள்ள யாவரும் கிறிஸ்தவர்களாவோமென்று வாக்குக்கொடுத்தபின் குறைந்தது ஆறுமாதங்களாக ஆயத்தம்பண்ணப்பட்டபின்தான் ஞானஸ்நானத்துக்குத் தகுதியுடையவர்களாக எண்ணப்படுவார்கள். சில கிராமத்தாருக்கு 2 வருஷங்களுக்குமுன் ஞானஸ்நானம் கொடுக்கிறதில்லை.

தேவ ஊழியர் குறைவாயிருப்பதினிமித்தம் கனம். வில்சன் என்பவரின் முயற்சியினால் சாட்ரிகளின் போதனை பயிற்சிக்கூடம் என்ற ஒரு ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சுக்ரால் என்ற வகுப்பாருள்ள ஒவ்வொரு ஊரிலும் சாட்ரி என்ற கிராமத் தலைவனொருவன் உண்டு. சாட்ரிகள் ஜனங்களைத் தங்களிஷ்டப்படி நடத்தக்கூடிய செல்வாக்குடையவர்கள். கொஞ்சக்காலத்துக்கு முன் டெல்லிவட்டத்தில் கூடிய இவ்வகைக்கூட்டத்துக்கு 175 சாட்ரிகள் வந்து 6 நாள் தங்கிப் போதனைபயிற்சியடைந்து போனார்கள், சாட்ரிகளின்

ஆவிக்குரிய ஜீவியத்தைப் பலப்படுத்துவதும், தேவ வசனத்தைப் புரட்டுவதும், அன்றாடக ஜீவியத்துக்குரிய கிறிஸ்தவக் கடமைகளை உணர்த்துவதுமே இக்கூட்டங்களின் நோக்கமாம். ஆவிக்குரிய ஜெபம் பண்ணவும் பாட்டுப்பாடவும் சாட்சிசொல்லவும் கற்றுக்கொள்ளுகிறார்கள். போதனைக்கூட்டங்களில் இயேசு பிறந்தது, மரித்தது, உயிரோடெழுந்தது, பரத்துக்கேறியது ஆகிய இந்நான்கு விசேஷ சம்பவங்களையும் அவர்களே சொல்லும்வரை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆலோசனைக்கூட்டங்களில் பிறப்பு விவாகம் மரணம் முதலியவற்றின் சமயத்தில் அனுசரிக்கவேண்டிய கிறிஸ்தவ ஒழுக்கமும் மற்றக் கடமைகளும் போதிக்கப்படுகிறது. இவ்விதக்கூட்டங்களுக்கு வந்துபோகும் சாட்சிகள் தங்கள் கிராமங்களிலுள்ள சபைகளைச் சம்பளமில்லாமல் மேல்நடத்திவருகிறார்கள்.

இப்பொழுது கிறிஸ்தவர்களாகும் பிரன்கூட்டமான இந்த ஜனங்கள் யாவரும் கொஞ்சமும் கல்வியறிவில்லாதவர்கள். ஞானஸ்நானம் பெற ஆசைப்படும் ஆயிரக்கணக்கான ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்குப் போதுமான தேவ ஊழியர் கிடையாது. மெதடிஸ்ட் மிஷன் தன் ஒழுங்கான வேலையையும் செய்துகொண்டு இவ்வளவு பெரிய வேலையையும் செய்வது பிரயாசத்தமான காரியம். ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று விரும்பி அநேக கிராமங்களிலிருந்து ஜனங்கள் மிஷனெரிமாரிடம் வந்தபோது தேவ ஊழியர்களில்லாதபடியால் கொஞ்சக்காலம் பொறுமையாயிருங்கள் என்று விசனத்தோடே சொல்லியனுப்பவேண்டியதாயிருந்தது. கிறிஸ்தவர்களுக்கு உபதேசிக்கவும் பிள்ளைகளுக்குப் படிப்புக்கொடுக்கவும் சபைகளை நடத்தவும் நூற்றுக்கணக்காக அநேக ஊழியர்களும் பல மிஷனெரிமாரும் வேண்டியதாயிருக்கிறது. தேவ ஊழியரில்லாதிருப்பதும் இப்பெரிய வேலைக்குத் தடைசெய்திடலாமா? அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

(The U. C. Herald.

---

## A man Changed.
## மாறிவிட்ட மனுஷன்.

போன மாசம் லண்டன் மாநகரிலுள்ள ஓர் ஆலயத்தில் ஆராதனைக்குப் போயிருந்த ஒருவர் கண்ட காட்சியைக் கூறுவதாவது:—

"நான் லண்டன் பட்டணத்திலுள்ள ஒரு ஆலயத்தில் போன வாரம் காலை ஆராதனைக்குப் போயிருந்தேன். நான் அப்பட்டணத்



தில் அடிக்கடி கண்டிருந்த ஒரு பெரிய மனுஷன் எனக்கு முன்னிருந்த வரிசையில் இருந்த ஆசனத்தின்மீது உட்கார்ந்திருந்தான். அவன் உயர்ந்த வளர்ச்சியும், பருத்த தலையும், காத்திரதேகமும் உடைய ஒரு பலத்தமனுஷன். உத்தேசம் ஒரு வருஷத்திற்குமுன்னே சாதாரண மனுஷர் யாவரும் அவனுக்கு யாதொரு பொருட்டில்லை. ஆலய ஆராதனை என்றால் அவனுக்கு வெறுப்பு. ஓய்வுநாள் என்றால் அவனுக்கு அது உல்லாசநாள். நான் கர்த்தருடைய ஆலயத்திற்கு வரும்போதெல்லாம் அவன் வீட்டின் வழியாகத்தான் வரவேண்டும். ஓய்வுநாட்களிலும் மற்ற நாட்களைப்போலவே அவன் தன் ஜோலிகளை நடத்திக்கொண்டும் தேவனைப்பற்றியோ, திருச்சபையின் சிலாக்கியங்களைப்பற்றியோ யாதொன்றும் நினையாமலும் தன் சிநேகிதரோடு பகடிபேசி சிரித்து விளையாடிக்கொண்டிருப்பான். இவ்விய ஊழியக்காரர் ஒருவரையும் அவன் எள்ளளவேனும் உள்ளத்தில் மதித்தவன் அல்லன். ஆனால் யுத்தம் வந்ததும் நல்ல பராக்கிரமசாலியாகிய அவனுடைய ஒரே மகனும் முனைமுகத்தில் முன்னணிக்கு செல்லவேண்டியதாயிற்று. தேவனை மதியாத அவன் தகப்பன், தேவனை ஆராதிக்கிற ஜனங்களோடு தன் கண்களை வானத்திற்கு ஏறெடுக்கத் துணியாமல் ஆயக்காரனைப்போல தன்மார்பில் அறைந்துகொண்டு ஒரு சிறு பிள்ளையைப்போலப் பெருமூச்சுவிட்டு அழுகிறதைக்கண்டேன்.

நான் போயிருந்த அந்தக் கோவில் முன்னே அரைப்பாகந்தான் நிரம்பி இருக்கும். இப்பொழுதோ ஆசனங்கள் எல்லாம் நிறைந்து, இருக்க இடம் இல்லாமல் ஜனங்கள் இங்கும் அங்கும் நின்றுகொண்டு இருப்பதையும் கண்டேன். ஆராதனை மகா பயபக்தியோடு நடந்தது. அத்தியட்சர் சாதாரண ஜெபங்களை வாசித்தபின் தமது விசேஷித்த ஜெபத்தில்:—'கர்த்தாவே உமது நாமத்தைத் தரித்துக்கொண்டு எங்களைப்போல உமது அடியார் என்று சொல்லிக்கொண்ட எங்கள் சகோதரர் இப்பொழுது எங்கள் சத்துருக்களாய் மாறிவிட்டார்களே. அவர்கள் செய்கிற குரூரமானது உம்மை அறியாத ஜனங்கள் செய்யும் குரூரத்திலும் அதிகமாய் இருக்கிறதே. கொடியவர்கள் என்றும் இரக்கம் அற்ற ஈனரென்றும் பேர் வாங்கிய துருக்கரின் கொடுமையைப்பார்க்கிலும் இவர்கள் கொடுமையும் குரூரமும் மகா கொடியதாய் இருக்கிறதே என்று சொல்லவே, மறுவார்த்தை சொல்ல அவருக்கு நாவெழவில்லை. ஆனால் எனக்கு முன் இருந்த மனுஷனோ, 'கர்த்தாவே எங்களுக்கு இரங்கி எங்களை விடுவியும், எங்கள் சத்துருக்களைச் சிதறடித்து உமது ஜனத்தை ரட்சியும்

என்று வடிக்கிற கண்ணீரோடு சொல்லச்சொல்லி ஜெபிக்கிறதைக் கேட்டேன், கோவிலுக்கு வந்திருந்த சகல ஜனங்களுக்குள்ளும் ஒரு விசேஷ பிரமிப்பு உண்டாயிற்று. பின்பு 35-ம் சங்கீதம் மகா பயபக்தியாய் வாசிக்கப்பட்டு நம்பிக்கையோடு பாடப்பட்டது. எல்லாம் முடிந்தவுடனே நான் என் இருதயத்தில், கல்லான மனுஷனுடைய இருதயத்தை இவ்வளவு தண்ணீராய்க் கரைப்பவன் யாரென்று என்னைக் கேட்டு சில நல்ல பாடங்களைத் தியானித்துக்கொண்டேன். மனுஷர் செல்விக்கையாய் வாழ்க்கையில் தேவனை மறந்துபோகிறார்கள். ஆபத்து நேரிடும்போதோ அவனை அறிந்து தங்களை நடத்தும் மேலான காரம் ஒன்று உண்டு என்று அறிகிறார்கள்.

ஆதலால் கர்த்தரிடம் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள் என்ற வாக்கியங்கள் என் மனதில் வரவே, ஆலயத்திற்குப் போகையில் எனக்கிருந்ததைவிட அதிக பெலமும் ஜெப வாஞ்சையும் நம்பிக்கையும் ஆறுதலுமுடையவனாய் வீட்டிற்குத் திரும்பினேன்" என்பது.

(Missionary Gleaner.)

## The After-effects of the Present War.
## தற்காலப் பயங்கர யுத்தத்தின் பின்பலன்கள்.

தற்கால யுத்தத்தால் விளையும் உயிர்நஷ்டமும் பொருள் நஷ்டமும் விபரிப்புக்குள்ளடங்காதது. அதன் பலாபலன்கள் இக்காலத்தோடு நின்றுபோகாமல் பின் தலைமுறையாரை வெகுகாலம் தாக்கிநிற்கக்கூடியது. புஜபல பராக்கிரமசாலிகளும், திடகாத்திர தேகமுள்ளோரும் யுத்தத்தின் முன்னணிக்குச் செல்லுகிறார்கள். போகிறவர்கள் திரும்பிவருவது அசாத்தியமாயிருக்கிறது. தேசத்தில் மீதியாய் விடப்படுகிறவர்கள் ரோகிகளும் பலவீனருமாம். ஆகவே பின்வரும் சந்ததியார் பலசாலிகளாயல்ல, பலவீனராயிருப்பார்களென்பது எதிர்பார்க்கக்கூடியது. நெப்போலிய யுத்தத்துக்குப்பின் பிரான்ஸ் தேசத்தில் எழும்பிய இரண்டு தலைமுறையார் முந்தின தலைமுறையாரைவிட ஆள் உயரத்தில் ஐந்து அங்குலம் குறைந்து காணப்பட்டார்களாம். இவ்வாறு இப்பயங்கர யுத்தத்தால் விளையும் கெடுதிகள் நிவிர்த்தியாக வெகுகாலம் செல்லும்.

Printed & published by K. T. Paul, at the T.A.C. Press, Salem.

OFFICE OF THE REGISTRAR OF JOINT ... 26 NOV 1915 MADRAS

இந்திய சுயதேச மிஷனெரி சங்கத் தீபிகை

THE TAMIL ORGAN OF THE NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

Vol. VII. ஜூன், 1915. No. 6.

# NUKKAR
## நுக்கார்

சென்ற மேயீ பத்திரிகையில் மாஸ்மூவ்மெண்ட் என்று சொல்லப்படும் கீழ் ஜாதிகளுக்குள்ளே சில இடங்களில் கிறிஸ்து மார்க்கத்துக்குச்சார்பாகத் தோன்றியிருக்கும் ஓர் புது அசைவைப்பற்றிக் கூறினோம். இது பல இடங்களிலும் தோன்றியிருக்கிறதைப் பல மிஷியோங்கள் சந்தோஷமாய்க் கண்டு வெகு உற்சாகமாக அப்பேர்ப்பட்ட கீழ் ஜாதிகளிடத்திலே வேலை செய்து ஆயிரக்கணக்காக அவர்களைக் கிறிஸ்தவ சபையில் சேர்த்து வருகிறார்கள்.

நமது சுயதேச சங்கம் இவர்களிடத்தில் விசேஷமாய் உழைத்து வருமிடம் நுக்காரே. இங்கு நடக்கும் வேலையைக் குறித்து இந்த மாதத்தீபிகையில் சில விஷயங்களைச் சொல்ல ஆசிக்கிறோம்.

நுக்கார் என்பது வட இந்தியாவிலுள்ள ஐக்கிய மாகாணங்களில் சகாரன்பூர் என்னும் ஜில்லாவின் மேற்கு தாலுக்கா. இந்நுக்கார் தாலுக்காவில் நமது சங்கம் 1908-வருஷம் வேலை செய்ய ஆரம்பித்தது. அத்தாலுக்காவின் ஜனத்தொகை 5-லட்சம். இங்கே நமது சங்கத்தின் ஊழியத்தினால் சேர்க்கப்பட்ட கிறிஸ்தவ சபைகளின் தொகை 800-பேருக்குமேல்.

இத்தாலுக்கா 6-பாகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் 4-பாகங்களில் சுவிசேஷ வேலை கிரமமாய் நடந்து வருகிறது. இங்குள்ள மிஷனரி பீபில்ஸ் என்பவர். அவருக்கு 4-உதவி ஊழியர் உண்டு.

1. சார்சாவா. பீபில்ஸ் போதகர் இருக்கும் இவ்விடம் ரெயில் மார்க்கமாயுள்ள ஓர் சிறு பட்டணம். இதைச் சுற்றியுள்ள கிராமங்கள் 107. இவற்றில் 27-கிராமங்களில் சுவிசேஷ வேலை ஒழுங்காய் பீபில்ஸ் என்பவராலும் அவருக்கு உதவியாளாயிருக்கும் பாபு கிவால் மாசியாலும் நடத்தப்பட்டு வருகிறது. இங்கேயுள்ள 7-கிராமங்களில் நமக்குச் சபைகள் உண்டு.

மேலும் சார்சாவிலே பீபில்ஸ்போதகரின் மனைவி ஓர் வைத்திய சாலை நடத்திவருகிறார்கள். இந்த வைத்திய சிகிச்சையினால் ஆயிரக்கணக்கான மேன்குல இந்துக்களுக்கும் மகம்மதியருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஏதுவுண்டாயிருக்கிறது. 1911-ல் 11,454 பேர் வைத்தியசிகிச்சை பெற்றார்கள். 2000 க்கு மேற்பட்ட ஸ்திரீகளுக்கு கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லப்பட்டது.

2. அம்பாத்தா. இங்கு உழைத்துவருபவர் ஜெய்ஸிங் போதகர். இவர் இங்கு குடியிருந்து இவ்வூரைச்சுற்றியுள்ள 43 கிராமங்களில் வேலைசெய்துவருகிறார். இவருடைய ஊழியத்துக்குட்பட்ட கிராமங்கள் 20 இல் நமக்குச்சபைகள் உண்டு.

3. சில்க்கானா. இவ்வூரும் இதைச்சுற்றியுள்ள 40 கிராமங்களும் பாபு எட்மண்ட் ஜேக்கப் என்பவரின் பார்வைக்குட்பட்டது. சில்க்கானா பிரிவில் 15 கிராமங்களில் கிறிஸ்தவர்களிருக்கிறார்கள்.

4. கங்கோ. இதுவே எல்லாவற்றிலும் பெரிய பிரிவு. இதில் 130 கிராமங்களுண்டு. இவ்விடத்திலுள்ள 40 கிராமங்களில் பாபு பகதூர்சிங் ஒரு உதவியுமின்றி தாமே வெகு சிரத்தையாய் சுவிசேஷ வேலை செய்துவருகிறார். இங்கு 22 கிராமங்களில் கிறிஸ்தவ சபைகளைச் சேர்த்திருக்கிறார். இங்கு வேலை வளரவேண்டுமென்றால் குறைந்தபட்சம் இரண்டுபேராவது இருக்கவேண்டுமென்று நமது மிஷனரி பீபில்ஸ்போதகர் வற்புறுத்தி எழுதுகிறார்.

5. நக்கார். தாலூக்காவின் பேர்பெற்ற இப்பிரிவில் வேலை நடத்திவர இன்னும் ஊழியரொருவரும் நியமிக்கப்படவில்லை.



6. டிட்ரோன். இப்பிரிவில் நமக்கு 74 கிறிஸ்தவர்களிருந்தும் கிறிஸ்தவ ஊழியரொருவரும் தற்சமயம் அங்கில்லை. யாரையாவது தங்களுக்கனுப்பவேண்டுமென்று அங்குள்ள நம் கிறிஸ்தவர்கள் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

அனேக கிராமங்களில் ஞானஸ்நானம்பெற பலர் விரும்பியும், உடனே அவர்களைச் சேர்க்கக்கூடவில்லை. அவர்களிலனேகர் ஞானஸ்நானத்தை விரும்புவது மெய்க்குணப்படுதலினாலல்ல. உலக பிரகாரமான நோக்கத்தினால் இப்படி அவர்கள் விரும்புகிறதை நாம் காணும்போது அவர்களை நெடுநாளாக ஆயத்தம்பண்ணி, நம்மிரட்சகரின் மார்க்கத்தின் நோக்கமென்ன என்பதை அவர்களுக்குக் காட்டவேண்டும். அவர்கள் கிறிஸ்தவர்களாவதனால் உலக பிரகாரமாக படிப்பு, அந்தஸ்து முதலிய காரியங்களில் சிறுக்கு வரலாம் என்னும் உலக நோக்கத்தையுடையவர்களாயிருந்தும், நாம் அவர்களைத் தள்ளாமல், அவர்களை நமது அன்பினால் கவர்ந்து நம்மிரட்சகரின்மேல் அவர்களுக்கு ஓர் வாஞ்சை உண்டாகும்படியாய் பொறுமையோடு அவர்களிடத்தில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஆயத்தகாலம் 6 மாதம், அல்லது 1 வருஷம் வேண்டியிருக்கிறது.

மேலும் இந்த உத்திரவாதமான வேலைக்கு அனேக ஊழியர் தேவை. பொறுமையோடு நெடுநாளாய் ஊழியம் செய்தால்தான் நம்நோக்கம் நிறைவேறும். ஊழியரில்லாததே நம்வேலை அதிகரிக்காததற்கு விசேஷித்த காரணம்.

மேலும் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு ஊழியரை நியமித்தால் ஒவ்வொரு கிராமத்துக்கும் மாதம் 10,12 ரூ. செலவாகும். இதனால் பெருத்த செலவுநேரிடும். ஆகவே பணவரவு அதிகரிக்காவிட்டால் வேலையும் தாமதமாகும் என்று அறிந்து, பஞ்சாப் மாகாணத்திலுள்ள மாண்ட்காமரியில் உழைக்கும் நமது மிஷனரிகள் ஓர் சிறந்த உபாயம் கண்டுபிடித்திருக்கிறார்கள். பணவுதவியின்றியே வேலைசெய்வதற்காக நம் கிறிஸ்தவர்களை சுவிசேஷ வேலைக்கு ஆயத்தம்பண்ணி, அங்கங்கே அவர்களை குடியேற்றி வருகிறார்கள். அவர்கள் தங்கள் கைத்தொழிலால் தங்களுக்கு ஜீவனம் சம்பாதித்து

ஒழிந்தநேரங்களில் தங்கள் கிராமத்தில் கிறிஸ்தவ சபைகளைப் போதித்தும், ஞானஸ்நானம்பெற விரும்புபவர்களை ஆயத்தப்பண்ணியும் வருகிறார்கள். மாண்ட்காமரியில் சென்ற மூன்று வருஷங்களாய்ப் பரீட்சிக்கப்பட்டுவந்த இச்சிறந்தமுறை 1914-ல் நுக்காரிலும் அநுபவத்துக்குக் கொண்டுவரப்பட்டது. 7 பேர் இப்பேர்ப்பட்ட வேலைக்கு ஆயத்தப்படுத்தப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் பிரான்சிஸ் என்னும் ஓர் கிறிஸ்தவசாது. இவர் கிராமங் கிராமமாய்ப் போய் கிறிஸ்துவைக் குறித்துப்போதித்தும் உபதேசித்தும் வருகிறார்.

நாம் முன்னொரு பத்திரிகையில் கூறினபடி நுக்காருக்காக நியமிக்கப்பட்ட இன்னொரு மிஷனரி சாட்டர்ஜி என்பவர் மாண்ட்காமரியில் நடக்கும் வேலையைப்பார்த்து வருகிறார். அவர் இவ்விடத்துக்கு வரும்போது இங்கு நடந்துவரும் வேலைக்கு அதிக உதவியாயிருப்பார் என்று நம்புகிறோம்.

பிபில்ஸ்போதகர் நுக்கார் வேலையைப்பற்றி அனுப்பிய ரிப்போர்ட்டிலிருந்தும், அவர் மனைவி சார்சாவா வைத்தியசாலையைக் குறித்து எழுதிய ரிப்போர்ட்டிலிருந்தும், வெளியாகும் பின்வரும் விசேஷித்தக் குறைவுகளை நம் நேயருக்குக்கூறி, அவர்களுடைய கருத்தான ஜெபங்களையும் ஒத்தாசையையும் கோருகிறோம்.

1. நுக்கார், டிட்ரோன் பிரிவுகளுக்கு ஊழியர் அவசியம்.

2. நம் கிறிஸ்தவர்கள் இந்துக்களுக்குக் கூலி வேலை செய்வதனால் அதிகக்கஷ்டப்படுகிறார்கள். பணமுள்ள கிறிஸ்தவர்கள் இங்கு நிலம் சம்பாதிப்பதனால் அங்குள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு ஒத்தாசை செய்யக்கூடும்.

3. கிறிஸ்தவர்கள்கூடி தேவனை ஆராதிக்க ஓர் கோவில் கட்டப்படுவதும் அவசியம்.

4. அதிக நற்சாட்சிபெற்ற திறமையுள்ள மூன்று பையன்களைப் பள்ளிக்கூடத்தில் கற்பிக்க நம் நண்பர் உதவிசெய்யும்படி நுக்கார் மிஷனரி கேட்டுக்கொள்ளுகிறார்.



5. பெண்களிடத்தில் வேலைசெய்ய உதவியாட்களும் அவசியம்.

6. சார்சவா வைத்தியசாலை.

   1. நாதுசங்கமும், சர்க்காரும் கொடுப்பதற்குமேல் பணம் செலவாகிறது. தற்கால யுத்தத்தினிமித்தம் மருந்துவிலையும் அதிகரித்திருக்கிறது.

   2. வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் பெண்களுக்கு அங்கே சுவிசேஷத்தை அறிவிப்பதோடு பிறகு அவர்கள் வீடுகளிலும் சுவிசேஷ வேலையைத்தொடர்ந்து செய்ய ஒரு வேதஸ்திரி நியமிக்கப்படுவதவசியம்.

நுக்காரில் நடந்துவரும் வேலையை நம் ஞாபகத்தில்வைத்து கர்த்தர் அதைத்திரளாய் ஆசீர்வதிக்க மன்றாடுவோமாக

## A Gift to the N. M. S

## நமது சங்கத்துக்கோர் கொடை

ஹோஷியார்பூர் என்னுமிடத்திலுள்ள K. C. சாட்டர்ஜி அம்மாள் நமது சங்கத்துக்கு 5000 ரூ. அனுப்பியிருக்கிறார்கள். இதன் வட்டியை பஞ்சாபில் நமது சங்கத்தின் சுவிசேஷ வேலைக்கு உபயோகித்துவரவேண்டுமென்று விரும்புகிறார்கள். நம்சங்கம் ஸ்தாபகமாகி வேலை செய்துவரும் இப்பத்து வருஷங்களில் அனுப்பப்பட்ட தனிக் கொடைகளில் இதுவே பெரியது என்றும் மற்றனேகரும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறோம் என்றும் நமது சங்கத்தின் பொக்கிஷதாரி எழுதுகிறார்.

## Some of our Precious Friends

## நம் சங்கத்தின் சில சிறந்த நண்பர்

யூனுஸ் பகரன் என்னும் சிறுவன் எழுதுவது:—

"எங்கள் தோட்டச் சேகரிப்பிலிருந்து 2 ரூ. அனுப்புகிறோம். ஆதரிப்புப் பள்ளிக்கூடத்தின் பிள்ளைகளாகிய எங்களுக்கு பணம்

கொடுக்கப்படுகிறதில்லை. ஆயினும் ஒவ்வொருவனுக்கும் தோட்டத்தில் ஒரு சிறுபாகம் குறிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் பயிரிட்ட காய்கறிகளை விற்று ஆண்டவருடைய வேலைக்கு உதவி செய்கின்றோம். நாங்கள் இந்தவருஷம் வேதாகமச்சங்கத்துக்கு 2 ரூபாய் அனுப்பினோம். பிறகு சேர்த்த இந்த 2 ரூபாயை உங்களுக்கு அனுப்புகிறோம்."

இன்னொரு நண்பர் பின்வருமாறு எழுதுகிறார் :—

"நான் அறிந்த ஒரு குடும்பத்தில் 5 பிள்ளைகள் இருந்தார்கள். இப்போது இன்னொரு பிள்ளையும் பிறந்திருக்கிறது. மூத்தபிள்ளைக்கு மாண்ட்காமரியும், இரண்டாவதுபிள்ளைக்கு அக்காரும், மூன்றாவதுபிள்ளைக்கு சீரியக்கிறிஸ்தவர்கள் உழைக்கும் கார்வாரும், நாலாவது பிள்ளைக்கு கர்ஜட் கர்மலாவும், ஐந்தாவது பையனுக்கு ரூமலூரும் குறிக்கப்பட்டன. புதிதாய்ப் பிறந்த பிள்ளைக்கு இலங்கைத் தீவில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இலங்கை சுதேச மிஷன் குறிக்கப்பட்டிருக்கிறது. தங்கள் பிரிவுகளுக்காக ஜெபம் செய்து வரும் சிறுவர், தங்களிடங்களில் நடக்கும் வேலையைக்குறித்து அறிய வாஞ்சிக்கிறார்கள்."

## Women's Work in the N. M. S

## பெண்கள் வேலை

சில பெண்கலாசாலையின் மாணாக்கர் நமது சங்கத்தில் சுவிசேஷவேலைசெய்ய ஆவலாயிருக்கிறார்களென்று முன்னொரு மாதத்திரிகையில் அறிவித்தோம். பெண்கள் நமதுசங்கத்தில் ஊழியஞ்செய்ய இடமுண்டோ என்று யோசிக்க ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டது. அவர்கள் ஆலோசனையில் விசேஷித்தது நம்முடைய மிஷன் சேகரங்களில் தாமதமின்றி உடனே ஸ்திரீகள் சுவிசேஷவேலைக்கு நியமிக்கப்படவேண்டுமென்பதே. மாண்ட்காமரியில் வைத்தியவேலைக்கு ஒருவரும், சுவிசேஷவேலைக்கு மற்றொருவருமாக இரண்டுபேரும், நர்க்காரில் பிபில்ஸ். அம்மாளோடு உழைத்துவர ஒருவரும், சீரியமி



ஷன் சேகரமாகிய கார்வாரில் வேலைசெய்ய ஓர் பெண்வைத்தியரும் உடனே நியமிக்கப்படுவது அவசியம் என்றுகண்டார்கள்.

இவ்வேலை சீக்கிரம் துவக்கமாகவும், இதற்குவேண்டிய ஆவி பெற்ற ஊழியர் நியமிக்கப்படவும், அவர்கள் ஊழியத்தினால் அதிக பலன் விளையவும் மன்றாட மறவாதிருப்போமாக!

## The Faith Work of an Indian Sister

## ஓர் இந்திய சகோதரியின் பக்திவேலை

சுந்தரபாய்பவர் என்ற ஓர் இந்திய கிறிஸ்தவ மாது பூனா நகரில் இரண்டு ஐரோப்பிய உடன் வேலையாட்களோடு செய்து வரும் வேலை நமது சிந்தனைக்குரியது. அநேக பெண்களுக்கு லௌகிக பாடங்களை மராட்டிய பாஷையில் கற்பிப்பதோடு, வேதாகமத்தையும், திருச்சபை சரித்திரம் முதலியவற்றையும் கற்பித்து சுவிசேஷ வேலை செய்யவும் அவர்களைப் பழக்கி வருகிறார்கள். பூனா நகரைச் சுற்றியுள்ள அநேக கிராமங்கள் இவர்கள் வேலை செய்வதற்கு ஏற்ற இடங்கள்.

தினந்தோறும் பகல் 12-மணிக்கு வேதாகம ஸ்திரீகள் புறப்பட்டு கிராமங்களுக்குப் போகிறார்கள். வாரத்தில் இரண்டு மூன்று முறை அவர்களில் நான்குபேர் காலை 6-மணிக்காவது அல்லது அதற்கு முன்னமேயாவது புறப்பட்டு, ஆண்கள் வயலில் வேலை செய்ய வீட்டை விட்டு புறப்பட்டு போவதற்கு முன்னமேயே சில கிராமங்களில் வந்து சேருவார்கள். சூரியோதயத்திற்கு ஒன்று அல்லது ஒன்றரை மணிக்கு முன்கூட அக்கிராம வாசிகள் கம்பளியால் சரீரத்தை மூடி, வேலையொன்றுமின்றி பேசிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் சமயமே, இந்த வேதாகம ஸ்திரீகள் அவர்களை சாவதானமாய்ப் பார்த்து, அவர்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்ல ஏற்ற சமயம். அச்சமயங்களில் அவர்கள் சொல்லும் விஷயத்தை ஆவலாய்க் கேட்கிறார்கள். சாதாரணமாய் அவர்கள் போகுமிடங்களில் கீதங்கள் பாடி பிரசங்கம் செய்தலும், தாங்கள் கொண்டு வந்திருக்கும்

அந்தப் பிரதிகளை வாசிக்கத் தெரிந்தோருக்குக் கொடுப்பார்கள். இதன் பிறகு தனித்தனியாய் சிலரோடு கிறிஸ்துவைப்பற்றி பேசுவார்கள். கிராமங்களிலிருந்தும் பிள்ளைகளோடும் அதிக நேரம் செலவழிப்பார்கள்.

சென்ற வருஷத்தில் இவர்களில் பத்துபேர்கள் ஆண்டவரைக் குறித்த சந்தோஷ செய்தியை பத்தாயிரத்துக்குமேலான ஆயிரக்கணக்கான பிரயாணிகளுக்குப் பிரசங்கித்தார்கள். இவர்கள் அக்காலத்தில் விசேஷித்த வைராக்கியத்துடன் தங்களை ஆயத்தம்பண்ணி தங்கள் வேலையைச்செய்ய, ஜனங்கள் கூட்டம்கூட்டமாய் அவர்களைக் கேட்டார்கள். ஒருமுறை தங்களாலியன்றமட்டும் பாடிப் பிரசங்கித்தும் திரும்பிவருகையில், மூன்றாமிடத்திலிருந்து பிரசங்கிக்க வரும்படி அவர்களுக்கு அழைப்பு வந்தது. சிறிதும் களைத்துப்போகாமல் அவர்களண்டை திரும்பிப்போய் அவர்களுக்குக் கிறிஸ்துவை அறிவிக்கத் தொடங்கினபோது ஜனங்கள் ஏராளமாய்க்கூடி வசனத்தைக் கேட்டார்கள். இவற்றின்பலன் என்னவாகுமென்று நாம் சொல்லமுடியாது. இவர்களில் சிலர் இங்கே கேட்ட தேவனுடைய வசனத்தினால் மனந்திரும்பவும், ஆவியானவருடைய நடத்துதலினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவுமிடமாகும் என்று நம்புகிறோம்.

Printed & published by K. T. Paul, at the T.A.C. Press, Salem.

OFFICE OF THE REGISTRAR OF ... 23 NOV 1915 MADRAS

இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை

THE TAMIL ORGAN OF THE NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA.

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

Vol. VII. செப்டம்பர் 1915. No. 9

என் முழுநெஞ்சையும் அன்பாய்
நீர், சுவாமி என்றைக்கும்
அகமும் ஆலயமுமாய்
படைத்துக் கொண்டிரும்,
நீர் அதை ஆளும், கர்த்தரே,
அத்தால் நான் பாக்கியவான்
நான் உலகத்தோனல்லவே,
நான் உம்முடையவன்.

... ஆவணக் காப்பக ... சென்னை-600 008.

## கடிதங்களின் பலன்

மகாராட்டிய நாட்டில் வேலைசெய்யும் என்.வி. திலக் போதகர் தான் கல்வி அபிவிர்த்திக்காகச் செய்து வரும் ஊழியத்தைக் குறித்து எழுதிய ரிப்போர்ட்டில் பின்வருமாறு கூறுகிறார். ‘கடிதங்களினால் நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவரும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளேன். ஒவ்வொரு கடிதமும் ஜெபத்துடன் அனுப்பப்படுகிறது. இச்சுவிசேஷ முறையின் பலனாய் நான்கு பிராமணர் கிறிஸ்தவரானார்கள். அவர்களில் ஒருவன் சத்தியத்தைக்கண்டுபிடிக்க இந்தியா முழுவதும் சுற்றி, மூன்று பாஷைகளைப் பேசவல்ல ஓர் சந்நியாசி. இன்னும் பன்னிருவர் கடிதங்கள் மூலமாய்ச் சத்தியத்தை ஆராய்கிறார்கள். சில வேளைகளில் கிறிஸ்துவே தேவன் என்னும் அறிவு வந்த மாத்திரத்தில், அவரை ஏற்றுக்கொள்ள மனமின்றி கடிதமெழுதுவதை நிறுத்தி விடுகிறார்கள். இது மிகவும் பரிதாபம். ஆயினும் நான் அவர்களுக்காகவும் ஜெபிக்க ஓய்வதில்லை. பிரசங்கிப்பதைவிட, ஜெபிப்பதே வல்லமையுள்ளது என்னும் சத்தியத்தை நான் பலமாய் உணருகிறேன்’. இவ்வார்த்தைகள் நமக்கு ஒரு சிறந்த போதனை.

## மேரி.

இவள் தெலுங்கு நாட்டில் கீழ் குலத்தைச் சேர்ந்த ஓர் கிறிஸ்தவள். இவள் கிறிஸ்துவுக்காகச் செய்துவரும் வேலை மிக அற்புதமானது. இவளால் அநேகர் கிறிஸ்தவர்களாகியிருப்பது நமக்குச் சந்தோஷம் விளைவிக்கும்.

இவள் புருஷன் ஒரு சர்க்கார்ப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயனாயிருந்தான். இவளும் உபாத்தியாயினி வேலைக்குரிய பரீட்சையில் தேறினவளாதலால், இவளும் புருஷனோடு வேலை செய்து வந்தாள். இவள் புருஷன் இறந்துபோகவே, இவளுக்குச் சர்க்கார்ப்பள்ளிக்கூடத்திலே நல்ல சம்பளமான ஒரு வேலை அகப்பட்டது. ஆகிலும் அவ்வேலை பார்த்தால், கிறிஸ்தவ ஊழியம் செய்ய முடியாதென்று அறிந்து, உடனே அவ்வேலையை விட்டு, வயல்களிலே கூலி வேலை செய்து ஜீவனம் செய்து வந்தாள்.

இவள் புருஷன் உயிரோடிருக்கும்போதே வேலை யொழிந்த சாயங்கால வேளையிலும் ஓய்வுநாட்களிலும் தன்னைச் சுற்றியுள்ள இதரமதஸ்தர்களுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்தாள். இப்படிச் செய்வதற்குச் சர்க்கார் உத்தியோகஸ்தர் இடம் கொடாததனால் தன் வேலையையும் விட்டுக் கூலி வேலை செய்யத் தொடங்கினாள். இவள் கிறிஸ்துவுக்குச் செய்யும் ஊழியத்தினால், வருஷா வருஷம் எட்டு, பத்து, பன்னிரண்டு பேரும் அதற்கு மேலும் தொடர்ச்சியாய்க் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்து வருகிறார்கள். இவளுடைய ஊழியத்தைக் குறித்துக் கேள்விப்படும் அநேகர் இவளிருக்கும் கிராமத்துக்குப் போய் தாங்கள் கேள்விப்பட்டதிலும் ஆச்சரியமான காரியங்களை நேரேயறிகிறார்கள்.

மேரி தன்னைக் குறித்துப் பேசுபவளன்று. அவளுடைய வேலையை அக்கிராமவாசிகளின் நற்சாட்சியினால்தான் அறியலாம். அவளுடைய ஊழியத்தைக் குறித்து ஒரு அம்மாள் விசாரித்தபோது, கிராமவாசிகளில் வயது சென்ற ஒருவன் சொன்னது: 'மேரியே எங்கள் கிராமத்தில் சிறந்த தேவ ஊழியம் செய்பவள். அவள் யாரைக் கண்டாலும் கிறிஸ்துவைக் குறித்துப் பேசுவாள்; வயலிலே நடும்போதும் பருத்தி பொறுக்கும்போதும் பக்கத்திலுள்ள ஸ்திரீகளுக்குக் கிறிஸ்துவைக் குறித்தும், அவர் அன்பின் மரணத்தைக் குறித்தும், அவருடைய இரட்சிப்பைக்குறித்தும் சொல்லுவாள். பாதையில் போகும்போது அவளைச்சந்திப்பவர்களுக்கும் அப்-



படியே போதிப்பாள். அதன் பயனாய், திடீரென்று ஒரு ஸ்திரீயோ, அல்லது அவள் குடும்பமோ உபதேசியாரிடத்தில் உபதேசம் பெற்று வருவதாக நாங்கள் அறிவோம். என்னைச் சேர்ந்த குடும்பங்களில் மாத்திரம் நானும் என் பெண்சாதியும் இன்னும் 15-பேரும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எங்களைபோல் இன்னம் எவ்வளவு பேரோ கிறிஸ்துவை அவளால் கண்டடைந்திருக்கிறார்கள். அவள் பெய்டாகவே கிறிஸ்துவின் நற்சாட்சி என்பது இவ்வயோதிபன் சொன்னதுபோலவே அவளையறிந்த யாவரும் சொல்லுவார்கள்.

இவள் அநேக வருஷங்களாய் ஒரு இராப்பள்ளிக்கூடம் நடத்தி வருகிறாள். இவளிடத்தில் கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு மனமசைவுபெற்ற பெண்கள் சத்திய வேதத்தை வாசிக்கவும் கிறிஸ்தவ ஞானப்பாட்டுகளைப் பாடவும் அங்கே போதிக்கப்படுகிறார்கள்.

சில வருஷங்களுக்குமுன் வயலில் வேலை செய்து கொண்டிருக்கும் மூன்று இளம் பெண்களின் அன்பைக் கவர்ந்து, அவர்களுக்கு ஒவ்வொரு இரவும் தன் பள்ளிக்கூடத்தில் வாசிக்கக் கற்பித்து வந்தாள். சீக்கிரத்தில் அவர்களில் இரண்டு பேருடைய தாய்மாரும் சகோதரிகளும் கிறிஸ்தவ உபதேசம்பெற ஆரம்பித்து அவ்விரண்டு குடும்பங்களில் ஒன்பதுபேர் கடந்த வருஷம் ஞானஸ்நானம் பெற்றார்கள். இராப்பள்ளிக்கூடத்தில் கற்று வந்தமற்றொரு விதவை தன் பெற்றோரனுமதியின்றியே ஞானஸ்நானம் பெற்று, தன் அஞ்ஞான உறவினரிடத்தேயிருந்து, தன் சிறந்த ஜீவியத்தினாலும், தன் அனுதின ஜெபத்தினாலும் தேவ ஆராதனைகளுக்குத் தவறாமல் போவதனாலும் கிறிஸ்துவுக்கு நற்சாட்சி பகர்ந்து வருகிறாள்.

மேரி அநேக வருஷங்களாய் கீழ் ஜாதியாரிடத்தில் தான் வேலை செய்யக் கூடியதாயிருந்தது. இப்பொழுதோ அவளுடைய தூய்மையும் சுயவெறுப்பும் நிறைந்த ஜீவியத்தின் சிறப்பைக் கண்டு மேன்குல மக்களும் அவளைத் தங்கள் வீடுகளிலழைத்து, தங்களுக்குக் கற்பிக்கக் கேட்கிறார்கள். ஐரோப்பிய ஸெனானா ஸ்திரீகள் கற்பிக்கும் தையல் வேலை முதலியவை கற்பிக்க மேரிக்குத்தெரியாது. அவள் கிறிஸ்துவின் ஜீவியத்தையே சொல்லி, அவர்களை வாசிக்கப் பழக்குகிறாள்.

மேரியைப் போன்றவர்கள் கிறிஸ்துவுக்கு மேன்மையான ஊழியம் செய்யக்கூடும். சம்பளம் பெற்று வேலை செய்பவர்களின் வேலை

யும் நம் நாட்டுக்கவசியம். ஆகிலும் தங்கள் தங்கள் ஊரிலே கிறிஸ்துவுக்கென்று வைராக்கியம் கொண்டு தங்கள் நேரத்தை அநேகர் செலவழிக்க வேண்டுமென்று நம்மாண்டவர் விரும்புகிறார். நம் நகரங்களும், கிராமங்களும் கிறிஸ்தவ சபையால் நிறைந்த விடங்களாகவேண்டுமாகில், அநேக மேரிகள் தேவை. ஆண்களும் பெண்களும் நகரிலும், கிராமத்திலும் கிறிஸ்துவின் சிறந்த சாட்சிகளாய் விளங்கினாலன்றி, இந்தியா கிறிஸ்தவ நாடாவதெப்படி?

---

## நமது சங்கத்தின் பத்தாம் வருஷ மகோற்சவம்.

---

மகோற்சவ நாள் :—**1915**-௵ கிறிஸ்மஸ்தினம்.

மகோற்சவ இடம் :—அலகபாத்.

நமது சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு சில மாதங்களுக்குள் பத்து வருஷம் முடிவாகிறது. சங்கத்தின் சரித்திரத்தில் முக்கிய காலமாகிய இம்முதல் பத்து வருஷ காலமாய்க் கர்த்தரின் கிருபை நம்முடனிருந்து, நாம் எதிர்பாராத விதமாய் நம்மை ஆசீர்வதித்தது என்பதற்கையமில்லை. நம் ஆண்டவர் தொடங்கிய இந்த ஆச்சரியமான வேலையில், பங்கு பெற்ற பற்பல விடங்களிலுள்ள நம்நேயர் யாவரும் இச்சம்பவம் ஏற்ற பிரகாரம் கொண்டாடப்படவேண்டுமென்று விரும்புவார்கள்.

இவ்விருப்பத்திற்கேற்ப, வரப்போகிற இவ்வருஷக்கிறிஸ்மஸ் காலத்தில் பல மாகாணங்களிலும் நியமிக்கப்பட்டுள்ள நம் சங்கத்தின் காரிய நிருவாகண சபையின் அவயவங்கள் கூடிய முழு இந்தியாவின் கமிட்டியாரும் அலகபாத்தில் கூடுவது உசிதம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1915-௵ டிசம்பர்மீ 24-ம் 25-ம் 26-ம் தேதிகளில் கூட்டம் நடத்தப்படும். நம் சங்கம் பிறந்த நாளாகிய கிறிஸ்மஸ்தினம் (டிசம்பர் 25-ம் உ) ஸ்தோத்திர நாளாகக் கொண்டாடப்படும். இதற்கேற்ற கூட்ட ஒழுங்கு சீக்கிரம் தயார் செய்யப்பட்டு பிரசுரிக்கப்படும். மற்ற இரண்டு நாட்களிலும் சங்கத்தின் காரியங்களைக்குறித்துப் பேசுவார்கள்.

1905-௵ டிசம்பர்மீ கிறிஸ்மஸ்தினம் இச்சங்கம் ஸ்தாபகமானது. 7-மாசாணங்களிலிருந்து வந்து கல்கட்டாவினருகிலுள்ள செராம்பூர் என்னுமிடத்தில் உவில்லியம் கேரியின் புத்தகசாலையில் கூடினார்கள். நம் தேசத்தாரே இச்சுவிசேஷ வேலையை ஆரம்பிப்ப



திலிருக்கும் கஷ்டங்களையுணர்ந்து, மூன்று நாள் ஜெபத்தில் தரித்திருந்து, நம் சங்கத்தின் சட்டங்களை யேற்படுத்தினார்கள். இந்தியாவில் ஊழியம் செய்த சிறந்த கிறிஸ்தவ அடியாரிலொருவராகிய உவில்லியம் கேரியின் அறையில் இந்தியாவின் பல மாகாணங்களிலுமிருந்து வந்த ஸ்தானாபதிகள் கைகோர்த்து, 'ஒன்றாக ஆண்டிருக்கிற' என்று தொடங்கும் தேவஸ்துதியை ஒவ்வொருவரும் தங்கள் சுய பாஷையில் பாடி நமது சங்கத்தை ஆண்டவர் கையில் ஒப்புவித்துத் திரும்பின நாள் முதல் இந்நாள் வரையில் சர்வ மாகாண ஸ்தானாபதிகள் கூடவில்லை. தென்னிந்திய ஸ்தானாபதிகள் பெங்களூரில் 1911-௵ செப்டம்பர் மாதத்திலும், வடவிந்திய ஸ்தானாபதிகள் டெல்லியில் 1912-௵ ஏப்ரில் மாதத்திலும் கூடின போதிலும், இன்னும் எல்லா மாகாண சபிட்டியாரும் ஒன்று கூடி, நம் சங்கத்தின் சட்டங்களை மாற்றவோ, அதன் வேலையைப்பற்றிய தீர்மானங்கள் செய்யவோ இடமிருந்ததில்லை. ஆதலால், இவ்வருஷம் பத்து வருஷ மகோற்சவத்தின் பொருட்டுக் கூடப்போகிற இந்த சர்வ மாகாணக் கூட்டத்தினால் அதிக நன்மை விளையும் என்பது திண்ணம்.

அந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவேண்டிய காரியங்களில் சிலவாவன.

1. சங்கத்தின் பிரதானவிடமாயிருந்து வருகிற சென்னையில் இப்பத்து வருஷமாய் காரியங்கள் நடத்தப்பட்டதுபோல், வேறெந்த மாகாணமாவது சங்கத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாதா வென்பது.

2. பெண்கள் வேலை நம் சங்கத்தில் பரவுதற்கு என்ன ஏற்பாடுகள் செய்வது என்பது

3. மிஷனரி வேலைக்காக நம்மிலுள்ள இளைஞரில் சிறந்தவர்களை எப்படி ஆதாயம் பண்ணக்கூடும் என்பது

இன்னும் மற்ற விஷயங்கள் பின்னறிவிக்கப்படும்.

நம்நேயர் யாவரும் இவ்விசேஷித்தக் கூட்டத்திற்காக விண்ணப்பம் செய்வது அவசியம். ஆண்டவர் இக்கூட்டத்தை தம்முடைய ஆவியினால் நடத்தவும், கர்த்தருடைய வேலை இந்தியாவில் பலமாய் ஸ்தாபிக்கப்பட்டு, தேவராச்சியம் பரம்பவேண்டுமென்னும் ஆண்டவருடைய விருப்பத்தை நாம் மென்மேலும் அறியச் செய்யவும், இம்மகோற்சவத்தின் பலனாய் சுவிசேஷ வாஞ்சையினால் இந்திய சபை

யை பலமாயசைக்கவும், நம் இரட்சகருக்காகவும் நம் நாட்டுக்காகவும் கிரிசனமாயுழைக்க அனேக ஆண்களையும் பெண்களையும் ஏவி எழுப்படவுஞ் நம்முடைய ஆண்டவரை நோக்கிக் கருத்தாய் மன்றாடுவோமாக.

---

## தேவ சமுதாய ஜெபம்.

### தேவஸ்துதி.

அல்லேலூயா
தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்
அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து
அவரைத் துதியுங்கள்
அவருடைய வல்லமையுள்ள கிரியைக்காக
அவரைத் துதியுங்கள்
மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்துக்காக
அவரைத்துதியுங்கள்

சங். 150-1, 2.

---

ஜேம்ஸ் உவில்லியம்ஸ் என்னும் மண்ட்கமரியிலுள்ள சகோதரனின் பக்தி வைராக்கியமான ஊழியத்துக்காகவும்.

நங்கவள்ளியில் சகோதரன் தேவாசிர்வாதம் செய்துவரும் தளரா முயற்சிக்காகவும்,

சாடர்ஜியின் குடும்பத்தினர் கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்ததற்காகவும், சாடர்ஜி நம் சங்கத்தில் ஊழியம் செய்யத் தொடங்கியிருப்பதற்காகவும்,

லுத்தரன் சபைகளின் அவையவங்கள் மிஷனரி வேலையில் மென்மேலும் காட்டிவரும் உற்சாகத்திற்காகவும்,

விசாகப்பட்டணத்திலுள்ள கிளைச் சங்கத்தின் கஷ்டங்கள் நீங்கினதற்காகவும்,

தற்காலத்தில் நடந்துவரும் பெருத்த யுத்தத்தினால் கிறிஸ்தவ சபைதன் அழைப்பையும், உத்தரவாதத்தையும் அறிந்து வருவதற்காகவும்,

நம்முடைய சிநேகிதரும், சங்கத்தின் ஊழியரும் செய்துவரும் வேலையின் வளர்ச்சிக்காகவும் சித்திக்காகவும்,



பலவிடங்களிலுமுள்ள வேத சாஸ்திர கலாசாலையின் போதகாசிரியரும், மாணாக்கரும் கிறிஸ்தவ ஊழியத்தில் காட்டிவரும் வைராக்கியத்திற்காகவும்,

உம்முடைய எல்லாக்கிருபைகளுக்காகவும் உம்மைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். தேவனே.

---

### வேண்டுதல்.

---

உருக்கமான விண்ணப்பம் ஓர் மெய்பலி, அது இரத்தஞ் சிந்தும் பலி, கல்வாரியின் தொடர்ச்சி, கிறிஸ்துவின் பாடுகளை நிரப்புதல்.

ஜோவெட்.

நமது சர்வ மாகாண கமிட்டியார் அலகபாத்தில் நமது சங்கத்தின் பத்தாம் வருஷ மகோற்சவத்திற்காகக் கூடி சங்கத்தின் விஷயங்களைப் பேசும்போது, ஆண்டவருடைய ஆவி அவர்களை நடத்தவும்,

வரப்போகிற இரண்டாம் பத்துவருஷம் முந்தினதைவிட அதிகமாக ஆசீர்வதிக்கப்படவும்,

நமது சங்கத்தின் ஊழியத்தினால் சேர்க்கப்பட்ட சபைகள் மென்மேலும் ஞான ஜீவனிலும், தொகையிலும் பெருகவும்,

பிரயாணக்காரியதரிசியாகிய கனம் கூடம்பாவனம் செய்யும் வேலையினால் நம் கிறிஸ்தவர்களிலனேகர் நம் சங்கத்தின் ஊழியத்தை ஆதரிக்கவும், சுவிசேஷ வேலையில் கருத்துள்ளவர்களாகவும்,

வங்காளத்தில் பிரயாணஞ் செய்துவரும் பாலசுந்தரம் அவர்களும் அங்குள்ள நம்நேயரும் அம்மாகாணத்தில் ஒரு சுவிசேஷ அசைவு உண்டாகச்செய்யும் முயற்சி ஆசீர்வதிக்கப்படவும், அவர் அல்லகபாத் கூட்டத்திற்காகச் செய்யும் ஒழுங்குகள் ஞானமாய் செய்யப்படவும்,

கார்வாரிலே தேவ ஊழியர் மாற்றப்பட்டிருப்பதனால், ஊழியம் கர்த்தருடைய கிருபையால் சித்தித்து, அங்கேயும், நங்கவள்ளியிலும் ஆண்டவருடைய ஊழியர் முதற்பலனை சீக்கிரம் காணவும்,

ஞானபரணம் அவர்கள் எடுத்திருக்கும் புதிய வேலையிலே சித்திபெறவும், பாஷையை நன்றாய்க் கற்று, சீக்கிரம் ரீவா மாகாணத்தில் சுவிசேஷ வேலையை கர்த்தருடைய ஒத்தாசையினால் ஆரம்பிக்கவும், அதற்கென்று அவரும் அவர் மனைவியும் செய்துவரும் ஆயத்தமெல்லாம் கர்த்தரால் திரளாய் ஆசீர்வதிக்கப்படவும்,

யுத்த காலத்தில் கஷ்டத்திற்குட்பட்டிருக்கும் பல லுத்தரன் மிஷன்கள் இந்தக் கஷ்டகாலத்திலும் கர்த்தருடைய வேலையில் தங்களுக்கிருக்கும் வைராக்கியத்தைக் காண்பித்து, ரீவாவின் சுவிசேஷ வேலையாரம்பிக்க ஏற்பாடுகள் செய்யவும்,

நம் சங்கத்தின் காரியங்களை அப்போதைக்கப்போது அறிவித்துவரும் நமது சங்கப்பத்திரிகைகளை நம் கிறிஸ்தவர்கள் சுவிசேஷ வாஞ்சையினால் நிரப்பப்படுவதற்காக ஆண்டவர் பலமாய் உபயோகிக்கவும்.

அடியாராகிய நாங்கள் உம்மைத் தாழ்மையாய் மன்றாடுகிறோம், அருமையுள்ள ஆண்டவரே.

## பத்திராதிபர் குறிப்பு

நமது சங்கக் காரியதரிசிகளிலொருவராகிய கனம் சாமுவேல் ஞானபரணத்துக்கும் ஜபல்பூர் ஆனந்தாய் ஜூலியட் சீனிவாசம்மாளுக்கும் சிந்துவாரா சுவேதிஷ் மிஷன் ஆலயத்தில் சென்ற ஜூலை மீ 22-உ நடந்த திருவிவாகத்தை அதிக சந்தோஷத்துடன் அறிவிக்கிறோம். சில வருஷங்களாய் தமிழ் நாட்டில் பிரயாணக் காரியதரிசியாய் நம்மிலநேகரைக்கண்டு நம் சங்கத்தைக்குறித்துப் பேசி வந்ததை நம்மிலனேகர் அறிவோம். இப்பத்திரிகையையும் மூன்று வருஷங்களுக்கு முன்னே அவரே நடத்தி வந்தார். தற்சமயம் ஹிந்தி பாஷையைக்கற்று மத்திய மாகாணங்களின் காரியதரிசியாகவிருக்கிறார். லுத்தரன் சபைகள் ரீவா என்னும் சுதேச ராஜாங்க நாட்டில் மிஷன் வேலை ஆரம்பிக்கும்போது, அங்கு மிஷனரியாக அனுப்பப்படுவார். இம்மணமக்கள் திரளான ஆசீர்வாதங்களோடு, நம்மாண்டவருக்கு நல்லூழியம் செய்வார்களென்றுக் கோருகிறோம்.

Printed and published by Mr. K. T. Paul, at the T. A. C. Press, Salem.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 20 NOV 1915

இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை

THE TAMIL ORGAN OF THE NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

Vol. VII. அக்டோபர் 1915. No. 10

# யோவான் ஹஸ்.

## JOHN HUSS.

ஆகஸ்டு மாதத் தீபிகையில் மகமதியருக்காக உழைத்த ரெய்மண்ட் லல் கிறிஸ்துவுக்காக சாட்சி கொடுத்து, பகைஞரால் கல்லெறியுண்டு கொல்லப்பட்டது இந் நடன் 600 வருஷமாயிற்று என்று சொன்னோம். இம்மாதத் தீபிகையில் 500 வருஷங்களுக்கு முன் சத்தியத்திற்காக மகா வீரமாய் சாட்சி கொடுத்து மரித்த யோவான் ஹஸ் என்னும் மகானின் ஜீவியத்தின் சில விஷயங்களை நினைவு கூர்ந்து ஆண்டவருடைய வேலை அவருடைய சத்துருக்களின் பொல்லாப்புகளால் தடைபடவொட்டாது என்று பார்ப்போம்.

யோவான் விக்லிப் என்னும் இங்கிலாந்து தேசத்துப் போதகரின் புஸ்தகங்கள் பொஹீமியா நாட்டில் வாசிக்கப்பட்டன. பொஹீமியரும் மென்மேலும் சுவிசேஷ போதகத்தை விரும்பி வந்தார்கள். யோவான் ஹஸ் அந்நாட்டின் பிரதான ஸ்தானமாகிய பிராக் என்னும் ஊரிலுள்ள பெத்லகேம் ஆலயத்தின் குருவாய் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையே போதித்து வந்தார். தேவவசனம் பரம்புவதினால் பாப்பு மார்க்கத்தின் தப்பறையான போதகங்கள் கண்டிக்கப்படுமென்று பயந்த 23-ம் யோவான் என்னும் பாப்பு அவரைப் பதிதனே என்று கண்டுபிடித்து சிட்சை செய்ய தன்னாலோசனைக்காரரில் ஒருவனுடைய விசாரணைக்கு ஒப்புவித்தார். அவனோ அவரை ரோமைக்கு வரச்சொல்ல, பொஹீமியா நாட்டு பிரபுக்களும் ராணியும் செய்த விண்ணப்பத்துக்கேற்ப வென்சேஸ்லஸ் என்னும் பொஹீமியா ராஜா தன் ஸ்தானாதிபதிகளையனுப்பி ஹஸ் ரோமையில்

லாதவர் என்று காண்பித்து தன் ராச்சியத்தில் பதித போதகம் தலையெடுக்கிறதென்ற சந்தேகத்துக்கிடமிருந்தால், பாப்புவின் ஆட்கள் பொகிமியா நாட்டின் செலவில் தன் நாட்டுக்கு வந்து காரியங்களைச்சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஹுஸ் தன் ஆட்களையும் தனக்குக் குறிக்கப்பட்ட நகருக்கு முன்னேயனுப்பி, தன் போதகம் தப்பறையானதல்லவென்று காண்பித்தார். ஆயினும் இவ்விஷயங்களைக் கொஞ்சமும் கவனியாமல், அவர் தன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தானே வரவில்லையென்று அவரைச் சபையைவிட்டு நீக்கினான்.

பொகிமிய நாட்டாரோ பாப்புவையும், சபையின் குருக்களையும் அவமதித்து வந்தார்கள். அவர்களுடைய ஜீவியம் மகாக்கேவலமாயிருந்ததால், அவர்களைக்குற்றம் சாட்டியே வந்தார்கள். கிறிஸ்துவின் மந்தை தன் உண்மைபற்ற மேய்ப்பருக்குத்தன் ரோமத்தையும் பாலையும் கொடுத்தபோதிலும், போசனம் ஒன்றும் பெறவில்லையென்று, சனங்களிடத்திலிருந்து சகலத்தையும் பெற்று அவர்களுக்கு தேவவசனம், நன்னடக்கையின் முன்மாதிரி என்னும் போசனத்தைக்கொடாதுவந்த போதகரைக் கடிந்து, பேதுருவைப் பவுல் கடிந்துகொண்டதுபோல் (கலா. 2) குருமாரைச் சபையும் நியாயந்தீர்க்கக்கூடும் என்று வாதித்து வந்தார்கள்.

சபைக்கும் குருக்களுக்கும் ஒரு பெரிய பிரிவு நேரிடவே, இதற்குக் காரணமாகிய ஹுஸ் இனியாவது எந்தக் கோவிலிலும் பேசக்கூடாதென்று பாப்புவின் ஆட்கள் அரசனின் உதவியோடு உத்திரவு செய்தார்கள். அக்கட்டளை பிசகென்றும், சபைக்குத்தலைவர் பாப்புவன்று, கிறிஸ்துவேயென்றும், பாப்பு பிசாசின் கிரியைகளைச் செய்யும் போது அவன் பராபரனுடைய சபையைச்சேர்ந்தவனல்லவென்றும், அக்காலத்தில் மூன்று பாப்புகளில் ஒவ்வொருவரும் தன் அதிகாரத்தை நிலைநிறுத்தப்பார்த்து வந்ததால், பாப்புவின் சொல்லல்ல, சத்தியவேதமே சபையின் நடக்கைக்குப் பிரமாணமென்றும் வற்புறுத்தினார்கள். ஆகிலும் அரசன் பாப்புவின் அதிகாரத்தை நிலைநிறுத்தப்பார்த்ததால், ஹுஸ் பிராகிலிருக்கக்கூடாதென்று அம்முக்கிய நகரைவிட்டு அகற்றப்பட்டான். ஆகிலும் அவன் போனவிடமெல்லாம் ஜனங்கள் ஏராளமாய் அவன் பிரசங்கங்களைக் கேட்கப்போனார்கள். அவன் போகிற விடங்களிலெல்லாம் முக்கிய ஆராதனைகள் நிறுத்தப்படவே, ஜனங்கள் தங்கள் குருக்களைக் குறித்து ராஜாவுக்கு முறையிட்டார்கள். அவர்கள் மற்றவர்கள் சொத்தை அபகரிக்கிறவர்களும், துன்மார்க்கரும், விபசார ஜீவியத்தில் நிலைத்



திருக்கிறவர்களுமென்று ராஜாவும் கண்டான். ஜனங்களுடைய எரிச்சலும் நியாயமானதென்று அறிந்து, அப்பேர்ப்பட்ட குருக்களிலனேகரைத் தண்டித்தான். இதனால் குருக்கள் யாவரும் பயந்து, சுவிசேஷப்பிரசங்கியாகிய ஹுஸ் செய்யுமொன்றையும் தடுக்காதிருந்தனர். திரும்ப அவர் பிராக் நகரில் பெத்லகேம் ஆலயத்தில் பிரசங்கிக்க ஆரம்பித்தார்.

இக்காலத்தில் கான்ஸ்டன்ஸ் நகரில் சிகிஸ்மண்ட் ராயனாலும் 23-யோவான் என்னும் பாப்புவினாலும் ஒரு பெருங்கூட்டம் கூட்டப்பட்டது. அக்காலத்தில் மூன்று பாப்புகள் நியமிக்கப்பட்டு, கிறிஸ்தவ சபை மூன்று கட்சியாகப் பிரிந்திருந்தபடியால், இவ்விஷயத்தைச் சீர்ப்படுத்த இக்கூட்டம் கூட்டப்பட்டது. ஆயினும் பாப்பு யோவானின் முக்கிய நோக்கம் பொகிமியாவின் சுவிசேஷப் பிரசங்கியையும், அப்பிரசங்கத்தையும் குலைக்கவேண்டுமென்பதே. சிகிஸ்மண்ட் தன் ஆட்களிலிருவரை அனுப்பி, ஹுஸ் பயமின்றி அக்கூட்டத்துக்கு வரலாமென்றும், அவருக்கு ஒரு தீங்கும் வராதென்றும் அக்கூட்டத்தார் என்ன தீர்மானம் செய்தாலும், அவரைத் திரும்ப பத்திரமாய் பிராக் நகருக்கு அனுப்புவேன் என்பதற்குத்தான் ஜாமீன் என்றும் சொல்லி அவரை கான்ஸ்டன்ஸ் கூட்டத்துக்கு வரக் கேட்டுக்கொண்டான். ஹுஸ் தான் குற்றமில்லாதவராதலால் பயமின்றி போகலாம் என்றும் அங்கே தன்னுடைய போதகத்தைத் தெளிவாக்கலாமென்றும், அப்போதகத்தில் ஏதேனும் தப்பிதமிருந்தால், சந்தோஷத்துடன் அதைத் திருத்திக் கொள்ளலாமென்றும் எண்ணி ராயனுடைய வேண்டுகோளுக்கிணங்கி அங்கு போகத்தீர்மானித்தார். போகுமுன் பொகிமியா நாட்டின் ராஜ சபையில் தன் விஷயத்தைச்சொல்லி, தன் போதகத்தில் யாதாவது தப்பிதமுண்டோவென்று அத்தியக்ஷரைக்கேட்க, அவர் தப்பறையானதொன்றையும் ஹுஸ் போதித்ததேயில்லையென்று யாவருமறியச்சொல்லி அவருக்கு நற்சாட்சி பத்திரம் கொடுக்க, அவர் அதைப் பெற்று 1414-ஆம் அக்டோபர்-மீ ராயனுடைய ஸ்தானாபதிகளாகிய யோவான்ஸ்லாட், ச்லூம யோவான் என்பவர்களோடு புறப்பட்டுப் போனார். அவர் சென்றவிடங்களிலெல்லாம், விசேஷமாக ஜெர்மன் நாடுகளிலெங்கும் திரளான ஜனங்கள் அவரைப்பார்க்க வந்தார்கள். பிரபுக்களும், நகராதிபதிகளும், சிலவிடங்களில் குருக்களும் அவரை அதிக மரியாதையோடு ஏற்றுக்கொண்டார்கள். அவர் வரப்போகிறார் என்று சனங்களுக்கு தெரிந்திருந்தால், அவர் செல்லும் பாதையெல்லாம் திரளான ஜனங்கள் செறிந்து நின்றனர். அங்கங்கே அவர் ஜனங்களுக்கு வெகுநேரம் உபந்நியாசித்தார்.

கான்ஸ்டன்ஸ் நகரைச்சேர்ந்தவுடன், ராயனின் ஸ்தானாபதிகள் பாப்புவைக்கண்டு, ஹூஸ் ராயனுடைய பாதுகாப்புச் சீட்டு பெற்று வந்ததாகச்சொல்லவே, பாப்புவும் ஹூஸ் தன் சகோதரனைக் கொன்றிருந்தபோதிலும் அவருக்கு ஒரு தீங்கும் வராது, அவன் எங்கும் தன் இஷ்டப்படி போகலாம் என்று வாக்களித்தான். ஆயினும் அவர் வந்த ஒரு மாதத்திற்குள் அவரைச்சிறையிலடைத்தார்கள். க்லூம் யோவான் அவருக்காக எவ்வளவோ போராடியும் பிரயோசனமில்லாமல் போயிற்று.

ராயனுடைய பெருங்கூட்டத்துக்குக் கொண்டுவரப்படாமலே அவர்மேல் குற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, பாப்புவின் ஆட்கள் அடிக்கடி அவரை அலட்டி வந்தார்கள். அவர் வியாதிப்பட்டபோதிலும் அவர்கள் ஓயவில்லை. பொஹீமிய நாட்டாரும் அவர் நிலைமையை அறிந்து ராயனுக்கு மனுப்பண்ணியும், ஒரு நன்மையும் பிறக்கவில்லை. ராயனே மடங்களில் நடத்தப்பட்ட விசாரணைக்கு வந்து, நான் உனக்குக் காப்புச்சீட்டு கொடுத்தது வாஸ்தவமே, ஆகிலும் நீ பதிதனாயிருக்குமட்டும் உனக்கு ஒரு நன்மையும் செய்யப்படாது. குற்றமெல்லாம் உண்மை என்று மனஸ்தாபத்துடன் ஒப்புக்கொள், அப்போது நீ மன்னிக்கப்படுவாய் என்றான். அவர்மேல் சாட்டப்பட்ட 39 குற்றங்களில் அவர் ஒப்புக்கொண்டது சிலதே. மற்றவைகளெல்லாம் அவர்மேல் பொய்யாய்ச்சாட்டப்பட்டவை. தாம் சொல்லியிராதவைகளை மறுத்து, தாம் சொல்லியிருந்த சில உண்மையான விஷயங்களை கான்ஸ்டன்ஸ் மகா கூட்டத்தார் குற்றமானவைகளென்று தமக்குக்காட்டும் பக்ஷத்தில் அவைகள் தப்பறையானவையென்று ஒப்புக்கொள்ளுவேன், என் போதகத்தில் என்ன குற்றங்களுண்டு என்று திருச்சபையின் போதகரில் சிறந்தவர்கள் மாத்திரம் காட்டுவார்களோ, அவற்றை உடனே யாவரும் அறிய விட்டுவிட ஆயத்தமாயிருக்கிறேன், இந்நோக்கத்தோடுதான் மனப்பூர்வமாய் இங்கு வரச்சம்மதித்தேன் என்று தெளிவாக அவர்களுக்குச்சொல்லியும், அவரைக்கேளாமலே, கடைசியாக அவரைப்பதிதனென்று தீர்த்தார்கள். அவர்மேல் சாட்டப்பட்டக்குற்றங்களில் சில:— தெய்வத்துவத்திலே நாலாம் ஆள் ஒருவர் உண்டு என்று சொன்னார்; மேலும், பாப்புவின் அதிகாரத்திலிருந்து கிறிஸ்துவுக்குத் தன் விசாரணையை ஒப்புவித்தார் என்பவையே.

பதிதர் சுட்டெரிக்கப்பட வேண்டுமென்பது சட்டமாதலால், குறிக்கப்பட்ட நாளில் அவர் ஒரு பெரிய சபை கூடியுள்ள கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டார். மூத்த மூத்த அவருடைய குரு



ஆதிக்கங்களைப்பிரிக்க ஒழுங்கு செய்தார்கள். அவருக்கென்று ஆயத்தம் பண்ணியிருந்த மேடையில் குருவின் உடுப்பையெல்லாம் தம்மேல் போட்டு நின்று, தாம் பாவிகளின் நிமித்தம் சத்தியத்தை மறுக்கலாகாதென்றும், தன் மனசாட்சியின்படி கிறிஸ்துவுக்குப் பிரீதியானவைகளையே தான் செய்து வந்தேன் என்றும் தீரமான பொதுப்பிரசங்கம் செய்யப்பாடுதலையடைந்தாம் போதித்து வந்த சத்தியங்களைத் தான் ஒருபோதும் மறுக்கமாட்டேன் என்றும் அறிவித்தரிய இச்சரீரம் இன்றைக்குச் சுட்டெரியப்பட ஆயத்தமாயிருக்கிறேன் என்றும் அழுகையுடனே சபைக்குக் குற்றவாளி பேசவேண்டுமென்றிருக்க இரக்கத்தின் பொருட்டுச்சொன்னார். அவரைப்பிடிவாதக்காரரென்று அவரைச்சபித்து, குறிக்கப்பட்ட ஏழு அத்தியட்சர் அவர் உடுப்பையெல்லாம் கழற்றி 'சபிக்கப்பட்ட யூதாசே, உன் ஆசீர்வாதத்தையும், உன் ஆத்தும இரட்சிப்பையும் உன்னைவிட்டு எடுத்துப்போடுகிறோம்' என்றார்கள். கடைசியாக சவரம் பண்ணப்பட்ட தலையுச்சியை எப்படி அழிக்கலாமென்று சிலகாலம் தர்க்கித்து, கத்தரிக்கோலினால் தலையுச்சித்தோலை வெட்டினார்கள். பிறகு அவர் தலையின்மேல் மூன்று பிசாசுகள் வரையப்பட்டு, 'முக்கிய பதிதன்' என்னும் வாசகம் எழுதப்பட்டிருந்த ஒரு கடுதாசிக்கிரீடத்தை வைத்தார்கள். அவரோ கிறிஸ்து தம்முடைய சத்துருக்களின் கைகளில் அனுபவித்த அவமானத்தை நினைவுகூர்ந்து, ஆறுதலடைந்தார். அத்தியட்சரில் ஒருவர் 'உன் ஆத்துமாவைப் பிசாசுக்கு ஒப்புவிக்கிறோம்' என்று சொல்ல, ஹூஸ் 'கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவே, நானோ என் ஆவியை உம்முடைய கரங்களிலே ஒப்புவிக்கிறேன்' என்று உரக்கச்சொன்னார். பின்பு அவர் உலக அதிகாரிகளின் கையில் ஒப்புவிக்கப்பட்டு, மரணத்துக்கு ஆயத்தமானார். சுட்டெரிக்கப்படக் குறிக்கப்பட்ட இடத்திற்கு அவர் கொண்டுவரப்பட்டபோது அவர் முழங்காற்படியிட்டு உரத்த சத்தமாய் ஜெபித்தார். பதிதனெனத்தீர்க்கப்பட்டதால், அவர் மேற்கு புறம் பார்க்க நிறுத்தப்பட்டு, மரத்தில் சங்கிலியால் கட்டப்பட்டார். எரிப்பதற்காக அவரை விறகு கட்டைகளாலும் வைக்கோலினாலும் மூடினார்கள். அவரைச் சுட்டெரிக்க ராயனால் உத்தரவு பெற்றிருந்த பவேரியா பிரபு 'உன் போதகத்தை இப்போதாவது மறுதலிப்பாயா' என்று கேட்க, தப்பறையொன்றும் என்னால் போதிக்கப்பட்டதேயில்லை. நான் யாவருக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், மெய்யாய்க்குணப்பட்டவர்களுக்கு பாவ மன்னிப்பின் நிச்சயத்தையுமே பிரசங்கித்தேன். அதற்காக இப்போது தைரியத்தோடும், சந்தோஷத்தோடும் மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறேன்' என்று சொல்ல, தீ எங்கும் அவரைச் சுற்றிப்பரவினது. அப்போதவர் 'உயிருள்ள தேவனின் குமாரனே,

இயேசுக்கிறிஸ்துவே, எனக்கிரங்கும்' என்று மும்முறை உரத்த சத்தமாய்ப்பாடினார். தீ அவிந்ததும், அவர் சிரசு வேறாகியிருப்பதைப் பார்த்து உருமாறி விழுந்து கிடந்த சரீரப்பகுதிகளைத் துண்டு துண்டாக்கி, திரும்பவும் எரித்து, சாம்பலை ரோன் நதியில் எறிந்தார்கள். மனிதர் ஒரு விடத்திலும் அடையடக்கம் செய்து அவரை கனம்பண்ணாதபடியிருக்கவேயப்படி அவர் தூளையும் நதியில் போட்டபோதிலும், இந்த வீரதி வீரனின் பெயர் அழிந்துபோகவேயில்லை. இவருடைய ஆவி எங்கும் பரம்பி, கடைசியாக ஐரோப்பா முழுவதும் அவிக்கப்படாத அக்கினியாய்ப் பரம்பிற்று. லூத்தர், சுவிங்லி, கல்வீன், நாக்ஸ் என்பவர்கள் எழும்ப, அநேக நாடுகள் புராட்டஸ்டாண்ட் நாடுகளாயின. பாப்புவின் மார்க்கமும், பிறகு பல விஷயங்களிலும் சீர்பட்டது.

## துருக்கி நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்டிருக்கும் கஷ்டம்.

## Distress of the Christians of Turkey.

இங்கிலாந்து, பிரான்சு, ருஷியா ஓர் கட்சியாக துருக்கியோடு செய்துவரும் போரினால், அந்நாட்டிலும், இன்னம் சில மகமதிய நாடுகளிலும் கிறிஸ்தவர்களுக்கு அதிகக் கஷ்டம் நேரிட்டிருக்கிறது. அநேக ஆர்மீனியக்கிறிஸ்தவர்களும், இன்னும் மற்றக் கிறிஸ்தவர்களும், பொருளையும், உயிரையும் இழந்து வருகிறார்கள். தாய் தகப்பன்மார் வெட்டுண்டு போவதனால், அநாதப்பிள்ளைகளாகும் சிறுவர்களும் சிறுமிகளும் 5, 10-ரூபாய்க்குக் கைதிகளாக விற்கப்படுகிறார்கள். கிறிஸ்துவின் எதிரி அவருடைய பிள்ளைகளை வெகுவாய்ப் பகைத்து, இம்சித்து வருகிறான். கிறிஸ்தவர்களாகிய யாவரும், இந்தப்பெரும் தீங்கை மனதில் வைத்து, துன்பத்திலுள்ளவர்களுக்காக மன்றாடுவோமாக. இத்துன்பம் பயங்கரமாய்ப் பரவிவருகிறது.

## நம் சங்கத்துத் தமிழ் கமிட்டியார்.

## N. M. S. Tamil Committee

ஆகஸ்டுமீ 14-உ தமிழ் கமிட்டியார் அங்கு பல விஷயங்களை யோசிக்கவும், அவ்வூரில் நம் நண்பரைக் கண்டு பேசவும் திருச்சிநப்பள்ளியில் கூடினார்கள். நமது பிரயாணக்காரியதரிசியாகிய சகோதரன் கடம்பாவனம் அவ்விடத்திற்குச் முன்னமே சென்று, அங்குள்ள இங்கிலாந்து, லூத்தரன், வெஸ்லியன் சபைகளைச் சேர்ந்தக் கிறிஸ்தவர்களைச் சந்தித்து, பலவிடங்களிலும் கூட்டம் நட



த்தி, நம்முடைய வேலையைக் குறித்துச் சொன்னார். கமிட்டியார் அங்கு தங்கியிருந்தவிடம் தமிழ் நாட்டில் விசேஷமாக தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் பேரூழியம் செய்த சுவார்ச்சு மகான் கட்டிய மிஷன் வீடே. அது இங்கிலாந்து சபையைச் சேர்ந்தக் கிறிஸ்தவாலயக் காம்பவுண்டிலுள்ளது. தற்சமயம் அது அவ்வாலய குருவாகிய கனம். தாவீதையருடைய உறைவிடம். இவ்வீட்டின் படியின் மேல் நின்றே ஹீபர் அத்தியக்ஷர் கடைசியாக நம் நாட்டாருக்குப் பிரசங்கித்தார். இதற்குப் பிறகுதான் அவர் கலெக்டரோடு தங்கியிருக்கும்போது, குளிக்குமறையில் மரணமடைந்தார். இவ்வீட்டுக்கருகேயுள்ள கல்லறைகளிலொன்று திருநெல்வேலியில் அநேக வருஷங்களாய் உழைத்த போல் போதகரின் கல்லறை. இப்பேர்பட்ட சுவிசேஷ வீரர்களின் ஞாபகத்தால் பரிசுத்தப்பட்ட அவ்வீட்டின் மேலறையில் நாங்கள் கூடியபோது, அவ்வீரர்களினிருதயத்துக்கு வெகு அருமையாயிருந்த சுவிசேஷ வேலை இக்காலத்திலும் வெகுபயனுற நடந்தேற வேண்டுமென்கிற அவா நிறைந்தவர்களாய், மனிதர்களுடைய இருதயங்களைப்பிடிக்க வல்ல ஆண்டவருடைய ஆவி கிறிஸ்தவ ஊழியம் நடக்குமிடமெல்லாம், விசேஷமாக நம் நாட்டிலும் பலமாய்க் கிரியை செய்ய வேண்டுமென்று மன்றாடினோம்.

ஓமலூருக்காக மனோசே, சிவராமையர் என்னும் இரு ஊழியர் நியமிக்கப்பட்டார்கள். அங்குள்ள நங்கவள்ளியில் சகோதரன் தேவாசீர்வாதம் குடியிருக்க சொற்ப விலையில் ஒரு சிறு வீடும், கொஞ்சம் நிலமும் வாங்கப்பட்டது. இவ்வேற்பாடுகள் தமிழ் கமிட்டியார் ஆலோசனையின்படி, சென்னையிலுள்ள காரிய நிருவாகக் கமிட்டியாரால் செய்யப்பட்டன.

சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்காவில் நம் ஊழியர் செய்யும் சுவிசேஷ வேலைக்குதவியாயிருக்க கிறிஸ்து ஜீவியப் படங்களைக் காண்பிக்கும் கருவி வாங்கப்படவேண்டுமென்றும், அதற்கென்று ஏற்கனவே சகோதரன் பாலசுந்தரம் நம்நேயரிடத்தில் பொருள் சேர்ப்பதை நன்றியறிதலோடறிந்து, ஒரு நல்ல கருவி வாங்க இன்னும் எவ்வளவு தேவையோ அதைச் சீக்கிரம் சேகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது. நம் நேயரில் இதற்குதவி செய்ய விரும்புபவர்கள், எச். வி. பாலசுந்தரம் அவர்கள் 'தோட்டம், சேலம்' என்னும் விலாசத்திற்குப் பணம் அனுப்பலாம்.

சேலம் ஜில்லாவின் இன்னொரு தாலூகாவிலுள்ள காடியாம்பட்டியில் ஒரு வைத்தியசாலை திறந்து சுவிசேஷ வேலை யாரம்பிக்கும்

விஷயத்தைக் குறித்தும் பேசப்பட்டது. நமது சங்கத்தின் செலவில் இரண்டு பேர் வைத்தியமுறை கற்றுவருகிறார்கள். அவர்கள் கற்றுவருவதற்குள் வேண்டிய ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு நமது காரியதரிசி கே. டி. பால் அவர்கள் மிக்கச் சிரத்தை யெடுத்தவரு வது நமக்குச் சந்தோஷமான செய்தியே. இவ்விஷயமாய் நமக்கு நேரிடும் எல்லாச் செலவிலும் கவர்மெண்டார் பாதி கொடுப்பார்களென்று அவர்கள் தற்சமயம் செய்திருக்கும் பொது உத்திரவினால் தெரியவருகிறது.

நம் சங்கத்தின் வேலையின் சம்பந்தமாய் சென்னையில் அக்டோபர் மீ கிறிஸ்தவ மகா ஜனக்கூட்டம் ஒன்று நடத்தப்படவேண்டுமென்று காரிய நிர்வாக கமிட்டியார் செய்த தீர்மானத்தை நிறைவேற்ற, ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் சாது போதகர் பிரசங்கிப்பார்.

நம் சங்க வேலையை யாதரிக்கத் தகுந்த ஏற்பாடுகள் திருச்சியில் செய்யப்படும் பொருட்டு, ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதன் அவயவங்கள் எ. வி. ஐசக் போதகர், டி. பிச்சைப் பிள்ளை போதகர், சோமில் பிள்ளை அவர்கள், எம்.ஏ., எல்.டி., ஏ. வி. சாமுவேல் அவர்கள், ஜேம்ஸ் எலியேசர் அவர்கள், டி. ஆர். ஏகாம்பரம் அவர்கள்.

அன்று சாயங்காலம் 6-30 மணிக்கு எஸ். பி. ஜி. காலேஜ் ஹாலில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அங்கு பல சபைக்கிறிஸ்தவர்களும் கூடியிருந்தார்கள். சக்கரை அவர்கள் பி.ஏ., பி.எல்., திருச்சபையின் அழைப்பைக்குறித்து இங்கிலீஷில் உபந்நியாசிக்க, ஐசக் ஞானம் அவர்கள் பி.ஏ, எல்.டி., அக்கிராசனம் வகித்து, இந்தியக் கிறிஸ்தவர் நம் சங்கத்தை ஆதரிப்பது அவர்களுடைய பெருத்தக் கடமை என வற்புறுத்திப்பேசினார்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை வெஸ்லியன் ஆலயத்தில் காலையில் பால் தேவதாசன் அவர்கள் பி.ஏ., எல்.டி., பிரசங்கித்தார். சாயங்காலம் உறையூர் பள்ளிக்கூடத்தில் சக்கரை அவர்கள் தமிழில் உபந்நியாசித்தார். மகாணக்காரியதரிசியாகிய தாமஸ் ஹாரிஸ் அவர்கள் அநேகரைச் சந்தித்தார்.

Printed and published by Mr. K. T. Paul, at the T. A. E. Press, Salem,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 NOV 1915


# இந்திய சுயதேச மிஷெனரி சங்கத் தீபிகை

THE TAMIL ORGAN OF THE NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

**Vol. VII.** நவம்பர் 1915. **No. 11**


## உகாண்டா.

இது கிழ் மத்திய ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள விக்டோரியா நையான்ஸா ஏரியின் வடபாகத்திலுள்ள நாடு. அதன் விஸ்திரணம் 70,000 சதுரமைல், ஜனத்தொகை 20-லட்சம். அதன் ஜனங்களுக்கு வகாண்டாக்காரரென்று பெயர். அவர்கள் ஓர் பலத்த ஆப்பிரக்கா ஜாதியார்.

1875-ம் வருஷம் அப்பெருங்கண்டத்தின் சில பாகங்களைச் சுற்றிவர அனுப்பப்பட்ட ஸ்டான்லி துரை இப்பிரதேசத்தில் ஒரு கிறிஸ்தவ மிஷன் ஸ்தாபிக்கப்படுவது உசிதமென்று ஒரு லண்டன் பத்திரிகையில் தெரிவித்திருந்தார். அவர் கடிதம் பிரசுரமாகி இரண்டு நாளில், இவ்விஷயத்திற்கென்று ஒருவர் 25,000 பவுன் சர்ச்சு மிஷனுக்கு (சி. எம். எஸ்.) கொடுத்தார். உகண்டா பண்டு சீக்கிரம் 75,000 பவுன் ஆயிற்று.

1876-ம்வருஷம் சில மிஷனரிமார் அந்நாட்டுக்குச் சென்றார்கள். சிலர் வழியில் மரித்தார்கள். இருவர் அந்நாடு சேர்வதற்கு முன்னேயே கொல்லப்பட்டார்கள். 1877-ம் வருஷம் அவர்களில் மீதியான இருவர் உகாண்டா சேர்ந்து, அந்நாட்டின் அரசனால் வெகு மரியாதையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். மக்கே என்பவரே பிரதான மிஷனரியாய்க் காரியத்தை நடத்தி வந்தார். ஒரு சமயம் அவர் ஒருவர் தான் அந்நாட்டில் மிஷனரியாயிருந்தார். 1890-ம்வருஷம் இன்னம் நான்கு மிஷனரிமார் அனுப்பப்பட்டார்கள். இத்தொகை வரவர அதிகரிக்க, தற்சமயம் அந்நாட்டில் 111-மிஷனரிகள் வேலை செய்து வருகிறார்கள்.

இந்நாட்டில் வேலை தொடங்கினபோது, அநேக இடையூறுகளிருந்தன. அது உள்நாடும் காடர்ந்த நாடுமாதலால், அங்கு போய் சேர்வதே அதிகக் கஷ்டம். அந்த போர்னாலும், வேண்டிய பொரு

ளைப் பெறுவது அதிலும் கஷ்டம். துவக்கத்தில் அராபிய வர்த்தகரால், அவர்களுக்கு அதிக சங்கடம் நேரிட்டது. மிஷனரிகள் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்டு, உகாண்டாவின் சுயாதீனத்தைக் குலைக்க வந்தவர்கள் என்று எண்ணப்பட்டார்கள். அந்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கும் அதிக சங்கடம் நேரிட்டது. ஹன்னிங்காம் அத்தியக்ஷர் அரசனுத்தரவினால் கொல்லப்பட்ட மறுவருஷம் கிறிஸ்தவர்களுக்கு வெகு துன்பம் நேரிட்டது. கிறிஸ்து மார்க்கமே அந்நாட்டில் நிர்மூலமாகி விடும் போலிருந்தது. அநேகர் அங்கயீனப்பட்டும், சுட்டெரிக்கப்பட்டும் போனார்கள். ஒரு முறை ஒரு பெருந்தீயில் முப்பத்திரண்டு பேர் உயிருடன் எரிக்கப்பட்டார்கள். 200-க்கு மேலான கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டும், ஒருவனும் தன் விசுவாசத்தை மறுக்கவேயில்லை.

வகண்டாக்காரர் அதிகப்பெருமையும், சோம்பல், பொய், துன்மார்க்கம், பகை, கொலை, பயங்கர செய்கைகளும் நிறைந்திருந்தார்கள். கல், மரம், ஆவிகளை தெய்வங்களாக வணங்கி, பில்லி சூனியம் முதலிய அநேக பயங்கர அவபக்திக்குட்பட்டிருந்தார்கள். அவர்கள் பாஷை இன்னம் எழுதப்பட்டிருந்ததில்லை. அப்பாஷையைப்பேச முடியுமேயொழிய, எழுத முடியாதிருந்தது. ஆதலால் அப்பாஷையை முதல் எழுத்துக்களாக எழுதி, புஸ்தகங்கள் பிரசுரிக்க வேண்டியிருந்தது. இன்னம் கிறிஸ்து மார்க்கம் பரம்புதலுக்கு மகமதியரும், ரோமானித்தரும் தங்களால் கூடிய இடையூறுகளெல்லாமுண்டாக்கினார்கள். இவ்வளவு கஷ்டங்களிருந்தும் அங்கு நேர்ந்த சுவிசேஷ விர்த்தி மகா ஆச்சரியப்படத்தக்கதே.

மிஷனரிகள் வந்து ஐந்து வருஷத்திற்குப் பிறகு, 1882-௵ முதல் வகாண்டா கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். இரண்டு வருஷத்தில், சபையில் 100-பேர் சேர்ந்திருந்தார்கள். வரவர சபை அதிகரித்தது. உகண்டா அத்தியக்ஷாலயம் 1891-ம் ௵ பிரதிஷ்டை செய்யப்பட்டபோது, 4,000 கிறிஸ்தவர்கள் ஆலயத்தில் கூடியிருந்தார்கள். 1893-ம் ௵ பில்கிங்டன் நடத்தின எழுப்புதல் கூட்டங்களில் நூற்றுக்கணக்காக ஜனங்கள் கிறிஸ்தவர்களானார்கள். 1894-ம் ௵த் துவக்கத்திலிருந்த ஆலயங்கள் 20. அவ்வருஷக் கடைசியிலிருந்த தொகை 200 1895-ம் ௵ டக்கர் அத்தியக்ஷர் அந்நாட்டுக்கு வந்து தங்கியிருந்த 8 மாதங்களில் 2052 பேரைத் திடப்படுத்தி நற்கருணைக் காயத்தப்படுத்தினார். 1896-௵ உகாண்டாவைக் குறித்து பில்கிங்டன் பின் வருமாறு எழுதினார். 'ஒரு லட்சம் பேர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதில் பாதிபேருக்கு வாசிக்கத் தெரியும். அந்நாட்டுக் கிறிஸ்தவர்



கள் தாங்களே கட்டின கோயில்கள் 200. அவர்களிடத்திலேயே சம்பளம் பெறும் சுதேச ஊழியர் 200. உபயோகிக்கப்பட்டுவரும் புதிய ஏற்பாட்டுப் பிரதிகள் 10,000. தினம் சபையில் சேர போதனை பெற்று வரும் புறமதஸ்தர் 6,000. கடந்த எழு வருஷங்களாய் சபையின் தொகை வருஷா வருஷம் இரட்டித்தே வருகிறது. ஆண்டவருடைய வல்லமை காரிருள் நிறைந்த உலகத்தின் மத்திய பாகமாகிய அந்நாட்டின் ஜாதியை ஆச்சரியமாய் மாற்றுகிறது.'

சில பாகங்களில் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஒவ்வொரு குடிசையையும் சந்தித்துக் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். இப்படியே அந்நாட்டின் எல்லாப் பாகங்கள், அதைச் சுற்றியுள்ள மற்ற நாடுகளிலும் செய்ய, இந்த வகாண்டாக்காரர் தங்களின் தலைவர்களை சுவிசேஷ வேலைக்கொப்புவித்து, உற்சாகமாக தாங்களும் உதவி செய்து வருகிறார்கள். 1900-வருஷத்தில் 400 ஆலயங்களும், 17,000 கிறிஸ்தவர்களும், 1000-ஊழியருமிருந்தார்கள். அந்நாட்டின் அரசனும் கிறிஸ்தவன். அநேகர் ஜனத்தின் அதிகாரிகளாயிருப்பதைவிட, சுவிசேஷ ஊழியத்தையே ஆவலுடன் தெரிந்து கொள்ளுகிறார்கள். தற்சமயமோ, ஊழியரின் தொகையும், கிறிஸ்தவர்களின் தொகையும் இன்னுமாச்சரியமாக அதிகரித்திருக்கிறது.

இவ்வற்புத வேலையின் சித்திக்குக் காரணமென்னை. தங்களையே முழுவதும் ஆண்டவருக்குத் தத்தம்பண்ணி, ஓயாது உழைத்து வந்து, மக்கே, பில்கிங்டன் முதலிய போதகரின் அரும்பிரயாசைகளும், ஹன்னிங்டன் அத்தியக்ஷரும், அநேக சுதேசக் கிறிஸ்தவர்களும் தங்கள் மரணத்தினால் கிறிஸ்துவுக்குக் கொடுத்த சாட்சியும் முக்கியக் காரணம். கர்த்தருடைய வசனமும் பலமாய் உபயோகிக்கப்பட்டு வந்தது. கிறிஸ்தவர்கள் சுவிசேஷ வேலையில் காட்டிவரும் பக்திவைராக்கியம் இன்னொரு முக்கிய காரணம். தாங்களே தங்கள் ஆலயங்களைக்கட்டி, தங்கள் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதுமல்லாமல், தங்களிலனேகரை சுற்றியுள்ள நாடுகளுக்கும் மிஷனரிகளாக அனுப்புகிறார்கள்.

ஆண்டவருடைய ஆவி மெய்யாகவே அந்நாட்டில் பலமாய் வேலை செய்து வருகிறார். ஆதலால், எத்தியோப்பியா நாட்டின் கை மெய்யாகவே ஆண்டவரண்டை நீட்டப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பலத்தை மென்மேலும் பெற்று இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவின் பலபாகங்களைக் கிறிஸ்துவண்டை நடத்த, ஏற்ற கருவிகளாக அவர்கள் உபயோகிக்கப்பட்டு வருகிறார்களென்பதும், இனியும் உபயோகிக்கப்படுவார்களென்பதும் நிச்சயமே.

## கர்ஜட் கர்மலா.

ஆமத் நகருக்கருகேயிருக்கும் இந்த சுயதேச மிஷன் சேகரத்தில் நமது சங்கத்தில் சம்பளம் பெறாமலே உழைத்துவரும் பாவா போதகர் அங்கு நடக்கும் சுவிசேஷ வேலையைக்குறித்து எழுதுகிறார்.

பம்பாய் நகரில் அமெரிக்கன் மிஷன் குருடருக்கென்று நடத்திவரும் பள்ளிக்கூடத்து மாணாக்கரிலிருவரை அப்பள்ளிக்கூட மிஸியவர்கள் தன் செலவிலேயே கர்மலாவில் வேலை செய்ய அனுப்பியிருக்கிறார்கள். அவர்களிலொருவன் புதார் என்பவன். இவன் பம்பாய் சர்வ கலாசாலையில் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப்போய் கணிதத்தில் மாத்திரம் வேண்டிய மார்க் வாங்காததினால் தேறவில்லை. மற்றெல்லா பாடங்களிலும் சமஸ்கிருதத்திலும் தேறினான். இதற்குப்பிறகு ஆமத் நகர் வேத சாஸ்திர வகுப்பில் இரண்டு வருஷம் படித்தவன். இவன் அதிக மெச்சப்படத்தக்க குணவழகு வாய்ந்தவனும், அதிக சுறுசுறுப்புள்ளவனுமாம். நேரத்தைக் கொஞ்சமும் வீணாக்காது, எப்போதும் குருடருக்குச் செய்யப்பட்டுள்ள புஸ்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பான். சத்திய வேதத்தை வாசிப்பது அவனுக்கு மிகவும் பிரீதி. மற்றொரு வாலிபன் பெயர் ராமன். இவன் அவ்வளவு படித்தவனல்ல. ஆகிலும் இவன் அதிக இனிமையாகப் பாடி, டப்லா என்னும் மத்தளத்தை அதிக சாமர்த்தியத்தோடு வாசிப்பான். இவர்கள் இருவரும் சுவிசேஷ வேலைக்குச் சேர்ந்தே போவார்கள். ராமனின் கீதங்கள் அக்கம் பக்கத்திலுள்ளவர்களை கூட்டம் கூட்டமாக இழுக்கும். கூடி வந்திருப்பவர்களுக்கு தன் பைபிளை விரித்து, விரல்களால் தடவித் தடவி வாசிப்பான். இதையெல்லாரும் வினோதமாய்க் கேட்டுக்கொண்டு நிற்க, கிறிஸ்துவின் உயிர்ப்பிக்கும் வார்த்தைகள் அவர்களுக்கு அறிவிக்கப்படும். ராமன் தான் கேட்ட நல்ல பிரசங்கங்களை மற்றவர்களுக்கு அறிவிப்பதில் வெகு சந்தோஷமடைவான்.

குருடருக்கு அநேக சௌகரியங்கள் கொடுக்கப்படாதிருந்தும் அவர்களும் கிறிஸ்துவை எவ்வளவாக மகிமைப்படுத்தக் கூடியதாயிருக்கிறது. இந்த இரு சுவிசேஷகரும் கர்மலாவுக்கு அனுப்பப்பட்டதற்காக நான் ஆண்டவரைத் துதிக்கிறேன். அஞ்ஞானிகள் கிறிஸ்துமார்க்கம் இக்குருடருக்கு என்ன செய்திருக்கிறது என்று காணக் கூடியதாயிருக்கிறது.

இவ்விருவரும் அநேக கிராமங்களைச் சந்தித்துச் சுவிசேஷத்தை அறிவித்து வரும்படி நான் ஏற்பாடுகள் செய்கிறேன். இந்த



சுவிசேஷப் பிரயாணம் முடிந்ததும், இவ்விருவரும் கர்மலாவில் கொஞ்சகாலம் தங்கியிருப்பார்கள். இங்கு ஏற்கனவே ஷண்ட்வன் ராவ் வேலை செய்து வருகிறார். அவரும் புதாரும் ஒரு பள்ளிக்கூடமிங்கு ஸ்தாபித்து நடத்தி வருவார்கள்.

பள்ளிக்கூட வேலையோடு, தினம் மூன்று வேளைகளில் பிரசங்கிப்பார்கள். மத்தியானம் 12 மணிக்கு ஒரு ஆராதனை நடத்துவார்கள். 5 மணி முதல் 7 மணி வரையில் தெருக்களிலும், கடைச் சந்துகளிலும் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். இரவு 8 மணிக்கு மேல் கிறிஸ்தவர்களுக்கென்று ஒரு ஜெபக்கூட்டம் நடத்துவார்கள்.

புதார் படித்தவனும், வேதத்தை நன்றாய்க் கற்றவனுமாதலால், ஷண்ட்வன்ராவுக்கு அதிக உதவியாயிருப்பான். ராமனோ என்னோடு பிரயாணம் செய்து உழைத்துவருவான்.

மேலும் கர்மலா ரிப்போர்ட்டை வாசித்த பம்பாய்க் கிறிஸ்தவ பெண்கள் கூட்டத்தார் கர்மலாவில் பெண்கள் நடுவே ஊழியம்நடத்த மாதம் 10 ரூபா கொடுக்கச் சம்மதித்திருக்கிறார்கள். ஒரு உபாத்தியாயினியாவது, வேதாகம ஸ்திரீயாவது நியமிக்கப்படவேண்டுமென்பது அவர்கள் நோக்கம். கோலாப்பூர் கிறிஸ்தவ முயற்சி சங்கத்தார் பெண்கள் வேலைக்காக 25 ரூபா கொடுத்திருக்கிறார்கள். அத்துடன் அமட்நகர் பெண்கள் கூட்டத்தார் கர்மலாவில் பெண்கள் வேலைக்கென்று மாதம் 5 ரூபா தர வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே, ஏற்கனவே கர்மலாவில் வேலைசெய்து பாகுபாய் திரும்ப இங்கு வேலை செய்ய ஆரம்பிக்கக்கூடியதாயிற்று.

சுவிசேஷம் பலவிடங்களிலும் ஆவலோடுக் கேட்கப்படுகிறது. போஸ் கிராமத்ததிகாரியாகிய ரேக்கி நமது சுவிசேஷகர் எப்போது போனாலும் அவர்களைக் கேட்கத்தன் குடும்பத்தையும் மற்றவர்களையும் தன் வீட்டில் கூட்டுவான். இவன் ஒரு மகராட்டிய பயிரிடுபவன். இக்குடியானவர்களிடத்தில் செய்யப்பட்டுவரும் வேலை பலனுறவேண்டுமென்று நாம் மன்றாடுவோமாக.

## வாக்கர் போதகர் அழைக்கப்பட்ட விதம்.

இம்மகான் 1885-ம் வருஷம் திருநெல்வேலிக்கு மிஷனரியாக அனுப்பப்பட்டார். இவர் தென்னிந்தியாவில் செய்த நல்ல வேலை ஒருபோதும் மறக்கப்படாது. இவர் இங்கு வருவதற்குமுன் ஹாலவே என்னுமிடத்தில் குருவாயிருந்தார். இவரும் மற்ற ஐம்பது பேரும் கேம்பிரிட்ஜிலிருந்து லண்டன் நகரில் எக்ஸ்டர் ஹாலில் நடந்த பெருத்த மிஷனரிக் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். அக்

கூட்டத்தில் இப்போது டர்ஹாம் அத்தியக்ஷராயிருக்கும் மோல் போதகர் தம் பிரசங்கத்தில் அடிமையின் ஜீவியத்துக்கும் கிறிஸ்துவின் அடியானின் ஜீவியத்தை ஒப்பிட்டுப் பேசினார். "தானினி சுயாதீனனல்லவென்று குறிக்க ஒரு அடிமை தன் காதைத் தூளை செய்யப்படத் தன் எஜமானுக்கு ஒப்புக்கொடுப்பான்." மோல் போதகர் வெகு அமைதியாகப் பேசுவார். ஆகிலும் அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் கேட்கிறவர்கள் இருதயத்தைக் கொளுத்திவிடும். அவர் சொன்ன வார்த்தைகள் அன்று வாக்கருடைய மனதைப்பிடித்தன. அதை அசைத்தன. அவருக்கு முன்னமே தன் சபையிலிருந்த வேலை அதிகப் பிரியமாயிருந்தது. தன் நாட்டாரைக் கர்த்தருக்கு ஆதாயம் பண்ணும் வேலை அவருடைய இருதயத்தை ஏற்கனவே மகா வல்லமையாய்ப் பிடித்திருந்தது. ஆயினும் இந்த மிஷனெரிக் கூட்டத்தில் மிஷன் ஊழியத்தைப்பற்றியும், ஆண்டவருடைய ஊழியன் தன்னை முழுவதும் ஆண்டவருடைய கைகளில் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் கேள்விப்பட்டவுடனே, அவருடைய இருதயம் வல்லமையாய் அசைக்கப்பட்டது. உடனே தன் எண்ணம், தன் ஆசை, தன் பிரீதி, தன் வேலை யாவும் அந்த அசைவுக்குமுன் தாழ்ந்து, அழிய ஆரம்பித்தது.

பிற்காலத்தில் 'ஏன் ஐயா! இந்தியாவுக்கு வந்தீர்கள்' என்று அவரைக் கேட்ட யாவருக்கும் அவர் ஒரே உத்தரவு சொன்னார். அவர் வார்த்தைகள் ஒரே விதமாகவே, ஒரே வரிசையிலேயே சொல்லப்பட்டன. அவருக்கு அந்த ஒவ்வொரு வார்த்தையும் பரிசுத்தப் பட்ட வார்த்தையாகத் தோன்றிற்று. ஏனெனில் அவ்வார்த்தைகளே அவருக்கு திவ்விய பரலோகக் காட்சிகளைத் திறந்தன. 'உங்கள் இரு கைகளையும் ஆண்டவருடைய கைகளில் முற்றிலும் போட்டுவிடுங்கள்' என்று மோல் சொன்னார். தேவன் எதைச் செய்யச் சொன்னாலும், எங்கு போகச்சொன்னாலும், அவருக்குக் கீழ்ப்படியவேண்டுமே. ஆதலால்தான் இங்கு வந்தேன்' என்பார்.

முன்னொரு முறை அதே சங்கத்துக்குத் தன்னை மிஷனெரியாக சில நிபந்தனைகளோடு ஒப்புவித்தெழுதியிருந்தார். இப்பொழுதோ நிபந்தனைகளெல்லாம் மாமிச சிந்தைகளினாலல்லாது ஆவியினால் ஏவப்பட்டதல்லவென்று கண்டார். ஆகவே, ஆண்டவர் விஷயத்தில் நிபந்தனை என்பதே அத்துடன் அவர் ஜீவியத்தில் அழிந்தது. 'அவ்விராத்திரி நான் திரும்ப மிஷனெரியாகிறேன் என்று எழுதுகிறதென்றும் இம்முறை ஒரு நிபந்தனையுமின்றி, எங்கென்றாலும், என்ன வேலையென்றாலும் போவதென்றும் தீர்மானித்தேன். என் கைகளை அவர் கைகளில் முற்றிலும் போட்டுவிட்டேனேயாகில் நான் வேறு விதமாய்ச் செய்யக்கூடுமோ' என்றார்.



## வாக்கரை இழுத்த ஓர் செய்யுள்.

பர்மா, அஸ்ஸாம், ஜப்பான் தேசங்களிலுழைத்த நாத்தான் ப்ரௌன் என்பவர் 80 வருஷங்களுக்கு முன் வசன நடையிலெழுதிய செய்யுள் வாக்கருடைய ஜீவியத்தில் வெகுப் பிரயோசனமாயிருந்ததாம்.

'என் ஆத்தும அமைதல் நீங்கிற்று. ஓர் அற்புத மெல்லிய குரல் நாகஸ்வரம்போல் என்னைச் சேர்ந்து, நான் மாய்மையான பூமியில் நிற்கிறேன் என்றது'.

'என் ஆண்டவரின் குரல் இரவமைதியில் என்னைக்கிட்டி 'போ, சர்வ ஜாதிகளையும் போதிவி' என்றென்னை எழுப்பிற்று.

'நானேனிங்கு நிற்கிறேன்? கர்த்தருடைய ஆணை என் மேலன்றோ. நிழலோடு விளையாடவோ, பூலோக புஷ்பங்களைப் பறிக்கவோ, இங்கு தங்குவேனோ? என் வேலையை முடித்து என் கணக்கை அவருக்குக் கொடுக்குமட்டும் இனி இங்கே தங்கேன்.

'இதோ போகிறேன். சிநேகிதரையோ, விக்கிரக ஆசைகளையோ, என் தேசத்தோடு என்னைக்கட்டும் எந்தக்கட்டையோ நான் தரிக்க இனி கலங்கேன்.

'புசலோ, வெயிலோ, இனிக் கவையன்று. என் பாத்திரம் இனிமையோ, கசப்போ, 'தேவனே என்னைப் பரிசுத்தப்படுத்தி, போரின் பயங்கர நேரத்துக்கு என் ஆவியைப் பலப்படுத்தும்' என்று வேண்டுவேன்.

'நித்தியத்திலோ என் ஆவி, நானிவ்வுலகில் பாடும் கஷ்டமுமடைந்தேன் என்று ஒருக்காலும் வருந்தாது.'

## டோனவூரில் சுவிசேஷ வேலை.

வாக்கர் போதகருக்கு அருமையான சுவிசேஷ வேலை நடந்தேற அவருழைத்த டோனவூர் எனும் சேகரத்தில் அவருக்கு ஞாபகமாக ஓர் பண்டு ஏற்படுத்தப்பட்டு, அதைச்சுற்றி சுவிசேஷ வேலை நடந்து வருகிறது. அவ்வூர் சுதேச குரு அங்கு நடக்கும் சுவிசேஷ வேலையைக்குறித்து பின்வருமாறு எழுதுகிறார்.

ஓர் கிராம வாசிகள் அவ்வூரில் சுவிசேஷ வேலையான சில காலத்துக்குப்பிறகு ஒரு கூட்டம் கூடி அநேக கிராம விஷயங்களைத் தர்க்கித்தார்கள். அவர்களுடைய பேச்சு நடந்துகொண்டிருக்கும்போது

ஆவியினால் அசைக்கப்பட்ட ஓர் கிராமவாசி எழுந்து, 'நாமிப்போது பிரயோஜனமற்ற உலக விஷயங்களையே தர்க்கிக்கிறோம். இவைகளை விட எவ்வளவோ முக்கியமான இன்னொரு விஷயமுண்டு. நாம் யாவரும் கிறிஸ்துவினடியாராவதல்லோ முக்கியம்' என்றான். அம் முழுக் கூட்டமும் இவன் சொன்னதற்குச் சம்மதித்து, தற்சமயம் 17 குடும்பங்கள் கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள்.

விதை விதைக்கப்படுகிறது. அது ஏற்றகாலத்தில் பயன் கொடுக்கிறது. இக்கிராமத்திலுழைக்க ஒருவர் நியமிக்கப்பட்டு இவ்வருஷம் ஆகஸ்டு மாதம் 22 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

## பத்திராதிபர் குறிப்புகள்.

இவ்வருஷம் டிசம்பர்-மீ 24, 25, 26-உ களில் நமது சங்கத்தின் முக்கிய காரிய நிருவாக சபையார் பல மாகாணங்களிலுமிருந்து அலகாபாத் நகரில் கூடுவார்கள். அங்கு அநேக முக்கிய விஷயங்கள் தர்க்கிக்கப்பட்டு முடிவாகும். விசேஷித்த விஷயங்களைக் குறித்து முன்னொரு பத்திரிகையில் வெளிப்படுத்தியிருந்தோம். இது நமது சங்க விர்த்திக்கவசியமான கூட்டமாதலால், அங்கு நடக்கும் விஷயங்கள் ஆண்டவருடைய ஆவியினாலேவப்பட்டு நடத்தப்பட வேண்டுமென்று மன்றாட நம் நேயரைக் கோருகிறோம்.

மேலும் இவ்வருஷத்துடன் 10 வருஷம் முடிவாகிறது. இந்தப்பத்து வருஷங்களில் நமது சங்கத்தின் நோக்கம் பல மாகாணக் கிறிஸ்தவர்களுக்கும் சொல்லப்பட்டு, இந்தியா முழுவதும் ஆண்டவருடைய அருளால் சுவிசேஷ ஆவல் அதிகரித்திருக்கிறது. ஐந்து சேகரங்களில் வேலை நடத்தப்பட்டு 1500 பேருக்கு மேலான கிறிஸ்தவர்கள் அங்கங்கே சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். வரப்போகிற 10 வருஷம் இதிலும் அதிக பயனுள்ளதாக இருக்கவேண்டுமென்று மன்றாடுவோமாக.

நமது சங்க பொக்கிஷதாரி நமது சங்க வரவு இன்னம் வேண்டியதற்குக் குறைந்தேயிருக்கிறதென்று அறிவிக்கிறார். நம் நேயர் அங்கங்கே விசேஷித்தப் பொருள் சேர்த்து இவ்வருஷத்தைக் கடனில்லாமல் முடிக்க உதவி புரிவார்களாக.

மேலும், கிறிஸ்மஸ் தினம் நம் சங்க 10 வருஷ மகோற்சவ தினமாதலால், அன்று இந்தியக் கிறிஸ்தவர்கள் யாவரும் அங்கங்கே ஒரு விசேஷித்த தோத்தரிப்பின் காணிக்கை சேர்க்க தக்க ஏற்பாடுகள் செய்ய நம் நேயரைக் கோருகிறோம்.

Printed and published by Mr. K. T. Paul, at the T. A. C. Press, Salem.


# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை

THE TAMIL ORGAN OF THE NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

**Vol. VII.** டிசம்பர் 1915. **No. 12**


## நமது சங்கத்தின் 10-ம் வருஷ மகோற்சவம்

1905-வரு கிறிஸ்மஸ் தினம் சொராம்பூரில் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருஷமாய் நடத்தப்பட்டு வந்த நம் சுவிசேஷ சங்கம் 1915-வரு கிறிஸ்மஸ் தினத்தை மகோற்சவ நாளாயாசரிப்பது தகுதியே. நம் சங்கத்தின் காரிய நிருவாகச் சர்வ மாகாண சங்கத்தார் அலகபாத்தில் 24, 25, 26-ம் உ களில் நம் விஷயங்களை யோசிக்கக்கூடும் காலத்தில், 25-ம் உயை விசேஷித்த ஸ்தோத்திரப்பின் நாளாய்க் கொண்டாடுவார்கள்.

அங்ஙனே அவர்கள் மாத்திரமல்ல, நாமெல்லாரும் அங்கங்கே சகல இந்தியக் கிறிஸ்தவர்களும் கூடி கர்த்தர் இந்த பத்து வருஷமாய் நம் சங்கத்தைக் கருவியாகக்கொண்டு செய்த வேலையை நினைவு கூர்ந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, ஆண்டவர் நம் வேலையை மென்மேலும் ஆசீர்வதிக்க மன்றாடுவோமாக.

நமது சங்கம் வேலை செய்யுமிடம் 5. கிறிஸ்தவர்கள் 1500-க்கு மேல். ஞானஸ்நானத்துக் காயத்தமாகுகிறவர்கள் 500 பேர்.

ஜெபம் எவ்வளவு வல்லமையுள்ளது. நண்பரே! அன்று இந்தியா முழுவதும் நம் சங்கம் நினைக்கப்படுவதனாலும், அன்று யாவரும் ஆண்டவரைத் துதித்து, மன்றாடுவதாலும் விசேஷித்த ஆசீர்வாத முண்டாகும்.

அங்ஙனே ஸ்தோத்திரப்பின் நாளாகக் கொண்டாட நம்நேயர் யாவரையும் கோருகிறோம்.

## நமது சங்கத்தின் பண நிலைமை

இவ்வருஷச் செலவு 22,000 ரூபாயாகுமென்று கணிக்கப்பட்டு, நமது பல மாகாணங்களும் அப்பொருளைச் சேர்க்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. தென்னிந்திய தமிழ் நாட்டில் 6,000-ரூ

சேர்க்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் எதிர்பார்க்கப்படும் தொகை எவ்வளவு என்றும் இப்பத்திரிகையில் கூறியுள்ளோம். நமது சங்கத்தின் பொக்கிஷதாரி கனம் ஹென்ஸ்மன் அவர்கள் அக்டோபர்மீ வரையில் சேர்க்கப்பட்டத்தொகை ரூ 10,000 தானென்றும், இன்னும் இந்த கடைசி இரண்டு மாதத்தில் வரவேண்டிய தொகை 11,000-ரூ என்றும் தெரிவிக்கிறார்.

இத்தொகை மிகவும் பெரிய தொகை. இது சேருமோ என்று அதைரியப்படுவதற்குச் சோதனையுண்டு. ஆகிலும் நாமெல்லாரும் நம்மால் கூடிய முயற்சியெடுத்தால், இவ்வருஷம் கடனில்லாமல் முடியும்.

விசேஷித்த சேர்ப்புச் சீட்டுகள் அச்சிடப்பட்டு, காரியதரிசியிடத்திலிருக்கிறது. பலருக்குமவை அனுப்பப்பட்டிருக்குமென்று நம்புகிறோம். அங்கங்கேயுள்ள கிளைச்சங்கங்களும், கிளைச்சங்கங்களில்லாத விடங்களில் உற்சாகமுள்ள நம்நேயரும் உடனே 'தோட்டம், சேலம்' என்னும் விலாசத்திலுள்ள காரியதரிசிக்கெழுதி, அச்சீட்டுகளை வரவழைத்தாவது, இன்னும் வேறு விதத்திலாவது, விசேஷித்தச் சேர்ப்பு செய்ய நம் நேயர் யாவரையும் கோருகிறோம்.

நமது இந்திய சங்கத்தின் வேலை நம் இந்திய சகோதரர் உற்சாகமெடுக்காததினால் கஷ்டத்திற்குள் போகாதபடி நாம் யாவரும் முயல்வோம். ஆண்டவருடைய பிள்ளைகள் நம்பிதாவின் வேலைத் தடைபடாதிருக்க நம்மால் கூடியதைச் செய்வோம்.

## கிறிஸ்மஸ் தினச் சேர்ப்பு

பல ஊர்களிலும் நம் சங்கத்தின் வேலைக்காக விசேஷித்தச் சேர்ப்பு கிறிஸ்மஸ் தினத்தில் நடப்பது வழக்கம். எல்லா வருஷங்களில் நடந்ததைவிட இவ்வருஷம் அச்சேர்ப்பு நடந்தேறுவதற்கு விசேஷித்த முகாந்தரம். 1915-௵ கிறிஸ்மஸ்தினம் நம் சங்கத்தின் 10-ம் பிறந்த நாள். அன்று அல்லகபாத்தில் கூடும் காரிய நிருவாகச் சங்கத்தாரும், சங்கத்தின் நேயர் யாவரும், ஆண்டவரை விசேஷித்துத் துதிக்கும் நாள். அன்று நம் நன்றியை ஆண்டவருக்குச் செலுத்தி, நம் சங்கத்தின் 10-ம் வருஷ மகோற்சவம் கொண்டாடப்படும். அன்று நம் நன்றியைக் குறிக்க, நம் சங்கத்தின் சுவிசேஷ வேலைக்காக விசேஷித்த சேர்ப்பு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இச்சேர்ப்பு எல்லா விடங்களிலும், சிறு கிராமங்களிலும் செய்யப்படக்கோருகிறோம்.



## தென் இந்தியாவும் எடி மகானும்

கனம் மாட் பண்டிதரும் நமது அரிய நண்பர் எடி துரையும் 1913-௵ பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் சீன தேசஞ்சென்று அங்குள்ள பதின்மூன்று பிரதான நகர்களில் சுவிசேஷப்படை முயற்சிக் கூட்டங்களை நடத்தினார்கள். பெருங்கூட்டமான ஜனங்கள் வந்து கூடினர். ஏழாயிரம் பேருக்கதிகமான பேர் கிறிஸ்து மார்க்கத்தைக் கற்றறிவதாகப் பிரதிக்கினை செய்து தங்கள் பேரையும் பதித்திட்டனர். சீன தேசத்து சர்க்கார் கலாசாலையில் பயிலும் மாணவரில் பலர் வேதாகம வகுப்பைச் சேர்ந்தனர். இக்கூட்டங்கள் முடிவு பெற்றவுடன் நூற்றுக்கணக்கான சீனர்கள் ஞானதீட்சை பெற்று சபையில் சேர்க்கப்பட்டனர். சீன தேசத்தை ஆண்டுவரும் முதன்மையான அதிபதிகளிற் சிலர் இயேசு பெருமானுக்குத் தொண்டர்களாயிருப்பதும் நாமறிந்த விஷயமே. அவ்வாறே கனம் எடி துரை சென்ற ஆண்டும் சீன தேசஞ் சென்று முன் விட அதிக நற்பலனுடன் பல பட்டணங்களில் கூட்டங்களை நடத்தி வந்தார்.

"இவ்வாறான மாறுதல் நம் தேசத்தின்கண்ணும் ஜனிக்குமோ?" என சிந்தித்துணர்ந்து ஜெபித்துழைத்து வந்த பல பக்தர் இங்குண்டு. அவர்கள் தங்கள் இருதயத்தின் சிந்தைக்கேற்ற பலனைக் கண்டு களிக்கும் காலத்தைக் கடவுள் காட்டி வருகிறார். தென் இந்தியாவில் கிறிஸ்தவர்களிடையிலும் இந்துக்களிடையிலும் நான் கண்ணாரக்கண்ட சில அற்புதக் காட்சிகளை நம் பத்திரிகை நேயர் அறியும் வண்ணம் எடுத்துரைப்பேன்.

இம்மஹான், இத்தெய்வ மனுஷன், இவ்வுத்தம ஊழியன், நம்மிடையிலுள்ளார். சீன தேசத்தில் அவ்வரிய கருவி பிரயோசனப்படுத்தப்பட்ட விதத்தை கற்றுக் கேட்டுமறிந்தோமேயல்லாது கண்ணாரக்கண்டோமில்லை. இவர் வரவை எதிர்பார்த்து ஆயத்தம் பண்ணின சபைகளிலும் இவர் கூட்டங்களிலும் நம் நாட்டில் உண்டாயிருக்கும் அசைவையே இதற்கு அத்தாட்சியாகக் கொள்ளலாம். இச்சிறந்த பக்தனுடன் பிரயாணம் செய்யும் பாக்கியத்தையும் இவரது உபந்நியாசங்களை என் பெலவீனத்திற்கிடையில் தமிழில் திருப்பும் சிலாக்கியத்தையும் நமது காரியதரிசியவர்களது யோஜனையின்பேரில் அடியேன் அடைந்து களித்து வருகிறேன். இப்பிரயாணத்தில் வியப்பையுண்டாக்கும் பல விஷயங்கள் நிகழ்ந்தன. நமது அருமைச் சங்கத்தின் மற்றொரு காரியதரிசியாகிய கனம் கெ. டி. பால் அவர்களும் இப்பிரயாணத்தில் சேர்ந்து கொண்டார்.

OFFICE OF THE REGISTRAR OF ... 9 - DEC 1915 MADRAS.

செப்டம்பர்மீ 25-உ முதல் ஐந்து நாள் வேலூரில் கழித்தோம். அங்கு தென் இந்திய ஐக்கிய சபையின் வருஷாந்தர மஹா சபை கூடிற்று. அதன்பின் சென்னைமாநகரடைந்தோம். அங்கு அக்டோபர்மீ 1-உ முதல் நாலு நாள் பெரிய கன்வென்ஷன் கூட்டங்கள் நடைபெற்றன. வங்காளத்திலிருந்து வந்திருந்த கனம் ஸர்கார் அவர்களும், கனம். திரேசி பண்டிதரும், கனம். கிங்ஸ்பரி போதகரும் பட்டணத்தின் நாலு திக்கிலும் கிறிஸ்தவர்கட்கென்று சிறு கூட்டங்களும் வேதாகம வகுப்பும் வைத்து நடத்தினர். பிரதி மாலை மெமோரியல் மண்டபத்திலும் கனம். எடி துரையவர்களால் பெரிய கூட்டங்கள் நடத்தப்பட்டன. அம்மண்டபம் பூரணமாய் நிறைந்திருந்தபடியால் பலர் ஆசனமின்றி நிற்கவேண்டியிருந்தது. சீனா தேசத்தின் ஆன்ம ஏற்றத்தைப் பற்றியும் சென்னை இராஜதானியில் நடத்தப்படவேண்டிய படை முயற்சியைப்பற்றியும் எழுப்புதலாய் பேசி உயிர்ப்பித்தார். அதன்பின் கடப்பைக்குச்சென்று அங்குள்ள தெலுங்கு கிறிஸ்தவர்கட்குப் பல கூட்டங்கள் நடத்தி பின் ஈரோடு வந்து சேர்ந்தார். இங்கு கிறிஸ்தவர்கட்குள்ளும் பல கூட்டங்களை அதற்கென்றெழுப்பியுள்ள ஓர் பெரிய கூடாரத்தினுள் நடத்தினார். சென்னை கனம். பரமானந்தம் போதகரும் இங்கு வந்து சாலைக்கூட்டங்களில் பிரசங்கித்துதவி புரிந்தார். இதற்குக் கோயம்புத்தூர், கரூர், சேலம், பவானி முதலிய சுற்று நகரிலிருந்து கிறிஸ்துவின் தொண்டர் வந்து ஏகோபித்துக் கூடினர். தொகையில் சுமார் 600-பேரிருக்கலாம். இங்கு ஓர் பலனுங் கிடைத்தது. கிறிஸ்தவர்களது நட்பைப்பல நாளாய் ருசித்து வந்த ஓர் பிராமண வாலிபன் கோயம்புத்தூர் நண்பர்களுடன் அங்கிருந்து இக்கூட்டங்கட்கு வந்திருந்தார். கனம். எடி துரையைக்கண்டு வெகு நேரமாய் சம்பாஷித்தார். பின்பவர் இதயம் திறக்கப்பட்டதால் ஞான சூரியனின் ஒளி பிரகாசிக்கவே தானும் தன் இளைய மனைவியும் கனம். எடி துரையவர்கள் முன்பாகவே ஞானதீட்சைபெற ஒழுங்கு செய்து போயிருக்கிறார். இன்னம் இரண்டொரு வாரத்திற்குள் பகிரங்கமாக இயேசு பிரானுக்குத் தொண்டனாவார். அவரை நாம் கிருபாசனத்தில் நினைத்தருள்வோமாக. அதற்குப்பின் இலங்கையிலுள்ள யாழ்பாணம் சென்றார்கள். அங்கு வந்துள்ள 1,200-தேவ ஊழியர்களிடையில் கூட்டம் நடத்தி அவர்கட்கும் படை முயற்சி ஆசையை எழுப்பி விட்டனர். யாழ்பாணத்திலுள்ள பல கல்லூரியில் கூட்டம் நடத்துங்கால் 60-பேருக்கதிகமானவர் இயேசு பிரானை ஏற்றுக்கொண்டார்கள். பலர் ஞான தீட்சைக்குத் தயார் செய்யப்பட்டும் வருகிறார்கள். அங்கிருந்து திருவாங்கூருக்குத் தென்பாகத்திலுள்ள கன்னியாகுமரிமுனைக் கருகாமையிலுள்ள நாகர்கோவிலையடைந்தோம். பாறைச்சாலை, நெய்யூர், நாகர்கோவில் முதலிய சேகரங்களிலிருந்து சுமார் 400 தேவ ஊழியர்கள் வந்திருந்தனர். 1500-க்கு மேலான கிறிஸ்தவர்களும் வந்திருந்தனர். தென்னிந்தியாவிலுள்ள கோவில்களிலெல்லாம் மெஞ்ஞானபுரம் கோவிலைவிட நாகர்கோவிலிலுள்ள தெய்வாலயந்தான் பெரிது. அக்கோவில் நிறைய வந்திருந்த கிறிஸ்தவர்களது கூட்டத்தைக் காணுங்கால் பரவசமடையக் கேட்டானேன்.

பின்னர் திருவாங்கூருக்குப் பிரதான நகராகிய திருவனந்தபுரம் செல்ல அங்குள்ள பெரிய கோவிலில் பல கூட்டங்கள் நடைபெற்றன. சுமார் 400-தேவ ஊழியர்களும் 800-கிறிஸ்தவர்களும் வந்து கூடிப்பலன் பெற்றுத் திரும்பினர். இந்துக்களுக்கும் ஒரு பெரிய கூட்டம் விக்டோரியா மண்டபத்தில் நடைபெற்றது. அக்கூட்டம் முடிந்த உடன் இரவு 7-மணிக்கு அவ்வூரை விட்டு ஆறுகளும் ஊருகளும் காடுகளும் மலைகளும் கடந்து 100-மைல் மோட்டார்காரில் பிரயாணம் செய்து காலை 2-மணிக்குப் பாளையங்கோட்டை வந்தனர். அன்று ஓய்வு நாட் காலையில் பிரசங்கமும் அதன் பின் படை முயற்சி சம்மந்தமாக ஒரு கூட்டமும் பாளையங்கோட்டை இங்கிலாந்து திருச்சபை ஆலயத்தில் நடத்தினர். அன்றிரவே புறப்பட்டு மெங்களூர் சென்றோம். அவ்வழகிய நகரில் வாலிப கிறிஸ்தவ சங்கக் காரியதரிசிகளின் கான்பரன்ஸ் கூட்டம் நன்றாய் நடந்தேறியது. காரியதரிசிகளும் பிரதிநிதிகளுமாக சுமார் 150-பேர் கூடினர். அந்நகர் கிறிஸ்தவர்களது முயற்சியால் இந்துக்களிடையில் பல கூட்டங்கள் நடைபெற்றன. கனம். திரேசி பண்டிதரும், கனம். சுப்பிரமணிய போதகரும், கனம் எடி துரையும் பங்கு பெற்றார்கள். அதன்பின் மறுபடியும் வேலூர் வந்து சேர்ந்தோம்.

இப்பிரயாணத்தில் இனி நடத்தப்பட்ட கூட்டங்களெல்லாம் இந்துக்களிடையிலேயே நடத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான இந்துக்களிடையே நடத்தப்பட்ட மிகப்பலனுள்ள கூட்டங்களின் வரலாற்றை இனி உரைப்பேன். இம் மஹா ஜனக்கூட்டங்கள் வேலூரில் முதலில் ஆரம்பித்தன. வெகு காலமாய் இதற்கென்றே உழைத்து வந்த கிறிஸ்தவத் தொண்டர்கள் கண்டு களி கூறுமாறு 2,500 இந்துக்கள் எடி துரை உபந்நியாசத்தைக் கேட்க பெரிய நாடக சாலையின் கண் வந்து கூடினர். அந்நாடக சாலைக்காரர் "இச்சாலை கட்டின நாளாய் இவ்வளவு பெருங்கூட்டமான ஜனங்கள் இங்கு வந்து கூடினதேயில்லை" என வியந்து மொழிந்தார். இம்மஹா ஜனக்கூட்டத்தில் கனம் எடி துரை முதல் நாளில் இந்தியாவின் தற்கால ஸ்திதியைக்காட்டும் சில படங்களுடனும், இரண்டாம் நாளில் அந்த ஸ்தி

திக்குக் காரணமாகிய பாவங்களைப்பற்றியும், மூன்றாம் நாளில் அப்பாவத்தை நீக்கி அந்த ஸ்திதியிலிருந்து இத்தேசத்தை உயர்ந்த சீருக்குக்கொண்டுவர வல்ல உலக சற்குருவாகிய ஸ்ரீ இயேசு பெருமானைப் பற்றியும் இதயத்தை இளக்குமாறு பேசி "இந்தியா தேசத்தின் நம்பிக்கை இயேசு பிரானே" என முடித்தார். பின்பவர் உபதேசத்தைக் கற்றறிய அவர்களை வேண்டினர். தனிமையாகவாவது வேதாகம வகுப்பைச் சேர்ந்தாவது வாசிக்கலாமென விளம்பரம் செய்தனர்.

பலர் அவ்வாறு கற்பதாக கார்டில் கையெழுத்திட்டனர். பின்னர் மதுரைமாநகரையடைந்தோம். அங்கு இதற்கென்று போட்டுள்ள ஓர் பெரிய விசித்திரப் பந்தலில் 3,000 இந்துக்களுக்கு மேல் வந்து கூடினர். ஓ! அக்காட்சியை எவ்வித முறைப்பேன். சைவ மதத்திற்குப் பிரதான உறைவிடமாகிய இப்பூர்வ நகரில 3000-இந்து புருஷர்கள் கிறிஸ்தவ கூட்டத்தற்கு வருவதும், மிஷின் வளையில் ஸ்திரிகட்கென்று போட்டுள்ள பந்தலில் நடத்தப்பட்ட கிறிஸ்தவ கூட்டத்திற்கு சுமார் 800-ஸ்திரிகள் கும்பல் கும்பலாக சிநேகிதர்களுடனும் பிள்ளைகளுடனும் வருவதும் கிறிஸ்து நாதரைப்பற்றி மிக அமைதியாகக் கேட்பதும் பின் கூட்டம் கூட்டமாகக் கலைந்து போவதும் இதயத்தைக் கவர்ச்சித்ததே. இப்பேர்ப்பட்ட கூட்டங்கள் இந்தியாவில் நடைபெறுமோவென சில மாதங்கட்டு முன் பெருமூச்சு விட்டோம் நம்மில் சிலர். வள்ளலாகிய இயேசு பிரானைச் சார்ந்து வருந்தினால் வாராதொன்றுமில்லை. "அவர் வல்லவர்". 600-பேர் கார்டிலும் கையெழுத்துப் போட்டார்கள். அதன்பின் பாளையங்கோட்டையைச் சேர்ந்தோம். அங்குள்ள நூற்றாண்டு மண்டபத்தில் மூன்று மஹா ஜனக் கூட்டங்கள் நடந்தேரியது. சுமார் 2,500 இந்துக்கள் வந்திருந்தனர்.

இப்பெருங் கூட்டமான இந்துக்களைக் கிறிஸ்தவர்கள் கூட்டிச் சேர்த்த விதத்தையும் கூட்டங்கள் நடத்தப்பட்ட விதத்தையும் பலர் அறியுமாறு எடுத்துரைப்பேன்.

1. அப்பட்டணங்களிலுள்ள கிறிஸ்தவர்கள் (லேமென்களும் தேவ ஊழியரும்) தன் பட்டணத்தைப் பல வகுப்பாகப் பிரித்து அங்குள்ள இந்துக்கள் வீட்டைச்சந்தித்து அவர்களது யோக க்ஷேமங்களை விசாரித்து அவர்களது நட்பையும் அன்பையும் நாளடைவில் சம்பாதித்து வந்தார்கள். இதில் சுமார் நாலைந்து மாதங்கள் சிலவாயின. பின்னர் அறுதினமும் அவர்கள் வீடுகட்குச்சென்று அவர்கட்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து அவர்கட்கும் தனக்கும் ஒரு ஐக்கியத்தை சம்பாதித்துக் கொண்டார்கள். அதன்பின் கூட்டத்திற்கு வருப்படி அழைத்தார்கள்.



2. டிக்கட்டு அவர்கட்குக்கொடுத்து அந்த டிக்கட்டு கொண்டு வருபவரைத்தான் உள்ளே விட்டார்கள். நூற்றுக்கணக்கான 15 வயதுக்குட்பட்ட வாலிபர்களையும் சிறுபிள்ளைகளையும் சிலவிடங்களில் ஸ்திரிகளையும் உள்ளே விடவேயில்லை.

3. கிறிஸ்தவர்களையும் இப்படைமுயற்சிக் கூட்டங்கட்கு உள்ளே விடவில்லை. இதில் முதன்மையாயிருந்த சிலரைமட்டும் விட்டார்கள். இக்கூட்டங்களினால் வந்த நன்மைகள்.

1. இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்கட்கும் இதுவரையிலில்லாத சிநேகமும் ஐக்கியமும் உண்டாயிற்று. வீடுவீடாகச்சென்று இந்துக்களுடைய பேர் ஊரையறிந்து தனித்தனி ஊழியம் செய்யும் அருமையை அநேக கிறிஸ்தவர்கள் கற்றுக்கொண்டனர்.
2. தேவ ஊழியர்கள் மட்டுமல்ல, உயர்ந்த அந்தஸ்திலுள்ள லேமென்களும் இதில் பங்கு பெற்று இரவும் பகலும் வீடுகளைச் சந்தித்து தத்தம் நண்பரைக் கூட்டத்திற்கு அனுப்பினார்கள். இது நமது சபைக்குப் புதிதாக வந்திருக்கும் ஆசீர்வாதமே. இம்மிஷனரி ஆவி சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரின் இதயத்திலும் உதித்தது.
3. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தாமலும் ஆதாயப்படுத்த அறிவும் ஆசையுமிலும் இருந்த சில நண்பர்கள் இக்காட்சியில் பரவசமடைந்து உழைத்து வருகிறார்கள்.
4. ஒரே ஊரிலுள்ள பல மிஷன்கள் ஒன்றாய்ச்சேர்ந்து கிறிஸ்து பிரானின் கடைசிக் கட்டளையை மேன்பாடாகக் கருதி உழைத்து வந்தனர்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். வட இந்தியாவில் சில பெரிய பட்டணங்களிலும் வட திருவாங்கூரிலும் இவ்வாறு பெரிய மஹா ஜனக்கூட்டங்கட்கு முயற்சியெடுக்கப்பட்டு வருகிறது. கனம் எடிதுரை இப்பொழுது வட இந்தியாவுக்குப் போயிருக்கிறார். அவரையும் அவர் ஊழியத்தையும் இப்படை முயற்சிகளையும் கிருபாசனத்தில் நினைத்தருள்வோமாக.

"உமக்கென்று பாடுபட்டோன்
நஷ்டப்படமாட்டானே,
உமக்கென்று ஜீவன் விட்டோன்
சாகா ஜீவன் பெற்றானே".

பால் S. கடம்பவனம்.

## சீன சபையின் 50 வருஷ விர்த்தி.

சீனதேசத்துப் புராட்டஸ்டாண்ட் சபைகள் தங்கள் தேசத்தில் மிஷன்கள் வேலை செய்ததனால் உண்டான விர்த்திக்காக 50 வருஷ மகோற்சவம் கொண்டாடினார்கள்.

| | 1865 | 1915 |
|---|---|---|
| ஜனத்தொகை | 300,000,000 | 400,000,000 |
| கிறிஸ்தவ மிஷனரிகள் தங்கக் கூடிய மாகாணங்கள் | 7 | (எல்லாம்) 18 |
| சீனாவில் வேலை செய்த சங்கங்கள் | 25 | 104 |
| கிறிஸ்தவ வேலை நடந்த சேகரங்கள் | 15 | 6851 |
| கிறிஸ்தவர்கள் | 3132 | 356,209 |
| கிறிஸ்தவ ஊழியர் | | |
| புறதேச மிஷனரிகள் | 112 | 5,186 |
| சீன ஊழியர் | 206 | 17,870 |

சீனதேச முழுவதும் இப்போது சுவிசேஷம் பிரசங்கிக்கப்படலாம். இது பெருத்த தேசமாதலால், 5000 மிஷனரிகளிருந்தும் இன்னம் எத்தனையோ பேருக்கிடமுண்டு. சீனதேசத்தில் 1000க்கு ஒருவன் கிறிஸ்தவன். இந்தியாவில் 250 பேருக்கு ஒருவன் புரொட்டஸ்டாண்டு சபைக் கிறிஸ்தவன். ரோமானிஸ்தரைச் சேர்த்தால் 80 பேருக்கு ஒருவன் கிறிஸ்தவன். இந்தியாவில் இன்னம் எவ்வளவோ செய்யப்படவேண்டியது. சீனாவில் இன்னமதிக வேலையுண்டு. ஆண்டவர் அங்கு விசேஷித்த ஆசையை உண்டாக்கி வருகிறார். ஆசியா முழுவதும் கிறிஸ்தவ நாடாக ஜெபிப்போமாக!

Printed and published by Mr. K. T. Paul, at the T. A. C. Press, Salem.

162012
27 JAN 1916
OFFICE OF THE REGISTRAR ... MADRAS.

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை

THE TAMIL ORGAN OF THE NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா இரண்டு

Vol. VIII. ஜனவரி 1916 No. 1

## நவ ஆண்டிற்கோர் நற்றுணைவர்.

"நீர் எங்களுடனே தங்கியிரும்; சாயங்காலம் ஆயிற்று, பொழுதும் போயிற்று."—லூக்கா 24:29.

இம்மாவுக்குப்போன சீஷர் இயேசுவை நோக்கி மன்றாடின மன்றாட்டு. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை அறிந்துகொள்ளாத சமயத்தில் அவர்கள் செய்த ஜெபம். ஆசீர்வாதகர்த்தரை நோக்கி அவர்கள் அறியாது செய்த ஜெபம் புது வருஷத்துக்குட்படும் நாம் புத்தியாய் செய்யத்தக்க மன்றாட்டு. அவர்கள் ஆண்டவரை அறியாதிருந்தார்கள். அந்தக்கர்த்தர் யாரென்பது நமக்கோ நன்றாய்த் தெரியும். அவர் காணாத ஆட்டைத் தேடின மேய்ப்பன். கலிலேயா தேசத்தில் கனத்த அற்புதங்கள் செய்த கிறிஸ்து கல்வாரி மலையிலே கெட்ட உலகத்துக்காக உயிர் துறந்த மீட்பர். கானான் தேசத்தில் அன்று அற்புதம் செய்த அந்த ஆண்டவர் இன்றும் அதிசயங்களை நடப்பிக்க நமது வாசலின் எதிரே நிற்கிறார். அவர் வல்லமை குறைந்ததில்லை. அவர் அன்பு அஸ்தமிக்க இல்லை. அவர் இன்றும் என்றும் மாறாதவரே. அவர் நமது மத்தியில் இன்றும் இருக்கிறார். நாம் அவரை அறிந்து கொண்டோமா?

சிலருக்கு அவர் கிறிஸ்து என்பது தெரியாதிருந்தும் அவரது கூடிருந்துகொள்ளுதல் அவர்களுடைய இருதயக் கடினத்தை மாற்றிற்று, அவர்களது அவிசுவாசத்தை அகற்றிற்று, அவர்களுடைய

துக்கத்தைத் தீர்த்தார். ஓர் ஞான அக்கினி அவர்கள் உள்ளத்தில் உயர்ந்தோங்கியது. அதனால் அவர் உத்தம நண்பனென்று அவர்கள் அறிந்துகொண்டார்கள். அவரை விட்டுப்பிரிய மனமற்றார்கள். அவரோ அவர்களோடு தங்க மனமற்றவர்போல் நடந்து போகிறார். இவர்கள் அவரை வருந்திக் கெஞ்சுகிறார்கள். அவர் அவர்களோடு தங்கி அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

நமக்கும் இவ்வுத்தம வழித்துணைவர் தேவை. இவ்வாண்டு முழுவதிலும் இவர் சம்பாஷணை நமக்கவசியம். அவர் கடிந்துகொள்ளுதல் நமது தலைக்குத் தைலமாம். அவர் திருவாக்கு தொய்ந்த உள்ளத்திற்குத் திடனை அளிக்கும். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே. அவரையன்றி நாம் ஆரம்பிக்கும் இப்பிரயாணம் பிரயாசையாம். நமது வழி நிழலற்ற வனாந்தரமாம். நீர் எங்களோடு இரும் என்று அவரை வேண்டிக்கொள்பவனே உத்தம பாக்கியன்.

அவர் அழையாத வீட்டில் நுழையாதவர்; வருந்திக்கேளாதவிடத்து வாராதவர். அவர் வாய் வார்த்தையைக்கேட்டு ஏமாறுகிறவரல்ல. உள்ளத்தின் கருத்தை உள்ளபடி அறிகிறவர். ஆகையால் உண்மையான மனதோடு, உள்ளக்கனிவோடு அவரை வருந்தியழைப்போமாக.

நமது உள்ளம் அவருக்கு உறைவிடமாகட்டும் அப்போது நமது வாயின் வார்த்தையும் கையின் கிரியையும் உன்னத வாசனை பொருந்தியவையாம். நமது வீட்டிற்கு அவரைத் தலைவராக்குவோமாக. அவர் சித்தம் நமது தின ஜீவிய சட்டமாகட்டும். அப்போ நமது வீட்டில் சமாதானம் வந்து தங்கும். நமது சங்கத்திற்கும் அவரே சபாநாயகராக இருக்கட்டும். அப்பொழுது நாம் செய்வதெல்லாம் வாய்க்கும்.

நம்மை விட்டுப்பிரிய அவருக்குப் பிரியமேயில்லை. நாம் அவரை வலியத் துரத்தினாலன்றி அவர் போக மாட்டார். ஆனால் அவர் நம்மை விட்டால் நமது கதி அதோ கதி. ஆகையால் நாம்



நீர் பாக்கியங்களைத் தந்தால்
சந்தோஷமாயிருப்பேன்.
நீர் கஸ்தி வரப்பண்ணினால்
நான் பிள்ளைபோல் பொறுப்பேன்.
பிழைப்புக்கும் இறப்புக்கும்,
சாமி நீர் என்ன திட்டம்
தீர்மானம் பண்ணினாலும்
அதும்முடைய சித்தம்".

என்று அவருக்கே நம்மை ஒப்புக்கொடுப்போமாக.

இதுவே இப்புது வருஷத்தை நமக்கும் நமது நாட்டிற்கும் பாக்கியமானதாக்கிக்கொள்ளும் உத்தம வழி.

## புது வருஷத்துப் புது மன்றாட்டு.

---

### தீபிகை சந்தா.

---

பகவான் அருளால் நமது சங்கம் கடந்த பத்து வருஷமாய்ச் சுவிசேஷ வேலை நடத்தி வருகிறது. இவ்வரிய ஊழியத்தைக் குறித்துப் பத்திரிகை வாயிலாகவும் பிரயாண காரியதரிசி மூலமாகவும் தமிழ் நாட்டாராகிய நாம் கேட்டு வந்திருக்கிறோம். தமிழ் பாஷையிலன்றி உர்து, ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் பாஷைகளிலும் பத்திரிகைகள் பிரசுரமாகின்றன. மற்றப் பத்திரிகைகள் எல்லாம் நஷ்டமின்றி நடைபெற, தமிழ்ப்பத்திரிகையில் மாத்திரம் வருஷாவருஷம் நஷ்டம் வருவதேன். கடந்த ஆண்டில் சங்கத்தார் ரூ. 60 இப்பத்திரிகை அச்சிட அளித்தார். மேலும் நமது 1500 சந்தாக்காரர் மூலம் வந்த வரவு ரூ. 95. அச்சிடு செலவு ரூ. 180. தபாற்கூலி ரூ. 60. ஆக கடந்த வருஷத்தில் மாத்திரம் நஷ்டம் ரூ. 85. இதற்குக்காரணம் யாது. 200 சந்தாக்காரருள்ள ஹிந்தி பத்திரிகை லாபமடைய 1500 பேருள்ள நமது பத்திரிகை நஷ்டமடைவானேன். ஹிந்தி பத்திரிகை இருமாசத்துக்கொரு முறை பிரசுரிக்கப்படும். ஆயினும் சந்தா நாலணா. அவ்வாறே மற்றப் பத்திரிகைகளுக்கும் சந்தா நாலணா. நமது தீபிகைக்கு அவ்விதம் நாலணா

சந்தா வேண்டுமெனக் கேட்கவில்லை. அதில் பாதியாம் இரண்டு அணா வருஷ சந்தா கொடுத்தால் போதும். தபாற்கூலி இல்லை. ஆக இதில் சந்தாக்காரருக்குப் பெருத்த நஷ்டமில்லை. சங்கத்திற்கு பலத்த லாபருமில்லை. நமது பத்திரிகையோ சுயபரிபாலனைத்துக்கு வரும்.

இப்பத்திரிகையை இதுவரையும் பரிபாலித்து, சங்கத்திற்குத் தங்கள் ஜெபத்தினாலும், காணிக்கைகளினாலும் ஒத்தாசை செய்து வந்த யாவர்க்கும் நமது வந்தனம்.

இனியும் இப்புது வருஷத்திலும் தங்கள் நல்லுதவியை விரும்பும்

பத்திராதிபர்.

## நமது சங்கம்.

1915-ஆம் டிசம்பர் 25-ல் நமது சங்கத்தின் 10-வருஷ மகோற்சவம் அல்லகபாத்தில் கொண்டாடப்பட்டது. இதன் விபரம் அடுத்த மாதம் வெளியாகும்.

இப்பத்து வருஷத்தில் கர்த்தர் நமது சங்கத்தைக்கொண்ட வேலைக்காக அவருக்கு ஸ்தோத்திரம். நமது இந்திய சங்கம் எல்லா சபைகளுக்கும் பொது. ஆங்கில திருச்சபையார், மெதடிஸ்ட், பிரெஸ்பிட்டேரியன், லுத்தரன், பாப்டிஸ்ட் சபைகளுக்குப் பொது. அச்சபைகளையெல்லாம் ஒன்றாக்குவதல்ல. எல்லாக்கிறிஸ்தவர்களும் சுவிசேஷ வேலைக்காக ஒன்று சேர்ந்து, பல சேகரங்களை ஸ்தாபித்து நமது சபைகளை பெருக்குவதே இதன் நோக்கம். ஆங்கிலேய சபையாருக்கு பஞ்சாப் மண்ட்காமரி சேகரமும், பிரெஸ்பிடேரியருக்கு ஐக்கிய மாகாண நக்கார் சேகரமும், தென்னிந்திய ஐக்கிய சபைகளுக்கு சேலம் ஜில்லா ஓமலூர் சேகரமும், சிரிய கிறிஸ்தவர்களுக்குக் கன்னடம் கார்வார் சேகரமும், மேலிந்தியாக் கிறிஸ்தவர்களுக்கு கர்ஜட் கர்மலா சேகரமும் லுத்தரன் சபைகளுக்கு ரீவா சேகரமும் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த சேகரங்களுக்கு குறிக்கப்பட்ட சபைகளே தங்கள் சபையின் அபிஷேகம்பெற்ற குருக்களையும், தங்கள் சபைகளின் ஊழியரையும் அனுப்பி, தங்கள் சேகரத்துக் கிறிஸ்தவர்களை தங்கள் சபையின் ஒழுங்கின்படியே பரிபாலிப்பார்கள். ஆகிலும் மற்றெல்லா மேல் விசாரணையும் எல்லாச் சபைகளிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள காரிய நிருவாகக் கமிட்டிக்கேயுரியது.

... JAN 1916 ... MADRAS



இந்த ஏற்பாட்டை எல்லாச் சபைகளும் ஒப்புக்கொள்வதற்காக நம் சங்கத்தின் முதல் வருஷங்களில் நமது சங்கத்தினர் இம்மகா பெரிய இந்திய தேசத்தின் ஒரு முனை தொடங்கி மறுமுனைமட்டும் போய், சகல இந்தியக்கிறிஸ்தவர்களுக்கும், பல விடங்களில் அவர்களை மேல் விசாரித்துவரும் ஐரோப்பிய குருக்களுக்கும் விபரித்து, யாவரும் இந்தச் சங்கத்தின் நோக்கத்தையும் முறையையும் ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டியிருந்தது. இந்தக்கஷ்டமான வேலை செய்யப்பட்டால் தான் சங்கத்தின் விசேஷித்த வேலை துவக்கக்கூடியதாகும். ஆகவே, சில வருஷங்களாய், இந்த ஆயத்த வேலை நடந்து, ஒன்றொன்றாய் சேகரங்கள் ஸ்தாபிக்கப்பட ஆரம்பித்தன. சில சேகரங்கள் 8-வருஷமும், சில சேகரங்கள் 6-வருஷமும், சில 4-வருஷமாகவும் வேலை செய்து வந்தன. ரீவா சேகரத்துக்கு ஒரு மிஷனரி ஹிந்தி பாஷைக்கற்று தயாராயிருந்தும், இன்னும் அவ்விடத்துக்கு அனுப்பப்படவில்லை. ஆகவே வெகு சொற்ப காலம் தான் வேலை நடந்துவரும் நமது சேகரங்களில் 1200-பேருக்குமேல் சில வருஷங்களில் கிறிஸ்தவ சபைகளாய்ச் சேர்க்கப்பட்டிருப்பது நாம் ஆண்டவருக்கு மிகுந்த உட்கருத்தாய் நன்றி செலுத்தக் காரணமாகும். நமது ஊழியர் கிறிஸ்துவின் ஆவியினால் நிறைந்து, சில விடங்களில் புதிய பாஷையைக் கற்று அதிக பணச்செலவன்றி நமது நாட்டாரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தப் பிரயாசப்பட்டு வருகிறார்கள்.

பல ஐரோப்பிய மிஷன்கள் பணத்தை தாராளமாய்ச் செலவழித்து அனேக ஊழியரை நியமித்து வேலைசெய்தும், அனேக விடங்களில் விர்த்தி வெகு சொற்பமென்று பார்க்கும்போது நமது நாட்டில் சுவிசேஷ வேலை அதிகக் கஷ்டமென்பது விளங்கும். இந்தியராகிய நாமோ அக்கஷ்டங்களினால் அதைரியப்படாமல், வல்லமையுள்ள பராபரனை நமது சொற்ப சக்திக்கேற்றபடி, அங்கங்கே தங்களையே பரிபாலித்துக்கொண்டு, தங்களைச் சுற்றியுள்ள அஞ்ஞானிகள் நடுவில் தாங்களே சுவிசேஷ வேலை செய்யக்கூடிய சபைகளை ஸ்தாபிக்கும் பொருட்டு, நமது மிஷனெரியார் செய்துவரும் அரும்பிரயாசைகள் மெச்சத்தக்கவையே. இதற்காகவும ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

நமது சேகரங்களில் அதிக பலன் கொடுத்தவை மண்ட்காமரியும், நக்கருமே. இங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சபைகளுக்காக நாம் ஆண்டவரை ஸ்தோத்தரித்து, அவ்விடங்களில் மென்மேலும் ஆத்துமாக்கள் ஆதாயப்படவும், விர்த்தித்துவரும் சபைகள் ஆவியி

னால் நிரப்பப்படவும் சபைகளிலே நல்லொழுக்குகள் வர்த்தடவும் நாம் ஆண்டவரை மன்றாடுவோமாக.

நமது சேகரங்களில் சிலவற்றில் இன்னும் ஒரு ஞானஸ்நானமாகவில்லை. எவ்வளவோ கரிசனையாயும் ஊக்கமாயும் வேலை செய்யப்பட்டும், கிறிஸ்தவர்கள் இன்னம் சேர்க்கப்படாதது மிகவும் விசனிக்கத்தக்கதே. ஆகிலும் நாம் ஆண்டவரின்மேல் காத்திருப்பதில் இளைக்கக்கூடாது. விசுவாசத்தில் பெருகி, உண்மையாய் உழைக்கவேண்டுமென்பது கர்த்தரின் நோக்கமென்று கொள்ளலாம். 16-நூற்றுண்டுகளுக்குமேல் இவ்விந்தியா தேசத்தில் சஞ்சரித்துவந்த சிரியக்கிறிஸ்தவர்களும், புராட்டஸ்டாண்ட் மிஷன்கள் முதல் முதல் வேலையாரம்பித்த தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களும் வேலை செய்யும் கர்மலாடுனம், ஓமலூரிலுமே வேலைக்கும் பயனின்னும் தோன்றவில்லை. கொஞ்ச காலமாய்க் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப்பெற்றுள்ள வடவிந்தியாவின் இளைய சபைகள் அதிக பயன்களைக் காணும்போது வெகுகாலக் கிறிஸ்தவர்களாகிய சிரியரும் தமிழரும் இன்னம் பயன் பெறாதது வெகு ஆச்சரியமே. ஆகிலும் நமது விசுவாசத்துக்கு இது ஒரு சோதனை என்பதை நாம் ஒப்புக்கொண்டு பழையக்கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவாசத்திலின்னம் தேறி, அதிக காலம் அவர் மேலேயே சார்ந்து, காத்திருந்து, பிறகு மகிழ்ச்சியோடு மிகவுமாச் சரியமான பலன்களைப் பெறுவோமென்னும் நம்பிக்கையோடு உழைப்போமாக. இதிலுழைக்கும் நம் சங்கத்தினூழியர் அதைரியப்படாமல் விசுவாசநிரத்தோடும், நம்பிக்கையோடு முழைக்கவும், இப்பொழுது நாம் உட்பிரவேசித்திருக்கும் இரண்டாம் பத்து வருஷ காலத்தில் இச்சேகரங்களில் ஆச்சரியமும் மகிழ்ச்சியுமான அறுப்பு கிடைக்க வேண்டுமென்று மன்றாடுவோமாக. நமது ஓமலூர் சேகரத்திலுண்டாயிருக்கும் புது அசைவைப்பற்றி நாம் முன்னொரு மாதம் சொல்லியிருக்கிறோம். நாம் யாவரும் அறுப்பு மிகுதி என்று சொன்ன ஆண்டவரை நோக்கி ஊழியத்தின் சித்திக்காக ஜெபிப்போமாக. நமது அவிசுவாசமும் நமது ஞான ஜீவியத்தின் குறைகளினாலும் நமது சுவிசேஷ வேலை தடைபடாதபடி நாம் நம்மைச் சோதித்து, ஆண்டவரை நம்பி அவர் வல்லமையான காரியங்களைச் செய்யவேண்டுமென்று மன்றாடுவோமாக.

ஆகவே நமது கிறிஸ்தவர்கள் யாவரும் நம் சங்கத்தை ஒப்புக்கொண்டதும், நமது சேகரங்களில் 1200 பேர் கிறிஸ்தவர்களாகச் சேர்க்கப்பட்டதும், நமது சங்கம் இந்திய முறைகளை அனுசரித்து, பணச்செலவு அதிகமாகாதபடி சுயமரியாதையான முறையைக் கையாடி



வருவதும் நமது நன்றிக்குரியது. மேலும் கடந்த 10-வருஷங்களில் நமது சங்கத்தின் பணச்சேர்ப்பும் வெகு திருப்திகாமானது. தற்சமயம் மாதந்தோறும் செலவு சுமார் 1500 ரூ. இத்தொகை சேர்க்கப்படுவதுடன், நமது சங்கத்துக்கு 10,000 ரூ. பிரத்தியேக பண்டாகவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. சென்ற இரண்டு வருஷங்களாய் யுத்தத்தின் பொருட்டும், இன்னம் மற்ற காரணங்களினாலும் வரவு கொஞ்சம் மட்டுபட்டது. ஆகிலும் அதன்பொருட்டு நமது வேலை கொஞ்சமும் குறையாமல் நடத்தப்பட்டு வருவது ஆண்டவருடைய மட்டற்ற கிருபையே.

நமது சங்கத்தை இம்பட்டும் ஆதரித்து வந்த திரிபேக பராபரனுக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தி, அவர் இந்த இரண்டாம் 10 வருஷத்தில் நமது சங்கத்தில் நாம் எண்ணுவதற்கு மேலாக நமக்கு ஆச்சரியத்தையும் பூரிப்பையுமுண்டாக்கி, தமது திருநாமத்தை இந்த நாட்டில் மகிமைப்படுத்தியருளவேண்டுமென்று மன்றாடுவோமாக.

## தென்னிந்திய சுவிசேஷப் படைமுயற்சி.

சீன தேசத்தில் சமீபகாலத்தில் நடந்துவரும் சுவிசேஷ முயற்சியைக்குறித்து சென்றவருஷம் நமது பத்திரிகையில் கூறியிருந்தோம். அங்கே மாணவருக்குள்ளும், சர்க்கார் உத்தியோகஸ்தரிடத்திலும் செய்யப்பட்டுவரும் விசேஷித்தச் சுவிசேஷ வேலையை எல்லாக்கிறிஸ்தவ சபைகளும் செய்து வருகிறதென்றும் அவ்விடத்தில் ஆயிரக்கணக்கான பேர்கள் சுவிசேஷத்தை ஆராயவும் அதில் சிலர் கிறிஸ்தவர்களாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்றும், அநேக மாதங்களாய் சுயதேசக்கிறிஸ்தவர்களால் செய்யப்பட்டுவந்த ஆயத்த வேலையும் முயற்சியும் எடி துரை பெரிய பட்டணங்கள்தோறும் சென்றுப் பெருந்தக்கூட்டங்கள் வைத்த காலத்தில் ஆச்சரியமாய்ச் சித்தி பெற்றதென்றுமறிந்தோம். அப்பேர்ப்பட்ட வேலை நம் நாட்டில் கூடுமோவென்று கேட்டு, அது கூடுமென்று நம்பி நமது தமிழ்நாட்டுக்கிறிஸ்தவ சபைகளில் சில 1 வருஷமாய் இப்படி ஆயத்தவேலை செய்து வந்தார்கள். சம்பளம் பெற்ற ஊழியர் மாத்திரமல்ல, இதர கிறிஸ்தவர்களும் தங்களை விசேஷித்த பிரகாரமாய் வேத வாசிப்பினாலும், ஜெபத்தினாலும் ஆயத்தம்பண்ணி தங்களூரைச்சுற்றியுள்ள கிராமங்களிலெல்லாம் சுவிசேஷ வேலை செய்து அநேக வீடுகளைச் சந்தித்து, அக்கிராமவாசிகளுடைய நட்பைச் சம்பாதித்து, அதன் மூலமாயும் அவர்களுக்குச்சுவிசேஷத்தை அறிவித்து வந்தார்கள்.

செப்டம்பர்-மீ வேலூரில் அநேக ஊழியர்கள் கூடினார்கள். எடி துரையும் அங்கு கிறிஸ்தவ ஊழியர்களுக்கும், புறமதஸ்தர்களுக்கும் வைக்கப்பட்ட கூட்டங்களில் பேசினார். அக்கூட்டங்களின் பயனாய் நமது கிறிஸ்தவர்களில் சுவிசேஷ வாஞ்சை அதிகரித்து, அஞ்ஞானிகளில் அநேகருக்குள் மார்க்க ஆராய்ச்சி ஆரம்பித்திருக்கிறது.

தென்னிந்தியாவிலநேகவிடங்களில் திருநெல்வேலி, திருவாங்கூர், மதுரை, பங்களூர், சென்னப்பட்டணம் முதலிய கிறிஸ்தவரநேகருள்ளவிடங்களிலும் இம்முயற்சி ஆரம்பித்திருக்கிறது. இந்தியா கிறிஸ்தவ நாடாக வேண்டுமென்றால் சம்பளம் பெற்ற ஊழியர் மாத்திரமல்ல, எல்லாக்கிறிஸ்தவர்களும் அவ்வூழியத்தைச் செய்ய வேண்டியது. ஆதிகாலத்தில் கிறிஸ்துமார்க்கம் பரவினதற்கு இதல்லோ காரணம்? கிறிஸ்துவுக்கடியானாகிய ஒவ்வொருவனும் அவருக்குச் சாட்சியாக பிழைக்கவேண்டும்.

நாம் மிஷன்களுக்குதவி செய்து, நமது மிஷனரிகள் செய்யும் வேலைக்காக ஜெபிப்பதுடன், நாமிருக்குமிடத்தில் நாமே சுவிசேஷ வேலை செய்வதும் அவசியம். வேலையோ மிகுதி. ராச்சியத்தின் அவயவங்கள் ராஜாவின் வேலையைச் செய்யாதிருப்பதெப்படி?

---

Printed and published by Mr. K. T. Paul, at the T. A. C. Press, Salem.

OFFICE OF THE REGISTRAR OF ...
23 FEB 1916
MADRAS

இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை

The Tamil Organ of the National Missionary Society of India

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

Vol. VIII. | பிப்ரவரி 1916. | No. 2

## நமது சங்கம்.

நமது சுயதேச மிஷனரி சங்கம் 10-வருஷ ஊழியத்தை முடித்து, தன் 11-வருஷ ஜீவியத்தைத் துவக்கியிருக்கிறது. சென்ற 10-வருஷ காலமாய் அது செய்த ஊழியத்தைக் குறித்து ஜனவரிமீ பத்திரிகையில் தெரிவித்தோம். இவ்வருஷ வேலையைக் குறித்த சில ஏற்பாடுகளை இப்பொழுது கூற விரும்புகிறோம்.

இவ்வருஷ வேலையைக் குறித்துப்பேச, ஜனவரிமீ 11-௳ நமது சங்கத்தின் காரிய நிருவாகக்கமிட்டி சென்னையில் கூடிற்று.

## நிருவாகிப்போர்.

இவ்வருஷத்தில் காரியங்களை நடத்துவதற்கானவர்கள் நியமிக்கப்பட்டார்கள். ராஜா ஸர் ஹர்னாம்சிங் நமது சங்கத்தின் தலைவராகவும், கனம். கே. ஸி. சாட்டர்ஜி போதகரும், திவான் பகதூர் ஜி. டி. வொர்கிஸ் அவர்களும், கனம். இ. எஸ். ஹென்ஸ்மன் அவர்களும் உபதலைவர்களாகவும், கனம் கே. டி. பால், பி. ஓ. பிலிப் அவர்கள் காரியதரிசிகளாகவும், கனம் ஹென்ஸ்மன் அவர்கள் பொக்கிஷதாரியாகவும், தெரிந்துகொள்ளப்பட்டார்கள். சில வருஷங்களாக தன் பொக்கிஷதாரி வேலையோடு காரியதரிசியாகவுமிருந்து அரும்பிரயாசை யெடுத்துவந்த கனம் ஹென்ஸ்மன் அவர்கள் நம் சங்

23-2-16

கத்தில் செய்து வந்த வேலை நமது நன்றியறிதலுக்குரியது. தன் பெலவீனத்தின்பொருட்டு வேறே காரியதரிசிக்குத் தன் வேலையை ஒப்புக்கொடுத்தும், அவர் தன்னாலியன்ற உதவி இன்னும் செய்து வருகிறது நமது பாக்கியமே.

## ஊழியர் மாறுதல்.

நமது மிஷன் சேகரங்களில் சில மாறுதல் செய்யப்பட்டது. டி. எஸ். என். சாடர்ஜி அவர்கள் இவ்வருஷம் ஜூலை மாதத்திலிருந்து மண்ட்காமரியிலல்ல, நூக்கரில் வேலை செய்வார். மண்ட்காமரியில் ஒரு ஸ்திரீ வைத்தியரும், நூக்கரில் ஓர் மிஷனரியம்மாளும் நியமிக்கப்படுவார்கள். நமது பிரயாணக் காரியதரிசியாயிருந்த பி. எஸ். கடம்பவனம் அவர்கள் ஓமலூரில் உழைத்து வருவார். முத்தரான் சபைகளுக்கென்று குறிக்கப்பட்ட ரீவா சேகரத்தில் மே அல்லது ஜூன் மாதத்தில் ஞானபரணம் அவர்கள் வேலையாரம்பிப்பார்.

## வரவு செலவு.

சென்ற வருஷத்தில் பெருங்கடன் நேரிடுமென்று நாம் பயந்தும், நமது சங்கத்தின் வரவும் செலவும் ஏறக்குறைய ஒன்றாயிருந்தது வெகு திருப்திகரமானது. 1916-ஆம் வருஷ செலவு ரூ. 23,000 ஆகும் என்று கணிக்கப்பட்டது. அத்தொகையில் தென்னிந்தியா ரூ. 6000 சேகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது சங்கத்தமிழ்க் கமிட்டியார் இம்மாதம் 27-உ சேலத்தில் கூடும் கூட்டத்தில் தமிழ் நாட்டு ஒவ்வொரு ஜில்லாவும் அத்தொகையில் எவ்வளவு அனுப்பவேண்டியதாயிருக்குமென்பது பேசப்படும். கடந்த வருஷத்தில் செலவு ரூ. 16,970-5-1 தானாகிலும், நமது சேகரங்களில் வேலை அதிகரித்திருப்பதாலும், அல்லகபாத்தில் கூடின சர்வ மாகாணக் கமிட்டியாரின் ஆலோசனைப்படி 2-புதிய ஸ்திரீ மிஷனரிகள் நியமிக்கத் தீர்மானமாயிருப்பதனாலும், இவ்வருஷச் செலவு அதிகமேயாகுமென்று கணிக்கப்பட்டிருப்பதால், பல மாகாணங்களும் முன் வருஷங்களைவிட அதிக உதவி புரியக் கோருகிறோம்.

## ஊழியர் ஆதரிப்பு பண்டு.

மேலும், நமது மிஷனரிமாரின் பிற்கால உபயோகத்துக்கென்று ஒரு ஊழியர் ஆதரிப்பு பண்டு ஏற்படுத்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சம்பளத்தில் ரூபாய்க்கு



ஒரு அணா நமது சங்க ஊழியர் கொடுக்க ஊழியர் செலுத்தும் அத்தொகைக்குச் சரியான இன்னொரு பாகம் சங்கம் செலுத்தி, ஆக ஒவ்வொருவர் கணக்கிலும் ரூபாய்க்கு இரண்டு அணாவாகச் சேர்த்து, அவர்கள் வேலை செய்யக்கூடாமலிருக்கும் காலத்தில் அவர்களுக்கு ஒரு மொத்த தொகை கொடுப்பதே இப்பண்டின் நோக்கம். இவ்வருஷத்தில் நமது சங்கம் ஏறக்குறைய 1000-ரூ. இப்பண்டுக்குச் செலுத்த வேண்டியதாயிருக்கும். இந்த ஒழுங்கு நமது மிஷனரிகளின் பிரயோஜனத்துக்கென்று இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது சந்தோஷத்துக்குரிய விஷயமே.

## கட்டட பண்டு.

மேலும், தற்சமயம் நமது பல சேகரங்களிலும் நமது சங்க ஊழியர்களுக்குத் தங்குமிடம் கட்டப்படுவது அவசியமென்று நமது காரிய நிர்வாக சங்கத்தாரும், அல்லகபாத்தில் கூடின சர்வ மாகாணக் கமிட்டியாரும் கண்டு, கட்டடப் பண்டு சேர்க்கவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். தற்சமயம் வருஷா வருஷம் வீட்டு வாடகையாக நம் சங்கம் பல சேகரங்களிலும் செலவழிக்கும் தொகை ரூ. 1,500. இத்தொகை ஒவ்வொரு வருஷமும் அதிகரித்து வருகிறது. மேலும் சில இடங்களில் வசதியான இடங்களில் வீடு அகப்படுவதும் அதிக கஷ்டம். இக்காரணங்களால் நம்முடைய செலவிலே வீடுகள் கட்டப்பட வேண்டுமென்னும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள ஓர் நண்பர் இப்பண்டுக்கு மூலதனமாக 3000-ரூ. கொடுத்து, அதற்குப் பத்துமடங்கான தொகை சேகரிக்கப்படவேண்டுமென்று நம் சங்கத்தாரைக் கேட்டிருக்கிறார். அவருடைய யோசனைக்கிணங்கி, 30,000-ரூ. நம் சங்கத்துக் கட்டடப்பண்டாகச் சேர்க்கப்படவேண்டுமென்று தீர்மானித்து, இத்தொகைக்காக சகல இந்தியக் கிறிஸ்தவர்களுக்கும் மனு செய்து வருகிறார்கள். நமது சாதாரணச் செலவுக்குமேல் இக்காரியத்துக்கும் பொருளுதவி செய்வது நம்மில் [illegible]மானவர்களுக்குக் கஷ்டமென்பதையுணர்ந்து, இவ்விசேஷித்த கட்டடச் சேர்ப்பு இவ்வருஷம் ஜனவரியில் தொடங்கி 3-வருஷம் செய்யப்படவேண்டுமென்று ஒழுங்காகியிருக்கிறது. இவ்விஷயமாய் உதவி செய்ய விரும்புவோர் மாதமாதம், அல்லது மூன்று மாதத்துக்கொருமுறை தங்கள் கட்டணத்தை நேரே நமது

பொக்கிஷதாரிக்காவது, அல்லது இவ்விஷயமாய் அந்தந்த ஊரிலே ஓர் கமிட்டி யேற்படுத்தி அக்கமிட்டியின் பொக்கிஷதாரிக்காவது, செலுத்தி, நமது கட்டடப்பண்டு 30,000=ரூ. ஆகும்படி பார்க்க நம்நேயர் யாவரையும் கோருகிறோம்.

## நம் சேகரங்களும் நம் நண்பரும்.

ஜனவரி௴ கூட்டத்தில் இன்னொரு விசேஷித்த விஷயம் பேசப்பட்டது. நம் நண்பர் நமது சங்கத்தின் விஷயங்களை நேரே அறியும்படி அடிக்கடி அவர்கள் மிஷனரிகளுக்குக் கடிதமெழுதுவது நலமென்றும், அத்துடன் நமது மாகாணக் கமிட்டிகள் கூடியமட்டும் அருகேயுள்ள மிஷன் சேகரத்தில் கூடுவதும் உசிதமென்றும் காணப்பட்டது.

## கார்வாரில் முதற்பலன்.

ஜனவரி௴ தீபிகையில் ஓமலூர், கார்வார் சேகரங்களில் இன்னும் நாம் முதற்பலன் காணவில்லை. அதிககாலம் கிறிஸ்தவர்களாகிய சீரியரும், தமிழரும் உழைக்கும் இச் சேகரங்களில் நமது விசுவாசம் சோதிக்கப்பட்டும், வல்லமையான காரியங்களை சீக்கிரம் காணுவோம் என்ற நம்பிக்கையைக் குறித்து எழுதியிருந்தோம். சீரியர் ஐந்து வருஷம் வடகன்னடத்தின் ஒரு பாகமாகிய கார்வாரில் உழைத்து வருகிறார்கள். நமது சங்கம் இச்சேகரத்தைச் சீரிய கிறிஸ்தவர்களுக்கென்று குறித்து, மிஷனரிகளையனுப்பினபோது, அவ்விடத்தின் பாஷைகளைக் கற்பதே பெரிய கஷ்டமாயிருந்தது. அவ்விடத்தில் கொன்கனி பிராமணரே விசேஷம். அவர்களில் ஒரு பகுதி கத்தோலிக் கிறிஸ்தவர்கள் அவர்களுடைய விக்கிரகாராதனை மிகுதியால் கத்தோலிக் சபையின் அங்கத்தினராகிய இயேசுவித்தரே அவர்களை விக்கிரகாராதனைக்காரர் என்று சொல்லுகிறார்களென்று மில்னே அத்தியட்சர் கூறியுள்ளார். இவர்களும் இன்னம் இந்துக்களாயிருக்கும் பிராமணரும் பேசுவது கொன்கனியென்னும் எழுதப்படாத பாஷையே. இதிலே இரண்டு பிரிவுண்டு. இத்துடன் கன்னட பாஷையும், மகாராட்டிய பாஷையும் நமது மிஷனரிகள் கற்கவேண்டியிருந்தது. பாஷைக் கஷ்டத்தை ஒருவாறு மேற்கொண்டு வேலையை உண்மையாய்ச் செய்து வந்த மிஷனரிகளின் மனம் பூரிக்கக் கர்த்தர் இடம் பண்ணினார். ராமராவ் என்னும் ஓர் பிராமண வாலிபன் கார்வார் ஆங்கிலேய சபை ஆலயத்தில் நமது மிஷனரி டி. எம். மத்தாய் போதகரால் ஞானஸ்நானம் பெற்றார். இந்த முதற்பலன் ஓர் பெருத்த அறுப்புக்கு அத்தாட்சி என்று நம்பி, நாம் கார்வாரிலே கர்த்தருடைய வல்லமையைக் காண வெகு ஊக்கமாய் மன்றாடுவோமாக.



## கர்ஜட் கர்மலா.

சில வாரங்களுக்குமுன் கர்மாலா மம்லத்தார் கச்சேரியில் வேலைபார்த்த புத்திக்கூர்மையுள்ள ஓர் வாலிபனுக்கு பாவா போதகர் ஞானஸ்நானம் கொடுத்தார் என்றும், கர்மலாவில் கெய்க்வாத் என்னும் சுவிசேஷகரும், பக்பாய் என்னும் வேதாகம ஸ்திரீயும், முன் ஒரு தீபிகையில் சொல்லப்பட்டிருந்தபடி அமதநகரிலிருந்தனுப்பப்பட்ட இருதருடரும் சுவிசேஷ வேலை செய்து வருகிறார்களென்றும் கர்மலா சேகரத்தைக் குறித்து வவியூம் போதகர் எழுதுகிறார்.

இது ஆண்டவருடைய வேலை. அடியாராகிய நாம் அவருடைய வேலையில் பக்தி வைராக்கியமாயிருந்து, அவருடைய ஊழியம் எல்லா விதத்திலும் செழித்தோங்க நம்மாலியன்றமட்டும் உதவிபுரிவோமாக. அறுப்பின் எஜமானை நோக்கி நம் சங்கத்தின வேலை பலத்து, கிறிஸ்துவின் இராச்சியம் வல்லமையாய் இந்தியாவில் பரம்ப அனுதினமும் மன்றாடுவோமாக.

## நமது 10-வருஷ மகோற்சவம்.

10=வருஷ முடிவில் நம் சங்கத்தின் காரியங்களை நடத்துபவர் அலகபாத்தில் கூடினார்களென்று கூறியிருந்தோம். அதன் அவசியமென்ன வென்றும் அதில் பேசப்படப்போகிற காரியங்களில் சில என்னவென்றும் முன்னதாகவே இத்தீபிகை கூறி, நம் நண்பர்யாவரும் அக்கூட்டம் சித்திபெற மன்றாடக் கோரிற்று. சர்வ மாகாணக் கமிட்டியாரும் இன்னம் மற்ற நண்பரும் அங்குகூடினபோது நடந்த காரியங்களைக் குறித்து அவ்விடம் சென்றிருந்த கனம் எச். சி. பாலசுந்தரம் அவர்கள் பின் வருமாறு எழுதுகிறார்.

1915=௵ டிசம்பர்௴ 23=௳ யன்றே நமது ஸ்தானபதிகள் அலகாபாத்திலுள்ள யூயிங் கிறிஸ்டியன் காலேஜில் வந்திறங்க ஆரம்பித்தார்கள். அன்று சாயங்காலம் அங்கு வந்திருந்தவர்கள் ஓர் அறையில்கூட, நமது கௌரவக்காரியதரிசியாகிய கனம் கே. டி. பால் அவர்கள் நமது சங்கத்தின்

தேவைகளைக் குறித்து விசாரிப்பதுக்கேதெனர். நமது ஐந்து சேகரங்களிலுமிருந்து வந்து கூடிய மிஷனரிகள் தம் சேகரத்து விசேஷித்தக் குறைகளைக் கூறுங்காலம்கூடிய, அங்கு கூடியிருந்த நண்பர் ஜெபத்தில் சற்றுநேரம் தரித்திருந்தார்கள்.

சர்வ மாகாணக் கமிட்டியாரின் கூட்டம் டிசம்பர்மீ 24-உ 8-30 மணிக்கு ஆரம்பித்து, 24, 25, 26-உகளில் நடத்தப்பட்டது. 24-உ 8-30 மணிக்குக்கூடிய முதல் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்திருந்தவர் சோரம்பூர் காலேஜைச் சேர்ந்த புரொபஸர் எஸ். வி. முகர்ஜி, எம்.ஏ.; அவர்கள். இவரே அங்கு கூடிய ஸ்தானாபதிகளை வரவேற்று, கூட்டத்தைத் தொடங்கினர். அங்கு கூடியவர்கள் 41-பேர்:

| | | |
|---|---|---|
| சென்னை மாகாணத்திலிருந்து | | 3 பேர் |
| பம்பாய் | ... | 3 |
| மத்திய | ... | 6 |
| பங்காள | ... | 4 |
| ஐக்கிய | ... | 10 |
| பஞ்சாப் | .... | 10 |
| சீயாம் | ... | 1 |
| சிறப்புக் கிறிஸ்தவர்கள் | | 4 |

வேறுவிதமாய்ச் சொல்ல வேண்டுமானல்,

| | |
|---|---|
| நம் சங்கத்தின் ஆலோசனை சங்கத்தார் | 16 |
| நம் மாகாணக் காரியதரிசிகள் | 4 |
| நம் காரிய நிருவாகக் கமிட்டியார் | 1 |
| நம் மிஷனரிகளும் அவர் மனைவிகளும் | 10 |
| மற்றவர்கள் | 10 |

இவர்கள் 24-உ மூன்று முறையும் மற்ற நாட்களில் தினம் இரண்டு முறையும கூடினர்கள். அத்துடன் மத்தியில் அரைமணி நேரம் கூட்டத்தார் ஒவ்வொரு நாளும், ஜெபத்தில் தரித்திருந்தார்கள்.

கிறிஸ்மஸ் தினம் ஒரு விசேஷித்த தேவாராதனை ஜம்னு ஆலயத்தில் நடத்தப்பட்டது. அச்சமயத்தில் பிரசங்கித்தவர் கனம் பிலிப்போஸ் போதகர்.

நமது சங்கத்தின் மகோற்சவம் அன்று சாயங்காலம் 3-மணிக்கு வாஞு மேக்கர் பள்ளிக்கூடத்தில் நடத்தப்பட்டது முதல் அரைமணி நேரம் தோஸ்துதியிலும், மன்றாட்டிலும்



கழிந்தது. இதற்கென்று ஒரு விசேஷித்த தேவாராதனை முறை உர்டு பாஷையிலும் இங்கிலீஷ் பாஷையிலும் அச்சடிக்கப்பட்டு, அந்த அரைமணிநேர ஆராதனையில் உபயோகிக்கப்பட்டது. அதற்குப் பிறகு மகோற்சவக் கூட்டம் நடத்தப்பட்டது. கனம் கே. டி. பால் அவர்கள் அக்கிராசனம் வகிக்க, நமது மண்ட்கமரி மிஷனரி ஜேம்ஸ் உவில்லியம்ஸ் போதகர் ஹிந்துஸ்தானியிலும், ஐதராபாத்திலிருந்து வந்த டாக்டர் ஜார்ஜ் நந்தி அவர்களும், பங்காளத்து புரொபஸர் எஸ். ஜி. முகர்ஜி அவர்களும் இங்கிலீஷிலும் உபந்நியாசம் செய்தார்கள். அதற்குப் பிறகு, கூடியிருந்த யாவரும் சிற்றுண்டியருந்தித் தங்களிடங்களுக்குத் திரும்பினர்கள்.

26-உ ஞாயிறாயிருந்ததால், நம் நண்பர் அன்றுகாலை அங்குள்ள பல கோயிலுக்குச் சென்றர். சிலர் நமது சங்கத்தைக் குறித்து அந்தந்த ஆலயத்தில் பிரசங்கித்தார். அன்று சாயங்காலம் 4-மணிக்கு இந்த சர்வ மாகாணக்கூட்டம் 'ஒன்ருக ஆண்டிருக்கிற' என்னும் தோஸ்துதிப்பாட்டோடு முடிவுக்கு வந்தது.

அலகாபாத்தில் கூடின இந்த விசேஷித்தக் கூட்டத்தில் செய்யப்பட்ட முக்கிய தீர்மானங்களாவன:

1. நமது மிஷனரிகளுடைய சம்பளம் அவர்கள் நிலைமைக்கும், தேவைக்கும் ஏற்றபடி குறிக்கப்படவேண்டும்.

2. நமது ஊழியர் தங்கியிருக்க வீடு கம் வேலைக்கவசியமான வைத்தியசாலை முதலியவைகளும் நமது செலவிலே கட்டப்படவேண்டும்.

3. கிறிஸ்தவ சபைகளாங்களே சுயமாய்ச் செய்துவரும் சுவிசேஷ வேலையை யெல்லாம் ஒன்று சேர்க்க ஏற்பாடுசெய்ய வேண்டும்.

4. நமது மிஷன் சேகரங்களில் புதிதாய் சேர்க்கப்படும் கிறிஸ்தவர்களையே சம்பளமின்றி தேவ ஊழியம் செய்யப்பழக்க வேண்டும்.

5. நமது மிஷன் வேலைக்கும் இந்தியாவிலுள்ள பல கிறிஸ்தவ சபைகளுக்கும் ஓர் நெருங்கிய சம்பந்தம் உண்டாக வேண்டும்.

அக்கூட்டங்களில் பேசப்பட்ட மற்ற விஷயங்கள்.

1. ஒவ்வொரு சேகரத்தில் நடக்கும் வேலையும் அதன் விர்த்தியும், அதன் கஷ்டங்களும்.

2. மகமதியரிருக்கும் பாகங்களிருக்கும் மிஷனரிகள் மகமதிய மார்க்கத்தை ஆராய்வதின் அவசியம்.

3. ஸெனானா வேலையினால் வரக்கூடிய பலன்.

4. வைத்திய சாலைகள் இப்போதிருக்கும் சேகரங்களைத் தவிர மற்ற இடங்களிலும் ஏற்படுத்தப்படுவது.

5. நமது சங்கத்தின் விதிகளில் சில மாறுதல்கள்.

## அடுத்த கூட்டம்.

இக்கூட்டத்தினாலுண்டாகிய பலன்களையறிந்த காரிய நிருவாகக் கமிட்டியார், இக்கூட்டங்கள் அடிக்கடி வைக்கப்படுவது நலமென்று கண்டார்கள். அதற்கேற்ப வருஷா வருஷம் கூடிவரும் இந்தியக்கிறிஸ்தவ சங்கத்தாரின் கூட்டம் 1916=வது டிசம்பர்மீ சென்னையில்கூட ஏற்பாடாயிருப்பதனாலும், அக்கூட்டத்துக்கு பல மாகாணங்களிலுமிருந்து வரும் ஸ்தானாபதிகள் நமது மிஷனரி சங்கத்தின் ஆலோசனைக் கமிட்டியாராக விருப்பதனாலும், நமது சர்வ மாகாணக் கமிட்டியாரும் அச்சமயத்தில் சென்னையில்கூட ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் இராச்சியம் பரம்ப செய்யப்படும். சகல முயற்சியும் கிறிஸ்துவின் ஆவியால் ஏவப்படுவதினால், அது விர்த்திக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. இராச்சிய பரம்புதலுக்காக நம்மிலொவ்வொருவருக்கும் வரும் அழைப்புக்கு நாம் கீழ்ப்படிவோமாக. 'விழிப்புள்ளவர்களாயிருங்கள்'. அவரிராச்சியம் பரம்ப நமக்கும் பல நற்சமயமளிக்கப்படும்போது, நாம் விழிப்புள்ளவர்களாயிருப்பது அவசியம். நாமிருக்குமிடத்திலே கிறிஸ்துவுக்குச் சாட்சி கொடுத்து, சகல மிஷனரி முயற்சியையும் வெகு வைராக்கியமாய் ஆதரிப்போமாக.

## விளம்பரம்.

ஜனவரிமீ தீபிகையில் இப்பத்திரிகையின் சந்தா 2=அணாவாக்கலாமென்னும் ஆலோசனை கூறப்பட்டது. சந்தாவையுயர்த்த இன்னம் தீர்மானமாகவில்லை. யாவரும் இத்தீபிகையை வாங்கி வாசிக்கும் பொருட்டு, இந்த வருஷமும் சந்தா 1=அணாவாகவேயிருக்கும்.

பத்திராதிபர்.

Printed and published by Mr. K. T. Paul, at the T. A. C. Press, Salem.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
29 MAY 191
MADRAS


# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

The Tamil Organ of the National Missionary Society of India

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

Vol. VIII. மார்ச்—ஏப்ரல் 1916. No. 3 & 4


## ஓமலூரில் முதற்பலன்.

சென்ற பெப்ருவரி மாதம் 27ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை ஆராதனையில் நமது மிஷன் வேலையின் பயனாகக் கிறிஸ்துவையண்டின ராமசாமி யென்னும் வேளாளகுலத்து 20 வயதுள்ள வாலிபன் சேலம் தென்னிந்தியா ஐக்கிய சபை ஆலயத்தில் ஞானஸ்நானம் பெற்றான். இவனும் இவனூராரில் பலரும், நம் ஊழியர் தேவாசீர்வாதம் அவர்கள் தங்களண்டைக்கருகே சந்தை கூடின ஓர் தினத்தில் விற்ற சுவிசேஷப்பிரதிகளை வாங்கி வாசித்ததின் பலனாய் இவன் மனந்திரும்பினான். தேவாலய ஆராதனையில் கனம் பால் தேவதாசன் அவர்கள் பிரசங்கித்த பிறகு ஞானஸ்நானம் கொடுப்பதற்குமுன் தேவாசீர்வாதம் அவர்கள் அப்பையனுடைய ஜீவியத்தை சுருக்கிச்சொன்னார். அவன் தகப்பனுக்கு இவன் ஒரேபிள்ளை. செல்வமாய் வளர்க்கப்பட்டு, நாடக முதலிய காரியங்களிலே பிரியமடைந்தான். அவன் மனந்திரும்பி தேவாசீர்வாதம் அவர்கள் வீட்டுக்குவந்து ஒருநாள் முழுவதும் அவர் பிரயாணத்திலிருந்து திரும்பிவரும் மட்டும் காத்திருந்து, தன்னைத்தானே வெளிப்படுத்தி கிறிஸ்துவைப்பற்றி உபதேசிக்கப்பட்டான். தற்சமயம் சம்பளமில்லாமலே நமது மிஷனுக்கென்று நடத்தப்பட்டுவரும் அச்சுக்கூடத்தில் வேலைசெய்து வருகிறான். அவன் கிறிஸ்தவனானதே, அவனை அருமையாய் நேசிக்கும் அவன் பெற்றோரும், இன்னும் சிலரும் கிறிஸ்தவசபையில் சேருவார்களென்று எண்ண ஏதுவுண்டு.

அதேதினத்தில் இன்னொரு நெசவுவேலை செய்யும் செட்டி ஜாதியில் ஓர்வாலிபன் ஞானஸ்நானம் பெற்றான், இவன் நமது ஜெனரல் பொதுக்காரியதரிசி கனம் K. T. பால் அவர்

கள் தோட்டத்தில் நடத்தப்பட்டுவரும் ஓர் இரவுப்பள்ளிக்கூடத்தில் படித்ததின் பலனாய்க் கிறிஸ்துவை அறிந்து, தற்சமயம் கரூரில் கைத்தொழில் கற்றுவருகிறான்.

இந்த இருவாலிபரும் கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தங்கள் இனத்தாரையும் பழைய சினேகிதரையும் விட்டு, கிறிஸ்துவின் தொண்டராகும்படிக் கிருபைபுரிந்த தேவரீரானவரைத் தொழுது அவர் இன்னும் [illegible] பயனைக் கட்டளையிட மன்றாடுவோமாக.

தோட்டத்தில் நடக்கும் இராப்பள்ளிக்கூட வேலையின் பலனாய் ஞானஸ்நானம் பெற்றவர்களில் இரண்டாவதானவன் பெயர் சாமுவேல் ஆறுமுகம்.

ராமசாமியோ நமது கங்கவள்ளி சேகரத்தில் முதல் கிறிஸ்தவனானதால், அவனுக்குப்பிறகு ஒரு பெரிய கிறிஸ்துவினடியாரின் திரள் அங்கு சேர்க்கப்படும் என்ற நம்பிக்கையினால் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் நாமம் சூட்டப்பட்டான்.

## தமிழ் கமிட்டியார் கூட்டம்.

நமது சங்கத்துத் தமிழ்நாட்டுக்கமிட்டியார் சென்ற பெப்ருவரி 26, 27 தேதிகளில் சேலத்தில் கூடினார்கள். அங்கு கூடின அவயவங்கள், D. பெருமாள் ஐயர் K. T. பால் B.A. L.T., P. E. தேவதாசன் B.A., L.T., J.R. ஐசக் B.A., H.C. பாலசுந்தரம், P.O. பிலிப் B.A., J.D. ஆசீர்வாதம் B.A.L.T., T. டானியல் B.A.L.T. அவர்கள்.

இவர்கள் சனிக்கிழமை காலையில் பலவிடங்களிலுமிருந்து வந்து கூடினார்கள். இவர்கள் அன்று பவிஞ்சுவாயப் பிரிந்து, சேலத்திலுள்ள எல்லாக் கிறிஸ்தவ சகோதரரையும் அவர்கள் வீடுகளில் சந்தித்து அவர்களுக்குச் சங்கத்தின் வேலையையும், அக்கமிட்டியார் அங்கு கூடின நோக்கத்தையும் அங்கு நடத்தப்படும் கூட்டங்களையுங் குறித்துச் சொன்னார்கள். அன்று மத்தியானம் P.O. பிலிப் அவர்கள் மிஷன் வேலையைக்குறித்தும் பேசி சமுதாயவிண்ணப்பம் செய்தார். அன்று சாயங்காலம் வீடுகளின் சந்திப்புக்கும் பிறகு Y.M.C.A. இல் கூடினோம். அங்கு சேலம் ஜில்லா கலெக்டர், லீ, துரை கமிட்டியாரைச் சந்தித்து இந்தியக் கிறிஸ்தவர்கள் செய்துவரும் மிஷன்வேலையைக் குறித்தறிந்து அதிக சந்தோஷப்பட்டார், அன்று சாயங்காலம் 6 மணிக்கு கிறிஸ்தவர்களுக்கெ



னறு ஒருகூட்டம் நடத்தப்பட்டது அதில் அக்கிராசனம் வகித்திருந்தவர் கனம் லீ துரையே. கனம் கிருஷ்ணசாமி ஐயர் ஜெபம்செய்ய கூட்டம் ஆரம்பித்து அச்சமயம் J.R. ஐசக் அவர்கள் இந்தியாவின் தேவையைக்குறித்தும், D. பெருமாள் ஐயர் அல்லகபாத்தில் கூடின நமது சங்கக் கூட்டத்தைக்குறித்தும் வெகு ஊக்கமாய்ப் பேசினார்கள். கலெக்டரும் கிறிஸ்தவ ஊழியத்தின் மேன்மையைக் குறித்து வெகு உணர்ச்சியோடு பேசி இம்மிஷன் வேலையைக் கர்த்தர் ஏராளமாக ஆசீர்வதிக்கவேண்டுமென்று கோரி, கூட்டத்தை முடித்தார்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை கோவிலாராதனை நடத்தப்பட்டு, நாம் முன்கூறியபடி ராமசாமிக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு கமிட்டி மெம்பர்களும் இன்னும் சிலரும்கூடி சங்கவிஷயங்களைக் குறித்தும் பேசினார்கள்.

(a) ஓமலூரில் நமது சகோதரன் தேவாசீர்வாதம் அவர்கள் குடியிருந்த மிஷன்வீடு ஜனவரியில் சுட்டெரிக்கப்பட்டது என்று முன்தெரிவித்திருந்தோம். வீட்டின் கூரைமுழுவதும் எரிந்துபோனதுமன்றி, வீட்டிலிருந்த எல்லாப் பொருளும் சுட்டெரிக்கப்பட்டது. வீட்டில் படுத்துத்தூங்கின பிள்ளைகளை அப்புறப்படுத்துவது கஷ்டமாயிற்று. ஆகிலும் அவர் சமுசாரம் காண்பித்த அரிய மனோதைரியத்தினால், பிள்ளைகள் ஒரு தீங்குமன்றி ஆண்டவரால் காப்பாற்றப்பட்டார்கள், சகோதரன் தேவாசீர்வாதமோ வலதுகையிலும் முகத்திலும் அதிகக் காயப்பட்டார். அவர் இராப்பள்ளிக்கூடத்தில் படித்துக்கொடுக்கப் போயிருந்தபோது கூரையில் மண்ணெண்ணையை நிறைய விட்டுப் பின் தீ வைத்தபடியால் தீ வெகு சீக்கிரம் பரவி அதிக சேதம் விளைவித்தது.

கமிட்டியார் அவருக்குநேரிட்ட இக்கஷ்டத்தில் தங்கள் அனுதாபத்தைக் காண்பித்து, நமது சங்க வேலையை ஊக்கமாய்ச்செய்து வருவதினால் கஷ்டத்துக்குள்ளான அந்த சகோதரன் பொருள் நஷ்டமடையாதபடி, அவரிழந்தபொருட்களை வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். மிஷன் வீட்டைத்திரும்பக்கட்டவும் உத்தரவாயிற்று. எல்லாச்செலவும் 350 ரூ ஆகும். இதற்கென்று விசேஷித்த பொருளுதவிக்காக நமது பத்திரிகைகளில் கேட்கவேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 29 MAY 1916 MADRAS.

(b) நமது பல கிறிஸ்தவ சபைகளின் ஸ்தானாபதிகள் கூடி சங்கத்தின் கமிட்டிக் கூட்டப் படுவதால், பின்வருமாறு கமிட்டி மெம்பர்கள் தெரிந்து கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானமாயிற்று. தமிழ்நாட்டில், இங்கிலாந்து திருச்சபை 7 பிரிவுகளுக்கும் (மதராஸ் சுதேச சர்ச் கவுன்சில், மதராஸ், பங்களூர் திருச்சி, தஞ்சாவூர், பாளையங்கோட்டை, நாசரேத் டிஸ்டிரிக்ட் சர்ச் கவுன்ஸில்) 7 மெம்பர்கள்,

தென்னிந்திய ஐக்கிய சபைகளின் 9 பிரிவுகளுக்கு 9 மெம்பர்கள்,

மதராஸ், நாகை, பங்களூர், ஹைதராபாத், வெஸ்லியன் டிஸ்டிரிகட் சினட்களுக்கு 4 மெம்பர்கள்,

சுவேதிஷ் வட, தென் லுத்தரன் சபைகளுக்கும் டேனிஷ் லுத்தரன் சபைகளுக்கும் 3 மெம்பர்கள்,

மெதடிஸ்ட் சபைகளுக்கு 1 மெம்பர்.

ஆக தமிழ்நாட்டுக்கு 24 மெம்பர்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று தீர்மானமாயிற்று.

(c) சகோதரன் தேவாசீர்வாதம் தங்கள் [illegible] வீட்டைக்கட்ட சில பொருளும், தங்கள் உழைப்பும் கொடுக்க வாக்களித்திருப்பதால் அவ்வீட்டைச் சீக்கிரம் கட்டிவிட்டு பிறகு பசுமலை வேதசாஸ்திர வகுப்பில் சேரவேண்டுமென்று தீர்மானமாயிற்று. அவருக்குபதிலாக சகோதரர் [illegible]மும் சிவராமையாவும் தங்கள் [illegible] உழைப்பார்கள். மே, ஜூன் மாதங்களில் பசுமலையில் விடுமுறைக்காலமானதால், தேவாசீர்வாதம் அவர்கள் பல சபைகளைச் சந்தித்து, நமது சங்கத்தைப்பற்றிச் சொல்லிவருவார்.

கூட்டம் நடத்தப்பட்ட அன்றுதினம் 12மணிக்குமேல் அரைமணிநேரம் விசேஷித்த ஜெபத்தில் செலவழிக்கப்பட்டது; அச்சமயம் ஜே. டி. ஆசீர்வாதம் அவர்கள் இந்திய கிறிஸ்தவசபையின் அபிவிர்த்தியையும், கிறிஸ்தவ இந்தியாவின் காட்சிக்குறித்தும் பேசி, நமது சங்கத்தின் வேலைக்காகவும் கிறிஸ்து ராச்சிய பரம்புதலுக்காகவும் சமுதாய விண்ணப்பம் நடத்தினர். அன்று பகல் மூன்று மணியிலிருந்து ஐந்தரை வரையில் கூட்டம் நடந்தது. அன்று சாயங்காலம் யாவரும் தங்களிடங்களுக்குத் திரும்பினார்கள்.

சேலத்தில் நடந்த கூட்டங்கள் ஆண்டவருடைய அருளால் அதிகப் பிரயோஜனமாயிருந்தன. அங்கு சகோதரரைச்சந்திக்கும் விஷயத்திலும் இன்னும் நடந்த கூட்டங்களின் சம்பந்தமாகவும் அதிக பிரயாசையெடுத்துக்கொண்ட கனம் H. C. பாலசுந்தரம் அவர்களுக்கும் கனம் M. M. மாசிலாமணி B.A. L.T. அவர்களுக்கும் கமிட்டியார் அதிக நன்றியுள்ளவர்களாயிருக்கிறார்கள்.



## நமது சங்கக் குறிப்புகள்.

சென்றமாத தீபிகையில் நமது சங்கச்செலவு 23000 ரூபாகுமென்று கணிக்கப்பட்டிருந்ததென்று கூறியிருந்தோம். பெப்ருவரியில் கூடின காரியநிருவாக கமிட்டியார் பல செலவுகளைக் குறைத்து, 20,780ருபாய்க்குள் செலவுமுடியவேண்டுமென்று தீர்த்திருக்கிறார்கள்.

இவ்வருஷம் பெண்களுக்காக வேலை ஆரம்பமாகிறது. மேலும் ரேவாவில் புதிதாய் மிஷன் வேலையாரம்பமாகும். அப்படியிருந்தும் நமது செலவு அதிகரிக்காமலேயிருக்கப்பார்க்கிறார்கள்.

போனவருஷம் வரவுசெலவு எதிர்க்குறைய ஒன்றுமிருந்த போதிலும் அதற்கு முன்னிருந்த கடனின்னம் தீரவில்லை. அதைத்தீர்த்து விடக்கருதியே நமது செலவை 23,000ரூபாயிலிருந்து, 20,780க்குக் குறைத்திருக்கிறார்கள். இவ்வருஷமுடிவில் நமது சங்கத்துக்குக் கடனேயில்லாதிருக்கப் பார்ப்போமாக.

சங்கத்துக்குத் தேவை நமது நண்பரின் ஊக்கமான ஜெபமே. உன் தனிஜெபத்திலும் குடும்பஜெபத்திலும் இந்த நம்மிஷனை நீ தினம் நினைக்கிறாயா? ஜெபமோங்க ஜெபமோங்கும். அறுப்புக்கு எஜமானை வேலையாட்களுக்காகவும், வேலையின் சித்திக்காகவும் மன்றாடுவோமாக.

* * * * *

லுத்தரன் சபைகள் நமது சங்கத்தின் சம்பந்தமாய் மிஷன் வேலையாரம்பிக்கப்போகிறார்கள். தமிழ்நாட்டு சுவேதிஷ்சபை சுயதேசமிஷன் கமிட்டி ஏற்படுத்தி இவ்விஷயத்தைக் குறித்து தகுந்த ஏற்பாடுகள் செய்துவருவது நமக்குச் சந்தோஷமான விஷயமே. டேனிஷ், ஹெர்மான்ஸ்பர்க், ராஜமந்திரி, குண்டூர் சபைகளும் இக்கமிட்டியை சீக்கிரம் சேர்வார்கள். இந்தசர்வ இந்தியலுத்தரன் சபைகளும் ரேவாமாகாணத்தில் மிஷன்வேலை நடத்துவார்கள்.

நமது பிரயாணக்காரியதரிசியாய் பலவருஷங்களாயுழைத்த கனம் சா. ஞானாபரணம் அவர்களே ரீவாவுக்கு முதல் மிஷனெரியாய்ப் போகிறார். இவருக்காகவும், இவர்வேலைக்காகவும் ஜெபிப்போமாக.

ரீவா மத்திய இந்தியாவிலுள்ள ஓர் சுதேசஅரசாங்கநாடு. அதின் ராஜா ஓர் இந்து, மார்க்கவைராக்கியன். ஐரோப்பிய கிறிஸ்தவ மிஷனரிகள் அந்நாட்டில் தங்கி சுவிசேஷவேலை செய்ய உத்தரவில்லை, ஆதலால் இதிலே நமது இந்தியக்கிறிஸ்தவர்கள் வேலைசெய்ய ஏற்றநாடு நமது சங்கத்துக்கு ஓர் புதுவாசல் திறந்திருக்கிறது, இவ்விஷயத்தை நம் நண்பர்யாவரும் ஜெபத்தில் நினைவுகூற மிகவும் கோருகிறோம்.

* * * * *

நமது சங்கத்தின் கட்டட பண்டுக்காக இதுவரையில் ரூ 8000 வாக்களிக்கப்பட்டிருக்கிறது இவ்விஷயத்திற்கென்று சேர்க்கப்படவேண்டிய மொத்தத்தொகை ரூ30000, இவ்விஷயத்தை சகலகிளைச் சங்கங்களும் எல்லா கிறிஸ்தவர்கள் யாவரும் ஆதரிக்கக் கோருகிறோம்.

* * * * *

நங்கவள்ளியில் நடந்த தீச்சேதத்தினால் நமதுசங்கம் 350ரூ உடனே செலவழிக்கத் தேவையாயிருக்கிறது. நமது நண்பர் யாவரும் இவ்விஷயத்திற்கென்று தங்களாலியன்ற பொருளுதவிசெய்ய மிகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சிறு தொகையும் சந்தோஷத்துடன் அங்கிகரிக்கப்படும்.

* * * * *

இவ்வளவுகாலம் நமது சங்கத்தின் தலைவராயிருந்த ராஜா ஸர்ஹர்னாம்சிங் இந்தவருஷம் அந்தலைமை வகித்திருக்கக்கூடவில்லையென்று தெரிவித்தார். இவர் கிறிஸ்தவரானதால் தன் அரசாட்சியை இழந்தவர் ஆகிலும் வடஇந்தியாவில் எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டு நமது ராஜப்பிரதிநிதிகள் கோடை காலத்தில் தங்கியிருக்கும் ஸிம்லா நகரில் இந்தியகுடிகளுக்கெல்லாம் தலைவராய் நமது பிரிட்டிஷ் இராஜாங்கத்துக்கு தம் நல்லாலோசனையினால் அதிக உதவிபுரிந்துவருகிறார். இவர் ராஜப்பிரதிநிதியின் சட்டநிருவாகச்சபையில் ஓர் அவயவம். இவர் இந்திய கிறிஸ்தவர்களுக்குத்தலைவராய் அவர்கள் காரியங்களிலெல்லாம் வெகு சிரத்தையெடுத்துவருகிறார். அல்லகபாத்தில் கூடின நமது சங்கக்கூட்டத்திலும் அதேவிடத்தில் கூடிய சர்வ இந்தியக்கிறிஸ்தவ சங்கக்கூட்டத்திலும், தலைமைவகித்திருந்தார். அவர் தற்சமயம் நமது சங்கத்தலைமையை



விட்டிருந்தபோதிலும் அவரால் கூடிய எல்லா உதவியும் புரிந்து வருவாரென்பதற்கையமில்லை.

இவருக்குப்பதிலாக தற்சமயம் நமது சங்கத்தலைவராய் நியமிக்கப்பட்டவர் டாக்டர் கே, ஸி, சாட்டர்ஜி போதகர். இவர் வடஇந்தியக் கிறிஸ்தவசபையின் விசேஷித்த அவயவமாய் விளங்கி சகலகிறிஸ்தவவேலையிலும் வெகு சிரத்தையெடுத்துவருகிறார். இவர் மனைவி சென்றவருஷம் நமது சங்கத்துக்குReserve Fund ஆக ரூ5000 கொடுத்ததை நம் நண்பர்கள் நினைவு கூருவார்கள்.

## இவ்வருஷச்செலவு மதிப்பு.

இவ்வருஷம் நமது சங்கத்துக்கு ரூ20,780 செலவாகுமென்று கணிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகையில் தமிழ்நாட்டாருக்கு ரூ4,000 விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தான் கிறிஸ்தவர்கள் அதிகம், ஆதலால் நாம் மொத்தத்தொகையில் கால்பாகமாவது கொடாவிட்டால் முழுத்தொகையும் எப்படி வசூலாகக்கூடும்?

பின்வரும் ஜாப்தாவில் சென்றவருஷம் தமிழ்நாட்டில் ஒவ்வொரு இடமும் கொடுத்ததொகை குறிக்கப்பட்டிருக்கிறது. பலவிடங்களில் நாம் எதிர்பார்த்த தொகை சென்றவருஷம் வசூலாகாதது மிகவும் விசனிக்கத்தக்கது. [illegible] வருஷசெலவெல்லாம் குறைவறச்செய்து, முன்வருஷங்களின் கடனையும் தீர்க்கவேண்டுமென்றால், 4000-ரூபாய்க்கு மேலே தமிழ்நாடு சேர்க்கவேண்டியது, ஆதலால் பின்குறித்திருக்கும் ஒவ்வொரு இடமும் தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் 4000-ரூபாயின் ஒருபகுதியை மாத்திரமல்ல, குறிக்கப்பட்டபகுதிக்குக் கொஞ்ச மதிப்பாகவே வசூலிக்கப் பிரயாசப்பட மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மிஷன்வேலை மேன்மையான வேலை. கிறிஸ்துவின் கனிஷ்டத்தை அறிந்து, அநேகரை ரட்சிப்புக்கும் பங்காளராக்கும் மிகுந்த உன்னத வேலை தடைபடாதிருக்க பார்ப்போமாக. முந்தி தேவனுடைய இராச்சியத்தையும் அவர் நீதியையும் தேடுங்கள் அவருக்காக தன்னைத்தத்தம் பண்ணி, தன் நேரத்தையும், பொருளையும் செலவழிப்பவர் மெய்யாகவே இனாய் ஆசீர்வதிக்கப்படுவார்கள். திருவாங்கூர் நாட்டுத் தமிழ்ச்சபைகளின் முன்மாதிரியை நாம் யாவரும் பின்பற்ற கடவுள் அருள்புரிவாராக.

| | 1914-ஞ வசூலித்தது. | 1915-ஞ கணித்தது | 1915-ஞ வசூலித்தது | இவ்வருஷத வீதம். |
|---|---|---|---|---|
| சென்னை | 1600 5 4 | 2000 | 954 10 6 | 2000 |
| திருவாங்கூர் | 535 10 0 | 700 | 1118 10 7 | 1200 |
| (கம்பூராடு மாத்திரம்) பிரயாணைக்காரியதரிசி மூலமாய் | ... | ... | 432 11 0 | ... |
| நாகர்கோவில் | ... | ... | 245 0 0 | 500 |
| நெய்யூர் | ... | ... | 230 12 10 | 250 |
| நெல்லிக்காகுழி | ... | ... | 92 9 0 | 150 |
| நெல்லிக்காவல்லி | ... | ... | 26 8 0 | 30 |
| பாறச்சாலை | ... | ... | 20 0 0 | 75 |
| பூவாறு | ... | ... | 15 0 0 | 20 |
| தாமரக்குளம் | ... | ... | 14 4 0 | 20 |
| சின்னி | ... | ... | 13 13 0 | 20 |
| கிறிஸ்துகோவில் | ... | ... | 10 0 0 | 15 |
| அட்டிங்கல் | ... | ... | 8 0 0 | 10 |
| நாக்கலை | ... | ... | 5 0 0 | 10 |
| மார்த்தாண்டம் | ... | ... | 5 0 0 | 100 |
| கோயம்புத்தூர் நீலகிரி | 174 6 0 | 300 | 218 10 0 | 300 |
| கோயம்புத்தூர் | ... | ... | 201 15 0 | 240 |
| ஈரோடு | ... | ... | 11 13 7 | 60 |
| போத்தனூர் | ... | ... | 1 13 0 | ... |
| கம்பியூர் | ... | ... | 1 0 5 | ... |
| கோட்டகிரி | ... | ... | 2 0 0 | ... |
| சேலம் | 82 13 0 | 250 | 126 7 0 | 240 |
| சேலம் | ... | ... | 107 14 0 | 240 |
| ஆத்தூர் | ... | ... | 10 0 0 | ... |
| ஏற்காடு | ... | ... | 8 9 0 | ... |
| வட ஆர்க்காடு | 315 10 0 | 350 | 268 4 9 | 450 |
| வேலூர் | ... | ... | 127 8 2 | 150 |
| ஆரணி | ... | ... | 41 9 7 | 50 |
| திருவண்ணாமலை | ... | ... | 51 3 0 | 60 |
| வாணியம்பாடி | ... | ... | 24 0 0 | 24 |
| திருப்பத்தூர் | ... | ... | 3 0 0 | 120 |
| ராணிப்பேட்டை | ... | ... | 1 0 0 | 10 |
| திண்டிவனம் | | | | |
| மதனப்பள்ளி | | | | |
| தஞ்சாவூர் | 119 8 0 | 200 | 136 12 0 | 200 |
| வல்லம் | ... | ... | 50 0 0 | 50 |
| தஞ்சாவூர் | ... | ... | 16 13 0 | 120 |
| மாயவரம் | ... | ... | 3 15 0 | 6 |



| | | | | |
|---|---|---|---|---|
| கும்பகோணம் | ... | ... | 2 0 0 | 20 |
| சீயாழி | ... | ... | 6 14 0 | 20 |
| தரங்கன்பாடி | ... | ... | 11 6 4 | 30 |
| நாகப்பட்டணம் | ... | ... | 18 0 0 | 60 |
| பொறையாறு | ... | ... | 4 4 0 | 10 |
| மதுரை | 194 11 0 | 300 | 121 1 0 | 360 |
| மதுரை | ... | ... | 53 8 0 | 240 |
| பசுமலை | ... | ... | 34 9 0 | 60 |
| பெரியகுளம் | ... | ... | 4 0 0 | ... |
| அருப்புக்கோட்டை | ... | ... | 3 8 0 | ... |
| திண்டுக்கல் | ... | ... | 23 8 0 | 30 |
| மானாமதுரை | ... | ... | 2 0 0 | 12 |
| மேலூர் | ... | ... | ... | 12 |
| மானமேடு | ... | ... | ... | 12 |
| தென்னாற்காடு | 163 4 0 | 200 | 97 0 6 | 200 |
| கடலூர் | ... | ... | ... | 60 |
| திண்டிவனம் | ... | ... | 35 0 0 | 50 |
| நெல்லிக்குப்பம் | ... | ... | 39 3 10 | 40 |
| திருக்கோயிலூர் | ... | ... | 10 12 8 | 50 |
| ஜின்ஜி | ... | ... | 2 0 0 | ... |
| பண்ருட்டி | ... | ... | 10 0 0 | ... |
| செங்கற்பட்டு | 68 5 9 | 150 | 115 1 0 | 150 |
| வாலஜாபேட்டை | ... | ... | 33 14 0 | 35 |
| பரங்கிமலை | ... | ... | 27 3 0 | 35 |
| கிண்டி | ... | ... | 24 0 0 | 25 |
| திருவள்ளூர் | ... | ... | 9 0 0 | 10 |
| சைதாப்பேட்டை | ... | ... | 8 0 0 | 15 |
| பாண்டூர் | ... | ... | 5 0 0 | ... |
| காஞ்சீபுரம் | ... | ... | 3 0 0 | 24 |
| பல்லாவரம் | ... | ... | 5 0 0 | ... |
| செங்கற்பட்டு | ... | ... | ... | 24 |
| இதர சேகரங்கள் | ... | ... | 67 9 0 | ... |
| தூத்துக்குடி | ... | ... | 4 0 0 | ... |
| கீழூர் | ... | ... | 42 0 0 | ... |
| பட்டாளம் | ... | ... | 6 6 0 | ... |
| தாக்கடு | ... | ... | 15 3 0 | ... |
| | 3,254 9 1 | 4,450 | 5,626 9 9 | 8,284 |

## அலகபாத்தில் கொண்டாடப்பட்ட நம் சங்கத்தின் 10 வருஷ மகோற்சவத்தில் உபயோகிக்கப்பட்ட தேவாராதனை முறை.

---

ஜெபம்: ஆண்டவரே, அசுத்த உதடுகளின் துதியைத் தள்ளிப் போடாத எங்கள் பரமபிதாவே, இச்சமயத்தில் எங்களாராதனையை யேற்றுக்கொண்டு எங்களுக்கு உம்முடைய ஆவியின் நடத்துதலைக் கட்டளையிட்டருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவரும் ரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திலும், அவர் நிமித்தமாகவும் மன்றாடுகிறோம்.

ஆமேன்.

சங்கீதம் 95.

மரியாளின் ஸ்தோத்திரப் பாட்டு.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும் மகிமையுண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமானச் சதாகாலங்களிலுமிருக்கிறபடியே, ஆமேன்.

யாவரும் முழங்காற்படியிட்டிருக்க.

குரு: இந்த நாளையும், எங்கள் மிஷனரி சங்கத்தின் வளர்ச்சியையும் நீர் எங்களைக் காணப்பண்ணினதற்காக உம்மைத் துதிக்கிறோம்.

சபை: ஆண்டவரே உம்முடைய பரிசுத்த நாம மகிமைக்காக எங்கள் துதியை ஏற்றுக்கொள்ளும்.

குரு: இச்சங்கம் எங்களை அன்பிலும் ஊழியத்திலும் கூட்டிச்சேர்த்ததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்.

சபை: ஆண்டவரே,etc......

குரு: நீர் எங்கள் பார்வையை விரிவாக்கி எங்களை பலப்படுத்தினதற்காக உம்மைத் துதிக்கிறோம்.

சபை: ஆண்டவரே,......

குரு: இச்சங்கத்தினூழியத்தில் காண்பிக்கப்பட்ட சுய வெறுப்புக்காகவும் பக்தி வைராக்கியத்துக்காகவும் அடியாராகிய நாங்கள் உம்மைத் துதிக்கிறோம்.

சபை: ஆண்டவரே,......



குரு: மறைக்கப்பட்டிருந்த அநேக காரியங்களை நாங்கள் காணச்செய்தீரென்று உம்மைத் துதிக்கிறோம்.

சபை: ஆண்டவரே,......

குரு: அநேகக்கஷ்டங்களையும் சோதனைகளையும் எங்களுக்கெதிரே நிறுத்தினதற்காகவும் அடியாராகிய நாங்கள் உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்.

சபை: ஆண்டவரே,......

குரு: அதன் மூலமாய் நாங்களும்மை சேவிக்கும் சிலாக்கியத்தையும் உம்மைச்சேவிப்பதின் சந்தோஷத்தையும் நீர் எங்களுக்கருளினீரென்று உம்மைத் துதிக்கிறோம்

சபை: ஆண்டவரே,......

### ஜெபம்.

---

தேவனே, எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவே இன்று எங்கள் சங்கத்தைத்திரும்ப உமக்கொப்புவிக்கிறோம். நீரே அதை நடத்தி அதைபரிபாலித்து அதன் சகல ஊழியரையும் அவயவங்களையும் எல்லா மீறுதல் பலவீனம் வெதுவெதுப்பிலிருந்தும் காப்பாற்றும்: அதன் எல்லாகுறைவுகளையும் நீரே நீக்கியருளும். அதன்சகல மிஷனரிகளோடுமிருந்து அவர்களைத்தாங்கி நடத்திவாரும். வார்த்தையின் ஊழியம், பள்ளிக்கூடம், மருத்துசாலை முதலிய பல வேலையையும் நீரே ஆசீர்வதித்தருளும். இந்நாட்டில் உம்முடைய ராச்சியம் பரம்புவதற்காக இச்சங்கத்தை நீரே பலமாக உபயோகித்தருளும். இந்த எங்கள் மன்றாட்டை உம்முடைய குமாரன் நாமத்திலும் அவர்நிமித்தமும் கேட்டருளுமென்று நாங்கள் கெஞ்சுகிறோம், ஆமேன்.

குரு: இந்நாட்டிலுள்ள சகல மிஷனரி சங்கங்களின் வேலையையும் உம்முடையசகல ஊழியரின் பிரயாசையையும் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கென்று ஆசீர்வதிக்க மன்றாடுகிறோம்.

சபை: எங்களுக்கிரங்கி எங்களைக் கேட்டருளும் தயவுள்ள ஆண்டவரே.

மாமிசத்தின்படி எங்கள் சகோதரரானவர்கள் உம்முடைய குமாரனுடைய வெளிச்சத்தைக்கண்டு மகிழ்ந்து அதையேற்றுக்கொள்ள உம்மை மன்றாடுகிறோம்

எங்களுக்கிரங்கி......

எங்கள் பள்ளிக்கூடங்களையும் உயர்தரக்கல்விசாலைகளையும் உம்மண்டைத்திருப்பும்படி உம்மை மன்றாடுகிறோம்

எங்களுக்கிரங்கி......

உம்முடைய சபை எங்கள் நாட்டிலே உமக்கு நல்லசாட்சி கொடுக்க ஒத்தாசை செய்தருளவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எங்களுக்கிரங்கி......

உம்முடைய ஆலயமான எங்கள் சரீரங்களைப்பரிசுத்தமாகக்காத்து அவைகளை உமக்குப்பிரியமான ஜீவபலியாக நாங்கள் ஒப்புவிக்கும்படி செய்ய உம்மை மன்றாடுகிறோம்.

எங்களுக்கிரங்கி......

நாங்கள் ஒருவரையொருவர் கனம் பண்ணுவதில் முந்திக்கொண்டு உம்மை எல்லாத் தாழ்மையிலும் சேவிக்கவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்

எங்களுக்கிரங்கி......

சகலப்பெருமையும் சச்சரவும் எங்களைவிட்டு நீங்கி நாங்கள் ஆகாதகிரியைகளையல்ல, பரிசுத்தமும் நற்பிரியமுமான கிரியைகளை நடப்பிப்பதில் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ள எங்களுக்கொத்தாசை செய்ய உம்மை மன்றாடுகிறோம்

எங்களுக்கிரங்கி......

நாங்கள் பலியின் ஆவியின்முத்திரையைப் பெற்று சிலுவையினடையாளத்தைச் சுமந்தவர்களாயிருக்க உம்மை மன்றாடுகிறோம்.

எங்களுக்கிரங்கி......

எங்களுடைய சக்கரவர்த்தியையும் அவருக்குக்கீழிருந்து ராஜாங்கத்தை நடத்திவரும் ராஜப்பிரதிநிதி முதலிய பேர்களையும் உம்முடைய ஆவியினால் நிரப்பி அவர்களை உம்முடைய வழிகளைத்தேடும்படிச்செய்ய உம்மை மன்றாடுகிறோம்

எங்களுகிரங்கி......

உம்முடைய வல்லமையான கரத்தினால் தற்கால யுத்தத்தில் எங்கள் சக்கரவர்த்திக்கு வெற்றியளித்து சீக்கிரம் யுத்தம் முடிந்து சமாதானம் நிலைப்பட உம்மை மன்றாடுகிறோம்.

எங்களுக்கிரங்கி......

கொடிய யுத்தத்தில் காயப்பட்டும் விதைவைகளாகியும், ஆதரவற்றவர்களாயும் போன யாவரையும் நாங்கள் நினைவு



கூர்ந்து நீர் அவர்களை விசேஷித்தவிதமாய் நடத்திக் காப்பாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்

எங்களுக்கிரங்கி......

## ஜெபம்.

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச்செய்ய எங்களுக்குக் கிருபையளித்த சர்வ வல்லமையுள்ள தேவனே! இரண்டு பேராவது மூன்றுபேராவது என் நாமத்திலே கூடிவரும் போது அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேனென்று வாக்கருளியிருக்கிறீரே, கர்த்தாவே உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப்போது நிறைவேற்றி இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும் மறுமையிலே நித்தியஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமேன்

## நமது சங்கத்தின் நண்பரை ஜெபத்துக்கேவும் குறிப்புகள்.

(1) நமது ஜீவியத்திலும் வேலையிலும், நமது சங்கத்தின் காரியங்களிலும் ஒவ்வொருநாளும் காணப்பட்டுவரும் கிருபையின அறிகுறிகளுக்காகவும்.

(2) ஆண்டவருடைய அழைப்புக்குக்கீழ்ப்படிந்து, இச்சங்கத்தின் ஊழியத்துக்காக, தங்கள் பொருளையும், நேரத்தையும் முழு ஜீவியத்தையும் தத்தம் பண்ணிவருகிற புருஷருக்காகவும் ஸ்திரீகளுக்காகவும்,

நம்மாண்டவரைப்போற்றுவோமாக

(1) (a) மண்டகமரிக்கு ஒரு ஸ்திரீவைத்தியரும்,
(b) நாக்கருக்கு ஒரு ஸ்திரீ மிஷனரியும்,
(c) கர்ஜத்துக்கு ஒரு மிஷனரியும்,
(d) கார்வாருக்கு இன்னொரு மிஷனரியும்,

சீக்கிரம் கண்டு பிடிக்கப்படவேண்டுமென்றும்,

(2) ஒக்காராவில் வைத்தியசாலைக்கென்று நிலம் வாங்கும் விஷயத்தில் நாம் ஞானமாய் நடத்தப்படவேண்டுமென்றும்,

(3) பஞ்சாப்மாகாணக்காரியதரிசியின் வேலையை நடத்துவதற்குத்தகுந்த ஓர் ஆள் கண்டுபிடிக்கப்படவேண்டுமென்றும்,

(4) சகோதரன் தேவாசீர்வாதம் தமிழ்ச்சபைகளைச்சந்திக்கும் வேலையில் சித்திபெறவும்,

(5) சகோதரர் ஞானபரணம், சுதரிசனம், இவ்விருவரும் தங்கள் சர்வகலாசாலை பரிட்சையில் தேறவும்,

(6) நீவா மிஷன் வேலை துவக்கப்படவும், ஆண்டவருடைய சித்தத்தின்படி நடத்தப்படுவரவும் சகோதரன் ஞானபரணமும் அவர்மனைவியும் துவக்கப் போகிற இக்கஷ்டவேலையில் அவர்கள் ஆண்டவருடைய திரளான அருளைப்பெறவும்,

(7) ஓமலூர் காரவார் கர்ஜத் முதலிய இடங்களில் புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தேவனோடுபிணைந்து அவரை மகிமைப்படுத்தவும்,

(8) மண்டகாமரியிலும் நாங்கரியிலும் அதிகரித்துவரும் சபைகள் பரிசுத்தத்திலும் நற்கிரியையிலும் தேறவும்,

(9) நமது பத்திரிகைகள் அநேகரில் மிஷன் வேலையைப் பற்றி மெய்யன்பு மூட்ட ஆண்டவரால் உபயோகிக்கப்படவும்

(10) நமது மிஷனரிகளும் காரியதரிசிகளும் கமிட்டியார்களும் தாங்கள் செய்யும் சிறிய பெரியகாரியங்களில் ஆண்டவருடைய சித்தத்தைநாடி எல்லா ஊழியரும் இயேசுகிறிஸ்துவில் நிலைத்திருந்து மெய்யான ஐக்கியத்தில் வளரவும்

நாம் யாவரும் மன்றாடுவோமாக.

## இந்திய சபையும் அதன் நோக்கமும்.

இந்தியசபை வருங்காலத்தில் பூரணப்பட்டுருவாகும் விதம் பின்வருமாறு வெளிப்படுத்த விரும்புகிறேன்.

(1) திருச்சபை முதலாவது இயேசு பெருமானின் அவதாரமாகவேண்டும். இயேசு பெருமான் சொன்னதுபோல, நான் அவர்களிலும் நீர் என்னிலுமிருக்கவேண்டும், அப்பொழுது நீர் என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்படி அவர்கள் ஒன்றாகவேண்டும். என்கிற வார்த்தைகள் நிறைவேறும். மனிதரிடத்தில் கடவுள் வசிப்பதே அவதாரமாம். நமது குணங்களிலும் நடக்கைகளிலும், ஆண்டவருடைய திரு அவதாரத்தை வெளிப்படுத்துவது சபையின் முதல் நோக்கம். நமது சாதாரண ஜீவியத்தாலும், நம்பிக்கையாலும், அனுதாபத்தாலும், ஊழியத்தாலும், இயேசு பெருமான் நம்மிலே உருவு படுகிறதென்றும், அவரே நமக்கு எஜமானாகிறதென்றும் வெளிப்படவேண்டும்.

(2) இந்தியரின் மனதிற்கு ஏற்றதாக இயேசு பெருமானை வெளிப்படுத்திக்காட்டுவது, இந்திய சபையின் இரண்டாவது நோக்கம். அது சுதேச வழிவகைகளால் இந்தியரின் பக்திக்கும் புத்திக்கும் ஏற்றதாயும், பூரணமாயும், இயேசுகிறிஸ்துவிலுள்ள தெய்வீக சத்தியத்தை வெளிப்படுத்த வேண்டும். இந்திய திருச்சபை தன் தேசத்திற்கேற்ற விதமாய், கிறிஸ்துவின் உபதேசத்தை வெளிப்படுத்தும் என்பதற்கையமில்லை.

(3) இயேசு பெருமானுக்கு ஊழியனாயிருப்பது, இந்திய சபையின் மூன்றாம் நோக்கமாம். இதுவரை மேற்கு தேசத்துச்சபை, இந்திய திருச்சபைக்கு, ஊழியம் செய்யும் அடிமையாயிருந்து. இந்தியர் அநேகரை திருச்சபையில் சேர்த்துக்கொண்ட சக்தி யாதெனில் கிறிஸ்தவ சாஸ்திரமல்ல, கிறிஸ்தவ உபகார ஜீவியமே. இனி இந்திய தேசத்தின் திருச்சபை, சுதேசிகளுக்கும் மற்றவர்களுக்கும் ஊழியம் செய்து தமது காலத்தைக் கழிக்க முயலவேண்டும். இந்த சபையைப்பார்த்து இயேசு பெருமான் சொல்லுகிறதாவது: என்னைப்பார்த்து எஜமான் என்றும், ஆண்டவர் என்றும் சொல்லுகிறீர்கள். அது உண்மை. எஜமானும் ஆண்டவருமாகிய நான் உங்கள் கால்களைக் கழுவினதுபோல், நீங்கள் மற்றவருடைய கால்களைக் கழுவவேண்டும் என்பதே.

(Translated from Dr. Hume.) *from Uunited Church Herald.*



PRINTED AND PUBLISHED BY MR. K. T. PAUL AT THE T. A. C. PRESS, SALEM.

இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை

The Tamil Organ of the National Missionary Society of India

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

REGISTRAR OF ... 25 JUL 1916 MADRAS

Vol. VIII. மே—ஜூன் 1916. No. 5 & 6

## காலஞ்சென்ற நமது பிரெசிடெண்டு
### (டாக்டர் சாட்டர்ஜி.)

மே மாதம் 31 தேதி டாக்டர் சாட்டர்ஜி, பஞ்சாப் மாகாணத்தில், பிலோர் (Phillour) என்னும் தமது சொந்த ஊரில் இறந்துபோனார். ஜலந்தர் பட்டணத்தில் ஏப்ரல் 21-25 தேதிகளில் நடந்த லாகூர் பிரிஸ்பிடரி கூட்டத்தில் வந்திருந்து நடத்தியது அவர் பொது நன்மைக்கென்று செய்த கடைசி காரியம். அந்த சமயத்தில் தாம் நாற்பத்தெட்டு வருஷங்களாக உழைத்துவந்த ஹோஷியார்பூர் (Hoshiarpur) என்னும் ஊரிலுள்ள சபை போதகர் நிதிக்கென்று 6000 ரூபாய் அளித்தார். அதிக பெலவீனமான ஸ்திதியிலிருந்த போதிலும், தாமே இந்த கடமையை நேராகச் செய்யவேண்டுமென்று உணர்ந்தவராகத் தெரிகிறது. இது தன் பெலனுக்கு மிஞ்சினதாயிருந்தது. சீக்கிரமே வீடு போய்ச் சேர்ந்தார். அவருடைய மக்களில் ஒருவர் எழுதியதாவது 'ஏன் இவ்வளவு வேதனைபட்டார் என்று எங்களுக்கு விளங்கவில்லை. ஆனால் இதனால் நாங்கள் எங்கள் இரட்சகரை உண்மையாக சேவிக்க இது சம்பவித்திருக்கிறது.' கடந்தவாரம் பரிசுத்தவாரம் என்று உணர்ந்தோம். அவர் மரண படுக்கையும் நாங்கள் ஆராதிக்கும் ஓர் இடமாயிருந்தது.

டாக்டர் சாட்டர்ஜி ஒரு பெங்காலியர். குலின் பிராமணர் டாக்டர் டப் Dr. (Duff) என்ற சிறந்தமிஷனரியின் போதகத்தால் கிறிஸ்துவை அண்டினவர். 1861-ம் வருஷமுதல் மரணபரியந்தம் 55 வருஷ காலமாக பஞ்சாப்மாகாணத்தில், அமெரிக்கன் பிரெஸ்பிடேரியன் மிஷனில் உழைத்து வந்தார். அவர் ஊழியத்தின் பலனாக ஹோஷியார்பூர் ஊரிலும் ஜில்லாவிலும் 3000 ஆத்துமாக்கள் அடங்கிய ஐந்து சபைகளைக் காணலாம். 1886-ம் வருஷத்தில் டாக்டர் சாட்டர்ஜியும், அவர் மனைவியும் அமெரிக்கா தேசம் போய்வந்தார்கள். 1910-ம் வருஷத்தில் இருவரும் எடின்பரோ நகரத்தில் நடந்த மிஷனரி மகா சபையிலும் இருந்தார்கள். அதே சமயத்தில், எடின்

பரோ கல்லூரியால் "டாக்டர் ஆவ் டிவினிடி" என்றபட்டம் தரிக்கப்பெற்றார்.

சுவிசேஷ பிரபல்ய வேலையை சுதேசிகள் சொந்தமாக நடத்த வேண்டுமென்ற அவா நிறைந்தவர். லாகூர் பிரிஸ்பிடேரியில் இதை தூண்டிவிட்டதில் முதற்காரணமாயிருந்தவர். நமது சுதேச மிஷனரி சங்கம் (N. M. S.) ஏற்படுத்தப்பட்டபொழுது, இந்தியா சபை முழுவதிலும் சுவிசேஷ பிரபல்ய ஆவியை தூண்டிவிட்டு வளர்க்க இச்சங்கம் ஒன்றே விசேஷித்த கருவியாக இருக்கும் என்று கண்டார். வைஸ் பிரசிடெண்டாக இருந்து அடிக்கடி ஆலோசனை தந்து வந்தார். இந்த வருஷம் பிரசிடெண்டாக நியமிக்கப்பட்டார்.

நமது சங்கத்தின் விருத்தியை எவ்வளவாகக் கோரியிருந்தார் என்பதற்கு சென்ற வருஷம் அவர் மனைவியார் சங்கத்திற்கு அளித்த 5000 ரூபாயே அத்தாக்ஷி. அவர் மரணத்தால் நமக்கு நேர்ந்த நஷ்டம் பெரிதென்று துக்கிக்கிறோம்.

## ரூக்கர் கடிதம்.

சர்சாவாவைச்சேர்ந்த கிறிஸ்தவர்களெல்லாம் ஓர் சபையினராயினரென்று சந்தோஷத்தோடு அறிவிக்கிறேன். இந்த சம்பவம் ஜனவரி மாதம் 28, 29, 30-ம் தேதிகளில் நடந்தேறியது. 28-ம் தேதி ஆயத்த நாளாக ஆசரித்தோம். ஊழியர் எல்லாரும், கிராம கிறிஸ்தவர்கள் 35 பேர், 2 சகோதரிகள் ஆக 50 பேர் கூடினோம். கர்த்தருடைய பந்தியில் சேர நோக்கமாயிருந்தவர்களுக்கு அவரவர் கிராமங்களில் போதித்து வந்தோம்.

29-ம் தேதி பரிக்ஷை நடத்தினோம். லூதியானா பிரிஸ்பிடரி நமது சபை ஸ்தாபகப்படுத்த கனம் வெல்டி போதகர், கனம் பி. கே. சர்க்கார், கனம் கியாலிராம் என்பவர்களை அனுப்பினார்கள். அவர்கள் அன்று மாலை வந்து சேர்ந்தார்கள். மாலை 7 மணிக்கு பரிக்ஷை ஆரம்பமாயிற்று. 25 மாணாக்கர் சோதிக்கப்பட்டதில் 16 பேர் தேறினர். சில்கானா கிராமத்தைச் சேர்ந்த போலோ என்ற பெண்ணும் சர்சாவாவைச்சேர்ந்த லக்கா என்பவனும் நன்றாக பதிலளித்தார்கள். பரிக்ஷை முடிந்ததும் சபை ஸ்தாபகம் ஆயிற்று. சபையார், கனம் லட்மன்ட், ஜேகப், சாட்டர்ஜி என்பவர்களை மூப்பர்களாகத் தெரிந்துகொண்டார்கள். இரவு 10 மணிக்கு கூட்டம் கலைந்தது. கலையுமுன் கர்த்தரைத் துதித்து, எங்கள் மத்தியில் சபை விர்த்தியடைய வேண்டுமென்று வேண்டினோம்.



அடுத்தநாள் ஓய்வுநாள். சர்சாவாவிலுள்ள நாங்கள் ஒரு சபையாக முதல் முதலாக கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றோம். அதற்கு முன்பாக மூப்பர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது எங்களுக்கிருந்த பயபக்தி இவ்வளவென்று சொல்லமுடியாது. ஆவியானவர் எங்களோடிருந்தார் என்று சொல்லக்கூடும். இந்துக்களும் மகமதியரும் வெளியே நின்று நடந்தவற்றை கவனித்து வந்து, இந்த சம்பவத்தைப்பற்றி எங்களிடம் பேசினார்கள். இதற்குப் பிறகு நான்குபேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

ஞாயிற்றுக்கிழமை அன்று கனம் சர்க்கார் போதகர் பிரசங்கம் செய்தார். சபை காரியங்களை நடத்திவர ஏற்படுத்தியிருக்கும் செஷன் சங்கம், கிறிஸ்தவ சௌதரிகளென்று சொல்லப்பட்ட கிராமத் தலைவர்களை தங்கள் செஷனில் அங்கங்களாக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

J. W. பீப்பிள்ஸ்.

## ஒரு இந்துவின் ஆச்சரியமான குணப்படுதல்.

என் அன்புள்ள ஐயா,

பிறப்பில் நான் சைவன். நான் மெள்ள மெள்ள படிப்படியாய் மெய்யறிவு பெற்றமையால் நான் மனம் மாறிய வரலாற்றைச் சுருக்கிச்சொல்லல் எளிதல்ல ; சற்று நீளமாகத்தானிருக்கும்.

என் தகப்பனார் வீரசைவன் ; மூன்று கோவில்களுக்கு தர்மகர்த்தா ; தலைமுறை தத்துவமாய்க் கிடைத்த பதவி இது. என் தாயோடு பிறந்தவர்களுள் ஆண்மக்களே இல்லை. ஆதலின் பெண்மக்களையாவது நன்றாய்ப் படிக்கவைக்க விரும்பி, மிஷன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். இதுவோ அக்காலத்து இந்துக்கள் கண்முன் கேவலம். ஆயினும் உடன்பிறந்தாரைவிட புத்திசாலியாயிருந்த என் தாயாரை உடுவில் என்ற ஊரில் அமெரிக்கன் மிஷன் ஆதரிப்புப்பாடசாலையில் படிக்க வைத்தார்கள். அவ்விடத்தில் அவள் கிறிஸ்துவுக்கு அடியாளானாள். இதைக்கேட்ட என் பாட்டனும் பாட்டியும் : ஐயோ, எங்கள் குலத்துக்கு இத்தனை பெரிய கேடு வந்ததே என்று புலம்பி, உடனே என் தாயைப்பள்ளிக்கூடத்திலிருந்து தருவித்து, அவளுடைய இஷ்டத்துக்கு விரோதமாக இந்து மதத்தானாகிய என் தகப்பனுக்கு மணம் புரிந்தார்கள். புருஷன் இந்துவாயிருந்தும், இந்து சிநேகிதர் நடுவே அவள் அநேகவருஷம் ஜீவிக்

கவேண்டியதாயிருந்தும் ஒரு தரமாவது அக்கியானச் சடங்குகளை அனுசரித்தவளல்ல; இந்து கோவிலுக்குப் போகும்படி பலகாலும் கணவன் தூண்டினாலும் ஒருபோதும் அதற்குச் சம்மதித்ததேயில்லை அதற்கு மாறாக, கிறிஸ்தவ ஆராதனை ஸ்தலங்களுக்குப்போக அவளுக்கிருந்த நாட்டத்தைப் புருஷனறிந்து அதற்கு விரோதமாக மிகவும் கண்டிப்பான உத்தரவு பண்ணிவிட்டான். இருபது வருஷம் சென்று பிள்ளைகளாகிய நாங்கள் வயதுக்கு வந்து அவளைத் தேவ வீட்டுக்குச் சந்தோஷத்தோடு அழைத்துப் போகுமட்டும் கிறிஸ்து மார்க்கம் அவளுக்குள் தூங்கிக்கிடக்க வேண்டியதாயிற்று.

சைவப்பிள்ளையாய் வளர்ந்தேன். தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் இணையற்ற பாண்டித்தியமுடைய ஒரு பிராமண குருவண்டை போதனை பெற்றேன். காலையும் மாலையும் என் தகப்பனார் என்னைக் கையோடு கோவிலுக்கு இட்டுக்கொண்டுபோய் விக்கிரக வணக்க முறையையும் அதற்கடுத்த பற்பல சடங்காசாரங்களையும் எனக்குக் கற்பிக்கக் கவலையாயிருந்தார். என் பால்ய பருவத்தில இந்து சாஸ்திர ஆராய்ச்சியே என் நேரத்தைக் கொள்ளைகொண்டது. 'என் மகன் வைராக்கிய இந்துவாய் வளர்ந்து எனக்குப்பின்னே என்னுடைய தானத்தை வகிக்கப்போகிறான்' என்று என் தகப்பனார் தப்பாய்க் களிகூரக்கொள்ள, அந்த வீட்டுக்குள்ளேயே அவருக்கு எதிரான ஒரு பெரிய வல்லமை ரகஸ்யமாய் வேலைசெய்து, கடைசியாய் என்னை அவருக்கு ஜென்மப்பகையான கிறிஸ்துமதப் பிரசங்கியாக்கப்போகிறதைக் கிஞ்சித்தும் சமுசயித்தவரல்ல. நான மூத்த மகனாதலால் என் நல்ல தாய் கிறிஸ்துமார்க்கச் சத்தியங்களை எனக்குப் போதிக்கவும் பரிசுத்த வழியில் நடத்தவும் அந்தரங்க முயற்சி செய்தாள். இன்றைக்கும் அவள் போதித்த நேரங்களை நினைக்கும்போது என் ஆவி பரவசப்படுகிறது; எனக்கு இன்னம் நல்ல ஞாபகம் இருக்கிறது. என் தகப்பனார் வீட்டிலில்லாத நேரம் பார்த்து பொதுவாய் மாலை நேரங்களில் என் தாயார் என்னையும் என் தம்பிமாரையும் ஒரு பக்கத்தில் கூட்டி, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே முதலானவர்களுடைய சரித்திரங்களை எங்கள் இளந்தை மனதில் பதியும் விதமாய்ச் சிறுசிறு கதைபோல் சொல்லுவார்கள். கர்த்தருடைய செபத்தை எனக்குக் கற்றுக்கொடுத்தவள் என் தாயே. நேசமுள்ள தாய் என்னுடைய பசலை இதயத்துள் விதைத்த விதை படிப்படியாய் வளர்ந்து தேவ கிருபையால தருண காலத்தில் தன் கனியைத்தந்தது.

சிலவருஷம் சென்று என்னைக் கோப்பையூரிலுள்ள ஒருசிறு இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். இது C. M. S.



மிஷனரிமார் விசாரணையில் இருந்தது. இவ்விடத்தில் முதல முதல இவ்விடத்தில்தான்கிறிஸ்தவ உபாத்தியாரின் ஒழுங்கான மேரையும மாதிரியும் என் ஜீவியத்தோடு சம்பந்தப்பட்டது. 1865ம் வருஷத்தில் என் முன்னோர் மார்க்கத்தவறுகளைத் திட்டமாய் அறிந்துணர்ந்து சீக்கிரம் கிறிஸ்தவனாக வேண்டுமென்று தீர்மானம் செய்தேன் இதைகேட்ட என் தாயாரின் ஆனந்தத்துக்கு கங்குகரையில்லை ஆயினும் என் விசுவாசத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடுவதில் நான் மேற்கொள்ளவேண்டிய கஷ்டங்களை முன்னோக்கின் அவை சாமான்யமானவை அல்லவென்றே எனக்குப்பட்டது. நான் பகிஷ்டமாய்ச்செய்யும் செயலால் என் முழுக்குடும்பத்துக்கும் என்ன நேரிடுமோ என்று மிகவும் பயந்தேன். இதால் இயேசுகிறிஸ்துவின் இரகஸ்ய சிஷனாகவே இருந்தேன்.

ஆயினும், கோப்பையூர் கோவிலாராதனைக்கு ஞாயிறு தோறும் போகத் தவறாதிருந்தேன். இதை கண்ணுற்ற என் தகப்பனாருக்கு என்னைப்பற்றிச் சந்தேகம்பிறந்து எங்கே கெட்டுப்போவேனோ என்று கவலைப்படத்துவக்கினார். ஒருநாள் ஞாயிறுகாலையில் அவர் வெளியே போகுமுன் நான் கிறிஸ்தவ கோவிலுக்குப் போகக்கூடாது என்று உத்தரவுபண்ணினார்; அது என் ஆத்துமாவுக்குப் பெரும் சங்கடமாயிருந்தது. ஜேஷ்டபுத்திரனாயிருந்தமையால் என்னை விசேஷித்த கனிவோடு நேசித்தார், நானுமிதற்கு நன்றியாக அவருடைய கட்டளைகளை ஒருபோதும் மனதாரமீறினதில்லை. மறுபட்சத்திலோ கடவுளுடைய கட்டளைகளுக்குக் கண்டிப்பான கீழ்ப்படிதல் அவசியம் என்றும் பூரணமாய்அறிந்தேன். என் மனதிலே ஒரு பெரிய போராட்டம் உண்டாயிற்று. சற்றுநேரம் அமர்ந்து யோசித்தேன் ஜெபித்தேன்; உறுதியான தீர்மானம் செய்து கோவிலுக்குப்புறப்பட்டேன். போம்வழியில் என் தகப்பனாரை தற்செயலாய் சந்தித்தேன் என்மனம் அந்நிமிஷத்தில் குழம்பிநின்ற நிலைமையை நீங்களே, பாவித்துக்கொள்ளலாம். என் தகப்பனார் என்னைச்சினந்து நோக்கி, 'நீ கிறிஸ்தவ கோவிலுக்குப்போகப்படாதென்று இன்று காலையில் உனக்குச்சொல்லவில்லையா' என்று கேட்டார்.

நானோ அமர்ந்த தொனியாய் ஐயா, உங்கள் கட்டளைகளுக்கு நான் எப்போதும் கீழ்ப்படிந்தேன், இனியும் கீழ்ப்படிவேன்" என்று வாக்குக்கொடுத்தேன். 'ஆயினும் உங்கள்கட்டளை தேவகற்பனைக்கு எதிரிடையாயிருக்கும்போது அதற்குச்சம்மதிக்க நான் மனமொப்பமுடியாது தங்களுக்குமுன் நான்பாராட்டுந் துணிகரத்தை மன்னியுங்கள்" என்றேன். இந்த அமைதலும் உறுதியுமான மறுமொழியால் அவர் மலைத்துப்போய் மறுவார்த்தை பேசாமல் போய்விட்

டார். என் சங்கடத்தை மேற்கொள்ள கர்த்தர் எனக்கு அருளிய பெலனுக்காக அவருக்குப் புகழ்ச்சி செலுத்தி அவரது ஆலயத்துள் புகுந்தேன்.

ஜான் கைல்ஸ் என்ற உபதேசியார் (பிற்காலத்தில் குரு அபிஷேகம் பெற்றவர்) ஆராதனை நடத்தினர் மனுஷருக்குமுன்பாக என்னை மறுதலிக்கிறவன் தேவதூதர் முன்பாக மறுதலிக்கப்படுவான். (லூக்-12-9) என்ற வாக்கியத்தின் பேரில் வல்லமையும் எழுப்புதலுமான பிரசங்கம் செய்தார். பிரசங்கம் என் இருதயத்தை ஊடுருவிச்சென்றது. இந்தப்பிரசங்கம் எனக்கென்றே கர்த்தர்குறித்திருந்தார் என்று உணர்ந்தேன். அச்சமயத்தில் என் நிலைமைக்கு அது முற்றிலும் பொருத்தமாயிருந்தது. இரகஸ்ய சிஷ்ப கிரமத்தில் நான் தள்ளாட ஆரம்பித்தேன். எனக்குள்ளிருந்த போலிச் சமாதா தானம் குலைந்தது. ஆ! திகில் நிறைந்த என் ஆத்துமாவில் மகா பயங்கரமானவேதனை உண்டாயிற்று. அந்தவாரம் முழுமையும் நிர்ப்பாக்கியனாயிருந்தேன். என்னநேரிட்டாலும் பகிரங்க அறிக்கைசெய்யத் தீர்மானித்தேன். ஆதலால் அடுத்த ஞாயிறு கோப்பேயூர் கோவிலில் ஜான் ஹென்ஸ்மன் ஐயரிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன்.

என்தகப்பனார் இதைக்கேட்டதும் மிகவும் சீறிச்சினந்து கடிந்துகொண்டார். அவர்கைக்கு விலகவிரும்பி ஏற்கனவே கிறிஸ்தவளாகிவிட்ட என் அத்தையார்வீட்டில் அடைக்கலம் புகுந்தேன். என் தகப்பனாருடைய கோபமும் படிப்படியாய் அடங்கிவிட்டது. என்னை வீட்டுக்குள் திரும்பவும் சேர்த்துக்கொண்டார். என் சகோதரரும் சகோதரியும் கிறிஸ்தவர்களாகும்படி தேவன் ஆச்சரியமான விதமாய் திட்டம் பண்ணினர்; தேவனுடைய திராட்சத்தோட்டத்து உண்மையுள்ள ஊழியரிலொருவராகிய J. கைல்ஸ் என்பவர் என் சகோதரியை மணம்புரிந்தார். அருமைமக்களுக்காக அநேக வருஷங்களாய் ஆயாசத்தோடு ஜெபித்த என் அன்புள்ளதாய் தன் உருக்கமான ஜெபங்களுக்கு உத்தரவாகப் பரமபிதா அவர்களைக்கிறிஸ்துவின் தொழுத்தில் கூட்டிச்சேர்த்தார் என்பதைக்கண்டு களித்தாள்.

1866-ம்லூல் உயர்தர கல்விகற்க என்னை யாழ்ப்பாண சென்றல் பாடசாலைக்கு அனுப்பினார்கள். நான் கிறிஸ்தவ வாலிபனாயிருந்தும் அவர் மூலமாய் எனக்குக்கிடைத்த தேவனுடைய அன்பைச் சரியாய் அனுபவியாமல் சில வருஷங்களைப் பின்னிட்டேன், 1871ம் வருஷத்தில் ஓர் ஞாயிறு அதிகாலையில் பரி: பேதுருவின் ஆலயத்துக்குப் போனேன்; ஜான் கில்னெர் என்ற குருபிரசங்கம்செய்தார். 'இப்போதும் நாம் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டபடியினால், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமா



தானம் பெற்றிருக்கிறோம்' (ரோ-5-1) என்ற வாக்கியத்தின் பேரில் தான் பிரசங்கம். என் முழு உள்ளத்தாலும் அந்த உயிர்ப்பிக்கும் பிரசங்கத்தை உட்கொண்டேன். பரிசுத்த அப்போஸ்தலன் அனுபவித்த அந்த தேவசமாதானம் என்னிடத்தில் உண்டோ என்று ஆராய்ந்தேன் அந்த இரவு முழுவதும் எனக்குத்தூக்கம்பிடிக்கவில்லை திங்கட்கிழமை காலையில் எழுந்ததும் அந்த குருவண்டைபோய் என்நிர்ப்பாக்கிய நிலையைத் தெரிவித்தேன். தேவன் என்பாவங்களை எல்லாம் மன்னிப்பாரோ என்றும் என்னைத்தம்முடைய கிருபைக்குள்ளும் பரிசுத்தவான்களின் சிலாக்கியங்களுக்குள்ளும் திரும்பச்சேர்த்துக் கொள்வாரோ என்றும் மிகவும் சந்தேகப்பட்டேன். கர்த்தருடைய ஊழியன் தேவனுடைய கிருபையுள்ள வாக்குகளை எனக்குக்காட்டி, அவைகளை நம்பும்படி என்னை ஏவினர். அவரோடு முழங்காலூன்றி ஜெபித்தேன். அந்தநேரத்தில் மன்னிக்கும் தேவகிருபையை உணர்ந்தேன். என்மனக்கொந்தளிப்பு அமர்ந்தது நான் தேவனோடு ஒப்புரவானேன் என்று அறிந்துகொண்டேன்.

சிலகாலம் சென்று தேவனுடைய ஊழியத்துக்கு என்னைத்தத்தம்பண்ண வாஞ்சை உண்டாயிற்று; என் தாயாருக்கு அதைச்சொன்னேன் அவள் என்னைமிகவும் உற்சாகப்படுத்தி அதுவே தனக்கும் பேராவல் என்னும் இசைவாய்ப்பதிலுரைத்தாள். இதிலும் என் தகப்பனால் சிலதடைகள் துவக்கத்தில் இருந்தும், அவைகளை எல்லாம் மேற்கொள்ளதேவனே எனக்கு அருளையும் பெலனையும் அளித்தார், என்னைச்சிநேகித்து எனக்காகத் தம்மையேதந்த ரட்சாபெருமானுடைய இன்பச்சுவிசேஷத்தைப் பிரபல்யப்படுத்த என்னை அவர் உபயோகப்படுத்துவதற்காக அவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!

தங்களுண்மையுள்ள,

J. T. அப்பாபிள்ளை.

(இந்தக்கடிதம் சிலோனில் ஒரு மிஷனரி துரைக்கு எழுதப்பட்டது. சிலோன் மெதடிஸ்ட் ரிக்கார்ட் என்னும் பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.)

## சுவிசேஷகன் கூறும் சிறந்தசெய்தி,

"எல்லாப் பரிசுத்தவான்களிலுஞ் சிறியவனாகிய எனக்கு கிறிஸ்துவினுடைய ஆராய்ந்துமுடியாத ஐசுவரியத்தைப் புறச்சாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்குக் கிருபைகொடுத்திருக்கிறது. எபேசியர் 3: 8."

அப்போஸ்தலனாகிய பவுல் தனக்களிக்கப்பட்டக் கிருபையைக்குறித்து இங்கே பேசுகிறார். அக்கிருபை எல்லாரிலுஞ்சிறியவனாகிய தன்னைப்பிடித்ததைப்பற்றி அதிசயிக்கிறார். தான் புறச்சாதிகளுக்குக் கூறவேண்டிய கிறிஸ்துவின் ஆராய்ந்துமுடியா ஐசுவரியத்தை நினைத்து அகமகிழ்கிறார்.

கிறிஸ்துவின் ஐசுவரியமே சுவிசேஷகன் கூறத்தகும்செய்தி. சிந்தித்துத் தியானிப்பதற்கேற்ற நற்செய்தி. அதிலும் அதிகமாக அடைந்து அனுபவிப்பதற்குரிய உத்தமபொருள்.

கிறிஸ்துவின் ஐசுவரியம் பாவிக்குப்பாவ விமோசனத்தை அறிவிக்கும். அப்போஸ்தலன் ஆண்டவருடைய ஐசுவரியத்தின் திரட்சியைக் காண்பிக்கும் பொருட்டே பாவியின் பயங்கரநிலைமையை முந்த விஸ்தரிப்பார். அப்பால் அவர் "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆனால் கழுவப்பட்டீர்கள்" என்பார் சகலபாவிகளையும் கழுவிப்பரிசுத்தமாக்க ஆண்டவர் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். சகலபாவத்திற்கும் அவரிடத்தில் விமோசனமுண்டு. இதைக்குறித்து அப்போஸ்தலனுக்குச் சந்தேகமிருந்ததில்லை. அவரிடத்தில் விளங்கிய அந்நம்பிக்கை நம்மிடத்திலுமுண்டோ? வனாந்தரமும் வறண்டபூமியும் மகிழ்ந்து, கடுவெளிகளித்து. புஷ்பத்தைப்போலேபூக்கும், என்று நாம் முழுமனதோடும் நம்புகிறோமா?

கிறிஸ்துவின் ஐசுவரியம் துக்கத்தை மாற்றும்மருந்து. கசப்பை இனிப்பாக்கும் விருக்ஷம். துன்பத்திலே நாங்கள் சந்தோஷப்படுகிறோம் என்பார் அப்போஸ்தலன். கல்வாரிமலையின் தியானமே, மானிட உபத்திரவங்களை ஒன்றுமற்றதாக்கும் கிறிஸ்துவின் சிலுவையே அவரது அடியாருடைய துன்பத்தை ஆசீர்வாதமாக மாற்றும். உலகத்தின் உபத்திரவத்தை நீக்கவல்லது எம்பெருமானது ஐசுவரியமே.

கிறிஸ்துவின் ஐசுவரியம் உலக சம்பந்தங்களை பரம சம்பந்தங்களாக மாற்றவல்லது. குடும்பஜீவியத்தைப் பரிசுத்தமாக்கும்; குடும்ப பந்தத்தை உறுதியாக்கும்; உத்தம பாக்கியத்தை ஒவ்வொருவருக்கும் அளிக்கும். கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள சம்பந்தம், புருஷனுக்கும் மனைவிக்கும் இருக்கவேண்டியது; வேலைக்காரன் சகோதரனாகிறான். கிறிஸ்துவுக்குள்ளே சகலரும் சரீரத்தின் அவயவங்கள் போலாகிறார்கள்.

கிறிஸ்துவின் ஐசுவரியம் எல்லாரிலுஞ்சிறியவனையும் தன் உத்தம ஊழியனாக்கும், அப்போஸ்தலன் இங்கே உபயோகிக்கும் வார்த்தையும் இலக்கணமும் வெகு ஆச்சரியமானது- எல்லாரிலும் சிறியவனிலும் சிறியன் யான் என்கிறார். அவர் எல்லாரிலும் அதிகமாக உழைத்தும் தம்மைப்பிடித்த கிருபையை நோக்கும் போது, தன்னையே தாழ்த்துகிறார். இத்தாழ்ந்த சிந்தையுள்ளவனையே கிறிஸ்து தமது ஆராய்ந்துமுடியா ஐசுவரியத்தினால் நிரப்புவார் அவர் பசித்தவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியவான்களை வெறுமையே அனுப்பிவிடும் ஆண்டவர். ஆகையால் தேவகிருபைக்குமுன் நம்மைத் தாழ்த்துவோம். நாம் பெற்றதேவகிருபையைப்பற்றி மேன்மை பாராட்டுவோம். அதைக்குறித்து நிச்சயமாயிருப்போம், அதையே அனுதினமும் அனுபவித்து ஆனந்திப்போமாக. நாம் அனுபவிக்கும் இவ்வைசுவரியத்தை மற்றோருக்கும் கொண்டுசெல்வோம். மற்றோருக்கு அதை அளிக்க ஆண்டவர் நம்மையும் நமது சபைகளையும் அளவில்லா ஐசுவரியத்தினால் நிரப்புவார்.

ஜே. எச். ஜோவட்.

Printed and Published by Mr. K. T. Paul at the T. A. C. Press, Salem.


# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை

The Tamil Organ of the National Missionary Society of India

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

Vol. VIII. ஜூலை 1916. No. 7


THE REGISTRAR OF SOCIETIES JUL 1916 MADRAS.

## ஜெபம்.

என் இரட்சகா எக்காரியத்திற்காக அடியேனை உபயோகிக்க தேவரீரது சித்தமோ, எதற்காக அடியேன் உமக்குத் தேவையோ அதற்கு அடியேனை உபயோகியும். இதோ வெறுமையானதும் அற்பமுமான என் இருதயத்தை தேவரீரிடம் ஒப்புவிக்கிறேன் அதை பரமகிருபையால் நிரப்பியருளும். ஆறுதலற்றதும் பாவம் நிறைந்ததுமான என் ஆத்துமாவை நோக்கும். அதை உயிர்ப்பித்து குளிரப்பண்ணும், என் இருதயத்தை உமதில்லமாக்கி தேவரீரது நாமத்தின் மகிமையை எங்கும் விளங்கச்செய்ய என் நாவை உபயோகியும். இன்னமும் இரட்சகா, என் முழுவிருப்பமும் என் முழுவல்லமையும் தேவரீடம் விசுவாசம் வைத்தொழுகும் உமது தாசர்களின் அபிவிர்த்திக்காக செலவிடப்படக் கிருபைபுரியும். என் விசுவாசத்தின் உறுதியும் நம்பிக்கையும் குறையாதபடி காத்தருளும் என் முழுஇருதயத்தோடும் "இயேசுவுக்கு நான் தேவை அவர் எனக்குத் தேவை" என்று சொல்லும்படி இவைகள் யாவையும் எனக்குத்தயவாய்க்கட்டளையிட்டருளும் ஆமென்.

டி. எல். மூடி.

## கார்வார் கடிதம்.

### எல்லாபுரத்தின் மாரிஜாத்ரே உற்சவம்.

எல்லாபுரம் என்பது கார்வாருக்குக் கிழக்கே அறுபது மைலுக்கப்பாலுள்ள ஒரு தாலூக்கா இது மலை நாடாதலால் மலை சுரம் இவ்விடம் சகஜம். மலைகளும் காடுகளும் சூழ்ந்த இந்நாட்டிற்குப் போகவர சரியான பாதை கிடையாது; ஆகவே பிரயாணிகளுக்கு வெகு கஷ்டம். இவ்விடத்தில் வருஷந்தோறும் மாரிஜாத்திரே என்றொரு பெரிய உற்சவம் நடக்கிறது. அதற்கு அந்த ஜில்லாவின் பல பக்கங்களிலுமிருந்து ஜனங்கள் திரள் திரளாய் வருவார்கள்.

நான் ஏப்ரல் மாதம் 12-ந்தேதி சாயந்திரம் நத்தானியேல் ஜேகப் என்பவரோடும், வேதாகமப்பிரதிகள் விற்கும் மற்றுமோர் உடன் ஊழியரோடும் கார்வாரை விட்டுப் புறப்பட்டேன். அடுத்த நாள் காலையில் அங்கோலாவையடைந்து அப்பகல் முழுவதும் கவர்ன்மெண்ட் சத்திரத்தில் தங்கினோம். இவ்விடத்தில் மாட்டு வண்டிகளில் பிரயாணம் செய்வது பெரும்பாலும் இரவிலேதான். அங்கோலாவிலிருந்து எல்லாபுரத்திற்கு நாற்பது மைல் தூரம். சரியான பாதை கிடையாது. இம்மேல்நாட்டிற்குச் செல்லவேண்டுமானால் வனமிருகங்கள் நிறைந்த வனங்களுக்குள் புகுந்து பல மலைத்தொடர்களைக் கடந்து அவைகளில் செல்லும் சிக்கலான பாதை மூலமாய்ப் போகவேண்டும். ஆனாலும் இவ்வளவு கஷ்டங்களுக்கிடையே களைப்புற்றிருந்து நடந்தேறும் பாதசாரிக்கு சற்று இளைப்பாற அங்கங்கே இயற்கையாய் சிலவிடங்கள் அமைந்துள்ளன. சிலவிடங்களில் தர்மசாலைகளுள்ள சில கிராமங்களும் உண்டு. இக்கிராமங்களில் வசிக்கும் குடியானவர்கள் தங்கள் எஜமானர்களான சவுக்கார்களிடம் நிலங்களை குத்தகைக்கு வாங்கி சாகுபடி செய்து வருகின்றனர். இவர்களுக்கு மலைச்சுரம் என்ற பயம் ஒரு பக்கம். வனமிருகங்களின் பயம் ஒரு பக்கமுமாகக் கவலை சதா உண்டு.

வழியில் இரண்டு கிராமங்களில் தங்கி ஏப்ரல் மீ 16-ந்தேதி காலை எல்லாபுரம் போய்ச்சேர்ந்தோம். உற்சவம் ஆரம்பிக்க மூன்று நாள் இருந்தது. ஆகவே நாங்கள் பலவிடங்களிலும் சுற்றித்திரிந்து வேதாகமப்பிரதிகளைக் கொடுத்துக்கொண்டும் பலரிடமும் சம்பாஷித்துக்கொண்டும் காலத்தைக் கழித்தோம். நல்ல அந்தஸ்துள்ள ஒரு பிராமண மகான் எங்களிடத்திலிருந்து ஒரு மராத்திய வேதாகமம் ஒன்று வாங்கினார். அவர் மத ஆராய்ச்சியுள்ள சிந்தையுடன் வைராக்கியமுற்று கேட்ட கேள்விகள் எங்கள் உள்ளங்களைக் கனியச் செய்தன. அவர் தமது மதத்தில் தமக்கிருக்கும் திருப்தியின்மையை விவரித்துச் சொன்னார் விபசாரம் முதலிய பயங்கரமான பாவங்களையும் நாஸ்திகத்தன்மையையும் அருவருக்காத இந்துக்கள் நல்லாராய்ச்சி செய்த ஒரு மனிதன் தன் விசுவாசத்தின் காரணமாக நல் மதத்தைத் தழுவும்போது துவேஷத்தோடு இம்சை செய்யத்தொடங்குகின்றனரே என்று துக்கித்தார். இந்த உத்தமபக்தனின் ஆவல் நிறைந்த ஆத்துமாவை கர்த்தர் நோக்கி அவரைத் தமது மந்தையில் சேர்த்துக்கொள்ளும்படி மிகவும் ஊக்கமாய் வேண்டுவோமாக.

பரிசுத்தம், நன்னடக்கை என்பதே இப்பக்கங்களில் அபூர்வம். வேசிகளால் கறைப்படும் ஜீவியங்கள் எத்தனை! அது மாத்திரமல்ல தாழ்ந்த ஜாதி ஜனங்களுடைய ஜீவியம் மிகவும் பயங்கரமானது. இவ்விடம் ஒரு ரோமன் கத்தோலிக்கர் கோவில் இருக்கிறது. அதில் 400 மெம்பர்கள் உளர். எல்லாபுரத்தில் நாங்கள் தங்கியிருந்தபோது மூன்று ஸ்திரீகள் கத்தோலிக்க சபையைச் சேரவந்தனர். ஏன்? ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களோடு விபசாரத்துக்குடன்பட்டு மக்களைப் பெற்றதன் காரணத்தால் தங்கள் ஜாதியினின்றும் புறம்பே தள்ளப்பட்டார்கள்.

19-ந்தேதியன்று ஜாத்ரே விசேஷ ஆடம்பரங்களோடு நடந்தேறியது. அன்றும் அடுத்த நாளும் ஒரு நாளுக்கு இரண்டு பிரசங்கங்கள் வீதம் செய்தோம். திரளான ஜனங்கள் கூடி வந்தனர், எவ்வித உபத்திரவமுங் கொடாமல் ஆவலோடு கேட்டனர்.



இவ்வுற்சவத்தின் விசேஷபாகம் காளிகாதேவியைப் பிரியப்படுத்தக்கொடுக்கும் எருமைப்பலியே. இரண்டு பெரிய விக்கிரகங்களைத் தூக்கிக்கொண்டு ஆரவாரத்தோடு ஊர்வலம் வந்தனர், நாட்டியப்பெண்கள் நடனமாடினர். வாழைப்பழங்கள் வாரியிறைக்கப்பட்டன. பெருங்கோஷ்டத்தோடு நகர்வலம் முடிய ஓர் பெரிய பந்தலில் அவ்விக்கிரகங்களை யமர்த்தினர். சில சடங்குகள் நடந்தேறினவுடனே கூட்டம் கலைந்தது. மறுபடியும் நடு இராத்திரியில் பெரிய கூட்டம் கூடிற்று. நடுவிலே எருமைப்பலிக்காக ஏற்படுத்தப்பட்டவர்கள் ஒலேயா ஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்களைப் பிறர் தொடச் சகியார்கள். கோவில் தாசிகளும் எருமைப்பலியிடும் ஆட்களும் இச்சாதியைச் சேர்ந்தவர்களே. இந்த ஜாதி ஸ்திரீகளில் ஒருத்தித் தனக்குச்சேரவேண்டிய தக்ஷணைகளைப் பெற்றுக்கொண்டு பலியிடுகிறவனை பலியிடவேண்டிய இடத்துக்கு அழைத்தேகுகிறாள், பலர் எருமையைப் பிடித்துக்கொள்ள பலியிடுவோன் தன் கையில் கட்கமேந்தி அதைக்கொன்று தள்ளினான். அவ்வெருமை கழுத்தறுப்புண்டு தலை வேறாக விழுந்த க்ஷணமே ஒரு ஆட்டை அதன்மேல் தள்ளி அதே மனிதன் அதையும் வெட்டித் தள்ளினான், இதோடு முதல் நாள் முடிந்தது. மறுநாள் இரத்தப்பிரியமுள்ள காளிக்குக் கணக்கற்ற ஆடுகளும் கோழிகளும் பலியிட்டனர் இவ்விதமாகக் கொண்டாடப்பட்ட இவ்வுற்சவம் சில நாட்கள் நடந்து முடிந்தது. இவ்விதமாக நாளுக்குநாள் அதிகமதிகமாய் அந்தகாரத்திலமிழ்ந்து கரையைக்காண இயலாதிருக்கும் இவ்வாத்துமாக்களிடம் நாங்கள் பேசும் பேச்சும் விற்கும் வேதாகமப்பிரதிகளும் கிரியை செய்து அசுத்தத்தில் சிக்குண்டு நம்பிக்கையற்று மரணத்தின் வாயிலகப்படாமல் பயங்கர இருளினின்றும் மங்காச்சுடரொளிக்கின் நல்லொளிக்குக் கொண்டுவந்து இரட்சித்தருளல் வேண்டுமென்று பராபரனை நோக்கிப் பிரார்த்திப்போமாக.

பீ. எஸ். மேத்தாய்.

## கிளைச்சங்கம்.

### செயிண்ட் ஜான்ஸ் கிறிஸ்தியன் ஹாஸ்டல், ஆக்ரா.

எங்கள் ஹாஸ்டல் பிள்ளைகள் சுயதேச மிஷனரி சங்கத்தின்மேல் வைத்திருக்கும் விசேஷப்பற்றுதலைப்பற்றியறிய வெகு சந்தோஷப்படுவீர்களென்பது நிச்சயம். அவர்கள் இந்த சங்கத்தை 'எங்கள்' சங்கம் என்று அழைக்கிறார்கள்,

இப்பிள்ளைகளுக்கு வரும் பணத்தில் அவர்கள் கைச்செலவுக்கு நிற்கும் பணம் கொஞ்சமே. அதில் அவர் விளையாட்டு முதலிய பள்ளிக்கூடத்திற்குத் தலைவர்களுக்கும் கொடுக்கவேண்டிய சந்தா, ஓய்வுநாள் காணிக்கைகள் இவைகட்குக் கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆகவே அநேக நாட்களாக மாதந்தோறும் இச்சங்கத்துக்காக சந்தா வசூல் செய்வதை நிறுத்திவிட்டோம்,

சில நாட்களுக்கு முந்தி 'ஊழியம்' என்பதைப்பற்றி இப்பிள்ளைகளின் கூட்டத்தில் பேசினேன். அப்போது சுயதேச மிஷனரி சங்கத்தை அவர்கள் நினைவுக்கு கொண்டுவந்து அதன் தற்கால நிலைமையையும், ஆவலையும்,

நோக்கங்களையும் பற்றி விரிவாய் பேசினேன். பணத்தையனுப்பியும், அதற்காக ஜெபித்தும் நமது சங்கத்தை முன்னேறச் செய்யும் பொறுப்பு இந்தியக் கிறிஸ்தவர்களாகிய நம்முடையது என்றேன். கூட்டத்தின் முடிவில் ஒவ்வொரு பிள்ளையினிடத்திலும் ஒவ்வொரு சீட்டைக் கொடுத்துவரும் வாரங்களிலே சுயதேச மிஷனரி சங்கத்துக்காக எவ்வளவு பண உதவி செய்ய முடியுமோ அதை எழுதுங்கள். கட்டாயம் நீங்கள் போடவேண்டுமென்று சொல்லவில்லை. உங்கள் இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்யுங்கள் என்று சொன்னேன். மொத்தம் பிள்ளைகள் 55. இவ்வைம்பத்தைந்து பேரும் கோவிலிலிருந்தவண்ணமே அச்சீட்டுகளில் எழுதித்தந்தனர். இதில் பாதி பேருக்குமேல் தங்களுக்கு நிற்கும் கைச்செலவு பணத்தில் மூன்றில் இரண்டு பங்குத் தருவதாயும் மற்றவர்கள் முழுவதையும் கொடுத்துவிடுவதாயும் வாக்களித்தனர். நான் கோவிலைவிட்டு வெளியே வந்து அச்சீட்டுகளையெல்லாம் பார்த்தபோது நன்றியறிதல் நிறைந்த ஆனந்தக்கண்ணீர் சொரிந்தபடியே நின்று இந்தக் கிறிஸ்தவப்பிள்ளைகள் இவ்வளவு சுயவெறுப்புள்ள உதாரகுணமுள்ளவர்களாயிருக்கிறார்களே என்று கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். இப்பிள்ளைகளில் ஒருவன் பொக்கிஷதாரியாக்கப்பட்டான். எவ்விதத் தவணையுமின்றி யாவரும் வாக்களித்தபடி கொடுத்தனர். இப்பிள்ளைகள் கோவிலில் பிரசங்கத்தைக்கேட்டு உற்சாகமும் வைராக்கியமும் நிறைந்தவர்களாய் வாக்களித்துவிட்டபோதிலும் கொடுக்கும்போது ஒருவேளை மனத்தாங்கலடைவார்கள் என்று நினைத்தேன் ஆனால் அவர்கள் சந்தோஷத்தோடு கொடுத்தபோது அவர்கள் உண்மையையும், தயாளசிந்தையையும் அன்பையும் கண்டு நான் நினைத்தது தப்பு என்று உணர்ந்தேன். எங்கள் ஹாஸ்டலிலிருந்து சந்தாவாக ரூபாய் பதின்மூன்று மணியார்டராக அனுப்பியிருக்கிறேன். இதைக் கோவில் திருப்பணி முதலியவற்றிற்கு உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்பது எங்கள் விருப்பம் நாங்கள் இனி ஒழுங்காய் இச்சங்கத்துக்காக ஜெபம் செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்காகவே வாரத்தில் இரண்டு நாள் ஏற்படுத்தியிருக்கிறோம். நாங்கள் ஏழைகள். அதிலும் மாணாக்கர் ஆகவே அதிகம் எங்களால் கொடுக்க இயலவில்லை. ஆனாலும் அடிக்கடி சந்தா வசூல்செய்து எவ்வளவு கொஞ்சம் சேர்ந்தாலும் அனுப்புவோம். 'எங்கள்' சங்கம் எல்லா வழியிலும் தழைத்தோங்க வேண்டுமென்றும் கடவுள் அதை ஆசீர்வதித்தருள வேண்டுமென்றும் ஜெபிப்போம். கர்த்தருக்காக ஊழியம் செய்யும் உங்களோடு அவர்கள் வேலை செய்யத்தக்க வயதானவர்களல்லாவிட்டாலும் அவர்கள் இருதயங்கள் உங்களோடிருக்கிறதென்றும் விடாமல் ஜெபிக்கும் ஜெபம் உங்களை வழி நடத்தும் என்றும் இப்பிள்ளைகள் அறிவிக்க விரும்புகிறார்கள்

இத்தாழ்மையான காணிக்கையை அங்கீகரித்து இந்த ஹாஸ்டலில் வசிக்கும் பிள்ளைகள் ஏற்றகாலத்திலே பரம எஜமானனுக்கு ஊழியம் செய்ய தங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று ஆண்டவரை நோக்கி ஜெபியுங்கள்.

The Sub Warden.

Printed and Published by Mr. K. T. Paul at the T. A. C. Press, Salem.

AUG 1916

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

The Tamil Organ of the National Missionary Society of India

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

Vol. VIII. ஆகஸ்ட் 1916 No. 8

## முக்கிய அறிவிப்பு.

நமது சங்கத்தின் தற்கால பண நிர்வாக நிலைமையைப்பற்றி நம் நேயர்கள் அறியவேண்டியது மிகவும் அவசியம். ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் முடிவு வரையில் சில்லரைகள் போக 4877 ரூபாய் வசூல் செய்திருக்கிறோம். சராசரி மாதம் 816 ரூபாயிருக்கும். இம்மாதங்களில் நமக்கான செலவோவென்றால் 7998 ரூபாய் அதாவது மாதம் ஒன்றுக்கு 1333 ரூபாய் வீதம் செலவாயிருக்கிறது. கூடியமட்டும் நமது சங்கம் வேலை செய்யும் எல்லாவிடங்களிலும் எவ்வளவோ சுருக்கிச் செலவு செய்து வருகிறார்கள். இன்னும் செலவை மட்டுப்படுத்துவதென்றால் இயலாத காரியமே. இது அதிக அதிருப்தியைத்தருகின்றது. இவ்வருஷத்தில் ஏழுமாதங்கள் கழிந்தன. இன்னும் மிகுதியாயிருக்கும் ஐந்துமாதங்களில் சங்கத்தின் அபிவிருத்தியை நாடும் நண்பர்கள் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் அதிக ஊக்கமாயுழைத்து இவ்வருஷ முடிவிற்குள் 22000 ரூபாய் அனுப்பாவிட்டால் நாம் இவ்வருஷத்தை பணக்குறைவின் மிகுதியால்வரும் பெருங்கஷ்டத்தோடு முடிக்கவேண்டிவரும். இத்துன்பம் நீங்கவும் நமது சங்கம் தன் வேலையை இடையூறின்றிச்செய்து முன்னேறவும் வேண்டுமானால் நமது சங்கத்தைச்சேர்ந்த எல்லா மாகாணக் கமிட்டிகளும், இதன் பல கிளைச்சங்கங்களும், நமது நேயர் பலரும் இவ்விசேஷக்குறைவை எங்கும் அறிவித்து ஆண்டவரிடம் சொல்லி மன்றாடி தங்களாலியன்றமட்டும் உழைப்பார்களானால் இக்கஷ்டம் சுலபமாய் நீங்க ஏதுவுண்டு.

நமது சங்கத்துக்குதவி செய்யப் பல வழிகள் :—

(1) இன்று முதல் நமது சங்கத்தின் வேலையை உங்கள் ஜெபத்தில் நினைவு கூருங்கள். சங்க ஆபீசுக்கு எழுதி எவைகட்காக ஜெபித்து வரவேண்டுமோ, அவைகளைக் குறித்துக்காட்டும் அச்சிட்ட பிரதிகளை வரவழைத்து பலரை ஒருங்கு சேர்த்து சிறு சிறு கூட்டமாக ஜெபம் செய்யும்படியான ஏற்பாடு செய்யுங்கள்.

(2) நீங்கள் வசிக்கும் நகரத்திலே அல்லது கிராமத்திலே இன்னும் மற்றச் சுற்றுப்புறங்களிலே நமது சங்கத்தை விருத்தி செய்யக்கூடும் பலரிருந்தாலும் ஏதோ காரணத்தால் கவலைத்தாழ்ச்சியாயிருத்தல்கூடும். அநேகருக்கு நமது சங்கத்தைப்பற்றியே சரியாய்த் தெரியாமலிருக்கக்கூடும். மற்றுமநேகர் நமது சங்கத்தின் பெயரையே கேட்டிராதவர்களாயிருக்கலாம். அப்பேர்ப்பட்டவர்களின் வீட்டுக்கு ஞாயிற்றுக் கிழமைகளிலோ அல்லது மற்ற தினங்களில் ஒழிந்த சமயங்களிலோ சென்று நமது சங்கத்தைப்பற்றிப் பேசி அவர்கள் உதவியையும் ஜெபத்தையும் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.

(3) நீங்கள் வசிக்கும் நகரத்தில் அல்லது சுற்றுப்புறத்தில் சங்கத்துக்குப் பணவுதவி செய்ய விரும்புகிறவர்கள் அநேகரிருக்கலாம். யாரும்

1-8-16

அவர்களையணுகி கேட்காததினிமித்தம் அவர்கள் சும்மாயிருக்கக்கூடும். அப்பேர்ப்பட்டவர்களிடம் நீங்கள் சென்று சுவிசேஷத்தை நமது தேசத்தவர்க்குப் பிரசங்கிக்கும் சந்தோஷத்திலும் பொறுப்பிலும் அவர்கள் பங்கு பெறும்படித் தூண்டிவிடுங்கள். சங்க ஆபீசுக்கு பண உதவி செய்பவர்கள் எழுதித் தரவேண்டிய வாக்குத்தத்தக் கார்டுகளுக்காக எழுதுங்கள்.

(4) சிலர் நமது சங்கத்தின் நோக்கத்தைப் பல தேச ஜனங்களுக்குமறிவிக்கத்தகுந்த நிலைமையிலிருக்கக்கூடும் இதை வாசிக்கும் உங்களில் யாருக்காவது அப்படிப்போக இஷ்டமிருக்குமானால் எங்களுக்குத் தெரிவியுங்கள். நீங்கள் எங்கே அதிகப் பிரயோஜனமுள்ளவர்களாயிருப்பீர்களென்று எங்களுக்குப் புலப்படுகிறதோ அங்கேயனுப்பவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய எங்களாலானதைச் செய்வோம்.

கே. டி. பால்.
பி. ஓ. பிலிப்.
பொதுக் காரியதரிசிகள்.

## கார்ஜாத்கார்மலா.

இதற்குமுன் கார்மலாவில் எவ்விதமாய் திரு ஊழியம் நடந்து வருகிறதென்றும் அங்கே ஊழியர்கள் இன்னின்னாரென்றும் தெரிவித்தேன். எங்கள் போதகர்களும் வேதாகமஸ்திரீயும் சுற்றிலுமுள்ள கிராமங்களை விஜயம் செய்வதைப் பற்றியும் எவ்வளவு ஆவலோடு ஜனங்கள் சுவிசேஷத்தைக்கேட்க விரும்புகிறார்கள் என்பதைப் பற்றியும் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். இவ்வருஷம் தொடங்கி இதுவரையில் கடவுளுடைய அநுக்கிரகத்தால் ஒன்பது பேருக்கு ஞானஸ்நானங்கொடுத்தேன் என்றுரைக்க மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஏழுபேர் வேதாகம மாணவர்களாக சத்திய வேதத்தைக் கற்று வருகின்றனர். மற்றுமிருவர் தம்தம் மனைவியரோடும் வேதாகமத்தில் பற்றுதல் கொண்டுளர். இவ்விருவருள் ஒருவன் வைசியன், மற்றொருவன் பிராமணன். இவர்களிருவரும் பம்பாய் கவர்ன்மெண்ட் கல்வி இலாகாவில் உபாத்திமைத்தொழிலிலமர்ந்திருக்கின்றனர். கார்டா என்னும் நகரத்திலிருக்கும் கவர்ன்மெண்ட் மராத்திய பாடசாலை ஒருவர் பொறுப்பிலும் ஒரு கிராமப் பாடசாலை மற்றொருவர் பொறுப்பிலுமிருக்கின்றன. இவர்களிருவருடைய சரித்திரங்களைக் கேட்கும்போது சில சம்பவங்கள் ஒன்றுக்கொன்று வியப்பான விதமாய் ஒத்ததாயிருக்கிறது. அவர்களுடைய மனைவிமார் பம்பாயிலும் அமத்நகரிலுமுள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளில் படித்தவர்கள். இந்தஸ்திரீகளின் மூலமாக அவர்களின் புருஷர்கள் வேதாகமத்தில் வாஞ்சை கொண்டனர். இந்த இரண்டு குடும்பங்களையும் அடிக்கடி போய் விஜயம் செய்து வரவேண்டுமென்பதே என் முழு அவா. ஆனால் கார்மலாவிலிருந்து கார்டாவுக்கு 25-மைல், முரட்டுப்பாதை, ஆகவே அவ்விடம் சென்று வருவதென்றால் பணச்செலவு அதிகம் பிடிக்கும். எனக்



குப் பிரயாணத்திற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் பணத்துக்கு மேல் செலவிடத்துணியவில்லை. அதற்கு வேண்டிய பணத்துக்காக ஆண்டவரை நோக்கி ஜெபித்து வருகிறேன். மற்றவனோவென்றால் கர்ஜாத் தாலூக்காவிலே ஸாப்பட்கேயான் என்னும் கிராமத்தில் வசிக்கிறான். அவனை அடிக்கடி போய்ப் பார்க்க விரும்புகிறேன்.

பம்பாயிலிருக்கும் மிஸ் மில்லார்ட் அம்மாள் எங்கள்வசமொப்புவித்த இரண்டு குருடர்களைப்பற்றி ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். சில சமயங்களில் குருடர், நொண்டிகள் என்ன தேவ ஊழியத்தைச் செய்யவல்லார் என்று நாம் சிந்திக்கிறதுண்டு. எல்லாம் வல்ல பராபரன் நாம் அறிந்துகொள்ளக்கூடாத விதமாய் அவர்களையும் ஆத்தும ஆதாயத்துக்கென்று உபயோகிக்கக்கூடியவராயிருக்கிறார். குருடனான இராமன் என்னும் பிரசங்கி கார்மலா நகரத்தில் ஜனங்களுக்குப் பிரியமானவன். அநேகர் அவனண்டைவந்து இயேசு இரட்சகரைப்பற்றி யறிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஜனங்கள் அவனைச் சில வேளைகளில் இரவு 11-மணி வரையில் வைத்துக்கொள்வார்கள். மற்றும் சில சமயங்களில் காலை இரண்டு மணி வரையில் அவனோடு சம்பாஷித்துக்கொண்டிருப்பார்கள். நித்திய ஜீவனைப்பற்றிப் பேசப்போவதுகொண்ட அவன் சலிப்படையான். அவன் மேளங் கொட்டுவான், பாடுவான். இவ்வித்தைகள் இவனுக்குத் தினசரிக் கூட்டங்களிலும், சந்தைப்பிரசங்கங்களிலும், கிராம வேலையிலும் பெருதவியாயிருக்கின்றன. அருள்நாதர் அவன் வேலையின் பலனாக ஒரு முடவனைத் தந்தார். 16-ந்தேதி அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தேன். ஜேப்வாண்ட் என்னும் முடவன் என்னென்ன கர்த்தருடைய மகிமைக்கென்று செய்வானோ அதை யாரறிவார். ஒன்று அல்லது இரண்டு ஆத்துமாக்களை இரட்சிக்க நிஷ்கபடமான இம்முடவனையும் ஈசன் உபயோகித்தாரென்று நான் உங்களுக்கறிவிக்கக் கிருபை புரிந்தருளல் வேண்டுமென்று விசுவாசத்தோடும் கருணாநிதியை நோக்கி ஜெபித்து வருகிறேன். ஜேப்வாண்ட் நல்ல பக்தன். வேதாகமத்தைத்தானே படிக்க வாஞ்சையுள்ளவன். தன் சம்ரக்ஷணையினிமித்தம் மிஷனுடைய உதவியைக் கொள்ள சற்றும் மனமில்லாதவனாயிருந்தான். தருமமாகவரும் எந்தப்பணத்தையும் அங்கீகரித்துப் பிழைக்கவும் அவனுக்கு இஷ்டமில்லை. உதவியற்ற முடவனாயிருந்தும் ஜெகதீசன் "என் கண்களையும் கைகளையும் அவருடைய நாம மகிமைக்கு உபயோகிக்கப்படத் தந்திருக்கிறார்" என்று சொல்லுகிறான். அவன் வீடுதோறும் நகர்ந்து சென்று அம்பட்டவேலை செய்து பிழைக்கிறான். ஒழிந்த நேரங்களில் தையல் வேலை செய்து பணம் சம்பாதிக்கிறான். இவ்வளவோடுங்கூட அவன் நிமித்தமும் மற்றெல்லாரின் நிமித்தமும் இன்னுயிரைப்பலிகொடுத்த பரம எஜமானுடைய ஜீவியத்தைப்பற்றி இக்

குமாரும் பேசுகிறான். இரண்டு மாதங்கட்கு முன் அவனுடைய சகோதரிக்கு ஞானஸ்நானங் கொடுத்தேன். அன்று முதல் என்னிடமாவது மற்றப்போதகர்களிடமாவது அவள் எவ்வித உதவிக்கும் வரவேயில்லை. (கார்மலாவில் என்னிடம் ஞானஸ்நானம் பெற்றவர்களெல்லாம் அப்படித்தான்) அவளுக்கு அவ்விடத்திலுள்ள பெரும் வியாபாரசாலைகளில் சாதாரணமாய் வேலை கிடைக்கும். நன்றாயுழைக்கிறாள். வேலை கிடைக்காத நாட்களில் கல் அல்லது மண் தூக்கும் கூலிவேலையிலமருகிறாள். இந்தக் கிறிஸ்தவக் குடும்பங்கள் தழைத்தோங்கி நற்சாட்சி பகரக்கூடியதாயிருக்குமென்ற நம்பிக்கை எனக்குண்டு. மிஷன் உதவியை நாடாது இவர்கள் உழைத்துண்பது எவ்வளவு திருப்தியைத் தருகின்றது! தங்களுக்குக் கிடைக்கும் கொஞ்சத்திலும் அவர்களை இரட்சித்த இரட்சகருக்கு மனமுவப்போடு செலுத்தும் காணிக்கை எவ்வளவு ஆனந்தத்தைப் பயக்குகின்றது! அது மாத்திரமல்ல. இலவசமாய்ப்பெற்ற பரம இராஜ்யத்தைக் குறித்து சாட்சி பகர்ந்துகொண்டே வருகின்றனர்.

கார்மலா என்பது பெரியதோர் நகரம். வேலைக்காக கம்மாளர், சித்திரம் வரைவோர் முதலிய பலவகை கைத்தொழிலாளர் அங்கு வருகின்றனர். போன மே மாதத்தில் கிறிஸ்தவர்கள் அதிகமிருந்தனர். அம்மாதத்தில் ஓய்வுநாள் ஆராதனைகளுக்கு ஆடவர், பெண்டிர் சிறுவர் சேர்த்து சராசரி 61-பேர் வந்தார்கள் மழைக்காலம் தொடங்கவே வியாபார சாலைகளில் வேலையின்மையினால் ஜனங்கள் குறைந்து பிழைப்பின் நிமித்தம் வெளி நாடுகட்கேகினர்.

கார்மலா மிஷனைச்சேர்ந்த கிறிஸ்தவ குடும்பங்களால் ஒரு பள்ளிக்கூடம் துவக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டு வருகிறது. இப்பாடசாலை ஆதரிப்புக்கென்று இவர்கள் பணவுதவி புரிகின்றனர். இதில் குறைவு நேர்ந்தபோது ஆண்களும், பெண்களும் வயல்களில் வேலை செய்து பள்ளிக்கூடத்துக்கென்று 5-ரூபாய் பொறுமான தானியத்தைச் சம்பாதித்தார்கள். இது கருணாநிதியாகிய எம்பெருமானுக்கு சுயேச்சையாய்ச் செய்யும் திருப்பணியேயன்றோ? இப்போது அப்பள்ளிக்கூடத்தில் 25-பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். பலகைகள், புத்தகங்கள் வாங்கி வராத பிள்ளைகளை நாங்கள் சேர்க்கிறதில்லையாதலால் அநேகர் சேர இயலவில்லை. அப்போப்பட்ட சட்டம் ஏற்படுத்தியிருக்கும் நோக்கம் அத்தகைய சிறுவர் தரித்திரராய்ப்போகும் நிலைமையைத் தவிர்த்துக்காக்கவே. பாபு சகாராம் கோட்கி என்பவர் கவர்ன்மெண்ட் யோக்கியதா பத்திரம் பெற்ற அப்பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர்.

ஐ. பி. பாவா.

Printed and Published by Mr. K. T. Paul at the T. A. C. Press, Salem.

944

13 DEC 1916

இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

The Tamil Organ of the National Missionary Society of India

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று.

Vol. VIII. செப்டம்பர்-அக்டோபர் 1916. No. 9 & 10

## சுவிசேஷகன் செலுத்தும் உத்தம பலி.

"என் மாம்சத்தில் இன்னங்குறையாயிருக்கிற கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களை நிறைவேற்றுகிறேன்." கொலோ. 1, 24.

இயேசுகிறிஸ்துவினுடைய சரீரத்தின் பலியினால் ஒரேவிசை அறுதியாய்ப் பரிசுத்தமாக்கப்பட்டோம். அவர் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே அனவரத காலத்துக்குந் தேறினவர்களாக்கினார். இப்படியிருக்க, அப்போஸ்தலர் இன்னங்குறைவாயிருக்க கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களை நிறைவேற்றுகிறேன் என்பானேன். நான் எனும் அகங்கார மேலீட்டினாலோ? நான் பாவிகளில் பிரதானமானவனென்று அறிக்கையிட்டவர்க்கு இவ்வகந்தையிருக்குமோ? அன்றி, விழுதலுக்கு முன்னான மனமேட்டிமை இதன் காரணமோ? பவுல் தன்னை எல்லாரிலுஞ்சிறியனிலுஞ் சிறியனென ஒப்புக்கொண்டாரே. ஆக, மனமேட்டிமையோ, அகந்தையோ இதற்குக் காரணமன்று. கிறிஸ்துவின் சிந்தையையணிந்த கிறிஸ்துவின் உடன் ஊழியனுடைய ஆத்தும வாஞ்சையே இதன் காரணம். கிறிஸ்துவுக்கும் அவருடைய ஊழியக்காரனுக்குமுள்ள சம்பந்தம் இதுவே.

கிறிஸ்துவைக்குறித்து அவர்களுடைய சகல உபத்திரவங்களிலும் அவர் உபத்திரவப்பட்டார் என்று எழுதியிருக்கிறது. அவ்வாறே அவர் ஊழியனும்: எவனடைந்த பலவீனம் எனக்கும் பலவீனமுண்டாக்காதிருக்கும்; எவன் அடைகிற இடறல் என்னை எரியப்பண்ணாதிருக்கும் என்பான். ஆத்துமாக்களுக்காக கிறிஸ்து அடைந்த மனவேதனை அவர் அடியாரிலும் விளங்கவேண்டியது. நொறுங்குண்ட இருதயங்களுக்குச் சுவிசேஷங்கூற விரும்புபவன் ஆத்துமாக்களுக்காக நொய்ந்த இருதயமுடையவனாயிருத்தல் அவசியம். இதயம் பரிதபிக்காத ஊழியன் அப்பிரயோசனமான ஊழியனே. ஆத்துமாக்களுக்காகக் கண்ணீர்விடாத மிஷனரி அவற்றை ஆதாயப்படுத்தக்கூடியவனுமல்ல. இவ்வாறு மற்றவர்களுக்காகப்

பரிதபித்து, உத்தம அனுதாபத்தோடு உழைப்பவனே கிறிஸ்துவின் பாடுகளை நிறைவேற்றும் தெய்வ ஊழியன்.

கிறிஸ்து மரண அவஸ்தையாகி, அதிக உக்கிரத்துடனே ஜெபம் பண்ணினார். அவரது அடியான் கிறிஸ்து உங்களில் உருவேற்படு மட்டும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன் என்கிறான். அப்போஸ்தலன் தன் சபைகளுக்காக ஓயாமல் மன்றாடினார். கண்ணீரோடு ஜெபித்தார். கணக்கற்ற ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணினார். சிவப்பு இந்தியர் மத்தியில் உழைத்த டேவிட் பிரெயினார்ட் போதகர் எழுதியதாவது: ஆத்துமாக்கள் ஆதாயப்படும்படி ஆண்டவரோடு போராடினேன். கணக்கற்றபேர் ரக்ஷிக்கப்பட வேண்டினேன். பொழுது விடிந்தது முதல் பொழுதுபோம் வரையும் உக்கிரமாய்ப் பிரார்த்தித்தேன் என்பதே. இவ்வாறு இரத்தவேர்வை வேர்த்து ஜெபிப்பவனே கிறிஸ்துவின் பாடுகளை நிறைவேற்றுகிறவன், அவருடைய உடன் ஊழியன்.

"ரபீ, இப்போதுதான் யூதர் உம்மைக் கல்லெறியப் பார்த்தார்களே, மறுபடியும் அங்கே போகிறீரே?" பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்தானென்று நினைத்து, பட்டணத்துக்கு வெளியே இழுத்தார்கள். சரீரத்திலும் அவரது பாடுகளை அநுபவிக்கிறவன் பாக்கியவான். பாக்ஸர் கலகத்தில் சீனாவில் கொலையுண்ட பக்தரின் ரத்தம் வீணாயிற்றோ. கிழக்கிளியில் பட்டயத்தால் மடிந்த பரிசுத்தவான்களின் இரத்தம் அப்பிரயோஜனமாயிற்றோ. இவ்விதம் கிறிஸ்துவின் பாடுகளை நிறைவேற்றும் கிறிஸ்தவர்களே மெய்ப்பாக்கியர்.

ஜே. எச். ஜோவட்.

---

## ஒக்காரா

### வைத்தியசாலை

பஞ்சாப் மாகாணத்து மாண்ட்காமரி ஜில்லாவில் இருக்கும் ஒக்காராவில உள்ள நமது வைத்தியசாலை சம்பந்தமாக செய்யப்படும் வேலையைப்பற்றி நல்ல செய்திகள் நமக்கு வந்துகொண்டிருக்கின்றன. அங்குள்ள சிவில் சர்ஜன் சென்ற ஜூலை-மீ முதல் தேதியில் இந்த வைத்தியசாலையை சந்தித்து விசாரணை செய்ததில் அது எல்லாவிஷயத்திலும் விருத்தியடைந்து வருகிறதென்றும், இடம் சுத்தமாகவும், வேலை அதிகமாக நடக்கிறதென்றும், அவ்வேலைக்கு உத்திரவாதியாயிருக்கும் கனம் ஹரிராம் என்பவர் தன் வேலையில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார் என்றும் எழுதிப்போனார். உத்தியோகஸ்தரைவிட இதர ஜனங்கள் அதிகமாய் அவ்விடத்திற்கு



வருகிறபடியால், ஒரு முக்கியஸ்தரான நகரவாசி கனம் ஹரிராம் என்பவரின் வேலையை மிகவும் புகழ்ந்து பேசுகிறார். சிகிச்சைபெற வந்தவர்களின் லக்கத்தை நாம் கவனிக்கும்போது இந்த செய்தி ஊர்ஜிதமாகிறது. 1916-௵ ஜூன்-மீ 30-உயோடு முடிவாகிற வருஷத்தின் முதல் பாதியில் இந்த தர்ம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்கள் 6709. இது 1915-௵த்தில் இதே காலத்தில் சிகிச்சை செய்யப்பட்டவர்களின் தொகையைக் காட்டிலும் 2170 அதிகம். இந்த வைத்தியசாலையில் ஒவ்வொரு தினத்திலும் சுமார் 37 வியாதியஸ்தர் சிகிச்சை பெறுகிறார்கள். 1914-௵த்தில் சர்க்கார் இலாகாவில் இல்லாதவர்களிடமிருந்தும், தருமசகாயமாகவும் வந்ததொகை 66 ரூபாய்க்கு கொஞ்சம் அதிகம். ஆனால் 1915-ம் ௵த்தில் இதே வழியாக வந்த தொகையோ 345 ரூபாயும் சில்லறையும். ஒக்காராவில் மாலரிட்டின் துன்பங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு இரவும் பகலும் நடத்தப்பட்டுவரும் இவ்வேலை சுற்றியிருக்கும் ஜனங்களின்மேல் செல்வாக்கையுண்டுபண்ணி இயேசுகிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ள அவர்கள் கவனித்துக்கேட்கும் பிரசங்கங்களைவிட அதிகமாய் அவர்களுக்கு உதவி செய்கிறது. இயேசுகிறிஸ்துவைப்பற்றி பிரசங்கிக்க அன்பின் பாஷையேயல்லாமல் வேறெந்தபாஷை மேலானது?

சென்ற வருஷத்தில் நாங்கள் 10,300 வியாதியஸ்தர்களை சிகிச்சை செய்தோம். ஆனால் இந்த வருஷத்தில் சுமார் 15,000 பேர் இருப்பார்கள் என்று நம்புகிறோம். மருந்துகளின் கிரயம் விபரீதமாக அதிகமாகிவிட்டது. சோடா சாலிசிலாஸ் என்ற ஒரு மருந்தை பவுன் ஒன்றுக்கு 1½ ரூபாய்க்கு நாங்கள் வாங்குவது வழக்கம். ஆனால் இப்பொழுது 30 ரூ. அல்லது கொஞ்சம் அதிகம் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. கொய்னா மருந்து பவுன் ஒன்றுக்கு 40 ரூபாயாக இருக்கிறது. இப்பொழுதும் மலே ஜுரம் சுலபமாகிவிட்டது. அதிகமான கொய்னா மருந்து வேண்டும். வைத்தியத்தின் மூலமாய் கிறிஸ்தவ பணிவிடை செய்யும் சங்கத்தின் மதிப்பை அறிந்தும் அதனால் நன்மையடைந்துமான இந்திய நேசரில் யாராவது நம்முடைய வைத்தியசாலைக்காக, குறைந்தது ஒரு பவுன் கொய்னா சல்பஸ் என்ற மருந்தும், ஒரு பவுன் சோடா சாலிசிலாஸ் என்ற மருந்தும் பக்ஷமாய் வாங்கியனுப்புவீர்களா?

---

[பின்பக்கத்திலிருக்கும் படம் மண்ட்காமரி ஜில்லாவில் நடக்கும் நமது ஊழியத்தை விளக்கும். அடுத்த மாதப் பத்திரிகையில் நக்கர் படம் வெளியாகும்.—பத்திராதிபர்.]




## மாண்காமரி.

### ஸ்வேச்சையான ஊழியம்.

ஸ்வேச்சையாய் கிறிஸ்தவ ஊழியம்செய்யும் ஆவியே கிறிஸ்து மார்க்கத்தின் முக்கிய ஜீவன். உயிருள்ள ஒரு மரம் கனி கொடுப்பது எப்படி இயற்கையோ அப்படியே ஒரு கிறிஸ்தவனும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது இயல்பு. கிறிஸ்துவின் ராஜ்யம் பரம்பவேணும் என்று விரும்புகிற கிறிஸ்தவன் தன்னில் ஜீவன் உண்டென்பதை வெளிப்படுத்துகிறான். கிறிஸ்துவின் ராஜ்யம் பரம்பவேணும் என்கிற விருப்பமே ஒரு கிறிஸ்தவனில் ஜீவன் உண்டென்பதைக்காட்டுகிறது.

சங். ஜேம்ஸ் வில்லியம்ஸ் போதகர் ஸ்வேச்சையான ஊழியத்தின் அவசியத்தையும் முக்யத்தையும் குறித்து மண்காமரி ஜில்லாவின் கிராமங்களிலுள்ள சபையாருக்கு அநேகவிதமாக விவரித்துக் காண்பித்து சொல்லியிருக்கிறார். கிராம கிறிஸ்தவர்கள் ஒருக்காலும் இதற்கு ஆக்ஷேபனை செய்யவில்லை. மேலும் அதிக கவனத்

தோடு இவைகளைக் கேட்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களில் அநேகர் தங்களுக்குள் ஸ்வேச்சையான ஊழியக்காரர் அவசியம் என்பதைக் குறித்து பூரணமாய் உணருகிறதில்லை.

இவ்வண்ணமான பிரதிகூலங்கள் இருந்தாலும் கிராம கிறிஸ்தவர்களில் சிறுபிள்ளையின் விசுவாசத்தையொத்த தொகுதியை, ஸ்வேச்சையாய் கிறிஸ்துவைப்பற்றிய பிரசங்க ஊழியஞ் செய்கிறதை நாம் காண்கிறோம்.

கிராமத்தலைவனான ஒரு மகம்மதியனிடம், அவனுடைய வயல்களை சாகுபடி செய்யும்படி வேலை பெற்ற விருத்தாப்பியமுள்ள கிறிஸ்தவ சமுசாரி ஒருவன் இருந்தான். இந்த வறுமையும் பலவீனமுமான மனுஷனின் மகன் இறந்துபோனபடியால், அவனில்லாமல் தான் தனியாக அதிகமாய் கஷ்டத்தோடு வேலை செய்யவேண்டியிருந்தது. ஒருநாள் சாயந்திரம் இவன் தன் தோளின்மேல் கலப்பையை வைத்துக்கொண்டு வேலையிலிருந்து திரும்பிவருகையில் தன் எஜமானாகிய மகம்மதியனைக் கண்டான். மகம்மதியன் அவனை நோக்கி, உன் முதுகின்மேல் இருக்கிறதென்ன? ஆகாரத்தைத் துணியில் சுற்றி வைத்திருக்கிறாயா என்று கேட்டான். அந்தக் கிழவன் கீழே உட்கார்ந்து மறுமொழியாக, ஆம், ஐயா, நித்திய ஜீவனை அளிக்கும்படியான ஆகாரம் இது என்றான். மகம்மதியன் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டான். துணி அவிழ்க்கப்பட்டது. இதோ குர்முகி எனனும் பஞ்சாபி பாஷையில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப்புஸ்தகம் காணப்பட்டது. விருத்தாப்பியன் ஜீவ அப்பம் என்றால் என்ன என்பதைக்குறித்து பூரணமாய் அவனுக்கு விளக்கிக்காட்டி சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். மார்க்க ஆராய்ச்சிக்காரர் அநேகரை அவன் ஆயத்தஞ்செய்து அவர்களுக்குப் பிரசங்கித்தும் போதித்தும் வருகிறான். ஆராதனைகளையும் நடத்தி இன்னும் பல விதத்தில் ஸ்வேச்சையான ஊழியம் செய்துவருகிறான். வேதத்தை வாசிக்க, ரோமை பஞ்சாபி பாஷை தெரியவேண்டும். ஆனால் ஸ்வேச்சையான ஊழியத்துக்கு இது அவ்வளவு முக்கியமல்ல. மண்கோமரியிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள் ஸ்வேச்சையான ஊழியத்தின் ஆவி அதிகப்பட ஜெபியுங்கள்.

ப்ரேம் சந்தர்.

### பஸிலாபாத்.

இவ்வூரில் நமது வேலை கொஞ்சம் அசௌகரியமாய் இருக்கிறதை நேயர்கள் அறிய விசனப்படுவார்கள். அதினிமித்தம் உங்களுடைய ஜெபம் அதிக தேவை. அவ்வூரின் தற்கால நிலை



மையைச் சொல்லுகிறேன். டிபால்பூர் பூமியின் பாகங்கள், கால்வாய்ப்பெருக்கினால் பயிரிடப்படுகின்றன என்பது நமது நேயர்களில் அநேகருக்குத் தெரிந்த விஷயமே. அதிகமாய்க் கோடைகாலங்களில், சிலமாதம் வரை மலையின் பனி உருகும்பொழுதுதான் கால்வாய்கள் பெருகுகின்றன. வருஷத்தின் மற்ற காலங்களில் கால்வாய்கள் வறண்டுபோகவே கிணற்றுநீரால் வேளாண்மை செய்யப்படுகிறது. இப்படியிருக்க யுத்தம் முடிவானபின் இக்கால்வாய்களில் எப்பொழுதும் ஜலம் ஓடிக்கொண்டிருக்க ஒழுங்கு செய்யப்படுமென ஓர் வதந்தி காட்டுகிறது. இதை எதிர்பார்த்து சமுசாரிகள் தங்கள் நிலங்களை பண்படுத்தவே நமக்கு பஸ்லாபாத்தில் ஓர் பள்ளிக்கூடம் இருக்கும்படியாக நிலம் கொடுத்தவனும் திரும்ப அந்த நிலத்தைக் கொடுக்கும்படிக் கேட்கிறான். தவிர அவனுடைய மகன் ரஷீது பள்ளிக்கூடத்தைவிட்டு நீங்கவே அவனுக்கு நமது விஷயத்தில் அதிக முயற்சியில்லை. துவக்கத்திலேயே பக்கத்து கிராமங்களில் உள்ள மகமதியர் கிறிஸ்தவர்களை தங்கள் மத்தியில் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. இப்பொழுது மாணவரை நிறுத்தி பள்ளிக்கூடத்தை மூடிப்போட வேண்டுமென்று பிரயாசப்படுகிறார்கள்.

### சமுந்திரி

ஜனத்தொகை அதிகரிக்கிறது. சில சொந்தக்காரர் குடும்பங்களும் பெருகி தங்கள் பிள்ளைகளே நிலத்தைப்பயிரிடக்கூடிய நிலைமையில் வரும்போது கூலி ஆட்களை தேவையில்லை என்று அனுப்பிவிடுகிறார்கள். நமது கிறிஸ்தவர்களில் அநேகர் கூலியாட்களானதையால், அதிகம் கஷ்டப்படுகிறார்கள். சீக்கிரத்தில் சமுந்திரியில் கூலியாட்கள் தேவையிராது என்று உத்தேசிக்கிறேன். இந்தப் பெரிய மாறுதல் இந்த கிராமத்தில் மெதுவாக நடந்தேறிவருகிறது. தங்கள் ஜீவனோபாயத்திற்கு வழிவகைகள் தேடிக்கொள்ள நமது கிறிஸ்தவர்களுக்குத் தெரியவில்லை. இடம் விட்டு இடம் ஓடி அலைகிறார்கள். இதனால் நம்மேல் விழுந்த பாரம் பெரிது. நமது சங்கம் பணம் அதிகம் செலவிட முடியாததால் இரண்டு ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம். முதலாவது அவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படவேண்டும். இரண்டாவது அவர்களில் புத்திசாலிகளான சிலரை கண்டுபிடித்துத் தலைவராக நிறுத்தி மற்றவர்களை நடத்தும்படியான உத்தரவாதத்தை உணர்த்தவேண்டும். நமது கிறிஸ்தவர்களில் அநேகரை தச்சுவேலை, கருமான்வேலை, குயவன் வேலை, செருப்பு தைத்தல், தையல்வேலை முதலியவைகளில் கிராமத்திற்குத் தகுந்தவண்ணமாக பழக்குவிப்பது நலமென்று எண்ணுகிறேன்.

ஜேம்ஸ் உல்லியம்ஸ்.

## நுக்கர்.

(1) ஊர் ஜனங்களுக்குப் பொதுவாக கடைத்தெருவில் பத்திரிகை முதலான விஷயங்கள் படிக்கிறதற்கென்று ஒரு இடத்தை ஆயத்தஞ்செய்து துடங்கியிருக்கிறோம்.

(2) நுக்கர் என்னும் இடத்திலுள்ள படித்த எல்லா மகம்திபரும் இந்துக்களுக்கு சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தைப் படிக்கவேண்டுமென்று, சர்சவா என்கிற இடத்திலுள்ள சபையார், அவர்களுக்கு ஒரு அச்சிட்ட மனுவை அனுப்பியிருக்கிறார்கள். படித்த ஒவ்வொரு இந்தியன் கையிலும், மகமதியன் கையிலும், பரி. லூக்கா எழுதின சுவிசேஷம் கிடைக்கும்படியான வழிவகைகளை ஏற்பாடுசெய்கிறோம்.

(3) ஸ்வேச்சையாய், சம்பளம் வாங்காமல், ஊழியஞ்செய்கிறவர்கள் நடத்திவரும் பள்ளிக்கூடத்தின் வேலை வெகுநன்றாய் நடந்தேறினது. இப்படிப்பட்ட ஐந்து ஊழியக்காரர் வந்து நடத்தினார்கள். கங்கோவிலிருந்து இரண்டுபேர், சில்கானாவிலிருந்து ஒருவர், சர்சாவாவிலிருந்து இரண்டுபேர். அவசியமான மார்க்க உபதேசங்கள் அவர்களுக்குப் போதிக்கப்பட்டன. ரோமன், உர்டு பாஷைகளின் அவர்கள் பக்குவப்படுத்தப்பட்டார்கள். தனி ஜெபத்தின் அவசியமும், மதிப்பும், கிறிஸ்தவ சகோதரத்துவமும் அவர்கள் மனதில் பதிக்கப்பட்டன. சுவிசேஷ படைமுயற்சிக்கு ஆதாரமாக யோவேல், அப்போஸ்தலரின் நடபடி ஆகமம் என்ற இரண்டு புஸ்தகங்களை நாங்கள் படித்தோம். பவுல், பேதுரு, பிலிப்பு இவர்களின் பிரயாணங்கள் கற்றுக்கொடுத்தோம்.

(4) சில்கானா ஜில்லாவில் நாங்கள் சுற்றிவந்து, ப்ராமி, கால்சி, சலேரி, கதேரா, புத்தாகேசா என்னும் கிராமங்களைச் சந்தித்தோம். நாங்கள் கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் மாத்திரம் வேலை செய்யாமல் இந்துக்களுக்கும் மகம்மதியருக்கும் விசேஷித்தக் கூட்டங்களையும் நடத்தினோம். அக்கூட்டங்கள் மிகவும் பலனுள்ளதாயுமிருந்தது. ஆண்டவரின் ஆவியானவர் எங்களை நடத்தி எங்களுக்குச் சகாயஞ்செய்தார்.

சர்சாவாவுக்கு நாங்கள் திரும்பிவரும்போது கொடுத்த தொகையைத்தவிர, இந்த சர்க்யூட்டில் செலவழிந்த பணமெல்லாம், ஊழியரின் சொந்த பணம்தான்.

J. W. பீபில்ஸ்.

Printed & Published by Mr. K. T. Paul, at the T. A. C. Press, Salem.


# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

The Tamil Organ of the National Missionary Society of India

மாதந்தோறும் வெளியாகும். வருஷ சந்தா அணா ஒன்று

Vol. VIII. நவம்பர்–டிசம்பர் 1916 No. 11 & 12


OFFICE OF THE REGISTRAR 25 JAN 1917

## கிராம கிறிஸ்தவ பக்தர்

### பாபாகரம்.

மண்கோமரியில் உழைத்துவரும் நமது மிஷனரியாகிய கனம் ஜேம்ஸ் வில்லியம்ஸ் ஐயர், பி. ஏ., எழுதுகிறதாவது:—

சென்ற கிறிஸ்மஸ் காலத்தில் அலஹாபாத் என்னுமிடத்தில் நடந்த சர்வ இந்தியா என். எம். எஸ். கவுன்சில் கூட்டத்தில் வந்தவர்களாகிய இப்பத்திரிகையை வாசிக்கும் சிலருக்கு அக்கூட்டத்துக்கு வட இந்தியாவிலுள்ள இரண்டு என். எம். எஸ். சேகரத்திலுமிருந்து வந்திருந்த நான்குகிராம கிறிஸ்தவர்களைப்பற்றி ஞாபகமிருக்கலாம். அவர்களில் ஒருவன் விருத்தாப்பியனான பாபாகரம். அலஹாபாத்திலிருந்து அவன் திரும்பி வந்த கொஞ்ச காலத்துக்கெல்லாம், சுகவீனமடைந்து மார்ச்சுமீ-த்தில் மரித்துப்போனான். அவன் எந்த மிஷனரி சங்கத்தையாவது சேர்ந்து சம்பளம் பெற்று ஊழியஞ்செய்தவனல்ல. ஆனால் தேவனால் அழைக்கப்பட்ட உண்மையான மிஷனரியாய் இருந்தான். இவனுடைய அமைதியும் உண்மையுமான ஊழியத்தினால் நமது சேகரத்தில் மூன்று கிராமங்களில் மூன்று புதிதான சபைகள் ஸ்தாபகமாயிற்று. இவனுடைய ஜீவியமானது எப்படிப்பட்ட ஏழைகளும், படிப்பற்றவர்களுமான கிராம கிறிஸ்தவர்களாயிருந்தாலும், உண்மையாய் தங்களுக்குள்ளே மிஷனரி ஆவியினால் ஆளப்பட்டவர்களை எப்படி [illegible] உபயோகிக்கக்கூடும் என்பதை மிகச்சிறப்புடன் [illegible]டுகிறது. அவன் தாழ்ந்த ஜாதியிலிருந்து கிறிஸ்தவனானவன். அவன் கிறிஸ்தவனாகிறதற்கு முந்தியே கடவுளைப்பற்றி அறிய வாஞ்சையாயிருந்தான். ஆகவே அவனுக்கு மகம்மது மார்க்கம் ஸீக்கியமார்க்கம் இவைகளைப்பற்றி போதுமான அறிவு இருந்தது. இந்த மார்க்கங்களைப்பற்றிய இன்னை பயிற்சியே, கிறிஸ்து மார்க்கத்தைப் பூரணமாய் அறிந்து, மதிக்கு

5-1-17

உதவிசெய்தது. அவன் ஞானஸ்நானம் பெற்று கடந்த 16-வருஷமாக தன் கிறிஸ்தவ ஜீவியத்தில், மூப்பினால் அவனுடைய சரீரம் எவ்வளவுக்கெவ்வளவு பெலவீனமாகி வந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு மிஷனரி ஆவி அவனுக்குள் வளர்ந்துவந்தது. அவன் வயது சென்றவனாக இருந்தும், கடவுளின் வசனங்களைத்தானே படிக்க வேண்டுமென்று அதிக கஷ்டப்பட்டு வாசிக்கக் கற்றுக்கொண்டான். அவனுக்கு உதவிசெய்ய மனமற்றவர்களாயிருந்த கிறிஸ்தவர்களல்லாதவர்களிடத்தில் அடிக்கடி வெகு தூரமாக சென்று ஒரு பாடத்தைப் படித்துக்கொள்வான். பாபாசரம் என்பவன் நிலமுடைய ஒரு இந்துவினிடத்தில் பண்ணையாளாக வேலைசெய்து ஜீவனஞ்செய்துவந்தான். வருஷத்தில் வயல்களில் வேலையில்லாத மாதங்களில அவன் வெளிக் கிராமங்களுக்குப்போய் கிறிஸ்துவைப்பற்றிப் பேசுவான். ஆகவே, கிறிஸ்தவ கூட்டத்தாரில் அநேகர், மார்க்கவிஷயமாய் இவன் இப்படி முன்நின்று நடத்துகிறதினிமித்தம் அநேக விஷயங்களில் உதவி பெற்றார்கள். தவிர இவனை அறிந்த கிறிஸ்தவர்களல்லாதவர், இவனுக்கு அதிக மரியாதை செய்தார்கள். தன் கிராமத்திலேயே எல்லா ஜாதிகளும் இவனை மரியாதையாய் மதித்தார்கள். இவன் யோக்கியமும் கஷ்டவாளியும், தாழ்மையும் தன் மார்க்கத்தைப்பற்றி வைராக்கியமுமுள்ளவன் என்று கண்டார்கள். கிறிஸ்துமார்க்கம் அவ்விடத்துக்குப் புதிதாயிருந்தபடியால், நீ ஏன் கிறிஸ்தவனாகிவிட்டாய் என்று தன்னைக்கேட்ட ஒவ்வொருவருக்கும் தினமும் தன் விசுவாசத்தைப்பற்றி சாக்ஷிசொல்ல ஏராளமும் அருமையுமான சிலசமயங்கள் அவனுக்குக் கிடைத்தது. அப்படிப்பட்ட சமயங்களை அதிக சந்தோஷமாய் கையாடி ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை சொல்ல ஆசையாயிருந்தான். அந்த கிராமத்திலும் சுற்று கிராமங்களிலும் அநேக கிறிஸ்தவர்கள் குடியிருந்தாலும் இவனை மாத்திரம் எல்லா ஜனங்களும் "கிறிஸ்தவனாகிய ராம்" என்று அழைத்தார்கள்.

பாபாசரம் என்பவனுடைய முன்மாதிரியும் அருமையுமான கிறிஸ்தவ ஜீவியத்துக்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். கிறிஸ்து மார்க்கத்தில் ஆழமும் உண்மையுமான ஏதோ ஒரு சக்திஇருக்கிறது என்று மற்றவர்கள் அறிந்துகொள்ள அவன் அதிக உதவியாயிருந்தான். தவிர கிராம கிறிஸ்தவர்களுக்குமுன்பாக கிறிஸ்தவ ஜீவியத்தின் உன்னதமாதிரியையும், கிறிஸ்தவஊழியத்தின் மேன்மையான பங்கையும், தன் ஜீவயத்திலும் உண்மையும் உற்சாகமுமான ஊழியத்திலும் வெகு தெளிவாயும் பிரத்தியக்ஷமாகவும் காண்பித்தான்.



இந்தப்படத்தின் கீழ்வரிசையில் 4-வது இடத்தில் முன் இரண்டு பக்கங்களிலும் கூறியுள்ள பாபாசரம் என்பவனைக் காணலாம்.



1915-ம் வருஷத்தில் அலகாபாத்தில் கூடிய N. M. S. கமிட்டியினர்.

# நக்கார்

## ஆறு மாத வேலை.

**சபை.**

இத்தேசத்திலுள்ள கிறிஸ்தவர்கள், இந்தியா பிரஸ்பிடீரியன் சபை சம்பந்தமாக ஒரு சபையாக ஒழுங்கு பண்ணப்பட்டதைக் குறித்து இப்பத்திரிகையில் முன்னதாகவே வெளியிட்டிருக்கிறோம். இப்பவும் இந்த சபை என்ன செய்கிறது? ஏழையும் பெலவீனமுமுள்ளதாயிருந்தாலும், ஜீவனுள்ளதும், தன் முயற்சியால் வேறு சபைகளை ஏற்படுத்தவேணுமென்ற நோக்கமாயிருக்கிறது. கிராம சபையிலுள்ள ஆத்துமாக்களின் மேய்ச்சலைக்குறித்து விசேஷித்த வேலையிருந்தும், இதனோடு, படிப்பாளிகளான ஹிந்துக்கள், மகம்மதியருக்கென்று சர்சாவா என்றவிடத்தில் இலவசமான ரீடிங் ரூம் என்ற படிக்குமிடம் ஒன்றை ஏற்படுத்தி, அந்த இடத்தில் இங்கிலீஷிலும், உர்டு, நக்ரி பாஷைகளிலும் பிரசுரம் பண்ணப்பட்டு வருகிற தினசரி, வார, மாதப்பத்திரிகைகளையும், மார்க்க சம்பந்தமான புஸ்தகங்களையும் தன் சொந்த பணம் செலவழித்து சேகரம் செய்து வைத்து வருகிறவர்கள் இலவசமாக வாசிக்க ஒழுங்குப்படுத்தியிருக்கிறது. தவிர, நக்கரிலுள்ள படித்த ஹிந்துக்களுக்கும் மகம்மதியருக்கும், சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தைக் கருத்தாய் வாசித்து சோதித்தாராய்ந்து அதை அங்கீகரித்துக்கொள்ளவேண்டியதாக ஒரு வேண்டுகோளும் ஆயத்தஞ்செய்திருக்கிறது. சுவிசேஷ பிரபல்ய முயற்சி கூட்டத்தின் சம்பந்தமாக இந்தக் காகிதம் யாவருக்கும் அனுப்பப்படும். கல்லறைத் தோட்டத்திற்கென்று தக்க ஒரு இடத்தை விலைக்கு வாங்க பணம் சேகரித்து வருகிறது.

**ஞானஸ்நானங்கள்.**

சென்ற ஆறுமாத காலத்தில் ஞானஸ்நானம் கொடுப்பதைவிட விசேஷமாய் நமது கிறிஸ்தவர்களை படிப்பிப்பதும், பரிபாலிப்பதுமான வேலையிலேயே மிகுதியானநேரம் செலவழித்தோம். ஆகிலும் ஐந்து புருஷரும் ஒரு குழந்தையும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

யூசுப் என்ற ஒன்பது வயதுள்ள ஒரு பாலியன் ஞானஸ்நானம் பெற்று ஸஹாரான்பூர் அநாத பள்ளிக்கூடத்தில் வாசித்து வருகிறான். அவன் தாய் மாவரைத்துக்கொடுத்து ஜீவனம் செய்கிறாள். வாரத்துக்கு 2 அணா சபையிலிருந்து அவளுக்குக் கொடுக்கிறோம். அவள் சந்தோஷமாய் அந்தப்பையனை பள்ளிக்கூடத்துக்கு அனுப்-



பினாள். அவளுக்கு ஒரு சிறு பெண்ணும் உண்டு. இவர்கள் முன்பு தெருப் பெருக்குகிறவர்கள். ஜனவரி மாதத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள். நக்கரில் ஒரு போர்டிங் பள்ளிக்கூடம் மாத்திரம் இருந்தால் இன்னும் அநேக பாலியர் வருவார்கள்.

**புதிய மிஷனரி.**

கடந்த ஏப்ரல் மாதத்தில் சாட்டர்ஜி குடும்பத்தார் எங்களுக்கு உதவியாக வந்து சேர்ந்தார்கள். இவர்கள் மண்கோமரி என்னுமிடத்திலிருந்து நக்கருக்கு மாற்றப்பட்டார்கள். இவர்களால் எங்களுக்கு மிகுந்த உற்சாகமும், இங்குள்ள மிஷனரிபடைக்கு விலையுயர்ந்த துணைப்படையாயிருக்கிறது. கனம் சாட்டர்ஜி என்பவர் சர்சாவா சபையின் ஒரு மூப்பர். இவருடைய வசத்தில் அம்பாலா, காங்கோ, டிட்ரன் என்னுமிடங்கள் இருக்கின்றன.

**சம்பளமின்றி சேவிப்பவர் பள்ளிக்கூடம்.**

சர்சாவாவில் ஜூலை மாதத்தில் இந்த பள்ளிக்கூடம் கூடப்பட்டது. கிராம கிறிஸ்தவ வாலிபர் தங்களுடைய சொந்த இஷ்டமாகவே வாசிக்கவும் படிப்பிக்கவும் உதவி செய்கிறார்கள். கடமைகள், கிறிஸ்தவ சகோதர பாத்தியம், சிலாக்கியம் இவைகளைப்பற்றி தெளிவான பாடங்களை கற்றுக்கொள்ள தக்க சமயத்தை இப்பள்ளிக்கூடம் அறிவிக்கிறது.

**நக்கர் சேவா நிதி.**

கிராம கிறிஸ்தவர்கள் ஸஹாரான்பூர் கூட்டங்களுக்குப் போகிறதற்கென்றும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும், இன்னும் வேறு கூட்டங்களை நடத்தவும், சுவிசேஷ ஊழியத்துக்கு உதவியாக வாத்தியக்கருவிகளை வாங்கவும், ஊழியருக்கும் மற்றவர்களுக்கும் வைத்திய உதவி புரியவும் வேண்டி, ஒரு நிதி 1915-ம் வருஷம் ஜூன் மாதம் 15-ம் தேதி ஏற்படுத்தப்பட்டது. 1916-ம வருஷம் ஜூலை மாதம் 23-ம் தேதி வரையில் அதன் வரவு ரூ. 99-15-9; செலவு ரூ. 89-10-9.

**நமது தர்ம வைத்தியசாலை.**

சென்ற ஆறு மாதத்தில் 9000 பேருக்குக் குறையாமல் சிகிச்சை பெற்றார்கள். வைத்தியசாலையில் நடந்த வேலையைப்பற்றி அதை வந்து பார்த்தவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்.

"இது அதிக உபயோகமான வேலை செய்துவருகிறது. 1915-ம் வருஷத்தில் வந்தவர்களின் மொத்த தொகை 17,057. வருஷத்-

தில் 283 நாட்கள் திறந்துவைக்கப்பட்டதற்கு சராசரி தினத்துக்கு 60 பேருக்குமேல் ஆகிறது. இப்பொழுது நல்ல மருந்து இருப்பில் இருக்கிறது. டிஸ்டிரிக்ட் போர்ட் மருந்துகளுக்கென்று வருஷம் 150 ரூபாயும், வேறு செலவுக்கென்று மாதம் 25 ரூபாயும் கொடுக்கிறார்கள். இந்த செலவில் ஒரு டிரெஸரும், ஒரு கம்பவுண்டரும் சம்பளம் பெறுகிறார்கள். பின் சொல்லப்பட்டது ஒரு பெண் பிள்ளை. சப் அஸிஸ்டண்ட் சர்ஜன் பெண் பிள்ளையாதலால் அநேக பெண்கள் வருகிறார்கள். 1915-ம் வருஷத்தில் 8765 வியாதியஸ்தரில் 4472 பேருக்குக் குறையாமல் பெண்களும் குழந்தைகளும் உண்டு. 1916-ம் வருஷத்தில் வியாதியஸ்தர் 6926 பேர். வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது. காயங்கள் அறுத்த சிகிச்சையிலும் 261 பேரிலிருந்து 1527 பேருக்கு அதிகமாகியிருக்கிறது. இது மிகவும் திருப்திகரம். பனிகாலத்துக்கு முன்னதாகவே ஜில்லா டாக்டர் இந்த ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்வாரென நம்புகிறேன்".

F. J. கூக், I.C.S.

11-1-16 கலெக்டர்.

"இன்று காலையில் இங்கு விஜயஞ்செய்தேன். எல்லாம் ஒழுங்காயிருந்தது. கலெக்டர் துரை சொன்னதுபோல அதிக உபயோகமுள்ள வேலை நடக்கிறது. ஜனங்கள் இதை உணர்ந்து மிகவும் மேன்மை பாராட்டுகிறார்கள். மருத்துவசிகிச்சைக்குரிய ஆயுதங்கள் அவசியமாய் இருக்கவேண்டுமென்று சப் அஸிஸ்டன்ட் சர்ஜன் சொல்லுகிறார்கள். 1-1-16 லிருந்து 411 வியாதியஸ்தர் இதுவரையிலும சிகிச்சை பெற்றார்கள்."

T. A. பெக்,

டிப்டி கலெக்டர்.

"லேடி டாக்டர் வெளியே போயிருந்த சமயத்தில் நான் விஜயஞ்செய்தேன். வேறு வைத்திய உதவியில்லாத இந்த இடத்தில், சிறு அளவாகவாகிலும் வெகு நன்றாய் வேலை செய்கிறது. 1916-ம் வருஷம் முதல் மூன்று மாதங்களில் 1756 வியாதியஸ்தர் இலவசமாக சிகிச்சை பெற்றார்கள். இவர்களில் 748 பேர் ஸ்திரீகள். இது மெய்யாகவே பரோபகாரமான வேலை.

சர்சாவா, S. N. பானர்ஜி,

29—3—1916. போலீஸ் டிப்டி சூப்ரன்டென்டெண்ட்.



தேவை.

1. ரீடிங் ரூமுக்காக உர்து, நகரி பாஷைகளில் பிரசுரம் செய்யப்படும் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் வேண்டும்.

2. நக்கர் சேகரத்தில் சுற்றுப்பிரயாணம், பிரசங்கம் செய்ய வேண்டி ஒரு கோவேறு கழுதை அல்லது இரட்டைமாட்டு வண்டியும் மாடுகளும் வேண்டும். நல்ல பாதைகள் இல்லை. அதிக மேடும் பள்ளமும் உண்டு. மழைகாலத்திலோ குட்டைகளுக்குச் சமானம். ஒற்றை மாட்டு, குதிரை வண்டி உபயோகித்தாயிற்று. அவைகள் இந்தப்பாதைக்கு உதவாது; இதைவிட்டு நடந்துபோவது உத்தமம். ஆனால் மழைகாலத்தில் சாமான்கள் எப்படி கொண்டுபோகிறது?

கிராமங்களில் எங்களுடைய வேலை அதிக கொஞ்சம். ஏனெனில், கிறிஸ்தவ பெண்களோ படியாதவர்கள். அவர்களுக்கென்று ஸ்திரீ ஊழியர் கிடைக்கிறதில்லை இருந்தாலும் நல்ல பாதையில்லாதையால் அவ்விடம் போகமுடியாது. ஒரே ஒரு வழிதானுண்டு. அதற்குத்தான் கோவேறு கழுதை அல்லது இரட்டை மாடும் வண்டியும் வேண்டும். இதினால் பிரயோஜனங்கள் அதிகம். அநேக இடங்களைச் சந்திக்கலாம். எங்கள் பெண்களை மனைவிமார்களை பிள்ளைகளை காலாகாலம் எங்களோடு கூட்டிக்கொண்டு போகலாம்.

3. உங்களுடைய அருமையும் உற்சாகமுமான ஜெபங்கள் வேண்டும்.

சர்சாவா,

10-8-16. J. W. பீபில்ஸ்.

## சுவிசேஷகன் காணும் காட்சி.

ஆனால் கடைசி நாட்களில் சம்பவிப்பதேதெனில்,—மீகா 4 : 1.

சுவிசேஷகன் செய்யும் ஊழியம் அடிக்கடி மனச்சோர்வு அளிக்கும் ஊழியம்; அவனுக்கு அதைரியமுண்டாவதும் அதிசயமல்ல. எனினும், அவன் மனச்சோர்வை மாற்றி தைரியங்கொடுக்கத்தக்க ஓர் ஹேது உண்டு. அவனது களைப்பை நீக்க ஒரு நற்சாதனமுண்டு. பாவம் நிறைந்த இப்பூமி பரிசுத்தமாக மாறும் அக்காலக் காட்சியே இங்ஙன் மருந்து.

உத்தம உபாத்தியாயர் தன்னிடம் படிக்கும் பிள்ளைகள் இவ்விதமாக வேண்டுமென மனோபாவனை செய்துகொள்வார். அந்த தன் நோக்கத்திற்கேற்ப அவர்களைப் போதிப்பான். அவ்வாறே பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தாங்கள் தங்களுக்குமுன் வைத்திருக்கும் ஒரு நல்ல திருஷ்டாந்தத்திற்கொப்ப வளர்ப்பார்கள். நீச ஜாதிகளிடத்தில் உழைக்கும் சுவிசேஷகனும் அவர்களை அவர்களிருக்கும் அந்நிலைமைக்கேற்றவண்ணமல்ல, அவர்

கனிதரக்கவேண்டிய பீஜிக்கு ஏற்றவிதம் நடத்துவான். அருமை ரக்ஷகர் அனுசரித்த ஒழுங்கும் இதுவே. பாவியைத் தேவபுத்திரனாகக்கண்டு, மகனே! என்பார். அசுத்த ஸ்திரீயின் மாறின ஜீவியத்தை ஆவியில் கண்டு, மகளே! என்பார். இக்காட்சியை நாமும் காண்போமாக. தீர்க்கதரிசி இவ் வழகிய வருங்காலக்காட்சியை இவ்வதிகாரத்தில் வர்ணிக்கிறார்.

கர்த்தருடைய வீட்டின் பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியாய்த் திடப்பட்டு, மேடுகளிலும் அதுவே உயரும். ஆம், அக்காலத்தில் வெற்றியும் உயர்ந்தது கர்த்தருடைய வீடு அதை மறைக்க வல்லது எதுவுமில்லை. மனிதரின் ஏங்கின எண்ணம் தேவராட்சியம். அவரே எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார்.

திரளான ஜாதியார் நடந்துவந்து; கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபுடைய தேவனின் வீட்டுக்கும் அவர் தமது வழிகளை நமக்குப் போதிக்கவும், நாம் அவர் பாதைகளில் நடக்கவும் போய் ஏறுவோம் வாருங்கள் என்பார்கள். தேவ பிள்ளைகளில் விளங்கும் இவ்வொருமை விசேஷம். தேவாராதனை செய்ய ஏகமாய்ப் போகிறார்கள். தேவவார்த்தையைக் கேட்க ஐக்கியப்படுகிறார்கள். ஆண்டவருடைய பாதையில் நடக்க ஒன்றாய்க் கூடுவார்கள். இதுவே பாக்கியம்.

தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஒருவரையொருவர் அழிக்க உபயோகித்த ஆயுதங்கள் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்ய உபயோகமாகும். தேசத்தைப் பாழாக்கின கருவிகள் தேசஞ்செழிக்கப் பயன்படும். யுத்தம் ஒழியும்; சமாதானம் ஆகும்.

அவனவன் தன் தன் திராட்சச்செடியின் கீழும், தன் அத்திமரத்தின் கீழும் தத்தளிக்கப் பண்ணுவாரில்லாமல் உட்கார்ந்திருப்பான். கிறிஸ்து மார்க்கம் வியாகுலமார்க்கம் அல்ல, அது மானிடருக்குச் சந்தோஷமளிக்கும் மார்க்கம். ஒவ்வொருவனுக்கும் அங்கே பொக்கிஷமுண்டு, சந்தோஷமுண்டு, பாக்கியமுண்டு.

அவர்களுக்குப் பயமில்லை; அவர்களைக் கலங்கடிக்கும் காரணமுமில்லை. சேனைகளின் கர்த்தர் அவர்கள் காவல்.

நொண்டியானவனை மிகுதியான சனமாகவும் தூரமாய்த் தள்ளுண்டு போனவனைப் பலத்த சாதியாகவும் வைப்போம். தேவ குடும்பத்தில் சகலருக்கும் இடமுண்டு. அவர் பலவீனரைப் பலத்த வீரராக்குவார். கெட்ட குமாரனை ஏற்றுக்கொண்டு விருந்தளிக்கும் பிதா அவர். ஆ, நமது நாட்டாரும் அவருடைய சொந்த வீட்டாராகப் பிரார்த்திப்போமாக.

ஜே. எச். ஜோவெட்,

---

Printed & Published by Mr. K. T. Paul, at the T. A. C. Press, Salem.



Vol. IX No. I ஜனவரி 1917

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை

OFFICE OF THE REGISTRAR ... 21 FEB 1917 MADRAS

நீங்கள் மிகுந்த கனிகளைக்கொடுப்பதினால் என் பிதா மகிமைப் படுவார் எனக்கும் சீஷர்களாய் இருப்பீர்கள்.

## புதுவருஷ வாழ்த்து

உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகுங்கள்—எபே, 4. 23.

தீபிகை நேசர் யாவர்க்கும் இப்புதுவாண்டு பாக்கியவாண்டாக நமது பரமதந்தை அருள்புரிவாராக.

பாக்கியம் நிறைந்த ஏகச்சக்கிராதிபதியாகிய தேவன் நமக்குச் சகலபாக்கியங்களையும் நமக்கருளசாத்திருக்கிறார். நாமோ அவற்றை இப்புதியவருஷத்தில் பெற்றனுபவிப்பதற்கு நாம் நமது உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாயிருப்பதவசியம். பழைய உள்ளம் புதிய ஆசீர்வாதங்களுக்கு இடமாகாது.

புதிதான ஆவியுள்ளவர்கள் சுத்த இருதயமும் நல்மனச்சாட்சியும் மாயமற்ற விசுவாசமும் உடையவர்களாயிருப்பார்கள். இதனால் அவர்கள் இப்புதுவாண்டில் தேவனையும் மனிதரையும் உள்ளன்பால் நேசிப்பார்கள்!

இவ்வுள்ளன்பு நம்மை இப்புதுவருஷத்தில் ஆள்வதாக. இப்பொழுது நாம் நமதாண்டவருக்குப் புதுப்பக்தியோடு தொண்டு செய்து பரிசுத்தத்தில்தேறி நற்கிரியைகளில் பெருகுவோம்.

நமது சங்கத்தின் ஊழியம் தேவனுக்கு மகிமையும், மனிதர் ஆத்மாக்களுக்கு நன்மையுமாய்ப் பலிப்பதற்குப் புதுமுயற்சிசெய்வோம். இதை வாசிக்கும் நாம் உள்ளத்தில் புதிதான ஆவியுள்ள

1—2—17



N. M. S. Ladies' committee, stall holders & young men who helped in the Madras, Sale in December 1916

வர்களேயானால் நமது சங்கத்தின் க்ஷேமத்தையும், அதன் திருப்பணிக்கு ஆசீர்வாதத்தையும் உண்மையாய்க் கோரி இப்புதிய வருஷத்தில் செய்ய தக்கதியாதெனில்:

(1) நாம் அனுசரிக்கும் மார்க்கமே மெய்மார்க்கம், நாம் பற்றிக்கொண்ட இரட்சகரே உலகத்தின் ஒன்றான இரட்சகர் என்பதை நமது பரிசுத்த ஜீவியத்தால் ரூபித்து, இவ்வாறே நம்மைச் சூழ்ந்திருக்கும் பிறமதஸ்தரை நமது மார்க்கத்திற்கிழுப்போம்.

(2) நமது சங்கத்திற்காகவும், அதுசம்பந்தமாய் வேலை செய்கிறவர்களுக்காகவும் அதன் சபைகள் பாடசாலைகள் முதலிய வேலைத் துறைகளுக்காகவும் இயேசுவின் நாமத்தில் உக்கிரமாய் ஜெபம் செய்வோம்.

(3) நமது சங்கத்தின் வேலைக்கு நாமே உற்சாகமாய் அணைகிறபதோடு நமது குடும்பங்களினின்று தகுந்த ஊழியர் வெளியேறி வேலை செய்ய ஏவிவிடுவோம்.

(4) நமது சங்கத்திற்குரிய பணச்செலவுகளுக்காகப் பொருள் சேர்ப்பதிலும் கொடுப்பதிலும் ஒற்றிக்கு இரட்டியாய்ப் புது முயற்சி செய்வோம்.

நமது பழைய சத்துரு புதிய வருஷத்திலும் சத்துருவே. இதையறிந்திருக்கும் நாம் இப்புதியவருஷத்தில் அவனுடைய அரசாட்சியை நமது தேசத்தில் தகர்த்தழிக்கக்கூடும்படி நமது பரம தந்தை நமக்கிரங்கி, நாம் நமது உள்ளத்திலே புதிய ஆவியுள்ளவர்களாவதற்கு கருணைகூர்வாராக.

தரங்கன்பாடி. ஞ. சாமுவேல்.

---

## நம்முடைய புது சேகரம்

### ரீவா

சென்ற மே மாதம் வரையில் நம்முடைய சங்கம் ஐந்து இடங்களில் சுவிசேஷ ஊழியம் செய்துவந்தது. இவை ஐந்து சபைகளை ஒட்டியிருக்க, இந்தியாவிலுள்ள லுத்தரன் சபையார் அனைவரும் பங்கு பெறக்கூடிய ஒரு சேகரத்தில் வேலை ஆரம்பிப்பதைக் குறித்து முன்னமே அறிவித்திருக்கிறோம். ரீவா என்பது மத்திய இந்தியாவிலுள்ள ஒரு சுதேச ராஜாங்கம், ஐரோப்பியர் நிலைத்து வேலைசெய்ய முடியாத இடமாதலால் இந்திய கிறிஸ்தவர்கள் மூலமாய் யல்லாமல் சுவிசேஷம் இந்த ஜனங்களுக்கு எட்ட வழி கிடையாது. லுத்தரன் சபையார் உற்சாகமாய் இந்த இடத்தை ஒப்புக்கொண்டு பணம்

சேகரித்து வருகிறார்கள். முதல் மிஷனெரியாக தெரிந்து கொள்ளப்பட்ட கனம் S. ஞானபரணம் என்பவர் ஒருவருஷம் ஜபல்பூரிலும், சுற்றுகிராமங்களிலும் இருந்து இந்தி பாஷை படித்தும் பேச பழகியும், சென்ற மே மாதம் வேலை துவக்க துணிந்தார். ரீவா வேலையைக்குறித்து பிரத்தியேகமாக ஒரு சஞ்சிகை வெளியாக்க எண்ணியிருப்பதால், சென்ற நவம்பர் மாதத்தில் நம்முடைய சகோதரன் முதல் முதலாக செய்த பிரயாணத்தைக் குறித்து மட்டுமே இந்த சஞ்சிகையில் இப்பொழுது குறிக்கிறோம்.

சனிக்கிழமை மத்தியானம் வீட்டிலிருந்து புறப்பட்டு 5-மணி நேரம் ரயில் பிரயாணம் செய்து பிர்சிங்பூர் என்கிற இடம் சேர்ந்தோம். காலை 9மணிக்கு கால்நடையாக பிரயாணம் செய்ய துவக்கினோம். இரண்டுமைலில் சென்றதும் ஒருபாலம் இருந்தது. வெள்ளம் வேகமாய் வழிந்தோடிக் கொண்டிருந்தது. ஆனால் நானும் என் வேலைக்காரனும் துணிந்து முன்நடந்தோம். எங்களோடு பிரயாணப்பட்ட போலீஸ்காரன் ஒருவன் வெகு தூரத்தில் பின் தொடர்ந்தான். இடையில் வந்த கூலிஆட்கள் சடுதியாய் சாமான்களை எறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். பின்னிருந்த போலீஸ்காரன் அவர்களை தடுத்து எங்களிடம் கொண்டுவந்து சேர்த்தான். 8-மைல் தூரம் அமைதியாய் வந்து பின் நகரமாட்டோம் என்று பிடிவாதமாய் நின்றுவிட்டார்கள். நானும் என் சிநேகிதனும் சாமான்களை சுமந்து கொண்டு பாதையைவிட்டு 2 மைலுக்குட்புறத்திலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றோம். சாமான்களை அங்கே கிடத்தி விட்டு இரண்டுமணிநேரம் சுற்றுபுறங்களில் அலைந்த பின் வேறே கூலி ஆட்கள் கிடைத்தார்கள். பின் நாங்கள் சென்ற வழி முழுவதும் காடடர்ந்ததாயிருந்தது. பட்டோண்டா என்கிற ஊர் சேர மாலை 4மணி ஆயிற்று. இரவு 1-மணிக்கு அடுத்த பிரயாணம் ஆரம்பிக்க எண்ணமாயிருந்ததால் மூட்டை அவிழ்க்கவில்லை. பொழுது போனதும் குளிர் அதிகரித்தது. என்னால் தாங்கமுடியாமலிருந்தது. 11மணிக்கு ஆட்கள் கிடைத்தார்கள். ஆனால் புறப்பட சாமான்களை வெளியே கொண்டுவந்து வைத்த மாத்திரத்தில் ஓட்டம் பிடித்தார்கள். வேறே ஆட்கள் சம்பாதித்து $3\frac{1}{2}$மணிக்கு புறப்பட்டோம். காடுகளையும் குன்றுகளையும் 19மைல் கடந்து காலை 10மணிக்கு ஷாபூர் சேர்ந்தோம். வழியில் பசியினால் அதிகம் சோர்ந்து போனேன். சாப்பிடநின்றால் ஆட்கள் ஓடிவிடுவார்களென்று பயந்து என்னுடைய சிநேகிதன் நிற்க சம்மதிக்கவில்லை. அன்று மாலை 2மணிக்கு புறப்பட்டு $4\frac{1}{2}$மணிக்கு, 8மைல் தூரம் நடந்து டின்டோரி சேர்ந்தோம்.



செவ்வாய் கிழமை காலை 11மணிக்கு மறுபடியும் புறப்பட்டோம். இரவு 8மணிக்கு நாங்கள் சேரவேண்டிய இடம் சேர்ந்தோம். வழி தெரியாமல் இங்குமங்கும் அலைந்து திகைத்தோம். குன்றுகள் ஏறி இறங்கி சேற்றிலும் தண்ணீரிலும் நடந்து அவதிபட்டோம். இரவு கிட்டினதும் இராத்தங்க வேண்டுமென்று கூலி ஆட்கள் மலைத்தார்கள். நல்வார்த்தையால் அவர்களை அழைத்து போகும் சமயத்தில் ஆற்றுக்கப்புறத்தில் தூரத்தில் ஒரு வெளிச்சத்தைக் கண்டு தைரியங்கொண்டு ஆற்றைக் கடந்தோம். கர்த்தர் எங்களுக்கு உதவியாக ஒரு ஆளை காட்டினார். அவனை தொடர்ந்து எங்கள் இடத்தைச் சேர்ந்தோம்.

செய்ய வேண்டிய வேலையின் ஒழுங்கை திட்டம் செய்வது இந்த முதற் பிரயாணத்தின் நோக்கம். மூன்று வகைகள் தென்படுகிறதாக நம்முடைய சகோதரன் எழுதுகிறார். (1) கிராமங்களில் சுற்றி துணிந்து பகிரங்கமாக சுவிசேஷத்தை பிரசங்கிக்கலாம். சிலரை ஞானஸ்நானம் கொடுக்கும் வரையில் அதிகாரிகள் கண்டிக்காமல் விடலாம். ஆனால் நமக்கு எங்கும் போட்டியாக இருக்கும் ஆரிய சமாஜிகள், இங்கு சுற்றித்திரிவதால் நம்மை கண்டுபிடித்து, ராஜாங்கத்தில் எப்பொழுதும் சாவடி வையாமல் தூரத்திவிடக்கூடும் (2) கிராமங்களில் கிடைப்பதற்கரிதான சிறிய வஸ்துகளை விற்பனை செய்யும் வியாபாரியாக சுற்றித்திரிந்து, ஆட்களிடத்தில் தனித்து சுவிசேஷத்தை அறிவிக்கலாம். இதையும் விட்டு, (3) ஏதாவது ஒரு இடத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து கிறிஸ்தவ நன்னடக்கையால் நம்முடைய ரட்சகருக்கு நற்சாட்சி பகரலாம். இப்படிச்செய்வதில் பலன் உடனே காணவேண்டுமென்கிற விருப்பத்தை தள்ளிவிடவேண்டும். ஆனால் ஏற்ற காலத்தில் ஜனங்களை வரும், நம்முடைய மார்க்கத்திற்கு விரோதமாக இருக்கும் தப்பெண்ணங்களை மறந்து, அதின் இரகசியத்தை கண்டுபிடிக்கும் ஆவல் கொள்வார்கள்.

இப்படியாக நம்முடைய மற்ற சேகரங்களிலில்லாத இடைஞ்சல்கள் ரீவாவில் காண்கிறோம். மேலும் நம்முடைய சகோதரன் பூரண திரேகசௌக்கியமுடையவரல்ல. சுற்றத்தாரை தூரத்தில் விட்டு தானும் தன் மனைவியாரும் தனிமையாக இருக்கிறார்கள். தன் தாய் பாஷையில்லாத அன்னிய பாஷையை கற்றுக்கொள்வதவருக்கு எளிதல்ல. ஆனால் தன் தேசத்தார் மேலுள்ள வாஞ்சையினாலும், நம் சங்கத்தில் மேலுள்ள பற்றுதலினாலும், எல்லா கஷ்டங்களையும் பாராட்டமலிருக்கிறார். நம் நேயருடைய ஜெபம் இந்த சகோதரனுக்கு எவ்வளவு வல்லமையான துணையாக இருக்கும்!

## 1916-வருஷத்திய வரவு செலவு.

| | | | |
|---|---|---|---|
| வரவு: நன்கொடையும் சந்தாவும் ... | 23821 | 5 | 5 |
| கட்டடப் பண்டியிலிருந்து கடன் ... | 3000 | 0 | 0 |
| | 26821 | 5 | 5 |
| 1915-௵ முடிவில் பாங்கிலிருந்த கடன் ... | 3450 | 6 | 8 |
| ஆக மீதி... | 23370 | 14 | 9 |
| செலவு: 6-சேகரங்களில் பிரசங்க ஊழியம் ... | 12142 | 2 | 4 |
| பிரயாண காரியதரிசிகள் ... | 943 | 2 | 3 |
| வேலைக்காக ஆயத்தப்படுகிறவர்கள் ... | 1269 | 0 | 0 |
| பொதுகாரியதரிசிகளும் ஆபீஸும் ... | 2615 | 10 | 4 |
| பத்திரிகைகளும், பத்து வருஷ ரிப்போர்ட்டும்... | 2615 | 10 | 8 |
| சில்லறை ... | 257 | 6 | 4 |
| வட்டி ... | 297 | 12 | 6 |
| கடன் திருப்பிக்கொடுத்தது ... | 1559 | 10 | 7 |
| கையிருப்பு ... | 1753 | 7 | 9 |
| | 23370 | 14 | 9 |

[ பின் வருவதில் பிழை கண்டால் தெரிவிக்கவும்—பத்திராதிபர்]

| | 1914-வசூல். | | | 1915-வசூல். | | | 1916-வசூல். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜீவா வேலைக்காக ஒத்தாள் சபையார் நன்கொடை | | | | | | | 624 | 0 | 0 |
| மதுரா; திருநெல்வேலி | 221 | 3 | 0 | 17? | 1 | 0 | 306 | 11 | 0 |
| பசுமலை | 37 | 4 | 0 | 3? | 9 | 0 | 9 | 7 | 0 |
| கொடைக்கானல் | 36 | 5 | 0 | | | | 20 | 0 | 0 |
| மதுரை | 108 | 2 | 0 | 53 | 8 | 0 | 104 | 4 | 0 |
| சாத்தன்குடி | 5 | 0 | 0 | | | | | | |
| பெரியகுளம் | 8 | 0 | 0 | 4 | 0 | 0 | | | |
| அறுப்புகோட்டை | | | | 3 | 8 | 0 | 5 | 0 | 0 |
| திண்டுக்கல் | 26 | 8 | 0 | 23 | 8 | 0 | 35 | 0 | 0 |
| மானமதுரை | | | | 2 | 0 | 0 | | | |
| பாளையங்கோட்டை | | | | | | | 116 | 0 | 0 |
| பன்னிகுளம், ராமநாதபுரம், திருமங்கலம் | | | | | | | 17 | 0 | 0 |
| தஞ்சாவூர் | 93 | 0 | 0 | 136 | 12 | 0 | 65 | 0 | 0 |
| நாகபட்டணம் | 84 | 0 | 0 | 18 | 0 | 0 | 40 | 0 | 0 |
| தரங்கன்பாடி, பொறையாறு | 9 | 0 | 0 | 15 | 10 | 4 | | | |
| வலங்கமான் | | | | 50 | 0 | 0 | 25 | 0 | 0 |
| தஞ்சாவூர் | | | | 16 | 13 | 0 | | | |
| மாயவரம், கும்பகோணம், சீயாழி | | | | 12 | 13 | 0 | | | |



| | 1914-௵த்தில் வசூல். | | | 1915-௵த்தில் வசூல். | | | 1916-௵த்தில் வசூல். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தென்னாற்காடு** | 163 | 4 | 0 | 97 | 0 | 6 | 79 | 14 | 5 |
| கூடலூர் | 5 | 0 | 0 | | | | | | |
| திண்டிவனம் | 7 | 0 | 0 | 35 | 0 | 0 | | | |
| ஜின்ஜி | 3 | 0 | 0 | 2 | 0 | 0 | | | |
| திருக்கோவிலூர் | 85 | 8 | 0 | 10 | 12 | 8 | 11 | 0 | 0 |
| நெல்லிகுப்பம் | 45 | 1 | 0 | 39 | 3 | 10 | 32 | 8 | 0 |
| கள்ளக்குறிச்சி | 6 | 9 | 0 | | | | 26 | 6 | 5 |
| பண்ருட்டி | 11 | 2 | 0 | 10 | 0 | 0 | | | |
| விருதுபட்டி | | | | | | | 10 | 0 | 0 |
| **வடஆற்காடு** | 315 | 10 | 0 | 268 | 4 | 9 | 217 | 15 | 0 |
| திருவாலம் | | | | | | | 2 | 0 | 0 |
| வேலூர் | 118 | 12 | 0 | 127 | 8 | 2 | 128 | 13 | 7 |
| திருவண்ணாமலை | 42 | 6 | 0 | 51 | 3 | 0 | 23 | 14 | 0 |
| புங்கனூர் | 30 | 0 | 0 | | | | | | |
| ராணிபேட்டை | 41 | 0 | 0 | 1 | 0 | 0 | 15 | 0 | 0 |
| சித்தூர் | 17 | 8 | 0 | | | | 15 | 4 | 0 |
| வாணியம்பாடி | 8 | 0 | 0 | 24 | 0 | 0 | | | |
| போளூர் | 18 | 0 | 0 | | | | | | |
| ஆறகோணம் | 30 | 0 | 0 | | | | 6 | 8 | 0 |
| ஆரணி | 41 | 9 | 7 | | | | | | |
| திருப்பத்தூர் | 10 | 0 | 0 | 3 | 0 | 0 | | | |
| ஆம்பூர் | | | | | | | 26 | 0 | 0 |
| காட்பாடி | | | | | | | 0 | 8 | 0 |
| **சேலம்** | 82 | 13 | 0 | 126 | 7 | 0 | 119 | 13 | 0 |
| சேலம் | 72 | 13 | 0 | 107 | 14 | 0 | 108 | 10 | 0 |
| ஏற்காடு | 10 | 0 | 0 | 8 | 9 | 0 | 11 | 3 | 0 |
| ஆத்தூர் | | | | 10 | 0 | 0 | | | |
| **கோயம்புத்தூர்** | 145 | 3 | 0 | 201 | 15 | 0 | 26 | 0 | 0 |
| ஈரோடு | 19 | 0 | 0 | 11 | 13 | 7 | 16 | 9 | 0 |
| கேட்டி | 10 | 3 | 0 | | | | | | |
| போதனூர் | 1 | 13 | 0 | | | | | | |
| நம்பியூர் | 1 | 0 | 5 | | | | | | |
| கோட்டகிரி | 2 | 0 | 0 | | | | 10 | 0 | 0 |
| கொள்ளேகால் | | | | | | | 30 | 0 | 0 |

| | 1914-வருஷத்தில் வசூல். | 1915-வருஷத்தில் வசூல். | 1916-வருஷத்தில் வசூல். |
|---|---|---|---|
| **செங்கல்பட்டு** | 68 5 9 | 115 1 0 | 25 1 4 |
| கிண்டி | 10 3 9 | 24 0 0 | 4 0 0 |
| பரங்கிமலை | 21 0 0 | 27 3 0 | 9 0 4 |
| வாலஜாபேட்டை } காஞ்சிபுரம் } | 35 8 0 | 33 14 0 | |
| பாண்டூர் | 4 10 0 | 5 0 0 | |
| திருவள்ளூர் | | 9 0 0 | 5 0 0 |
| செங்கல்பட்டு | | | 7 1 0 |
| சைதாபேட்டை | 8 0 0 | | |
| பல்லாவரம் | 5 0 0 | | |
| **தென் திருவாங்கூர்** | 535 10 0 | 1118 9 10 | 381 9 0 |
| மார்த்தாண்டம் | 39 8 0 | 5 0 0 | 31 2 0 |
| நெய்யாற்றங்கரை | 11 8 0 | 5 0 0 | 22 0 0 |
| நெல்லிக்காகுழி | 75 8 0 | 2 9 0 | 71 9 0 |
| சேரன்குழி | 5 0 0 | | |
| சாந்தபுரம் | 3 10 0 | | |
| நாகர்கோவில் | 212 12 0 | 245 0 0 | 22 0 0 |
| சன்னி | 10 0 0 | 13 13 0 | |
| நெய்யூர் | 119 6 0 | 230 12 10 | 179 4 0 |
| கிறிஸ்துகோவில் | 5 8 0 | 10 0 0 | 7 0 0 |
| இளசசேரி | 7 12 0 | | |
| தக்கலை | 10 0 0 | 5 0 0 | |
| கோட்டிக்காடு | | | 5 0 0 |
| கல்லிக்காவல்லி | | 26 8 0 | 10 0 0 |
| புத்தலம் | | | 7 12 0 |
| பாரச்சாலை | 28 0 0 | 20 0 0 | 19 0 0 |
| தாமரக்குளம் | 7 2 0 | 14 4 0 | 6 14 0 |
| அட்டங்கல் | | 8 0 0 | |
| பிரயாணகாரியதரிசி மூலமாய் | | 432 11 0 | |
| **இதர சேகரங்கள்** | | 67 9 0 | |
| சீமூர் | | 42 0 0 | |
| பட்டாணம் | | 6 0 0 | 7 12 0 |
| தாக்கடு | | 15 3 0 | |
| **திருச்சிறுப்பள்ளி** | | | 5 0 0 |
| கரூர் | | | 1 0 0 |
| **சென்னபட்டணம்** | 1600 5 0 | 954 10 6 | 3973 1 10 |

Printed & Published by Mr. K. T. Paul, at the T. A. C. Press, Salem.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - MAY 1917
MADRAS

Vol. IX FEBRUARY-MARCH 1917 No. 2 & 3

# இந்திய சுயதேச மிஷனரி சங்க பத்திரிகை

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்

## சுவிசேஷகனின் உத்தமதோழன்.

அவர்களுடனே: நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களோ என்றான். அவர்களோ அவனுடனே பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேட்டதே இல்லை என்றார்கள்.

நடபடி 19, 2-3.

நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? அப்போஸ்தலன் இச்சிறு கிறிஸ்தவ கூட்டத்தை இப்படி சாபக்கேள்வி கேட்பானேன். எபேசு சபையின் நிலைமையை அறிந்தவர்கள் இவர்களின் நன்னடைக்கு நற்சாட்சி கொடுப்பார்கள் எனினும் அப்போஸ்தலன் இவர்களில் ஒரு முக்கிய குறைவைக் கண்டிருக்க வேண்டும். ஞான அனுபோகத்தில் முதிர்ந்த அவருக்கு இவ்விதகுறைவுகள் மறைவாயிருக்க முடியாது.

இக்கிறிஸ்தவர்கள் பெந்தெகொஸ்தேயின் பிற்காலத்தில் வசித்தும் அதற்குமுன் ஜீவித்தவர்கள் போல் நின்றார்கள். பரிசுத்த ஆவி உண்டென்பதை முதலாய் அறியாதிருந்தார்கள்.

நம் நடுவே அப்போஸ்தலன் இன்று வருவாரானால் இக்கேள்வியை நம்மை நோக்கியும் கேட்கமாட்டாரா? நமக்கும் பரிசுத்த ஆவி உண்டென்பது தெரியும். அவர் தேவை என்பதை அறிவோம். வாரும் தேவஆவி வாரும் என்று அடிக்கடிப் பாடுகிறோம். பாடிக்கொண்டே இருக்கிறோமேயன்றி, அவரைப் பெற்றுக்கொண்டோமென்கிற நம்பிக்கையுண்டா? அவர் நம்மிடத்தில் வந்தும் அவரை ஏற்றுக் கொண்டிருக்கிறோமா. அவர் நம்மைச் சீயோனின் மகிழ்ச்சிக்குள் கொண்டுபோகும் அந்நிய நாட்டில் வசிப்பவர்கள்போல் புலம்புகிறோம். ஏன்?

14-5-17

நாம் பரிசுத்த ஆவியானவரை ஓர் வல்லமையாக மாத்திரமே நினைக்கிறோம். அவரைக்குறித்த மகாப்பணி, ஆவியின்மழை, பெந்தெகொஸ்தே(?) என்னும் வசனங்களை உபயோகிப்போம். இவை அழகிய வசனங்கள். இவற்றால் நாம் அவர் ஆண்டவர் என்பதை மறக்கலாகாது. நமது தோழன் அவர் இப்பொழுதே(?) நமது பக்கத்தில் எப்போதும் நிற்கிறார். அவர் பரம ஆசீர்வாதங்களனைத்தையும் நமக்குக் கொண்டுவந்து நிற்கிறார். அவரோடு பேசுவோம். அவரோடு ஐக்கியமாயிருக்கிறவன் அவருடைய சகல ஜோதிக்கும் பங்காளியாவான்.

ஆவியானவர் சமாதானத்தின் ஆவி. அவரை நம்பினவன் பதறான். அவன் வீண் கவலைப்பட்டுக் கலங்கான், அவன் உற்சாகமாக உழைப்பான, முறையிடான். அவன் ஓடினான் அவனுக்குக் களைப்பில்லை. ஆவியானவரின் சமாதானம் அவனைக்காக்கும், உள்ளத்திடமும் அவனைத்தாங்கும்.

ஆவியானவர் மென்மையின் ஆவி. அவர் புறாவுக்குச்சமானம், சாந்தம் அன்பு அவர் லக்ஷணம். அவரால் ஆட்கொள்ளப்பட்டவனிடம் விளங்கும் குணம் இது. பாவத்தைக்கடிந்து கொள்வான் என்றாலும் பட்சமாய் புத்திசொல்லுவான். ஞானப்பாட்டுகளாலும் கீர்த்தனங்களாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுவார்கள்.

ஆவியானவர் பரிசுத்தர். பாவத்தைப் பட்சிக்கும் அக்கினி. ஆவியைப்பெற்று அவரோடே வசிப்பவனிலும் இப்பரிசுத்தம் விளங்கும். அவன் பெரிய பிரசங்கம் செய்ய அவசியமல்ல. அவன் நடை அதை விளக்கும். அவனைக்காண்பவர்களுக்கு இது தெளிவாய்த் தெரியும், அவன் முகத்தில் இது எழுதியிருக்கும்.

பரிசுத்த ஆவியானவர் இன்று நம்மோடு இருக்கிறார். அவரோடு நெருங்கி ஜீவிப்போம் அவரை ஓயாது அனுபவிப்போம், அவர் அளிக்கும் ஆத்மநன்மைகளை உபயோகிப்போம்.

அப்போது வல்லமை நம்மிடத்திலிருந்து புறப்படும். நமது சபைகளில் தேவமகிமை விளங்கும். நமது தேசம் முழுதும் அதைக்கண்டு தேவனை மகிமைப்படுத்தும்.

ஜே. ஏச். ஜோவட்

## காசியா(?)

பிளேக் மறுபடியும் காசியா(?) ஊரில் தோன்றியிருக்கிறது. ஆதலால் ஊர் காலியாய் விட்டது, மத்தியானம் முதல் மாலை வரையில் மட்டும் ஊரில் ஜனசஞ்சாரம் உண்டு. ஊருக்கு வெளியே ஒரு மைலுக்கப்பாலும் ஒரு மைலுக்குள்ளாகவுமுள்ள பலவிடங்களில் தட்டிகட்டின குடிசைகளில் ஜனங்கள் வசிக்கிறார்கள். நம்முடைய எளிய கிறிஸ்தவர்கள் புல் வேய்ந்த குடிசைகளில் வசிக்கிறார்கள். நான் கம்பலாவுக்குப்போனால்(?) பிரயாணிகள் பங்களாவில் தங்குவது வழக்கம். இந்தமுறை போலீஸ் சூப்பரின்டெண்டெண்டும் அவர் தோழரும் தங்கியிருக்க அவர் போனதும் கலெக்டர் துரை வருவதாக இருந்ததால், மேற்சொன்ன ஒரு குடிசையில் தங்கினேன். இது நம்முடைய கிறிஸ்தவர்களுக்கு இடைஞ்சலாயிருந்தபோதிலும், நான் தங்க இடமில்லாமல் கஷ்டப்படாதபடி(?) தங்களாலியன்ற வசதிகளை ஏற்படுத்தினார்கள். நான் இருக்கும் குடிசை 10 அடி நீளம், 8-அடி அகலம், 7-அடி உயரம் உள்ளது. நிமிர்ந்து நிற்கக்கூடிய உயரம் இல்லை. மூலையில் உடைந்த மேஜையும் நாற்காலியும் இருக்கிறது. அதிலுட்கார்ந்து இந்த கடிதம் எழுதுகிறேன். கல் காற்றும் வெய்யிலும் தகரம் [illegible] நடக்கின்றன. இந்த வருஷம் காலம் கடந்த மழை பெய்கிறது. புரட்டாசி மாதத்திலும் இரண்டு மூன்று தரம் மழை பெய்தது. இதனால் நமது ஊழியருக்கு தொந்தரவு அதிகம். ஊழியம் தாமதமில்லாமல் தங்களிடத்தில் கிறிஸ்தவர்களால் ஒப்புவிக்கப்பட்ட புஸ்தகங்கள், கைத்தாள்கள், வேதபாகங்கள் இவைகளையும் பத்திரப்படுத்த வேண்டியிருந்தது. உடைமைகளையும் [illegible] புஸ்தகங்களைக் காப்பாற்றினார்கள். உணவு சாமான்கள் கெட்டுப்போயின.

ஏன் இந்த வர்ணனை? நமது ஊழியர் உபத்திரவங்களை தெரியப்படுத்தவேண்டுமென்பதற்காக அல்ல. கஷ்டங்களிருந்தபோதிலும் இயேசு இரட்சகர் காட்டியுள்ள தமது பிள்ளைகளுக்கு தமது அன்பின் செய்தி தடைப்படாமல் எட்டுகிறது என்று சொல்லவே. நான் இதை எழுதிக்கொண்டிருக்கும் சமயத்திலும் ஆணும் பெண்ணுமாக ஒரு கூட்டம் உட்கார்ந்து வேதவாக்கியங்களை வாசித்து காலம் கழிக்கிறார்கள். [illegible] சங்கீதங்களையும் சப்பத்தையும் பாடுகிறார்கள் [illegible]. கஷ்டங்களில் [illegible] இல்லையென்றாலும் பக்தர்களில் தினம் [illegible] அல்லது பகுதி [illegible] சம்பாதிக்கலாம். அதை மறந்து இந்த ஜனங்கள் கஷ்டங்களை சகித்துக்கொண்டு, [illegible] மற்று

யான உபத்திரவங்களைப் பற்றி முறையிட்டுக்கொண்டு [illegible] பதித்திக்கொள்ள வழிகண்டுபிடிக்காமலிருக்கிறார்கள். இளைஞனாகிய நம்முடைய குருட்டு பிரசங்கி, ராமன் என்பவன், நான் திருத்தமாய் வாசிக்கிறேனா என்று சோதிக்கவந்த ஒருவனுக்கு சுவிசேஷத்தைப் போதிப்பது இடையில் என் காதில் விழுகிறது. தன் எழுத்துப் பிழைகளை மற்றவன் திருத்த, இவன் நடந்து இரட்சகர் நமக்காக மரித்தார் என்ற ஒரே சத்தியத்தை மாறாமல் போதித்தான். இந்த கண்தெரியாத சிறுவன் ஆண்டவரைப்பற்றி விளக்கிச் சொல்வதைக் கேட்கும்போது என் உள்ளம் எப்படி பூரித்தது என்று சொல்ல முடியாது. ராமன் எப்படியோ அப்படியே மற்ற பிரசங்கிகளும், சந்தைகளிலும் கிராமங்களிலும் பிரசங்கம் செய்வது இவர்கள் முக்கிய ஊழியமாயிருந்தபோதிலும் ஆட்களை தனிமையாக சந்தித்து உபதேசிப்பதில் ஊக்கமாயிருக்கிறார்கள். இதற்கிசைவான சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அவைகளை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறதுமட்டுமல்ல, ஆட்களை முற்றுமுடிய கைவசப்படுத்திக்கொள்ளுமட்டும் விடாமுயற்சியாயிருக்கிறார்கள்.

நமது ஊழியர் சர்மாலாவைச் சுற்றியிருக்கும் குடிசைகளுக்குப் போய்வருகிறார்கள். அதோடு, அறுப்புகாலத்தில் ஜனங்களுக்கு அறுப்பு வேலையில் உதவி தேவையாகயிருப்பது கண்டு, தாங்களும் கூடிய சமயங்களில் இரவில் போய் வயல்வேலை செய்கிறார்கள். இப்படி உதவிபுரிந்து உறவாடுவதினால், ஒருவருக்கொருவர் உதவி புரியும் குணம் எவ்வளவு அருமையானதென்பதை விளக்கி காட்டுவதுமல்லாமல், சுவிசேஷத்தைக்கூற சந்தர்ப்பம் கிடைக்கிறது.

தாழ்ந்த ஜாதியாரிடத்தில்மட்டும் ஊழியம் செய்கிறோமென்று எண்ணக்கூடாது. பிராமணர், வைசியர், மார்வாடிகள், மகாராட்டியர், மகம்மதியர் என்னும் பல ஜாதியாரும் கோவாட் என்னும் நம்முடைய போதகரைப் பிரியமாக எண்ணுகிறார்கள். குருடரான இரண்டு வாலிபருடைய ஜீவியமும் பலர் மனதை கவர்ந்திருக்கிறது. தாழ்ந்த ஜாதியாரைக் குறித்து, "இவர்கள் சபிக்கப்பட்டவர்களென்றும், பூர்வ ஜென்மத்தின் வினையை அநுபவிக்கிறவர்களென்றும் எண்ணி நீக்கிவிடுவோமல்லவா. கிறிஸ்தவர்களோ இவர்களை அரவணைத்து, எழுதவும், வாசிக்கவும், வாக்குச்சாதுரியமுடையவர்களாகவும் மாற்றியிருக்கிறார்கள்" என்று உயர்ந்த ஜாதியார் பலர் மனதிலும் தோன்றியிருக்கிறதைக் காண்கிறோம்.

கடவுள் எங்கள் ஊழியத்தை ஆசீர்வதிக்கிறார். சம்பாஷணைகளின் பலனாக உணர்த்தப்பட்ட ஒரு மகாராட்டியன் ஞானஸ்நானம்



பெற்றான். [illegible] ஜாதியாரோடு கலந்துவிட்டதால் அவனை தாய், தகப்பன், மனைவி பிள்ளைகள் இனத்தார் எல்லாரும் அவனைத் தள்ளிவிட்டார்கள். ஆனால் தேவ அன்பு அவனில் பலத்திருந்ததால், தனக்கு இந்த உலகத்தின் பிரயோஜனமாக இருந்த எல்லாவற்றையும் [illegible] என்று எண்ணி [illegible] டான். பகிரங்கமாக கிறிஸ்துவை இரட்சகரென்று [illegible] டான். தன்னுடைய பெற்றோர், மனைவி, மக்கள் தன்னோடே பின்தொடருவார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு பூரணமாயிருந்தது. கேசவாட் உபதேசியார் வீட்டிற்கு தினம் வந்து குடும்ப ஜெபத்தில் தானும் சேருவான். ஆனால் தன்னிலிருந்த வாஞ்சை நிறைவேற வேண்டுமென்று, குடும்பத்தார் [illegible] பற்றி [illegible], அவர்களோடு சேர்ந்து வாழ்ந்தான். அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபித்தும், விடாமுயற்சியாக [illegible] கை செய்தும் வந்தான். கடைசியாக [illegible] அவனுடைய மனைவி [illegible] விசுவாசித்தாள். அருமையாக [illegible] இவர்கள் இருவரும் [illegible] சந்தோஷத்துடன் சகித்தார்கள். [illegible] இவனுடைய பெற்றோரும், சொந்த சகோதரரும், மற்றவர்களும் அதற்கு இணையானார்கள். [illegible] ஒருவரும் [illegible] இன்னமும் மடியில் எப்பொழுதும் [illegible] கட்டிக்கொண்டு திரிகிறான். [illegible] இடையில் வைத்திருந்த பணம் [illegible] உதவியாயிருந்தது.

சில தினங்களுக்குமுன், பம்பாய் கேசவ் காம்பிலே என்னும் ஒரு வாலிபன் [illegible] பெற்றான். [illegible] உபதேசியார், [illegible] ஊழிய வகுப்பின் பலன் இது. இந்த வகுப்பு [illegible] நடத்தப்படுகிறது. ஒவ்வொருவரும் முறைப்பிரகாரம் இவ்வகுப்பு நடத்துவது வழக்கம். குருடர் முறையானால், ஒருவன் பிரெயில் புஸ்தகத்தில் வாசிப்பான், மற்றவன் [illegible] வாசிப்பான், [illegible] ஏகமாய் சேர்ந்து பாடுவார்கள். வகுப்பைச்சேர்ந்த ஒவ்வொருவரும் வேதத்தில் ஒருபாகம் மனப்பாடம் செய்து ஒரு [illegible] அதை கற்பிக்கவேண்டியது [illegible]. வகுப்பு ஆரம்பத்திலும் முடிவிலும் ஜெபம் நடத்தப்படும். [illegible] இந்த கூட்டங்களுக்கு வந்ததினால் உணர்த்தப்பட்டான். சத்தியத்தை அறிய வாஞ்சையுள்ளவன். அவனோடு உணர்த்தப்பட்ட [illegible] தன் தாயாரும் [illegible] ஜெபித்தும், உழைத்தும்

வருகிறான். பள்ளி கூடமான யந்திரசாலையில் மாதம் 20 ரூபாய் சம்பாதிக்கிறான். இவ்வளவு சம்பளமுடையவன் தன்னூரில் முதன்மைக்குரியவன். இப்படிப்பட்டவனொருவனே சட்டாம்பு என்கிற அதிகாரம் இவன் வார்த்தைகளுக்கு இருந்து எதிரிடையாக, இவன் கிறிஸ்தவனானதால் உபத்திரவப் படுகிறான். நீ பள்ளிக்குப் போனாய் என்று கேள்விப்பட்டால் அது எங்களுக்கு சந்தோஷமாயிருக்கும் என்று அவன் இனத்தாரொருவர் சொன்னார். இதனால் பள்ளி அந்நிலவரத்தை, இதை வாசிப்பவர்கள் இந்த சகோதரனுக்காகவும், இவன் தேடிக்கொண்டிருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஐ. பி. பாவா.

## நமது சங்கத்து 1916-ஹூத்து பண நிலைமை

கடந்த வருஷ மத்தியில் நமது சங்கத்து வருமானத்தைக் குறித்து அதிக கவலையாயிருந்தோம். இரண்டு வருஷங்களாக பாங்கில் கடன் அதிகப்பட்டு வந்தது. சுவிசேஷவேலை சம்பந்தமாக செலவு ஒருபக்கம் அதிகப்பட்டுவர, நன்கொடைகள் அதற்கேற்றவிதமாக அதிகரிக்கவில்லை. இனி ஒரு மாதம் இப்படியானால் வேலை செய்யக்கூடுமோ என்று கவலைக்கு காரணமாயிருந்தது. இந்த நிலைமையை முதலாவது சங்கத்தின் வழியாகத் தெரிவித்து அவர்கள் ஜெபத்தில் வைக்கப்பட்டிருப்பதோடுகூட ஒவ்வொருவரும் கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று தெரிவித்தோம். கூடியமட்டும் செலவை மட்டுப்படுத்தினோம். நேசர்கள் அனைவருக்கும் நமக்குண்டான நிலைமையை தெரிவித்து விசேஷித்த முயற்சி செய்ய வேண்டுமென்று வேண்டினோம். இந்த விஷயம் எல்லோரையும் உற்சாகப்படுத்தவேண்டுமென்று ஒரு சிநேகிதர், டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குமுன் நாம் 5000 ரூபாய் சேகரித்தால், தான் 1000 ரூபாய் கொடுப்பதாக வாக்களித்தார். இதன் பலனாக சென்னையிலுள்ள சகோதரிகள் சேர்த்ததில் 2500 ரூபாயும், ஐக்கிய மாகாணத்திலிருந்து பக்தைகளிலுள்ள E. [illegible] அவர்களிடமிருந்து 1000 ரூபாயும் பெற்றோம். லாகூர், அலகாபாத், கல்கத்தா, மொராடாபாத், வேலூர், என்கிற இடங்களில் பெரிய கூட்டங்கள் மூலமாக விசேஷித்த காணிக்கைகள் அனுப்பப்பட்டன. இன்னும் பற்பல இடங்களில் இம்மாதிரியான முயற்சிகள் பிரயாசமாக செய்யப்பட்டன. டிசம்பர் மாதம் 31-ம் தேதியாகிய ஞாயிறு விசேஷித்த ஞாயிறாக தேச



முழுவதும் பற்பல இடங்களில் ஆசரிக்கப்பட்டது. இப்படியாக வருஷ முடிவில் விசேஷ பிரயத்தனங்களால் 5000 ரூபாயும், நமதுடைய சிநேகிதன் வாக்களித்த 1000 ரூபாயும் சேர்ந்தது.

வருஷத்தின் கடைசி மாதங்களில் வருத்தமடைந்தபோதிலும், சந்தோஷமாய் துவக்கின வருஷத்தை ஜெயமாய் முடித்தோமல்லவா? நாம் ஏற்றுக்கொண்ட சேகரங்களில் நடத்திவரும் சுவிசேஷ வேலை கொஞ்சமென்று உணருகிறோம். அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்ற ஒவ்வொரு சேகரத்தினின்றும் ஓயாமல் வரும் கூக்குரலை எக்காலும் அசட்டை செய்யலாகுமோ? மான்ட்கொமரி, நக்கர் என்னும் சேகரங்களிலுள்ள கிராம கிறிஸ்தவ பிள்ளைகள் படிப்பின்றி வளருகிறார்கள். பெண்கள் மனதைத் திருப்ப பெண் சுவிசேஷகர் இல்லாமையால் ஆண்களுக்குள் உண்டாகும் உற்சாகமும் நம்பிக்கையும் மங்கிப்போகிறது. இந்த இடையூறை உடனே நிவிர்த்தி செய்யவேண்டும். சபைகளையும், கிளைச்சங்கங்களையும், சிநேகிதரையும் உற்சாகப்படுத்த பிரயாண காரியதரிசிகள் அனுப்பப்படவேண்டும்.

இந்த வருஷத்தில் எங்கள் வேலையை சீர்திருத்தி பலப்படுத்த வேண்டுமென்பது எங்கள் நோக்கம். இது நிறைவேற ஆண்டவர் அருள்புரிவாரென்று உறுதியாய் நம்புகிறோம். ஆனால் எங்கும் சிதறியிருக்கும் நம் நேயர் நமக்கு ஆதரவாகாவிட்டால் சென்ற வருஷம் அடிக்கடி சஞ்சலப்பட்டவண்ணம் இவ்வருடமும் சஞ்சலப்பட்டு, ஊழியத்தில் முன்னேறிச்செல்லவேண்டுமென்கிற விருப்பத்தை மட்டுப்படுத்தவேண்டும். பல இடங்களில் தனித்து நின்று ஊழியம் செய்துவரும் சுவிசேஷகருக்குள் மனதளர்ச்சி உண்டாக்கும் எண்ணிறந்த இடையூறுகள் இருக்கின்றன. அதோடுகூட பணக்குறைவும் இவைகளில் ஒன்றாகாதபடி ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது நம் மேல் விழுந்த கடன்.

## மான்ட்கமரி.

மான்ட்கமரி என்னும் ஜில்லாவானது ஓர் அபிவிர்த்தியடையும் நகரமாயிருந்து வருகிறது. இதில் ராஜாங்கத்தினால் சமீப காலத்தில் அரைத்தரை உயர்தரக் கலாசாலைக்காக மேன்மை பொருந்திய ஓர் அழகிய கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. தேசாச்சாரங்களுக்குரிய ஜனங்கள் வசிக்குமிடங்கள் பூராவும் கச்சேரிகளாலும், நீர்ப்பாய்ச்சல் இலாகா வாசஸ்தானங்களாலும் சூழப்பட்டிருக்கின்றனவாம். இவ்விதமாக படித்த வகுப்பினர்களின் தொகைகள்

அதிகாரமாய் நினைக்கிறவர் கிருத்துவடைந்துகொண்டே வருகின்றன. இதில் தமது அவர்களின் பெருமையுடைய கிரேசத்தினை வழியாய் கிறிஸ்தவர்களின் [illegible] வல்லமையை அடையப்பெருமிதம் [illegible] காணப்படுகிறார்கள்.

அநேகவிதமான [illegible] புத்தகங்களை பாதிரிமார்கள் தங்களுடைய வைத்திருக்கிறார்கள். அவர்கள் புத்தகங்களை முக்கியமாய் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு வாசிக்கக் கொடுக்கிறார்கள். இந்திய கிறிஸ்தவ சகோதரர்களில் சிலருங்கூட இவைகளை வாசித்து வருகின்றனர். ரயில்வே ஸ்டேஷன்களிலிருந்து அதிக தூரமான கிராமத்திலுள்ள ஒரு கிறிஸ்தவருடைய மனைவி சில புஸ்தகங்களை வாசித்து முடித்திருக்கிறார்கள். இவ்வகையாகவே ஸ்டார் [illegible] புகழத்தக்கதேயாம். அப்படி முடித்த புத்தகத்தின் விஷயங்களைப்பற்றி கிறிஸ்தவரல்லாதவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டோம். அநேகர் சில விசேஷமான மறுமொழிகளை கொடுக்கிறார்கள். ஒரு ஹிந்து பள்ளிக்கூட உபாத்தியாயர் இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தை அப்பொழுதே வாசித்து முடித்த பிறகு அவரிடத்தை இயேசுகிறிஸ்துவை அவர்களின் இருதயங்களை இருதயத்தில ஆழ்ந்த சிந்தனையாக [illegible] சொல்லுகிறார். பிறகு கிறிஸ்து சொன்னபடியே "தாங்கள் தாங்கள் செய்யும் குற்றங்களை தாங்கள் உணரமாட்டார்கள், ஆகையால் கடவுள் அவர்களை மன்னிப்பாராக"!

இந்த முக்கியமான கருத்தைத்தான் ஆரிய சமாஜத்தின் ஒரு பிரசாரகர் [illegible] குறிப்பிட்டுச்சொன்னார். வேறொரு பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒரு பாதிரியிடத்தில் பொதுவான ஒரு கூட்டத்தில் "இந்தியாவின் மத சம்பந்தமான தேவை" என்னும் விஷயத்தைப்பற்றி பேசினார். [illegible] வாதியாருடைய கடைசி அபிப்பிராயமது தோற்றத்தில் மாத்திரம் அன்பு காட்டக்கூடிய நிலைமையில் அநேக சீர்திருத்தக்காரர்களும் ஜனத்தலைவர்களும் சபைகளில் பேசுகிறார்களேயொழிய உண்மையாக அவர்கள் அன்போடும் சமாதானத்தோடும் உழைப்பதாகத் தோன்றவில்லை என்று சொன்னார்." "கடவுளுடைய பூர்வகாலத்து கட்டளையானது போய்விட்டது". பிறகு சபையை முடித்ததும் உபாத்தியாயர் கடவுளுக்கு பிரார்த்தனை செய்யும்படிக்கு கொண்டுவந்துவிட்டது. கடவுள் நம்மை ஆசிர்வதிப்பாராக.

Printed and Published by [illegible] at the [illegible] Salem.

சென்னை-600 005

Vol. IX APRIL-MAY 1917 No. 4 & 5.

# இந்திய சுயதேச மிஷனரி சங்க பத்திரிகை

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAY 1917

## ஜெபம்.

சர்வ வல்லமையுள்ள தேவனே! உம்மையல்லாமல் எங்கள் [illegible] விருதாவே. உலகமெங்குமுள்ள உமது பரிசுத்த சபையின் வேலையை வர்த்திக்கப்பண்ணும். ஆ, எங்கள் கைகளின் கிரியையை உறுதிப்படுத்தியருளும். வேறொருவரும் போடக்கூடாத அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவின்மேல் அதைக் கட்டியருளும். லௌகீக நோக்கங்களினாலும், அகந்தக்காரங்களினாலும், வெளிப்படையான சித்தியினாலுண்டாகும் இச்சையினாலும் உண்டாயிருக்கிற அசுசியினின்று அதைக் காத்துக்கொள்ளும். அவனவன் வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும் அந்த நாளிலே எங்கள் வேலைப்பாடு நிலைக்கவும், உமது வேலைக்காரராகிய நாங்கள் உமது புகழ்ச்சியையடையவும் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நீர் யாரை அனுப்புகிறீரோ அவர்களுடன் கூடப்போகத் தயங்காத தேவனே, உமது ஊழியரை ஆசீர்வதியும். பூமியின் கடையாந்தரங்களில் குடியிருக்கிறவர்களிடம் உமது நாமத்தைச் சுமந்துகொண்டுபோக அவர்களைத் தெரிந்துகொண்டீரே. பரிசுத்தமும் ஞானமும் ஊழியஞ்செய்யும் பெலனும் பாடனுபவிக்கத்தக்க பொறுமையுள்ளவர்களாயிருக்கும்படி அவர்களை ஆசீர்வதிக்கும்படி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

## சுவிசேஷ வேலையின் மேன்மை.

"நன்மை செய்வதும் கடவுளுடைய வேலையைத் தொடர்ந்து முடிப்பதுமே கிறிஸ்து நிறைவேற்றின ஊழியம். இதைத் தவிர ஜீவியத்தின் இலக்காய் வைப்பதற்கு உலகத்திலே வேறொன்றுமில்லை.—பேறேன்நாப்ட்"

"இந்த வேலையை இப்பொழுது உண்மையோடு செய்வாயாகில், பின் அழிவிலா யுகங்கள் ஒழிவிலாது செல்கையில் இதைப்பார்த்துத் திருப்தியடைவாய்"—லிவிங்ஸ்டன்.

"இக்காட்டிலும் நகரத்திலும் சாத்தான் பயங்கரமாய் வினைசெய்கிறான். எத்திசையிலும் அஸ்திரங்களை எய்கிறான். எப்பக்கத்திலும் ஒளியின் தூதனைப்போல் வேஷங்கொண்டு உழைக்கிறான்."—ராபர்ட்ஸ்.

"இலக்கை நோக்கிப் பார்த்துக்கொண்டேயிருப்பதால் உண்டாகும் உற்சாகமல்லவா என்னில் இடைவிடாத ஊக்கத்தை உண்டாக்கினது."—தார்ன்டன்.

"எங்கே கர்த்தருடைய வேலை செய்யப்பட அதிக இடமிருக்கிறதோ, எங்கே ஊழியர்கள் குறைவோ அங்கே வேலைசெய்ய நாடுவதே நியாயமென்று நான் எண்ணினேன்."—கில்மோர்.

## வர்த்தமானம்.

கனம் ஞானபரணம் ஐயர் ரீவாவில் எவ்வாறு வேலை செய்து வந்தாரென நமக்குத் தெரிந்த விஷயம். அவரது மனைவிக்கு ஓர் குழந்தை பிறந்தகால முதல் அந்த அம்மாள் மோசமான பிணியால் பீடிக்கப்பட்டிருப்பதற்காகத் துக்கிக்கின்றோம். ஞானபரணம் ஐயர் தமது பத்தினியாரை முன்னிட்டு ரீவாவை விட்டு சிறிது காலம் வேறிடம் மாற்ற நேரிட்டிருக்கிறது. நண்பர்கள் அவர்களுக்காகக் கடவுளை நோக்க மறக்கார்களென நம்புகின்றோம்.

ஓமலூர்:—காரிய நிர்வாக சபை ஓமலூருக்கு ஒரு மிஷனரியைக் கனம் பாலசுந்தரம் ஐயருடன் வேலைசெய்யத் தீர்மானஞ்செய்தும் இந்த நபர் கிடைக்காமையால் கஷ்டமாயிருக்கிறது. பெங்களூர் வேதசாஸ்திர கல்லூரியில் தங்கள் படிப்பை முடித்தவர்களும்



எவராவது ஓமலூர் மிஷனரி வேலை ஒப்புக்கொள்ளுவாரானால் நிர்வாகச் சபைக்கு மிக்க சந்தோஷமாகும்.

ஓமலூரில் நமது இரக்ஷண்ய மார்க்கத்தில் முதல் தீட்சை பெற்ற ஆபிரகாம் இராமசாமி பின் வாங்கிபோனதைக்கேட்போர் அவரைத் தங்கள் ஜெபத்தில் நினைவு கூரும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கோபால்சாமி ஐயர் எழுதின கடிதத்திலிருந்து அடியிற் கண்ட விஷயங்களைத்தெரிந்துகொள்ளலானோம்.

ஓமலூருக்கு மிக்க சமீபத்திலுள்ள கிராமங்களில் வேலை செய்து வருகின்றோம். ஜனங்கள் இரக்ஷண்ய சப்தத்தை கேட்கிறார்களென்று இப்போது சொல்லமுடியாது. கிறிஸ்தவ ஜீவியம் அசாத்தியமானதென்பது சிலருடைய அபிப்பிராயம். சிலர் நிர்விசாரிகள். அன்னிய தேவர்களைக் காட்டுகிறார்களென்பது வேறு சிலருடைய எண்ணம். ஓமலூரில் வைத்திய வேலை அவசியமாயிருக்கிறது. ஏழைகள் தனவந்தர்களிடம் கடன் வாங்கித் தங்களை மீட்டுக்கொள்ளும் வழி தெரியாதிருக்கின்றார்கள். முத்துநாய்க்கன் பட்டி சந்தைக்கு கோபால்சாமி ஐயர் தனித்தவராக புறப்பட்டுத் தனியானாக வேலை செய்வதெவ்வாறென்ற எண்ணமுடையவராயிருந்தார். அவரது கையிலிருந்த வேதாகமப்படங்கள் தாம்பிரசங்கிப்பதைப் பற்றி சிலர் அவ்வளவென்று விசாரிக்கும் காலத்தில் யோவான் சுவிசேஷம் பத்தாம் அதிகாரம் தேவாவியின் வல்லமையை அருகில் நின்றவர்களுக்குக் காட்டக்கூடியதாயிருந்தது.

வடகன்னடம்:—ஏறக்குறைய ஒன்றரை வருஷமாக வேறொரு வேலை சம்பந்தமாய்ப் போய்த்திரும்பி வந்த கனம் பி. டி. வெர்கீஸ் ஐயர், வடகன்னடத்தைச் சார்ந்த ஹன்கோலாவென்னுமிடத்தில் வேலை செய்துவருகிறார்.

மாண்ட்காமரி:—கனம் பிரேம் சந்தர் அவர்கள் சீக்கிரத்தில் குருப்பட்டாபிஷேகம் பெற்றுக்கொள்வார்.

நுக்கர் :—கனம் டி. எஸ். என். சாட்டர்ஜி அவர்கள் இரண்டு பேரோடுகூடி நுக்கார் வட்டத்தில் இரண்டுவாரமாகப் பிரசங்கவேலை செய்தார்கள். 156 கிறிஸ்தவர்கள் 12 கிராமங்களில் சிதறியிருக்கிறார்கள். எங்கும் நல்லவேலை செய்யும்படியான சமயம் கிடைத்ததைப்பற்றி சந்தோஷம். மோரா என்னுமிடத்திலுள்ள கிறிஸ்தவர்கள் அவர்களை ஏற்றுக்கொண்டதில்லை. பகதூர் நகரிலுள்ளவர்கள் தங்களுக்குப் போலிஸ் கேஸ்களில் உதவி செய்கிறதானால் பிரஸங்கத்தைக் கேட்போமென்று தெரிவித்தார்களாம்.

| | | ஜனவரி முதல் மார்ச். | | |
|---|---|---|---|---|
| சங்க பொக்கிஷம் :—வரவு ரூ | ... | 3797 | 7 | 6 |
| செலவு ரூ | ... | 3647 | 14 | 6 |
| ரூ | | 149 | 9 | 0 |

மனமுண்டானால் வழியுண்டு :—வட இந்தியாவில் ஒரு நண்பர் வேடிக்கையான காரியங்களுக்கென்று வைத்த பணத்தைச் செலவிடாது இரக்ஷண்ய விஷயத்துக்குக் கொடுப்பது தகுதியெனக்கருதி ரூ 2-10-0 நமது சங்கத்துக்கு அனுப்பிய விஷயம் யாவரும் கவனிக்கத் தக்கதாம்.

நன்மாதிரி :—டில்லி புரி : ஸ்தேவான் வித்தியாசாலை மாணாக்கர் தங்கள் அற்ப சொற்ப விஷயத்திற்கும் பணத்தைச் செலவிடாது சேர்க்கும் பணத்தை வாரந்தோறும் நமது சங்கத்துக்கு அனுப்பி வருவது மாணாக்கர் செய்யும் வேலையைக் காட்டும்.

மோசபொத்தாமியா :—மோசபொத்தாமியாவில் யுத்தகளத்திலிருக்கும் பூர்டுபாஷை சகோதரர் தங்கள் ஞாயிறு தேவாராதனையில் வசூலாகும் காணிக்கையை நமது சங்கத்துக்கனுப்புவதை நாம் நினைக்கும்போது யுத்தகளத்திலும் இந்து தேசத்து இரக்ஷண்ய வேலை நடக்கிறதென்றே சொல்லத் துணியலாம்.



கட்டணம் :—1917-ஜனவரி முதல் மார்ச்சு

| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை ராஜ்யம் | ... | 1250 | 7 | 5 |
| சூரிய கிறிஸ்தவர்கள் | ... | 475 | 0 | 0 |
| லுத்தரன் சபை | ... | 290 | 0 | 0 |
| மேற்கு இந்தியா | ... | 270 | 10 | 3 |
| மத்திய இந்தியா | ... | 289 | 13 | 0 |
| ஐக்கிய மாகாணம் | ... | 390 | 9 | 0 |
| வடகிழக்கு இந்தியா | ... | 78 | 11 | 0 |
| பஞ்சாப் | ... | 233 | 5 | 9 |
| பர்மா | ... | 0 | 1 | 0 |
| நானாவித சேர்ப்பு | ... | 489 | 1 | 1 |
| ரூ | | 3767 | 10 | 6 |

நாகப்பட்டணம் N. M. S. கிளைச்சங்கம்.

ஏப்பிரல் மாதம் 16-உ மேற்படி சங்கத்தின் வருஷாந்திர கூட்டம் நடந்தது. அச்சமயத்தில் கனம் ஏன். சாமுவேல் பி.ஏ., அக்கிராசனாதிபதியாகயிருந்து கூட்டத்தை நடத்தினர். ரங்கூனிலிருந்து வந்திருக்கும் கனம் பி. தாவீது ஜெபம் செய்து கூட்டத்தை ஆரம்பித்தனர். சிகாமணி, வெண்கடராவ், பக்தூல் என்பவர்களுடைய குமாரத்திகள் இச்சமயத்திற்கென்று எழுதப்பட்ட கீதத்தை பாட கனம் ஏபல் வீணை வாசித்தனர். கனம் வெண்கடராவ் மேற்படி சங்கத்தின் வருஷாந்தர ரிபோர்ட் வாசித்தனர். இந்திய சுய தேச மிஷனரி சங்கத்தின் வேலையைக்குறித்து சுருக்கமாக சில குறிப்புகளை எடுத்துக்காட்டி, அச்சங்கத்திற்கு கடந்த வருஷங்களில் நேர்ந்த கஷ்டங்களில் தேவன் எவ்விதமாக உதவிபுரிந்து வழிவகைகளை ஏற்படுத்தினர் என்பதைக்குறித்து பேசினார். விசாகப்பட்டணம் கிளைச்சங்கத்தின் சம்பந்தமாக மூன்று கூட்டங்கள் நடந்தன. வருஷத்து வருமானம் ரூ 127-12-0. இது தவிர மேற்படி பட்டணத்தின் எஸ். ஐ. யூ. சபையார் ரூ 32-12-0 சேகரித்தார்

கள். வருஷ கடைசியில் ரூ. 28-13-0 இந்த சபையார் அனுப்பினார்கள். அப்பட்டணத்திலிருக்கும் மூன்று சபைகளும் கிறிஸ்மஸ் காலை ஆராதனையில் ரூ. 13-7-0 சேர்த்தனர். சென்னையில் அதிக உற்சாகத்துடன் வேலை செய்து வந்த சகோதரிகள் எழுதிக்கேட்டதின் பேரில் Mrs. D. Lazarus பதின் மூன்று ரூபாயும், Mrs. Venkata Row இருபது ரூபாயும் சேகரித்தார்கள். தெலுங்கு Baptist சபை ரூ. 5-6-0 கொடுத்ததுமன்றி மாதம் ஒருமுறை ஒழுங்காக பணம் சேர்க்க தீர்மானித்திருக்கிறார்கள். நங்கவள்ளியில் நெருப்பினால் நடந்த சேதத்திற்கு சில நண்பர் ரூ. 10 அனுப்பினார்கள். விசாகபட்டணம் N. M. S. Band கிறிஸ்மஸ் தினத்தன்று ரூ. 20 வீடு வீடாய் சென்று சேர்த்தார்கள். இவ்வளவு உற்சாகமாக உதவிபுரிந்து வந்த நண்பர் தங்கள் வீடுகளில் அனுதினமும் பிடி அரிசி முயற்சி செய்யவேண்டுமென தீர்மானித்தனர். ரிப்போர்டு வாசித்து முடிந்த பின்னர் Misses Venkata Row and E. Bhaktul: Deena Benjamin and Nancy Sigamoney இச்சங்கத்தின் வேலையைக் குறித்து சம்பாஷணை ரூபமாக ஒரு விஷயம் நடத்தினர். கனம் P. S. இஸ்ரவேல் சில தெலுங்கு சுலோகங்களை உரைத்தனர். எவரும் உற்சாகம் அடையும்படி கனம் N. D. Abel ஒரு பிரசங்கம் செய்தபின் அக்கிராசனாதிபதி சில வார்த்தைகளை பேசி கூட்டத்தை முடித்தனர்.

## சங்கத்துக்கு மாதர்கள் ஊழியம்.

நமது சங்கத்துக்கு ஆடவர்கள் ஊழியம் இஷ்டமாயினும், ஆங்காங்கு மாதர்கள் தங்களால் கூடிய வேலை செய்வது மிக்க சிறப்புடைத்தே. சீர்திருத்தம், கல்வியறிவு தேர்ச்சியடைந்திருக்கும் ஸ்திரீகள் ஒன்றுகூடி நடத்திவருவது வேறு. அவ்வித உயர்பதவியடைந்திருக்கும் சிலர் தங்கள் சௌகரியத்தை சிறிது காலம் மறந்து கிராமங்களுக்குச் சென்று நாகரீகம், வித்தியாப்பியாசம் அற்ற கீழ் வகுப்பினர்களைக் கண்டு சந்தித்து ஜனசமுதாய ஊழியம், இரக்ஷணிய ஊழியம் செய்வது வேறு.



வட இந்தியாவில் எல்லன் ஹோர் அம்மாள் நமது சங்கவேலை சம்பந்தமாய் ஸார்ஸாவுக்குச் சென்று தெருபெருக்கும் வகுப்பாரைச் சந்தித்து அவர்களது குறைவுகளை விசாரித்தனர்கள். வீடு, பாத்திரம் உடுப்பு முதலியவைகளைப் பார்வையிட்டு சுகாதார விஷயபாடங்களை எடுத்துக்காட்டி இரக்ஷணிய வைத்தியரின் குணங்களையும் தெரிவிக்கக் கூடியவர்களாயிருந்தனர்கள். நகரங்களில் ஜனசமுதாய ஊழியம் செய்வதைவிட கிராமங்களில் செல்வது மிக்க கஷ்ட நஷ்டமென்பதை யார் மறுக்கக்கூடும். நமதிந்துதேய மாதர் தங்கள் வகுப்பினரின் நிர்பந்த நிலைமையைக் கவனித்து தங்கள்மீது நிற்கும் உத்தரவாதத்தை நினைப்போர் மிக்க கொஞ்சம்.

சென்னையிலுள்ள நமது சகோதரிகளில் சிலர் பல பொருட்களைச் சேர்த்து நமது சங்கத்துக்கு விற்பனைக்கொடுப்பதும் சந்தோஷமே. நமதிந்து தேசத்தில் ஆங்காங்கு வித்வ சிரோமணிகள் கூடி பிறதேசம் செல்லும் ஸ்திரிகளின் நிலைமையைத் துரைத்தனத்தாருக்கு எடுத்துக் காட்டியும், அறிவீனமுள்ள சகோதரிகள் நமது தேயத்திலேயே எவ்வாறு அடிமைகளாக நமது தேயத்தார் இருப்பதையறிந்து அவர்கட்கு நீட்சியும் சுவாதீனமும் கிடைக்கும்படியாக உழைப்பார்களானால் புகழத்தக்கதாம். ஆனால் வாயால் வல்லமையைக்காட்டி நடக்கையால் ஒன்றுமாகாதிருக்குமானால் என்ன பலன்.

சிலமுறை காலங்களில் வித்வசிரோமணிகள் நமது சங்கத்துச் சம்பந்தமாய் மேற்கூறிய அம்மாள் மாதிரியைப் பின்பற்ற முயலுவார்களானால் எத்தனையோ நன்று பயக்கும். கடவுள் அருளினவரம், தனம், தங்களிலும் கீழான நிலையிலுள்ளவர்களின் ஈடேற்றத்துக்குக் கையாடுகிறதனால் தங்கள் உத்தரவாதத்தை நிறைவேற்றப் படுகிறதென்று நாம் சொல்லக்கூடியவர்களாயிருப்போம். அன்பும் கடமையும், நமது ஊழியத்தில் வெளிப்படவேண்டியது. பெற்றோர், சிநேகிதர் பந்துக்களைவிட்டு சௌகரியங்களையும் மறந்து நமது சங்கத்திற்கென்று உழைக்கும் சகோதரர் வேலை, குடும்பங்களை நினைவு

கூர்ந்து அவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய விஷயங்களைச் செய்வோர் மிக்க கொஞ்சம். மேற்கு தேசங்களில் உள்ள ஸ்திரிகள், மாணாக்கர், வர்த்தகஞ்செய்வோர், நமது தேசத்தில் சுவிசேடவேலை செய்யும் குருக்களையும், அவர்களது குடும்பங்களையும் நினைத்துக் கடிதம், அவுழ்தம், புத்தகம், கட்டணங்கள் சாதாரண காலத்திலும், விசேஷித்த பண்டிகை காலத்திலும் அனுப்புவைப்பதைக் கவனிக்கும் நமது தேய ஸ்திரிகள், அவ்விதமாதிரியைப்பின் பற்றுவது கூடாதோ.

நமது தேசத்தில் மிஷியோன் வேலை விழாது நடப்பதற்குக் காரணம், அந்நிய தேசத்து ஸ்திரிகளும் அவர்களது நன்கொடைகளுமே என்பதை யார் மறக்கலாம். நமது சங்கத்திற்கென்று ஊழியஞ்செய்வோர் பிழைக்கவோ, கௌரவத்துக்கோ அல்லவே, கடவுள் மகிமையும், நமது தேயத்து மீட்சியும் வெளிப்படுவதற்காகவல்லவோ உழைக்கின்றார்கள்.

மேனாட்டார் மாதிரி நமதிதயத்திற் பதிந்து நமக்குள் நற்பலனைத் தரவேண்டுமானால் சகோதரருடன் ஸ்திரிகளும் அவரவர் நிலைமைக்குத் தகுந்தவாறு உழைக்கிறதானால் நமது சங்கவேலை மேம்பாடடையுமென்பதற்குச் சந்தேகமில்லை.

---

Printed and Published by Mr. K. T. Paul at the T. A. C. Press, Salem.

# இந்திய சுயதேச மிஷனரி சங்க. நிபிகை.

Vol. IX JUNE-JULY 1917 Nos. 6 & 7.

THE REGISTRAR OF ... 5 - OCT 1917 ... MADRAS



சங்கம் வேலைசெய்யும் இடங்கள்

## ரீவா மிஷன் ரிப்போர்ட்

(1916-'17)

## இந்திய சுயதேச மிஷனரி சங்கக் கிளையாகிய

# லுத்தரன் ரீவா மிஷன்.

### முதல் ரிப்போர்ட் (1916—1917)

#### ஆரம்ப முயற்சி

சர்வ இந்திய லுத்தரன் சபையாரால் இந்திய சுயதேச மிஷனரி (N. M. S.) சங்கத்தின் சம்பந்தமாய் இம்மிஷன் 1916-௵ ஏப்ரல் மாதக்கடைசியில் ஸ்தாபிக்கப்பட்ட கிருபை புரிந்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

ஐரோப்பிய, அமெரிக்க மிஷன்கள் அநேக வருஷங்களாய் இந்நாட்டில் உழைத்துப் பெரிய சபைகளைச்சேர்த்திருக்கிறார்கள். இப்படிச்சேர்க்கப்பட்ட இந்திய சபையும் இப்பரதகண்டம் கிறிஸ்துவின் தனிக்கொடிக்குள் வரவேண்டும் என்னும் ஏகநோக்கமுடையதாய், சுவிசேஷ பிரபல்லிய ஊழியத்துக்குத் தன்னை முற்றிலும் பிரதிஷ்டை செய்வது அவசியம் என்பதே இந்திய மிஷனரி சங்கத்தின் கொள்கை. இக்கொள்கையை நிறைவேற்ற அது தன் ஜீவியத்தின் முதல் பத்து வருஷங்களில் ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட ஐந்து இந்திய பிரிவுகளில் மிஷன் வேலையாரம்பித்துச் செய்து வந்தது. இது வேலை செய்யும் ஒவ்வொரு இடத்திலும் கிறிஸ்தவ திருச்சபையின் ஒரு கிளையையொட்டியே வேலை நடந்து வருகிறது. திருஷ்டாந்தமாக, பஞ்சாப் மண்ட்காமரி தாசிலில் ஆங்கில திருச்சபையின் சம்பந்தமாயும், ஐக்கிய மாகாண நூக்கர் தாசிலில் பிரெஸ்பிட்டீரிய சபை சம்பந்தமாகவும், வடகன்னட கார்வார் தாலுகாவில் சூரிய கிறிஸ்தவ சபையின் ஐக்கியத்திலும், ஆமதநகருக்கடுத்த கர்ஜட், கர்மாலா தாசில்களில் அமெரிக்க மராட்டிய சபையின் சார்பிலும், சேலம் ஜில்லா ஓமலூர் தாலுக்காவில் தென்னிந்திய ஐக்கிய சபையின் சம்பந்தமாகவும் மிஷன் வேலை துவக்கப்பட்டது.

இந்திய சுயதேச மிஷனரி சங்கம் ஸ்தாபகமான கால முதற்கொண்டு, இந்திய சபையின் ஓர் முக்கிய பகுதியாகிய இந்திய லுத்தரன் சபையை, இச்சுவிசேஷ வேலை செய்யத் தொடங்கும்படி இச்சங்கம் ஏவிவந்தது. புறதேச லுத்தரன் மிஷன்களால் ஸ்தாபிக்



கப்பட்ட இந்திய சபைகள் ஒன்றுகூடி மிஷன்வேலை ஆரம்பிக்கும் விஷயத்தைக்குறித்து, பலமிஷன்களின் குருமார் கூட்டங்களிலும், பொதுக்கூட்டங்களிலும் ஆலோசிக்கப்பட்டு, அவ்வேலை சபையின் ஜீவியத்துக்கு அத்தியாவசியமென்றும், அது லுத்தரன் சபையின் கடமையென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. சர்வ இந்திய ஐரோப்பிய அமெரிக்க குருமார் கூட்டமும் பலமிஷன்களின் பொதுக் கூட்டங்களும் லுத்தரன் சபைகள் ஒன்றுகூடிச் செய்யும் மிஷன் வேலையை இந்திய சுயதேச மிஷனரி (N. M. S.) சங்கத்தின் சம்பந்தமாய்ச்செய்வதென்றும் தீர்மானித்தார்கள்.

1914-௵ ஜூன்-மீ திருச்சியில் கூடின லீப்சிக், சுவேதிஷ் தமிழ் சபைகளின் பொதுக்கூட்டம் இந்திய சுயதேச மிஷனரி சங்கத்தையொட்டி மனப்பூர்வமாய் வேலை துவக்குகிறதென்றும், இதற்கு நமது சபைகள்தோறும் விசேஷித்த சோப்புகள் செய்யப்பட வேண்டுமென்றும், நமது சபை வேலைசெய்வதற்குச் சர்வ இந்திய லுத்தரன் சங்கம் குறிக்கும் இடத்தை நாமும் ஒப்புக்கொள்ளுகிறதென்றும் (Resolution 9), N. M. S. சம்பந்தமாய் நாம் துவக்கும் மிஷியோன் வேலைக்குச் சீர்திருத்தலின் 4-ம் சதோற்சவ சேர்ப்பை நாம் உபயோகிக்கிறதென்றும் (Resolution 11), தீர்மானம் செய்தது.

இதற்கேற்ப, N.M.S. சங்கத்தார் லுத்தரன் சுவிசேஷ வேலைக்காக குறித்த ரீவா நாடு, இவ்வேலைக்கு ஏற்றவிடமென்று சர்வ இந்திய லுத்தரன் மிஷனரிமார் சங்கமும் ஒப்புக்கொண்டது. ஆகவே, N.M.S. சங்கத்தில் பிரயாணக் காரியதரிசியாய் 4 வருஷம் வேலை செய்து பிறகு தரங்கை வேதசாஸ்திர வகுப்பில் கற்றுத்தேறின கனம் சா. ஞானாபரணம் பிரசங்கியார் ஹிந்தி பாஷை கற்க மத்திய மாகாணங்களுக்குச்சென்றார். அவர் ஜப்ல்பூரில் ஒரு வருஷம் உபாத்தியார் வேலை செய்து, அவ்விடத்திலுள்ள கிறிஸ்தவ ஆண் போர்டிங்கில் விசாரணைக்காரராய்த் தங்கியிருந்து, ஹிந்தியில் மிஷனரி சங்கத்தால் நடத்தப்பட்ட முதல் பரீட்சையில் தேறினார். ஆயினும் ரீவா மிஷன் இன்னம் ஸ்தாபிக்கப்படாததால், ரீவாவுக்கு மிஷனரியாக ஆயத்தப்பட்ட நம் சகோதரன் திரும்பவும் N. M. S. பிரயாணக் காரியதரிசியாய் மத்திய இந்தியாவில் வேலை செய்துவந்தார்.

1914-௵ ஆகஸ்டு-மீ நமது ராஜாங்கத்தார் ஐரோப்பிய யுத்தத்தில் தலையிட்டதால், தமிழ்நாட்டு லுத்தரன் சபைக்கு அநேக கஷ்டங்கள் நேரிட்டன. ஆதலால் இம்மிஷன் உடனே ஏற்படுத்தப்பட முடியாமற்போயிற்று. ஆயினும் நமது மிஷனரிமாரும்

இவ்விஷயத்தில் அதிக ஊக்கமுள்ளவர்களாயிருந்து இந்திய சபைகளுக்குச் சுவிசேஷ முயற்சியிலிருக்க வாஞ்சையை உற்சாகப்படுத்தி வந்தார்கள். ஆகவே, 1915-ஆம் மேயீ இந்திய சுயதேச மிஷனரி சங்கக் கௌன்சிலில், லோக்கல் சபைகளின் பிரதானபதியார்களுக்கு மகா-ள-ள-ஸ்ரீ ஜே. டி. ஆசீர்வாதம் அவர்கள் B.A., L.T. ஆலோசனை சங்கத்தாருக்கு எழுதின கடிதம், புதிதாய் நியமிக்கப்பட்ட இந்திய ஆலோசனைக் கமிட்டிக்கனுப்பப்பட்டது. அச்சமயம் நமது சுவிசேஷ பிரபல்லிய கமிட்டியார் அனுப்பிய வேறொரு ஆலோசனையையும் அவர்கள் ஆராய்ந்து, தமிழ்நாட்டு லூத்தரன் பொதுக் கூட்டத்தீர்மானப்படியே ரீவாவில் வேலையாரம்பிப்பது தகுதியென்று தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். இந்த ஆலோசனையைப்பற்றி, சென்னை சர்ச் ஆப் ஸ்வீடன் ஆலோசனை சங்கத்தார் நாமத்தில், கனம் டி. பெக்மன் ஐயர் 1915-ஆம் கடைசியில் பொதுக்கூட்டத்தீர்மானங்களுக்கு உத்தரவாக வெளிப்படுத்தின அறிவிப்பில், N. M. S. சங்கத்தைப்பற்றிய இத்தீர்மானங்களையும் உற்சாகமாய் நிறைவேற்றத் தடையில்லையென்று சபைகளுக்குத் தெரிவித்தார்.

## நடைபெற்றுக்கான ஒழுங்குகள்

ரீவாவில் வேலை தொடங்கவேண்டுமென்று தீர்மானமானதாலும், நமது மிஷனரி, பாஷை கற்று வேலைக்குத் தயாராயிருக்கிறதாலும், லூத்தரன் கிறிஸ்தவர்கள் இவ்வேலையில் ஊக்கமுள்ளவர்களாகி, பொருளுதவி செய்துவந்ததாலும், மேற்சொன்ன N.M.S. கௌன்சில், அவயவம் 1916-ஆம் வருஷ விஷயங்களுக்குப் பண்டிதரையாவது வேலையைப் பரிசீக்க எல்லா ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் குறிப்பு கட்டளையிட்டு ஒரு காகிதம் எழுதினதினமேல், தமது ஆலோசனை சங்கத்தார் தமிழ்நாடு லூத்தரன் சுதேச மிஷனரி கமிட்டி யொன்றை ஏற்படுத்தி, அக்கமிட்டியை சுவேதிக்க சபைகளில் சுவிசேஷ வாஞ்சையுண்டுபண்ணி, ரீவா வேலைக்குப் பொருள் சேர்க்கவும், இதர லூத்தரன் மிஷன் சபைகளின் உதவிபெற ஒழுங்குகள் செய்யவும் கேட்டார்கள். அக்கமிட்டியின் அவயவங்கள்:

கனம் ஞா. தேவசகாயம் ஐயர், B.A., சென்னை (தலைவர்)

கனம் ஞா. காப்ரியேல் ஐயர், மதுரை

மகா-ள-ள-ஸ்ரீ டி. காப்ரியேல் அவர்கள் B.A, L.T., தஞ்சை

" எஸ். ஞானசந்திரம் அவர்கள், தஞ்சை

" ஜே. டி. ஆசீர்வாதம் B.A., L.T. சென்னை (காரியதரிசி)

இக்கமிட்டி இனி தமிழ்நாட்டு லூத்தரன் பொதுக்கூட்டத்தால் வருஷந்தோறும் தெரிந்தெடுக்கப்படும்.



இக்கமிட்டி 1916-ஆம் மார்ச்-மீ 5-உ சென்னையில் கூடி வந்து பின்வரும் ஏற்பாடுகள் நடைபெறவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

I. சென்ட்ரல் கமிட்டி. இதன் வேலை:

i. கிளைச்சங்கங்களின் வேலையைப்பற்றி வருஷா வருஷம் பிரசுரித்தல்,

ii. தமிழ் சினோட் கூட்டத்திற்கு மூன்று வருஷ ரிப்போர்ட் அறிவித்தல்,

iii. இந்திய சுயதேச மிஷன் சங்கத்தாரோடும் இதர லூத்தரன் மிஷன்களின் சென்ட்ரல் கமிட்டிகளோடும் சம்பந்தப்பட்டிருந்து ரீவா மிஷன் வேலையை நடத்த ஒரு சர்வ இந்திய லூத்தரன் கமிட்டி நியமிக்கப்பட ஒழுங்கு செய்தல்.

II. அந்தந்தச் சபையின் சுதேச மிஷன் கமிட்டி. இதன் வேலை:

i. வாரவாரமோ அல்லது குறிக்கப்பட்ட நாட்களிலோ கூடி, ரீவா மிஷன் வேலைக்காக ஜெபித்தல்.

ii. ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக்கிழமை சாயங்கால தேவாராதனையில் சுவிசேஷ பிரபல்லிய விஷயமாகப் பேசுதல். (இந்த மிஷன் ஆராதனை மாதமாதம் நடத்தப்படவேண்டுமென்று 9-உ பொதுக்கூட்டம் தீர்மானித்திருக்கது.)

iii. ரீவா வேலைக்காகப் பின்வரும் முறையாகப் பணம் தண்டல்:

(a) தங்களிஷ்டப்படி கொடுக்க ஒப்புக்கொள்ளும் சபையாரிடமிருந்து மாதாமாதம் தண்டுதல்.

(b) மாதமாதம் வைக்கும் மிஷன் ஆராதனையில் காணிக்கை எடுத்தல்.

(c) ஒரு மிஷனரி (காணிக்கை) பெட்டியை யாவரும் போகக்கூடிய பொது இடத்தில் வைத்தல்.

வருஷவாரி மொத்தச்செலவு மதிப்பாகிய ரூ. 1200ல் அந்தந்தச் சபைக்குக்கூடுதலாகும் பாகவிதத்தைத் தங்கள் சபையில் ஒத்துப் பேசி விதித்து, வசூல்செய்து அனுப்பும்படி கமிட்டியின் தலைவராகிய கனம் ஞா. தேவசகாயம் ஐயர் கையொப்பமிட்ட கடிதம் எல்லாச் சபைகளுக்கும் அனுப்பப்பட்டு, ஒரு வருஷகாலமாக அங்கங்கே மிஷனரி கூட்டங்களும், பிரார்த்தனைக் கூட்டங்களும், பொருள் சேர்ப்பும் நடந்துவந்தன.

1917-ஆம் ஏப்ரல்-மீ 30-உ வரையில் சர்ச் ஆவ் ஸ்வீடன் மிஷன் சபைகளில் சேர்க்கப்பட்ட தொகை ரூ. 828-9-7.

## ரீவா மிஷன் கமிட்டி

சுவேதிஷ்மிஷன் சங்கத்தாரால் 11-ம் பொதுக்கூட்டம் கூடியபோது ரீவாமிஷன் காரியங்களை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட சுதேச மிஷனரி கமிட்டியின் மற்றொரு வேலை, இதர லுத்தரன் மிஷன் சபைகளும் ரீவா மிஷனை ஆதரிக்கும்படி அவர்கள் உதவியைப்பெற ஒழுங்கு செய்வதுதான். ஆகவே இக்கமிட்டியின் தீர்மானப்படி, அதன் காரியதரிசி முந்தமுந்தத் தென்னிந்தியாவிலுள்ள லுத்தரன் மிஷன் சங்கங்களுக்குச் சுவேதிஷ்மிஷன் சபைகளில் நடந்த ஏற்பாடுகளைத்தெரிவித்து, அந்த மிஷனிலே ஒரு தனிக்கமிட்டி ஏற்படுத்தவும், சர்வ இந்திய லுத்தரன் சுதேச மிஷன் கமிட்டியில் அவயவமாயிருக்க ஒருவரைத்தெரிந்துகொள்ளவும் ஒழுங்குசெய்யக் கேட்டுக்கொண்டார். இதற்கேற்ப பின்வரும் அவயவங்கள் நியமிக்கப்பட்டார்கள்.

குண்டூர் மிஷன்: மகா-ள-ள-ஸ்ரீ V. M. ஜான் அவர்கள் B.A., L.T.
ராஜமந்திரி மிஷன்: கனம் P. பரதேசி ஐயர், ராஜமந்திரி;
ஒகியோ மிஷன்: கனம் D. புன்னிதம் ஐயர், நாயுடுபேட்டை;
டேனிஷ் மிஷன்: மகா-ள-ள-ஸ்ரீ V. சக்கரை அவர்கள் B.A., B.L., சென்னை.

## பொருளாதார நிலை

சுவேதிஷ் மிஷன் N. M. S. கமிட்டி அவயவங்கள் ஐவருடன், இந்நால்வரும் கூடின கமிட்டியே தற்சமயம் தென்னிந்திய லுத்தரன் சுதேச மிஷன் கமிட்டியாய், ரீவா மிஷன் வேலையை N.M.S. கமிட்டியாரோடு சம்பந்தமாய் நடத்தி வருகிறார்கள். வட இந்தியாவிலுள்ள மற்ற லுத்தரன் மிஷன்களும் ரீவா கமிட்டியுடன் சம்பந்தப்பட்டு வேலை செய்ய இக்கமிட்டி ஏற்றவேளையில் ஒழுங்கு செய்யும். இதர மிஷன்கள் செய்த உதவி பின் வருமாறு:

குண்டூர் மிஷன், ரூ. 113-0-0
டேனிஷ் மிஷன் ரூ. 76-0-0.
ராஜமந்திரி மிஷன் ரூ. 60-0-0
ஒகியோ மிஷன் ரூ. 30-0-0

ரீவா மிஷன் கமிட்டிக்கு அனுப்பப்பட்ட தொகைகளையன்றி, பின்வரும் தொகைகள் நேராக N.M.S. பொக்கிஷதாரிக்கு அனுப்பப்பட்டன.



சுவேதிஷ் மிஷன் பெத்லகேம் சபை, ரங்கூன் ரூ. 60-0-0,
ரங்கூன், Mr. A. C. தாவீது மூலமாய் ரூ. 5-0-0
A friend, பட்டுக்கோட்டை ரூ. 50-0-0,
டேனிஷ் மிஷன் திருக்கோயிலூர் சபை ரூ. 50-0-0.

நன்கொடைகள்: கனம் D. பெக்ஸல் ஐயர் தாம் வெகுகாலம் உபயோகித்த நன்றாய்ப்பழகின ஒரு கைக்கின்னரமும் (a violin), வட இந்தியாவிலுள்ள ஒரு ஆங்கில மிஷனரி ஒரு கைத்துருத்திக் கின்னரமும் (a hand harmonium) ரீவா மிஷன் வேலைக்காகக் கொடுத்தார்கள். இந்த நல்ல ஈவுகளுக்காக அவ்விருவருக்கும் கமிட்டியார் தங்கள் நன்றியறிதலைத் தெரிவிக்கிறார்கள்.

## மிஷன் ஸ்தானம்: ரீவா.

இது மத்திய இந்தியா என்னும் 136 சுதேச அரசாங்க நாடுகளமைந்த தேசப்பிரிவில் கிழக்கேயுள்ள ஓர் மலைநாடான சீமை. குவாலியர் நீங்கலாக, ரீவாவே மத்திய இந்திய நாடுகளில் மிகப்பெரிது. இந்நாட்டில் மாரிகாலத்தில் குளிர் அதிகம், கோடைகாலத்தில் உஷ்ணம் அதிகம் இந்நாட்டின் செல்வம் அதன் காடுகளும் நிலக்கரியுமே. மேட்டு நிலங்களில் கோதுமை, பயறு, வாற்கோதுமை, பருத்தி முதலியவை பயிராகின்றன.

விஸ்தீரணம்: 13,000 சதுர மைல். மைசூரில் பாதி, திருவாங்கூரைப்போல் இருமடங்கு, புதுக்கோட்டையைப்போல் 12 மடங்கு பெரியது.

ஜனத்தொகை: 15 லட்சம். மலை நாடானதால் இந்நாடு அதிக ஜனநெருக்கமில்லாதது. இதன் ஜனத்தொகை திருவாங்கூர் ஜனத்தொகையில் பாதி, மைசூர் ஜனத்தில் கால்வாசி, புதுக்கோட்டையின் ஜனத்தொகைக்கு நான்மடங்கு, திருச்சி ஜில்லாவின் ஜனத்தொகைக்குச்சமம்.

ஜனம். ரஜபுத்திரர், மகாராட்டியர், குன்றவர், பிகுலர் என்னும் பூர்வீக ஜாதியார், பிலகர் என்னும் ரஜபுத்திர பிகுல கலப்பு ஜாதியார். இவர்கள் மிச்சமாய்ப்பேசும் பாஷை, ஹிந்தி.

அரசாங்கம். இந்நாட்டின் அரசன் இந்திய அரசர் வகுப்புகளில் இரண்டாம் வகுப்பைச்சேர்ந்தவர். இவர் ஒரு ஹிந்து. தென்னாட்டுச் சுதேச அரசாங்க நாடுகளில் சுவிசேஷ வேலைக்கிருக்கும் அனுகூலங்கள் இந்நாட்டில் கிடையாது. ஐரோப்பியர் அங்குதங்கி வியாபாரமோ, வேறெந்தத் தொழிலோ செய்ய உத்தரவில்லை. ஆதலால் இதுவரையிலும் புறதேச மிஷன்கள் ஒன்றும் அங்கு வேலை




REWAH — STATE



செய்ய இடமில்லாமற்போயிற்று. ஐரோப்பியர் சுவிசேஷ வேலை செய்யக்கூடாதிருக்கிற இடத்தில் வேலை செய்ய எத்தனிப்பது நம் சுதேச சங்கத்தின்மேல் விழுந்த பெருத்த கடமை.

இந்நாட்டில் லுத்தரன் சபையார் சுவிசேஷவேலை செய்வது தகுதி என்பதற்கு ஓர் விசேஷித்த காரணம் உண்டு. ரீவாவைச் சுற்றியுள்ள பல்நாடுகளில் பூர்வீக ஜாதியார் மிகுதி. சோட்டா நாகப்பூரில் கோஸ்னர் மிஷனும், மத்திய மாகாணத்தில் சுவேதிஷ் மிஷனும் இச்சாதியாரிடம் வெகு பயனுற உழைத்து, பெருஞ்சபைகளைச் சேர்த்திருக்கிறார்கள். ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட இச்சாதியார் மிச்சமாய் லுத்தரன் சபையாராயிருப்பதால், ரீவா நாட்டிலுள்ள இச்சாதியாரும் லுத்தரன் சபையிலாகியதால் கிறிஸ்துவை அறியவேண்டியது தகுதியென்று யோசித்தே N.M.S. சங்கத்தார் இந்நாட்டை லுத்தரன் சுவிசேஷ வேலைக்குக் குறித்தார்கள். இந்நாட்டில் வேலைசெய்வதற்கு வேண்டிய ஊழியர், கோஸ்னர் சுவேதிஷ் மிஷன் சபைகளில் நமக்கு எளிதில் கிடைப்பார்கள்.

## ரீவாவில் நடந்த வேலை.

கனம் சா. ஞானாபரணம் ஐயர் 1916-வது ஏப்ரல்-மீ 20-உ ரீவா நாட்டுக்கு மேற்கு பாகத்திலுள்ள கட்னி என்னும் இடத்தைத் தம்முடைய வாசஸ்தானமாக்கிக்கொண்டு, அங்கிருந்து ரீவாவின் பலவிடங்களுக்கும் சென்று, எவ்விடத்தில் எவ்வாறு சுவிசேஷ வேலை துவக்கலாமென்று ஆராய்ந்துவந்தார். கட்னி, ரீவா நாட்டின் எல்லையில் ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட மத்திய மாகாணங்களில் ஓர் இடம். இவ்விடத்திலிருந்து ரீவாவுக்கு இரண்டு ரெயில் பாதையுண்டு. ஒன்று வடகிழக்கே சென்று அலகபாத் என்னும் நகரைச்சேருகிறது. மற்றொன்று ரீவாவின் தென்பாகத்திலுள்ள இரு பெரிய தாசில்களைக் கடந்து, ஆங்கில தாசிலாகிய பிலாஸ்பூரை அடைகிறது. இவ்விரண்டு மார்க்கமாகவும் நம் மிஷனரி அடிக்கடி பிரயாணம் செய்து, அந்நாட்டின் ஜனங்களோடு சம்பாஷித்து வந்தார். இப்பிரயாணங்களில் அவர் சந்தித்தவர்களில் மிச்சமானவர்கள் இந்துக்களே. ரஜபுத்திர, மராட்டிய ஜனங்கள் அதிக மதவைராக்கியமுடையவர்கள். துளசிதாஸ் ஹிந்தியில் எழுதியுள்ள பேர்பெற்ற ராமாயணமே அச்சனங்களுக்கு வேதம். தென்னாட்டாரைவிட, அவர்களுக்கு ராமபக்தி அதிகம். இப்பேர்ப்பட்டவர்களிடத்தில் ஆங்கில இந்தியாவில் வேலை செய்வதோ எளிதல்ல. அப்படியிருக்க, அதிக மதவைராக்கியமுள்ள மத்திய இந்தியாவின் ஒரு சுதேச அரசாங்க நாட்டில் வேலை செய்வதின் கஷ்டத்தை நாம்

சொல்லாமலேயறியலாம். நமது மிஷனரி அதிக ஜாக்கிரதையாகவும், ஞானமாகவும் இந்த வேலை செய்யவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் தற்சமயம் அங்கு சுவிசேஷ வேலைக்குத் திறக்கப்படுகிறதென்று நாம் நம்பியிருக்கிற கதவு சாத்தப்பட்டுப் போகக்கூடும்.

ஓர் வேளை இந்துக்களிடத்தில் தற்சமயம் வேலை செய்வது உசிதமல்லாதிருந்தால், அந்நாட்டின் பூர்வீக ஜனங்களிடத்தில் வேலையாரம்பிக்கலாமோ என்று ஆராய, சென்ற டிசம்பரில் நமது மிஷனரி ஒரு கஷ்டமான பிரயாணம் செய்தார். இதைக்குறித்த விஷயங்கள் மார்ச்சுமாத அருணோதயத்தில் வெளியாயின.

ரீவாவின் தென் எல்லையில் ஆங்கில நாட்டில் சுக்கல்புரா என்னும் ஓர் கிராமமுண்டு. அது C. M. S. சங்கத்தார் மத்திய மாகாணங்களில் வேலை செய்யுமிடங்களின் வடகோடி எல்லை. அங்கு தற்சமயம் வேலையொன்றும் நடக்கிறதில்லை. அச்சங்கத்தின் தலைவர் Canon ஹென்ஸ்லி ஐயர் கொடுத்த யோசனையின்படி, அதை ரீவாமிஷன் ஸ்தானமாக்கி அதற்கருகேயுள்ள ரீவாவின் பூர்வீக ஜாதியார் குடியிருக்கும் பாகங்களில் சுவிசேஷ வேலை செய்ய வசதியுண்டோவென்று பார்க்க, நம் சகோதரன் போனார். மாரிகாலக் குளிரிலும், காட்டுமிருகங்கள் நிறைந்த காடடர்ந்த மலைநாடுகளிலும் பிரயாணம் செய்து அவ்விடம்போனது அவருக்கு அதிகமன திருப்தியைக் கொடுத்தது. அவர் சந்தித்த ரீவாவின் குன்றல, பிருகா ஜாதியார், ரெயில் மார்க்கப்பிரயாணத்தில் அவர் கண்ட இந்துக்களைவிடச் சுவிசேஷத்துக்கு அதிக மனச்சார்புள்ளவர்களென்று நம்ப இடமுண்டு என்று வெகு சந்தோஷமாய்த் தெரிவித்தார். ஆயினும் இவ்விடம், ரெயில்பாதைக்கும் தந்தி, போஸ்ட் ஆபீசுகளுக்கும் வெகு தூரம் விலகியுள்ள ஒரு சிறு கிராமம். அதைவிட அனுகூலமான இடமகப்படாதபட்சத்தில், அங்கே குடியேறி வேலையாரம்பிக்க ஆயத்தமாயிருந்தார். ஆனால் அவர் கட்னிக்குத் திரும்பின சில காலத்துக்குள் கூட்டம் கூடிய C. M. S. சங்கத்தார், அவ்விடத்தை நமது வேலைக்குக் கொடுப்பது உசிதமல்ல என்று நிர்மானித்து விட்டதால், சுக்கல்புராவைக்குறித்த யோசனையை நாம் விட்டுவிட நேரிட்டது.

இதற்குப்பின் நம்மிஷனரி வேறொரு பிரயாணம் செய்தார். கட்னிக்கும் சுக்கல்புராவுக்கும் மத்தியில் ரீவாவின் எல்லையில் டின்டோரி என்னும் ஓர் இடமுண்டு. இது ஒரு தாலுகாப்பட்டணம். சுக்கல்புராவைப்போல் கிராமமல்ல. அங்குள்ள சர்க்கார் உத்தியோகஸ்தரில் முக்கியமானவர்களைக்கண்டு காரியஅனுகூல



ங்களை யறிந்து இது நம் வேலைக்கேற்ற இடமென்று எண்ணுகிறார். இங்கு ஒரு காலத்தில் சில ஜெர்மன் மிஷனரிமார் ஒரு புது மிஷன் ஸ்தாபிக்க எத்தனித்தபோது, சிலர் மலேரியாக் காய்ச்சலினால் இறந்துபோகவே, மற்றவர்கள் தங்கள் நாட்டுக்குத்திரும்பினதாக டிஸ்டிரிக்ட் கெஸட்டில் சொல்லியிருக்கிறது. அது ஒரு மிஷனும் வேலை செய்யாத இடம்.

இவ்விடத்திற்குப் போவதற்கு முன் நம் சகோதரனின் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. கட்னியிலிருந்த வைத்தியஸ்திரீ சரியான சிகிச்சை செய்யாததினாலே, அவர்கள் பிரசவித்ததிலிருந்து அதிக அசுகீனமாகவேயிருக்கிறார்கள். சீக்கிரம் ஒரு பெரிய ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியதாயிருக்கிறது.

சுக்கல்புரா விஷயம் பிரதிகூலமானதால், பூர்வீக ஜாதியாரை அடைய வேறொரு இடம் தேடவேண்டுமென்னும் ஆசையால், தம் மனைவி பிரசவித்து வியாதியாயிருக்கும்போதே டின்டோரி என்னுமிடத்தைப்பார்க்கப்போனார். அவர் வீட்டை விட்டுப்போயிருந்த காலத்தில் அவர் மனைவிக்குச் சரியான உதவி யாருமில்லாததால் அதிக கஷ்டங்கள் நேரிட்டன. ஆகவே, அவர் நல்ல ஆஸ்பத்திரியுள்ள ஓர் இடத்தில் தங்கி தம் மனைவிக்குச் சிகிச்சை செய்ய 6-மாதம் விடுமுறை கேட்டிருக்கிறார். தாம் பிரயாண வேலை செய்யக்கூடாதிருக்கும்போது நமது சங்கத்தில் சம்பளம் பெற மனதற்று, ஜபல்பூர் ஹைஸ்கூலில் ஆறுமாதம் வேலைபார்க்க எண்ணியிருக்கிறார்.

அவருக்கு உடன் ஊழியராக இன்னொருவரை நியமிக்கவேண்டுமென்று கருதியிருந்த காலத்தில், அவருக்கு நேரிட்ட கஷ்டம், மிஷன்வேலைக்கு நேர்ந்த பெருத்த நஷ்டமே. ஆயினும் எப்பக்கமும் இடையூறுகள் நம்மைச் சூழும்பொழுது வல்லமையுள்ள ஆண்டவர் தமது வேலையை ஆச்சரியமான பிரகாரம் நடத்துவார் என்பதே நமது ரீவாமிஷனின் எதிர்பார்ப்பு. அவர் தமது கிருபைகளை நமக்கு அளித்து நம்மை வழிநடத்திவருகிறார் என்பதே நம் தற்கால அநுபவமும்.

கனம் ஞானாபரணம் ஐயர் சிந்த்வாராவில் சுவேதிஷ் மிஷனைச்சேர்ந்த ஒரு குடும்பத்தைக்குறித்து எழுதியிருந்தார். சால்வே என்னும் அக்குடும்பத்தில் நான்கு சகோதரருண்டு. அதில் மூத்தவர் அங்குள்ள பள்ளிக்கூடத்தலைவர். இரண்டாவது சகோதரர் அங்குள்ள கிறிஸ்தவ ஆண்பிள்ளை போர்டிங்கை நடத்துபவர். மூ

ன்றுவரு சகோதரர் போலீஸ் இன்ஸ்பெக்டர். நாலாவது சகோதரர் பம்பாய் சர்வகலாசாலையில் B. A., LL.B. பரீட்சைகளில் தேறி, வக்கீல்வேலை பார்ப்பவர். இவர்கள் மகாராட்டிய கிறிஸ்தவர்கள். சுவிசேஷ மிஷன் வேலையில் அதிக சிரத்தையுள்ளவர்கள். இவர்களுக்கு விளையாட்டுச்சம்பந்தமாய் மத்திய இந்தியாவில் சில ராஜாக்களையும் தெரியும். அவர்களுக்குச் சிநேகிதரான ரட்லம் ராஜா தற்சமயம் ஐரோப்பா யுத்த முனையிலிருக்கின்றார். நமது ரீவா மிஷன் வேலையைக் குறித்து இவர்களுக்கு பேமீ மகத்தியில் தான் தெரிய வந்தது. இவர்கள் நம் மிஷனரிக்கு வந்த கஷ்டங்களையும், அங்கு சுவிசேஷவேலைக்குள்ள இடையூறுகளையும் அறிந்து, இம்மிஷன் வேலையில் ஊக்கமுடையவர்களாய்த் தாங்களே, கூடுமானால் நமது மிஷனரியையும் அழைத்துக்கொண்டு, பிரயாணம் செய்து, அவசியமானால் ரீவா அரசனையும் கண்டு, வைத்திய, பள்ளிக்கூடவேலையுடன் சுவிசேஷவேலையையும் துவக்க என்ன ஏற்பாடு செய்கிறதென்று ஜூன் மாத முடிவுக்குள் ரிப்போர்ட் செய்யவாக்களித்திருக்கிறார்கள். அவர்கள் நல்ல கிறிஸ்தவர்களாகவும் அந்நாட்டை நன்றாய் அறிந்தவர்களாயுமிருப்பதால் அவர்களை நம்மாண்டவர் இத்திரு ஊழிய விர்த்திக்கென்று உபயோகிப்பாரென்று நம்பக்காரணமுண்டு. நாம் நினைக்கிறபடி அவ்வளவு கஷ்டங்கள் ரீவாவிலிராதென்றும், அப்படியே கஷ்டங்களிருந்தாலும், ரீவா வேலையில் மனந்தளர்ந்து போகவே கூடாதென்றும், நம் ஊழியம் அங்கே வல்லமையாய் பலிப்பது நிச்சயம் என்றும் அவர்கள் அபிப்பிராயமுடையவர்களாய்த் தங்களாலியன்ற உதவியெல்லாம் செய்ய வாக்களித்திருக்கிறார்கள்.

மேலும், ஏப்ரில் மாதக்கடைசியில் ரீவாவுக்கு வடக்கேயுள்ள குவாலியர் நாட்டிலிருக்கும் ஒரு கிறிஸ்தவ வைத்தியரிடமிருந்து நாம் எதிர்பாராதவண்ணம் ஒரு கடிதம் வந்தது. அவரின் பெயர் கோஸ்வாமி. இவர் மாமியார் சாட்டர்ஜி அம்மாள் கிறிஸ்தவரானதும், இவர் வைராக்கிய இந்துவாயிருந்து அவர் மனைவி மரணத்துக்கேதுவான வியாதியாயிருந்தபோது ஜெபத்தின் ஆச்சரியமான பலனைக் தம் மனைவி சுகம்பெற, தாமும் தம் மனைவியும் உடனே (1906-வருஷத்தில்) கிறிஸ்தவர்களானதும், அவர் கொஞ்சக்காலத்தில் தம் சர்க்கார் உத்தியோகத்தை விட்டுக் கிறிஸ்தவ வைத்திய ஊழியம் செய்து வருவதும், சென்ற வருஷ N. M. S. பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்தது. பஞ்சாப்பில் வேலைசெய்யும், சுதேச மிஷனரி சங்கத்தின் முதல் மிஷனரியாகிய ஜேம்ஸ் உவில்லியம்ஸ் ஐயர், சென்ற பெப்ருவரியில் அவருடன் தங்கியிருந்ததாகவும், அவரிடத்திலிருந்து N. M. S. சங்கத்தின் வேலையையும் அதன் தேவைகளையும் குறித்து



அநேக காரியங்களை அறிந்திருந்து, தாமும் தம் மனைவியும் இச்சுதேச சங்கத்தில் ஊழியம் செய்யத்தூண்டப்பட்டு, N. M. S. சங்கத்தாருக்குக் கடிதமெழுதினார்கள். இவர் ஓர் பங்காள பிராமணர். தற்சமயம் மத்திய இந்தியாவில் ஒரு கிறிஸ்தவ ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கிறார். இவர் லுத்தரன் கிறிஸ்தவரல்ல. ஆயினும் இவர் ஹிந்தி பாஷையை நன்றாய் அறிந்து குவாலியர் என்னும் சுதேச அரசாங்க நாட்டிலும் வேலைபார்த்த அனுபவமுள்ள வைத்தியராதலாலும், இவரை வைத்திய வேலை செய்யும் மிஷனெரியாகச் சிலகாலத்துக்கு ரீவாவில் வேலைபார்க்க நியமிக்க, N. M. S. சங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்னும் அபிப்பிராயம் ரீவாக் கமிட்டிக்குண்டு.

ஆகவே கனம் ஞானாபரணம் பிரசங்கியார் தன் மனைவியின் வியாதியின் பொருட்டு, கொஞ்சகாலம், ரீவா மிஷன் வேலையை நடத்தக் கூடாதிருக்கும் காலத்திலும் நம் வேலை தடையாகாமல் நடக்கும் என்று எண்ண காரணமுண்டு. ரீவா நாட்டில் மிஷன் வேலை சித்திக்க வைத்திய, பள்ளிக்கூடவேலை உடனே ஆரம்பிக்கவேண்டுமென்பதே ரீவாக் கமிட்டியின் அபிப்பிராயம். கஷ்டங்களை யோசித்து நாம் பின்னடையாமல், மனிதரால் கூடாத காரியங்களை செய்து முடிக்க நம்மை அழைத்திருக்கும் ஆண்டவருடைய வல்லமையால் மகத்துவமான காரியங்கள் நடக்கும் என்னும் திடவிசுவாசத்தோடு, தனிச்சேர்ந்து வேலையை அந்நாட்டில் ஆரம்பிக்கும் வழிவகைகளை ஆண்டவர் நமக்குக் காண்பிக்கவேண்டுமென்றும், இவ்வேலைக்குத் தேவையான மட்டும் தமது ஊழியரை எழுப்பியருளவேண்டுமென்றும் நாம் உட்கருத்தாய் மன்றாடுவோமாக.

மிஷியோன் வேலைக்கு ஆண்டவர் தாமே நமக்கு வேண்டிய அனுகூலங்களையும் தகுந்த ஆட்களையும் தந்து, இத்திரு ஊழியத்தை வாய்க்கப்பண்ண அவரை வேண்டுவது லுத்தரன் சபைகளெல்லாவற்றின் பேரிலும் விழுந்த கடமை. இக்கடமையை ஒவ்வொருவரும் கவனித்து தாமதமில்லாமல் செய்ய ஊக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ரீவாக் கமிட்டியின் நாமத்தில்,

N. தேவசகாயம் ஐயர்,
(தலைவர்)

J. D. ஆசீர்வாதம்,
(காரியதரிசி,)

## ரீவா மிஷன் வரவு செலவு கணக்கு.

### வரவு

| | | | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|
| சர்ச் ஆவ் ஸ்வீடன் மிஷன் : | | | | 834 | 10 | 2 |
| சபைகள மாதமாதமனுப்பிய சேர்ப்பு | 828 | 9 | 7 | | | |
| ஆலோசனை சங்க ஆபீஸ் அதிக மாயனுப்பியது | 0 | 0 | 7 | | | |
| N. M. கமிட்டியார் முதல் கூட்ட செலவுக்காக கொடுத்தது | 6 | 0 | 0 | | | |
| குண்டூர் மிஷன் : | | | | 113 | 0 | 0 |
| பொதுக்கூட்டம் | 100 | 0 | 0 | | | |
| ஆபர்லி ஐயர் (10) சிநேகிதர் (3) | 13 | 0 | 0 | | | |
| ராஜமந்தரி மிஷன் : | | | | 60 | 0 | 0 |
| ஆந்தர் கூட்டங்கள் (1917) | 26 | 0 | 0 | | | |
| ராஜமந்தரி சபை (1917) | 34 | 0 | 0 | | | |
| டேனிஷ் மிஷன் : | | | | 76 | 0 | 0 |
| ஆலோசனை சங்கத்தார் | 40 | 0 | 0 | | | |
| சபைகள் | 36 | 0 | 0 | | | |
| ஜகியோ மிஷன் | | | | 30 | 0 | 0 |
| | | | | 1113 | 10 | 2 |

### செலவு

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| N. M. S. சங்கத்துக்கு அனுப்பப்பட்டது | 1074 | 10 | 7 |
| கனம் தானியேல் ஐயர், மதுரை மிஷன் கூட்டத்துக்குப்போக | 8 | 0 | 0 |
| தபால் செலவு | 3 | 0 | 0 |
| சுவேதிஷ் மிஷன் N. M. கமிட்டியின் முதல் கூட்டத்தின் பிரயாணச்செலவு | 5 | 0 | 0 |
| தென்னிந்திய ஆந்தரா N. M. கமிட்டியின் பிரயாணச் செலவு | 19 | 4 | 0 |
| டேனிஷ் மிஷன் காரியதரிசியின் தபால் முதலிய செலவுகளுக்கு | 1 | 3 | 3 |
| அருணோதயத்தில் கணக்குகள் அச்சிட | 2 | 0 | 0 |
| மணி ஆர்டர் கமிஷன் விருதுபட்டி கிளைச்சங்கம் | 0 | 2 | 0 |
| கையிருப்பு | 0 | 6 | 4 |
| | 1113 | 10 | 2 |



## சர்ச் ஆவ் ஸ்வீடன் மிஷன் சபைகள் சேர்ப்பு.

| | மாத வீதம் | | | வருஷ சேர்ப்பு ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| புரசபாக்கம் | 110 | 0 | 0 | 173 | 0 | 0 |
| ராயபுரம் | 3 | 0 | 0 | 41 | 0 | 0 |
| செங்கற்பட்டு | 1 | 0 | 0 | 8 | 0 | 0 |
| பாண்டூர் | 2 | 0 | 0 | 27 | 14 | 10 |
| திருவள்ளூர் | 2 | 0 | 0 | 10 | 5 | 5 |
| பங்களூர் | 3 | 0 | 0 | 39 | 0 | 0 |
| கோயம்பத்தூர் | 5 | 0 | 0 | 31 | 9 | 4½ |
| பொள்ளாச்சி | 1 | 8 | 0 | 11 | 4 | 0 |
| உத்தமபாளையம் | ... | | | 10 | 6 | 8 |
| பழனியபாளையம் (கொச்சி) | ... | | | 1 | 8 | 0 |
| திருப்பூர் | 1 | 0 | 0 | 5 | 0 | 0 |
| திருச்சிராப்பள்ளி | 3 | 0 | 0 | 30 | 3 | 11½ |
| அன்னமங்கலம் | 1 | 0 | 0 | 5 | 0 | 0 |
| மேட்டுப்பட்டி | 2 | 0 | 0 | 12 | 0 | 0 |
| திண்டுக்கல் } | 3 | 0 | 0 | 56 | 6 | 11 |
| போடிநாயக்கனூர் } | 1 | 0 | 0 | | | |
| மதுரை | 3 | 0 | 0 | 41 | 11 | 10 |
| விருதுபட்டி | 2 | 0 | 0 | 54 | 2 | 7 |
| திருச்சுளி, கமுதி | 1 | 0 | 0 | 10 | 13 | 2 |
| திருப்பத்தூர் | 1 | 0 | 0 | 36 | 0 | 0 |
| புதுக்கோட்டை. | 2 | 0 | 0 | 25 | 0 | 0 |
| அணைக்காடு | 2 | 0 | 0 | 13 | 2 | 3 |
| தஞ்சாவூர் | 2 | 0 | 0 | 20 | 8 | 0 |
| நாகப்பட்டணம் | 3 | 0 | 0 | 15 | 0 | 0 |
| திருவாரூர் | ... | | | 3 | 0 | 0 |
| கும்பகோணம் | 2 | 0 | 0 | 22 | 0 | 0 |
| மாயவரம் | 1 | 8 | 0 | 5 | 13 | 2 |
| மணல்மேடு | ... | | | 7 | 0 | 0 |
| தரங்கன்பாடி | 2 | 0 | 0 | 12 | 1 | 7 |
| பொறையாறு | 1 | 8 | 0 | 18 | 0 | 0 |
| சீயாழி | 1 | 8 | 0 | 18 | 0 | 0 |
| சிதம்பரம் | 2 | 0 | 0 | 18 | 0 | 0 |
| விழுப்புரம் | 1 | 8 | 0 | 6 | 15 | 4 |
| கூடலூர் | ... | | | 1 | 4 | 11 |

| | | |
|---|---|---|
| ஆண்டிபட்டம் | 0 8 0 | 5 0 0 |
| கொடைக்கானல் | ... | 30 9 9 |
| பாமகுடி | ... | 0 9 10 |
| பண்ருட்டி | ... | 1 2 0 |
| | | 828 9 7 |

## டேனிஷ் மிஷன் சபைகளின் சேர்ப்பு.

| | |
|---|---|
| நெல்லிக்குப்பம் சபை | 4 0 0 |
| ஏற்காடு சபை | 10 0 0 |
| கார்மேல் சபை | 10 0 0 |
| நெல்லிக்குப்பம் & பட்டம்பாக்கம் | 12 0 0 |
| | 36 0 0 |

Printed and Published by Mr. K. T. Paul at the T. A. C. Press, Salem.

162012

13 SEP 1917

MADRAS

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

Vol. IX AUGUST 1917 No. 8.

## சுவிசேஷ ஊழியத்தின் கடமை.

"என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான்.........வந்தேன்' யோவான் 6. 38,

அமெரிக்காவில் மகாப்பிரசங்கயாராயிருந்த கன்சாலஸ் பண்டிதரிடத்தில் ஒருநாள் அவருக்கினத்தானான ஒருவாலிபன் வந்து "அடுத்த ஓய்வு நாளில் தாங்கள் எந்த வாக்கியத்தின்பேரில் பிரசங்கம் செய்யப்போகிறீர்கள்," என்று கேட்டானும். அதற்குஅவர் "'சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன் இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்' என்கிற வாக்கியத்தின்பேரில்" என்று சொன்னாராம். அப்போது வாலிபன் "மாமா நான் ஏன் பிறந்தேன் என்று நினைக்கிறீர்கள்?" என்றுவினவ "நிச்சயமாய் அது எனக்குத் தெரியாது" என்று அவர் கூறக்கேட்டு, "எனக்கும் அது தெரியவில்லையே," என்று சொல்லி அவன் அவரைவிட்டுப் போகையில் பொதுவாயிந்த ஜீவனின் கருத்துதானென்ன, முக்கியமாக தன்னுடைய ஜீவனின் நோக்கமென்ன என்றிவ்வாறு சிந்தனைபண்ணிக் கொண்டேசென்றான். வீதியே அவன்போய்க் கொண்டிருக்கையில் "தீ, "தீ;" என்கிற ஒரு பேரிரைச்சல் அவன் காதில் விழுந்தது. பற்பல திசைகளினின்றும் ஓடும் ஜனக்கூட்டத்தைச் சேர்ந்து அவனும் ஓடி அக்கினி பற்றியெரியும் ஒரு மாளிகையண்டை வந்து சேர்ந்தான். அது ஒரு நாடகக் கொட்டகை. அத்தீப்பற்றின காலையில் ஏராளமான ஜனங்கள் அதற்குள் கூடியிருந்தார்கள். அந்தக்கணமே அவ்வாலிபன் முன்பின் பாராமல் எரிகிற வீட்டுக்குள்ளே சாடி அக்கினி மத்தியில் அங்கலாய்க்கும் ஆட்களை ஒருவர்பின் ஒருவராய்ப் பிடித்துத் தூக்கி வெளியே கொண்டுவந்து இவ்விதமாய்ப் பதின்மூன்று அருமையான உயிர்களை இரட்சித்தான். இன்னொரு தரம் அவன் உள்ளே ஓடினான். இந்தச் சமயத்தில் ஒரு பெரிய உத்தரம் அவன்மேல் விழுந்தது. அவன் படுகாயப்பட்டு வெளியே தூக்கிக்கொண்டு வரப்பட்டான். அவன் வைத்தியசாலையில் மரணத்தறுவாயிலிருக்கையில் அவனுடைய மாமன் அவனைப் பார்க்க வந்தார். அவன் கட்டிலிற் கிடக்கையில் அவர் அவனைக் குனிந்து பார்த்துக்கொண்டிருக்கும்போது "மாமா இதற்காகவே நான் பிறந்தேன், அந்தப் பதின்மூன்று பேரை இரட்சிக்கும்பொருட்டே இந்த உலகத்தில் வந்தேன்" என்று அவன் சொன்னதைக் கேட்டார். சில நாட்களுக்குப் பின்னர் கன்சாலஸ் பண்டிதர் லண்டன் பட்டணத்துக்கு வந்திருந்தார். அவர் ஒரு சத்திரத்தில் தங்கியிருக்கையில் ஒரு மனிதன் அவரிடத்தில் வந்து சிக்காகோ பட்டணத்து நாடகக்கொட்டகை தீப்பிடித்ததைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அவன் பேசும்போது அடிக்கடி அவன் சொன்னது: "நான் அந்தத்தீக்குள் அகப்பட்டுக்கொண்டேன்; அக்கினியின் நடுவிலிருந்தேன்; என்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளப் போராடினேன்; என்னைமாத்திரம் இரட்சித்துக் கொண்டேன்; நான் மாத்திரம் உயிர் தப்பினேன்".

4-9-17

உன்னுடைய ஜீவியத்தின்பேரில் கூறப்படும் தீர்ப்பு என்ன? நீ கடவுளுடைய சமுகத்தில் வந்து "கடவுளே உம்முடைய குமாரன் இயேசு கிறிஸ்து நாதர் மூலமாய் நான் என்னையே இரட்சித்துக்கொள்ளத் திருவருளினதற்காக நன்றி செலுத்துகிறேன். என்னைச்சூழ எத்தனையோ ஸ்திரீகளும் புருஷர்களும் பாவத்திலே சாகிறார்கள்; இரட்சகரைப்பற்றி அவர்கள் கேட்டறியார்கள்; நான் அவர்களுக்கு இரட்சகனைப்பற்றி சொல்லுவது அவசியமென்று நினைத்தவனல்ல, அவர்கள் விஷயத்திலே நான் உத்திரவாதஞ் செய்யக் கடமைப்பட்டவன் என்றுணர்ந்தவருமல்ல; நான் என்னையே யிரட்சித்துக்கொண்டேன்" என்று சொல்லப்போகிறாயா? ஒருவன் இப்படிப்பட்ட தன்னயமான போக்கைத் தன் நாவில் வைத்துக்கொண்டு கடவுளுடைய சமுகத்தில் வருவானானால் அவனைக் குறித்து என்ன சொல்லுவோம்? நம் ஆண்டவருடைய ஜீவியத்தைப் படித்து அவர் மனுமக்களை இரட்சிக்கும்படியாகத் தம்மைத் தாழ்த்தித் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த வழியை நாம் கண்டறிந்தபிறகும் நம்முடைய சகோதரர்களுக்கவசியமானவை விஷயத்தில் இன்னும் நிர்விசாரிகளாய்ப் பிழைப்பதெப்படி?

"நானே தந்தேன் என்னுயிருனக்கு நலமாய் நீ
தானே மீட்கப்படவும் மரித்தோர் தலநின்றே
னானே யுயிர்பெற் றெழவுங் கொடுத்தேன் உலகுரிமை
யாமோ நீயென் தந்தா யெனக்கே நவிலாயே!"

ஜெபம்: எங்கள் அன்புள்ள பிதாவே, எங்கள் சகோதரருக்கு வேண்டியது இன்னதென்று காண எங்கள் கண்களைத் திறந்தருளும். அவர்களுக்கு வேண்டியதை நாங்கள் உற்சாகத்தோடும் பிரியோடும் நாடியுழைக்க எங்களை யேவியருளும். உம்முடைய மகத்துவமான இரட்சிப்பை மற்றவர்களுக்குக்கூற எங்களைக் கருவிகளாக உபயோகித்தருளும். எங்கள் நாதர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வேண்டுகிறோம். ஆமென்.

---

## சங்கத்தின் வர்த்தமானம்.

### ரீவா மாகாணம்.

நமது ஊத்தரன் சேகரமாகிய ரீவாவில் வேலை செய்துவந்த கனம் எஸ். ஞானபரணம் ஆறு மாத ரஜா எடுத்துக்கொண்டதைப்பற்றி முன்வந்த சஞ்சிகையில் தெரியப்படுத்தினோம். இதனால் வேலை தடைபடாதிருக்கவேண்டுமென்று ஊக்கமாய் ஜெபித்ததின் பலனாக ஆச்சரியமாக ஆண்டவர் ஒரு ஊழியனைத் தெரிந்துகொண்டார். மத்திய இந்தியாவில் ஒரு சுதேச ராஜாங்கத்தின் முக்கிய பட்டணமாகிய குவாலியர் என்னுமிடத்தில் வைத்திய வேலை செய்துவந்த டாக்டர் எஸ். வி. கோஸ்வாமி என்பவர், ஒருவர் ஏவுதலுமில்லாமல், ரீவாவிலிருந்த குறையைக்குறித்து கேள்விப்படாமற்போனபோதிலும், தன் சங்கத்தில் எந்த விதத்திலாகிலும் உபயோகிக்கக்கூடுமா என்று கேட்டார். ரீவாவில் வைத்திய வேலையின் மூலமாகமட்டுமேயல்லாமல், நமது நோக்கம் சித்திபெறுமென்று கண்டிருந்த கமிட்டியார் இவரை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு, ஜூலை-மீ 2-உ கூடின கமிட்டியில் இவரை ரீவாவுக்கு மிஷனரியாக நியமித்தார்கள். டாக்டர் கோஸ்வாமியும் அவருடைய மனைவியும் இந்துமார்க்கத்தைவிட்டு ஆச்சரியமானவிதமாக நீங்கினவர்கள், உண்மையான தெய்வபக்தியுடையவர்களென்று அந்நியரிடத்தில் நற்சாக்ஷி பெற்றவர். நேயர் அனைவரும் இவர்களை தங்கள் ஜெபங்களில் நினைவுகூரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.



### மாறு சௌதரி.

மாறு என்னும் பெயர்கொண்ட கிராமத்தலைவன் மே-மீ இறந்துபோனான். சர்ஸவாவுக்கு வடக்கில் இருக்கும் ஸெலேரி என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். ஸெலெரி என்பது மகமதியர் நிறைந்த கிராமம். அங்கே இருக்கும் இரண்டு கிறிஸ்தவ குடும்பங்களில் மாறுவினுடையது ஒன்று. 1912-ஆம் வருஷத்தில், எட்மண்ட் ஜேகப் என்னும் நம்முடைய சுவிசேஷகர் ஒருவரால் மாறு 50 வயதுள்ளவனாய் ஞானஸ்நானம் பெற்று, சர்ஸவா சபையின் ஒரு அங்கமாயிருந்தான். வாலிபப்பிராயமடைந்த குமாரனை இழந்தது முதல், கடவுளோடு அதிகம் நெருங்கியிருப்பதாகவும், கிறிஸ்துவைத் தன்ரட்சகராக ஏற்றுக்கொண்டேனென்றும் அடிக்கடி என்னிடம் சொல்லுவான். மாயமற்ற கிறிஸ்தவன். கிறிஸ்துவை உறுதியாக நம்பினவன். இதைக் குறித்து, கிராமத்திலிருந்த இந்துக்களும், மகம்மதியரும் அறிந்திருந்தார்கள். நாங்கள் அடிக்கடி அவன் இருந்த கிராமத்திற்குப் போவோம். அவன் எங்களை எதிர்கொண்டுவந்து அளவற்ற ஆவலோடு தன் வீட்டில் அழைத்து உபசரிப்பான். வேதவசனத்தைக் கேட்பது அவனுக்கு உற்சாகமாயிருக்கும். அதற்கென்று கிராமத்திலுள்ள கிறிஸ்தவர்களை எங்களிடம் கூட்டிச் சேர்ப்பான். கிறிஸ்தவ கூட்டங்களுக்கு ஒழுங்காகப் போவான். அவனுடைய ஏவுதலினால், அவனுடைய மருமகளும், அவள் மகனும் கிறிஸ்தவர்களானார்கள். 15 வயதுள்ள இந்த சிறுவன் புத்தி கூர்மையுள்ளவன். உண்மையான கிறிஸ்தவ பக்தி அவனில் இருக்கிறது. மாறு இல்லாதது எங்களுக்கு வெறுமையாக இருக்கிறது, ஆனால் இரட்சகரிடமிருக்கிறான் என்கிற நம்பிக்கையினால் திருப்தியடைகிறோம்.

### பொது காரியதரிசியின் சுற்றுப்பிரயாணம்.

சென்றமாதம் நமது பொது காரியதரிசி கனம் பி. ஓ. பிலிப்பு அவர்கள் நெடுந்தூரம் சுற்றுப்பிரயாணம் செய்தார். பண்டிதை ராமாபாயம்மாள் வசிக்கும் பட்டணமாகிய கேட்கான் என்னுமிடத்தில் இந்திய மாணவர் சங்கத்தின் (Indian Student Movement) அபிவிருத்தியை முன்னிட்டு கமிட்டி கூடினார்கள். அந்த கமிட்டிக்கு நமது சங்கம் நான்கு அங்கங்களை நியமிக்க வேண்டிய ஒழுங்கு. அப்படி நியமிக்கப்பட்ட நால்வரில் நமது பொது காரியதரிசி ஒருவர். இந்திய கிறிஸ்தவ மாணவர்கள் நமது ரட்சகரிடத்தில் பற்றுதல் வேண்டுமென்று நோக்கங்கொண்டிருக்கும் இந்த சங்கத்தில் நாமும் பங்குபெற்று ஊழியஞ் செய்வது நலமென்று எண்ணவேண்டும்.

கேட்கானில் வேலை முடிந்ததும் கனம் பிலிப்பு அவர்கள் பூனா பட்டணத்திற்குச் செல்வார். இந்திய கிறிஸ்தவர்கள் அடர்ந்து வசிக்கும் இந்த இடத்தில் அவர் அநேகரை தனித்தனியாக வீடுகளில் சந்தித்து ஒரு கிளைச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டியதற்கான ஆயத்தம் செய்தார். ஜூலை 2-உ ஒரு இந்திய கிறிஸ்தவ மகாநாடுகூடி, சங்கத்திற்கு ஒழுங்கான வழியில் உதவி செய்ய ஏற்பாடு செய்யும்பொருட்டு கனம் ஸேக்வார்ட் என்பவரையும் கனம் ஜெ. எஸ். ஹவிஸ் என்பவரையும் காரியதரிசிகளாக ஏற்படுத்தினார்கள். இருவரும் அதிக முயற்சியுடையவர்களாயிருப்பதாக கடிதங்கள் மூலமாக அறிகிறோம்.

அதே தினத்தில் பூனா மிஷனெரிமார் சங்கத்தில், கனம் பிலிப் அவர்கள் N. M. S. ஐ குறித்து உபந்நியாசமும் செய்தார். முடிவில் கூடியிருந்த

வர்களில் அநேகர் தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு சில கேள்விகளை கேட்டார்கள். அதில் ஒருவர் அபிப்பிராயப்பட்டது என்னவென்றால்—இந்திய கிறிஸ்தவர்கள், தங்கள் சபைகளை ஆதரிக்க திராணியற்றவர்களாயும், தங்களை நெருங்கியிருக்கும் சுற்றுகிராமங்களிலுள்ளவர்களுக்கும், பட்டணங்களிலுள்ளவர்களுக்கும், சுவிசேஷ உபதேசம் செய்வதற்கு இயலாமலிருக்க, N. M. S. சங்கத்தை ஏற்படுத்தினது யோசியாமல் செய்த காரியம் என்பது. புறதேசித்தில் சுவிசேஷ வேலை செய்யும்படி பொறுப்பேற்றுக்கொண்டபோது, மேற்கு தேசத்து சபைகளின் நிலைமை இன்னதென்றும், இந்திய சபை, சுயசுயசட்டவிழ்ந்து பூரண ஜீவனடையவேண்டுமானால், அதற்கேற்ற பொருந்த உத்தரவாதங்கள் அவசியமென்றும் எடுத்துக்காட்டினபோது அந்த மிஷனெரி திருப்தியடைந்தார். இது நிற்க, கூட்டத்திலிருந்த பெரும்பாலர் N. M. S. சங்கம் ஏற்பட்டது அவசியமென்றே உணர்ந்தார்,

பூனா பட்டணத்தை விட்டு கனம் பிலிப்பு அவர்கள் நம்முடைய மகாராஷ்ட்டர சேகரமாகிய கர்மாலாவுக்குச் சென்றார். அங்கு தேவ ஊழியக்காரர் உண்மையான வேலை செய்வதாகவும், கிறிஸ்தவர்கள், நன்னடக்கையுடையவர்களாக இருக்கிறதாகவும், கண்டார். ஆரம்பத்திலிருந்து இந்த சேகரத்தை நடத்த தேர்ந்த ஊழியர் இல்லாததினால், உபதேசிமாரைக் கொண்டே வேலை நடத்தினோம். ஆமதநகர் சபையின் உதவியைக்கொண்டு, கனம் ஐ. பி. பாவா போதகர், அடிக்கடி கர்மாலா வேலையை மேல்பார்வையிடுகிறார். எட்டு வருஷமாக காத்திருக்கும் இந்த சேகரத்தின் வறுமையை நீக்க, இந்த வருஷமாகிலும் ஒரு இந்திய கிறிஸ்தவ சகோதரன் தன்னை ஒப்புக்கொடுக்க முன்வரமாட்டாரா?

ஷோலாபூர், ஆமதநகர், மன்மாட் நாசிக் என்னும் இடங்களுக்கும், போய் கூட்டங்கள் நடத்தி, ஜனங்களை உற்சாகப்படுத்தினார். இந்த இடங்களில் சங்கத்தின் நன்மையை கோருகிற பலரிருந்த போதிலும், சங்கத்தின் உத்தியோகஸ்தர்களை காண்பது அவர்களுக்கு விசேஷ உற்சாகமாயிருக்கிறது. இந்த கடனை நிறைவேற்றுவதற்கு பிரயாண காரியதரிசி வேலை செய்ய ஒருவரும் முன் வருவாரில்லை. முன் இருந்த ஒருவர் கனம் ஈ. எம். மோடக் அவர்கள், சுகயீனத்தால் நான்கு மாதம் ரஜா பெற்றுக்கொண்டார். பொதுக்காரியதரிசிகளிருவரும், சங்கத்தின் பிரதானஸ்தல ஆபிஸை விட்டு நெடுநாள் தங்கமுடியாது. மிஷனெரிமாரையும் தங்கள் சேகரங்களை விட்டு நீக்க முடியாது. ஆகவே, விசேஷமாக இந்த வருஷம் அந்தந்த ஊர்களிலிருக்கும் நண்பரும், கமிட்டியின் அங்கத்தினரும் கிளைச் சங்க காரியதரிசிகளும், தாங்களே உற்சாகங்கொண்டு விடாமுயற்சியாகவிருந்து, போதுமான உதவியளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

Printed and Published by Mr. K. T. Paul at the T. A. C. Press, Salem.

மாதந்தோறும் வெளியாகும் | வருஷ சந்தா அணா ஒன்று.

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

Vol. IX SEPTEMBER 1917 No. 9.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. 22 SEP 1917

## ஓமலூர்.

### முன் சரித்திரம்.

இச்சங்கம் ஆரம்பித்தது முதல் தென்னிந்தியாவில் வேலை துவக்க வேண்டுமென்றது கமிட்டியாருடைய துணிபு. ஆனால் இரண்டு வருடங்களாக ஏற்ற இடம் தென்படவில்லை. கடைசியாக 1909-௵ ஜூன் மாதம் சேலத்திலிருக்கும் ஓமலூர் தாலூக்காவை தெரிந்துகொண்டனர். அநேக வருடங்களுக்கு முன்னதாக லண்டன் மிஷன் சபையார் இத்தாலூக்காவில் வேலை செய்து வந்தனர். ஆனால் 1897-௵த்தில் இங்கே வேலை செய்வதை விட்டு நீங்கினர். கமிட்டியார் இங்கே ஊழியர்களை அனுப்ப நிர்மானித்தபொழுது லண்டன் மிஷன் சபையாரும் அதிக சந்தோஷப்பட்டனர்.

ஓமலூர் சென்னைக்கு 209-மைல் மேற்கு பக்கத்தில் இருக்கிறது. சேலத்திற்கும் இக்கிராமத்திற்கும் 10-மைல் தூரம். இத்தாலுக்காவின் மேற்கு எல்லை காவேரி நதியே. கிழக்கே சென்னைக்கு போகும் இருப்பு பாதையைக்காணலாம் மைசூர் ராஜ்யம் இத்தாலூக்காவின் வடக்கு எல்லை. இதன் சுற்றளவு 450 சதுரமைல். ஜனத்தொகை ஏறக்குறைய இரண்டு இலட்சம். ஓமலூர்தான் முக்கிய பட்டணம். ஆனால் அநேக கிராமங்கள் இருக்கின்றன. சிலவற்றின் ஜனத்தொகை 500-இன்னும் மற்றவைகளின் ஜனத்தொகை 5,000. பேசப்படும் பாஷை தமிழ். பெரும்பான்மையோர் இந்துக்கள், அங்குமிங்கும் சேரிகளில் பஞ்சமரையும் காணலாம்.

1909-ம் ௵த்தில் கனம். ஐசக் வில்லியம்ஸ் மிஷனரியாக நியமிக்கப்பட்டு 1910-ம் ௵த்தில் வேலையை துவக்கினார். ஓமலூரிலிருந்து சுற்று கிராமங்களை பார்த்து வந்தார். இது தவிர ஓமலூரில் ஓர் இராப்பள்ளிக்கூடம் துவக்கி நடத்தி வந்தார். 1915-௵ மே மாதம் அவர் இச்சங்கத்தை விட்டு வேறு வேலைக்கு போக நேரிட்டது.

19-9-17

நங்கவள்ளியில் கனம் தேவாசீர்வாதம் சிறந்த வேலையை செய்து வந்தார். 1915-ம் வருஷத்தில் அவருடைய வீடு தீப்பற்றி எரிந்து விட்டது. சில நாட்கள் சென்றபின் கனம் தேவாசீர்வாதம் பசுமலை வேதசாஸ்திர பள்ளிக்கூடத்திற்கு சென்று பயிற்சியடைந்து வருகிறார். அநேகமாக வருகிற வருஷம் வேலைக்கு திரும்பி வருவார்.

ஓமலூரிலும், நங்கவள்ளியிலும் சில வருடங்களாக உழைத்துவந்த கனம் பால் ராமசாமி தற்சமயம் பம்பாய் ராஜதானி மிராஜ் என்னுமிடத்தில் வைத்தியம் கற்று வருகின்றனர். அவருடன் கனம் தானியேல் செல்லய்யா என்னும் ஓர் வாலிபன் வைத்திய வேலை பயின்று வருகின்றனர். இவர்கள் இருவரும் வரும்போது நம்முடைய வேலை அதிகமாக ஸ்திரப்படுமென்று நம்புகிறோம்.

## தற்கால வேலை

### ஊழியர்.

தற்சமயத்தில் இந்த பிராந்தியங்களில் வேலை பார்த்து வருபவர் மூவர். அவர்கள் சிவராமய்யர், கோபாலசாமய்யர், பாலசுந்திரம் என்பவர்களே. இந்த இடத்தில் இன்னும் அநேக ஊழியருக்கு இடமிருக்கிறது. வருகிறவர் யார்?

### கிராமங்கள்.

காடையாம்பட்டி என்னும் கிராமம் ஓமலூரிலிருந்து 14-மைல் தூரத்தில் இருக்கிறது. காடையாம்பட்டி கிராமத்திற்கும் ரெயில்வேஸ்டேஷனுக்கும் ஏறக்குறைய 4-மைல் இருக்கும். இந்த கிராமத்தை சுற்றி அநேக கிராமங்கள் இருக்கின்றன. இவர்கள் மத்தியில் கனம் எம். ஆண்டர்சன் என்பவர் அநேக நாட்களாக வேலை செய்து வந்தார். அவருடைய பாரியார் உயர்ந்த வைத்திய பரீட்சையில் தேறினவர்களாய் இருந்ததினால் சுற்றுப் புறங்களிலிருந்து வந்த ஜனங்களுக்கு அதிக உதவியாய் இருந்தார்கள். வைத்திய சாலையுமின்றி, அநேக வைத்திய உபகரணங்களுமின்றி, சொற்ப மருந்துகளை கொண்டே அநேகருக்கு உதவிபுரிந்தனர். ஆனால் இப்பொழுதோ இவர்கள் அவ்விதமான உதவி செய்துவர சமயமில்லை. இச்சமயத்தில் இந்த பிராந்தியங்களில் வைத்திய உதவியின்றி தவிக்கும் ஜனங்கள் அநேகர். சேலத்திற்கு வரவேண்டுமென்றாலும், ஓமலூருக்கு போகவேண்டுமென்றாலும் 15 மைல் தூரம் போகவேண்டும். ஓர் இந்திய கிறிஸ்தவ வாலிப சகோதரன் இந்த இடத்தில் தங்கியிருந்து சுவிசேஷத்தை பிரசங்கித்துக்கொண்டு வைத்திய உதவியும் செய்து வந்தால் எவ்வளவு மேன்மையாயிருக்குமென்று நண்பர்கள் தெரிந்துகொள்ளலாம்.



கனம் ஆண்டர்சன் துரை உதவியினால் அவர் வீட்டில் ஒரு வாரம் தங்கியிருந்து சுற்று கிராமங்களை பார்த்தோம். அநேக கிராமங்கள் காடுகளின் மத்தியில் இருக்கின்றன. சில கிராமங்கள் அதிக தூரத்திலிருக்கின்றன. லோகூர் என்னும் கிராமத்தில் 30 வீடுகளிருக்கும். இந்த கிராமத்திற்கு கிறிஸ்தவர்கள் போனதுண்டோ இல்லையோ என்பதை சொல்லமுடியாது. நாங்கள் போயிருந்த இரண்டு சமயங்களிலும் ஜனங்கள் பொறுமையுடன் எங்களோடு சம்பாஷித்ததை கவனித்தோம். லோகூரிலிருந்து ஒருமைல் தூரத்தில் கணவாய் புதூர் என்ற கிராமத்திற்கு சென்றபொழுது பகல் 12-மணி. அச்சமயத்தில் கிராம அதிகாரி யாதொரு வித்தியாசமும் பாராட்டாமல் எங்களை வீட்டிற்குள்ளே அழைத்து போஜனமிட்டு சந்தோஷப்படுத்தினர். இது முடிந்தவுடன் இரண்டு மணிநேரங்களாக நாங்கள் அவருடனும் மற்ற ஜனங்களுடனும் பேசி வீடு திரும்பினோம்.

சேர்வராயன் மலையோரத்திலிருக்கும் சில கிராமங்களை பார்க்க சமயம் கிடைத்தது. இங்கேயிருக்கும் ஜனங்களை மலையாளிகளென்று சொல்லுகிறார்கள். இவர்களுக்கு பண்ணைத்தொழிலே வேலை.

செட்டிப்பட்டி, குப்பாண்டியூர், பவானூர், கோட்டைப்பட்டி, கரண்டப்பட்டி, புளியம்பட்டி என்னும் கிராமங்களில் அடிக்கடி வேலை செய்து வருகிறோம். இரண்டரைமைலுக்கு அப்பாலுள்ள முத்துநாய்க்கன்பட்டி சந்தைக்கு வெள்ளிக்கிழமை தோறும் போய் பிரசங்கிக்கிறோம்.

இந்தக் கிராமங்களில் ஜனங்கள் எல்லாரும் நம்மை இன்னாரென்றறியவும் சிநேக பாவனையாய் பேசவும் இடம் கிடைத்திருக்கிறது. தனியாள் வேலை தான் செய்வதற்கு சாத்தியம். பகற்காலத்தில் எந்த நேரத்திலும் ஜனங்களைக் கூட்டமாகப் பார்க்க முடியாது. ஆனால் கொஞ்சகாலம் இராக்காலங்களில் வேலை செய்து வந்தோம். இது சில காரணங்களைக்கொண்டு தற்காலம் செய்யக்கூடவில்லை. ஆனால் தனியாள் வேலை பிரயோஜனமில்லாமல் போகவில்லை. இதுவே கேட்கிறவன் இருதயத்தில் நன்கு பதிந்து நினைப்பூட்டுகிறது. 'வேதியர் விளக்கு', 'மாதர் போதினி', முதலிய பத்திரிகைகளையும் எங்களோடு எடுத்து செல்வதுண்டு. போதுமான நேரம் கிடைத்தபோது அவைகளை, கிராமங்களில் ஒருவிருவருக்கு வாசித்துக் காட்டுகிறோம். சென்ற மாதப் பத்திரிகையில் தோன்றின "கடவுள் விரும்புகிறதென்ன" என்னும் மார்க்க சம்பாஷணை அதிக பிரயோஜனமாயிருக்கக் கண்டோம்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு முத்தி நாய்க்கன்பட்டியில் ஒரு வாசித்த பிராமண சகோதரர் எம்மை புன்சிரிப்போடு வந்தனம் பண்ணி "புத்தகங்கள் ஏதாவது விலைக்கு உண்டோ"? என்று கேட்டார். உடனே 'மாதர்




கும்மி' என்னும் சிறு புத்தகம் அவருக்கு காட்டப்பட்டது. அதை அதிக மனமகிழ்ச்சியோடு தன் வீட்டிலுள்ள பெண்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்படி வாங்கி விடை பெற்றுச்சென்றார்.



OF THE REGISTRAR OF ... 22 SEP 1917 ... MADRAS

## ஓமலூர் பட்டணம்

இது இப்பெயர்பூண்ட தாலூகாவுக்கு முக்கியமான பட்டணம். சரபங்க நதி இதனருகில் ஓடுகின்றது. ஆனால் இந்த நதியின் தீர்த்தம் பானத்திற்குப் பிரயோஜனமில்லை. சற்று தூரத்திலுள்ள கிணறுகளுக்கே ஜனங்கள் போய் வருகிறார்கள். சுமார் 2000-பிரஜைகளுக்குட்பட்டே ஜனத்தொகையிருக்கலாம் அதில் நெசவு தொழில்புரியும் சேடர்கள் மற்ற வகுப்பினரைவிட அதிகம். இவர்களிடத்தில் தான் பணம் புழக்கப்பட்டுக்கிடக்கிறது. சுற்றியிருக்கும் கிராமஸ்தர்கள் இவர்களிடத்தில் தான் வட்டிக்கு கடன் வாங்கி ஏழைகளாகிறார்கள். வட்டி எவ்வளவென்று நினைக்கிறீர்கள் சாதாரணமாய் ஒப்பந்தச் சீட்டில் குறிப்பிடுகிறது 100-ரூபாய்க்கு 30-ஆனால் வசூலிக்கிறதோ அளவில்லை. குடியானவர்கள் பெரும்பாலும் குடிக்கிறதில் பந்தயம் போடுவார்கள். அதனால் தானே இந்தக்கஷ்டம் சற்று யோசியுங்கள்.' இந்த சிறு தாலூகாவில் குறைக்கப்பட்ட பிற்பாடு கள்ளுக்கடைகளின் தொகை 38. இந்த 38-கடைகளும் மரவரியைத் தவிர்த்து சர்க்காருக்கு யாதும் 5000-ரூபாய் தருகின்றன. கடைக்காரர்கள் இந்த ரூ. 5000-ம் சர்க்காருக்கு மரவரியும் சொந்தக்காரருக்கு மரக்கூலியும் தங்களுக்கு லாபமும் ஜனங்களிடத்திலிருந்து தானே எதிர்பார்த்து ஜெயம் அடைகிறார்கள். நமது நாட்டின் ஜனங்கள் குடியில் எவ்வளவு கெட்டுப்போகிறார்களென்பதை இந்த ஒரு தாலூகாவிலிருந்தே தெரிந்து கொள்ளலாமே! குடியைப்பற்றியும் அதனால் விளையும் தீங்குகளைப்பற்றியும் யான் ஒரு நாள் ஆழ்ந்த யோசனையிலிருக்கும்பொழுது எனது அறிந்த நண்பர் ஒருவர் பின்வருமாறு தன் ஆலோசனையை கூறினார்.

குடியர்களெல்லாரும் தனித்தனியே அதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தரிடம் லாகிரி வஸ்துகளின் அளவை குறிப்பிட்ட லைசென்ஸ் ஒன்று பெற்றுக்கொண்டுதான் விற்பனை ஸ்தலங்களுக்குச் செல்லவேண்டும். விற்கிறவர்கள் ஒவ்வொரு லைசென்ஸ் நம்பரையும் பெயரையும் பதித்துக்கொண்டு அளவு பிரகாரம் விற்பனை செய்யும்படிக்கு நியமிக்கப்படவேண்டும். இப்படி ஏற்படுமானால் திருட்டுத்தனமாய் மற்றவர்கள் மூலமாயோ அல்லது இராக்காலங்களிலோ மரியாதைக்கஞ்சி குடிப்பிரியமிஞ்சி உபயோகப்படுத்திக்கொண்டிருக்கும் அநேகம் பெயர்கள் குடியை விட்டு விடுவார்கள். சர்க்கார் குடியை அடியோடே ஒழித்துவிட மனமில்லாதிருந்தால் இது நல்ல யோசனையென்று எனக்குத் தோன்றுகிறது. இந்த நண்பர் எனது அயலகத்தானே. இவர், இங்கே நான்கு வருடங்க

ளாய் இருந்து வரும் சன்மார்க்க சங்கத்தின் ஐக்கமான அங்கத்தினர் சங்கத்தைப்பற்றி சற்று கூறுவாம்.

ஒரு ரீடிங் ரூமும் புத்தகசாலையும் இதன் ஆதரவில் இருந்து வருகின்றன. இவைகளுக்குக் காரியதரிசி நமது அரிய நண்பர், ஹிந்துமத பிரசங்கியாகிய ஸ்ரீமான் டி. வி. கதிர்வேல் செட்டியாரவர்களே. பிரதி ஞாயிற்றுக் கிழமையும் திரௌபதியம்மன் ஆலயத்தில், இராமாயணம், கம்பர், கர்மயோகம், இராமானுஜர் இம்மாதிரியான விஷயங்கள் உபந்நியாசிக்கப்படுகின்றன. ஆனால் இச்சங்கத்தின் வருடாந்திர மஹோற்சவமே ஆனந்திக்கத்தக்கது. சென்ற மாதம் 21, 22, தேதிகளில் இவ்வுற்சவம் நடை பெற்றது. வெளியூர்களிலிருந்து சுமார் 100-பேர்கள் வந்திருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் ஜாகை நமது சகோதரர் பாலசுந்தரமய்யருடைய இல்லமே. இந்த வீட்டிலிருந்து திரௌபதியம்மன் கோவிலுக்கு வந்திருந்த வித்வான்கள், விருத்தாளிகள், பிரசங்கிகள் எல்லாரையும் காலை மாலை மேளவாத்தியத்துடன் அழைத்துச் சென்றது சாதாரண ஜனங்களுக்கு எப்படியிருந்ததென்றால் ஒரு "நோன்பு" போல் இருந்தது. இருபது விஷயங்களுக்கு மேலேயே இந்த இரண்டு நாட்களில் அகாலம் வரைக்கும் உபந்நியசிக்கப்பட்டன.

இச்சன்மார்க்கச் சங்கத்தினர் தங்களுக்கு நம்மைவிட சமரச ஞானம் இருக்கிறதென்பதைக் காட்டும் பொருட்டே என்னையும் எல்லா விஷயங்களுக்கு அழைத்துச் செல்லுகின்றனர். இவர்களில் சிலருக்கு எதிரிடையைபிளிலே அதிக ஞானம். கிறிஸ்தவ விஷயங்களை நன்றாய் ஆராய்கிறார்கள். குற்றம் ஏதாவது அகப்பட்டால் என்னைத் தர்க்கத்தில் இழுப்பார்கள். ஆனால் மிகவும் நல்ல சிநேகிதர்கள். சிலர், யாசன் போஸ்டாபீஸுக்கெதிரிலும் ஊருக்கு மத்தியில் வசிக்க நேர்ந்திருக்கிறபடியால், இராக்காலங்களில் வெகு நேரம் வரைக்கும் நமது நாட்டின் உள் சீர்திருத்தங்களைப்பற்றி என்னோடு பேசிக்கொண்டிருப்பார்கள்.

நேற்று இரவு ஒருவரோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தேன். இந்த நண்பர், கிறிஸ்தவ ஊழியர்கள் இவ்விடம் வந்த துவக்கத்திலிருந்து அதிக கூர்மையாய்க் கவனித்துக்கொண்டிருக்கிறார். உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் நமது முன்னோர்கள் இவ்விடம் கூடினதும் கலைந்ததும் சவிஸ்தாரமாக சொல்லுகிறார். ஒவ்வொருவருடைய குறைகளையும் பிரசங்கத்திறமையும் இவர் மனதிலே பதிந்துள்ளன. இவர் கூறினது, இப்போது இவர் போன்ற மற்றவர்களின் மனதிலே தெய்வ ஊழியத்தைச்



செய்யும் நமக்கு, 'எவ்வளவு ஜாக்கிரதையாய் ஜீவிக்கவேண்டுமென்பதை நற்பிக்காமல் போகுமோ! நம்மை இவ்வூழியத்திற்கு அழைத்த எல்லாம் வல்ல இறைவன் நமக்கு அருள்புரியும்படி பிரார்த்திப்போமாக!

## தமிழ் கமிட்டி மீட்டிங்

---

ஆகஸ்டுமீ 18, 19-ம் தேதிகளில் தமிழ் கமிட்டியார் ஓமலூரில் மீட்டிங் கூடினார்கள் இந்தக் கமிட்டி சேலம் ஜில்லா முனிசீபாகிய ஸ்ரீமான் ஏ வெர்கீஸ், பி. ஏ., பி. எல். என்பவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. இதற்கு ஆஜராயிருந்தவர்கள் பின்வருமாறு: ஸ்ரீமான் டி. ஹாரிஸ் [பி.ஏ., எல்.டி., பி. இ. தேவதாசன் பி.ஏ. எல்.டி, ஜே. டி. ஆசீர்வாதம் பி.ஏ., எல்.டி., எம். எம் மாசிலாமணி பி.ஏ., எல்.டி, ஏ. என். சுதரிசனம், ரெவரெண்டு டி. பெருமாள், எபிநேசர் ஜேகப் இவர்கள். இவ்விடம் செய்யப்படும் ஊழியம் சம்பந்தமாய் எல்லா விஷயங்களையும் நன்கு ஆராய்ந்து தீர்மானங்கள் செய்தனர். இக்கமிட்டி இங்கு கூடினதின் பலனாக நமது ஊழியர்களுக்கு புதிய உற்சாகம் உண்டாயிருக்கிறது. கமிட்டியார் இவ்வூரைச்சுற்றி பார்த்ததுமல்லாமல் நமது ஊழியர்களின் வீடுகளுக்கும் சென்றனர்.

கமிட்டி மெம்பர்களுக்கு கனம் பாலசுந்திரமய்யர், இவ்விடமிருக்கும் சன்மார்க்க சமாஜத்தின் சில முக்கியமானவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

முதல் நாளிரவு ஒரு காலக்ஷேபம் ஹிந்துக்களுக்கு ஸ்ரீமான் ஸ்டீபன் பாகவதரவர்கள் நடத்தினார்கள். ஊராரெல்லாரும் ஒருங்கே திரண்டு வந்து கேட்டு ஆனந்தித்தனர். சன்மார்க்க சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் கதிர்வேல் செட்டியாரவர்கள் நமது ஸ்டீபன் பாகவதரவர்களுக்கு சபையில் எழுந்து நின்று அதிக அருமையாய் வந்தனமளித்தனர். காலக்ஷேபத்தின் முடிவில் வந்திருந்தவர்களுக்கு தாம்பூலம் வழங்கப்பட்டது. அதோடு நமது இரட்சகர் திருவாய் மலர்ந்தருளிய வாக்கு "என்னிடம் வருகிறவனை நான் புறம்பே தள்ளமாட்டேன்" என்பதை அச்சிட்ட கார்டுகளும் கொடுக்கப்பட்டன.

---

## நமக்கு தேவையானவைகள்

நம்முடைய வேலை அநேகமாக இந்துக்கள் மத்தியில் நடந்து வருகின்றது. அவர்களை திருப்புவது அதிக கஷ்டம். அதி சீக்கிரத்தில் அவைவு காணப்படுமென்று சொல்ல துணியமாட்டோம். இவர்களிடத்தில் அதிக பொறுமையுடன் வேலை செய்து, அன்பு பாராட்டி இரட்சகரை காணும்படி செய்ய வேண்டும். முக்கியமாக இவர்கள் மத்தியில் தங்கியிருந்து அவர்களோடு பழகி வரவேண்டும். இது தான் நாம் முக்கியமாக செய்யவேண்டிய காரியம். இதற்கு அநேக ஊழியர்கள் வேண்டும். கனம் கோபாலசாமி இப்பொழுது ஓமலூர் கடைத்தெருவில் வசிக்கின்றனர். எல்லா ஜனங்களும் அவருடன் தினந்தோறும் பழகி வருகின்றனர். புஸ்தகங்கள் வாசிக்கவும் சம்பாஷிக்கவும் இடமுண்டு. இவ்விதமாக ஓமலூர் தாலூக்காவின் முக்கிய கிராமங்களில் வசித்திருந்து ஜனங்களோடு பழகிவர தற்சமயத்தில் இரண்டு சகோதரர் தங்களை ஒப்புக்கொடுப்பார்களென்றால் எவ்வளவு நலமாயிருக்கும்? நாம் வேலை செய்துவரும் தாலூக்காவில் விசேஷமாக மேச்சேரி, தங்கவாச்சி, தாரமங்கலம், ஜலகண்டாபுரம், காடையாம்பட்டி, ஓமலூர் என்னும் இடங்களில் ஊழியர்கள் வைக்கப்படவேண்டும்.

தீபிகையை வாசிக்கும் நண்பர்கள் ஏன் இந்த தாலூக்காவை நினைத்து ஊழியத்தில் பிரவேசிக்கக்கூடாது?

### சங்கத்தின் வரவு செலவு கணக்கு.

**1917**-ஜனவரி முதல் ஜூலை முடிய.

| வரவு. | | | | செலவு. | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நன்கொடைகள் | 8486 | 11 | 0 | ஆறு சேகரங்கள் | 5372 | 3 | 3 |
| ரிஸர்வ் பண்டு வட்டி | 301 | 5 | 7 | பிரயாணவேலை | 690 | 4 | 9 |
| சங்கத்தின் ஊழியர், கடன்கள் முதலியவை திருப்பிக் கொடுத்தது. | 526 | 10 | 7 | வேலைக்கு ஆயத்தப் படுகிறவர்கள் | 636 | 15 | 3 |
| | | | | எட்குவார்டர்ஸ் | 1983 | 7 | 6 |
| | | | | சில்லரை | 189 | 4 | 0 |
| | | | | இங்கிலீஷ் பத்திரிகை, | 651 | 5 | 6 |
| | | | | மற்ற பாஷை ,, | 252 | 13 | 6 |
| | | | | பாங்கி கமிஷன் முதலியவை | 7 | 1 | 9 |
| | 9314 | 11 | 2 | | 9783 | 7 | 6 |

Printed and Published by Mr. K. T. Paul at the T. A. C. Press, Salem.

மாதந்தோறும் வெளியாகும் வருஷ சந்தா அணா ஒன்று.

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத் தீபிகை.

Vol. IX OCTOBER 1917 No. 10.

... 20 NOV 1917 ... MADRAS.

## ஸ்ரீமத் ஜகத்தரணி.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு லக்னவ் நகரில் மகேஷ் சந்திர சாட்டர்ஜி என்னும் பங்காள பிராமணரொருவர் வசித்து வந்தார். இவருக்கு குழந்தைகள் ஒரு ஆணும் இரண்டுபெண்களுமே. இவர்களுடன் தன் நாயகனை இளமையில் இழந்த ஓர் சகோதரியுமிருந்து வந்தாள். மகேஷ் பாபு சர்க்கார் கஜானா ஆபீஸில் தலைமை வகித்தாய் உத்யோகம் பெற்றதின் நிமித்தம் ஜனங்களுக்குள் அதிக செல்வாக்கு உடையவராகவே இருந்தார். இந்து மார்க்கத்தில் அதிக பிடிவாதம். ஆகவே இதர உண்மைகளை சற்றேனும் தாராளமாய் கண்ணுரார். இவர் மனோபாவம் இவ்வாறிருக்க ஸ்ரீமத் ஜகத்தரணியம்மாள் என்னும் இவர் பத்தினி ஒரு ஜெனானா மிஷனரி லேடியிடம் சுவிசேஷ உண்மையைக்கற்று யேசு பெருமானுக்கு இரகசிய பக்தி செலுத்தி வருவாராயினர். இவ்வம்மையார் பலராலும் பல முறையும் கிறைஸ்தவ சபையில் சேர தூண்டப்பட்ட போதிலும் தம்மருமை மக்கட்கு தம் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டும், கூடுமானால், எல்லாரையும் இரட்சகரிடம் இழுக்கும் நிமித்தம் தம் மில்லத்திலேயே இருக்கத்தீர்மானித்தனர். பின் நிகழும் சம்பவங்கள் இத்தீர்மானத்தின் பயனே. இவ்வம்மையாரின் ஜீவியத்திலுண்டான மாறுதல் பற்பல வழிகளிலும் காணப்பட்டன. குடும்பத்தில் விக்கிரக பூஜையை அசட்டை பண்ணினர். பண்டிகைகளுக்கு ஆர்ப்பாடமாய் தயாரிப்பதையும் குடும்பகாரியங்களுக்கு தம்மகத்து புரோகிதனிடம் ஜோசியம் கேட்பதையும் தற்சொரூபமாய் ஒழித்தனர். இவற்றை யெல்லாம் கண்ணுற்ற தம் கணவன் மனதில் சந்தேகம் கொள்ளாரோ? ஆகவே இச்சம்பவத்திற்குக்காரணமாயிருந்த மிஷனரி தம்மனைவியை அணுகாவண்ணம் ஏற்பாடுகள் செய்தனர். தாமும் முன்னிலும்மதிகமாக கிறைஸ்தவமார்க்கத்திற்கு விரோதியுமானார். இவ்வாறு காலம் கழிய, இவருக்கு இன்னும் இரண்டு பெண்கள் பிறந்தனர். ஒரு வெளிப்பயனும் தோன்றவில்லை. அவ்வம்மையாரின் இரகசிய பக்தி குறைந்து பழையபடி ஒழிந்து மார்க்க

த்திலாட் புருத்தனரோ என்று அநேகர் பயப்படலாம். ஆனால் விசேஷமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. மகேஷ சந்திரருடைய குமாரர் சரத்திரனுத் என்பவர், தம் தகப்பனார் தம்மைத் தடுக்க செய்த பிரயத்தனங்களையெல்லாம் மீறி ஒரு பாதிரியார் பள்ளிக்கூடத்தில் கல்விகற்கப்பிரவேசித்தனர். கொஞ்ச காலஞ் சென்றவுடன் குடும்பமே அலகபாத்துக்குப் பெயர்ந்தது. அவ்வன்னிய இடத்தில், குடும்பத்தினுள் கிறைஸ்தவ மார்க்கத்திற்கு அனுகூலமாய் நடந்துவந்த வெறுப்பான குழப்பம் திடீரென்று நின்றுவிடும்போல் தோன்றிற்று. ஆனால் அப்படி நிற்கவில்லை. ஸ்ரீமதி தாரிணியம்மாள் எவ்வளவு தம்குடும்பத்திற்கு கிறிஸ்துவைக் காண்பித்துக்கொண்டே வந்திருக்கிறாரென்பது பின்னால் தோன்றின பலன்களால் நன்கு விளங்கும். தம்குமாரத்திகளிரண்டுக்கு, மிகவும் மேட்டிமையான ஹிந்து மாப்பிள்ளைகள் கிடைத்து, தம் சம்மதமின்றி விவாகம் நடந்தேறியபோதிலும் இப்பெண்களும் இரட்சகரில் விசுவாசம் குறையாமல் தங்கள் கணவர்களையும் ஸ்நேகித்து சொந்தமாக்கவே தீர்மானித்து வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் சரத்சிரனுத் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமையிருந்ததால் லக்னவுக்கு ஓடிப்போய் தாம் முன்பு கல்விகற்ற மிஷன் கல்லூரி தலைமை உபாத்தியாயரை ஞானஸ்நானம் கேட்டார். அப்படியே அவர் இன்னுமதிகமாய் உபதேசிக்கப்பட்டு பெரிய ஜனக்கூட்டத்தின் முன்பாக ஞானதீட்சை பெற்றார். மேலும் தம் கல்வி முடிப்பதற்கு இரண்டு வருஷங்கள் அவ்விடம் தங்கினார். முடிந்தவுடன் போலீஸ் ஆபீஸில் சிறந்த உத்தியோகம் கிடைத்து, நற்குணமுள்ள ஒரு கிறிஸ்தவ பெண்ணை மணம் புரிந்தார். அதே டிபார்ட்மென்டில் தலைமைக்கும் உயர்ந்தார். பதினைந்து வருடங்கள் சர்க்காருக்கு நல்லவேலைசெய்து, எம்பெருமானுக்கு நேராய் சேவைசெய்யும் வண்ணம் தம்மை தியாகம் பண்ணி சுயதேசமிஷனரி சங்கத்திலமர்ந்தார். தக்கர் தாலுகாவில் வேலை செய்து வருகிறார்.

அவருக்குப்பின்னால் மகேஷ சந்திராவின் தங்கையாகிய இளம் விதவையும் இன்னும் விவாகமற்ற குமாரத்திகளிரண்டும் சபையிற் சேர்ந்தனர்.

விவாகமான பெண்களில் ஒருவருக்கு ஓர் சந்தோஷகரமான அனுபவம் உண்டாயிற்று. தம் கணவர் ஸோதிஷ் சந்திர கோசுவாமிக்கு டாக்டர் வேலை. இவருக்கு கிறிஸ்தவ மார்க்கத்தின் மேல் அதிக வெறுப்பு. இப்படியிருக்க ஒருநாள் தம்மனைவிக்கு நோய் கண்டு அநேக நாட்களாய் சுகமாகாமலிருந்தது. மனுஷ அவுஷத பிரயத்தனங்களெல்லாம் வீணாயின. எமனுக்கும் இவ்வம்மைக்கும் வெகுதூரமில்லையென்றே எல்லாரும் கூறினர். தமக்கு அதிக உள்ளன்போடு சிஸ்ருஷை பண்ணிவந்த தம்மனைவி உயிர்துறக்கப் போகிறதைக்கண்ணுற்று கோசுவாமி துக்கசாகரத்தில் ஆழ்ந்தனர்.



இந்த விசனகரமான நிலையில் தம்மனைவி தம்மை அழைப்பித்து "கிறைஸ்தவ சுவாமியை நோக்கிப்பிரார்த்திப்போம். அவர் என்னை சுகமாக்கினால் அவருக்குத் தொண்டர்களாவோம்" என்று புகல கோசுவாமியும் மருந்து பிரயோகத்தை நிறுத்திவிட்டு தெய்வ கிருபையையே நோக்கநின்றனர். நூதனமான ஆத்திரத்தோடு பலனை எதிர்பார்த்திருந்தார்கள். கொஞ்சங் கொஞ்சமாய், உயிர்துறக்கும் தருணத்திலிருந்த தம் நாயகி பூரணசௌக்கிய மடைந்ததைக்கண்ட நாயகன் மனதில் பெரிய மாறுதல் உண்டாயிற்று. அவருக்கு மருந்தின்மேல் நம்பிக்கையற்றதுமன்றி தம்தொழிலிலும் பிரியமில்லாமல் போயிற்று. தாம் பரோபகாரமாய் உழைத்தல் வேண்டுமென்று தாம் உயர்தரம் அமைந்த உத்தியோகத்தால் தூண்டப்பட்டார். தாம் வசித்த ஊரில் தம் காரியத்தைச் சொல்லுவதற்கு ஒரு கிறைஸ்தவ குருவுமில்லையாதலால், தம்மனைவியை அழைத்துக்கொண்டு தாம் முன்பு, கிறைஸ்தவ மார்க்கத்திலிருந்தும் பிரஸ்தாபித்த தம் மைத்துனனிடம் சென்று தாம் கண்ட அற்புதங்களையும், வந்த நோக்கத்தையும் செப்பினார். இது நிற்க, முக்தியில் பண்டிதர் ராமபாய் விதவைகளுக்காக வைத்திருக்கும் ஞானத மாதிரி அலகாபாத்திலே சக்கரபத்தி அம்மாள் ஒன்று சிறு அளவில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்விடம் நடந்த கூட்டங்களில் ஆச்சரியமான புதிய ஆவியின் பலம் காணப்பட்டது. அங்கிருந்து இத்தருணத்தில் சகோதிரிகளிலொருவர் வந்து சேர்ந்தார். ஒருநாள் சாயங்காலம் எல்லாரும் ஜெபதியானத்திற்குக்கூடியிருக்கும் பொழுது பெந்தெகோஸ்து நாளில் மேல் வீட்டில் எப்படி ஆவியின் குலம் தோன்றிற்றோ அப்படியே இவர்களுக்குமிருந்தது. கோசுவாமியும் மனைவியும் பரிசுத்தாவியாலும் ஜலத்தாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். இந்நாளிலிருந்து இவர்கள், சந்நியாசி உடைதரித்தாலும் சுவாமி எங்கே நடத்தினாலும் போயும் அவரையே தங்களுடைய லௌகிக தேவைகளுக்கு முற்றும் நம்பியும் பாபாத்மாக்கள் ஈடேற்றமடையும் பொருட்டு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டு உண்மை சந்நியாசிகளானார்கள்.

விவாகமான மற்ற குமாரத்திக்கு வேறே ஒரு அனுபவமிருந்தது, இளமையில் கணவர் காலமாய் விட்டதால் அவர் கிறைஸ்தவராகக் கூடாததைக்கண்டு அம்மையாருக்கு அதிக விசனம். தாமும் தம் ஒரே பையனுமாக ஞானஸ்நானம் பெற்றனர். பையன் சிறுவனாயிருந்தமையின் அலிப்பூர் ஜைஷன்ஸ் கோர்ட்டில் இவ்வம்மையின் நாயகனுடைய பந்துக்கள் பெரிய வியாஜ்ஜியம் போட்டு பையனை மீண்டும் இந்து மார்க்கத்தில் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் தாயே அவனை பாதுகாத்துக்கொள்ளுவதற்கு அனுமதி கிடைத்தது.

இது நிற்க, நாம், அன்னையையும் தந்தையையும் பற்றி சற்று கூறுவோம். தந்தை எப்பொழுதும் போல கடினமாகவும் கொஞ்சம்

கூட இடம் கொடாமலுமிருந்தார். மேலும் தம் குழந்தைகளெல்லாம் ஒவ்வொன்றாய் கிறிஸ்தவ சபையில் சேர தம்மனைவி கிறிஸ்தவ பாதிரியைப்போல் இருந்ததைக்கண்டு அதிக அதிகமாக கிறிஸ்தவ மார்க்கத்தின்மேல் கசப்பாயினர். இந்த நாட்களிலே இவ்வம்மை தனிமையையும் நாயகனுடைய துன்பங்களையும் எவ்வளவு சகித்திருந்தார்களென்பது நாம் கவனிக்கற்பாலது. ஆனாலும் நாயகன் பக்கத்திலேயிருந்து அவர் கிறிஸ்துவை சேரவேண்டுமென்று ஜெபித்தும் சகித்தும் காத்திருந்தார்கள். கடைசியாக, இவ்வம்மை ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு அவரை திருப்புவதற்கு அதிக விடாமுயற்சியாயிருந்தனர். இவ்வம்மையின் முயற்சியெல்லாம் வீணாயின. அவரும் மூன்று வருடங்கள் கழித்து தேகவியோகமானார். அதிலிருந்து இவ்வம்மை தம் வாழ்நாட்களை, இடைவிடாமல் ஆத்மாக்களை எம்பெருமானுக்குச் சொந்தமாக்குவதிலேயே. நாம் வாயினால் புகழக்கூடாதபடி செலவழித்து வருகின்றனர்.

ஜே. தேவதாசன்,
பொய்லி.

---

## ஓமலூர்.

(நமது தமிழ்ச் சங்கத்து அங்கத்தினரும் சேலம் டிஸ்டிரிக்ட் முன்சீபுமாகிய Mr. A. வெர்கீஸ் பீ. ஏ., பி. எல். அவர்களால் அடியிற் கண்ட விஷயம் எழுதப்பட்டது—பத்திராதிபர்).

கடந்த வாரம் ஓமலூரில் நடைபெற்ற நாஷனல் மிஷனரி சங்கத்தின் தமிழ் கூட்டத்துக்குப் போயிருந்தேன். பற்பல முக்கிய விஷயங்களைக் குறித்துப் பேசத் தெளிவடைந்தோம்; நடந்த வேலை அற்ப சொற்பமல்ல எனக் கூறுவேன்.

தென் இந்திய ஐக்ய சபையைச் சேர்ந்த Mr. ஸ்டீபன் என்பவர் ஒரு காலக்ஷேபம் நடத்தும்படியாகவும் கேட்டிருந்தது. நமது மிஷனெரியாகிய சங்: H. C. பாலசுந்தரம் ஐயரவர்கள் இதற்கென்று வெகு பேரை உபசரித்து அழைத்திருந்தார்கள். அவ்வூர் மாஜிஸ்ட்ரேட் அவர்களும், யூனியன் சேர்மன் அவர்களும், ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜனும், P. W. ஓவர்ஸியரும் இன்னும் பல உத்யோகஸ்தரும் வந்திருந்தனர். 200 பேருக்கதிகமான பேர் வந்திருந்தமையால் இடம் போதாமல் பின்வந்த அநேகம் பேர் வெளியே நிற்கவும் நேர்ந்தது. காலக்ஷேபத்தின் பொருள் ஐசுவரியவான் லாசரு என்பவர்களின் சரித்திரம். அது மனதை அசைப்பதாயும் மகிழ்ச்சியை அளிப்பதாயும் இருந்தது. அதை உச்சிதமான சங்கீத விருந்தென்பேன்; உயிர்தரு சன்மார்க்க ஜீவியத்துக்கான உபசாலை



என்பேன்; எல்லாம் பொருந்திய எழுப்புதலான பிரசங்கம் என்றும் சொல்வேன். Mr. ஸ்டீபன் என்பவர் சிறந்த தமிழ் வித்வானும் தேர்ந்த சங்கீத சாகித்யனுமாவார். அவரது உச்சித சங்கீதம் கூடி வந்தோர் மனதை முற்றக்கவர்ந்து கொண்டது; இதையே இக்காலக்ஷேபத்தின் அழகு என்பேன். நரகத்தில் வேதனைப்பட்ட ஐசுவரியவானின் பயங்கரநிலைமைக்கும் மோட்சத்தில் பாக்யம் அனுபவித்த ஏழை லாசருவின் இன்பநிலைமைக்கும் இசைந்த வண்ணமே இராகம் பாடினார். அவர் பிரசங்கத்துக்கு அவர் பாடல்கள் மிக்க சணை கொடுத்தன என்னலாம். அவர் பேசிய நியாயங்களுக்கு அத்தாட்சியாக மாணிக்கவாசகர், திருவள்ளுவர், தாயுமானவர் முதலான வித்வசிரோமணிகளின் பாடல்களில் பலவற்றை எடுத்துக்கூறி, தமது தாத்பரியத்தைச் சரியாய் உணர்த்தும் பொருட்டு இந்து புராணக் கதைகளினின்றும் திருஷ்டாந்தங்களைக் காட்டி விளக்கினார். அவரது சங்கீதத்தின்மீது தோன்றின வியப்பு அவரது தமிழ்ப்பாண்டித்யத்தின் மீதும் கவர்ந்து சென்றது. அந்தச் சபையனைத்தும் அவரது பிரசங்கத்தின் பெலனை உணர்ந்தார்கள். சபையார் மிகவும் கவனமாய்க் கேட்கத்துவக்கினதை அறிந்து கொண்டபிறகே, அவர் கிறிஸ்தவ ஜீவியத்தையும் அதன் மேலான மாதிரிகளையும் பற்றி சுருக்கமாய்ப் பாடலும் வாசகமும் கலந்து பலமாய்ப் பேசினார். அதுவே அவர் பிரசங்கத்தின் முக்கிய பாகம்.

இத்தகைய காலக்ஷேபமானது சங்கீத விருந்தளித்தலாயிருத்தலோடு கிறிஸ்து மதப்பிரசங்கத்தைக் கேட்க மனமற்ற ஏராளமான ஜனங்களும் சந்தோஷத்தோடு கூடிவரும்படிச் செய்யும் வல்லமையுடையதாயிருப்பதால் கிறிஸ்துமார்க்க பிரபல்யவேலைக்குச் சித்தியளிக்கும் சிறந்த முறையெனச் சொல்லலாம். சிலர் அவதூறு பண்ணுவது போல் கிறிஸ்துமார்க்கம் பொல்லாத மார்க்கம் அல்லவென்றும், அநேக இந்துக்களைவிட சில கிறிஸ்தவ பிரசங்கிகள் இந்து மார்க்கத்தை நன்கு அறிந்திருக்கிறார்கள் என்றும் கிறிஸ்தவர்களின் மார்க்கத்தைக்குறித்துக் கொஞ்சமாவது அறிவது அவசியம் என்றும் அங்கு கூடி வந்திருந்த அநேகருக்குள் நல்லெண்ணங்கள் தோன்றப் பெற்றுத தம் இல்லம் ஏகினர் என பலமாய் உணர்ந்தேன். இதற்கிசைய, கூடிவந்தவர்களிலொருவர் பிரசங்கம் முடிந்ததும், கீர்த்தியான சங்கீதமும் மேன்மையான பிரசங்கமும் கேட்க அநேகருக்கு நற்சமயம் அளித்த போதகருக்கு நன்றி வசனம் கூறினர்.

மூடி என்பவரின் பக்திமுயற்சியில் சாங்கி என்பவரின் சங்கீத நிபுணத்துவம் எவ்வளவு உபயோகமாயிருந்தது என்பது யாவரும் அறிந்த விஷயமே. காலக்ஷேபமும் இந்தியாவில் சுவிசேஷ வேலையைப் பயனுறச்செய்ய பாங்கான முறையாகவே நிற்கும். ஆயினும் படிப்பில் தேர்ச்சியும் சங்கீதத்தில் சிறப்பும் ஒன்று கூடி வாய்பெற்ற

னுள் கிடைப்பது கஷ்டம். தென் இந்திய ஐக்கிய சபையின் பரிபாலிப்பில் Mr. ஸ்டீபன் என்பவர் சில தமிழ் ஜில்லாக்களில் வெகு வேலை செய்கிறார் என்று கேள்விப்படுகிறேன்.

ஓமலூர் கூட்டம் காரிய சித்தியுள்ளதே. அங்குள்ள நமது மிஷனரியும் அவரது உதவி ஆட்களும் ஜனங்களால் நேசிக்கப்படுவதை கமிற்றியார் பார்க்கக்கூடியதாயிற்று. மேலும் அந்த வட்டாரத்திலுள்ள எங்கள் மிஷனரிமாருக்குத் துணையாய் இந்தியாவின் பற்பல பாகங்களிலும் இவர்கள் வேலையைப் பற்றிய கரிசனம் நிறைந்தவராயும் பக்தி வைராக்கியம் நிறைந்தவராயும் சுவிசேஷ வேலையைப் பரிபாலிக்கும் பேராவல் கொண்டவராயும் அநேக படிப்பாளிகள் இருக்கிறார்கள் என்றும் அப்பக்கத்து ஜனங்கள், இந்த கூட்டத்து அங்கத்தினரை பார்க்கச் சமயம் பெற்றதால், அறிந்திருப்பார்கள்.

ஓமலூர் என்னுமிடத்தில் மிஷனரி வேலை செய்வது அதிக கஷ்டம். அந்த தாலூக்கா அதிக தரித்திரதசையிலும் மிகவும் தாழ்வான நிலையிலுமிருக்கிறது. ஜனங்கள் பெரும் பேதையர், எளிதும் மூட வைராக்கியர். எனக்கு அங்கே ஒரு ஆள் தெரியும், அவனுக்கு ஒரே மகன். கடுமையான சீதபேதி அவனுக்குக் கண்டது. அச்சமயத்தில் சமீபத்திலிருந்த ஆஸ்பத்திரிக்கு தன் மகனைக் கொண்டு போகமாட்டேன் என்று பிடிவாதம் பண்ணினான். காரணம் கேட்டதற்கு: என் தேவதை கல்லுத்தரவு கொடுக்கவில்லை என்றும் ஆஸ்பத்திரியில் மகனைக்கொன்றுபோடுவார்கள் என்றும் சொன்னான் பிள்ளைக்குப் பல சாங்கியங்கள் செய்து கடைசியாய்ப் பிள்ளையை இழந்தான்.

கேவல உடைகரித்து உயர்ந்த ஜாதியார் என்ற பெருமை கொண்டு கிறிஸ்தவர்களை அவமதிக்கிற தொழிலாளிகள் மலையாளத்துந்தீய ஜாதியான தொழிலாளிகளையும் திருவாங்கூர் ஈழுவர்களையும் பார்க்க மகா பேதைமையும் அசங்கதம் நிறைந்தவர்களும் ஸ்நானபான சுத்தமற்றவர்களுமாயிருக்கிறார்கள். இந்த தாலூக்காவில் மலேரியா ஜுரமும் கினியா புழுவின் கெடுதியும் அதிகம். ஊருக்குள்ளே அவ்வளவு அல்ல. ஆனதுபற்றி வைத்திய மிஷன் வேலைக்கு தாலூக்காவில் போந்த சமயம் உண்டு. தற்சமயம் மிஷன் வேலை நன்றாய் ஆரம்பித்திருக்கிறது. இனியும் செம்மையாய் நடக்கும் என்று நம்ப போந்த ஆதாரமும் உண்டு. இவ்வூரில் நடக்கும் சுவிசேஷ வேலைக்கு உற்சாகமும் ஊக்கமும் உண்டாக்கும் பொருட்டு வருஷத்திலொரு முறை கமிற்றியார் கூட்டம் இவ்வூரில் நடைபெறுவது நலம்.

சேலம்,
26—8—17.

ஏ. வேர்கீஸ்.

---



## பூனா கிளைச்சங்கம்.

இந்தியாவின் வட பாகத்திலும் தென்பாகத்திலும் நமது சங்கம் நன்றாய் அறியப்பட்டிருக்கிறது. பம்பாய்ராஜதானியில் நமது சங்கத்தின் காரியங்களை அறிந்தவர்கள் மிகச் சொற்பம். Mr. பண்டர் என்னும் ஒரு வக்கீல் இந்தப்பகுதிக்குக் காரியதரிசியாய் இருக்கிறார். அவர் நமது சங்கத்துக்கு மெத்த உதவியானவர். நமது சங்கத்திற்கு உதவி செய்ய இங்கே இருக்கிற கிறிஸ்தவ பெண்கள் ஒரு சகோதரிகளின் கிளைச்சங்கம் என்று ஒரு கூட்டமாய் கூடித் தையல் வேலைசெய்கிறார்கள். வருகிற வருஷத்தில் ஒரு பெரிய விற்பனை கூட்டம் (Fancy Sale) வைக்க யோசித்திருக்கிறார்கள்.

கடந்த ஜூன் மாதத்தில் Mr. பி. ஒ. பிலிப்பு இங்கே வந்து எல்லாரையுஞ் சந்தித்துப்பேசி, பிற்பாடு ஒரு பெரிய மிஷனரிக்கூட்டத்தில் நமது சங்கத்தைப்பற்றி விவரித்தார். அங்கே வந்திருந்தவர்கள் தாங்கள் எவ்வளவும் உதவி செய்யப்பிரியப்பட்டு ஒரு N. M. S. Working Band என்னும் கிளைச்சங்கத்தை நியமித்தார்கள். இதில் இரண்டு பேரை காரியதரிசிகளாகவும் ஒவ்வொரு சபையிலும் இருந்து இரண்டு பேர் அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். வேலை செய்கிறவர்களுக்கே கனம் உரியது என்ற நோக்கத்தை இட்டு காரியதரிசிகளே இந்த வேலைக்குப் பொறுப்பாகவும், பிரெஸிடெண்ட் வைஸ் பிரெஸிடெண்ட் என்று பேருக்கு உத்தியோகம்பெற்று இருக்கிறவர்கள் தேவை இல்லை என்று எண்ணப்பட்டது.

இந்தக் கமிட்டி ஆகஸ்ட் மாதத்தில் கூடினபோது பின்வருங்காரியங்களைச் செய்யத்தீர்மானித்தார்கள்.

(1) நமது சங்கத்தின் பத்து வருட அறிக்கையின் சில பாகத்தை மராட்டிப்பாஷையில் மொழிபெயர்த்து அச்சிட்டு எல்லாருக்குங் கொடுக்கவேண்டும்.

(2) மாதத்திற்கொரு தடவை ஒரு பெரிய மிஷனரிக்கூட்டம் வைக்கப்படவும் அதில் முதல் அரை மணி நேரம் ஜெபத்தில் தரித்திருக்கவும் வேண்டும்.

(3) ஒவ்வொரு சபையிலும் மாதத்தில் ஒரு தடவை மிஷனரிப்பிரசங்கம் இருக்கும்படி ஒழுங்கு செய்யவேண்டும்.

(4) கமிட்டியைச் சேர்ந்த எல்லாரும் மற்றவர்களுக்கு இதைப்பற்றி சொல்லி பணங்கொடுத்து உதவக்கூடியவர்களிடத்தில் அதைச் சேர்க்கவேணும். இதற்காக, 2 பணஞ்சேர்க்கிற புத்தகங்கள் இருக்கவேண்டும்.

(5) இவ்விதமாய் எல்லோரும் நமது சங்கத்தைப்பற்றிய அறிவிலும் மிஷனரி ஆவியிலும் வளர்க்கப்படவேண்டும்.

நமது சங்க சம்பந்தமாய் வேலை செய்கிற எல்லாருக்கும் மெத்த தைரியத்தைக்கொடுக்கும் ஒரு காரியம் என்னவென்றால் இதைப் பற்றி நன்றாய் அறிகிறவர்கள் மெத்த அநுதாபங்காட்டி தாங்கள் செய்யக்கூடிய உதவியைச் செய்யவேண்டும் என்று உணருகிறார்கள். ஒருநாள் நான் ஒரு இந்திய போதகர் வீட்டில் அவரைச் சந்தித்து நமது சங்கத்தின் காரியங்களைப்பற்றிப் பேசினபோது அவர் மெத்த நிர்விசாரமாக இருந்து குளிர்ந்த இருதயத்துடன் பேசினார். அவரோடு சில காரியங்களை மெத்தத் தெளிவாய்ப் பேசி நான் முகவாட்டமாகத் திரும்பும்போது அடுத்த வீட்டில் இருந்த ஒருவர் என்னை உள்ளே வரவழைத்து, நீர் N. M. S. அபிமானி என்று அறிகிறேன் இப்போது நீர் இந்தப் போதகர் பேசின காரியங்களைப்பற்றி மனஞ்சோரத்தேவையில்லை. நான் ஆக்ரா காலேஜில் படிக்கும்போது N. M. S. க்காக அதிக உதவி செய்தவன். சில வேளைகளில் வீடு வீடாய்ப்போய் கோதுமை சேர்த்து உதவி செய்தேன். நான் யுத்த முகத்திற்குப் போனபின் உம்முடைய இங்கிலிஷ் பத்திரிகை எனக்கு வருகிறதில்லை. அதை எனக்கு வரவிக்கவேணும். இன்னும் பண உதவியும் செய்வேன். நீர் தைரிய வீனப்படாதபடிக்கு உம்மால் செய்யக்கூடியதைச் செய்யும் நானும் உதவி செய்வேன். இவரை நான் முன் அறியாதவனாய் இருந்தும் அவர் இவ்வளவு பேசினது எனக்கு மெத்த சந்தோஷமாய் இருந்தது. என் தேவனை ஸ்தோத்தரித்தேன். இப்படிப்பட்ட மனம் உள்ளவர்கள் சிலர் வட இந்தியாவில் இருந்து வந்திருக்கிறார்கள். தம்முடைய ஊழியத்திற் பிரியமான அநேகம் பேரைக் கர்த்தர் இந்தியாவின் பல இடங்களில் வைத்திருக்கிறார். அவர்களைத் தேடிச் சேர்த்து ஒருமனப்பட்டவர்களாய் தேவ ஊழியத்தில் முன் ஏறிச் செல்ல அவர் உதவி புரிவாராக. ஒவ்வொரு இந்திய கிறிஸ்தவனும் தான் தான் செய்யக்கூடியதைச் செய்தால், சம்பளம் பெறும் பிரயாண காரியதரிசிகள் தேவை இல்லையே. ரோமர் 10. 1 ல் பவுல் சொன்னது போல, "சகோதரரே இஸ்ரவேல் (இந்தியா) இரட்சிக்கப் படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாய் இருக்கிறது". இப்படிப்பட்ட மனதை தேவன் நம் எல்லோருக்கும் தருவாராக.

ஒரு கிறிஸ்தவன்.

செப்டம்பர் மாதம் முடிவில் வரவுக்கு மேல் செலவு 2500 ரூபாய் அதிகப்பட்டது. ஆதலால் நண்பர் எல்லோரும் உற்சாகமாய் கொடுக்க கேட்டுக்கொள்ளுகிறோம். காணிக்கை யனுப்ப விரும்புவோர்— சென்னை, ராயபேட்டை, நாஷனல் மிஷன் சங்கத்து பொக்கிஷதாரர் என்று மேல்விலாசம் போட்டு எழுதிக்கொள்ளவும்.

Printed and Published by Mr. K. T Paul at the T. A. C. Press, Salem.

மாதந்தோறும் வெளியாகும்

வருஷச் சந்தா ஒன்று...

30 NOV 1917

# இந்திய சுயதேச மிஷனரி சங்கத்து பத்திரிகை.

Vol. IX NOVEMBER 1917 No. 11

## சுவிசேஷ வேலையில் மனிதர் நம்பிக்கை அற்றுப்போவதேன்.

அமெரிக்க கிறிஸ்தவர்களின் மிஷனரியாய் ஜேம்ஸ் எல். பார்ட்டன் போதகர் எழுதியது இது. நமது N. M. S. சங்கம் இந்தியாவில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாத இடங்களில் சுவிசேஷ வேலை செய்து வருகிறது. இவ்வேலைக்கு அவசியமான பொருள் உதவி செய்வது இந்திய கிறிஸ்தவர்கள் மேல் விழுந்த கடன். ஆகவே அப்போதகர் அபிப்பிராயத்தைக் குறித்துக் கூறும் பல நியாயங்கள் இந்திய கிறிஸ்தவர்களுக்கும் செல்லும். அவை பின்வருமாறு:—

I. மற்றவர்களின் மதத்தில் தலையிட்டல் நமக்கு நியாயமல்ல.

ஒவ்வொரு ஜாதிக்கும் அவரவர் மதமுண்டு. பிறப்பினால் அவர் அம்மதத்தவர். அது அவரது நாகரீகத்துக்கும் நாடோடி ஜீவியத்துக்கும் பொருத்தமானது. அவர் அம்மதத்தில் திருப்திகொண்டிருக்கும்போது நாம் அவரை அதிருப்தியடையச் செய்வது நியாயமா? மற்ற மத அநுசாரிகளுள்ளும் பேர் பெற்ற பக்தரிருக்கையில் அம்மதம் உபயோகமற்றதென்றில் ஆகுமோ. ஆகவே அவரவர் தம்தம் காரியத்தைப்பார்க்கட்டும். மற்றவர் மதத்தில் தலையிட வேண்டாம்.

மேம்பாக்காய்ப்பார்க்குமிடத்து இது வெகு நியாயம்போல் தோன்றும். ஆயினும் சுவிசேஷ பிரசங்க விஷயத்தில் இப்பிரமாணத்தைக் கூறுவோர் இது ஒழிந்த மற்ற விஷயத்தில் இப்பிரமாணத்தை அநுசரிப்பதைக்காணோமே. வர்த்தகமுதலாளிகளைப்பார்ப்போம். இவர் மற்ற நாட்டார் தொன்று தொட்டு வழங்கிவரும் முறைகளின் குறைவைத் தூண்டிக்காட்டி அவற்றில் அந்நாட்டார் அதிருப்தியடையச் செய்கிறார்களே. ஆசியாவில் கடந்த ஐம்பது வருஷம் வரையும் கைத்தையல் அல்லவோ பிரசித்தம். இப்பொழுதோ நம் வர்த்தகர் தமது தையல் யந்திரத்தின் மேம்பாட்டைக்காட்டி யாவரும் இந்த யந்திரத்தை வாங்க வழி செய்யவில்லையா. சீனதேசத்து ஒரு தையற் கடையில் மாத்திரம் பத்தொன்பது யந்திரத்தைக் கண்டேன்.

விக்ரோட் வியாபாரிகளின் காரியமென்ன. அழகிய படங்களைக் காட்டி சங்கான் குடிக்கும் ஆப்பிரிக்கரையும், புகையிலையை முற்றும் நாடாத ஆசியா கண்டத்தவரையும் மயக்கிவிடவில்லையோ. இதனால் அவர் அநுபவிக்கும் பெரும் லாபத்துக்கும் கணக்குண்டோ.

முன்னேறின் மதத்தில் அமிழ்ப்பட்டாக்கலாகாது என வைராக்கியங் காட்டும் இப்பெரியோர், மதமொழிந்த மற்றெல்லா பழக்க வழக்கத்திலும் அந்நிய நாட்டாரை அநீர் இயமைப் செய்கிறார்களே. ஆர், அந்நிய நாட்டாரின் செல்வத்தைக் காப்பாற்றுவதில் கண்ணுங்கருத்துமாயிருக்கும் இவர் சுயாபமின்றி சன்மார்க்க நாகரீகம் முதலிய வற்றில் மற்றவரை மேன்மைக் குக்கொண்டுவர முயற்சி செய்யும் சுவிசேஷ வேலையைக்குறித்துக் குறை கூறுவர்.

2. கடவுள் மற்ற மத அநுசாரிகளுக்காகத் தாமே கவலைப் படுவார். ஆகையால் நாம் தலையிடவேண்டியதில்லை.

இது மனமார அவர் சொல்லும் நியாயமோ என்பது சந்தேகம். மானிட அநுபோகத்துக்கு முற்றும் மாறான நியாயம் இது. தெய்வ நடத்துதலையும் உலக சரித்திரத்தையும் சன்மார்க்கவழியின் அறியாமையும், அவிசுவாசமும் இதன் காரணம். மகா புராதன ஜாதியும் விசேஷித்த மனுஷரின் முசைமயித்தான் நாகரீகமடைந்தது. உலகத்திலுள்ள பல ஜாதிகளும் ஒருவரோடொருவருக்குண்டான சம்பந்தங்களினாலன்றோ சீர்திருத்தம் பெற்றன. இவ்வித சரித்திர சம்பவங்கள் இலையிலெழுத்துப்போல் கண்முன்னின்றும் யாதொரும் அரிய மனமாறுதல் முயற்சியின்றி அடைவார்கள் எனச் சொல்லத்துணிவது சரித்திர சம்பவங்களையும் சகல மத உபதேசத்தையும் மறுப்பதாகுமன்றோ.

3. சொந்த நாட்டில் போதிய வேலையிருக்கிறதென்பது மற்றொரு நியாயம்.

சகல சன்மார்க்க, சாஸ்திர, சமாசார, மதவிருத்தியும் ஒரு ஸ்தானத்தினின்று எங்கும் பரவுதல் சமாது அநுபவம். இதுவே பூர்வம் முதல் இன்றைய வரைக்குமுள்ள பிரமாணம். கல்வி அபிவிருத்தி விஷயத்தைப் பார்ப்போம். சில பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் உள்ள ஒரு நகரத்தில் இன்னும் பல பள்ளிக்கூடங்களிருந்த பின்பு அவற்றை விட்டு சுற்றுப்புறங்களில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கிறோம். மதுவிலக்குச் சங்கங்களின் விஷயமென்ன. ஒரு நாட்டிலுள்ளவர் யாவரும் குடியை விட்டாரென்று அயல் நாட்டிக்குப்போகிறோம்.

மத விர்த்தியிலும் இப்பிரமாணமே செல்லுகிறது. புத்தமதம் அவரது சீஷரும் ஒரு தாலுக்காவிலுள்ள யாவரும் புத்தராகுமட்டும் காத்திருக்கவில்லையே. முகமதுவும் அவரது பின்னடியாரும் மெக்கா, அராபியாவிலுள்ள முழுவதும் முகமதியராக்கிப் பிறகு மற்ற தேசங்களுக்குப்போகவில்லையே.

கிறிஸ்து மார்க்கப்பரம்புதலும் அவ்வாறே. சகல ஜனங்களும் தேசத்து ஒரு பாகத்தைத்துணைப்படுத்தும் வரையும் மற்றபாகத்துக்குப்போகாமலிருந்தால் நல்லதில்லையே. அவர் அக்காலமுழுவதையிலும் அற்புதஞ்செய்து உபதேசித்து வந்தார்.

அவர் சீஷர் செய்ததும் அதுவே. அவர் "ஆண்டவர் பிறந்த பெத்லகேம் முதலான யாவரும் கிறிஸ்தவர்களாகும் மட்டும் எருசலேமில் ஒன்றுஞ் செய்யமாட்டோம்; எருசலேம் சனங்கள் எல்லாரும் இம்மார்க்கத்தை அநுசரிக்கும் வரையும் வேறெங்கும் வேலை செய்யமாட்டோம்" என்றிருந்தால்



காரியமென்னமாய் முடிந்திருக்கும். அநேகமாய் இப்பொழுது வரையும் பெத்லகேமில் மாத்திரமே சுவிசேஷவேலை நடக்கும். ஏன்? முதலாம் நூற்றாண்டின் பூசகர் பலரும், பிடிவாதமுள்ள புறச்சாதியார் சிலரும் அங்கிருப்பது நிச்சயம்.

4. சொந்த சபைக்கே பணம் அவசியமாயிருக்கிறது. "தனக்கு மிஞ்சி தானதர்மம்."

சொலற்கரிய சுய நயம் இதற்குக் காரணம். சகல அன்பின் பிரமாணங்களுக்கும் விரோதம் இது. தன்னைப்போல் முடிவுடை தானமும், தனக்கென்றே பிழைக்கும் சபையும் அதை இயேசு கிறிஸ்துவின் ஆலயமாக்கும் சுய சுயநயமற்ற சுயவெறுப்பால் பிறக்கும் எவ்வாம் யாவையும் முற்றும் இழக்கும். சுயநயமற்ற சுயவெறுப்பால் பிறக்கும் இறையாத தர்ம ஊழியஞ் செய்யா எந்தச்சபையும் வெகுநாள் நிற்காது. இறையாத சுயவெறுப்பு செய்யக்கூடாதவனே. வெறுப்பு ஊழியஞ் செய்யாக்கறிஸ்தவன் சுயவெறுப்பு செய்யக்கூடாதவனே. புறத்தேச சுவிசேஷவேலையால் அநேகர் கிறிஸ்துவின் சபையில் சேருகிறார்கள் என்பது மெய்யே எனினும் அவ்வேலையால் விளையும் உத்தம பலன் இதுமாத்திரமல்ல ஆண்டவர் தந்த சிந்தையோடு ஜீவித்துப்போதித்து வந்தாரோ அந்த சிந்தையை கிறிஸ்தவ சபையில் இன்னும் காத்து வளர்த்து வருவதே போதுமான பலன். சுவிசேஷவேலைக்கென்று ஊழியரையும் ஊதியத்தையுங் கொடுத்ததால் கஷ்டமடைந்த சபைகளுமுண்டோ. அதற்குமாறாக தெய்வஞானமும் உன்னதபலமும் பெற்று இச்சபைகள் மேம்பாடடைந்ததில்லையோ?

5. இவ்வூழியத்தில் சித்திபெறுவோம் என்ற நம்பிக்கையில்லை.

இச்சத்தியமே நம்பிக்கைக்கு மூலாதாரம். கணித சாஸ்திர முறையை அநுசரிப்பதால் அல்லது பல்லாயிரம் சுவிசேஷகர் லக்ஷக்கணக்கான பணம் இவற்றால் கிறிஸ்துவுக்கு மானிடரை அடியாராக்க எண்ணினோமானால் இது நம்பிக்கையற்ற வேலையே, பலனற்ற பிரயாசையே. இது மானிட பலத்துக்கு மிஞ்சின தென்பதே நமக்கு ஆனந்தமளிக்கிறது. வானத்திலும் பூமியிலும் எனக்குச் சர்வ வல்லமை கொடுக்கப்பட்டிருக்கிறது, என் றீஷரோடு உலகத்தின் முடிவுமட்டும் சென்று அவர்களுக்கு ஜெயங்கொடுப்பேன் என்றருளிய நமது ஆண்டவருடைய வசனத்தைப்பற்றிப்பிடிக்க இதுவே நம்மை வலும். ரோம ராஜ்யத்தைக் கீழ்ப்படுத்துவது நம்பிக்கையற்ற விஷயமே எனினும் அப்போஸ்தலர் அவ்வேலையைச் செய்யத்துணிந்தார். செய்து சித்தியும் பெற்றார். இன்னும் சுவிசேஷ ஊழியத்துக்கு எத்தனையோ தடைகள் உண்டு. ஆயினும் தெய்வவல்லமையினாலும் உயிரோடிருக்கும் ரக்ஷகரின் ஒத்தாசையாலும் சுவிசேஷகர் பெற்றுவரும் ஜெயத்தை நாம் கண்டோமில்லையோ.

6. நமது ஆத்மீக ஜீவியத்தில் இன்னும் எத்தனையோ குறையிருக்கிறதே.

இந்த நியாயத்துக்கு எதிர் நியாயம் கூறுவது கடினமாகத்தோன்றும். கிறிஸ்து நாதர் தாமும் அவரது சீஷரும் துவக்கிய அரியவேலையைக் கொண்டு நடத்தயோக்கியமுடையோர் யார் என நாம் கேட்போம். மேலும்,

முன்னோரின் மதத்தில் அமிழ்ந்திருந்தால் போதாது என வைராக்கியம் காட்டும் இவர்களோ, மதிப்புமிக்க மற்றெல்லா பழக்க வழக்கத்திலும் அந்நிய நாட்டாரை அநுசரித்து வருகிறார்களே. ஆம், அந்நிய நாட்டாரின் செல்வத்தைக் கைப்பற்றுவதில் கண்ணுங்கருத்துமாயிருக்கும் இவர்கள் [illegible] மற்றவரை மேன்மைக் கொள்கிறார்கள். முயற்சி செய்யும் சுவிசேஷ வேலையைக்குறித்துக் குறை கூறுவர்.

2. கடவுள் மற்ற மத அநுசாரிகளுக்காகத் தாமே கவலைப்படுவார். ஆகையால் நாம் தலையிடவேண்டியதில்லை.

இது மெய்யானால் அவர் சொல்லும் நியாயமோ என்பது சந்தேகம். மானிட அனுபோகத்துக்கு முற்றும் மாறான நியாயம் இது. தெய்வ நடத்துதலையும் உலக சரித்திரத்தையும் [illegible] அறியாமையும், அவிசுவாசமும் இதன் காரணம். [illegible] புராதன ஜாதியும் விசேஷித்த மனுஷரின் [illegible]. உலகத்திலுள்ள பல ஜாதிகளும் ஒரு [illegible] சம்பவங்களினாலன்றோ சீர்திருத்தம் பெற்றன. இவ்வித சரித்திர சம்பவங்களை [illegible] கண் முன் [illegible] அடைவார்கள் [illegible] சரித்திர சம்பவங்களையும் சகல மத உபதேசத்தையும் [illegible].

3. சொந்த நாட்டில் போதிக்க வேலையிருக்கிறதென்பது மற்றோர் நியாயம்.

சகல சன்மார்க்க, சாஸ்திர, கலைகளும், மதவிர்த்தியும் [illegible] எங்கும் பரவுதல் அநுபவம். இதுவே [illegible] முதல் இன்னும் [illegible] பிரமாணம். கல்வி அபிவிர்த்தி விஷயத்தைப் பார்ப்போம். பல பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் உள்ள ஒரு நகரத்தில் இன்னும் பல பள்ளிக்கூடங்களுக்கு மிகுந்த அவசியமிருப்பினும் அதை விட்டு சுற்றுப்புறங்களில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கிறோமே. மருத்துவசாலைகளின் விஷயமும் அன்னே. ஒரு நாட்டிலுள்ளவர் யாவரும் குடியை விட்டாலொழிய வேறு ஆவல் காட்டிக்கொண்டிருப்போமாகில் [illegible].

மத விர்த்தியிலும் இப்பிரமாணமே செல்லுகிறது. புத்தமதம் அவரது சீஷரும் ஒரு தாயகத்திலுள்ள யாவரும் புத்தராகும்வரை காத்திருக்கவில்லையே. முகமதுவும் அவரது பின்னடியாரும் மெக்கா, அராபியாவிலுள்ளவை முழுவதும் முகமதியராக்கிப் பிறகு மற்ற தேசங்களுக்குப் போகவில்லையே. கிறிஸ்து மார்க்கப்பரம்புதலும் அவ்வாறே. ஏசு கிறிஸ்து பாலஸ்தீனா தேசத்து ஒரு பாகத்தைத் [illegible] வரையும் மற்ற பாகத்துக்குப் போகவேண்டுமென்றில்லையே; அவர் அநேக முறைமையிலும் அற்புதஞ்செய்து உபதேசித்து வந்தார்.

அவர் சீஷர் செய்ததும் அதுவே. அவர் "ஆண்டவர் பிறந்த பெத்லெகேம் முதற்கொண்டு யாவரும் கிறிஸ்தவர்களாகும் மட்டும் எருசலேமில் ஒன்றும் செய்யமாட்டோம்; எருசலேம் சனங்கள் எல்லாரும் இம்மார்க்கத்தை அநுசரிக்கும் வரையும் வேறெங்கும் வேலை செய்யமாட்டோம்" என்றிருந்தால்



காரியமென்னமாய் முடிந்திருக்கும். அநேகமாய் இப்பொழுதும் பெத்லெகேமில் மாத்திரமே சுவிசேஷ வேலை நடக்கும். என்? [illegible] நிச்சயம் [illegible] பலரும், பிடிவாதமுள்ள புறச்சமயத்தார் [illegible].

4. சொந்த சபைக்கே பணம் அவசியமாயிருக்கிறது. "தனக்கு மிஞ்சி தான தர்மம்."

சொலற்கரிய சுய நயம் இதற்குக் காரணம். [illegible] கருக்கும் விரோதம் இது. [illegible] பிழைக்கும் சபையும் [illegible] சுயநயமற்ற சுயவெறுப்பால் பிறக்கும் [illegible] முற்றும் இறக்கும். [illegible] தர்ம ஊழியஞ்செய்யா எந்தச்சபையும் [illegible] ஜீவனற்ற [illegible]. வெறுப்பு ஊழியஞ் செய்யாத்தவன் சுயவெறுப்பு செய்யக்கூடாதவன். [illegible] புறதேச சுவிசேஷ வேலையால் அநேகர் கிறிஸ்துவின் சபையில் சேருகிறார்கள் என்பது மெய்யே [illegible] இது மாத்திரமல்ல ஆண்டவர் [illegible] சிந்தையோடு [illegible] வந்தாரோ அந்த சிந்தையை கிறிஸ்தவ சபையில் இன்னும் [illegible] வளர்த்து வருவதே போதுமான பலன், சுவிசேஷ வேலைக்கென [illegible] ஜெயத்தையும் கொடுத்ததால் [illegible] சபைகளுமுண்டோ. அதற்குமாறாக தெய்வகிருபையும் [illegible] பெற்று இச்சபைகள் மேம்பாடடைந்ததில்லையோ?

5. இவ்வூழியத்தில் சித்தி பெறுவோம் என்ற நம்பிக்கையில்லை

இக்காரியமே நம்பிக்கைக்கு மூலாதாரம். கணித சாஸ்திர முறையை அநுசரிப்பதால் அல்லது பல்லாயிரம் சுவிசேஷகர் லக்ஷக்கணக்கான பணம் இவற்றால் இவ்வுலகை [illegible] அடியாராக்க எண்ணினோமானால் இது நம்பிக்கையற்றதே, பலனற்ற பிரயாசையே. இது மானிட பலத்துக்கு மிஞ்சின [illegible]. வானத்திலும் பூமியிலும் எனக்கு சர்வ வல்லமை கொடுக்கப்பட்டிருக்கிறது, என் சீஷரோடு உலகத்தின் முடிவுமட்டும் சென்று அவர்களுக்கு [illegible] என்றருளிய நமது ஆண்டவருடைய வசனத்தைப் பற்றிப்பிடிக்க இதுவே நம்மை [illegible]. ரோம ராஜ்யத்தைக் குணப்படுத்துவது நம்பிக்கையற்ற விஷயமே எனினும் அப்போஸ்தலர் அவ்வேலையைச் செய்யத்துணிந்தார். செய்து சித்தியும் பெற்றார். இன்னும் சுவிசேஷ ஊழியத்துக்கு எத்தனையோ தடைகள் உண்டு. ஆயினும் தெய்வவல்லமையினாலும் உயிரோடிருக்கும் ரக்ஷகரின் ஒத்தாசையாலும் சுவிசேஷகர் பெற்றுவரும் ஜெயத்தை நாம் கண்டோமில்லையோ.

6. நமது ஆத்மீக ஜீவியத்தில் இன்னும் எத்தனையோ குறையிருக்கிறதே.

இந்த நியாயத்துக்கு எதிர் நியாயம் கூறுவது கடினமாகத்தோன்றும். கிறிஸ்து நாதர் தாமும் அவரது சீஷரும் துவக்கிய அரியவேலையைக் கொண்டு நடத்தயோக்கியமுடையோர் யார் என நாம் கேட்போம். மேலும்,

என்னைக்கேட்டுக்கொண்டபோதிலும் நான் அவரைக் குறித்து அரைகுறையாய் அறிந்திருந்ததால் நான் சம்மதிக்கவில்லை. நிரந்தெரிந்துகொண்ட பிறகே ஞானஸ்நானம் கொடுக்க விரும்பினேன். மாதங்களாகக்காத்திருந்து அலுத்துப்போய் ஆமதநகரத்துக்கு என்னண்டை வந்து ஞானஸ்நானம் கொடுக்கும்படி வேண்டினார். நான் வியாதியாயிருந்ததால் [illegible] பரிசோதித்து ஞானஸ்நானம் பண்ணுவித்தார். பூரண ஆயத்தமாயிருந்தார் என்று பிற்பாடு கேள்விப்பட்டேன். பாவிகளை மனந்திரும்புதலுக்கு அழைக்கவே கிறிஸ்து வந்தார்; அவர்களில் பாண்வி ஒருவர் அன்றோ? சீமோனைப் பேதுரு ஆக்குகிறவர் கிறிஸ்து. அப்பேர்ப்பட்ட [illegible] பாண்வி தன்னை [illegible] விட்டார்.

## உண்மை விசாரிப்போர்

பாண்வியும் மற்றவர்களும் எம்பெருமான் யேசையர் பாதத்தண்டை சேர்ந்தவர்களைத் தவிர சேகராக்கூடிய வேறு சிலரும் உண்டு. நமது வேதாக மஸ்திரியிடத்தில் போதனை பெறும் ஓர் பிராமண விதவை அந்தம்மையாள். அந்த அம்மாள் பகல் நேரத்தில் எங்கள் வீட்டுக்குவர முடியாது; வந்தால் அநேக நிஷ்டூரங்களுக்குள்ளாகவேண்டும். ஆகலால் மாலை மயங்கின வேளையில் தனக்கு அவகாசம் இருக்கும்போதெல்லாம் வருகிறாள். இந்த அம்மாளைப்பற்றிப் பூரண நம்பிக்கைதான்

கனம் கைக்வார்ட் இடம் போதனைபெற ஒரு மகாராட்டியன் வருகிறான். ராமா என்னும் வாலிபக்குருடன் இதற்கு முதன்மையானகாரணன். இவருக்கு வயது ஏறக்குறைய 35. இந்த இருவரை அன்றி இன்னொருவனும் இருக்கிறான். இவன் மகம்மதியன். மூவரில் இவனே ஞானஸ்நானத்தின் பேரில் அளவற்ற ஆவலுள்ளவன். அதற்கு ஆயத்தமாடும் அவனுக்கு முன் விடாப்பிடியாய் அதுவிஷயத்தில் அலட்டிக்கொண்டே இருக்கிறான். இம்மூவர் விஷயத்திலும் [illegible] இருக்கிறது; [illegible] அவர்களில் சொந்தம் [illegible] விளக்கும் [illegible] திருச்சபையில் சேரும் முகம்மதியருக்கு [illegible] ஓர் [illegible] ஸ்தானத்தில் ஓர் அடைக்கலஸ்தலம் ஏற்படவேண்டுமென்று சிலருக்கு முன் லக்னௌபுரியில் கூடிய சர்வ இந்திய முகம்மதிய கூட்டத்தார் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அடைக்கலஸ்தலம் அப்படி மட்டும் இந்த முகம்மதிய வாலிபனை நான் எங்கே வைப்பேன்? பகைக்கிறும்பின ஆள் தன் சொந்த மாகாணத்தில் அல்லது பட்டணத்தில் தன் சிலாக்கியங்களைப் பயனுற உபயோகிக்கவேண்டுமென்று சொல்லுவது எளிது. இத்தோடு சம்பந்தமான அபாய கஷ்டங்களைக்கவனிக்குமிடத்து சில காலத்துக்கென்றாவது அவனை வேறொருக்குத் தூரமாய் அனுப்பிவைப்பதே மகா ஞானமாயிருக்கும். இதை எழுதும் நான் முகம்மது மார்க்கத்திலிருந்து வந்தவன்; நான் பம்பாயிலிருந்து ஆமதநகரத்துக்கு ஓடி ஏறக்குறைய ஒரு வருஷம் யாருக்கும் தெரியாமல் பிழைத்தேன். இந்த வாலிபனை எங்கே அனுப்புவேன்; எவ்வாறு ஆதரிப்பேன். கொஞ்சகாலம் பொறுத்துக்கொண்டால் அவருக்கு எந்த உதவியும் வேண்டியதில்லை. Fitter வேலை அறிந்தவர்; எங்கேயாவது வேலை சம்பாதிக்கக்கூடும்.



வேண்டியது என்று சொல்லிமுன் சென்றார். துறவியார் மலைச்சாரலில் மிகுந்த கஷ்டப்பட்டு இறங்கி, ஒருவர் கால் ஒடிந்து விழுந்து கிடப்பதைக் கண்டார். அவனை உயரகொண்டு சேர்க்க, அவனைத்தூக்கிச் சுமக்கவேண்டியதவசியமாயிற்று. அவ்வாறே சந்நியாசியார் அவனை முதுகுமேல் சுமந்து எப்படியோ பாதை வந்து சேர்ந்தார். அவர் பட்டபாடு கொஞ்சமல்ல அங்கமெல்லாம் புளுங்கி மிகுந்த உஷ்ணமாயிற்று. அவர் அவனுக்குக் கைலாகு கொடுக்க இருவரும் மெதுவாய் வந்து சென்றார்கள். இவ்விருவரும் எடுத்த பிரயாசையால் இரத்தம் தேகமெங்கும் விரைந்து பரவலாயிற்று. சிறிது தூரம் சென்றபின் அவர் கண்ட காட்சியென்ன. இவரைத் தனியே விட்டுப்போன பிரயாணி குளிரால் விறைத்து மரித்துக் கிடப்பதைப் பார்த்தார்கள். இதைக்கண்ட சந்நியாசியார் தாம் தூக்கி எடுத்தத்தம் தோழனுக்குச் சொல்லலானார் "நானும் இவரோடு இங்கு குளிரால் செத்துக்கிடந்திருக்கவேண்டும். ஆயினும் உன்னை ரக்ஷிக்க எடுத்த பிரயாசையினால் நான் உயிர்பிழைத்தேன். எடுத்த முயிற்சியினால் தேகத்தில் உஷ்ணம் மிகுந்தது. குளிரினின்று தப்பினேன். மரணத்தினின்று என் உயிரை ரக்ஷித்தேன்."

இச்சரிதை வாஸ்தவ சம்பவமே. வட இந்தியாவில் இச்சந்நியாசியாரை அறியாதார் வெகு சிலரே. நமது ஆத்மீக ஜீவியத்தை நன்கு விளக்கும் உவமையும் இது. மற்றவரை ரக்ஷிக்கும் பொருட்டு நாம் உழைக்கும்போது நம்மையே நாம் ரக்ஷித்துக்கொள்ளுகிறோம். நம்மைச் சுற்றி நாசமுறும் மனுக்குலத்தை மீட்க நாம் வேலைசெய்யும்போது நமது ஆத்துமத்தையே மீட்டுக்கொள்ளுவோம். நம்மயலாரின் ரக்ஷிப்புக்கென்று நம்மையே செலவிட்டு முற்றுமாய் அவர் [illegible] தியாகஞ் செய்ய இக்காரணங்கள் நம்மை ஏவுகின்றனவல்லவோ [illegible]

162012

ஜனவரி முதல்—செப்டம்பர் முடிய [illegible] நன்கொடைகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை மாகாணம் ... | 2869 | 0 | 9 | மத்திய இந்தியா ... | 849 | 8 | 0 |
| தென் இந்திய பெண்கள் உபயசகமும் ... | 195 | 13 | [illegible] | ஐக்கிய மாகாணம் ... | 1588 | 6 | 0 |
| ஸிரிய சபை ... | 1155 | 0 | 0 | தக்காணம் ... | 194 | 4 | 0 |
| லுத்தரன் சபை ... | 871 | [illegible] | 6 | பர்மா ... | 50 | 1 | 0 |
| பம்பாய் மாகாணம் ... | 1[illegible]95 | 5 | 10 | பஞ்சாப் ... | 816 | 6 | 3 |
| | | | | இதர வருமானம் ... | 1974 | 15 | 7 |
| | | | | மொத்தம் ... | 10459 | 14 | 5 |

*N.B.*—1917 வருஷத்திற் செலவுக்கு குறிக்கப்பட்ட தொகை ரூ. 27,000. செப்டம்பர் மாதம் முடிவில் வரவுக்கு மேல் செலவு 2,500 ரூபாய் அதிகபட்டிருக்கிறது. சிநேகிதர் இதை தயவுசெய்து கவனிக்கவேண்டும்.

Printed and Published by Mr. K. T. Paul at the T. A. C. Press, Salem.

முதலாவது ஆண்டவரால் அலாது ஆத்ம மகிப்பு நிறைவேறவும் இரண்டாவது அவர் பட்டினிகிடந்து பிறர்கைகளையே பார்த்துக்கொண்டிராத படிக்கும் என்னாலியன்றமட்டும் செய்யத்தக்கதைச் செய்யப்பார்க்கிறேன்.

கர்மலாபட்டணத்திலேயே அந்த பிராமண விதவை ஞானஸ்நானம் பெறுவதென்றால் எத்தனை கஷ்டமென்று அறிவுடையோருக்கு எளிதில் விளங்கும். இவள் போன்றவர்களுக்கு மகாராஷ்டிர சீமையில் ஏற்பட்டிருக்கும் எந்த வீடுகளிலாவது இந்த கர்த்தருடைய பிள்ளைக்கு இடம் கண்டு பிடிக்கக் கர்த்தர் எனக்கு ஒத்தாசை செய்வாராக! அந்த அம்மாள் பரமஞானவிஷயத்தில் முடிவான தீர்மானம் சொல்லட்டுமென்று காத்து நிற்கிறேன். நான் என் முந்தின அறிக்கையில் தெரிவித்த பல்வந்தக்கடையைப்போல் இந்த மராட்டியனும் தைரியமாய் வெளியேறிவந்து கிறிஸ்துவுக்காக தன் சொந்த ஊரில் சாட்சிகொடுப்பானென்று நம்புகிறேன். பட்டணத்தை விட்டுத்தன்னை அனுப்பிவிடவேண்டுமென்று விசாரப்படுகிறான். பலமான காரணங்களில்லாமையால் அவனிஷ்டம் நிறைவேற இடம் கொடேன். பான்வில் கண்டு பொன்ஸ்லே என்பவனைக்குறித்து மேலே எழுதினேன், வியாதியாய்க்கிடந்து கஷ்டப்பட்ட பிற்பாடு தன் சொந்த ஊராகிய பண்டேவாரிலேயே இருந்து கிறிஸ்துவுக்குச் சாட்சிகொடுக்கத்தீர்மானித்திருக்கிறான். பலதண்டனைகளின் மூலமாயும் உபத்திரவங்களின் வழியாயும் கர்த்தர் அவன் முயற்சிகளை ஆசீர்வதித்திருப்பதால் அவனது பந்துக்களில் சிலர் நமது ஆண்டவருக்குச் சார்பானவர்களாயிருக்கிறார்கள், இதே விதமாய் மராட்டியனும் தன் உடன் ஜாதியாரிடையில் சாட்சியாவானாக!

ஐ. பி. பாவா.

---

## மற்றொருவரை மீட்கப்போய்த் தன்னுயிரைக்காத்த கதை.

இந்தியாவிலிருந்த சந்நியாசி ஒருவர் திபெத்து தேசம் போய்க்கொண்டிருந்தார். அவர் போகும் வழியில் எங்கும் கிறிஸ்துவை வாய் வார்த்தையினாலும் பாத்திரமல்ல செய்கைகளினாலும் பிரசங்கித்தார். ஒரு நாள் அவரும் அவர் தோழனான ஒருவரும் பர்வதத்தின் உறைபனிவழியே போக நேர்ந்தது. அவ்வேளை காற்றோ கொடூரமாய், செங்குத்தான குன்றுகள், மோசம் நிறைந்த பாதை. செங்குத்தான குன்றின் அடிவாரத்திலிருந்து ஓர் அழுகுரல் பிரயாணிகளின் காதில் திடீரெனத் தொனித்தது. இருவரும் திகைத்து நின்றார்கள். கிறிஸ்தவ சந்நியாசியார் "சங்கடத்திலகப்பட்ட ஒருவனின் குரல் இது. மலையினின்று யாரோ தவறி விழுந்து விட்டார்" என்றார். அவர் தோழரும் அவ்வாறே எண்ணினார். எனினும் தம்பாதையே பிடித்துச் சென்றார். சந்நியாசியாரோ "நாம் அவனைத்தூக்கி விடவேண்டும்" என்ன, மற்றவர் "அப்படியானால் நாமிருவரும் சாவது நிச்சயம்" என்றார். சந்நியாசியார் "நான் அவனைச்சாகவிட்டுப்போகமுடியாது. உதவி புரியத்தான் வேண்டும்" என திட்டமாய் உரைத்தார். அவர் தோழரோ, உமது விருப்பம் இதுவானால் நான் உம்மை உமது புத்தியீனத்துக்கே விட்டுப்போக